[illegible]

[illegible]

[illegible]

[illegible] 2. 7.9, 2002

D
24,3.1'02
02. 19. 2.
22 4 3.70

9-4-2002

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. அறிவிப்புகள்—** | |
| (அ) உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி விடுதலை | 139 |
| (ஆ) மானியக் கோரிக்கைகள், 2002-2003, அவையில் முன்மொழிதல் குறித்து (ஆசெ.) | |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு | 139-140 |
| (ஆ) சென்னை மாநகராட்சி மன்ற இடைத் தேர்தலின்போது ஏற்பட்ட பிரச்சினைகள். | 140-147 |
| **3. வரவு-செலவுத் திட்டம், 2002-2003, பொது விவாதம்—** தொடர்ச்சி | |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 148-228 |
| **4. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—** | 230-279 |
| (அ) கோரிக்கை எண் 19 - உயர் கல்வித் துறை | |
| (ஆ) கோரிக்கை எண் 41 - பள்ளிக் கல்வித் துறை | |
| (இ) கோரிக்கை எண் 47 - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | |
| (ஈ) கோரிக்கை எண் 44 - தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி - பண்பாடு | |

பக்கங்கள்

4. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(உ) கோரிக்கை எண் 37 - பொதுத் துறை

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை 230, 240, 253, 262, 270-271, 278,

திரு. வி.கே. லட்சுமணன் 275-276,279

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 279-280

D V21'3' P02
P02.192
பக்கம்
224370

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 26, விசு - திருவள்ளுவர் ஆண்டு - 2033

2002 ஏப்ரல் 9, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து."

ஒரு தலைமுறையில் பெறும் கல்வி அறிவானது, ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமையும்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. அறிவிப்புகள்

### (அ) உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி விடுதலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சென்னை மாநகர காவல் துறை ஆணையரிடமிருந்து 8-4-2002ஆம் நாளிட்ட கடிதத்தில் கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"We have the honour to inform that Thiru Parithi Ellamvazhuthi, M.L.A., Egmore Constituency who was arrested at 8-45 hours today, 8th April 2002 in P-1, Pulianthoppu Police Station, Crime Number 212/2002 was released on bail at 18-50 hours."

## 2. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**THIRU C. GNANASEKARAN:** We have already given an Adjournment Motion.

[ 2002 ஏப்ரல் 9

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று காலையில்தான் கொடுத்திருக்கிறீர்கள். இப்பொழுதுதான் கொடுத்திருக்கிறார்கள். என் ஆய்வில் இருக்கிறது. இப்பொழுது எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பு இல்லை.

### (ஆ) சென்னை மாநகராட்சிமன்ற இடைத்தேர்தலின்போது ஏற்பட்ட பிரச்சினைகள்

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை வழக்கமான ஒத்திவைப்புப் பிரச்சினையைப் போன்றது அல்ல. மிக மிகப் பெரிய அளவில் பாதிப்பை உண்டாக்கி இருக்கிற ஒரு பிரச்சினை. சென்னை மாநகரத்திலே 2 வட்டங்களில் நடைபெற்ற இடைத் தேர்தலில் மாற்றுக் கட்சியினர் யாருமே செயல்பட முடியாத அளவில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் அவர்களுக்கே விதிமுறைகள் தெரியும். இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்வதற்கு முன்னால் அதற்கு உள்ளே போவது சரியில்லை. இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவம் எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனால் அரசிடமிருந்து அதற்குரிய பதில், விளக்கங்கள். இவையெல்லாம் வரவேண்டும். அவை வந்ததற்குப் பிறகு எடுத்துக்கொள்வதற்கு உரிய வாய்ப்பு இருக்கிறது; எடுத்துக்கொள்ளலாம்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே எழுப்பப்படவில்லையென்றால் எதிர்க்கட்சிகளே செத்துப்போய் விட்டன என்று பொருளாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நீங்கள் இந்தப் பிரச்சினையை இப்பொழுது எழுப்புவதிலிருந்தே எதிர்க்கட்சிகள் உயிரோடு இருக்கின்றன என்று தெரிகிறது

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிகள் உயிரோடு இருந்தால் மட்டும் போதாது. ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும்.



2002 ஏப்ரல் 9 ]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குரிய ஏற்பாட்டை நிச்சயமாகச் செய்வோம்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** நடைபெற்ற முறைகேடுகளைக் கண்டிப்பதற்கு ஒரு வாய்ப்பைத் தாங்கள் தர வேண்டும். அதற்காகத்தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று காலையில்தான் திரு. புகழேந்தி கொடுத்திருக்கிறார். இதுபற்றி அரசுத் துறையிடமிருந்து பதில் வர வேண்டும். ஒரு கை ஓசை எழுப்ப முடியாது.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாப் பிரச்சினைகளிலும் அரசாங்கம் பதில் சொல்கிற வரையில் காத்துக்கொண்டிருந்து, அதற்குப் பின்னர் இந்த அவையிலே எழுப்புவது என்று சொன்னால்—இன்றையதினமேகூட அதன் தொடர்ச்சியான விளைவுகளை நாடு சந்தித்துக்கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) இல்லை. இன்றையதினம்கூட......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று காலையில்தான் கொடுத்திருக்கிறார். எழுப்புவதற்கு வழியில்லை. அரசுத் துறையிடமிருந்து அதற்குரிய பதில் வந்தாலொழிய எழுப்புவதற்கு வழியில்லை.

*2002-2003 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீதான பொது விவாதத்திற்கு பதிலுரை. மாண்புமிகு நிதியமைச்சர். (குறுக்கீடு)*

**பேராசிரியர் க. அன்பழகன்:** அந்தப் பிரச்சினை குறித்து நேற்றையதினம் நான் அளவோடு இந்த அவையிலே தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிற முறையில் இரண்டே வார்த்தைகளில் இந்தக் கருத்தை முடித்தேன். இன்று அதற்குப் பின்னர் ஏற்பட்டிருக்கிற விளைவுகள் சாதாரணமாக இல்லாத காரணத்தினால், இந்தப் பிரச்சினையினுடைய முக்கியத்துவத்தைக் கருதி, இந்த அவையிலே நாங்கள் எழுப்புகிறோம். தாங்கள் இதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன் அவர்களே, இப்பொழுது எழுப்புவதற்கு வழி இல்லை. இன்று காலையில்தான் தந்திருக்கிறீர்கள். அரசுத் துறையிடமிருந்து உரிய பதில் வர வேண்டும். விளக்கம் வந்தால்தான் விவாதிக்க முடியும். நான் அரசுத் துறையிடமிருந்து விளக்கங்கள் கேட்க வேண்டும். என் ஆய்வில் இருக்கிறது. எவ்வளவு

விரைவாக எடுத்துக்கொள்ள முடியுமோ, அவ்வளவு விரைவாக எடுத்துக்கொள்ள முயற்சி செய்கிறேன். (கூச்சல்-குழப்பம்) உட்காருங்கள்— உட்காருங்கள்! (குறுக்கீடு) —திரு. சேகர்பாபு, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிக்கு நடைபெற்ற வார்டு இடைத்தேர்தலில் ஜனநாயக நெறிமுறைகள் குலைக்கப்பட்டுள்ளதால், ஆளும் கட்சியினருடைய அராஜகப் போக்கைக் கண்டித்து - இந்த அவையிலே எதிர்க்கட்சிகள் பேசுவதற்கு வாய்ப்பளிக்கவில்லை. இதுவும் ஜனநாயகத்திற்கு முரணான ஒன்றாகும். எனவே இந்தப் போக்கினைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்புச் செய்கிறது.

*(பேராசிரியர் க. அன்பழகன் மற்றும் திரு. துரைமுருகன் வெளிநடப்புச் செய்தனர்.) (கூச்சல் - குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

*முற்பகல் 10-05*

*** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் சென்னையிலே நடைபெற்ற மாநகராட்சி மன்ற இடைத்தேர்தலில். . . . . (கூச்சல்—குழப்பம்) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகப் பணியாற்ற முடியாத அளவிற்கு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலிருந்து உங்களுடைய கட்சி எவ்வளவு கட்டுக்கோப்பான கட்சி என்று தெரிகிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சினையை சபையில் எழுப்புவதற்கு அனுமதி அளிக்காததைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். (தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்)* திரு. ஜி.கே. மணி, வெளிநடப்பு பண்ண வேண்டுமா?

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்ற உள்ளாட்சிமன்ற இடைத்தேர்தலிலே ஆளுங்கட்சியின் சார்பிலே அத்துமீறல்களும், அராஜகப் போக்கும் நடைபெற்றிருக்கின்றன. ஜனநாயக ரீதியாக தட்டிக் கேட்டவர்களை காவல் துறை வன்மையான முறையிலே கைது செய்து நடவடிக்கை எடுத்ததோடு, இதில் ஜனநாயக நெறிமுறையைப் பாதுகாக்கத் தவறிய காரணத்தினாலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஜனநாயக விரோதப் போக்கைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

*(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.) (கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்றத் தலைவர் பேராசிரியர் அவர்கள், துரைமுருகன் அவர்கள், வெளிநடப்புச் செய்கிறோம் என்று அறிவித்துவிட்டு அவர்கள் போய்விட்டார்கள். ஆனால் எஞ்சியவர்கள் உட்கார்ந்து இருக்கிறார்கள். அவருடைய கட்சி எவ்வளவு கட்டுக்கோப்பான கட்சி என்று இதிலிருந்து தெரிகிறது.

மாண்புமிகு நிதி அமைச்சர் பதில் உரை. (குறுக்கீடுகள்) திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய வேட்பாளர் திரு. மு. சம்பத், 12-வது வட்டத்திலே வேட்பாளராகப் போட்டியிட்டார். இன்றைக்கு அவர் கைது செய்யப்பட்டு உள்ளே இருக்கிறார். அவரோடு சேர்ந்து வாக்குப் பதிவிற்குச் சென்ற இன்னும் பல பேர்களையும் கைது செய்து உள்ளே வைத்திருக்கிறார்கள். வாக்குப்பெட்டிகளைக் கைப்பற்றி இருக்கிறார்கள். ஆளும் கட்சியினுடைய இதுபோன்ற அராஜகமான செயலைக் கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வெளிநடப்புச் செய்கிறது. (கூச்சல்-குழப்பம்)

*(இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் வெளிநடப்புச் செய்தார்கள்.)*

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

*(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

[ 2002 ஏப்ரல் 9

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையில்தான் இதுகுறித்த தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தந்து இருக்கிறார்கள். காலையிலே 9:00 மணிக்கு இதைத் தந்து உடனே பதில் தர வேண்டுமென்று கேட்டால், எப்படி நடைமுறையில் முடியும் என்பதனை அவை எண்ணிப் பார்க்க வேண்டும்; மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். எதிர்க்கட்சிகள் கடைப்பிடிக்கின்ற நடைமுறை, ஜனநாயகத்திற்கு விரோதமான நடைமுறை என்பதனை அவைக்கு நான் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள். அமைதியாக அமருங்கள். (கூச்சல் - குழப்பம்) பரிதி இளம்வழுதி அவர்களே, நீங்கள் ஏற்கெனவே சட்டப் பேரவைத் துணைத் தலைவராக இருந்தவர். உங்கள் கட்சியினுடைய தலைவர், திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்புச் செய்கிறது என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். அதற்குப் பிறகு நீங்கள் இருந்துகொண்டு கலாட்டா செய்வது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள். (கூச்சல்-குழப்பம்) அமைச்சர்கள் அமைதியாக அமருங்கள். பன்னீர், உமாதேவன் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்). உமாதேவன் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். அவர்கள் வெளியேறி விடுவார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் .(வெளிநடப்புச் செய்தனர்.)

பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் (வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் பதிலுரை.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே........ (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜாங்கம் (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பொன்முடி அவர்களை... (கூச்சல்-குழப்பம்)



2002 ஏப்ரல் 9 ]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுங்கட்சி உறுப்பினர்கள் உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) உட்காருங்கள். அவர்கள் ஏதாவது கலகம் செய்ய வேண்டும்; கலாட்டா செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். துரைமுருகன், அவர்களைக் கூப்பிட்டுப் போங்கள். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பொன்முடி அவர்களும்....(கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம், வேண்டாம். திரு. செல்வராஜ் . . . (குறுக்கீடுகள்) திரு. சண்முகம்...(குறுக்கீடுகள்) செல்வராஜ், சண்முகம், முதலிலே உங்கள் இடத்திற்குப் போங்கள். (கூச்சல்-குழப்பம்) உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். செல்வராஜ், சண்முகம் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** செல்வராஜ், சண்முகம் உங்கள் இடத்திற்குப் போங்கள். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராஜாங்கம், ராஜாங்கம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். எல்லோரும் இடத்திற்குப் போய் உட்காருங்கள். எல்லோரும் இடத்திற்குப் போங்கள். (கூச்சல்-குழப்பம்) இடத்திற்குப் போய் உட்காருங்கள்.

* **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் அவையைவிட்டு வெளியேற தவறுவார்களேயானால், அவர்களை அவையிலேயிருந்து கட்டாயமாக வெளியேற்ற ஆணையிடுமாறு நான் வேண்டுகிறேன். (கூச்சல்-குழப்பம்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க.வைச் சேர்ந்த உறுப்பினர்கள் வன்முறையில் ஈடுபட எத்தனிக்கிறார்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்களை அடிக்கும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள். அவர்களைக் கட்டாயம் வெளியேற்றவில்லை என்றால், அவர்களைக் காவலரை வைத்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகிறேன். (கூச்சல்-குழப்பம்)

(எஞ்சிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் கூச்சலிட்டுக்கொண்டே வெளிநடப்புச் செய்தனர்) (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம், வேண்டாம். உட்காருங்கள், நீங்கள் உட்காருங்கள்; ஆளுங்கட்சி உறுப்பினர்கள், உங்கள் இடத்திற்குப் போங்கள் (குறுக்கீடுகள்) இடத்திற்குப் போங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) போங்கள், இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக அமருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அருள்கூர்ந்து அமைதியோடு இருக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நடந்த தேர்தலில், தில்லுமுல்லுகளைச் செய்தவர்கள், பன்னெடுங்காலமாக, கள்ள ஓட்டுப் போடுவது, வன்முறையிலே Booth capturing செய்வது ஆகிய கொடுமைகளைச் செய்து பழக்கப்பட்ட தி.மு.க.வினர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய மக்கள் சக்தியைக் கண்டு தாங்க முடியாத....

(வெளிநடப்புச் செய்த உறுப்பினர்கள் லாபியிலே சென்று கூச்சலிட்டனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** எம்.எல்.ஏ.-க்கள் அமைதியாக... (குறுக்கீடுகள்) ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டுகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய செல்வாக்கைக் கண்டு ஜீரணிக்க முடியாத கோழைகள் (மேசையைத் தட்டும் ஒலி) சித்ரவதைகள் பல தந்தும், சிறைக் கொடுமையை ஈந்தும், மக்கள் சக்தியைத் தன்னகத்தே வைத்திருக்கின்ற புரட்சித் தலைவி அவர்களுடைய ஆற்றலை, ஆளும் திறனைக் கண்டு தாங்க முடியாத பொறாமைக்கும், காழ்ப்புணர்வுக்கும் உள்ளாகியுள்ள தி.மு.க., எப்படியும் இந்த இடைத்தேர்தல்களில் வன்முறையில் Booth capturing செய்து, வெற்றி பெற்று, தங்களுக்கும் மக்களிடையே செல்வாக்கு இருக்கிறது என்ற போலி நாடகம் நடத்த முயற்சித்தார்கள். அந்தப் போலி நாடகத்தில், வெற்றியை இழந்தார்கள். அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் எல்லாம் மக்களால் தவிடுபொடியாக்கி





விடப்பட்ட காரணத்தால், மக்களே முன்வந்து அவர்களைத் தோற்கடித்துவிட்ட காரணத்தால், அந்தத் தோல்வியின் அச்சத்தால் தமிழகத்து மக்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நிரந்தரமாக அவர்களை, திமுக.-வின் தலைவர் திரு. கருணாநிதியை, அரசியலில் செல்லாக் காசு ஆக்கிவிட்டார்களே என்ற ஆத்திரத்தால், வீணான, உண்மைக்கு மாறான செய்திகளை, நடக்காதவற்றை அவையிலே எழுப்பி, விளம்பரம் தேடி, தங்கள் தோல்வியை மறைக்கின்ற முயற்சியில்தான் இந்த வெளிநடப்பைச் செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிகழ்வுகள் எதுவும் நடைபெறவில்லை. அவைத் தலைவருக்கு இதுபற்றித் தெரிவித்ததே, காலையிலே 9-30 மணி அல்லது 9-45 மணிக்குத்தான் இந்தத் தகவலைத் தருகிறார்கள். 9½, 9¾ மணிக்கு, இந்தத் தகவலை, அவர்கள் கூறுகின்ற உண்மைக்கு மாறான தகவலை, ஆதாரம் இருந்தால் ஆதாரத்தோடு தர வேண்டும்; அப்படி ஆதாரமற்றுத் தருகிற தகவலை, அது உண்மையா என்ன என்பதனைக் கண்டறிய அவகாசம் வேண்டாமா? பல ஆண்டுகளாக ஆட்சிப் பீடத்தில் இருந்த தி.மு.க.-வுக்கு இது தெரியாதா? இப்படி ஒரு போலி விளம்பரத்தை மேற்கொண்டு ஓர் உண்மைக்கு மாறான நாடகத்தை நடித்து, செய்தி பத்திரிகைகளில் இதை வரவழைத்து, தோற்றுவிட்டு, மக்களால் புறக்கணிக்கப்பட்டுவிட்ட தி.மு.க. மக்கள் மத்தியிலே இன்னும் இருக்கிறது என்று ஒரு போலி பிரமையை உருவாக்க அவர்கள் மேற்கொண்டு இருக்கின்ற சதித் திட்டம்தான் இந்தத் திட்டம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு அவகாசம் தந்து இருக்க வேண்டும். பேரவைத் தலைவர் அவர்கள் சம்பந்தப்பட்ட துறை அமைச்சருக்கு அவகாசம் தர வேண்டும்; அதிகாரிகளுக்கு அவகாசம் தர வேண்டும்; தகவல்கள் சேகரிக்கப்பட வேண்டும். இன்று காலை 9½ மணிக்குக் கொடுத்து, 9½ மணிக்கே சம்பந்தப்பட்ட துறை அமைச்சருக்குக் கொடுத்து, அங்கிருந்து அதிகாரிகளுக்குக் கொடுத்து, தமிழகத்தின் பல பகுதிகளிலே தேர்தல் நடைபெற்ற இடங்களில் இருந்து தகவல்களைச் சேகரித்து 10 மணிக்கே அவையில் தர வேண்டும் என்றால், அது இயலாத காரியம் என்பதை பல்லாண்டு காலம் முதலமைச்சராக இருந்த தி.மு.க-வினுடைய கட்சித் தலைவர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியாததல்ல. தி.மு.க.-வினுடைய சூழ்ச்சி வலையில் மாண்புமிகு மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தெரிந்தோ தெரியாமலோ விழக்கூடாது என்ற எண்ணத்தைத்தான் நான் அவைக்கு வெளிப்படுத்த விரும்புகிறேன்.

[ 2002 ஏப்ரல் 9

## 3. வரவு-செலவுத் திட்டம், 2002-2003, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரவு-செலவுத் திட்டம், *2002-2003*, பொதுவிவாதம்-தொடர்ச்சி. (குறுக்கீடு) இல்லை. மிகுந்த எழுச்சியோடு பேசிக்கொண்டிருக்கிறீர்கள்; இப்படியே தொடருங்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது என் உரையைத் தொடங்குகிறேன். பல கேள்விகளைக் கேட்ட மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, அந்தக் கேள்விகளுக்கு பதில் கூற நான் எழுந்திருக்கிற நேரத்தில் அவைக்கு வந்து பதிலைப் பெறாத நிலையை அவர்களுக்குள்ளேயே ஏற்படுத்திக் கொண்டார்கள். உண்மைக்கு மாறான பல தகவல்கள், ஆதாரம் வேண்டும் என்று கேட்ட கோரிக்கைகள், சில வினாக்களுக்கு விடை வேண்டும் என்ற கோரிக்கைகள் இவையெல்லாம் எழுப்பப்பட்ட நிலையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அவைக்கு வருவது நலம் என்று கருதுகிறேன்.

*(தமிழ் மாநில காங்கிரஸ், இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் அவைக்குள் வந்துகொண்டிருந்தனர்.)*

வந்தவர்களுக்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதி அமைச்சர் அவர்களுக்கு, இவர்கள் எங்கே போனாலும், கடைசியாக வந்து சேருவார்கள். (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திற்குள்ளே வந்து சேருவோம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எங்கேயும் போகவில்லை; சட்டமன்ற வளாகத்திற்குள்ளேயேதான் இருந்தோம்; சட்டமன்றத்திற்குள்ளே மீண்டும் வந்துவிட்டோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் சொல்கிறேன். அவர்கள் எங்கேயும் போகமாட்டார்கள்; பக்கத்திலே இருப்பார்கள்; உரிய நேரத்தில் வந்துவிடுவார்கள்.



2002 ஏப்ரல் 9 ]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பாராட்டிற்குரிய ஒன்று. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு, டில்லியிலே ஆளுகிற, தற்போது தி.மு.க. அங்கம் வகிக்கின்ற மைய அரசிடம் அதனுடைய மின் துறையிடம் கையொப்பம் செய்த மின் துறை சீர்திருத்தம் குறித்த உடன்படிக்கைப்படி தமிழ்நாடு மின்சார வாரியம் மாநிலத்தில் வழங்கியுள்ள மின் இணைப்புகள் அனைத்திற்கும் மின் அளவை கருவிகளைப் பொருத்தும் முழுமையான திட்டம் ஒன்றை இவ்வரசு செயல்படுத்த உள்ளது என்பதனை நான் நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தேன். இதற்குக் காரணம், மாண்புமிகு C.P.I. இயக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் பேசுகிறபோதுகூட....

*(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் எழுந்து சென்று கொண்டிருந்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உங்கள் தலைவரைக் கூட்டிக்கொண்டு வாருங்கள்.

*முற்பகல் 10.20*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** வங்கத்து அமைச்சரவை, மேற்கு வங்க அரசு இதுபோன்ற உடன்படிக்கையில் கையெழுத்திட மறுத்து விட்டது என்றும் சொன்னார்கள். ஆனால் உண்மை நிலை என்ன என்பதை அவை அறிய வேண்டும் என்பதற்காக சில தகவல்களைச் சொல்ல விரும்புகிறேன்.

Reforms-related, Reforms-linked financial assistance என்பது மைய அரசு தற்போது நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்கிற ஓர் அணுகுமுறை. எப்படி உலக வங்கி Reforms-linked loan and assistance மட்டும்தான் தர முடியும் என்று வளர்ந்து வருகிற நாடுகளுக்கு அவர்கள் கட்டளையாக இடுகிறார்களோ அதேபோல மைய அரசும் அதே W.T.O. அணுகுமுறையில் உலக வங்கி, I.M.F. - International Monetary Fund, Asian Development Bank போன்ற அமைப்புகளையே பின்பற்றி நமது மாநிலங்களுக்கும் அப்படிப்பட்ட ஒரு யதேச்சதிகார மையத்திலே அதிகாரங்களைக் குவித்து வைத்துக்கொண்டு மாநிலங்களை ஒரு முனிசிபாலிட்டி போல நடத்துகிற— அணுகுமுறையை அவர்கள் மேற்கொண்டிருக்கிற காரணத்தால் இப்படிப்பட்ட ஓர் ஒப்பந்தத்தை அவர்கள் நடைமுறைக்குக் கொண்டு வருகிறார்கள். இந்த ஒப்பந்தத்திலே நாம் கையெழுத்து இடவில்லையென்றால், since the allocation of fund or assistance is related to reforms as a mandatory condition, நமக்கு மைய அரசிடமிருந்து வர

வேண்டிய நிதி வராமல் போய்விடும். கொடுக்க மறுத்து விடுவார்கள். மாநில திட்டங்களைச் செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்கு வாய்ப்பு இல்லாத ஒரு நிலை உருவாகிவிடும். அந்த அடிப்படையில்தான் தற்போது மைய அரசு இந்த ஒரு ஒப்பந்தத்தில் மாநில அரசைக் கையெழுத்திடச் செய்திருக்கிறது. அப்படி அந்த மைய அரசிலே அங்கம் வகிக்கிற தி.மு.க. இதை ஆங்கு எதிர்த்து இப்படிப்பட்ட reform-linked assistance என்ற முறை இனிமேல் இருக்காது என்றவொரு நிலையை உருவாக்குவார்களேயானால், அது மாநிலத்திற்கு ஏற்கெனவே உள்ள அதிகாரங்களைப் பறிக்கிற இந்த முறைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்ததாக அமையும். ஆனால் ஏதோ, எந்தக் காரணத்தினாலோ, ஒருவேளை மைய அரசிலே பதவி சுகத்திலே இருப்பது அவர்களுக்குத் தனிப்பட்ட முறையிலே ஆதாயம் என்ற எண்ணத்தின் காரணமாகவோ என்னவோ இதை அவர்கள் தடுத்துக் கேட்பது இல்லை. தடுத்து நிறுத்துவதும் இல்லை, மைய அரசிலே அவர்கள் அங்கம் வகித்த போதிலும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது இப்படிப்பட்ட இந்த அறிவிப்பு காரணமாக விவசாயிகளுக்கு வழங்கப்படுகிற இலவச மின்சார வசதி பாதிப்புக்கு உள்ளாகிவிடுமோ என்றவொரு அச்சத்தை எழுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது இதுபற்றித் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். இந்த அரசினுடைய நோக்கம், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்தக் காலத்தில் உழவர் பெருமக்களுக்கு, 'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது' என்ற நிலையிலே, சாதாரண நிலையிலே வாழ்கிற உழவர் பெருமக்களுக்கு அவர்கள் நலன் காக்கப்பட வேண்டும் என்ற நோக்கோடு, எப்படி இலவச மின்சாரத் திட்டத்தை முதன்முறையாக தமிழகத்திலே கொண்டு வந்தார்களோ, அதைப்போல அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவது என்பது மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுடைய கொள்கை ஆகும். எக்காரணத்தை முன்னிட்டும் விவசாயிகளுக்காக வழங்கப்படுகிற இலவச மின்சாரத் திட்டம் பாதிப்புக்கு உள்ளாகாது என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உறுதிபடுத்தியுள்ளார்கள். அதை மீண்டும் நான் இங்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அணுகுமுறையை எந்த நோக்கோடு மைய அரசு மாநில அரசுகளுக்குக் கட்டளையாக இட்டாலும், எத்துணை கட்டுப்பாடுகளை விதித்தாலும்கூட மாநில அரசைப் பொறுத்தவரைக்கும், நாங்கள் மேற்கொள்கிற அணுகுமுறை வேறு.



*முற்பகல் 10-25*

தற்போது உழவர்கள் பெயரிலே ஏராளமாக மின் திருட்டு நடைபெற்று வருகிறது. விவசாயிகளுக்கு மின் இணைப்பு இல்லை. மீட்டர் என்பது இல்லை. ஆனால் உழவர்களுக்காக மீட்டர் இல்லாத நிலையில், ரூ.2000 கோடி, ரூ.3000 கோடி அளவிற்கு உழவர்களுக்கு இலவசமாக மின்சாரம் தருகிற காரணத்தால் மின் வாரியத்திற்கு இழப்பு ஏற்படுகிறது என்றவொரு கணக்கு பரவலாகச் சொல்லப்படுகிறது.

தற்போது தொழிற்சாலைகளுக்கும் பிற பணிகளுக்கும் பயன்படுத்துகிற மின்சாரத்திற்கு மீட்டர் பொருத்தப்படுகிறது. அரசைப் பொறுத்தவரையில் இது குறித்து பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு இருக்கிறது.

Investigation and checkings in plenty are being carried out to find out what are the things that are going on in reality என்பதனைக் கண்டறிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு இருக்கிறது. பல இடங்களில் கொக்கி போட்டு மின்சாரத்தைத் திருடுகிற முறை, இன்னும் பல இடங்களில் under-metering மூலமாக மின்சாரத்தை சில தொழில் அமைப்புகள் திருடுகிற முறை, இவையெல்லாம் ஏராளமாக. ஆங்காங்கே நடைபெற்று வந்த காலம் உண்டு. அதைத் தடுத்து நிறுத்துகிற பணியிலே தற்போது புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. அப்படி line loss என்ற போர்வையிலேயும் மற்றும் transmission loss, distribution loss என்ற முறையிலே எல்லாம் மின் இழப்பு ஏற்பட்டு வருவதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இப்படி மின்சாரத்திற்கு ஒரு மீட்டர் உழவர் பெருமக்களுக்கும் பொருத்திவிடுவோமேயானால் உண்மையிலேயே அவர்கள் பயன்படுத்துகிற மின்சாரம் எவ்வளவு என்பதை அரசு தெரிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. இதனுடைய காரணம் தஞ்சைப் பகுதி போக, தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் கிணற்றினுடைய ஆழம், கிட்டத்தட்ட 500 அடி, 600 அடி, 700 அடி என்ற சராசரி நிலையில் இருக்கிறது. அப்படி 500 அடி, 600 அடி, 700 அடி என்ற நிலையிலே ஆழமாக நிலத்தடி நீர் has gone down to the lowest ebb என்ற முறையிலே மிகக் குறைந்த அளவுக்கு நிலத்தடி நீர் சென்று விட்டது. ஒரு நாளைக்கு மோட்டார் போட்டால் 5 ஹார்ஸ் பவர் மோட்டாரைப் போட்டால் குறைந்தது 2 மணி நேரத்தில் — சுமார் 2 மணி நேரத்திற்குள்ளாகவே அந்த நீர் வற்றிவிடக் கூடிய நிலையில் தான் தமிழகத்தில் இருக்கின்ற கிணறுகள் எல்லாம், பம்பு செட்டுகள் வைத்து இருக்கிற கிணறுகள் எல்லாம் இயங்குகின்றன என்பதும் கூட மாண்புமிகு

உறுப்பினர்களுக்குத் தெரியும். இப்படி வெறுமனே இரண்டு மணி நேரம் மட்டுமே ஒரு நாள் முழுவதும் மின்சாரம் உழவர்களுக்குப் பயன்படுகிறபோது ரூ.2000 கோடி, ரூ.3000 கோடி அளவிற்கு மின்சாரம் உழவர்களுக்குச் செலவழிக்கப்படுகிறது என்பது ஒரு தவறான கணக்காக இருக்கிறது. ஒரு தோராய கணக்கு போடுகிறார்கள். 5 ஹார்ஸ் பவர் மோட்டார் 10 மணி நேரம், 12 மணி நேரத்திற்கு ஓடினால் தமிழகத்திலே உள்ள அனைத்து கிணறுகளுக்குமாக அந்தக் கணக்கைப் போட்டால்தான், 2000, 2500 கோடி என்றெல்லாம் மின்சாரம் உழவர்களுக்குத் தேவைப்படக்கூடிய ஒரு நிலை உருவாகும். ஆனால் அது உண்மைக்கு மாறான ஒன்று. இவற்றையெல்லாம் கண்டு பிடிப்பதற்காகத்தான் மீட்டர் முறை கொண்டுவரப்படுகிறது. உழவர்கள் இவ்வளவு மின்சாரத்தைப் பயன்படுத்தவில்லை. உழவர்களால் மின் வாரியத்திற்கு இப்படிப்பட்ட இழப்பு இல்லை. இழப்பு என்பது line loss, distribution loss, மின் திருட்டு ஆகியவற்றால் போகிறதே ஒழிய, உழவர்களுக்கு இலவச மின்சாரம் தருகிற காரணத்தால் மின் வாரியத்திற்கு இத்தகைய இழப்பு இல்லவே இல்லை என்பதனை உழவர் பெருமக்களின் நலன் கருதி அவர்களும் புரிந்துகொள்ள வேண்டும். நாடும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் line loss இழப்பைத் தடுக்க, transmission loss, distribution loss—ஐத் தடுக்க உழவர்கள் பெயரிலே நடைபெறுகிற, தொழில் நடத்துகிற அந்த மின் திருட்டைத் தடுக்கத்தான் இந்த மீட்டர் முறை கொண்டுவரப்படும் என்று அவைக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. என்பதனை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே நான் இன்னும் ஒன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மைய அரசைப் பொறுத்தவரைக்கும் இப்படி—reforms—Structural reforms, fiscal reforms—என்று பல்வேறு reforms நடவடிக்கைகளை அரசு தற்போது எடுப்பதாக நாங்கள் சொல்லி இருக்கிறோம். அது தேவையான ஒன்று தான். காரணம் நட்டத்தில் இயங்குகிற பொது நிறுவனங்கள் தொடர் நட்டத்தில் இயங்குகிறபோது அதனுடைய பாதிப்பு பொது மக்களுக்குத்தான் என்பதனை அவை உணரும் என்பதனை நான் நம்புகிறேன். பொது நிறுவனங்கள் நட்டத்தில் தொடர்ந்து இயங்குகிறபோது அப்படி அந்த நட்டத்தை ஈடுகட்ட—The Electricity Board, if it is continuing its loss-making position of 5000 crore rupees in a year என்ற முறையில் ஆண்டிற்கு 5000 கோடி இழப்பு என்ற தொடர் இழப்பு மின்சார வாரியத்திற்கு தொடர்ந்து இருக்குமானால் அந்த இழப்பை ஈடுகட்ட—ஒன்று மின் கட்டணத்தை உயர்த்த வேண்டும். அப்படி மின் கட்டணத்தை உயர்த்துகின்றபோதுகூட பொதுமக்களுக்குப் பாதிப்பு இல்லாமல், நலிந்த நிலையிலே இருக்கிற



மக்களுக்குப் பாதிப்பு இல்லாமல், உழவர் பெருமக்களுக்குப் பாதிப்பு இல்லாமல், அதை நடைமுறைப்படுத்த வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. அதையும் மீறி அப்படி 5000 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்கு நட்டம், அது தொடர் நட்டம் என்று வருகிறபோது, அதை ஈடுகட்ட அரசு மின் வாரியத்திற்கு மானியம் தர வேண்டிய நிலை ஏற்படுகிறது. அரசு அப்படி மானியம் தர வேண்டிய நிலை ஏற்படுமேயானால், என்ன செய்ய வேண்டும்? வரி விதிப்பதைத் தவிர, வேறு வழி எதுவுமே இல்லை என்பதனை அவை உறுப்பினர்கள் நன்கு உணர்வார்கள் என்று நான் நம்புகிறேன். அப்படிப்பட்ட ஒரு நிலை வராமல் இருக்க வேண்டுமென்றால், Reform என்ற முறையை நாம் கட்டாயம் நடைமுறைக்குக் கொண்டு வந்தாக வேண்டும்.

முற்பகல் 10-30

அதைப்போலவேதான் போக்குவரத்துக் கழகங்கள். போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரைக்கும் தற்போது தொடர்ந்து நட்டத்திலே இயங்கி வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். தற்போது மட்டுமல்ல, பன்னெடு ஆண்டு காலமாக போக்குவரத்துக் கழகங்கள் இப்படிப்பட்ட தொடர் நட்டத்தில் இருந்து வருகிற காரணத்தால் அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது. போக்குவரத்துக் கழகங்களுக்கும் இழப்பு ஏற்படுகிறது. டீசலுக்கு வாங்கிய பணத்தை, வங்கிகளிடமிருந்து வாங்கிய பணத்தை gear box, clutch போன்ற உதிரிப் பாகங்களுக்கு வாங்கிய பணத்தைக்கூட மூன்று ஆண்டு காலமாக போக்குவரத்துக் கழகங்கள் திருப்பிக் கட்ட முடியாத ஓர் அவல நிலை, தவணை தவறிய கடன்களாக மாறிவிட்ட காரணத்தால் அந்தப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு வங்கிகள் கடன் தர மறுத்துவிட்ட நிலை சென்ற ஆண்டு முன்னரே ஏற்பட்டு விட்டதைக்கூட அவைக்கு நான் தெளிவாக ஏற்கெனவே எடுத்துச் சொல்லி இருக்கிறேன். இப்படிப்பட்ட ஒரு நிலை தொடரக் கூடாது என்பதுதான் இந்த அரசினுடைய எண்ணம்.

முன்னர் 1967-68-லே நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த அன்றைய நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். மக்கள்தொகை மிக நெருக்கமாகவும், நல்லதொரு சாலை அமைப்பைக் கொண்டதாகவும் உள்ள தமிழகத்தைப் போன்றதொரு மாநிலத்தில் நெடுஞ்சாலை பஸ் போக்குவரத்து, அரசுக்கு வருமானத்தை ஈட்டித் தரும் முக்கிய ஆதாரமாக இருக்க வேண்டும் என்ற நோக்கோடு நெடுஞ்சாலைத் துறையை, சாலைகள் நல்ல நிலையில் இருக்கிற காரணத்தால், அதுவும்

இலாபகரமாக அந்தப் போக்குவரத்து இயங்குகின்ற காரணத்தால், நாட்டுடைமையாக்கப்பட வேண்டும் என்று சொன்னார். எந்த நோக்கத்திலே பேரறிஞர் அண்ணா அவர்கள் பேருந்துகளை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று சொன்னார் என்பதனை அவை எண்ணிப் பார்க்க வேண்டும். தனியார் துறையிலே இயங்குகின்ற நெடுஞ்சாலை போக்குவரத்துத் துறை பேருந்துகள் எல்லாம் அபரிமிதமான இலாபத்தில் ஓடுகின்றன; சாலைகள் நல்ல நிலையிலே இருக்கின்றன; அப்படி வருகின்ற அந்த நல்ல இலாபம் அரசுக்கு வரட்டும், எனவே நாட்டுடைமையாக்கலாம் என்றுதான் சொன்னார். அன்றுகூட அண்ணா, டவுன் பஸ்ஸைப் பொறுத்தவரைக்கும் ஒன்றுமே சொல்லவில்லை என்பதனைக்கூட மாண்புமிகு C.P.I. (M) உறுப்பினர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். ஆனால் தற்போது இருக்கின்ற நிலை என்ன? கிட்டத்தட்ட 1025 கோடி ரூபாய் நட்டம் என்ற நிலை. அதுமட்டுமல்ல, ரூ.2000 கோடிக்கு மேலே நிதி நிறுவனங்களிடமிருந்து வாங்கிய கடனை, பேருந்துக் கட்டணத்தை ஓரளவு உயர்த்தி ஓரளவு வருமானம் வந்தபோதிலும்கூட, அந்தக் கடனைத் திருப்பிக் கட்ட முடியாத அளவுக்குத் தொடர்ந்து கடன் நிலை. இன்னும்கூட கிட்டத்தட்ட 6000 பேருந்துகள் மழைக் காலத்தில் ஒழுகுகின்ற நிலை. Foot Board-இல் காலை வைத்தால் தவறி கீழே விழுந்து அடிபட்டு இறக்கின்ற நிலை. இப்படிப்பட்ட நிலையிலே கடந்த மூன்றாண்டு, நான்காண்டு காலத்திற்கு முன்னரே மாற்றப்பட வேண்டிய பேருந்துகளை மாற்றாத காரணத்தால், மக்களுக்குப் பலன் இல்லாத வகையில் எங்கு நின்றுவிடுமோ, எந்த இடத்தில் நின்றுவிடுமோ எந்த இடத்தில் accident ஆகுமோ, உயிர் போய்விடுமோ என்ற நிலையிலே கிட்டத்தட்ட 6000 பேருந்துகள் இன்னும் இயங்கி வருகின்றன. நாட்டுடைமைத் தத்துவத்தின் நோக்கம் வருவாயை ஈட்ட வேண்டும், மக்களுக்கு நல்ல வசதிகள் செய்து தர வேண்டும். குறைந்த கட்டணத்தில் ஏழைகளின் நலன் காக்க வேண்டும். இது அன்று தமிழகத்தை ஆண்ட நமது மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களுடைய எண்ணக் கிடக்கையாக இருந்தது. ஆனால் அந்த எண்ணக் கிடக்கை நடைமுறையில் தற்போது எப்படி இருக்கிறது என்பதை மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படி தொடர் நட்டம். தொடர் நட்டம் இருக்கிறதே, ஊழியர்களுக்குக்கூட ஊதியம் தர முடியாத அளவுக்குப் பல போக்குவரத்துக் கழகங்களில் கடன் வாங்கி சம்பளத்தைத் தரலாம் என்றாலும்கூட, கடன் தர வங்கிகள் முன்வராத நிலையில் ஓர் அவல நிலை, பொருளாதாரச் சீரழிவு, நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இது மாண்புமிகு அவை உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த நிலை மாற வேண்டுமென்றால் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தாமல் என்ன செய்வது.



*முற்பகல் 10-35*

நாம் மைய அரசு அல்ல, மைய அரசுக்கு ஒரு huge deficit இருக்குமென்றால், ஒன்று, வெளிநாடுகளில் கடன் வாங்கிக்கொள்ளலாம் அல்லது பணத்தை, நோட்டை அவர்கள் அடித்துக்கொள்ளலாம். மாநில அரசுக்கு அந்த அதிகாரம் இல்லை. போக்குவரத்துக் கழகங்களுக்குத் தொடர் நட்டம். உழைக்கும் வர்க்கத்திற்கு ஊதியம் தர பணமில்லை. இப்படிப்பட்ட நிலையிலே பேருந்துக் கட்டணங்களை உயர்த்துவதைத் தவிர, உழைக்கும் தொழிலாளர்களின் நலனை வேறு எப்படி பேணிக் காக்க முடியும்? எண்ணிப் பார்க்க வேண்டும். அல்லது மக்கள்மீது வரி போட வேண்டும். வரி போட்டால், வரி போடுகிறீர்களே, வரி போடுகிறீர்களே என்ற ஒரு குரலை எழுப்புகிற நிலை இன்று நாட்டிலே இருக்கிறது. வரியும் போடக் கூடாது, பேருந்துக் கட்டணத்தையும் உயர்த்தக் கூடாது. போக்குவரத்துக் கழகங்கள் தொடர் நட்டத்திலே கடன் வாங்க முடியாத நிலையிலே தொடர்ந்து இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலை இருக்கும் என்றால், ஓடாத நிலையில் இருக்கிற, பழுதுபட்ட நிலையில் இருக்கிற 6 ஆயிரம் பேருந்துகளை மாற்றாமல், ஏழை மக்களுக்கு எப்படிப் பணி புரிவது? எண்ணிப் பார்க்க வேண்டும். பேருந்துக் கட்டணங்களை ஓரளவுக்கு உயர்த்தியபோது கூட, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களிடம், இந்த அளவுக்கு உயர்த்தினால்தான் தொழிலாளர்களுக்குச் சம்பளம் தர முடியும், இந்த அளவுக்கு உயர்த்தினால்தான் தொழிலாளர்களுக்கு முறையாக போனஸ் தர முடியும் என்று நாங்கள் சொன்னபோது, மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னார்கள், பேருந்துகளில் பயணம் செய்கின்ற மக்களெல்லாம், ஏழை, எளிய மக்கள் ஆயிற்றே, poverty line-க்குக்கீழே இருக்கிற மக்கள் எண்ணற்ற மக்களாக இருக்கிறார்களே, அவர்களுக்குத் தாங்கும் சக்தி இருக்கிறதா, அதைச் செய்ய வேண்டாம் என்றுதான் எங்களிடம் சொன்னார்கள். எந்த வழியிலாவது கடனைப் பெற்று, எந்த நிதி நிறுவனங்களிடமிருந்தாவது கடனைப் பெற்று, இவர்களுக்குப் போனஸைத் தந்துவிடுங்கள், போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு தீபாவளி அன்று போனஸ் என்ற முறையை மாற்றுவது என் மனதிற்குப் பிடிக்கவில்லை என்று மாண்புமிகு அம்மா அவர்கள், உழைக்கும் வர்க்கத்தின்மீது மாறாத பற்றுள்ள அன்புத்தாய் அன்று எங்களிடம் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் முயற்சி செய்தோம். பல நிதி நிறுவனங்களை அணுகினோம். நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடம் கேட்டோம்.

Transport Development Finance Corporation இருக்கிறது. அதிலிருந்து எல்லாப் பணத்தையும் ஏற்கெனவே போக்குவரத்துக் கழகங்கள் மாண்புமிகு

பொன்முடி ஆண்ட காலத்தில் கடனாகப் பெற்று அதை செலவழித்துவிட்டு, அதைத் திருப்பிக் கட்டாமல், வட்டியையும் கட்டாமல் TDFC கூட திவாலாகின்ற நிலைக்குக் கொண்டு சென்றுவிட்டார்கள். இப்படிப்பட்ட அவல நிலை இருக்கிறது என்பதனை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களிடம் நாங்கள் எடுத்துச்சொன்னோம். 'அம்மா இப்படிப்பட்ட நிலை' என்று. அப்படியென்றால், ஏழைகளை பாதிக்காத வண்ணம் குறைந்த அளவுக்கு கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். கட்டணம் விதிக்கப்பட்டது. ஆனால் இந்த நிலையை ஏற்கெனவே வெள்ளை அறிக்கையிலே அவையிலே நாங்கள் சொல்லியிருந்தபோதிலும்கூட, விவாதம் பலவற்றை நாங்கள் மேற்கொண்டபோதிலும்கூட, ஏனோ புரியவில்லை, எங்களோடு தோழமையாக இருந்தவர்கள்கூட இந்தச் சங்கடத்தைப் புரிந்துகொள்ளாமல் இதை எதிர்த்தார்கள். இது ஒரு வேதனையான நிகழ்வு என்பதனை நான் அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உடனே மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடு). I am not yielding. நான் கடைசியில் சொல்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் இப்படி மக்கள் மத்தியிலே எதிர்ப்பு இருக்கிறது என்றால், பேருந்துக் கட்டணத்தை இன்னும்கூட நாம் குறைத்துவிடுவோம் என்று மீண்டும் சொன்னார்கள். ஏழைகளுக்காக ஓடுகிற பேருந்துகளில், இந்தியத் துணைக் கண்டத்திலேயே, பேருந்துக் கட்டணத்தை இந்த அளவுக்கு உயர்த்தியும்கூட, தமிழ்நாட்டில்தான் மிகக் குறைவான பேருந்துக் கட்டணம் உள்ளது என்பதனை இங்கிருக்கிற அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். பொதுமக்களும் நன்கு அறிவார்கள். பத்திரிகைகளும் நன்கு அறியும். ஆனாலும்கூட, மக்களைத் திசை திருப்புகிற பணியிலே அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு சுயநல ஆதாயத்தோடு சிலர் அந்த நடவடிக்கைகளில் ஈடுபடுகிறபோது, நன்கு விவரம் புரிந்தவர்கள்கூட இதை உணரவில்லையே என்பது வேதனையாக இருந்தது. இப்படிப்பட்ட நிலையிலேதான், இந்தப் போக்குவரத்துக் கழகங்கள் குறித்து தற்போது எடுத்திருக்கிற முடிவு— பல வழித்தடங்கள் நட்டத்தில் இயங்குகிற வழித் தடங்களாக இருக்கின்றன. போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரைக்கும் it is a social obligation என்ற முறையிலே பல இடங்களில் நட்டம் என்றாலும்கூட, நட்டமான வழித் தடங்களில் கடந்த காலத்தில் பேருந்துகளை பல வழித்தடங்களில் விட்டார்கள். அப்படி பேருந்துகளை அவர்கள் விட்டபோதிலும், பல குளறுபடிகள் காரணமாக போக்குவரத்துத் துறை பெரு நட்டத்திற்கு உள்ளாக்கப்பட்டுவிட்டது. உங்களுக்குத் தெரியும். சிறுதொழில் உற்பத்தியாளர்களிடமிருந்து மட்டும்தான் போக்குவரத்துத் துறைக்கு உரிய, மின்சாரத் துறைக்கு உரிய, உதிரி பாகங்களுக்கான



பொருள்களை வாங்க வேண்டுமென்ற உத்தரவை, தமிழ்நாட்டின் தொழில்கள் காக்கப்பட வேண்டும், அந்தத் தொழிற்சாலைகளை நம்பியிருக்கிற தொழிலாளர் வர்க்கத்தை காக்கவேண்டும் என்ற தாயுள்ளம் கொண்ட, தொழிலாளிகளுடைய பங்காளியாக விளங்குகின்ற நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அன்று ஆணையிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

*முற்பகல் 10-40*

தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. ஆட்சிக்கு வந்த பிறகு அவர்கள் சிறு தொழிற்சாலைகளை மறந்தார்கள்; Tiny Factories என்பவற்றை மறந்தார்கள்; குடிசைத் தொழில்களை மறந்தார்கள்; தமிழகத்தின் ஒட்டுமொத்த தொழிற்சாலைகளை மறந்தார்கள். போக்குவரத்துத் துறை மூலமாக, மின்சார வாரியத்தின் மூலமாக எப்படி ஆதாயம் ஈட்டுவது என்ற ஒரு குறுகிய எல்லைக்குள் தங்களை இழுத்துச் சென்று G.O.75 என்பதனைக் கொண்டுவந்து, என்ன செய்தார்கள்? தமிழ்நாட்டிலே இருக்கிற தொழிற்சாலைகள் உற்பத்தி செய்கின்ற பொருட்கள் எல்லாம் தரமான பொருட்கள் அல்ல; பிற மாநிலங்களிலே உற்பத்தியாகும் பொருட்கள்தான் தரமான பொருட்களாக இருக்கின்றன; எனவே போக்குவரத்துத் துறைக்குத் தேவையான, 20 ஆயிரம் பேருந்துகளுக்குத் தேவையான பாகங்களை வாங்குவது, body கட்டுவது போன்ற வேலைகள் எல்லாவற்றுக்கும் மின்சார வாரியத்திற்குத் தேவையான பல்லாயிரக்கணக்கான கோடி பெறுமானமுள்ள பொருள்களை வாங்குவதெல்லாம் வெளி மாநிலங்களிலிருந்து வாங்கலாம். தமிழ்நாட்டிலே உற்பத்தி ஆகின்ற பொருள்கள் தரங்கெட்டவை. இங்கேயிருக்கின்ற சிறுதொழில்களின் உற்பத்தியாளர்கள், இங்கேயிருக்கின்ற தொழிலதிபர்கள் எல்லாம் தரமான பொருட்களை உற்பத்தி செய்வதில்லை என்ற ஒரு காரணத்தைக் காட்டி, அந்த G.O.75-ஐக் கொண்டுவந்து வெளிமாநிலங்களிலிருந்து பொருளை வாங்கினார்கள். அப்படி வாங்கியதில் எப்படிப்பட்ட பொருளை வாங்கினார்கள்? உங்களுக்குத் தெரியும். இந்தியாவிலேயே மிகச் சிறந்த quality product என்று சொல்லக்கூடிய அளவிற்கு, தரமான வாகனங்களுக்கு வேண்டிய பொருளை T.V.S. செய்கிறது. Sundaram Claytons, Lucas, Wheels India, Brakes India போன்ற பல நிறுவனங்கள் — அந்த T.V.S. Group மற்றும் பிற நிறுவனங்கள் ஆண்டுக்கு சுமார் 300, 400 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்கிற தொழிற்சாலைகள் ancillary units, subsidiary units என்று ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகள் தமிழகத்தில் உள்ளதுகூட மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களுக்குத் தெரியாததல்ல. அப்படிப்பட்ட

தொழிற்சாலைகளிருந்துகூட போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்காமல், வடபுலத்து மாநிலங்கள், அண்டை மாநிலங்கள் — அங்கிருந்து எல்லாம் பொருள்களை வாங்கினார்கள். அப்படி வாங்கிய பொருள்கள் - T.V.S.-லிருந்து வாங்குகிற ஒரு பொருள் மூன்றாண்டு காலத்துக்கு வருமென்றால், அப்படி வெளிமாநிலங்களிலிருந்து வாங்கும் பொருள், தரமான பொருள் என்ற போர்வையிலே வாங்கிய பொருள் சுமார் ஆறு மாத காலத்திற்குக்கூட வரவில்லை என்ற கருத்து இருக்கிறது.

சென்ற போக்குவரத்துக் கழகங்களினுடைய போராட்டத்தின்போது, பூந்தமல்லி டிப்போவிலே பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். 144 பேருந்துகளில் — 72 பேருந்துகள் நின்றுகொண்டிருக்கின்றன. ஓடாத நிலையிலே இருந்தன. என்னவென்று நாங்கள் பார்த்தோம். நானும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் அங்கே நேரடியாகச் சென்று பார்த்தோம். அந்த 72 பேருந்துகளில் தரமில்லாத Clutch plate தரமில்லாத Gear box, தரமில்லாத Spare parts வெளிமாநிலங்களிலிருந்து வாங்கிப்போட்ட காரணத்தினால் அவை பழுதடைந்து ஓடமுடியாத நிலையிலே இருந்தன எனக் கூறப்பட்டது. 144 பேருந்துகளில் 72 பேருந்துகள் பட்டறையில் கிடக்கின்றபோது எப்படி வருமானம் வரும்? எப்படி ஊழியர்களுக்குச் சம்பளம் தர முடியும்? இந்த நிலை இருந்தது. இந்த நிலை மிக மோசமான நிலையாக, ஒரு தொடர் நிலையாக தமிழகத்தினுடைய அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் இருக்கிற காரணத்தால், தொழிலாளர் வர்க்கத்தினுடைய நலனைக் காக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உறுதிபூண்டு இருக்கிற காரணத்தால், இருக்கின்ற தொழிலாளர்களுக்கு ஊதியம் காலாகாலம் வர வேண்டும்; அவர்களுக்குள்ள சலுகைகள் குறைக்கப்படக்கூடாது; அப்படி இருக்க வேண்டுமென்றால், போக்குவரத்துத் துறையை - போக்குவரத்துக் கழகங்களை viable-ஆக ஆக்க வேண்டும். That should be made economically viable என்ற முறையில்தான் நட்டத்தில் ஓடுகின்ற வழித்தடங்களை — மீண்டும் பேருந்துகளை அரசுப் பேருந்துகள் மூலமாக — அங்கு ஆதாயம் ஈட்ட முடியாத நிலையில் இருக்கின்ற பேருந்துகள் என்ற முறையிலே சில வழித் தடங்களை—போக்குவரத்துக் கழகங்களை நாம் தனியாருக்கு விடவில்லை; சில வழித் தடங்களை — தனியாருக்கு விடுவதன் மூலமாக நமக்கு ஏற்கெனவே ஏற்பட்டு வருகிற நட்டத்திலிருந்து நாம் விடுபட முடியும்; நட்டத்திலிருந்து விடுபட்டுவிட்டால் தொழிலாளர்களுக்கு, ஊழியர்களுக்கு காலத்தில் ஊதியத்தைத் தர முடியும்; சலுகைகளைத் தர முடியும்; இந்த நோக்கோடுதான் போக்குவரத்துக்



கழகங்களினுடைய சில வழித் தடங்களை நாம் தனியாருக்கு விட வேண்டுமென்ற முடிவை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எடுத்திருக்கிறார்கள். அதைவிட இன்னும்கூட ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களுக்கும் இதுகுறித்துப் பேசிய மாண்புமிகு சகோதரி பாலபாரதி அவர்களுக்கும் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மேற்கு வங்க மாநிலம் ஏழைகளின் நலன் காக்கும் மாநிலம். அத்தகைய அரசுதான் அங்கு இருக்கிறது; உங்களுக்குத் தெரியும்; நாங்களும் உணர்வோம். ஆனால் அங்கே 50 சதவிகிதப் போக்குவரத்து தனியார் துறையிடம் இருக்கிறது என்பதை அவைக்கு நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

*முற்பகல் 10-45*

அதுமட்டுமல்ல. இன்னும் ஒரு முறை, மேற்கு வங்கத்திலே பொது விநியோக முறையைப் பற்றிப் பேசுகிறபோது மாண்புமிகு திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். மேற்கு வங்கத்திலே இருக்கிற பொது விநியோகத் துறையே தனியார் துறையிடம்தான் இருக்கிறது என்பதை அவை உணர வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி). அங்கும் கூட அரசுத் துறையிலே பொது விநியோகம் இருக்கிறபோது செம்மையாக அது நடைபெறாத காரணத்தால் பலன் ஏழை மக்களுக்கு செவ்வனே சென்றடையாத காரணத்தால், கட்டுப்பாடு விதித்துத் தண்டனை தர வேண்டுமென்றால் தனியார் துறை தவறு செய்கிறபோது தண்டிக்கிற அதிகாரம் அரசுக்கு இருக்கிறது. நீங்கள் உடனே தடுத்துவிடலாம், அவர்களை நீக்கிவிடலாம், பிறரைக் கொண்டு வந்துவிடலாம். ஆனால் அரசே பொது விநியோக முறையை மேற்கொள்கிறபோது ஒரு Civil Supplies Corporation ஊழியர் அல்லது ஒரு கூட்டுறவு அங்காடியினுடைய ஊழியர் தவறு செய்கிறபோது அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இருக்கிறது என்ற நிலையிலே அந்த முறை, அரசு மூலமாக பொது விநியோக முறை நல்ல முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றுதான் மேற்கு வங்கத்திலேகூட பொது விநியோக முறையை, ஏழைகளுக்காக இருக்கிற அந்தத் திட்டத்தையே, கம்யூனிஸ்ட் இயக்கங்களுடைய உன்னத தத்துவத் திட்டமான அந்தப் பொது விநியோகத் திட்டத்தையே, மேற்கு வங்க மாநிலத்திலே தனியாருக்கு விட்டிருக்கிறார்கள் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

அதைப்போலவே சீர்திருத்தத்தைப்பற்றி நான் சொன்னேன். பேருந்துக் கட்டணத்தை உயர்த்தக்கூடாது என்று சொல்கிறீர்கள், மின்சாரக் கட்டணத்தை உயர்த்தக்கூடாது என்று சொல்கிறீர்கள், P.D.S.—பொது விநியோகத் துறையிலும் சீரமைப்புக் கொண்டு வரக்கூடாது என்று சொல்கிறீர்கள். ஆனால் இப்படி கொண்டுவர வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. நேற்று தெளிவாக நான் பேசுகிறபோது எடுத்துச் சொன்னேன். எப்படிப்பட்ட அணுகுமுறையை மைய அரசு மேற்கொள்கிறது, நமக்குத் தர வேண்டிய நிதிப் பகிர்வை, மைய அரசினுடைய வருவாய் நிதிப் பகிர்வை— ஆண்டுக்கு 590 கோடி ரூபாயை தமிழகத்திற்கு தற்போது குறைத்துவிட்டது. அதுமட்டுமல்லாமல் வரும் ஆண்டிற்கு — கடந்த ஆண்டிற்க்குக்கூட 512 கோடி ரூபாயை பல காரணங்களைச் சொல்லி நிறுத்திவிட்டார்கள். ஒருபுறம் இப்படி நமக்கு நிதியை அவர்கள் தருவதில்லை. குறைத்து விடுகிறார்கள், வளர்ந்த மாநிலம் என்ற ஒரு காரணத்தைச் சொல்லி, நான் நேற்று விளக்கிச் சொன்னேன். இந்தியாவிலேயே கேரளா, மேற்குவங்கம், அங்கு வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. ஆனால் மற்ற எல்லா மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது 12.5 சதவிகிதம் வேலையில்லாத மக்கள், பட்டினியில் வாடுகிற மக்கள், பரிதவிக்கிற மக்கள், below poverty line என்ற முறையிலே இருக்கிற மக்கள், தமிழகத்தில்தான் ஏராளம் என்று இருந்தபோதிலும்கூட இந்த மாநிலத்தை வளர்ந்த மாநிலம் என்று சொல்லிவிட்டு, அண்டை மாநிலமான ஆந்திர மாநிலத்திற்கு இரண்டாயிரத்து சொச்சம் கோடி ரூபாய் grant. பீகாருக்கு, உ.பி.-க்கு என்று இப்படியெல்லாம் ஒரு வரையறையற்ற, ஒரு guideline இல்லாத காரணத்தால், grant தருவதிலே மைய அரசு பாரபட்சமான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கிறது என்றும் எடுத்துச் சொன்னேன். மைய அரசிலே இடம் பெற்றிருக்கிற தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள் மௌனிகளாக, ஆதாயம் கருதி, ஏதோ ஆதாயத்தைக் கருதி, என்ன ஆதாயம் என்று பிறகு நான் சொல்ல விரும்புகின்றேன். இதுபோன்ற மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று அறிஞர் அண்ணா சொன்னார். அண்ணாவினுடைய தம்பி என்று தி.மு.க.-வினுடைய தலைவர் எப்போது பார்த்தாலும் சொல்லிக்கொள்கிறார். ஆனால் 1949-லே நேப்பியர் பூங்காவிலே அண்ணா அவர்கள் இந்த மாபெரும் இயக்கத்தைத் தொடங்கியபோது அண்ணாவைச் சாடிவிட்டு அண்ணா தொடங்கிய இந்தக் கட்சியிலே அந்த நாள் தன்னை அவர் இணைத்துக் கொள்ளவில்லை என்பது நாடறிந்த உண்மை. அவைக்குத் தெரியும். அப்படிப்பட்டவர் அண்ணாவின் பெயரைச் சொல்லிச் சொல்கிறார், அண்ணாவினுடைய தம்பியாகிய நான் மாநில உரிமைக்காக



வாதாடுகிறேன், போராடுகிறேன், அவையில்கூட தீர்மானம் போட்டோம், டெல்லிக்குச் சொன்னோம் என்று. நேற்றுகூட எதிர்க்கட்சியினுடைய தலைவர் பேராசிரியர், மாண்புமிகு துரைமுருகன் போன்றவர்களெல்லாம் இதைச் சொன்னார்கள். ஆனால் உண்மை நிலை என்ன? டெல்லியிலே அவர்கள் இருக்கிறார்கள். டெல்லியிலே இருக்கிற ஆட்சியை தி.மு.க. தற்போது ஆண்டு வருகிறது. எப்படி ஆண்டு வருகிறார்கள்? அதிகாரத்தை எப்படிப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பது அவைக்குத் தெரியும். மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதற்காக நிதியை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற முயற்சியிலே அவர்கள் ஈடுபட்டால் தமிழ்நாடு மெச்சும், தாராள மனதோடு மாண்புமிகு புரட்சித் தலைவியும் அவர்களைப் பாராட்டுவார்கள். அதற்கு மாறாக, இருக்கின்ற அதிகாரத்தை, காவல் துறை அதிகாரியை கன்னத்திலே குத்து, குத்து என குத்துவதற்கு பயன்படுத்துகிறார்களேயொழிய, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திற்கு மைய அரசாங்கம் 590 கோடி ரூபாய், 512 கோடி ரூபாய் வர வேண்டிய நிதியை, தர வேண்டிய நிதியை, தார்மீகமாக வர வேண்டிய நிதியைத் தராமல் விட்டுவிட்டார்களே என்று கண்டிக்கிற பணியிலே அவர்கள் தங்களை ஈடுபடுத்தவில்லை.

*முற்பகல் 10-50*

ஆந்திர மாநிலம் அதிக grant-ஐப் பெறுகிறது. ஆந்திர மாநிலத்திலே ஓர் அமைப்பு தற்போது உருவாக்கப்பட்டு வருகிறது. அந்த அமைப்பு Telecommunication தொடர்பான ஓர் அமைப்பு. Upcountry Linkage என்று சொல்லக்கூடிய ஓர் அமைப்பு. நூற்றுக்கணக்கான கோடி முதலீட்டிலே சன் டி.வி. நிறுவனம் அந்த அமைப்பை உருவாக்கி வருவதாகக் கூறப்படுகிறது. மையத்திலே இருக்கின்ற தி.மு.க. ஆட்சி இதுபோன்ற ஆதாயங்களை தங்களுக்குத் தேடிக்கொள்ள வேண்டும், மைய அமைச்சரவையினுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி அதில் அக்கறை செலுத்துகிறார்களேயொழிய, மாநிலத்திற்கு அதிக பணம் வர வேண்டும் என்பதற்காக எந்த முயற்சியிலும் அவர்கள் ஈடுபடவில்லை. அதுமட்டுமல்லாமல் அங்கு ஒரு குழு போடப்பட்டிருக்கிறது. Economic Advisory Council என்ற ஒரு குழுவை மத்திய அரசு அமைத்திருக்கிறது. அந்தக் குழு ஒரு தீர்மானத்தைப் போட்டிருக்கிறது. அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் ``Reforms in the Petroleum Sector which calls for dismantling of Administrative Price Mechanism of Hydrocarbon" என்று சொல்லிவிட்டுச் சொல்கிறார்கள். ``Reform in Power Sector, Labour Reform and introduction of user charges for Electricity and Irrigation and reform in Public Distribution

System should be pushed forward and all these reforms should be achieved within the deadline already set to the State Governments" என்று அவர்கள் ஒரு முடிவை எடுத்திருக்கிறார்கள். இந்த Reform Committee-யிலே உறுப்பினராக இருப்பவர் யார்? மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். மாண்புமிகு சின்ஹா, Deputy Chairman, Mr. K.C. Pant இருக்கிறார்கள். இதிலே அடுத்த நிலையிலே இருப்பவர், தி.மு.க. ஆட்சி செய்யும் மைய அமைச்சரவையிலே பிரதான அமைச்சராக இருக்கின்ற Commerce and Industries Minister, முரசொலி மாறன். அடுத்து சுரேஷ் பாபு என்ற அமைச்சர், அஜீத்சிங் என்ற விவசாயத் துறை அமைச்சர், Disinvestment Minister அருண் சோரி மற்றும் அருண் ஜெட்லி போன்றவர்கள் எல்லாம் அந்தக் குழுவிலே இருக்கிறார்கள். இதை மாண்புமிகு C.P.I., C.P.M. இயக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும், மற்ற உறுப்பினர்களும், குறிப்பாக, பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் மணி, மற்றவர்களும் உணர வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். Draft Budget என்றுகூட நீங்கள் ஒன்று கொடுத்தீர்கள், அதிலேகூட, நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். Reform ஓரளவிற்குக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் ஆதரவு தெரிவிக்கிற மைய அரசு, தற்போது நீங்கள் தொடர்பு வைத்திருக்கிற, தி.மு.க. மிக முக்கிய பங்கு வகிக்கிற மைய அரசு, அதிலே திரு. முரசொலி மாறன் அவர்கள் பிரதான உறுப்பினராக இருந்து முடிவு எடுக்கிறார்கள், ஆணையிடுகிறார்கள். எப்படிப்பட்ட ஆணை? Reform in Power Sector ஒருபுறம். ஆனால், ஏழைகளைப் பாதிக்கின்ற அளவிற்கு Labour Reform என்று சொல்லியிருக்கிறார்கள். இங்குதான் C.P.M. உறுப்பினர்களும், C.P.I உறுப்பினர்களும் இதை எண்ணிப்பார்க்க வேண்டும். Labour Reform என்று சொல்கிறபோது, எந்த அளவிற்கு அதிலே உள்ள ஷரத்துக்கள் இருக்கின்றன என்பதனை நீங்கள் அதைப் படித்துப் பார்க்க வேண்டும். உழைக்கும் வர்க்கத்திற்கு, அவர்களுடைய நலனிற்கு, அவர்களுக்கு ஏற்கெனவே இருக்கின்ற சலுகைகளைப் பறிக்கின்ற அளவிற்கு முதலாளித்துவம் ஆங்கு தழைத்தோங்கி உழைக்கும் வர்க்கத்தை அழிக்கக்கூடிய அளவிற்கு Labour Reform Policy Guidelines are evolved at the instance of Mr. Maran and others. எந்த அளவிற்கு ஒரு பாதிப்பை அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்பதனை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். ஏதோ இங்கு அரசியல் காழ்ப்புணர்வு காரணமாக தெரிந்தோ, தெரியாமலோ சில நேரங்களில் சில மாறுபட்ட முறையிலே அரசியல் அணுகுமுறையிலே, அரசியல் பகடைக் காய்களை



நகர்த்துகின்ற சூழல் ஏற்படலாம். ஆனால், எதிர்கால தமிழகத்திற்கு எப்படிப்பட்ட இன்னல், உழைக்கும் வர்க்கத்திற்கு, மைய அரசால், அதுவும் குறிப்பாக, திரு. முரசொலி மாறன் அவர்கள் இடம்பெற்றுள்ள குழு மூலம் தொழிலாளர்களுக்கு விரோதமான கொள்கை நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) அவை உணர வேண்டும், நாடு உணர வேண்டும் என்பதற்காக இதை எடுத்துச் சொல்கிறேன்.

அதுமட்டுமல்ல திரு. முரசொலி மாறன் அவர்கள் இருக்கின்ற அந்தக் குழுவிலே இன்னொரு முடிவை எடுத்து கட்டாய தாக்கீதாக அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். அது என்னவென்றால், Introduction of user charges for Electricity and Irrigation. இதுதான் மிக முக்கியமான ஒன்று. நீங்கள் சொல்கிறீர்கள். மின்சாரக் கட்டணத்தை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நாங்கள் போட்டுவிடுவோம் என்ற அச்சம் இருப்பதாக தி.மு.க.காரர்கள் சொல்கிறார்கள். நாங்களா போட விரும்புகிறோம்? Assistance and loan linked reforms என்ற முறையிலே எங்களுக்கு தாக்கீது அனுப்பிவிட்டார்கள். அப்படி அதற்கு நாங்கள் ஒப்புதல் தரவில்லை என்றால் மாநில அரசுக்கு நிதியே ஒதுக்கமாட்டோம் என்று வரையறுத்து விட்டார்கள். அப்படி வரையறுத்துவிட்டு, உழவர்களுக்கு கட்டாய மின்சாரக் கட்டணத்தை நீங்கள் வசூலிக்க வேண்டுமென்று மட்டும் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) இந்த ஒரு பாராவை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன்.

முற்பகல் *10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள், முடித்துவிடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை. நீங்கள் ஒத்துக் கொண்டீர்கள் என்று சொல்லவில்லை. நான் அதைச் சொல்ல வரவில்லை. (குறுக்கீடு) I will give you time. நான் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூறுவது ஏதோ உலகப் பொருளாதாரத் தத்துவத்தை, C.P.M., C.P.I. ஒத்துக்கொண்டதாக நான் சொல்லவில்லை. ஆனாலும் கூட (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) அதுதான் நான் சொல்ல வருகிறேன். நீங்கள் ஒத்துக்கொண்டதாக நான் சொல்லவில்லை. ஆனாலும்கூட உங்களது மேற்கு வங்கத்திலே இருக்கிற நிதியமைச்சர் மாண்புமிகு தாஸ் குப்தா அவர்கள் சட்டப் பேரவையில் சொல்லியிருக்கிறார்,

வெளியிலே பத்திரிகைகளுக்குச் சொல்லியிருக்கிறார். என்ன சொல்லியிருக்கிறார் என்றால், இப்படிப்பட்ட Reform Linked Assistance—இப்படிப்பட்ட சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தால்தான் மாநிலங்களுக்கு உதவி என்று subject that falls under the State List of the Constitution அதிலே வருகின்றதைப்பற்றி மைய அரசு எங்களுக்கு தாக்கீது அனுப்பக் கூடாது. அந்த Reform-ஐ நடைமுறைப்படுத்துவது எங்களுடைய கடமை. Reform-ஐ நாங்கள் நடைமுறைப்படுத்த மாட்டோமா என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் பின்னர் விளக்குகிறேன். இந்த அணுகுமுறையை மேற்கு வங்கத்திலே அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். Reform வேண்டாமென்று மேற்கு வங்க அரசு சொல்லவில்லை. நாட்டுடைமைத் தத்துவத்திலேயிருந்து disinvestment in favour of private sector வேண்டாமென்றும் அவர்கள் சொல்லவில்லை. அதற்கு நான் பிறகு வருகிறேன்.

நீங்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால் விவசாயப் பெருங்குடி மக்களுக்காக நாம் குரல் எழுப்புகிறோம். விவசாயப் பெருங்குடி மக்களுக்காக மின்சாரக் கட்டணம் இலவசமாக இருக்க வேண்டும். உழுபவன் கணக்குப் பார்த்தால் உழக்குகூட மிஞ்சாது என்ற அளவிற்கு வறுமையிலே வாடுகிற அந்த உழவர்களுக்குச் சலுகை காட்ட வேண்டுமென்ற முடிவை எடுத்ததே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய இந்த அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த முடிவை அன்றே எடுத்தது. அந்தக் கொள்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறார். அதிலும்கூட தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் வழக்கமாக உண்மையை திசை திருப்பி, உண்மைக்கு மாறான செய்தியைத் தொடர்ந்து எழுப்புகிற காரணத்தால், மக்களைத் திசை திருப்பி விடலாம் என்ற கோயபல்ஸ் தத்துவத்தை அவர் நம்புகிற காரணத்தால் சொல்லிச் சொல்லி இலவச மின்சாரத்தை உழவர்களுக்குத் தந்ததே நான்தான் என்று உண்மைக்கு மாறான செய்தியை மக்களுக்குச் சொல்லி, விளம்பரப்படுத்தி, ஆதாயம் தேடுகிற பணியிலே ஈடுபட்டார். நாடு அதை அறியும், அவையும் அறியும். இலவச மின்சாரத் திட்டத்தை உழவர் பெருமக்களுக்கு இந்திய துணைக் கண்டத்திலேயே முதன்முறையாகக் கொண்டு வந்தது, இரட்டை இலைச் சின்ன ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசியல் ஆசான் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்த திட்டம்தான். திரு. கருணாநிதி என்ன செய்தார் என்பதனைக் கேட்பதற்கு அவர்கள் இருக்க வேண்டுமென்று நான் விரும்பினேன். அவர்கள் இதைக் கேட்க வேண்டுமென்று விரும்பினேன். ஒருவேளை இவற்றையெல்லாம் கேட்டால் பதில் சொல்ல முடியாது என்ற நிலையிலே



அவர்கள் தொடர்ந்து வெளியிலே இருக்கிறார்களோ என்ற எண்ணம்கூட எனக்கு எழுகிறது. ஆனால் தி.மு.க. ஆட்சி காலத்திலே ஒரு சலுகையைத் தந்தார்கள் புரட்சித் தலைவர் என்ன சலுகையைத் தந்தார். குறு நில விவசாயிகளுக்கு, சிறு விவசாயிகளுக்கு, இலவச மின்சாரத் திட்டம் என்றுமே இருக்குமென்று சொன்னார். பெரும் விவசாயிகளுக்கு Horse Power ஒன்றுக்கு ஒட்டுமொத்தமாக ஒரு பம்பு செட்டுக்கு 75 ரூபாய் என்று கொண்டுவந்தார். ஆனால், திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சர் ஆனபோது அவர்கள் ஏழையெளியவர்களைப்பற்றிக் கவலைப்படவில்லை. மற்ற உழைக்கும் வர்க்கத்தைப்பற்றிக் கவலைப்படவில்லை. மூடிய தொழிற்சாலைகளைத் திறக்க வேண்டுமென்பதிலே அவருக்கு அக்கறையில்லை. அதை விட்டுவிட்டு பெரும் விவசாயிகளுக்கு நான் இலவச மின்சாரத்தைத் தருகிறேன் என்று கொண்டு வந்தார். இவர்தான் ஏழைகளின் பங்காளனா? இவர்கள்தான் ஏழை மக்களை வாழ்விக்கின்றவர்களா? நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இதுதான் உண்மை நிலை.

தற்போது டெல்லியிலே இருக்கிற தி.மு.க. ஆட்சி — திரு. முரசொலி மாறன் தான் இடம் பெற்றுள்ள குழு மூலம் தமிழகத்திலுள்ள உழவர்கள் தலையிலே எப்படி அடிக்கிறார். அவர்கள் வயிற்றிலே எப்படிக் கை வைக்கிறார் என்றால், கட்டாயமாக Mandatory direction for introduction of user charge for electricity. உழவர்களுக்கு உட்பட இந்த தாக்கீதை மைய அரசு அனுப்பியிருக்கிறது. அதுமட்டுமல்ல irrigation அதாவது விவசாயிகள் எல்லாம் தண்ணீர் பெறுகிறார்கள். பல இடங்களில் அணைக்கட்டுகள் மூலமாக, ஏரிகள் மூலமாக தண்ணீரைப் பெறுகிறார்கள். அப்படி பயிரைப் பயிரிடுவதற்குப் பெறுகின்ற தண்ணீருக்கும், உழவர்களுக்கு தக்க வரியினை விதிக்க வேண்டும் என்ற உத்தரவினை திரு. முரசொலி மாறன் அவர்கள் தலைமையிலான குழு இன்று அந்த ஆணையை இட்டிருக்கிறது. அப்படி "User charge linked financial assistance alone would be given for irrigation programmes, irrigation projects meant for agro-developmental activities" என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலையை, விவசாயிகளுக்குப் பாதகமான நிலையை எடுத்து வருவது மைய அரசு. அந்த மைய அரசிலே இடம் பெற்றிருக்கிற திரு. முரசொலி மாறன், உழவர்களின் நலன்களுக்குப் பாதகமாக பற்பல நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார் என்பதனை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

*முற்பகல் 11-00*

P.D.S. - Public Distribution System-ஐப் பொறுத்தவரைக்கும் ஒரு Reforms கொண்டுவர வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்

விரும்பினார்கள். அந்த அடிப்படையில் ஏழைகளுக்கு மட்டுமே மலிவு
விலையிலே உணவுப் பொருட்கள் வழங்கப்பட வேண்டும். பணம்
படைத்தவர்களுக்கு அது தேவையில்லை; உதாரணத்திற்குச் சொல்கிறேன்
திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுக்குத் தேவையில்லை; திரு. மணி அவர்களுக்குத்
தேவையில்லை; திரு. ஞானசேகரன் அவர்களுக்கும் தேவையில்லை. திமுக.
ஆட்சியினுடைய நடைமுறை உங்களுக்குத் தெரியும். யார்
வேண்டுமென்றாலும் ரேஷன் கடையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
இந்த நிலை. இது ஒரு பாவ காரியமான நிலை. பணம் படைத்தவர்கள்,
வசதி படைத்தவர்களுக்கு மலிவு விலையிலே உணவுப் பொருட்கள் என்ற
நிலை மாறி, அந்தப் பலன் சற்று அதிகமாக ஏழைகளையே சென்று
சேரட்டுமே. வறுமைக்கோட்டு நிலைக்குக் கீழே வாழ்கிற ஏழைகள்—
ஏராளமாக— 35 சதவிகிதத்திற்கும் மேல் இருக்கின்ற தமிழகத்தில் அந்த
ஏழைகள் பட்டினி இருக்கக்கூடாது. Poverty alleviation is my prime object
என்ற முறையிலே வறுமை ஒழிப்புதான் என்னுடைய வாழ்நாளின் உன்னதத்
திட்டம் என்று புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)
பொது விநியோக முறையிலே ஒரு சீரமைப்பைக் கொண்டுவந்து, வசதி
படைத்தவர்கள் மலிவு விலையிலே பொருட்களை வாங்குகிற அந்த
நிலையை மாற்றி, ஏழைகளுக்கு இன்னும் அதிக சலுகைகளைச் செய்ய
வேண்டும் என்ற முறையிலே அந்த முறையைக் கொண்டு வந்தார்கள்.
ஆனால் தற்போது திரு. மாறன் பிரதானமாக இருக்கிற, டெல்லியிலே
இருக்கிற அந்தக் குழு ஒரு Mandatory direction அனுப்பியிருக்கிறது. அதிலே
அவர்கள் சொல்கிறார்கள். "Introduction of reforms in public sector should
be pushed forward before the deadline stipulated by Government of India"
என்று தாக்கீது அனுப்பியிருக்கிறார்கள். நாங்கள் அப்படியொரு reform
செய்ய வேண்டும் என்றுதான் ஒரு முயற்சியை மேற்கொண்டு, யார்
உண்மையிலேயே ஏழ்மை நிலையில் இருக்கிறார்கள், யார் வசதி
படைத்தவர்களாக இருக்கிறார்கள் என்ற ஒரு கணக்கெடுப்பிற்கு புரட்சித்
தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். உடனே தி.மு.க.-வினர்,
அவர்கள் கடந்த காலத்திலே செய்த தவறுகள் வெளிவந்து விடுமே என்ற
அச்சத்தின் காரணமாக ஆங்காங்கு எல்லோரையும் தூண்டிவிட்டு, சில
இடங்களில் வன்முறையைக்கூட தூண்டிவிட்டு, அந்தக் கணக்கெடுப்பே
சரியான முறையில் நடைபெற முடியாத அளவிற்கு கூக்குரல் எழுப்பி,
உண்மைக்கு மாறான தகவலை தமிழகத்தில் பரப்பி, ஐயோ, ஐயோ ஏழை
மக்களே. உங்கள் எல்லோருக்கும் புரட்சித் தலைவியினுடைய அரசு
அரிசியினுடைய விலையை 9 ரூபாயாக உயர்த்தப் போகிறது என்ற
உண்மைக்கு மாறான செய்தியை, கோயபல்ஸ் செய்தியைத் தொடர்ந்து
பறைசாற்றினார்கள். எப்படியேனும் புரட்சித் தலைவி அவர்களுக்கு



ஆண்டிப்பட்டி தொகுதியிலே, தொல்லை தரவேண்டும் என்ற ஒரே
நோக்கோடு, ஒரே காழ்ப்புணர்வோடு, ஒரே பொறாமையுணர்வோடு, ஒரே
ஆற்றாமையுணர்வோடு திரு. கருணாநிதி அவர்கள் மேற்கொண்ட சதித்
திட்டத்தின் காரணமாக இந்தப் பொது விநியோகத் துறையில் பணம்
படைத்தவர்கள் பெறுகின்ற பலனைக் கண்டறியக்கூடிய வாய்ப்பைக்கூட
தள்ளிவைக்கக்கூடிய ஒரு நிலைக்கு நாங்கள் வந்துவிட்டோம். ஆனாலும்கூட,
திரு. மாறன் அவர்களின் குழு டெல்லியிலிருந்து அத்தகைய கட்டளையை
Reforms செய்யுங்கள் என்ற கட்டளையை ஒருபுறம் இடுகிறார்கள். இங்கே
அவருடைய மாமன் அவர்கள் மக்களைத் தூண்டிவிட்டு, கடந்தகால
குறைகள் மக்களுக்கு, பொதுமக்களுக்கு வெளிப்படையாகத் தெரிந்துவிடக்
கூடாது என்பதற்காக அந்தக் கணக்கெடுப்பை நடத்துவதற்குத் தடைக்
கல்லாக இருக்கிறார். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்
தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். தெள்ளத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள்.
எந்தக் காலத்திலும், எந்தச் சூழலிலும் ஏழை மக்களுக்கு 3½ ரூபாய்க்கு
மேல் (மேசையைத் தட்டும் ஒலி) சல்லிக்காசுகூட அரிசியின் விலை
உயர்த்தப்பட மாட்டாது என்பதனைச் சொல்லியிருக்கிறார்கள் என்பதனை
நான் அவைக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு
உறுப்பினர்கள் பலர் பேசுகிறபோது இந்த Disinvestment policy -
Disinvestment of shares in public sector and privatisation of selected routes
of S.T.U. என்ற கொள்கையை நாங்கள் அறிவித்ததற்கு மாண்புமிகு
உறுப்பினர்கள் பலர் மாறுபட்ட கருத்தை இதுகாறும் எடுத்துச்சொல்லி
இருக்கிறீர்கள். இந்த Disinvestment policy கூட மைய அரசு மாநில
அரசுகளுக்கு அனுப்பி இருக்கிற தாக்கீதுகளில், கட்டளைகளில்
முக்கியமான ஒன்று. இப்போது - Reform linked assistance என்ற
முறையிலே அதையும் கொண்டு வந்திருக்கிறார்கள். போக்குவரத்துக்
கழகங்களைச் சீர்திருத்த வேண்டும் என்பது ஒரு கட்டாயம். அப்படி
சீர்திருத்தினால் புதிய பேருந்துகளை வாங்குவதற்கு பணம் தருவார்கள்.
மின்சார வாரியத்தைச் சீர்திருத்த வேண்டும் என்பது அவர்களுடைய
கட்டளை. அப்படி சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தால் மின்சார
வாரியத்தினுடைய நலனைப் பாதுகாக்க மைய அரசு பணம் தரும்.
இல்லையென்றால் பணம் தராது. ரூபாய் 5 ஆயிரம், 6 ஆயிரம்,
7 ஆயிரம் கோடியென நட்டம் ஆகும். அடுத்த ஆண்டு மின்வாரியத்
தொழிலாளர்களுக்கும், போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் ஊதியம்

தா முடியாத நிலைகூட ஏற்பட்டுவிடும். இது மைய அரசு மேற்கொண்டிருக்கிற அணுகுமுறை. W.T.O.-வில் அவர்கள் கையெழுத்து இட்டுவிட்டார்கள். ஆனால் மாநிலங்களை எல்லாம் அவர்கள் வற்புறுத்துகிற காரணத்தால், பண அதிகாரம் நம்மிடையே இல்லாத காரணத்தால், மைய அரசினுடைய அனுமதி இல்லாமல் வெளியிலிருந்துகூட நாம் கடன் வாங்க முடியாத நிலையை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை நான் எடுத்துச் சொன்னேன்.

நம்முடைய Autonomous Bodies - TWAD, TIDCO போன்ற அமைப்புகள் மூலமாக வெளியிலே கடன் வாங்கிக் கொள்ளலாம் என்ற நிலை கடந்த காலத்திலே இருந்தது. ஆனால் மாநில அரசுகளை எல்லாம், முனிசிபாலிட்டியைவிட மிகக் கேவலமான நிலைக்கு, அதிகாரமற்ற ஒரு அமைப்புகளாக உருவாக்குகின்ற பணியில் முரசொலி மாறன் அவர்கள் இருக்கின்ற டெல்லி அரசு இப்போது நடைமுறையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற காரணத்தால் தற்போது TIDCO, TWAD போன்ற அமைப்புகள் மூலமாக நிதி நிறுவனங்களிடமிருந்து, Nationalised Banks-களிடமிருந்து கடன் வாங்கி வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளலாம் என்றாலும் கூட அதற்கும் முட்டுக்கட்டையிட்டு இப்படிப்பட்ட நிலையையும் மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மேற்கொண்டிருக்கின்ற பணி என்ன? தற்போது மைய அரசுக்குச் சொந்தமான 27 பொது நிறுவனங்களை நாட்டுடைமையாக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்து திரு. முரசொலி மாறன் பிரதான மெம்பராக இருக்கின்ற அந்தக் குழு, அந்த முடிவினை மேற்கொண்டு அவற்றை ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள். Air India Limited, Bharat Brakes and Valves Limited, Bharat Pumps and Compressors Limited, Hindustan Cable Limited, Hindustan Insecticide Limited, Hindustan Organic Chemicals Limited, Indian Airlines, Hindustan Zinc Limited, Indian Pharmaceuticals Corporation, India Tourism Development Corporation, Madras Fertilizers Limited, Maruthi Udhyog Limited, Minerals and Metal Trading Corporation, National Fertilizers Limited, Trabha Tools Limited, Scooters India Limited.

உங்களுக்குத் தெரியும் B.S.N.L. இதுபோன்ற 27 அமைப்புகளை தனியாருக்குக் கொடுத்துவிடலாம் என்ற முடிவை திரு. மாறன் அவர்கள் பிரதான உறுப்பினராக இருக்கின்ற அந்தக் குழு முடிவெடுத்து அதை நடைமுறைப்படுத்திக்கொண்டு வருகிறது. இதிலே முக்கியமான ஒன்று என்னவென்றா , நட்டத்தில் இயங்குகின்ற நிறுவனங்களை தனியாருக்கு விடுவது என் து மட்டுமல்ல, கிட்டத்தட்ட ரூபாய் 5 ஆயிரம்



கோடியிலிருந்து 6 ஆயிரம் கோடி வரை இலாபத்தில் இயங்குகிற B.S.N.L. அமைப்பை எதற்காக தனியாருக்கு விட்டார்கள்? அந்தக் குழுவிலே திரு. மாறன் ஏன் இடம் பெற்றிருந்தார்? ஏன் இப்படிப்பட்ட முடிவுகளை எடுத்தார்? தி.மு.க. ஆட்சிபுரிகின்ற மைய அரசு இத்தகைய அணுகுமுறையை, மக்கள் விரோத அணுகுமுறையை மேற்கொண்டிருக்கிறது என்பதை எதிர்த்து குரல் எழுப்ப வேண்டும். அந்தக் குரல் டெல்லி வரை ஒலிக்க வேண்டும், எல்லோரும் இதற்கு உறுதுணை புரிய வேண்டும். C.P.M. உறுப்பினர்களுக்காக இதை நான் சொல்லுகின்றேன்.

அதுமட்டுமல்ல. தற்போது Bharat Aluminium Company, B.S.N.L., Modern Foods, Indian Tourism Development Corporation, Indo-Burma Petrol Limited, Hindustan Teleprinters Limited என்ற அமைப்புகளை எல்லாம், இலாபத்தில் இயங்குகிற அமைப்புகளை எல்லாம் தனியாருக்கு தாரைவார்க்கின்ற முடிவை எடுத்திருப்பது யார்? டெல்லியிலே இருக்கிற Industries Minister திரு. முரசொலி மாறன் இடம் பெறும் குழு இந்த முடிவை எடுத்திருக்கின்றது. இங்கே வந்தால், தமிழகத்தில் சோஷலிச தத்துவத்தைப் பேசுகிறார்கள். இங்கே வந்தால் தமிழகத்தில் ஏழைகளுக்காக உழைக்கின்றவர்கள் நாங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் தி.மு.க. தலைமையினுடைய சுட்டுவிரல் அசைவுக்கு ஆடுகிற, டெல்லியிலே இருக்கிற Industries Minister திரு. மாறன் குழு இப்படி ஏழைகளுக்கு விரோதமாக, தொழிலாளர்களுக்கு விரோதமாக, இலாபத்தில் இயங்குகிற அமைப்புகளை எல்லாம் தனியாருக்கு விட்டுவிடுகிறார்களே, இதுகுறித்து மேற்கு வங்கத்திலே ஆளுகின்ற உங்களது ஆட்சி போராட வேண்டும், போர்க்கொடி எழுப்ப வேண்டும்.

VAT - Value Added Tax என்பதற்கு மைய அரசு ஒரு குழுவை அமைத்திருக்கிறது. இந்த Value Added Tax-ஐப் பொறுத்தவரையில் உலகத்திலே பல நாடுகளில் நடைமுறைக்கு வந்திருக்கிறது. பல நாடுகளில் அது தோல்வியைத் தந்திருக்கிறது; தோல்வியைச் சந்தித்திருக்கிறது.

*முற்பகல் 11-10*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது மேற்கு வங்கத்தைப்பற்றிச் சொல்லி, மேற்கு வங்கத்தினுடைய ஆட்சி ஓர் இடதுசாரி ஆட்சி என்றெல்லாம் சொன்னதை நீக்கிவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** திரு. பழனிசாமி அவர்களே, நான் உங்களுக்கு 5 நிமிடம் time கொடுக்கிறேன். அப்புறம் சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட 'POTA' ...த்தைக்கூட நாங்கள் பயன்படுத்தமாட்டோம் என்று சொல்கிற ஒரு அரசு உண்டு என்று சொன்னால் இந்தியாவிலேயே அது மேற்கு வங்கம் தானே தவிர, வேறு எந்தவொரு மாநிலமும் கிடையாது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**திரு. கே. சி. கருணாகரன்:** தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுவது திரு. ஹேமச்சந்திரனா அல்லது திரு. ஜி. பழனிசாமியா என்று எனக்குச் சந்தேகம் வந்துவிட்டது. (சிரிப்பு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே.....

**திரு. கே.சி. கருணாகரன்:** தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு திரு. சி பொன்னையன்:** உங்கள் கருத்தை நான் மதிக்கிறேன். நான் ஒன்றும் உங்களைக் குறை சொல்லவில்லை. நான் சொல்லியதற்குக் காரணம் (குறுக்கீடு) இல்லை, இல்லை, கடைசியிலே நான் உங்களுக்கு time கொடுக்கிறேன். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், மைய அரசு எப்படிப்பட்ட அணுகுமுறையைக் கடைப்பிடிக்கிறது என்று சொன்னேன். போக்குவரத்துக் கழகங்களை நாட்டுடைமையாக்கிவிட்டால் தொழிலாளர்களுக்குப் பாதிப்பு வந்துவிடாதா என்று ஒரு கேள்வியை நீங்கள் எழுப்பிய காரணத்திற்காகச் சொல்கிறேன்; இங்கே இருக்கின்ற நிலை, போக்குவரத்துக் கழகங்கள் நட்டத்தில் இயங்குகின்றன. அதைச் சீர்திருத்தவில்லை, செம்மைப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அடுத்த மாதம் சம்பளம் கொடுக்கவே வழியில்லை; ஆனால் டில்லியிலே திரு. மாறன் அவர்கள் இங்கு போராட்டத்தை, அதுவும் போக்குவரத்துத் தொழிலாளிகளுடைய போராட்டத்தை, இரவு பகல் என்று பாராமல் கண் விழித்து, தள்ளாடுகிற வயதில், போக்குவரத்துப் போராட்டம் வெற்றி பெற்றுவிட்டால், அண்ணா தி.மு.க. ஆட்சிக்கு, புரட்சித் தலைவி ஆட்சிக்கு தொல்லையைத் தந்து வெற்றி பெற்றுவிடலாம் என்று கனவு கண்டுகொண்டு தி.மு.க.வினுடைய தலைவர் செயல்பட்டுக் கொண்டிருந்தார்.

தெரிந்தோ தெரியாமலோ, புரிந்தோ புரியாமலோ வெள்ளை அறிக்கையில் விளைவுகளைப்பற்றி நாங்கள் சொல்லியிருந்தபோதும், நீங்களும் அதை உணராமல் இருந்தீர்களே என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்துவதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன். இலாபத்தில் ஓடுகிற நிறுவனங்களையெல்லாம், தனியாருக்குத் தாரைவார்க்கிறபோது ஆங்கு தொழிலாளிகள், எந்த அளவிற்கு பாதிப்புக்கு உள்ளாவார்கள் என்பதனை ஓர் அகில இந்தியப் பிரச்சினையாக நீங்கள் எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் உங்களுக்கு இதைச் சொல்கிறேன்.



அதுமட்டுமல்ல, இப்போது உங்கள் மாநிலத்திற்கு நான் வருகிறேன். West Bengal-க்கேகூட வருகிறபோது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, அவர்கள் மாநிலம் தமிழ்நாடு. (சிரிப்பு)

**திரு. ஜி. பழனிசாமி:** தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** உங்களுடைய கொள்கை அரியணை ஏறியிருக்கிற மாநிலமான மேற்கு வங்கத்திற்கு வருகிறேன். அங்குகூட ஒரு முடிவை தற்போது எடுத்திருக்கிறார்கள். 13 different electronic units of Webral Limited - உங்கள் மாநிலத்திலே, 13 தொழிற்சாலைகளை (குறுக்கீடு) உங்களுடைய உணர்வுகளை (குறுக்கீடு) மன்னிக்க வேண்டுகிறேன், மன்னிக்க வேண்டுகிறேன். கம்யூனிச இயக்கம் ஆட்சியிலே இருக்கிற மேற்கு வங்கத்திலே 13 தொழிற்சாலைகள் தற்போது Disinvestment செய்யப்பட வேண்டும். தனியார் துறைக்கு விடப்பட வேண்டுமென்ற முடிவு அங்கும் எடுக்கப்பட்டிருக்கிறது. அங்கு அந்தத் தொழிலாளிகளுக்குப் பாதிப்பு ஏற்படாதா? நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். (குறுக்கீடு) அப்படி அவர்கள் எடுத்த முடிவுக்குக் காரணம், திரு. தாஸ் குப்தா அவர்களிடம் பேசினேன். மைய நிதியமைச்சர் அவர்களிடமும் கலந்துகொண்டுதான் பேசுகிறேன். அவர்கள் அணுகுமுறையை தவறு என்று நான் சொல்லவில்லை. அப்படிப்பட்ட அணுகுமுறையை, அவர்கள் மேற்கொண்டிருப்பதற்குக் காரணம்— அந்தத் தொழிற்சாலைகளையெல்லாம் தனியாருக்குத் தருகிறபோது, V.R.S.-ஐப் பொறுத்தவரைக்கும், நல்ல ஊக்கத் தொகையாக V.R.S.-க்குத் தருகிறார்கள். அதுமட்டுமல்ல, தொடர்ந்து நட்டத்திலே இந்த அமைப்புகள் ஓடிக்கொண்டிருக்கிறபோது, அரசுக்கு வருவாய், பணத் தட்டுப்பாடு இருக்கிறபோது, அரசினுடைய பணச் சுமை குறையும். அந்தத் தொழிலாளிகள் பாதிக்காமல், அந்தத் தனியார் நிறுவனங்கள் அவர்களுக்கு வேலைப் பாதுகாப்பைத் தர வேண்டுமென்ற முறையிலே நாங்கள் அதை நாட்டுடைமையிலேயிருந்து விடுவித்து தனியாருக்குத் தருகிறோம் என்று என்னிடம் சொன்னார்கள். அந்த அணுகுமுறையில்தான் புரட்சித் தலைவி அவர்களின் அரசு பேருந்துகளைத்

தனியார்மயமாக்குகிறபோது அந்தத் தொழிலாளர்களுக்கு எவ்வித பாதிப்பையும் கட்டாயம் தராது. வழக்கமாகத் தரப்படுகின்ற V.R.S.-னுடைய சலுகை அளவு கட்டாயம் தொழிலாளர்கள் மனம் மகிழக்கூடிய அளவுக்கு உயர்த்தப்படும். அந்தத் தனியார் நிறுவனங்களில் அவர்கள் வேலை பெறக்கூடிய வாய்ப்பினையும் மேற்கு வங்க அரசைப் போலவே தனியாருக்கு விடுகின்றபோது அத்தகைய பாதுகாப்பை உழைக்கும் வர்க்கத்தினுடைய நலனில் அக்கறையுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களினுடைய அரசு கட்டாயம் நடைமுறைப்படுத்தும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை நான் அவைக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

*முற்பகல் 11-15*

இன்னும் முக்கியமான ஒன்று. தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் இல்லை. சிமெண்ட்டைப்பற்றி உங்களுக்குத் தெரியும். சென்ற முறைகூட அவையில் இதுபற்றி நான் மிக விளக்கமாக எடுத்துச் சொன்னேன். எத்தகைய ஒரு தவறான அணுகுமுறையை, பாதகமான அணுகுமுறையை மைய அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதனை மக்கள் உணர வேண்டும் என்பதற்காக இதனை நான் சொல்கின்றேன்.

சிமெண்ட்டைப் பொறுத்தவரையில் ஒரு 'Cartel' உருவாகியிருப்பது நாடறிந்த ஓர் உண்மை. நாட்டிலே கட்டட வேலை தற்போது பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது. திரு. சிதம்பரம் அவர்கள் கொண்டுவந்த 'Money Bill' காரணமாக பணப் புழக்கம் இந்தியத் திருநாட்டிலே குறைந்துவிட்ட காரணத்தால் ஏற்பட்ட பாதிப்பையும் அதனால் ஏற்பட்டிருக்கிற inflationary trend-ஐயும் நாடு நன்கு அறியும்.

உழவுக்கு அடுத்து, நெசவுக்கு அடுத்து, கட்டடத் தொழில் பெரும்பாலும் வேலைவாய்ப்பை உருவாக்குகிற ஒரு தொழிலாக இருக்கிறது. அந்தத் தொழிலை நம்பி வாழ்கின்ற மக்கள் எண்ணற்ற அளவில் இருக்கின்றார்கள். இப்படி இருக்கின்றபோது சிமெண்ட் மூலமாக எப்படி கொள்ளையடிப்பது என்ற ஒரு திட்டத்தை பலர் வகுத்தார்கள், உருவாக்கினார்கள். அப்படி வகுத்த திட்டம்தான் இந்த 'Cement Cartel' என்ற திட்டம். அவைக்கு ஏற்கெனவே இது விளக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக 1 மூட்டை சிமெண்ட் உற்பத்தியாவதற்கு 80 ரூபாயிலிருந்து 85 ரூபாய்க்கு மேல் ஆகாது என கணக்கிடப்பட்டிருக்கிறது. காரணம், சிமெண்டிற்கு வேண்டிய முக்கிய மூலப் பொருள் சுண்ணாம்புக் கல். அடுத்து அதற்கு வேண்டியது எரிசக்தி.



சிமெண்ட் ஃபேக்டரியைப் பொறுத்தவரைக்கும், they are permitted to have their own energy generated within the factory. அதனால் உற்பத்திச் செலவு என்பதும் அவர்களுக்குக் குறைவு. அந்தச் சுண்ணாம்புக் கல்கூட அரசுக்குச் சொந்தமான பூமி. லீசுக்குத் தருகிறோம் சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு. மிகக் குறைந்த அளவிலே அதற்கொரு தொகையை வசூலித்துக்கொண்டு லீசுக்குத் தந்துகொண்டிருக்கிறோம். எனவே சிமெண்ட்டினுடைய உற்பத்திச் செலவு அதிகமாகக்கூடிய வாய்ப்பு எந்தக் காலத்திலுமே ஏற்படாது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே சிமெண்டினுடைய விலை 65 ரூபாயாக இருந்தது. ஆனால் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே 65 ரூபாயாக இருந்த சிமெண்ட் விலை — உங்களுக்குத் தெரியும் — 80 ரூபாய், 85 ரூபாய் என உயர்த்தப்பட்டது. திடீரென பல ஆண்டுகாலமாக தொழிலிலிருந்து விலகி நின்ற ஒருவர் India Cement Factory-க்கு அதிபராக வந்தார். அந்த நிறுவனத்திற்குச் சொந்தக்காரரான திரு. கே.எஸ். நாராயணன் அவர்களோ அல்லது திரு. சங்கர் அவர்களோ அதிலே ஆதிக்கம் செலுத்த முடியாத அளவிற்கு ஆங்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

திரு. வி.பி. சிங் அவர்கள் பாரதத்தினுடைய பிரதம அமைச்சராக இருந்தபோது என்று நினைக்கிறேன். financing institution control-ல் இருந்த இந்தியா சிமெண்டுக்குச் சொந்தமான ஷேர்களெல்லாம் தனியாருக்குக் கொடுக்கப்பட்டன. அந்தத் தனியார் ஷேர்களை யார் பணம் கொடுத்து வாங்கினார்கள் என்பதை அவை புரிந்துகொள்ளும் என எண்ணுகிறேன். பணம் படைத்தவர்கள், பணம் வைத்திருந்த ஓர் அரசியல் கும்பல் ஏன் உங்களுக்குத் தெரியாதது அல்ல, பெயரைச் சொல்லாவிட்டாலும்கூட அந்த கோபாலபுர கும்பலைப்பற்றி உங்களுக்குத் தெரியாதது அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கும்பலுடைய பணத்தை வைத்துக்கொண்டு தொழிலிலிருந்து விலகி நின்ற சீனிவாசன் ஒரு ஹோட்டலை, ஒரு சிறு ஹோட்டலை வைத்துக்கூட நடத்த முடியவில்லை என்ற நிலையிலே இருந்த திரு. சீனிவாசன், இந்தியா சிமெண்ட் அமைப்புக்கு திடீரென தலைவராக வருகிறார். அந்த ஷேர்கள் எல்லாம் அவர் பொறுப்புக்கு வருகிறது. நலிந்த நிலையிலே இருந்த இந்தியா சிமெண்ட் பேக்டரி சங்ககிரியிலே அதை விரிவாக்குகிறது, நெல்லையிலே தாழையூத்திலே அது விரிவாக்குகிறது. பெரம்பலூர் மாவட்டத்திலே என்று நினைக்கிறேன். இன்னும் ஒரு தொழிற்சாலையை அங்கு கொண்டு வருகிறது.

முற்பகல் 11-20

அதுமட்டுமல்ல. ஆந்திர மாநிலத்திற்குச் செல்கிறார்கள். எரகுண்டலா சிமெண்ட் பேக்டரியை வாங்குகிறார்கள். பிரியங்கா சிமெண்ட் ஃபேக்டரியை வாங்குகிறார்கள். கோரமண்டல் சிமெண்ட் ஃபேக்டரியை வாங்குகிறார்கள். ராசி சிமெண்ட் ஃபேக்டரியை வாங்குகிறார்கள். இப்படி எண்ணற்ற சிமெண்ட் தொழிற்சாலைகள் எல்லாம் வாங்கப்படுகின்றன. தொழிலே நடத்த முடியவில்லை என்று வீட்டிலே முடங்கிக் கிடந்து, பின்னர் சிங்கப்பூருக்கு அன்று பிழைப்பிற்காகச் சென்றிருந்த அந்த சீனிவாசன் அவர்களுக்கு இப்படி இந்தியாவிலேயே ஒரு மாபெரும் சிமெண்ட் தொழில் அமைப்பு அவர் ஆதிக்கத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. கோபாலபுரத்துப் பணம் அதற்கு உறுதுணையாக நின்றது. இது உலகறிந்த உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) உடனே திட்டத்தைத் தீட்டுகிறார்கள்.

TANCEM அமைப்பு, அரசு அமைப்பு இருக்கிறது. அது பழைய அமைப்பு. அந்த அமைப்புக்கு வேண்டிய அதிகாரிகளைக் கொண்டு வருகிறார்கள். Cost of production of cement per kilo, per bag என்னவாகும் என்று ஒரு கணக்கிடுகிறார்கள். உயர்த்திய கணக்கைப் போடுகிறார்கள். 'Cement Cartel' உருவாக்கப்படுகிறது. சபாரத்தினம் என்று சொல்லக்கூடிய ஒருவர் வரவழைக்கப்படுகிறார். 'Cement Cartel'-க்கு பொறுப்பை அவரிடம் ஒப்படைக்கிறார்கள். அப்படி ஒப்படைத்துவிட்ட பிறகு, சிமெண்ட் விலையை உயர்த்துவது எப்படி என்று சொல்லி உயர்த்திவிடுகிறார்கள். 150 ரூபாய், 160 ரூபாய், 180 ரூபாய் என்று சிமெண்ட் விலையை உயர்த்திவிடுகிறார்கள். அப்படி சிமெண்ட் விலையை உயர்த்திவிட்டு உடனே, உங்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த, நமது மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த மறைந்த பெரியவர் ஐயா மூப்பனார் அவர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார். ஆந்திர மாநிலத்திலிருந்து சிமெண்ட் வரவழைக்கப்பட்டு மிகக் குறைந்த விலைக்கு தமிழகத்தில் விற்கின்ற ஏற்பாட்டை - நீங்களே அந்த ஏற்பாட்டை மேற்கொண்டீர்கள். ஆந்திர மாநிலத்திலே சிமெண்ட் 110 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தமிழகத்தில் சிமெண்ட் 180 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. 'Cartel'-ஐ உருவாக்குகிறார்கள். அந்த 'Cartel'-லிலே அவர்கள் சொல்கிறார்கள். மற்ற அதிபர்களைக் கூப்பிட்டுச் சொல்கிறார்கள். நீங்கள் ஒத்துழைக்கவில்லையென்றால், These are all large scale industries. Large scale industries are falling under the purview of the Central Industry Ministry என்று அச்சுத்துகிறார்கள். பல தொல்லைகள். விரிவாக்கம்



வேண்டுமென்றால் அவர்களுக்குக் கிட்டாது. எத்தகைய தொல்லைகளையும் செய்துவிட முடியும் என்ற அச்சத்தின் காரணமாக மற்ற சிமெண்ட் தொழிற்சாலைகள் எல்லாம் இவர்கள் இடுகிற கட்டளைகளுக்கு ஆட்படுகிறார்கள். அப்படி ஆட்பட்ட பிறகு சிமெண்ட் விலை அப்படியே இருக்கிறது. மூப்பனார் ஐயா அவர்கள் எடுத்த முயற்சியும் பயன் பெறவில்லை. மூப்பனார் ஐயா அவர்கள் எழுப்பிய இந்தக் குரலை இந்திய துணைக் கண்டத்தில் உள்ள பிறரிடமும் சொன்ன காரணத்தால், மாண்புமிகு எங்களது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்தக் குரலை, இந்திய துணைக் கண்டத்தில் அனைத்து மாநிலங்களுக்கும் ஒலித்த காரணத்தால் எதிர்ப்பு வந்தது. உடனே வெளிநாடுகளிலிருந்து சிமெண்ட்டைக் கொண்டு வரலாம். இந்தோனேஷியாவிலிருந்து கொண்டு வரலாம், கொரியாவிலிருந்து கொண்டு வரலாம். அப்படிக் கொண்டு வருகிறபோது ஆங்கு இருக்கின்ற சிமெண்ட் மிகக் குறைந்த விலைக்குக் கிடைக்கிறது. கொண்டு வரலாம் என சிமெண்ட்டைக் கொண்டு வந்தார்கள். உடனே ஒரு முயற்சியிலே ஈடுபட்டார் டெல்லியிலே இருக்கிற Commerce Minister. சிமெண்ட் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டுமென்றால் that falls within the purview of Union Commerce Ministry. எனவே அவர் என்ன செய்கிறார்? சிமெண்ட் இறக்குமதிக்கு 25 சதவிகிதம் வரி என்று விதித்துவிடுகிறார். (குறுக்கீடு) 35 சதவீதம் (குறுக்கீடு) 35% later 25%, that was reduced to 20%. அதுதான் 25 சதவிகிதம் என நிர்ணயிக்கப்பட்டது. அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படுகிறது. அதை அவர் பொருட்படுத்தவில்லை. அதையும் மீறி சிலர் சிமெண்ட்டை இறக்குமதி செய்தார்கள். உடனே countervailing duty என்று சொல்லி, அதற்கும் ஒரு வரிவிதிப்பைக் கொடுத்து, இதனை 350 ரூபாய் எனக் கொண்டு வந்துவிடுகிறார். அதையும் மீறி சிலர் சிமெண்ட்டை உற்பத்தி செய்தார்கள். 200 ரூபாய், 180 ரூபாய் என இந்தியா சிமெண்ட்ஸ் சீனிவாசன் தலைமையிலே, மைய Industries and Commerce Minister ஆதரவோடு, கோபாலபுரம் ஆதரவோடு, இப்படி அடிக்கின்ற கொள்ளையிலிருந்து தப்பிக்க வேண்டுமென்று சிலர் இறக்குமதி செய்தார்கள். உடனே பார்த்தார். மைய அமைச்சர் திரு. மாறன் பார்த்தார். ஒரு முடிவுக்கு வந்தார். ஒரு கட்டாயத்தைப் போட்டார். Indian Bureau of Standard என்று ஒன்றிருக்கிறது. In those days, it was called as I.S.I. - Indian Standard Institute. இப்போது அதற்குப் பெயரை மாற்றியிருக்கிறார்கள். வெளி நாடுகளிலிருந்து எந்த சிமெண்ட் வந்தாலும் அது சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அதற்கு சர்டிபிகேட் வாங்க வேண்டும் என்று ஓர் ஆணையை இட்டார்கள். அப்படி இந்த சர்டிபிகேட்

வாங்குவதற்கு பல தடைகள் இருந்தன. "Chemical properties are missing in this particular cement" என்று சொன்னார்கள். இப்படியெல்லாம் தடைகளைச் சொல்லி. ஹார்பருக்கு வந்த பிறகு 21 நாட்கள் the cement should be left in the Harbour for curing என்ற முறையிலே ஓர் ஆணையை இட்டுவிட்டார்கள். இப்படி ஓர் ஆணை இட்டபிறகு 21 நாட்கள் demurrage என்ன ஆகும்? அதற்கு வட்டி என்ன ஆகும்? எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட நிலையை உருவாக்குகிறபோது, சிமெண்ட்டை இறக்குமதி செய்வதற்கு, இந்தியாவிலே எந்த ஒரு தொழில் அதிபரும் முன்வர முடியாத ஒரு சூழல் உருவாகிவிட்டது. இப்படிப்பட்ட ஒரு பகற் கொள்ளை, ஆண்டுக்கு கிட்டத்தட்ட 1700 கோடி ரூபாய் இதிலே கொள்ளை அடிக்கப்பட்டது. இன்னும் கொள்ளை அடிக்கப்பட்டு வருகிறது. இது அநியாயமான கொள்ளை.

இந்திய நாட்டிலே எப்படி வெள்ளையன் வெளியேற வேண்டும் என்று கொதித்தெழுந்து போராடினார்களோ, இப்படி மையத்து ஆட்சியிலே Industries and Commerce Minister-ஆக இருக்கிற காரணத்தால் அவர்களுடைய தயவு பாரதிய ஜனதா கட்சிக்குத் தேவை என்ற காரணத்தினால், நாட்டைச் சுரண்டுகிற ஓர் அணுகுமுறை எந்தக் காலத்திலும் இல்லாத அணுகுமுறை, இதை எதிர்த்துப் போரிட வெள்ளையன் காலத்திலே, வெள்ளையனை வெளியேற்றப் போராடிய போராட்டத்தைவிட மாபெரும் போராட்டத்தை, இந்திய துணைக் கண்டத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோரும் தொடர வேண்டும் என்ற நிலை உருவாக வேண்டும்; இந்தக் கொடுமை ஒழிக்கப்பட வேண்டும்; இந்தக் கொள்ளை ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காக இதனை நான் சொல்கிறேன்.

இப்படிப்பட்ட ஒரு சூழலோடு நின்றிருந்தால் பரவாயில்லை. விலையைக் குறைக்க வேண்டும் என்று பிற மாநில முதலமைச்சர்கள்கூட குரல் எழுப்ப ஆரம்பித்துவிட்டார்கள். குறிப்பாக, கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த கிருஷ்ணா அவர்கள் இந்தக் குரலை எழுப்பினார்கள். அதேபோல மேற்கு வங்கத்தினுடைய முதலமைச்சர் மிகக் கடுமையாக இதனைக் குறைக்க வேண்டுமென்று சொன்னார். அதேபோல கேரளத்து மாண்புமிகு அந்தோணி அவர்களும் இதைக் குறைக்க வேண்டுமென்று சொன்னார். ஏன் ஆந்திரத்து சந்திரபாபு நாயுடு அவர்கள்கூட இது அநியாயம் என்று சொன்னார். உடனே தற்போது ஒரு நியதியை - நமது மாண்புமிகு மைய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களுடைய அரசு, ஒரு முடிவுக்கு வந்தது. விலையை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று எல்லோரும் சொன்னார்கள். விலையை நிர்ணயம் செய்வதற்கு சாதகமாக,



Essential Commodities Act-லே சிமெண்ட் இருந்தது. திடீரென மைய அரசு பிப்ரவரி 15 ஆம் தேதி ஓர் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த ஆணை, சிமெண்ட் Essential Commodities பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது என்ற ஓர் ஆணையை இட்டுவிட்டார்கள். எப்படிப்பட்ட ஓர் அநியாயம், எப்படிப்பட்ட ஒரு கொடுமை? மக்களை பட்டப் பகலில் - விஞ்ஞான ரீதியான ஊழலில் பெயர்போன அவர்கள், வெளிப்படையான ஊழல் (மேசையைத் தட்டும் ஒலி) பகற்கொள்ளையில் ஈடுபட்டு, சட்டத்தைக் கையிலே வளைத்துக்கொண்டு செயல்படுகிற முறை, மக்களைச் சுரண்டுகிற முறை, கட்டடத் தொழிலாளர்களை, இந்திய துணைக் கண்டத்திலே பட்டினி போடுகின்ற நிலையில், தமிழகத்திலே இருந்த அந்த Cartel-ஐ இந்திய துணைக் கண்டத்தில் இருக்கிற எல்லா மாநிலங்களுக்கும் நீட்டித்து, எல்லா தொழில் அதிபர்களையும் கையிலே போட்டுக்கொண்டு, Industries Minister, Commerce Minister என்ற முறையில் இருக்கிற காரணத்தால், ஆண்டுக்கு 1700 கோடி ரூபாய் கொள்ளையடிக்கப்படுவதைப்பற்றி குரல் எழுப்ப வேண்டும். அரசியல் உணர்வுகளுக்கு அப்பால் நின்று அனைத்துக் கட்சிகளும் ஒரு குரலாக இதை எதிர்க்காவிட்டால் சுதந்திர நாடு இந்தியா என்று சொல்வதில் அர்த்தமே இல்லாமல் போய்விடும் என்பதனை அவை உணர வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்காக இதனை நான் எடுத்துச் சொல்கிறேன்.

முற்பகல் 11-25

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எந்த மாநிலத்திலும், யாரும் செய்யாத அளவிற்கு ஓர் அணுகுமுறையை தற்போது நடைமுறைக்குக் கொண்டுவந்தார்கள். அதுதான், இங்கே உற்பத்தி ஆகின்ற சிமெண்ட்டுக்கு விலை நிர்ணயிப்பதிலே இரண்டு ஸ்டேஜ் என்ற முறையிலே — அம்மா அது 145 ரூபாய் இல்லையா?—இரண்டு இரக சிமெண்ட் இருக்கின்றது. உச்சகட்ட விலையாக 145 ரூபாய், 135 ரூபாய் என்ற முறையை அதற்கு உள்ளே விற்கின்றவர்களுக்கு மட்டும் 16 சதவிகித வரி, அதற்கு மேலே விற்கின்றவர்களுக்கு 24 சதவிகித வரி என ஒரு முறையைக் கொண்டுவந்திருக்கிறார்கள் புரட்சித் தலைவி அவர்கள். ஆனால் சட்டத்திலே வழியில்லாமல் இருக்கிறது, சட்டத்தை அவர்கள் கையிலே எடுத்துக் கொண்டார்கள். டெல்லியிலே அவர்கள் ஆட்சியைக் காப்பாற்றுவதற்காக பாரதிய ஜனதா அரசாங்கம், திரு. மாறன் அவர்கள் நடைமுறையில் கொண்டு வந்திருக்கின்ற அனுகுமுறையால் ஏற்பட்டுள்ள இந்த பகற் கொள்ளையைத் தடுக்காமல் அமைச்சரவையிலிருந்து நீக்காமல் நாடு எப்படியானாலும் பரவாயில்லை என்ற ஒரு நிலையை டெல்லியிலே

உள்ளவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டுமென்பதற்காக, அந்த 52 கிரேடு சிமெண்ட் 145 ரூபாய், 42 கிரேடு சிமெண்ட் 135 ரூபாய் என்றும், இதற்கு அதிகமாக விற்பார்களென்றால், அவர்களுக்கு 24% வரி என்ற ஒரு நிலையை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கொண்டுவந்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் காரணமாக தற்போது ஓரளவிற்கு சிமெண்டினுடைய விலை குறைந்து இருக்கிறது. ஆனால் அது இன்னும் போதாது. இன்னும் பல கடுமையான நடவடிக்கைகளை புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தைச் சுரண்ட எண்ணியவர்கள், டெல்லியிலே ஒட்டிக்கொண்டு அமைச்சரவையிலே சுகத்தைத் தேடிக்கொண்டு இந்திய துணைக் கண்டத்தில் இருக்கின்ற எல்லா சிமெண்ட் தொழிற்சாலைகளும் நாளுக்கு நாள், மாதத்திற்கு மாதம், ஆண்டுக்காண்டு கொள்ளையடிப்பதற்கு உறுதுணையாக இட்டமிடப்பட்ட ஓர் அணுகுமுறையில் அவர்கள் ஈடுபட்டிருப்பது வேதனைக்குரிய ஒன்று என்பதனை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு அரசினுடைய சொந்த வருவாயானது சம்பளம், ஓய்வூதியம், அரசு வாங்கிய கடன்களுக்கு வட்டி, கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு தேவையான தொகை—That is interest and principal repayment—உணவு மானியம், உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியம் ஆகிய ஐந்து இனங்களுக்குப் போதவில்லை என்ற நிலையை நான் எடுத்துச் சொன்னேன். பல்வேறு நலத் திட்டங்களுக்கான செலவுகளுக்கே மாநில அரசிடம் சொந்த நிதி இல்லாத நிலை இருக்கிறது. இவற்றையெல்லாம் கடன் வாங்கித்தான் செயல்படுத்த வேண்டிய நிலை உள்ளது. இவ்வாறான நலத் திட்டங்களுக்கு மத்திய அரசும், எந்த நிதி நிறுவனமும் கடன் வழங்க முன்வரவில்லை என்பதையும் நான் எடுத்துச்சொன்னேன். இத்தகைய திட்டங்கள், மூலதனச் சொத்துகளாக இல்லாத காரணத்தால் those not being capital investments இந்தத் திட்டங்களை மாநில அரசு தன் சொந்த நிதியாதாரங்களிலிருந்துதான் செயல்படுத்த வேண்டும். அத்தகைய நிலைக்கு கடன் பெற வேண்டும். ஆனால் கடன் பெறக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை, அது சுந்தத்தும் கூட அல்ல. Because there won't be any return on this investment.

அதுமட்டுமல்ல, மேற்குறிப்பிட்ட நலத் திட்டங்களைத் தவிர, மாநில அரசு பல வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. இதில்



சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், ஏழை எளியவர்களுக்கு வீட்டு வசதி உருவாக்கித் தரும் திட்டங்கள், தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், சொட்டுநீர்ப் பாசனத் திட்டம், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், தன்னிறைவுத் திட்டம், ஊரகப் பகுதிகளில் மகளிருக்கு ஒருங்கிணைந்த சுகாதார கழிப்பறைகள் கட்டும் திட்டம் அடங்கிய பல கிராம மேம்பாட்டுத் திட்டங்கள் போன்றவையெல்லாம் அடங்கும். இவற்றையும்கூட அரசு கடன் வாங்கித்தான் செயல்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறது. தற்போது நான் கூறியதைக் கருத்தில்கொண்டு,— மாநில அரசு தன் சொந்த வருவாயை உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், மூலதனச் சொத்துக்களை உருவாக்காத capital investment உருவாக்காத திட்டங்களின்மீது செலவுகளைக் குறைக்க வேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் பல ஆலோசனைகளைக் கூறினீர்கள். தொடர்ந்து அதற்கு நல்லாதரவை நீங்கள் நல்குவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. வரவிற்கு மீறிய செலவுகள் என்ற போக்கினை நீடிக்கவிட்டு, மாநில அரசை ஒரு debt trap என்ற நிலைக்கு, கடன் சூழலிலே தள்ளி விடாத ஒரு நிலையை அப்போதுதான் நாம் மேற்கொள்ள முடியும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின், திரு. ஜி.கே. மணி மற்றும் பலர் அவர்தம் உரையில் அரசு பல்வேறு நலத் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கங்களைக் குறைத்துள்ளதாகவும், பல இனங்களுக்கு வெறும் சுழிதான் உள்ளது என்றும் குறிப்பிட்டு, மாநில அரசு தமிழகத்தை இந்தியாவில் எப்படி முதன்மையான மாநிலமாகக் கொண்டுவர முடியும் என்று ஒரு வினாவை எழுப்பினார்கள். இதுபற்றி சில விளக்கங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பல்வேறு வீட்டுவசதித் திட்டங்களுக்காக, குறிப்பாக ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர், சீர்மரபினர் ஆகியோரின் நலனுக்காகச் செயல்படுத்தப்பட்டுவரும், இந்திரா வீட்டுவசதித் திட்டம், மீனவர்களுக்கான இலவச வீட்டுவசதித் திட்டம் அனைத்திற்கும் நிதியொதுக்கம் குறைக்கப்பட்டுள்ளது என்று உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் பலர் கூறினார்கள். ஒரு திட்டத்திற்குத் தேவையான நிதியை வரவு-செலவுத் திட்டத்தின் மூலமாகவோ அல்லது வரவு-செலவுத் திட்டத்திற்கு அப்பாற்பட்டு outside the Budget நிதியாதாரத்தை அரசு நிறுவனங்கள் மூலம் கடனாகப் பெற்றோ செயல்ப்படுத்தலாம் என்பதுதான் நடைமுறை. அதைத்தான் நாங்கள் கடைப்பிடித்து வருகிறோம். அந்த அடிப்படையில் இத்திட்டங்களுக்கான நிதியை தமிழ்நாடு ஊரக வீட்டுவசதிக் கழகத்தின் மூலம், வரவு செலவுத்

திட்டத்திற்கு அப்பாற்பட்ட திட்டமாக, அதாவது outside the Budget Plan Scheme என்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கு நிதி இல்லை என்று கூறுவது தவறு என்பதற்காக இதைச் சொல்கிறேன். ஊரக வீட்டுவசதிக் கழகம் 'ஹட்கோ' நிறுவனத்திடமிருந்து கடன் பெற்று, நேரடியாக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, அதாவது District Rural Development Agency-களுக்கு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கடனை அரசு ஏன் நேரடியாகப் பெற்று, வரவு-செலவுத் திட்டத்தின் வாயிலாக செலவழிக்கக் கூடாது என்ற வினாவை மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பலாம். இதற்கும் காரணம் உண்டு.

கடந்த ஆண்டு ஹட்கோ நிறுவனத்திடமிருந்து அரசு நேரடியாக கடன் பெறுவதில் ஒரு சிக்கல் ஏற்பட்டுள்ளது. தேசிய வீட்டுவசதி வாரியம் National Housing Board என்ற நிறுவனம் ஹட்கோ நிறுவனம் ஆகியவை கடன்களை எந்த அடிப்படையில் யாருக்கு வழங்கலாம் என்பதனை வரையறுத்து இருக்கின்றது. இந்த இரு நிறுவனங்களுக்கு இடையேயான உறவு, ரிசர்வ் பேங்கிற்கும் மற்ற வங்கிகளுக்கும் இடையே இருக்கின்ற உறவிற்கு சமமானதாகும். அந்த National Housing Board வரையறையின்படி, ஹட்கோ நிறுவனம் மாநில அரசுக்கு நேரடியாக அதன் சொந்த நிதி மதிப்பில், அதாவது அதன் net worth-ல் 50 விழுக்காட்டிற்கு மேல் கடன் வழங்க முடியாது. இப்போது அந்த ஹட்கோவினுடைய Total asset என்ன இருக்கிறதோ அந்த asset-னுடைய பாதி அளவிற்குத்தான் ஒரு மாநிலத்திற்கு அவர்கள் கடனை வழங்கமுடியும். ஆனால் கடந்த காலத்திலே அந்த ஹட்கோ மூலமாக நிறைய நிதியை தமிழக அரசு வாங்கிவிட்டது. வாங்கிய நிதியை இன்னும் கட்டாத நிலை இருக்கிறது. அப்படி இருக்கிற காரணத்தால், எங்களது அரசுக்கு அது ஒரு சுமையாக இருக்கிறது. எனவே இந்த உச்சவரம்பு ஏற்கெனவே ஏற்பட்டுள்ள காரணத்தால், கடந்த கால ஆட்சியினுடைய அணுகுமுறையால் ஹட்கோ நிறுவனம் அரசுக்கு மேலும் நேரடியாக கடன் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டது. இதன் காரணமாக, அரசு எந்தத் திட்டங்களை இதுவரை ஹட்கோவிடம் நேரடியாக கடன் பெற்று நிறைவேற்றி இருந்ததோ அந்தத் திட்டங்களைக்கூட தற்போது அரசு நிறுவனங்கள் மூலமாகத்தான் நாங்கள் ஈடேற்ற வேண்டிய நிலையிலே இருக்கிறோம். இதன் அடிப்படையில்தான் கடந்த நிதியாண்டில்கூட இந்திரா வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் மாநில அரசின் நிதிப் பங்கான 50 கோடி ரூபாய், ஊரக வீட்டுவசதிக் கழகத்தின் மூலம் கடன் பெற்று செயல்படுத்தப்பட்டது. Loan to be obtained directly from HUDCO என்ற நிலை மாறி, தற்போது அரசு நிறுவனங்கள் மூலமாகத்தான் கடனைப் பெற வேண்டும் என்ற நிலை வருகிறது. அப்படி



வருகிறபோது, that won't be reflected in the Budget என்பதற்காகத்தான் அதை நான் விளக்கிச் சொல்கிறேன். ஆகவே இத்திட்டத்திற்குத் தேவையான நிதி நடப்பு ஆண்டிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் அவர்களுக்கும் — மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் அதைச் சொன்னார்கள் — மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்களின் கவனத்திற்கும் இதை நான் கொண்டுவருகிறேன்.

*முற்பகல் 11-35*

அதைப்போலவே, மீனவர் வீட்டுவசதித் திட்டத்தைப் பொறுத்தவரையில், மத்திய அரசு வழங்கும் பங்கான ரூ.7 கோடி மட்டுமே வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் பங்கான மீதி ரூ. 7 கோடி, தமிழ்நாடு ஊரக வீட்டுவசதிக் கழகம் மூலம் வழங்கப்படும் என்பதனையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இத்திட்டத்திற்கும் நிதி குறைக்கப்பட்டுள்ளது என்பது சரியான தகவல் அல்ல.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப்பற்றி நான் கூற விரும்புகிறேன். இதற்கென வரவு-செலவுத் திட்டத்தில் தனி நிதியொதுக்கம் செய்வதோடு, நடைமுறையில் இருக்கும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற திட்டம் கடந்த காலத்தில் செயல்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு கிராமம் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ளதால், அங்குள்ள அந்த சட்டமன்றத் தொகுதி அல்லது யூனியனில் உள்ள, மற்ற பகுதியிலுள்ள மக்களிடையில், 'எங்களுக்கு இந்தத் திட்டம் இல்லையே, எங்களுக்கு இல்லையே' என்ற ஒரு அதிருப்தி ஏற்பட்டு, அதுகுறித்த குறைபாடுகள் அரசினுடைய கவனத்திற்கு வந்தது. சட்டமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு ஒரு கிராமத்தைத் தேர்வு செய்து, சிரமத்தையும் தந்தார்கள். இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டுதான் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை ஒரு விரிவான திட்டமாக ஒரு `Comprehensive' திட்டமாக பல பகுதிகளுக்கும் பலனளிக்கும் திட்டமாக, குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய் தனியார் பங்களிப்பை மேற்கொண்டு ஒரு பெருந்திட்டமாகக் கொண்டுவர வேண்டும் என்ற முறையிலே, அரசு அந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்தது.

ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பைப் பெருக்குவதன் மூலம்தான் உண்மையான ஊரக மறுமலர்ச்சியை ஏற்படுத்த இயலும். இதனைக் கருத்தில்கொண்டுதான் இந்த முறையை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்கிறது. இந்தத்

திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், வரவு-செலவுத் திட்டத்தில் ஒன்றும் ஒதுக்கப்படவில்லை என்று கூறப்பட்டது. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு அரசு அளிக்க வேண்டிய முதலீட்டையும் கடனாக ஊரக வீட்டுவசதிக் கழகம் மூலம் பெற்று செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்களுக்கும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மீனவர்களுக்கு டீசல் மானியத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்களும் மற்றவர்களும் எடுத்துச் சொன்னார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் திரு. கருணாநிதி அவர்கள்கூட எழுதியிருக்கிறார்; அவருடைய பத்திரிகையிலே எழுதியிருக்கிறார்; மீனவர்களுக்கான டீசல் மானியத் திட்டத்தை மாநில அரசு விட்டுவிட்டது என்று சொல்லியிருக்கிறார். ஒருவேளை வயதான காரணத்தால், மாநில அரசு என்ன செய்கிறது; மைய அரசிலே தன்னுடைய மருமகன் என்ன செய்கிறார் என்பதுகூட புரியாத நிலையில் அவர் இருக்கிறாரோ என்னவோ தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மீனவர்களுக்கு டீசல் மானியம் வழங்குகிற திட்டம், மாநில அரசினுடைய திட்டம் அல்ல. இத்திட்டம் ஒரு மத்திய அரசின் திட்டம். இந்தத் திட்டத்தை 2002-2003 ஆம் ஆண்டிற்கு, திரு. கருணாநிதி அவர்களுடைய மருமகன் திரு. மாறன் அவர்கள் ஆளுகிற மைய அரசு நிறுத்திவிட்டது. நமது மாநில மீனவர்களின் வயிற்றிலே அடித்து விட்டது. இதுதான் உண்மை. இந்தக் குரலை மைய அரசை நோக்கி கொடுத்திருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின்கூட இங்கு பேசினார். தன்னுடைய மாமனாரை நோக்கிப் பேசியிருக்க வேண்டும்; தன்னுடைய மருமகனை நோக்கி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருக்க வேண்டும். ஏதோ ஏதோ பத்திரிகையில் எழுதுகிறார். அப்படி உண்மைக்கு மாறானதை எழுதுகிறார். மைய அரசு மீனவர்கள் நலனில் அக்கறையில்லாமல், இந்த டீசல் மானியத்தை, இதுகாறும் கொடுத்துவந்த டீசல் மானியத்தை இந்த ஆண்டிலிருந்து நிறுத்திவிட்டது என்பதனை நான் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

*(முற்பகல் 11-40)*

அதைப்போலவேதான் கிராமத் தன்னிறைவுத் திட்டம். கிராமத் தன்னிறைவுத் திட்டத்திற்கு பூஜ்ஜியம் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற ஒரு தவறான தகவலைச் சொன்னார்கள். இந்த அரசால் 2001-2002 ஆம் ஆண்டு 40 கோடி ரூபாய் இதற்கு நிதி ஒதுக்கப்பட்டது. இதிலே 24 கோடி ரூபாயை ஹட்கோ நிறுவனத்திடமிருந்து கடன் பெற்றும், மீதி 16 கோடி ரூபாயை மாநில அரசு தனது சொந்த நிதியிலிருந்தும் ஒதுக்கி இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. ஆனால் நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல, ஹட்கோ நிறுவனம் வரையறுக்கப்பட்ட உச்ச வரம்பிற்கு மேலாக தமிழகத்திற்கு ஏற்கெனவே கடன் வழங்கிவிட்டது. நான் ஏற்கெனவே சொன்னேன். ஹட்கோ நிறுவனம், மாநில அரசுக்குக் கடன் கொடுப்பது என்பது அதனுடைய total asset-லே 50% தான் கடனாகக் கொடுக்க முடியும் என்ற நிலை இருக்கிறது. ஆனால் கடந்த கால தி.மு.க. ஆட்சியிலே ஹட்கோ நிறுவனத்தின் மூலம் வாங்கிய கடன் இன்னும் கட்டப்படாத நிலையில் இருக்கிற காரணத்தினால், ஹட்கோ நிறுவனத்தின் மூலமாக, மாநில அரசு நேரிடையாக கடனைப் பெறக்கூடிய தகுதியை இழந்துவிட்டது. இதன் காரணமாகத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு எப்படியும் இந்தத் திட்டத்தை ஈடேற்ற வேண்டும், கிராமத் தன்னிறைவுத் திட்டத்தை விட்டுவிடக்கூடாது, ஏழை மக்களுடைய நலன் காக்கப்பட வேண்டும் என்ற நோக்கோடு இதன் காரணமாக 24 கோடி ரூபாய் அளவிலான கடன், தமிழ்நாடு ஊரக வீட்டுவசதிக் கழகத்தின் மூலம் ஹட்கோ நிறுவனத்திலிருந்து பெற்று, அரசு நிறுவனத்தின் மூலம் கடனைப் பெறலாம். HUDCO, Housing Board or TWAD அது போன்ற அமைப்புகள் எல்லாம் they have not yet lost their eligibility whereas in the eye of HUDCO, the Government has lost its financial eligibility. இதுதான் இங்கே இருக்கின்ற ஒரு துரதிருஷ்டமான நிலை ஆகும். இந்த் அடிப்படையில் தற்போது வரவு-செலவுத் திட்டத்தில், இந்தத் திட்டத்திற்கு மொத்தம் 40 கோடி ரூபாய் செலவிடப்படும். 20 கோடி ரூபாய் வரவு-செலவுத் திட்டத்திலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. எஞ்சிய 20 கோடி ரூபாயை வீட்டு வசதிக் கழகத்தின் மூலமாகப் பெற்று, இதை நாங்கள் நடைமுறைப்படுத்துவோம். இதுபற்றிய விவரத்தை நிதிநிலை அறிக்கையில் குறிப்பு 1-லே பக்கம் 27, பத்தி 39-ல் குறிப்பிட்டுள்ளதைக்கூட, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோலவே, ஊரக வேலைவாய்ப்புத் திட்டம். ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், நிதிநிலை அறிக்கையில் குறிப்பு பகுதி 1 பக்கம் 27, பத்தி 44-ல் நான் ஏற்கெனவே இதைப்பற்றிக் கூறியிருக்கிறேன். சம்பூர்ண ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்காக 59 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு அனைத்து ஊரக வேலை வாய்ப்புத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து புதிய பெயரைச் சூட்டி சம்பூர்ண ஊரக

வேலைவாய்ப்புத் திட்டம் என்று அறிவித்ததன் அடிப்படையில் மற்ற தலைப்புகளின்கீழ் ஒதுக்கீடுகள் செய்யப்படாமல் சம்பூர்ண ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் என்ற தலைப்பின்கீழ் இந்த 59 கோடி ரூபாய் ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதைப்போலவே, சென்னைக் குடிநீருக்கு எதுவுமே திட்டத்தில் நிதி ஒதுக்கவில்லை என்ற ஒரு குறையை மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள். இதில் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். இது முற்றிலும் தவறான செய்தி ஆகும். 2001-2002 ஆம் ஆண்டில் எப்போதும் இல்லாத அளவிற்கான வறட்சியை சென்னை மாநகரம் சந்தித்தது. இந்த வறட்சி நிலையைச் சமாளிக்க எந்தவித நடவடிக்கையும் அப்போது ஆண்டுகொண்டிருந்த தி.மு.க. அரசு எடுக்கவே இல்லை. இதுதான் உண்மையான நிலை. ஆனால் நமது புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் அந்த உடனடி நிவாரணத்திற்காக ஆளுகிற ஆட்சி — அன்று ஆண்ட ஆட்சி, தி.மு.க. ஆட்சி, சென்னையிலே மேயர் திரு. மு.க. ஸ்டாலின், கோட்டையிலே அவர் தகப்பனார் முதலமைச்சர், அவர்கள் நினைத்திருந்தால், சென்னையினுடைய குடிநீர்ப் பிரச்சினையை ஒரு நொடியில் தீர்த்திருக்கலாம். ஆனால் ஒருவேளை வரும் தேர்தலிலே தோற்றுவிடுவோம், நமக்கு ஏன் இந்த வேலை என்று அவர்கள் ஏனோதானோ என சென்னை மக்களை ஏமாற்றி விட்டார்களோ என்று தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாநகர மக்களுக்காக, இந்தக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதி எந்த நடவடிக்கையுமே எடுக்காத நிலையிலேயிருந்தார். மேம்பாலம் போன்ற வேறு பல பணிகளை முக்கியமாக கவனித்துக்கொண்டிருந்த திரு. மு.க. ஸ்டாலின் அவர்களும் குடிநீர்ப் பிரச்சினையை அந்த நேரத்திலே மறந்துவிட்டார். ஆனால் ஆட்சிக்கு வந்தவுடன் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உடனடி நடவடிக்கை எடுத்தார். லாரிகளிலும், இரயில்களிலும், சேலம், நெய்வேலி போன்ற தொலைதூர இடங்களிலேயிருந்து, தண்ணீரைக் கொண்டுவந்து சென்னை வாழ் மக்களுக்கு குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து மக்களினுடைய வயிற்றிலே பாலை வார்க்கின்ற அளவிற்கு ஒரு உன்னதமான முறையிலே அந்தக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்ததை நாடு அறியும். திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் ஏன் அறியவில்லை, ஏன் அறிந்தும் அறியாமல் நடிக்கிறார் என்பது எனக்கும் புரியவில்லை. அந்த திட்டத்திற்கு 75 கோடி ரூபாயை புரட்சித் தலைவி அவர்கள்



ஒதுக்கினார்கள் நடப்பு ஆண்டில். இந்தப் பணத்தைப் பொறுத்தவரைக்கும் ஒரு 'calamity' வந்தால், அந்த 'calamity'-க்குத்தான் ஒதுக்குவது. இந்த ஆண்டும் சென்னை மாநகரத்திற்கு இப்படிப்பட்ட ஒரு பஞ்சம் வர வேண்டும் என்று திரு. ஸ்டாலின் அவர்கள் ஆண்டவனை வேண்டிக் கொண்டிருக்கிறாரோ என்னவோ தெரியவில்லை, —ஏன் ஒதுக்கவில்லை என்று சொல்கிறார். இப்படிப்பட்ட பிரச்சினை வருகிறபோது உடனடியாக நிதி ஒதுக்குவதற்கு எவ்வளவு நிதி வேண்டுமானாலும் ஒதுக்குவதற்கு, ஏழைகளின் நலனைக் காக்கும் புரட்சித் தலைவித் தாய் தயாராக இருக்கிறார். அதற்கு நிதி (மேசையைத் தட்டும் ஒலி) ஒதுக்கப்படும் என்பதை நான் அவைக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்னும் ஒன்றைச் சொல்லியிருக்கிறார். நிதிநிலை அறிக்கை பகுதி 1-ஐ முழுமையாகப் படித்திருந்தும் அவருக்கு என்ன தோன்றுகிறதோ அதை மட்டும்தான் சொல்லியிருக்கிறார். வறட்சியைச் சமாளிக்க நிதி ஒதுக்கம் செய்வதைப்பற்றி மட்டுமே பேசி இருக்கிறார். ஆனால் அதே நிதிநிலை அறிக்கைப் குறிப்பு பகுதி 1-லே புதிய வீராணம் என்ற ஒரு தலைப்பிலே 58 கோடியும், 2001-2002-க்கு திருத்த மதிப்பீட்டிலே 58 கோடியும், 2002-2003-லே வரவு-செலவுத் திட்டத்திலே 78 கோடியும் ஒதுக்கப்பட்டிருப்பதை அவர் படிக்கவில்லை. படிக்கவில்லை என்று கருதுகிறேன். அந்த புதிய வீராணம் திட்ட ஒதுக்கீடும் சென்னையிலே வாழ்கின்ற மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத்தான் என்பதனைப் புரிந்துகொள்ளாத திரு. ஸ்டாலின் அவர்கள் பூஜ்ஜியம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று கூறியிருப்பது வேதனையான ஒன்று என்பதனை நான் சொல்ல விரும்புகிறேன்.

*முற்பகல் 11-45*

பொது விநியோக முறையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்துச் சொன்னார்கள். ரூ.1540 கோடியாக இருந்தது ரூ.1240 கோடியாக, 300 கோடி ரூபாய் குறைக்கப்பட்டு விட்டதே, ஏன் என்ற வினாவினைத் தொடுத்தார்கள். இதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் மிகத் தெளிவாக, குழந்தைகளுக்கும் புரியும்படி எத்தகைய அணுகுமுறையை இந்தத் திட்டத்திலே தமிழக அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதனை ஏற்கெனவே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கூப்பன் முறையைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கூப்பன் முறையை நடைமுறைப்படுத்துகிறபோது, போலி அட்டைகள் கட்டாயமாக

ரிக்கப்பட்டுவிடும். அதுமட்டுமல்லாமல், பொது விநியோக முறையில் பொருட்கள் பெற விரும்பாத குடும்பங்களுக்கு, இந்த மாற்று முறையின் மூலம் அடையாள அட்டைகள் வழங்குவது பற்றியும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த முறையை நடைமுறைப்படுத்துகிறபொழுது, அரசுக்கு கணிசமான ஒரு சேமிப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது. அதுமட்டுமல்ல. மைய அரசுகூட B.P.L., A.P.L. கேட்டகரிக்கு ஒதுக்கப்படுகிற நெல்லை, அரிசியை அதிக அளவிற்கு, குறைந்த விலைக்குத் தருவதாக ஓர் அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். அப்படி வருகிறபொழுது, இந்த 300 கோடி ரூபாய் சேமிப்பு என்பது இன்னும் சற்று அதிகமாகக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது. எனவே எந்த விதத்திலும் இந்த 300 கோடி ரூபாய் குறைப்பின் மூலமாக பாதிப்பு பொது விநியோகத் திட்டத்திற்கு ஏற்படாது என்பதனை அவைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் சார்பிலே நான் ஆணித்தரமாக, உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஆதி திராவிடர் நலத் துறைக்காக ஒதுக்கப்பட்ட நிதி இந்த ஆண்டு குறைக்கப்பட்டிருக்கிறது என்று திரு. ஸ்டாலின் அவர்களும் மற்றவர்களும் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் இது குறித்து நான் எனது விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். 2001-2002 ஆம் ஆண்டிலே வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 47.76 கோடியும், இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் மாநில அரசின் பங்காக ரூபாய் 32 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஹட்கோ நிறுவனத்திடமிருந்து கடன் பெற்று மாநில அரசு இத்திட்டத்தை அப்போது செயல்படுத்தியது. ஆனால் பல முறை ஏற்கெனவே நான் சொன்னதைப்போல, ஹட்கோ நிறுவனத்தின் மூலமாக வாங்கிய பணத்தை காலத்தே திருப்பிச் செலுத்தாத காரணத்தினால், அவர்களுடைய ஒட்டுமொத்த asset-லே 50 சதவீதத்திற்கு மேல் தமிழகத்திற்கு தந்துவிட்ட காரணத்தினால், பணம் கொடுக்கும் தகுதி இழந்துவிட்ட காரணத்தினால் நேரடியாக ஹட்கோ நிறுவனம் அரசுக்கு பணம் தர முடியாத நிலை. ஆனால் அரசு நிறுவனங்கள் மூலமாக அந்தப் பணத்தை இப்பொழுதும் பெற முடியும். அந்த அடிப்படையிலேதான் இத்திட்டத்திற்கு தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் மூலமாக ஹட்கோ நிறுவனத்திடமிருந்து கடன் பெற்று 143 மாணவர் விடுதிகள் 45 கோடி ரூபாய் செலவிலே கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்திரா வீட்டுவசதித் திட்டத்திற்கு ஹட்கோ நிறுவனத்திடமிருந்து தமிழ்நாடு



ஊரக வீட்டுவசதிக் கழகத்தின் மூலமாக கடன் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 2002-2003 ஆம் ஆண்டில் இந்த இரண்டு திட்டங்களும் வரவு-செலவுத் திட்டத்திற்கு அப்பாற்பட்ட, அரசு நிறுவனங்களின் மூலமாக செயல்படுத்தப்படும் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படும். இதிலே நிதி எதுவும் குறைக்கப்படவில்லை, திட்டங்களும் புறக்கணிக்கப்படவில்லை என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது இன்னும் ஒன்றைச் சொன்னார்கள். தரிசு நில மேம்பாட்டைப்பற்றிச் சொன்னார்கள். இதில் எப்படி பலன் கிடைக்கும் என்பதைப்பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இதற்கு ஒரு ஆக்கபூர்வமான நடவடிக்கையை இந்த அரசு இதுகாறும் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு எடுத்து வருகிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அன்பழகன் அவர்கள் பேசுகிறபோது, ஏதோ அவர்கள் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட திட்டம். அந்தத் திட்டத்தை நீங்கள் நீட்டிக்கிறீர்கள், செயல்படுங்கள் என்று சொன்னார். அது அப்படி அல்ல. தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்பது இதுகாறும் நடைமுறையிலே இருந்துவருகிற திட்டம் என்பது வேறு. ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தற்போது தொலைநோக்குச் சிந்தனையோடு கொண்டுவருகிற தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்பது வேறு. ஏற்கெனவே தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்றால்—உழவர் பெருமக்களின் சார்பிலே மாண்புமிகு உறுப்பினர்களாக பலர் இங்கு வந்து இருக்கிறீர்கள். தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திற்கென்றே ஆங்காங்கு ஒரு contour bunding தடுப்பணைகள் ஒரு அடி உயரத்திலே வயலிலே போடப்படும். மழை வரும். மழைக்காலங்களிலே அது போய் விடும். ஆடு மாடு மேய்ப்பவர்கள் உடைத்துவிடுவார்கள். நிலத்தடி நீர் அதிகமாவதற்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விடும். ஏதேனும் செடியை நடுவதாகச் சொல்வார்கள். அந்தப் பயிருக்கு பணமும் தருவார்கள். ஆனால் பன்னெடு ஆண்டு காலமாக தரிசு நில மேம்பாட்டுக்காக இவ்வளவு பணம் ஒதுக்கியும், இந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டும் அந்த 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலமும் தொடர்ந்து தரிசு நிலமாகவே இருக்கிறது. ஏன் என்ற வினாவைத்தான் — மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே இல்லை — அவரிடம் வினாவாக எழுப்ப விரும்புகிறேன்.

முற்பகல் 11-50

ஆண்டுக்காண்டு, கோடிக்கணக்கான ரூபாய், நீங்கள் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒதுக்கி இருக்கலாம். ஆனால் மக்களுக்குச் சென்று சேர்ந்ததா? அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதா? எங்கேனும் தரிசு நிலம், விளை நிலமாக மாறியிருக்கிறதா? இல்லையென்றால், அதற்கு ஒதுக்கப்பட்ட பணம், எங்கே போனது? என்ன தவறு நடந்தது? என்ன முறைகேடுகள் நடந்தன? அப்படிப்பட்ட முறைகேடுகளுக்கு யார் பொறுப்பு? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், இங்கிருந்தால், அவருக்கு வினா தர ஒரு வாய்ப்பு இருந்திருக்கும். முறைகேடுகள் நடந்தன. தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்ற பெயரிலே, பணம் விவசாயிகளின் நலனுக்காக செலவிடப்படாத ஒரு கொடுமையான நிலை கடந்த காலத்திலே இருந்தது. ஏட்டளவிலேதான் அந்தத் திட்டம் இருந்தது. ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள். இந்திய துணைக் கண்டத்திலேயே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவுக்கு ஒரு முக்கியமான பொருளாதார அணுகுமுறையை மேற்கொண்டிருக்கிறார்கள். ஒரு நாட்டினுடைய பொருளாதாரம், ஒட்டுமொத்தமாக வளர வேண்டுமென்றால், the gross State domestic product என்பது வளர்ச்சி அடைய வேண்டுமென்றால், மூன்று முக்கியப் பிரிவுகளை நாம் கவனத்தில்கொள்ள வேண்டும். ஒன்று, Primary Sector - என்று சொல்லக்கூடிய Agriculture—விவசாயம். இரண்டாவது, Secondary Sector என்று சொல்லக்கூடிய, குறுந்தொழில், சிறுதொழில், பெருந்தொழில் ஆகிய தொழில் துறை. மூன்றாவதாக, Tertiary Sector என்று சொல்லக்கூடிய services oriented — சேவைப் பணிகள் — அது உள்ளடங்கும். இந்த மூன்றையும் ஒட்டுமொத்தமாக நாம் கண்காணிக்கிறபோதுதான் ஒட்டுமொத்தமாக பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.

சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து, நாம் மேற்கொண்ட பொருளாதார அணுகுமுறை, மேனாடுகளைப் பார்த்து, வளர்ந்த நாடுகளைப் பார்த்து, அந்த Secondary Sector—க்கு அதிக முக்கியத்துவத்தை நாம் தந்துகொண்டிருந்தோம். Secondary Sector—லேகூட பெருந்தொழிலுக்கு அதிக முக்கியத்துவத்தைத் தந்து, சிறுதொழிலைப் புறக்கணித்தோம். குடிசைத் தொழிலைப் புறக்கணித்தோம். Tiny factories என, குறுந்தொழிலையும் நாம் புறக்கணித்துக் கொண்டுவந்தோம். இது இந்திய துணைக் கண்டத்திலே எல்லா மாநிலங்களிலேயும் இருந்த ஒரு தவறான பொருளாதார அணுகுமுறையாக இருந்துவிட்டது. அதன் காரணமாகத்தான் inflationary trend, erosion in



intrinsic value of money பணத்தினுடைய மதிப்பு குறைதல்; இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டது. ஒரு நாடு செழிப்பாக இருக்க வேண்டுமென்றால், ஏற்றுமதி அதிகமாக வேண்டும். அதன் மூலமாக we will be able to earn more foreign exchange. அப்போதுதான் gold reserve in Reserve Bank will get augmented and increased. அப்படி அரசினுடைய தங்க இருப்பு அதிகமாகிறபோதுதான் பணத்தினுடைய மதிப்பும் அதிகமாகும். அப்போதுதான், வெளிநாட்டுத் தொடர்பிலே நாம் அதிகம் ஈடுபட்டு, நமது பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும். இந்த மாதிரி அணுகுமுறையிலே நாம் மேற்கொண்டிருந்த கடந்த காலத்திலே, Technology upgradation என்பதற்கு முக்கியத்துவம் தரவில்லை. அதைப்போல cost effective production என்ற முறையிலே, குறைந்த விலையிலே பொருள்களை உற்பத்தி செய்வதற்கும், கடந்த காலத்திலே எந்தவித அணுகுமுறையும் மேற்கொள்ளப்படவில்லை.

Raw material should be available at a cheaper rate என்ற முறையிலே, அந்த மூலப் பொருள்கள், குறைந்த விலையில் கிடைக்க வேண்டும் என்பதற்கும் அணுகுமுறைகள் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்படவில்லை. உற்பத்தியாகிற மூலப் பொருள்களுக்கு productivity increase, production increase என்ற முறைகளைக் கொண்டுவந்து, அதிக உற்பத்தி, தரமான உற்பத்தி, குறைந்த விலையில் உற்பத்தி என்பனவற்றையும் நாம் மேற்கொள்ளவில்லை. இதன் காரணமாக ஏற்பட்ட பொருளாதாரத் தொய்விலிருந்து தமிழகத்தைக் காக்க வேண்டும் என்பதுதான், தமிழகத்தினுடைய தலைவிதியை ஒரு நல்ல நிலையாக்கிக் கொண்டுவர வேண்டுமென்ற நோக்கத்தோடு செயல்படுகிற, தமிழகத்தைக் காப்பதற்காக உறுதி பூண்டிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய திடமான பொருளாதாரக் கொள்கையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலேதான்— அவர்கள் மேற்கொண்டிருக்கிற அணுகுமுறை, அதிகப்படியான—நான் ஏற்கெனவே நேற்று சொன்னேன்: 12.5 சதவிகித மக்கள் தமிழகத்திலே வேலையில்லாத் திண்டாட்டத்திலே இருக்கிற மக்கள் — இந்திய துணைக் கண்டத்திலே வேலை இல்லாமல் தத்தளிக்கிற மக்கள், அதிக அளவிலே இருப்பது தமிழகத்தில்தான்.

நமக்குக் குறைந்த நிதியை ஒதுக்குகிறார்கள்; வெறுமனே 4.5 சதவிகிதம் மட்டுமே வேலை இல்லை என்ற நிலையிலே இருக்கிற உத்தரப்பிரதேசத்திற்கு ரூ. 10 ஆயிரம் கோடி ஒதுக்குகிறார்கள்; அண்டை மாநிலமான ஆந்திரப்பிரதேசத்திற்குக்கூட அங்கே 7 சதவிகிதம்தான் வேலை இல்லை; ரூ. 2,500 கோடி grant தருகிறார்கள்; நமக்குக் குறைத்துவிடுகிறார்கள் என்பதை

எல்லாம் நான் எடுத்துச் சொன்னேன். இப்படி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதுதான் புரட்சித் தலைவி அவர்களுடைய தலையாய நோக்கம். வேலையில்லாத் திண்டாட்டத்தை எப்படிப் போக்குவது? ஒன்று, industrialisation மூலமாகப் போக்க வேண்டும். மூடிக் கிடக்கின்ற தொழிற்சாலைகளை எல்லாம் திறக்க வேண்டும். அதற்குப் புரட்சித் தலைவி, பிரத்தியேகமான நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதற்காக ஒரு குழுவை அமைக்க ஆணையிட்டிருக்கிறார்கள். அந்தக் குழுவில் மாவட்ட ஆட்சித் தலைவர் இடம் பெற்றிருக்கிறார். அந்தக் குழுவிலே, Labour Department-ஐச் சேர்ந்தவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். அந்தக் குழுவிலே, தொழிலதிபர்களினுடைய பிரதிநிதிகளும் உள்ளடங்கி இருக்கிறார்கள். அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்று, எப்படிப்பட்ட அணுகுமுறையை மேற்கொள்வோமேயானால், இந்தத் தொழிற்சாலைகளை நல்ல நிலைமைக்குக் கொண்டுவர முடியும். அந்த உழைக்கும் வர்க்கத்திற்கு, தொழிலாளிகளுக்கு வேலைப் பாதுகாப்பைத் தர முடியும். அந்தத் தொழிற்சாலை மீண்டும் திறக்கப்படுமேயானால், நட்டமின்றி லாபத்தில் கொண்டுவருவதற்கு எப்படிப்பட்ட அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற வகையில் குறிப்பிட்ட காலத்திலேயே இந்த தொழிறசாலைகள் திறக்கப்பட வேண்டும். இதுதான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இன்று இட்டிருக்கிற ஆணை. அதற்காக ஆணையிட்டு அந்த ஆணையும் நடைமுறைக்கு தற்போது வந்திருக்கிறது. அந்த அடிப்படையில்தான் பிரச்சினைகளை அணுக வேண்டிய நிலையிலே இருக்கிறோம். அப்படி மூடப்பட்ட தொழிற்சாலைகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் சி.பி.எம். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், சி.பி.ஐ. இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், பாலு போன்றவர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

முற்பகல் 11-55

உதாரணமாக, டெக்ஸ்டைல் தொழில் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது என்று சொன்னார்கள். தமிழகத்திலே டெக்ஸ்டைல் தொழில் மட்டுமல்ல; தமிழகத்திலே லெதர் தொழிலும் மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. இந்த இரண்டு தொழில்களையும் நல்ல நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்பதுதான் தன்னுடைய அடிப்படை நோக்கம் என்பதனை 2,3 தினங்களுக்கு முன்னால் நடந்த தென்னாட்டு தொழிலதிபர்கள் கருத்தரங்கிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். Leather Industry is very sick. அதற்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிய வேண்டும். Textile



industry is very sick; என்ன காரணம் என்பதனைக் கண்டறிய வேண்டும். அந்தத் தொழிலதிபர்கள் சொல்லியிருக்கிறார்கள். மூலப் பொருள் அதிக விலைக்கு விற்கிறது; பஞ்சு விலை அதிகமாகிவிட்டது; நூல்விலை அதிகமாகிவிட்டது என்றெல்லாம் சொல்லியிருக்கின்றார்கள். தொழிற்சாலை நன்கு இருக்க வேண்டுமென்றால், மூடப்படாமல் இருக்க வேண்டுமென்றால், உழைக்கும் வர்க்கத்திற்கு தொடர்ந்து வேலை கிட்ட வேண்டுமென்றால், நாம் எடுக்க வேண்டிய அணுகுமுறை என்ன என்பதனை நாம் கருத்திலே கொள்ள வேண்டும். அப்படி நாம் அந்த அணுகுமுறையை மேற்கொள்கிறபோது, தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் நாம் உற்பத்தி செய்கின்ற பஞ்சு ஒரு ஏக்கருக்கு 300 கிலோ பஞ்சு என்று ஏற்கெனவே நான் அவையிலே சொல்லி இருக்கிறேன். அதைப்போலவே சீன நாட்டிலே 400 கிலோ ஒரு ஏக்கருக்குக் கிடைக்கிறது. அமெரிக்காவிலே 7000 கிலோ ஒரு ஏக்கருக்குக் கிடைக்கிறது. அப்படி பஞ்சு அதிகமாக உற்பத்தியாகிறபோது உழவர்களுக்கு நல்லமுறையிலே கையிலே பணம் கிடைக்கும். உழவர்களுக்கு ...யிலே நல்ல முறையிலே பணம் கிடைக்கிறபோது, more the turn over, more the production, less would be the cost of production என்ற முறையிலே, குறைந்த விலைக்கு பஞ்சு நூற்பாலைகளுக்குக் கிடைக்கும். நூற்பாலைகளுக்கு குறைந்த விலையிலே பஞ்சு கிடைக்கிறபோது, நூற்பாலைகளுக்கு நட்டம் இல்லாத ஒரு நிலை வரும். தற்போது பஞ்சைப் பொறுத்தவரைக்கும் சீன நாட்டிலிருந்து நாம் இறக்குமதி செய்கிறோம்; பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்கிறோம்; இந்தோனேசியாவிலிருந்து இறக்குமதி செய்கிறோம். அங்கிருந்து இறக்குமதி செய்கிற பஞ்சுக்கு அவர்கள் அதிக லாபம் வைத்துத் தருகிற காரணத்தால், அதிக விலையாக இருக்கிறது. ஆனால் உலகச் சந்தையிலே சீனாவும் பாகிஸ்தானும் ஏற்றுமதி செய்கிற Textile oriented products எல்லாம், அவர்களுக்கு பஞ்சு குறைந்த விலையிலே இருக்கிற காரணத்தால், வெளிநாடுகளுக்கு மிகக் குறைந்த விலையிலே ஏற்றுமதி செய்கிறார்கள். வெளிச்சந்தையிலே, வெளிநாடுகளிலே நமது பொருளை விற்கமுடியாத ஒரு நிலை நமக்கு ஏற்பட்டு இருக்கிறது. அந்த நிலையைப் போக்குவதற்கு புரட்சித் தலைவி ஆணையிட்டிருக்கிறார்கள்.

டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் தலைமையிலே ஒரு குழுவை புரட்சித் தலைவி அவர்கள் போட்டிருப்பது உங்களுக்குத் தெரியும். அந்தக் குழு ஒரு சாதாரண அணுகுமுறையில் செயல்படுவதாக யாரும் எண்ணிவிடக்கூடாது; காரணம் எப்படிப்பட்ட ஓர் அணுகுமுறையை— விவசாயப் பொருளாதாரம் செழித்தால்தான், தொழில் பொருளாதாரம் செழிக்கும்; அதை நாம் கருத்திலேகொள்ளவேண்டும். The Secondary Sector

என்று சொல்லக்கூடிய Industries, if they have to thrive, they have to depend on the Primary Sector என்று சொல்லக்கூடிய விவசாயம், அந்த விவசாயத்தினுடைய உற்பத்தித் திறன் அதிகமாகி மூலப் பொருள்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கிறபோது, தொழிற்சாலை நட்டமின்றி செயல்படும் என்ற நோக்கோடுதான் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலேகூட டாக்டர் ஜேரி ஜேக்கப், டாக்டர் லாக்ஸ் என்று சொல்லக்கூடிய அமெரிக்க நாட்டைச் சேர்ந்த, விஞ்ஞான ரீதியாக செயல்படுகிற அவர்கள் அரசிடம் கலந்து உரையாடி இருக்கிறார்கள்; ஆலோசனைகளை நல்கி இருக்கிறார்கள்.

*நண்பகல் 12-00*

தரிசு நில மேம்பாட்டைப் பொறுத்தவரைக்கும் நான் ஏற்கெனவே அவையிலே சொல்லி இருக்கிறேன். உழவர் பெரும் சமுதாயத்தைச் சார்ந்த பலர் இருக்கிறார்கள்; மாண்புமிகு திரு. ஞானசேகரன் அவர்களும் உழவர் குடும்பத்திலே இருந்து வருகிறார். அவர்களும் கவனிக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். நாம் நிலத்தை உழுகிறபோது வெறுமனே கலப்பையை ஓர் ஆறு அங்குல ஆழம்தான் உழுகிறோம். ஆனால் அமெரிக்க நாட்டிலே 2 அடி ஆழம் உழுகிறார்கள்; சீனாவிலேகூட 1-1/2 அடி ஆழம் நிலத்தை உழுகிறார்கள். அமெரிக்காவைவிட விஞ்சிய விஞ்ஞான ரீதியான அணுகுமுறையை விவசாயத்திலே சீன நாடு இன்று நடைமுறைக்குக் கொண்டுவ்ந்துவிட்டது. சீன நாட்டிலே 3000 கிலோ கிராம், 4000 கிலோ கிராம் பஞ்சை— ஆனால் தமிழ்நாட்டிலே மட்டும் 300 கிலோ பஞ்சுதான் உற்பத்தி — அவர்கள் அந்த விவசாய அணுகுமுறையில் Plan Genetic Engineering, Modern Cultivation Technique, Crop Rotation, Crop Pattern என்ற முறையிலே — லாபம் தரக்கூடிய பயிரினங்களை அவர்கள் கொண்டு வந்துவிட்டார்கள். இதிலே தற்போது அமெரிக்காவிலிருந்து வந்திருக்கிற அந்த விஞ்ஞானிகள் அரசுக்கு ஓர் ஆலோசனையைத் தந்திருக்கிறார்கள். Swaminathan Foundation மூலமாக அந்த ஆலோசனையைத் தந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்த ஆலோசனையினுடைய முக்கியத்துவம் என்னவென்றால் எத்தகைய பயிரை மேற்கொண்டால் இலாபமாக ஓடும் என்பதுதான். தரிசு நில மேம்பாட்டிலே அரை அடி ஆழம் நிலத்தை உழுதுவிட்டு ஆங்காங்கே வெறும் contour bunding போட்டுவிட்டு ஒரு பயிரை நட்டால் பயிர் கட்டாயம் பிழைக்காத நிலை ஏற்பட்டுவிடும். எனவே rain water harvesting system மூலமாக நாங்கள் 2300 கோடி ரூபாயில், இருக்கின்ற ஏரி குளங்களை ஆழப்படுத்துவதற்கும்,



புதிய நீர்த்தேக்கங்களை உருவாக்குவதற்கும், recharging the rain water down into the earth என்ற முறையிலே மழைநீரை நிலத்திற்குள் அறுவடை செய்வதற்கும் உள்ள திட்டங்களுக்கு, உலக வங்கிக்கு ஒரு செயல் திட்டத்தை நாங்கள் அனுப்பியிருக்கிறோம். அதில் நாம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. காரணம், பொருளாதாரத்தை பெருக்கக்கூடிய எந்த நிதி முதலீட்டிற்கும் உலக வங்கி முன்னுரிமை தருகிறது. இதிலே நாங்கள் சொல்லி இருக்கிறோம், எங்களுக்கு அந்த அமெரிக்க விஞ்ஞானிகளுடைய, Doctor Swaminathan Foundation-னுடைய ஆலோசனையின் அடிப்படையில் நாங்கள் சொல்லியிருப்பது பணப் பயிர்கள். மாண்புமிகு உறுப்பினர்களில் பலர் உழவர் குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருக்கிறீர்கள். உங்கள் நிலத்தில்கூட நீங்கள் பயிரிடலாம். அரை அடிக்குப் பதிலாக, இரண்டு அடி, மூன்றரை அடி ஆழத்தில் நிலத்தை உழுது, அங்கு நீங்கள் நெல்லிக்காயைப் பயிரிடுங்கள். — நாம் உண்ணுகிறபோது நாம் சாதாரணமாக பி. காம்ப்ளெக்ஸ், விட்டமின், மல்டி விட்டமின் சாப்பிடுகிறோம். செடிக்கும் அப்படி மல்டி விட்டமின் தர வேண்டும் என்பதுதான் சீன நாட்டினுடைய அணுகுமுறை. சீனாவிலே செடிக்கு வெறும் பாஸ்ஃபேட், அமோனியா மட்டும் தராமல் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், மல்டி விட்டமின் என்று 23 ஊட்டச் சத்துக்களை சீன நாட்டிலே செடிக்குத் தருகிறார்கள். எனவேதான் சீன நாடு— அதுவொரு கம்யூனிச நாடு— கம்யூனிச நாடு என்றால் உலகப் பொருளாதாரத்திலே தோற்றுவிடும் என்று உலகத்திலே சொல்கிற நிலையை மாற்றி, கம்யூனிச தத்துவத்திலே, உற்பத்தித் திறனை அமெரிக்காவை விட விஞ்சுகிற அளவுக்குக் கொண்டு வருவோம் என்ற தத்துவத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்கிறது சீன நாடு. அந்த அடிப்படையில் அவர்கள் அந்த ஊட்டச் சத்துக்களை ஒருபுறம் தருகிறார்கள்.

பயிர்களைப் பொறுத்தவரைக்கும் நாம் கம்பு, சோளம், ராகி போன்றவற்றையே தரிசு நிலத்திலே பயிரிட்டுக்கொண்டிருந்தால், உழவருக்கு எந்தப் பலனுமே கிடைக்காது. அதற்கு மாறாக பல பொருள்கள் எங்களுக்கு ஆலோசனைகளாகத் தரப்பட்டிருக்கின்றன. வெறும் பொருள்கள் மட்டுமல்ல, அந்தப் பொருளை வாங்கிக்கொள்ள Marketing tie-up-ம் எங்களுக்குத் தருகிறார்கள்; அதுதான் முக்கியம். உற்பத்தி செய்கின்ற பொருள்களை விற்க முடியவில்லை என்றால் உழவனுக்கு நட்டம் ஏற்பட்டுவிடும். உற்பத்தி ஆகின்ற பொருள்களை Crop Rotation மூலமாக ஒவ்வொரு பகுதியிலேயும் பயிரிட வேண்டும். என்ன இலாபம் அதற்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், பழைய வேளாண்மைத் துறை அமைச்சர் என்ற முறையில் உங்களுடைய பேச்சை நான் மிகவும் சுவைத்துக்கொண்டிருக்கிறேன். இன்னும் எவ்வளவு நேரம் தாங்கள் எடுத்துக்கொள்வீர்கள்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** 30 நிமிடங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கல்வித் துறை மானியக் கோரிக்கை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** 30 நிமிடங்கள். இதை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். அத்திப்பழம் இருக்கிறது. நீங்கள் அத்திப்பழத்தை இலட்சக்கணக்கான ஏக்கரில் போட்டாலும் வெளிநாடுகளில் வாங்கிக்கொள்கிறார்கள். Marketing tie-up-ஒரு ஏக்கருக்கு 60 ரூபாய் கிடைக்கிறது. நான் ஏற்கெனவே அவையிலே இதுபோன்று பலவற்றைச் சொல்லியிருக்கிறேன். வேப்பங்கொட்டை, உயர்தர மாம்பழம், சப்போட்டா, அதைப்போலவே பலாப்பழம் போன்ற பயிர் வகைகளும், மூலிகைப் பொருள்கள் நெருஞ்சி முள் இருக்கிறதே நெருஞ்சி முள், பூனைப்பூண்டு போன்ற பல மூலிகைப் பயிர்களுக்கும் கிட்டத்தட்ட ஆண்டுக்கு ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு இருக்கிறது. அதை வெளிப்படையாக எல்லோரும் அறியக்கூடிய அளவுக்கு ஆர்டர் State Planning Commission மூலமாக, Dr. M.S. Swaminathan Foundation மூலமாக அரசு இந்தத் திட்டங்களை அறிவிக்கும் என்பதை நான் அரசின் சார்பில் அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடித்து விடட்டும்.

பிற்பகல் 12-05

**திரு. ஜி. பழனிசாமி:** கண்டங்கத்திரியையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஆம், ஆம். ஆர்டர் உண்டு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையைப்பற்றி ஒன்றை நான் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்



முதலமைச்சராக இருந்தபோது அரசமைப்புச் சட்டத்தினுடைய 31(சி) பிரிவின்கீழ் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் சட்டத்தை இயற்றி, அந்தச் சட்டத்தை அரசமைப்புச் சட்டத்தின் 9-வது இணைப்பிலும் சேர்க்க வழி செய்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு என்பதை அவை அறியும். இதை எதிர்த்து சிலர் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று முறை செய்தனர். உச்ச நீதிமன்றம் ஓர் இடைக்கால உத்தரவை வழங்கியது. அதன்படி 50 விழுக்காடு இட ஒதுக்கீடு கொடுக்கப்பட்டால் யாருக்கு என்ன பயன் கிடைக்குமோ அந்த அளவுக்குக் கூடுதல் இடங்களை உருவாக்கி அவர்களுக்கு அளிக்க ஆணையிடப்பட்டது.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அந்த நிலை இன்னும் தொடர்கிறது. மாநிலங்களவையில் இதுபற்றி விவாதங்கள் நடந்தபோது திரு. முரசொலி மாறன் அவர்கள் இதிலே கலந்துகொள்ளாமல் இருந்து விட்டார்கள். திரு. வாஜ்பாய் அவர்களுடைய தலைமையில் இருக்கின்ற தேசிய ஜனநாயக ஆட்சி பொறுப்பேற்ற காலத்தில் சமூக நீதிக்கு ஏற்றவாறு எல்லா மாநிலங்களுக்கும் இட ஒதுக்கீடு முறையை நிர்ணயித்துக்கொள்ள அனுமதி அளிக்கும் வகையில் அரசமைப்புச் சட்டம் திருத்தப்படும் என்ற உறுதியினை அளித்தார்கள். ஆனால் இன்று வரை தி.மு.க. தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த 5 ஆண்டு காலத்திலோ அல்லது தற்போது மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள நேரத்திலோ, இதற்கான எந்த ஒரு நடவடிக்கையினையும் எடுக்கவில்லை என்பதனை அவையினுடைய கவனத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். டெல்லியிலே பதவி சுகத்திற்காக இருக்கின்ற தி.மு.க., இட ஒதுக்கீடு பிரச்சினையிலே அக்கறை உள்ளவர்கள் என்று சொல்லிக்கொள்கின்ற தி.மு.க.வினுடைய தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் பிற்படுத்தப்பட்ட இனத்திற்காகவே வாழ்கிறேன், மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள் நலனே தன்னுடைய நலன் என்று சொல்லிக்கொள்கின்ற திரு. கருணாநிதி அவர்கள், இந்த வழக்கு நீதிமன்றத்திலே நிலுவையிலே இருக்கிறதே, எந்தெந்த வழக்கையோ முடிப்பதற்கு பல நடவடிக்கைகளை எடுத்தீர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் (குறுக்கீடு) - அப்புறம் - அப்புறம், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்மீது பொய் வழக்குகளைப் போட்டீர்கள். நீங்கள் பலவிதத்தில் முயன்று பொய்யான வழக்குகளைப் போட்டு பல விதத்தில் முயன்று புரட்சித் தலைவி அவர்களுக்கு தண்டனை வாங்கித் தந்தீர்கள். புரட்சித் தலைவி அவர்கள் தேர்தலில் நிற்கக் கூடாது என்பதற்காக

எத்தனையோ எத்தனிப்புகளில் ஈடுபட்டீர்கள். புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக வந்துவிடக் கூடாது, ஆண்டிப்பட்டியிலே நின்றுவிடக் கூடாது. என்பதற்காக உங்கள் நேரத்தை எல்லாம் மாநிலத்திலே முதலமைச்சராக இருந்துகொண்டிருக்கிற திரு. கருணாநிதி அவர்களும், டெல்லியிலே அமைச்சராக இருந்துகொண்டு இருக்கிற திரு. மாறன் அவர்களும் முழு நேரத்தையும் வழக்கு மன்றத்திலே, நீதிமன்றத்திலே புரட்சித் தலைவி தேர்தலிலே நிற்கக் கூடாது. புரட்சித் தலைவி சிறைக்குச் செல்ல வேண்டும் என்பதில் மட்டுமே அக்கறை காட்டிக்கொண்டிருந்தீர்கள். ஆனால் புரட்சித் தலைவிக்கு கெடுதல் விளைவிக்க வேண்டும் என்ற நோக்கோடு செயல்பட்ட நீங்கள், தமிழகத்திலே இருக்கின்ற மக்களான — ஏழை மக்களான — பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் அவர்கள்மீது உங்களுக்கு அக்கறை இல்லாத காரணத்தால் 69 சதவிகித இட ஒதுக்கீடு சட்டத்தை நீதிமன்றத்திலே துரிதப்படுத்த நீங்கள் தவறி விட்டீர்கள். அதற்கு மாறாக புரட்சித் தலைவி மீதுள்ள வழக்கைத் துரிதப்படுத்த ஆண்டிப்பட்டி தேர்தலுக்கு முன்னாலேயே அவர்கள் தேர்தலில் நிற்கின்ற தகுதியை இழந்துவிட வேண்டும் என்பதற்கு அவ்வளவு வேகத்திலே செயல்பட்டீர்களே, புரட்சித் தலைவி முதலமைச்சராக இருக்கக் கூடாது என்பதற்கு அவ்வளவு வேகத்தில் செயல்பட்டீர்களே. நீதிமன்றத்தை எல்லாம் நீங்கள் உங்கள் கைக்குள் வளைத்துப் போட்டுச் செயல்படுகிறீர்கள் என்று மக்கள் கூறுகிற அளவுக்கு, ஒரு குற்றம் சாட்டக்கூடிய அளவுக்கு வெற்றிபெற்ற புரட்சித் தலைவியை முதலமைச்சர் பதவியிலிருந்து இறக்குவதற்கு நீதிமன்றத்திலே நீங்கள் உங்கள் வேகத்தைக் காட்டினீர்களே, அந்த வேகத்தை பிற்படுத்தப்பட்ட மக்கள் நலனுக்காக, தாழ்த்தப்பட்ட மக்கள் நலனுக்காக, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள் நலனுக்காக சமூக நீதி காத்த வீராங்கனை என்ற பெயரோடு புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்த அந்த 69 சதவிகித சட்டப் பாதுகாப்பை, அதுபற்றிய வழக்கைத் துரிதப்படுத்த ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை தி.மு.க. உறுப்பினர்களுடைய சிந்தனைக்கு நான் வினாவாகத் தொடுக்கிறேன். (குறுக்கீடு) சலுகைகள் அறிவிப்பது final. (குறுக்கீடு) எனக்கு இன்னும் சிறிது நேரம் தேவைப்படுகிறது.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கல்வி அமைச்சர் அவர்கள் ரொம்ப பரபரப்போடு இருக்கிறார்கள்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போலவே, சிறு தொழில்களுக்கு பாதுகாப்பு வேண்டுமென்ற கோரிக்கையை பல உறுப்பினர்கள் சொன்னார்கள். சிறு தொழில்களைப் பொறுத்தவரைக்கும், பலவித பாதுகாப்புகள் தரப்பட வேண்டுமென்ற நோக்கோடுதான் G.O.75 ரத்து செய்யப்பட்டு அவர்களுக்கு எல்லாவித சலுகைகளும் வழங்கப்பட்டு இருக்கின்றன என்பதனை நான் அவைக்குச் சொல்ல விரும்புகிறேன். உழவர் பெருமக்களுடைய நலன் கருதி பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அரசு எடுக்கவில்லை என்று சொன்னார்கள். அது தவறான தகவலாகும். மைய அரசைப் பொறுத்தவரைக்கும், தி.மு.க. இன்று ஆட்சியிலே இருக்கிற மைய அரசு, உழவர்களுக்கு எதிராக இன்னுமொன்றையும் செய்திருக்கிறது என்பதை அவை புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். விவசாயிகளுடைய வயிற்றிலே அடிக்கும்படி உர மானியத்தை fertilizer subsidy 5%-ஆக மைய அரசு குறைத்து இருக்கிறது. இது தமிழகத்து விவசாயிகளுக்கு மட்டும் அல்ல, இந்திய விவசாயிகளுக்கும். திரு. மாறன் அவர்கள், தி.மு.க. இன்று ஆட்சியிலே இருக்கின்ற மைய அரசு மேற்கொண்ட நடவடிக்கையை அவர்கள் அங்கு தட்டிக் கேட்கவில்லை.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

பிற்பகல் 12-10

அதுமட்டுமல்ல. Urea, Di-ammonium Phospate, Muriate of Potash ஆகிய உரங்களின்மீதும் வரியைப் போட்டு உழவர்களுக்குப் பாதகமான அணுகுமுறையை திரு. மாறன் அவர்கள் இடம் பெற்றிருக்கிற மைய அரசு நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்கிறது என்பதனையும் நான் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்கள் பேசுகிறபோது முட்டையைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதுபற்றிய ஒரு விளக்கத்தைத் தர நான் விழைகின்றேன். தி.மு.க. ஆட்சியில் முதலில் வாரத்திற்கு ஒருமுறை முட்டை வழங்கப்படும் என்றார்கள். பின்னர் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை என்று அறிவித்தார்கள். ஆனால் உண்மையில் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறைதான் முட்டை வழங்கப்பட்டது என்பதனை நாங்கள் கண்டுபிடித்தோம். அதிலும் நிறைய இடங்களுக்கு முட்டை சென்று சேரவில்லை. வழியிலே உடைந்துபோய்விடும் என்ற ஒரு நிலையையும் சொன்னார்கள்.

அதுமட்டுமல்ல. அழுகிய முட்டைகளை பல இடங்களில் அவர்கள் போட்டார்கள். இப்படி முட்டைகள் மூலமாக—இன்னும்கூட இதிலே ஒரு தவறைச் செய்தார்கள். தமிழகத்திலே இருக்கின்ற உழவர் பெருமக்களிடமிருந்து முட்டையை வாங்குகின்ற நோக்கம் இருந்திருந்தால் உழவர்களுக்கு நன்மை பயத்திருக்கும். சத்துணவுத் திட்டத்திலே முட்டை என்ற ஒரு தத்துவத்தைக் கொண்டுவந்து, அண்டை மாநிலங்களிலிருந்து முட்டையை வாங்குகின்ற அணுகுமுறையை மேற்கொண்ட காரணத்தால், அழுகிய முட்டைகளை வாங்கிப்போட்டு, சத்துணவுத் திட்டத்திலே இருக்கின்ற ஏழைக் குழந்தைகளுக்கு தொல்லையைத் தந்தார்கள், நோயைத் தந்தார்கள். முட்டை வழங்குகிறோம் என்று சொல்லி, தமிழகத்திலே இருக்கிற விவசாயிகளிடமிருந்து முட்டையை வாங்காமல், பிற மாநில வியாபாரிகளிடமிருந்து முட்டையை வாங்கி, முட்டைத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். இப்படிப்பட்ட குறைபாடு இந்த முட்டைத் திட்டத்திலே இருந்த காரணத்தால்தான் முட்டை விநியோகம் செய்வதை இந்த அரசு நிறுத்திவிட்டது. அதற்கு மாறாக, தற்போது சத்துணவாக கடலை உருண்டையை மாணவர்களுக்கு, அந்த சத்துணவுத் திட்டத்திலே இருக்கின்ற ஏழைகளுக்குத் தரப்படுகிறது. உருளைக்கிழங்கு தரப்படுகிறது என்பதனை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகிறபோது State Electricity Regulatory Commission-னுக்கு இன்னும் சேர்மன் நியமிக்கப்படவில்லை என்று வருத்தத்தோடு சொன்னார்கள். அதைப் பொறுத்தவரைக்கும் நான் நிலைமையினை விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முந்தைய தி.மு.க. அரசின் மாநில மின் ஒழுங்குமுறை ஆணையத்திற்கு State Electricity Regulatory Commission-னுக்கு தலைவராக நியமிக்கப்பட்ட நபர், திரு. வெங்கடேசன் அவர்கள் அப்பொறுப்பை ஏற்றுக்கொளளவில்லை என்பதை அவை அறியும். அதற்குப் பிறகு தி.மு.க. அரசு, புதிய தலைவரை நியமிக்க எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த மெத்தனப் போக்கினால்தான் மாநில மின் ஒழுங்குமுறை ஆணையம் முழுமையாக நியமிக்கப்படவில்லை. 14-5-2001 அன்று அ.தி.மு.க. அரசு பொறுப்பேற்றவுடன் இந்த ஆணையத்தை நியமிக்கும் வகையில் தேர்வுக் குழு ஒன்றை Search Committee ஏற்படுத்தியது. மாண்புமிகு நீதிபதி திரு. அலி முகமது அவர்கள் தலைமையில் இவ்வரசு நியமித்த தேர்வுக் குழு, தலைவர் பெயருக்கு இரண்டு நபர்களது



பெயர்களையும்,. உறுப்பினர் பெயருக்கு ஒரு நபரது பெயரையும் ஜனவரி 2002-ல் பரிந்துரைத்திருந்தது. இப்பெயர்களைப் பரிசீலித்த அரசு, தேர்வுக் குழுவை, மற்றுமொரு மாற்றுப் பட்டியலைப் பரிந்துரைக்குமாறு கேட்டுக்கொண்டது. இதற்கு மத்தியில் துரதிருஷ்டவசமாக மாண்புமிகு நீதிபதி திரு. அலி முகமது அவர்கள் காலமாகிவிட்டதால், நீதிபதி திரு. இராமன் அவர்கள் தலைமையிலே புதிய தேர்வுக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு 10-3-2002 அன்று கூடி இப்பொருளை விரிவாக விவாதித்தது. ஏப்ரல் 2002-ல் நடைபெறவுள்ள கூட்டத்தில் ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோரது பெயர்களைப் பரிந்துரைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேர்வுக் குழுவில் உறுப்பினர்களாக உள்ள மத்திய மின்சக்தி குழுமத்தின் பிரதிநிதி மைய அரசினுடைய மின் சக்தித் துறை செயலாளரிடமிருந்தும் மற்ற மாநிலங்களிலிருந்தும் பட்டியலைப் பெற்ற பிறகுதான் இதை முடிவு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். தேர்வுக் குழு மீண்டும் ஏப்ரலில் கூடி ஒரு முடிவு எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழக அரசு, ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர் பதவிகளை நிரப்பத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் பாலு அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-15

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது டீ விலையைப்பற்றிச் சொன்னார்கள். இதைப்பற்றி ஒன்றை நான் தெளிவாக்க வேண்டும். தமிழகத்திலே Coonoor Tea Traders Association, Coimbatore Tea Traders Association என்ற இரண்டு auction bodies இருக்கின்றன. These two auction bodies are registered under the Indian Companies Act. These are approved by Tea Board. மைய அரசுக்குச் சொந்தமான டீ போர்டு இதற்கு அனுமதி தந்திருக்கிறது. இதற்கு திரு. விக்ரம் என்கிற ஐ.ஏ.எஸ். ஆபீசர் பொறுப்பாக இருக்கிறார். அதிலே உற்பத்தியாளர்கள் சார்பிலே, உற்பத்தியாளர் என்றால், அந்த டீ பேக்டரியின் சொந்தக்காரர்கள் சார்பிலே 7 பேரும், வியாபாரிகள் சார்பிலே 7 பேரும், புரோக்கர்கள் சார்பிலே 2 பேரும் என்று அந்தக் கமிட்டி செயல்பட்டு வருகிறது. ஆனால் மைய அரசு 1984 ஆம் ஆண்டு ஹுகுஜா கமீட்டி என்ற ஒரு கமிட்டியை நியமித்தது. இது Commerce Ministry-யினுடைய தலைமையின்கீழ் வருகிறது. அந்தக் கமிட்டியினுடைய விதிமுறைப்படி அந்தக் குழுவிலே விவசாயிகளும் இடம்பெற வேண்டும். மாநில அரசைச் சேர்ந்த அதிகாரிகளும் அதில் இடம்பெற வேண்டும்.

அந்த கமிட்டியிலே கூறியிருப்பது. 3 விவசாயிகளும், 7 மாநில அரசைச் சேர்ந்த அதிகாரிகளும் அதிலே இடம்பெற வேண்டுமென்று கூறப்பட்டு இருக்கிறது. ஆனால் மைய அரசிலுள்ள Commerce Ministry - திரு. மாறன் அவர்களுடைய துறை இதுகுறித்து இதுகாறும் எந்த நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால், உழவர்கள் வயிற்றிலே, அந்தத் தேயிலை விவசாயிகள் வயிற்றிலே அடிக்கிற அளவிற்கு அந்த Auction Centre-லே, அந்த Auction Committee-யிலே விவசாயிகளுடைய பிரதிநிதித்துவம் இல்லாத நிலை, தவறுகள் நடந்தால் தட்டிக் கேட்க அரசு அதிகாரிகளின் பங்கும் இல்லாத நிலை நிலவுகிறது. அரசு அதிகாரிகளின் பங்கு வேண்டுமென்று மாநில அரசு கேட்டும்கூட, அதை டீ போர்டு இன்னும் ஒத்துக்கொள்ளவில்லை. மைய அரசும் இதுகுறித்து நடவடிக்கை எடுக்கவில்லை. இந்தக் குறை இருக்கிறது. எனவேதான் இதை மாற்றி அமைக்க, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தற்போது ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள். புதிதாக ஒரு Auction Centre-ஐ உருவாக்க வேண்டும். அப்படி புதிதாக உருவாக்குகிற Auction Centre-லே, விவசாயிகளும் இருப்பார்கள், அரசினுடைய பிரதிநிதிகளும் இருப்பார்கள். Traders ஒரு Cartel form செய்து, அவர்களெல்லாம் ஒரு சிண்டிகேட்டை form செய்து தேயிலை விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்குத் தேயிலையை வாங்குகிற அந்த அட்டகாசத்தை, ஏழைகளை வறுத்துகிற, விவசாயிகளை வறுத்துகிற இந்த நிலையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். எனவே எதிர்காலத்தில் தமிழகத்தில் இருக்கிற தேயிலை விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும். அண்டை மாநிலமான கேரள மாநிலத்திற்கு அந்த டீயை எடுத்துச்சென்று அங்கு விற்கிறபோது, அங்கு Sales-tax இருந்தாலும்கூட அதிக இலாபம் கிடைக்கிறது என்ற நிலையில் இன்று கூட்டாகச் சேர்ந்துகொண்டு, டீ போர்டு உதவியோடு, மைய அரசு Commerce Minister-ரின் உதவியோடு செயல்பட்டு வருகிற அந்தப் பகற்கொள்ளையால் பாதிப்புக்குள்ளாகியிருக்கிற தேயிலை விவசாயிகளுக்குப் பாதுகாப்பைத் தருவதற்கு புதிய Auction Centre, விவசாயிகளை உள்ளடக்கியதாக, அரசு பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக அமைக்கப்படும் என்ற ஆணையை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இடுகிறார்கள். அதற்கான நடவடிக்கையையும் எடுத்திருக்கிறார்கள் என்பதனை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)



மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்களும், அவரது இயக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும் சொன்னார்கள், மணல் மூலமாக ஆண்டுக்கு திட்டத்தட்ட 3 ஆயிரம் கோடி ரூபாய் அரசுக்கு வருமானம் கிடைக்கும் என்று சொன்னார்கள். அதைப்பற்றி ஆய்ந்து அறிக்கை ஒன்று தரும்படி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருச்சி, திருவள்ளூர், விழுப்புரம், பெரம்பலூர் ஆகிய பகுதிகளில் மணல் குவாரிகள் இருக்கின்றன. இதிலே தற்போது பலர் நீதிமன்றம் சென்று தடையாணை வாங்கி, அரசுக்குக் கட்ட வேண்டிய அந்தப் பணத்தைக்கூட கட்டாத நிலையில், நிலுவையில் 27 கோடி ரூபாய் இருக்கிறது. தக்க நடவடிக்கை எடுத்து அதை வசூலிக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

மற்றும்கூட ஒன்று. ஒரு பர்மிட்டை வாங்கிக்கொள்கிறார்கள். ஒரு பர்மிட் 5 மணி நேரத்திற்கு எனத் தரப்படுகிறது. அந்த 5 மணி நேரத்திலே ஒரு லாரிக்கு ஒரு லோடுக்கு 130 ரூபாய். 3 முறை, 4 முறை அந்த லாரியைப் பயன்படுத்திவிடுகிற காரணத்தால் அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது என்பதனை அதிகாரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதுகுறித்து மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆணையிட்டு, அந்தக் குறையைப் போக்கக்கூடிய நடைமுறைகளைக் கொண்டுவந்து, மணல் மூலமாக இன்னும் கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் அளவிற்கு வருமானத்தைப் பெருக்க முடியும் என்பதனை தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணைக்குட்பட்டு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதனையும் நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் பேசுகிறபோது, குன்றத்தூர்-திருநீர்மலை சாலை போட்டதில், ஒரு குறைபாடு நிகழ்ந்ததாகவும் குறுகிய காலத்திலேயே அந்தச் சாலை பழுது அடைந்துவிட்டதாகவும் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், உடனடியாக அதிகாரிகள் சென்று என்னவென்று பார்த்து அதனுடைய முழு விவரங்களையும் கண்டறிய வேண்டுமென்று ஆணையிட்டார்கள். அந்த அடிப்படையில் குன்றத்தூர்-திருநீர்மலை சாலையைப் பொறுத்தவரைக்கும் 2.8 கிலோ மீட்டர் வரைக்கும் போடப்பட்டிருக்கிற சாலை, 14 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 1998-ல் போடப்பட்டிருக்கிறது. 1998-லே நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி நிதி ஒதுக்கப்பட்டு அந்த ஒப்பந்தக்காரர் திரு. சீனிவாசன் என்பவர் 28-1-2000-லே அந்தச் சாலையை முடித்ததாக கணக்கிலே

எழுதியிருக்கிறார்கள். ஆனால் சாலை போடப்பட்டு ஒரு மழையிலேயே அந்தச் சாலை முழுவதும் போய்விட்டது. இந்தக் குறை நடந்தது தி.மு.க ஆட்சியிலே. இதுகுறித்து அந்த ஒப்பந்தக்காரர் யார், இதற்குக் காரணமான அரசியல்வாதிகள் யார் என்பதைக் கண்டெடுத்து— திரு. கருணாநிதி அவர்களுடைய தி.மு.க. ஆட்சியிலே நடைபெற்ற ஊழலுக்கு ஓர் எடுத்துக்காட்டாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு நன்றி— மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு இதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதனை நான் அவைக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-20*

அடுத்து, ஒரு முக்கியமான பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் பேசுகிறபோதும், மற்றவர்கள் பேசுகிறபோதும், காவிரி பிரச்சினையைப்பற்றி சிலவற்றைப் பேசினார்கள். காவிரி நதிநீர்ப் பிரச்சினை நமது நாட்டினுடைய நலனுக்கு மிக முக்கிய பிரச்சினையாக இருக்கிற காரணத்தால், அதுகுறித்து எச்சரிக்கையாக நாம் செயல்பட வேண்டுமென்று எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னீர்கள். இதில் சில உண்மைகளை நான் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

குறிப்பாக, காவிரி பிரச்சினை என்ன, பிரச்சினையினுடைய சிக்கல் என்ன, என்னென்ன நடவடிக்கைகளை எந்தெந்த அரசு எடுத்தது என்பதனை அவை அறிந்துகொள்ள வேண்டும். ஒருவர் மீது ஒருவர் மாறி மாறி குற்றச்சாட்டைச் சொல்லி, உண்மை என்ன என்பதனை மக்களும் அறியாமல், நாடும் அறியாமல் இருக்கக்கூடிய ஒரு நிலை உருவாகக்கூடாது என்பதற்காக அதைத் தெளிவுபடுத்த நான் விரும்புகிறேன்.

9-2-1970 ஆம் ஆண்டு காவிரி பிரச்சினை தொடர்பாக அன்றைய தமிழக முதலமைச்சர், தமிழக அமைச்சர், கர்நாடக மாநில அமைச்சர்களை உள்ளடக்கிய ஒரு கூட்டத்தை மைய அரசு கூட்டியது. அந்த அடிப்படையிலே பலன் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் 4-8-1971-லே திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, உச்ச நீதிமன்றத்திலே ஒரு வழக்கைத் தொடர்ந்து காவிரி பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு Tribunal அமைக்க வேண்டுமென்று வழக்கு தொடரப்பட்டது. இதைச் செய்தது தி.மு.க. அரசுதான்; இல்லையென்று



நான் சொல்லவில்லை. ஆனாலும்கூட உடனே என்ன செய்தார்கள்? அந்த வழக்கு அப்படியே நடந்ததா? உச்ச நீதிமன்றத்திலே ஒரு வழக்கைத் தொடர்ந்து Tribunal அமைக்க வேண்டுமென்று 1971-லே போட்ட வழக்கு தொடர்ந்து நடந்து இருக்குமேயானால், 1975-76 வாக்கிலேயே காவிரி நதிநீர்ப் பிரச்சினை தீர்ந்திருக்கும்; நமக்குத் தண்ணீர் இல்லையென்ற நிலை ஏற்பட்டிருக்காது; கர்நாடக மாநிலம் இலட்சக்கணக்கான ஏக்கர் பயிர்களை நமது தண்ணீரை வைத்து வளர்த்திருக்கமாட்டார்கள். திரு. கருணாநிதி அவர்கள் என்ன தவறு செய்தார் என்பதனை அவை புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். காவிரி பிரச்சினையில் நாங்கள் தவறு செய்துவிட்டோம்; ஏதோ அவர் தமிழக மக்களுக்காகவே வாழ்கின்றவர் என்பதைப்போல ஏடுகளில் எழுதுகிறார். திடீரென்று ஒன்றை எழுத வேண்டுமென்றால் உடன்பிறப்பில் எழுதுவார். திட்ட வேண்டுமென்றால் பெயரிடாமல் எப்படியும் திட்டுவார் அல்லது கவிராயராக மாறி இல்லாத பொல்லாத, பொய்யுரைக்கின்ற பாணியிலே அவர்கள் ஈடுபடுகிற முறையிலே, அந்தப் பணியிலே ஈடுபட்டுவிடுவார். அதை விளக்குவதற்காக — எப்படி மக்களை திரு. கருணர்நிதி திசை திருப்புகிறார் என்றால் உண்மைக்கு மாறான செய்திகளைச் சொல்லிச் சொல்லி, இலவச மின்சாரத்தை புரட்சித் தலைவர் தந்து, தான்தான் தந்தேன் என்று கோயபல்ஸ் பொய்ப் பிரச்சாரம் செய்து எப்படி மக்களை நம்ப வைத்தாரோ அல்லது நம்ப வைக்கிற முயற்சியில் ஈடுபட்டாரோ, அதைப்போலவே காவிரி நீர்ப் பிரச்சினையில் தமிழகத்துக்கு இழைத்த துரோகத்தைத் தொடர்ந்து திரு. கருணாநிதி மறைத்து வருகிறார். அவை இதை உணர வேண்டும்; தமிழக மக்கள் உணர வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

*பிற்பகல் 12-25*

4-8-1971-லே உச்ச நீதிமன்றத்திலே Tribunal வேண்டுமென்று, ஆணையிட வேண்டுமென்று வழக்குத் தொடரப்படுகிறது; அந்த வழக்கைத் தொடர்ந்து நடத்தியிருந்தால் தமிழகம் காக்கப்பட்டிருக்கும், தமிழகத்துக்கு நன்மை செய்தவராக திரு. கருணாநிதி கருதப்பட்டிருப்பார். மாறாக, அந்த நேரத்திலே அவர்மீது இருந்த புலன் விசாரணைகள் — நான் எண்ணுகிறேன் — பத்திரிகைக்காரர்கள் சிலர் போடுவார்கள், பலர் போடமாட்டார்கள். ஆனால் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்; நாடு புரிந்துகொள்ள வேண்டும். மொழியின் பெயரால், இனத்தின் பெயரால், தமிழின் பெயரால் எப்படி தமிழக மக்களுக்கு திரு. கருணாநிதி அரசு ரீதியாகவே துரோகம் செய்தார் என்பதனை எல்லோரும் உணர வேண்டும் என்பதற்காக இந்தப்

புள்ளிவிவரத்தை நான் சொல்கிறேன். அப்படி உச்ச நீதிமன்றத்திலே ஒரு வழக்கைப் போட்டு Tribunal வேண்டும் என்று கேட்டு, தமிழகத்தினுடைய நீர் முறையாக வருவதற்கு வழிவகை வேண்டும் என்று கேட்ட அவர், அந்த வழக்கைத் தொடர்ந்து நடத்தவில்லை. மாறாக என்ன செய்தார்? அவர் மீது இருந்த புலன் விசாரணைகள்—அப்போது இந்திரா காந்தி அம்மையார், இந்திய துணைக் கண்டத்தினுடைய பிரதம அமைச்சராக இருக்கிறார். பூச்சி மருந்து ஊழல் புலன் விசாரணை ஒன்று. Aerial Spray Scandal என்று சொல்வது. இன்னொன்றும் சொல்லவேண்டுமானால் பின்பு நிகழ்ந்த கோதுமைப் பேர ஊழல் புலனாய்வு Wheat Scandal என்பது. அதை, அதாவது பூச்சி மருந்து புலனாய்வை, புரட்சித் தலைவர், கருணாநிதிமீது போடவில்லை. திரு. கல்யாண சுந்தரனார் கருணாநிதிமீது போட்ட புலனாய்வல்ல. மாறாக மைய அரசே, இந்திராகாந்தி அம்மையாரே திரு. கருணாநிதிமீது போட்ட புலனாய்வு. C.B.I. also was the investigating agency in regard to Aerial Spraying Scandal and Wheat Scandal. Both the cases were initiated by the then Central Government headed by Prime Minister Indiraji. அவர்கள் போட்ட அந்த விசாரணை—ஓர் உச்ச கட்டத்திற்கு அந்த விசாரணை, புலன் விசாரணை சென்றது. அந்தப் பூச்சி மருந்து ஊழல் உங்களுக்கு நன்றாகத் தெரியும். அவை நன்றாக அறியும். ஆகாயத்திலே—தமிழகத்திலே எங்கு பார்த்தாலும் பூச்சி. கடலைக்காட்டிற்கு பூச்சி, நெல் வயலுக்கு பூச்சி. எல்லா இடத்திலும் பூச்சி; ஒரு திட்டத்தைத் தீட்டுகிறார்கள். வயலுக்கு வயல் விவசாயி சென்று பூச்சி மருந்து அடித்தால் பூச்சி ஒழிந்துவிடாது. இந்த வயலிலிருந்து அடுத்த வயலுக்கு அடிக்காத வயலுக்குப் போய்விடும். எனவே, ஆகாயத்திலிருந்து விமானம் மூலமாக சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை, தஞ்சையிலிருந்து நீலகிரி வரை விமானத்திலிருந்தே பூச்சி மருந்தைத் தெளித்து விடலாம் என்று ஒரு ஊழல் திட்டம் தீட்டப்படுகிறது. அந்த ஊழல் திட்டம் தீட்டப்படுகிறது என்றால்—இதை நான் சொல்லவில்லை. அந்த மைய அரசு Investigation-லே சொன்னார்கள். அந்த Investigation-க்குப் பிறகு சர்க்காரியா கமிஷன் அந்த ஊழலை, விசாரித்தபோதும்கூட அதிலே அவர்களும் இதைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். பூச்சி மருந்து தெளிக்க விமானம் ஆகாயத்திலே பறப்பது போல பறந்தது. கெம்பேட்டா, மானக்ஷா என்று கருதுகிறேன். அப்படி சொல்லக்கூடிய இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த அந்தப் பூச்சி மருந்து விமானங்களுக்குச் சொந்தக்காரர்களுடைய விமானங்கள் வரவழைக்கப்பட்டன. விமானம் பறப்பது போலப் பறந்தது; பூச்சி மருந்து தெளிக்கப்பட்டதா?. பூச்சிகள் செத்தபாடில்லை. இந்த நிலை ஒரு குற்றச்சாட்டாக வந்து மைய அரசு ஒரு விசாரணையைப் போட்டது.



அதுபோலத்தான் பின்பு நிகழ்ந்த Wheat Scandal புலனாய்வு. கோதுமை, ஏராளமான கோதுமையை பஞ்சாப் மாநிலத்திலிருந்து தமிழகத்திற்குக் கொண்டு வந்தார்கள். அப்போது Thiru Zail Singh was the Chief Minister of Punjab என்று நினைக்கிறேன். தமிழகத்திலே இருக்கிற அரிசியை, நெல்லை திடீரென கேரள மாநிலத்திற்கு எடுத்துச் செல்லலாம் என்று தடையை நீக்கிய காலம் உங்களுக்குத் தெரியும். அந்தக் காலத்திலேயே 3 ரூபாய்க்கு இருந்த அரிசி சுமார் 11 ரூபாய்க்கு விற்க வேண்டிய ஒரு துர்பாக்கிய நிலையை அந்த அரிசி கடத்தலின் காரணமாக அன்றைய திரு. கருணாநிதி அரசு உருவாக்கியது. உணவுப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காக கோதுமையை வாங்குகிறோம் என கோதுமையை பஞ்சாப் மாநிலத்திலிருந்து வாங்கினார்கள். அதற்கிடையிலே ஆந்திர மாநிலத்திலிருந்து அரிசி அதிகமாக வந்துவிட்ட காரணத்தாலும், கோதுமையை உணவுப் பொருளாக ஏற்கின்ற மனப்பக்குவம் நமது மக்களுக்கு இல்லாத காரணத்தாலும் கோதுமை அப்படியே நின்றுவிட்டது. விஞ்ஞான ரீதியான ஒரு ஊழலை அதிலே மேற்கொள்கிறார்கள். என்ன ஊழல்? கோதுமை கெட்டுவிட்டது என்றோ—எந்தக் காரணத்தாலோ கோதுமையை ஏலத்திற்கு விடுகிறார்கள். ஏலத்தை எடுத்தது யார்? மதன்லால் குப்தா என்று சொல்லக்கூடிய இந்தியாவிலே இருக்கிற கோதுமை அரைவை ஆலைகளினுடைய சங்கத்தலைவர் அதை எடுக்கிறார். மிகக் குறைந்த விலைக்கு எடுத்து வெளிச் சந்தையிலே விற்று பல கோடி ரூபாய் அதிலே கொள்ளையடிக்கப்படுகிறது. இந்த இரண்டையும் நான் சொல்லவில்லை.

பிற்பகல் 12-30

Central Bureau of Investigation headed by Mr. Radhakrishna Nair, the then Joint Director of C.B.I. and Lakshmi Narayanan, Director of C.B.I.. மைய அரசு அந்த பூச்சி மருந்து புலனாய்வை நடத்துகிறார்கள். இந்திராகாந்தி அம்மையார் போட்ட ஆரம்ப புலனாய்வு விசாரணையில் ஆதாரங்கள் கிட்டிவிடுகின்றன. கெம்பேட்டா சொல்லிவிட்டார், மானக்ஷா சொல்லிவிட்டார் எனக் கருதுகிறேன். தஸ்தாவேஜுகள் கிட்டிவிடுகின்றன. அப்போதுதான் இந்த விசாரணையிலிருந்து எப்படித் தப்பிப்பது என்ற அச்சம் வந்த பிறகு, அந்த நிலையில்தான், இந்திராகாந்தி அம்மையார் இவரை அழைக்கிறார். திரு. கருணாநிதி இந்திராகாந்தி அம்மையாரைச் சந்திக்கிறார். ஊழல் விசாரணை இப்படி இருக்கிற காரணத்தால், அவர்கள் சொல்வதற்கு எல்லாம் தலையை ஆட்டி அதிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும். 6 ஆண்டு, 7 ஆண்டு சிறைத் தண்டனை அளவிற்கு தஸ்தாவேஜுகள் அகப்பட்டன. சாதாரண வழக்கு விசாரணை போன்றது அல்ல. பிற்காலத்தில் அந்த வழக்கை வாபஸ் பெறாமல் இருந்திருந்தால், 7 ஆண்டு காலத்திற்கு

மேல் சிறைக்குச் செல்ல வேண்டிய அளவிற்கு அவ்வளவு கொடுமையான ஊழல் குற்றங்கள். இப்படிப்பட்ட புலன் விசாரணைகள் நிலுவையிலே இருந்தன. விசாரணை நிலுவையிலே இருந்த காரணத்தால் என்ன முடிவு எடுக்கிறார்? அந்த அம்மையார் என்ன சொன்னாலும் கேட்கலாம் என்று முடிவு எடுக்கிறார். அந்த முடிவுதான் உச்சநீதிமன்றத்திலே காவிரி நீரை கர்நாடகம் தமிழகத்திற்குத் தராமல் ஒரு இடுக்கினைத் தருகிறதே, ஏமாற்றத்தைத் தருகிறதே என்ற நிலை மாற வேண்டும் என்பதற்கு மாறாக, தமிழகத்து விவசாயிகள் என்ன கேடு கெட்டாலும் பரவாயில்லை, காவிரி நீர் தமிழகத்திற்கு வந்தாலும், வராவிட்டாலும் பரவாயில்லை, இந்திராகாந்தி அம்மையார் சொல்லிவிட்டார், கேட்கலாம் என முடிவு எடுக்கிறார். அவர்கள் சொல்வதற்குக் காரணம் டெல்லியிலே எந்த அரசாங்கம் இருந்தாலும், கர்நாடக மாநிலத்தைப் பொறுத்தவரைக்கும் i.e., the State mostly governed by national political parties; எனவே காங்கிரஸ் ஆண்ட காலத்திலும் அவர்களும் அக்கறையோடு செயல்படமாட்டார்கள் மைய அரசிலே. காரணம். the political interest for them. பி.ஜே.பி ஆளுகிற நேரத்திலும் கூட the political interest for them; தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், This being governed by Regional political parties. டெல்லியிலே இருக்கின்ற அரசுகள் எதுவாக இருந்தாலும், தமிழகத்து கோரிக்கையைப் புறக்கணித்துவிட்டு, கர்நாடக மாநில அரசுக்கு, எந்த அரசாக இருந்தாலும் சரி, காவிரி பிரச்சினையில் அவர்களுக்கு சாதகமாக செயல்பட்டால்தான் அடுத்த தேர்தலிலே வெற்றி பெறலாம் என்று முடிவு எடுக்கிற போக்கு இருக்கிறது. இந்தப் போக்கை மாற்ற வேண்டுமென்று புரட்சித் தலைவர் வெளிப்படையாகவே சொன்னார். ஆனாலும்கூட, திரு. கருணாநிதி அதற்கு செவி சாய்க்கவில்லை. ஊழல் விசாரணையிலேயிருந்து தப்பித்தால் போதும் என்பதற்காக, போட்ட வழக்கை, உச்சநீதிமன்றத்திலே போட்ட வழக்கை தமிழன தலைவன் என்று சொல்லிக்கொள்கிற திரு. கருணாநிதி, தமிழின மக்களுக்கு துரோகம் அளிக்கின்ற வகையிலே அந்த வழக்கை திரும்பப் பெற்றுவிட்டார். துரோகத்தை இழைத்துவிட்டார். தமிழக வரலாற்றிலேயே, தமிழகத்தினுடைய சங்க காலம் தொட்டு, இந்தக் காலம் வரை, தமிழக வரலாற்றிலேயே தமிழகத்திற்கு திரு. கருணாநிதியைப் போல இப்படிப்பட்ட துரோகத்தை இழைத்தது யாருமேயில்லை என்பதனை (மேசையைத் தட்டும் ஒலி) நான் அவைக்கு அடித்துச் சொல்ல விரும்புகிறேன்.



இப்படி அவர் 7-7-1972-லே இந்த வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொண்டார். எதற்காக திரும்பப் பெற்றுக்கொண்டார்? புரட்சித் தலைவர் தெளிவாகச் சொல்கிறார். நீங்கள் ஒத்துக்கொள்ளாதீர்கள், தி.மு.க. அதற்கு ஒத்துக்கொள்ளக் கூடாது, காரணம், டெல்லியிலே எந்த அரசு இருந்தாலும்கூட அவர்களுடைய கட்சி பிரதான கட்சியாக கர்நாடக மாநிலத்திலே இருக்கின்ற காரணத்தால், கர்நாடக மாநிலத்தினுடைய நலனுக்குப் புறம்பான முடிவை பேச்சுவார்த்தையின் மூலம் எடுக்கமாட்டார்கள். பேச்சுவார்த்தை மூலம் தள்ளிப்போட்டுக்கொண்டே போய், அந்தக் காலத்திலே அணைகளைக் கட்டி, வாய்க்கால்களை வெட்டி தண்ணீரையெல்லாம் பாய்ச்சாத நிலத்திற்கு, புதிய நிலங்களுக்குப் பாய்ச்சி, தமிழகத்தை வறண்ட நிலமாக ஆக்கிவிடுவார்கள், கர்நாடகத்தை வளம் செழிக்கும் நிலமாக ஆக்கிவிடுவார்கள். நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றுதான் நமக்கு இறுதியான பாதுகாப்பைத் தரும் என்று புரட்சித் தலைவர் சொன்னதை, திரு. கருணாநிதி ஏற்காமல், உச்ச நீதிமன்றத்திலே தொடரப்பட்ட வழக்கை அவர் அன்று திரும்பப் பெற்றுவிட்டார்.

*பிற்பகல் 12-35*

1977-க்குப் பிறகு, புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்தார். இந்தப் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளை திரு. கருணாநிதி தீர்த்தாரா என்றால் இல்லை. இந்திரா காந்தி அம்மையார் சொன்னார் என்று வழக்கை வாபஸ் பெற்றார். பேச்சுவார்த்தையில் நமக்கு விடிவு ஏற்படவில்லை. தமிழகத்திற்கு தண்ணீர் தரப்படவில்லை. இந்த அவலநிலை தொடர்ந்து கொண்டே இருந்தது. இதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று புரட்சித் தலைவர் முடிவு செய்தார். விவசாய சங்கத்தை உச்ச நீதிமன்றத்திலே வழக்கு ஒன்றைத் தொடரும்படி கேட்டுக்கொண்டார். விவசாய சங்கமும் உச்சநீதிமன்றத்தில் வழக்கினைத் தொடர்ந்தது. The Tamil Nadu Government too has impleaded itself in that petition, தமிழக அரசு அதிலே தன்னையும் சேர்த்துக்கொண்டு வழக்கை நடத்தியது. புரட்சித் தலைவர் அவர்கள் ஆணைப்படி 1986-லே Tamil Nadu Government wrote to the Government of India requesting to refer the Cauvery dispute to a Tribunal under the Inter State Water Dispute Act.

6-7-1986-லே புரட்சித் தலைவர் அவர்கள் அரசு Tribunal அமைக்க வேண்டுமென்று கேட்ட பிறகு, 18-11-1986-லே உச்ச நீதிமன்றத்தில், ஏற்கெனவே தொடர்ந்திருந்த விவசாயிகள் சங்க வழக்குடன் தமிழக

அரசும் தன்னை இணைத்துக்கொண்டது. அந்த அடிப்படையிலேதான் உச்ச நீதிமன்றம் பிறகு ஒரு தீர்ப்பு வழங்கியது. அவர்கள் சொல்லிக்கொள்கிறார்கள். Tribunal ஒன்று அமைத்த பெருமை திரு. கருணாநிதியைச் சேரும் என்று. கோயபல்ஸ் முறையிலே உண்மைக்கு மாறான ஒரு செய்தியை உலகத்திற்குச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். Tribunal அமைக்க வேண்டுமென்று ஆணையை இட்டது உச்ச நீதிமன்றம். Tribunal அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டது புரட்சித் தலைவர். ...-1986-லே விவசாயிகள் சங்கம் தொடர்ந்த வழக்குடன் 18-11-1986-லே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், புரட்சித் தலைவர் அவர்கள் அரசு உச்ச நீதிமன்றத்திலே வழக்கைத் தொடர்ந்து Tribunal அமைக்க வேண்டுமென்று ஆணையைக் கேட்க, அதற்கு உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது. அந்த ஆணையைப் பெற்றது, நமது மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வத்தின் ஆட்சிக் காலத்திலே; 25-6-1991-லே மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக வந்தபோது, அந்த ஆணை பெறப்பட்டது. எந்த விதத்திலே கருணாநிதி காவிரி நதிநீர்ப் பிரச்சினைகளுக்கு பங்கினை ஆற்றியிருக்கிறார் என்பதனை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். உச்ச நீதிமன்றத்தில் போட்ட வழக்குகளை திரும்பப் பெற — 1972-லே தன்னுடைய பூச்சிமருந்து போன்ற விசாரணையிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள திரும்பப் பெறாமல் இருந்திருப்பாரேயானால், 4, 5 ஆண்டு காலத்திற்குள் Tribunal மூலமாக தீர்ப்பு வந்து, வாரா வாரம் வருகிற தண்ணீர், மாதா மாதம் வருகிற தண்ணீர், இருக்கின்ற ஆயக்கட்டுகளை பாதுகாக்கக்கூடிய நிலை மிச்சப்படுத்தப்படுகிற தண்ணீரின் மூலமாக பிற மாவட்டங்களுக்கு தண்ணீரை அனுப்புகிற முறை, இத்தனைக்கும் தமிழகத்திற்கு பலன் கிட்டியிருக்கும். ஆனால் இந்தப் பலனை நமக்குக் கிட்டாமல் ஊழல் விசாரணையிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்காக இலட்சக்கணக்கான ஏக்கர் உபரி விவசாய நிலமாக காவிரி நீரிலிருந்து நாம் பெறுவதற்குப் பதிலாக கர்நாடக மாநிலம் இலட்சக்கணக்கான ஏக்கர் நிலத்தை நமது தண்ணீரை எடுத்து அவர்கள் விளை நிலமாக மாற்றி கர்நாடக மாநிலம் செழிக்க திரு. கருணாநிதி காரணமாக இருந்து தமிழகத்திற்கு துரோகம் செய்து விட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) துரோகம் செய்து விட்டார், என்ற குற்றச்சாட்டை வெளிப்படையாக இங்கு நான் சொல்ல விரும்புகிறேன்.

திரு. கருணாநிதி மீண்டும் முதலமைச்சராக வந்தார். மீண்டும் முதலமைச்சராக வந்தபிறகு என்ன செய்தார்? இந்தக் காவிரி நதிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஓர் ஆணையம் அமைக்க வேண்டுமென்று



ஒரு முடிவுக்கு வந்தார். ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்தார். சட்ட ரீதியான ஒரு பரிகாரம்தான் தமிழகத்தை நிரந்தரமாகக் காக்கும். 1971-லிருந்து பன்னெடு ஆண்டுகாலமாக பேச்சுவார்த்தை என்ற முறையிலே Political decision எடுத்து அதிகாரமற்ற அமைப்புகளை உருவாக்கி தமிழர்களுடைய நலனை என்றும் பாதுகாக்க முடியாது என்ற நிலை; அதற்கு மாறாக ஆணையம் அமைப்பது என்று உச்சநீதிமன்றத்திலே இருந்த வழக்கிலே a Scheme was submitted. அந்த Scheme கொடுக்கப்பட்டபோது கூட, அதிலே முக்கியமான ஒன்று, முதலிலே அந்த Scheme-ஐக் கொடுக்கிறார்கள். அந்த Scheme-ஐ எந்த ஒரு மாநிலமாவது செயல்படுத்த முன்வராவிட்டால் - ஆணையத்தின் அறிவுரைகளை எந்த ஒரு மாநிலமாவது செயல்படுத்த முன்வராவிட்டால் — அம்மாநிலத்தில் உள்ள நீர்த்தேக்கம் மற்றும் கட்டுமானங்களை ஆணையம் அதன்வசம் எடுத்துக்கொண்டு, அதன் அதிகாரிகளைக் கொண்டோ அல்லது ஒரு முகமையின் மூலமாகவோ அந்த நீர்த்தேக்கம் மற்றும் கட்டுமானத்தை இயக்குவதற்கான அதிகாரம் படைத்த ஆணையமாக அந்த ஆணையம் செயல்பட வேண்டுமென்று ஆணையத்தினுடைய வரைவிலே முதலிலேயே முடிவு எடுக்கப்படுகிறது. ஆனால் 29-7-1998-லே ஒரு விவாதம் டெல்லியிலே மேற்கொள்ளப்படுகிறது, 1998லே அதையொட்டி ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள். தி.மு.க. அதற்கு உறுதுணையாக இருக்கிறது. எப்படிப்பட்ட முடிவு எடுக்கிறார்கள்? அந்த மாநிலத்தில் உள்ள நீர்த்தேக்கம் மற்றும் கட்டுமானங்களை ஆணையம் அதன்வசம் எடுத்துக்கொண்டு இயக்கலாம் என்ற அதிகாரத்தை நீக்கிவிடலாம் என்ற ஒரு முடிவு எடுக்கப்படுகிறது, தி.மு.க. வினுடைய ஆதரவோடு மத்திய அரசால். இது எப்படிப்பட்ட துரோகம்? புரட்சித் தலைவி அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். டெல்லியிலே, பிரதம அமைச்சர் அவர்களிடத்திலே சொன்னார்கள். என்னவென்று சொன்னார்கள்? அப்படி ஓர் ஆணையம் அமைக்கப்படுகிறபோது அமைச்சரவையிலே இருக்கிறது யார்? புரட்சித் தலைவி அவர்களின் அமைச்சர்கள் இருக்கிறார்கள். இங்கே இருப்பது, திரு. கருணாநிதி இருக்கிறார். திரு. கருணாநிதியினுடைய ஆலோசனையைக் கேட்டு, அதிகாரம் உள்ள ஆணையம், தவறுகிற மாநிலத்தின் நீர்த்தேக்கங்களை, தன் கைவசப்படுத்த வேண்டுமென்ற அந்தப் பகுதியை நீக்குவதற்கு திரு. கருணாநிதி சம்மதம் அளிக்கிறார். அதை மைய அரசு ஏற்கிறது. எதிர்ப்பு தெரிவிக்கிறார், புரட்சித் தலைவி. புரட்சித் தலைவியினுடைய எம்.பி.க்கள் மூலமாக எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது. அமைச்சர்கள் மூலமாக எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது. அது செவிமடுக்கப்படவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவியைக் கேட்கவில்லை. டெல்லியிலே இருக்கிற அந்த அமைச்சரவையிலே அங்கம் வகித்த

அமைச்சர்களுக்குத் தலைமையாக விளங்குகிற புரட்சித் தலைவியை அவர்கள் கேட்கவில்லை. எங்களது அமைச்சர்களையும் அவர்கள் கேட்கவில்லை. அதற்கு மாறாக திரு. கருணாநிதியினுடைய சூழ்ச்சிக்கு அவர்கள் இரையாகிறார்கள். முதலமைச்சர் திரு. கருணாநிதி அப்போதே ஒரு சதித் திட்டத்தைப் போட்டுவிட்டார். டெல்லிக்கு வேண்டி, எதேனும் ஏற்கெனவே இப்படி இந்திரா காந்தி அம்மையாருக்குத் தலையாட்டி தமிழகத்திற்குத் துரோகம் செய்து, பூச்சி மருந்து ஊழல் போன்ற விசாரணைகளிலிருந்து (குறுக்கீடு) இல்லை. இந்திரா காந்தியை, நான் தலையாட்டி என்று கூறியிறுந்தால் I will withdraw it.

*பிற்பகல் 12-40*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நீங்கள் தயவுசெய்து இந்திரா காந்தி அம்மையார்மீது பழி சொல்லக்கூடாது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பழியே இல்லை. ஐயோ, No.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள் கர்நாடக முதலமைச்சராக இருந்தபோது, நம்முடைய மாநிலத்திற்கு 265 டி.எம்.சி. தண்ணீர் வழங்குவதாகச் சொன்னார்கள். அவர் தமிழகத்திற்குத் துரோகம் இழைக்க வேண்டும் என்று நினைத்திருந்தால் இந்திரா காந்தி அப்படிச் சொல்லி திரு. தேவராஜ் அர்ஸை ஒப்புக்கொள்ள வைத்திருக்க மாட்டார். அன்றையதினம் மட்டும் அவர் அதை ஏற்றுக்கொண்டிருந்தால் இந்தக் காவிரி டிரிபியுனல், காவிரி வழக்கு என்று எதுவுமே இருந்திருக்காது. இன்றைக்கு நமக்கு வசதியாக 265 டி.எம்.சி. தண்ணீர் பெற்றுக்கொண்டு இருந்திருப்போம். அதனாலே மீண்டும், மீண்டும் இந்திரா காந்தியின் பெயரை இழுக்க வேண்டாம் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டுகிறேன். நான் இந்திரா காந்தி அம்மையார்மீது குறை சொல்லவில்லை. அப்படி ஒரு பொருள் வந்திருந்தால் நான் அதை மாற்றிச் சொல்கிறேன். மிகவும் தெளிவாக்குகிறேன். உண்மை என்னவென்றால், பூச்சிமருந்து ஊழல் போன்ற விசாரணை டெல்லியிலே இருக்கிறது. இந்திரா காந்தி அம்மையார் அவர்களைப் பொறுத்தவரைக்கும் பேச்சுவார்த்தையின் மூலமாக இதைத் தீருங்கள் என்று சொல்கிறார். புரட்சித் தலைவர் சொல்கிறார், பேச்சுவார்த்தை மூலமாக இதைத் தீர்க்க முடியாது என்று. காரணம், பேச்சுவார்த்தையிலே கர்நாடக மாநிலத்திற்குப் பாதகமான ஒரு முடிவை,



அந்தக் கமிட்டியிலே இடம் பெறுகிறவர்கள் மைய அரசைச் சேர்ந்தவர்களாக இருக்கிற காரணத்தால், எடுக்க மாட்டார்கள். மைய அரசைச் சேர்ந்தவர்களுக்கு கர்நாடக மாநிலத்தின்மீது—regional political system — தமிழகத்தைவிட அதிக அக்கறை இருக்கிற காரணத்தால், நல்ல விடிவுகாலம் நமக்குக் கிட்டாது, உச்ச நீதிமன்றம்தான் நல்ல ஒரு விடிவை நடுநிலையோடு தரும் என்று அன்று புரட்சித் தலைவர் சொன்னார். இன்றும் அதைத்தான் சொல்கிறோம். தமிழகத்தினுடைய நலனைக் கருதி இதை நாம் ஒத்துக்கொண்டாக வேண்டும். அப்படிப்பட்ட நிலைக்கு, திரு. கருணாநிதி அவர்களைப் பொறுத்தவரைக்கும், தமிழகத்தினுடைய நலனைப் பாதுகாக்க வேண்டுமென்றால் உச்ச நீதிமன்றத்திலிருந்து வழக்குகளை நான் திரும்பப் பெறாமலே இருக்கிறேன். அம்மா, எங்களுக்குச் செய்ய வேண்டியதைச் செய்யுங்கள் என்று மற்ற பிரச்சினைகளை இவர் அணுகியிருக்கலாம். ஆனால், உச்ச நீதிமன்றத்திலிருந்து வழக்குகளைத் திரும்பப் பெற்றது தமிழகத்திற்கு இழைத்த துரோகம். அவருக்கு பிற்காலத்தில் ஆதாயம் கிடைத்தது தனிப்பட்ட முறையிலே, பல வழக்குகளிலிருந்து இறுதிக் காலத்திலே விடுதலை. பாதிக்கப்பட்டதோ தமிழினம், துரோகம் இழைக்கப்பட்டதோ தமிழினத்திற்கு, தமிழினத் தலைவன் என்ற போர்வையிலே கருணாநிதி அவர்களால்.....

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எஸ்.ஆர்.பி அவர்களும், மாண்புமிகு சோ. பாலகிருஷ்ணன் அவர்களும் இங்கே என்ன சொன்னாலும் சரித்திரத்தை மாற்றியமைக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) காவிரிப் பிரச்சினையில் நடைபெற்ற வரலாற்றைத்தான் இங்கே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விவரித்தார்கள். எங்களுக்கும் மறைந்த அன்னை இந்திரா காந்தி அம்மையார்மீது மிகுந்த மரியாதை உள்ளது. நான் எப்பொழுதுமே அவர்களை அன்னை இந்திரா காந்தி என்றுதான் அழைப்பது உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக நடந்த சரித்திரத்தை, நடந்த வரலாற்றை நாங்கள் இங்கே மாற்றிக்கூற முடியாது. உண்மை இதுதான். சர்க்காரியா கமிஷன் அறிக்கையின் அடிப்படையில் மத்திய அரசின் சி.பி.ஐ., முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்களின்மீது வழக்குகளைத் தொடுத்து, விசாரித்துக்கொண்டிருந்தது. அப்போது திரு. கருணாநிதி குற்றவாளிதான் என்று கண்டறியப்பட்டது. தனி நீதிமன்றமும் அமைக்கப்பட்டது. அந்த வழக்குகள் விசாரணைக்கு வந்தன. அப்போது எப்படியாவது அந்த வழக்கு விசாரணையிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும் என்று, தனி நீதிமன்றத்திலிருந்து தொடங்கி, அதன் பின்னர் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று, அதன் பிறகு உச்ச

நீதிமன்றத்திற்குச் சென்று, திரு. கருணாநிதி அவர்கள் அப்பீல் மேல் அப்பீல் செய்து தோற்றுப்போனார். அவர் அந்த வழக்கு விசாரணையைச் சந்தித்தே ஆக வேண்டும் என்ற கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது. அப்போது தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாது என்பதை அறிந்த திரு. கருணாநிதி, அன்னை இந்திரா காந்தி அவர்களை, அன்றைய பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்களைச் சந்தித்து, அவர்களிடம் சரணாகதி என்று அவர்கள காலிலே விழுந்தார், அன்றைக்கு, தன் மீதுள்ள வழக்குகளை வாபஸ் பெற வேண்டும் என்பதற்காக அன்னை இந்திரா காந்தி அவர்கள் போட்ட நிபந்தனை, உச்ச நீதிமன்றத்தில் காவிரி சம்பந்தமாக இருந்த வழக்கை, தமிழ்நாடு அரசின் வழக்கை திரும்பப் பெற வேண்டும் என்பதாகும். அதற்கிணங்கி, தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டைக் காட்டிக் கொடுத்துவிட்டார் திரு. கருணாநிதி. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தமிழ்நாட்டிற்கு, மாறாக துரோகத்தைச் செய்துவிட்டார் திரு. கருணாநிதி (மேசையைத் தட்டும் ஒலி) திரு. எஸ்.ஆர்.பி. அவர்களும் திரு. சோ.பா. அவர்களும் எவ்வளவுதான் ஆட்சேபம் தெரிவித்தாலும், நடந்த வரலாற்றை மாற்ற முடியாது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

பிற்பகல் 12-45

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே முதலமைச்சர் அவர்கள் சொன்னதை இரண்டு பகுதிகளாகப் பாருங்கள். ஒன்று சர்க்காரியா கமிஷன் விசாரணை என்பதும், சர்க்காரியா கமிஷன் விசாரணையில் வழக்கு நடைபெற்றது என்பதும், அதற்குப் பின்னாலே திரு. கருணாநிதி ஆட்சிப் பீடத்திற்கு வந்தது 1989. அப்போது இந்திரா காந்தி ஆட்சியில் கிடையாது. (குறுக்கீடு) எப்போது? நீங்கள் 1972 என்று சொன்னீர்கள். (குறுக்கீடு) ஆமாம். சர்க்காரியா கமிஷன் எப்போது நடந்தது? (குறுக்கீடு) இல்லை, இல்லை. அம்மா சொன்னது. (குறுக்கீடு) தயவுசெய்து என்னைப் பேசவிடுங்கள். (குறுக்கீடு) சர்க்காரியா கமிஷன் விசாரணை என்பது 1976 ஆம் ஆண்டு.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதைத் திருத்திக்கொள்கிறேன். முதலில் சி.பி.ஐ. வழக்குகள், அதன் பின்னர் சர்க்காரியா கமிஷன். நான் திருத்திக்கொள்கிறேன். ஆனால் அதேநேரத்தில் அன்னை இந்திரா காந்தி அவர்கள், அன்றைய பிரதமர் போட்ட நிபந்தனையின் காரணமாக உச்ச



நீதிமன்றத்தில் காவிரிக்கு நீர்பெறுதல் சம்பந்தமாக தமிழக அரசு தொடுத்திருந்த வழக்கை திரு. கருணாநிதி வாபஸ் பெற்றார் என்பதை நீங்கள் எவ்வளவு சொன்னாலும் அதை மாற்ற முடியாது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** கருணாநிதிக்கு ஆதரவாகப் பேச வேண்டுமென்று நினைத்தால் எனக்குப் பேசுவதற்குத் தெரியும். ஆனால் நான் பேசவில்லை. அந்த இடத்திற்கே நான் போகவில்லை. ஆனால் இந்திரா காந்தி நமக்கு பாதகமாகச் செயல்பட்டார் என்பதை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன். அதுமட்டுமல்ல, இந்திரா காந்தி சொன்னதற்குப் பின்னாலே திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள் — அதை நீங்கள் சொல்லுங்களேன் இங்கே — 265 டி.எம்.சி. அடி காவிரி நீர் தருகிறேன் என்று சொன்னாரா இல்லையா? யார் வேண்டாம் என்று சொன்னது? ஏன் வேண்டாம் என்று சொன்னார் அவர்? அதைச் சொல்லுங்கள். அதைக் கேட்பதை விட்டுவிட்டு மாற்றி மாற்றி இந்திரா காந்தி, இந்திரா காந்தி, இந்திரா காந்தி என்று சொல்வதற்குப் பதிலாக திரு. கருணாநிதி அந்தத் தவறைச் செய்தார் என்று சொல்லுங்கள், நான் ஏற்றுக்கொள்கிறேன். திரு. கருணாநிதி செய்த மிகப் பெரிய தவறு, தமிழகத்திற்கு இழைத்த துரோகம் ஒன்று உண்டு என்று சொன்னால் 265 டி.எம்.சி. காவிரி நீரை திரு. தேவராஜ் அர்ஸ் கொடுக்கிறேன் என்று சொன்ன நேரத்திலே அதை மறுத்ததுதான் மாபெரும் தவறு. கருணாநிதியை வைத்துக்கொண்டு இந்த அவையில் நான் பேசியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஒரு சிறிய விளக்கம் சொல்லிவிடுகிறேன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு வரலாற்றுச் செய்தியைத்தான் சொல்லுகிறார்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நானும் வரலாற்றுச் செய்தியைத்தான் சொல்கிறேன். 1980-ல் இந்திரா காந்தி ஆட்சியில் இருந்தபோது கருணாநிதி ஆட்சியில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்திரா காந்தி அவர்கள் கேட்டுக்கொண்டதற்காக உச்சநீதிமன்றத்திலே போட்ட வழக்கு திரும்பப் பெறப்பட்டது என்பதுதான்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** 265 டி.எம்.சி. நீரை தேவராஜ் அர்ஸ் கொடுக்க ஒத்துக்கொண்டாரா இல்லையா? அதை ஏன் சொல்ல மாட்டேன் என்கிறீர்கள்? (குறுக்கீடு)

[ 2002 ஏப்ரல் 9

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** That details I don't have.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** Gallery-யில் அதிகாரிகள் இருக்க வேண்டும் என்று சொல்வது இதற்குத்தான், அதிகாரிகள் கேலரியில் இல்லாமல் இருப்பது மிகவும் தவறு. நீங்கள் இவ்வளவு பெரிய பதிலை 3 மணி நேரம், 4 மணி நேரம் இந்த அவையிலே பேசிக் கொண்டிருக்கிறீர்கள், உங்களுக்குத் துணை இல்லையென்று சொன்னால் அது யாருடைய தவறு? *(குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை. நான் சொல்கிறேன். *(குறுக்கீடு)*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் என்னுடைய நினைவாற்றலிலிருந்து சொல்கிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் முடித்துவிடுகிறேன்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளையன் நம்மோடு ஒப்பந்தம் போட்டது 1924-லிருந்து 1974 வரை. 1971 ஆம் ஆண்டு டிரிப்யூனலுக்குப் போவதற்கு அவர் வழக்குத் தொடுத்தார். எந்த ஆண்டிலே அவர் திரும்பப் பெற்றாரோ அந்த நேரத்திலே சர்க்காரியா கமிஷனே இல்லை. *(குறுக்கீடு)* அதை எப்போது போட்டார்கள் என்று சொல்கிறேன். ஒரு நிமிடம். 1975-76-லேதான் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு சர்க்காரியா கமிஷன் போடப்படுகிறது. அதற்குப் பிறகு கலைஞர் அவர்கள் எடுத்திருக்கிற நடவடிக்கைகளுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்களே சொல்லிவிட்டார்கள். சர்க்காரியா கமிஷன் இல்லை, சி.பி.ஐ. வழக்கு என்று. *(குறுக்கீடு)* நிதியமைச்சர் அவர்கள் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** கமிஷன் இருக்கும்போது வாபஸ் வாங்கவில்லை. அவர் ஆட்சியைவிட்டு இறங்கி, 1977-லே தோற்று, 1980-லேயும் தோற்றதற்குப் பின்னாலே வழக்கு வாபஸ் பெறப்பட்டது. 1980 ஆம் ஆண்டு தோற்றதற்குப் பின்னாலே எம்.ஜி.ஆர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோதுதான் அந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான தவறான விளக்கத்தை அவைக்கு மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார் என்பதைக் கூறுவதில் நான் வருத்தப்படுகிறேன். *(குறுக்கீடு)* நான் சொல்லி முடிக்கிறேன்.



I will substantiate. Let me substantiate. (Interruption) I will substantiate. (Interruption) I will substantiate. *(குறுக்கீடு)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)* ஒரு நிமிஷம் இருங்கள். சொல்லி முடித்துவிடுகிறேன். *(குறுக்கீடு)*

**திரு. ஜி. பழனிசாமி:** எங்கள் மாவட்டத்திலிருந்து, மன்னார் குடியிலிருந்து ரங்கநாதன் என்ற விவசாயிதான் வழக்குப் போட்டார்.

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் உண்மை நிலை என்ன என்பதை நான் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் சொல்வது, திரு. கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள் தருவதாகச் சொன்ன 26.5 டி.எம்.சி. தண்ணீரை — அதைக்கூட ஏன் ஒத்துக்கொள்ளவில்லை என்ற ஒரு தகவலைச் சொல்லியிருக்கிறார். கண்டிக்கத்தக்க ஒன்றுதான். நான் கூறியதைப்போல இன்னுமொரு தமிழினத் துரோகத்தை திரு. கருணாநிதி தமிழகத்திற்குச் செய்துவிட்டார் என்பதனை திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் சொல்கிறார்கள். அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் திரு. கருணாநிதி அவர்கள் மீது aerial spraying scandal preliminary investigation was started in 1972 C.B.I. investigation went on to what extent என்பது நாட்டுக்குத் தெரியும். அந்த சர்க்காரியா கமிஷனிலே aerial spraying and wheat scandal-லில் நானும் ஒரு வழக்கறிஞர் என்ற முறையிலே *(குறுக்கீடு)* It is not correct. I am telling சர்க்காரியா கமிஷன் 1976-லே *(குறுக்கீடு)* I am not yielding, I am not yielding, I am not yielding. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிறேன். சர்க்காரியா கமிஷன் 1976-லே *(குறுக்கீடு)* நான் இல்லையென்று சொல்லவில்லை.

**THIRU S.R. BALASUBRAMONIYAN:** Hon. Speaker Sir, I am not willing to cross swords, but you are unnecessarily crossing swords with us.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** ஒரு நிமிஷம் உட்காருங்கள். Please. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிற வாதங்கள், பிரதிவாதங்களில் நடைபெற்ற வரலாற்று உண்மைகள் எங்கே தமிழக மக்களுக்குத் தெரியாமல் போய்விடுமோ என்பதற்காக நான் வரிசைப்படுத்தி சில விவரங்களை இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன். இவை எல்லாம் ஏற்கெனவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்த விவரங்கள்தான்.

முதலில் 4-8-1971-ல் தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் ஒரு சூட் தாக்கல் செய்து தமிழகத்திற்கும் கர்நாடகத்திற்கும் இடையே இருந்த காவிரி நதிநீர்ப் பிரச்சினையை ஒரு நடுவர் மன்றத்திற்கு refer செய்ய வேண்டும்; Tribunal-க்கு refer செய்ய வேண்டுமென்று வழக்குத் தொடுத்தது. அதன் பின்னர் 7-7-1972-ல் அன்றைய தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் தொடுத்திருந்த வழக்கை வாபஸ் பெற உத்தரவிட்டது. இந்த வரலாற்று உண்மையைத்தான் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகின்றோம். இந்த அவையில் பேசுகின்ற தி.மு.க. உறுப்பினர்கள் திரும்பத் திரும்ப இந்த நடுவர் மன்றத்தைப் பெற்றுத் தந்ததே தி.மு.க. அரசுதான், முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதிதான் என்று திரும்பத் திரும்ப உண்மைக்கு மாறான ஒரு தகவலைத் தந்துகொண்டிருக்கிறார்களே, அதற்காகத்தான் இந்த விவரங்களை, இந்தவிளக்கத்தைத் தந்துகொண்டிருக்கிறோம். 7-7-1972 அன்று சுப்ரீம் கோர்ட்டில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கை வாபஸ் பெறுமாறு அன்றைய தமிழக அரசு திரு. கருணாநிதி முதல்வராக இருந்த தமிழக அரசு, வாபஸ் பெறச் சொல்லி உத்தரவிட்டது. அதன்பிறகு, 6-7-1986 அன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தபோது தமிழக அரசு, மத்திய அரசுக்கு ஒரு கடிதம் எழுதி அப்போது Inter-State Water Dispute Act 1956-ன்கீழ் இந்த காவிரி நதி நீர் தாவாவை ஒரு நடுவர் மன்றத்திற்கு விட வேண்டும்; refer செய்ய வேண்டுமென்று புரட்சித் தலைவர் தலைமையிலிருந்த தமிழக அரசு மத்திய அரசுக்கு 6-7-1986 அன்று கடிதம் எழுதியது. அதன் பிறகு தமிழ்நாடு காவிரி நீர்ப்பாசன விளை பொருட்கள் விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்புச் சங்கம் என்ற அமைப்பு சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்திருந்த வழக்கில் 18-11-1986 அன்று தமிழக அரசு தன்னையும் இணைத்துக்கொண்டது. அதன் பிறகு சுப்ரீம் கோர்ட் பெஞ்ச் 4-5-1990 அன்று Tribunal அமைக்குமாறு மத்திய அரசுக்கு உத்தரவிட்டது. இந்தத் தீர்ப்பு பெறப்பட்டது 1990 ஆம் ஆண்டு. அன்றையதினம் திரு. கருணாநிதி முதலமைச்சராக இருந்தார். அதை வைத்துக்கொண்டு தி.மு.க. உறுப்பினர்கள் நாங்கள்தான் Tribunal-ஐப் பெற்றுக் கொடுத்தோம் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அது உண்மைக்கு மாறான தகவல். இதற்காகக் கடிதம் எழுதியது புரட்சித் தலைவர் அரசு. இதற்காக தமிழக காவிரி டெல்டா விவசாயிகள் சுப்ரீம் கோர்ட்டில் தொடுத்த வழக்கில் தமிழக அரசையும் இணைக்கச் செய்தது புரட்சித் தலைவர் அரசு. ஆகவே இதை ஆரம்பித்து வைத்தது புரட்சித் தலைவர் அரசு. ஆனால் 1990 ஆம் ஆண்டில் சுப்ரீம் கோர்ட்டில் நடுவர் மன்றத்தை அமைக்கச் சொல்லி



தீர்ப்பளித்தபோது, அப்போது புரட்சித் தலைவர் இல்லை. அப்போது திரு. கருணாநிதி முதலமைச்சராக இருந்தார். அதன் பின்னர் 2-6-1990 ஆம் ஆண்டு அன்றைய தேதியில் மத்திய அரசு ஒரு Notification issue செய்து அன்றையதினம் 3 உறுப்பினர்கள் கொண்ட காவிரி நடுவர் மன்றத்தை அமைப்பதாக அறிவித்தது. அதன் பின்னர், நான் முதலமைச்சராக இருந்தபோது 25-6-1991 அன்றுதான் நடுவர் மன்றம் தனது இடைக்காலத் தீர்ப்பை வழங்கி, தமிழகத்திற்கு 205 டி.எம்.சி. அடி தண்ணீர் கர்நாடகம் திறந்துவிட வேண்டுமென்று அந்தத் தீர்ப்பை அளித்தது என்பதை இங்கே நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-55

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக அவைக்கு நான் ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

(திரு. எஸ்.ஆர் பாலசுப்பிரமணியன் அவர்கள் பேரவைத் தலைவரிடம் ஒரு பேப்பரை சுட்டிக்காட்டிப் பேசிக்கொண்டிருந்தார்.)

மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுக்கும் நான் ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது இந்த aerial spraying and wheat scandal என்பதை நீங்கள் இரண்டு விதத்தில் பார்க்க வேண்டும். ஒன்று, விசாரணை Aerial Spraying-ல். இந்த கெம்பேட்டா மற்றும் மனாக்ஷா என்பவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்து இந்தத் தொழிலில் ஈடுபட்டு சம்பாதித்துவிட்டு, தவறுகளுக்கு உடந்தையாக இருந்துவிட்டு, பிற மாநிலங்களுக்கும் சென்றபோது, பிற மாநிலங்களிலும் அவர்கள் இந்தத் தவறுகளில் ஈடுபட்டபோது, மைய அரசு கண்டுபிடித்த ஒன்று அது.

C.B.I. had been informed in those days the indulgence of Competa and Manaksha in aerial spray scandals not only in Tamil Nadu and of their attempts to indulge in the same in other States also. அந்த அடிப்படையில் மைய அரசு விசாரணை மேற்கொண்டபோது, அப்போதுதான் மைய புலனாய்வுத் துறை ஆதாரங்களைப் பெற்றுவிட்டது. ஆதாரங்களைப் பெறுகிறபோதே, விசாரணை நடக்கிறபோதே, திரு. கருணாநிதியை சந்திக்காமல் விசாரணை நடத்தியிருப்பார்களா மைய அரசின் புலனாய்வுத் துறை. ஆதாரங்கள் கிட்டிவிட்டன, ஆபத்து வருகிறது என்று தெரிந்த காரணத்தினால், 1972-லிருந்தே இதிலிருந்து விடுபட வேண்டும், தப்பிக்க வேண்டும் என்ற

முயற்சியை அப்போதே, அந்தப் புலனாய்விலிருந்தே மேற்கொண்டார். ...க்காரியா கமிஷனிலே என்று நான் சொல்லவில்லை. C.B.I. Investigation (குறுக்கீடு) சரி, அப்படிச் சொல்லியிருந்தால், அதை நான் திரும்பப் பெறுகிறேன். காரணம் என்னவென்றால், C.B.I. போன்ற மைய அரசு Investigation-லே திரு. கருணாநிதியுடைய பூச்சி மருந்து ஊழல் தஸ்தாவேஜுகள், கிட்டிவிட்ட காரணத்தினால், ஆபத்து தலைக்கு மேல் இருக்கிறது என்று உணர்ந்த காரணத்தால், டெல்லி அரசாங்கம், மாண்புமிகு இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கூறியவற்றுக்கு எல்லாம், கர்நாடக மாநிலத்தினர் கூறியதெற்கெல்லாம் செவிமடுத்தார், தமிழகத்தினுடைய நலனைப் புறக்கணித்து தன் நலனைப் பாதுகாக்க இந்த அணுகுமுறையை மேற்கொண்டார் என்பதுதான் உண்மை. ஆனால், எதற்காக பின்னர், சர்க்காரியா கமிஷனுக்கும் பின்னால், 1977 தேர்தலுக்கும் பின்னால், அதே கெம்பேட்டா, அதே மனாக்ஷா, என்று கருதுகிறேன். அவர்கள் எந்த சி.பி.ஐ. புலனாய்விலே திரு. கருணாநிதியை குற்றவாளியாகக் கண்டுபிடித்தார்களோ, அவர்கள் மீண்டும் affidavit கொடுத்து, அவர்கள் கொடுத்த சாட்சியங்களை மாற்றி, தஸ்தாவேஜுகளுக்கு மாறாக அவர்கள் சாட்சியங்கள் தந்து affidavit தந்து, அந்த வழக்கை வாபஸ் பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கவில்லையா? உருவாக்கப்படவில்லையா? அந்த வழக்குகள் இந்திரா காந்தி அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் திரும்பப் பெறப்படவில்லையா? உண்மையை நாம் மறைக்கக்கூடாது. அன்று நீங்கள் அவரோடு உறவு கொள்ளவில்லையா? புரட்சித் தலைவருடைய ஆட்சியை இந்திராகாந்தி அம்மையாருடைய துணையோடு திரு. கருணாநிதி அவர்கள் அன்று டிஸ்மிஸ் செய்யவில்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பரிசாக, பூச்சி மருந்து ஊழல் வழக்கு, கோதுமை பேர ஊழல் வழக்கு, 7 ஆண்டுகால சிறைத் தண்டனை இவற்றிலிருந்து விடுவித்து இந்திரா காந்தி அம்மையார் திரு. கருணாநிதிக்கு பாவ மன்னிப்பு தரவில்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) உண்மைகளை மறைப்பது நாட்டிற்கு நல்லது அல்ல, உங்களுக்கும் நல்லது அல்ல என்பதைச் சொல்லிவிட்டு, அடுத்து ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். இதே திரு. கருணாநிதி (குறுக்கீடு) I am not now yielding, I will conclude my speech.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தேவையில்லாமல் வம்புக்கு இழுக்கிறாரா? தேவையில்லாமல் வம்புக்கு இழுக்கிறாரா? It is not a question of yielding. You are going on giving everything against facts (Interruption) என்ன facts? என்ன இதிலே facts?



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி., நீங்கள் என்னைப் பார்த்துப் பேச வேண்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவு செய்து. அருள்கூர்ந்து சண்டைக்கு இழுப்பதைப்போலவே பேசிக்கொண்டிருப்பது நல்லது அல்ல. (குறுக்கீடு) நாங்கள் மிகப் பொறுமையாக இருக்கிறோம். நிறைய தவறுகளைச் சொல்லியிருக்கிறார்கள். தவறான தகவல்கள் நிறைய இந்தவொரு காவிரி விஷயத்திலே மட்டும் அல்ல, பருத்தி விஷயத்திலேயிருந்து, அத்தனையும் தவறு. Central Government வரிப் பகிர்விலிருந்து என்று. அத்தனையும் தவறு, அதாவது ஏதாவது பேச வேண்டும் என்று பேசுகிறார்கள். அவ்வளவுதானே தவிர, பொறுமையாக அவர் சொல்ல வந்ததை அவர் சொல்ல வரவில்லை. நான் சொல்வது 1980-க்குப் பின்னாலே திரு. கருணாநிதி ஆட்சிப் பீடத்திலே இல்லாத நேரத்திலே வழக்குகள் வாபஸ் வாங்கப்பட்டன. அது உண்மைதான். நான் அதை மறுக்கவில்லை. அதுமட்டுமல்ல, திரு. கருணாநிதியுடைய தூண்டுதலால்தான் எம்.ஜி.ஆர். அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்டது என்பதை நான் இந்த இடத்திலே இப்பொழுது ஞானசேகரன் வீற்றிருக்கிற இடத்திலே நான் இருந்து, கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது நான் சொல்லி, கேட்கவில்லையா? அபாண்டமாக என்மீது பழி சொல்கிறீர்கள் என்று அவர் சொன்னார். கிடையவே கிடையாது நீங்கள் கேட்டுக்கொண்டதன் விளைவாகத்தான் அன்றையதினம் எம்.ஜி.ஆர். அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்டது என்பதை நான் இந்த அவையிலே பதிவு செய்திருக்கிறேன். நீங்கள் அதை எடுத்துப் பார்க்கலாம். நான் அதையெல்லாம் மறுக்கவில்லை. நான் அந்த இடத்திற்கே போகவில்லை. நான் திரு. கருணாநிதிக்காக, கலைஞருக்காக வக்காலத்து வாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் பேசவில்லை. இன்று நீங்கள் உயிரோடு இல்லாத இந்திரா காந்தி, நம்மிடத்திலே பரிவும் பாசமும் காட்டிய இந்திரா காந்தி மீது தொடர்ந்து, மீண்டும் மீண்டும் மீண்டும் மீண்டும் குற்றங்கள் சுமத்துவது நல்லதல்ல. அருள்கூர்ந்து நீங்கள் பேசும் போது முடிந்தவரை குறிப்புகளை வைத்துக்கொண்டு பேசுங்கள். எதை வேண்டுமானாலும் பேசலாம் என்று நினைத்துக்கொண்டு பேச வேண்டாம். முதலில் சர்க்காரியா கமிஷன் 1972-ல் என்று சொன்னீர்கள். (குறுக்கீடு) நீங்கள் அப்படித்தான் சொன்னீர்கள். (குறுக்கீடு) நீங்கள் குறிப்பை வாங்கிப் பாருங்கள். (குறுக்கீடு) என்ன வேண்டுமானாலும் பேசலாம் எனப் பேசக்கூடாது.

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு தவறான தகவல்களைச் சொல்லக்கூடாது. சர்காரியா கமிஷன் 1972-ல் தான் நடந்தது என்று யாருமே சொல்ல மாட்டார்கள். எப்படிச் சொல்ல முடியும்? சொல்லவில்லை என்று நான் சொல்கிறேன். (குறுக்கீடு) அவைக் குறிப்பை எடுத்துப் பாருங்கள். சி.பி.ஐ. போன்ற விசாரணை என்றுதான் நான் சொன்னேன். சர்க்காரியா கமிஷனில் (குறுக்கீடு) அவைக் குறிப்பை எடுத்துப் பாருங்கள். (குறுக்கீடு) இப்படி உலகிற்கே தெரிந்த ஒன்றை, சர்க்காரியா கமிஷன் 1972-ல் இல்லை. 1972-ல் மைய அரசின் சி.பி.ஐ. போன்ற புலன் விசாரணைதான். (குறுக்கீடு) சரி. இப்போது சொல்கிறேன். ஏற்றுக்கொள்ளுங்கள். இதை ஏன் உணர்ச்சி வசப்பட்டு பெரிதுபடுத்துகிறீர்கள்? (குறுக்கீடு) 1972-ல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி அவர்கள்.....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு திரு எஸ்.ஆர்.பி அவர்கள், ஏன் இதற்கு உணர்ச்சிவசப்பட்டுப் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) அப்படியில்லை. உணர்ச்சிவசப்பட்டுப் பேசாதீர்கள் என்றுதான் சொல்கிறேன். (குறுக்கீடு) உணர்ச்சிவசப்பட்டுப் பேசாதீர்கள் என்று சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், நீங்கள் என்னைப் பாருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, தவறான தகவலை நீங்கள் பேசிக்கொண்டிருக்கிறீர்கள் (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை. ஒரு ஹெக்டேரா, ஒரு ஏக்கரா என்பதல்ல. (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு இந்த தகவல்களைத் தந்திருப்பது டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் குழு. (குறுக்கீடு) நான் குறிப்புகளை வைத்துக்கொண்டுதான் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, அப்படித் தேவையில்லை. (குறுக்கீடு)



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** வரிப் பகிர்வில் மோசம் என்று......

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஆமாம். வரிப் பகிர்வில் மோசம் இல்லையா? (குறுக்கீடு) பிறகு என்ன? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** Grants-in-aid-லும் மோசம். வரிப் பகிர்விலே மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) இரண்டையுமே.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், தயவுசெய்து அமருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு வரிப் பகிர்விலேயும் மோசம் செய்திருக்கிறது. காரணம், நம்மை முன்னேறிய மாநிலம் என்று சொல்லி, மக்கள் தொகையிலே நாம் குறைந்திருக்கிறோம். Infrastructure அதிகமாக இருக்கிறது. Literacy அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தைச் சொல்லி 29.5 சதவிகித வரிப் பகிர்விலே ஆண்டிற்கு 590 கோடி ரூபாயை 5 ஆண்டு காலத்திற்கு நிறுத்திவிட்டார்கள் என்பது ரெக்கார்டிலே இருக்கிறது. டெல்லிக்குச் செல்லுங்கள். எல்லா ரெக்கார்டுகளையும் எடுத்துப் பாருங்கள். இல்லாதது ஒன்றும் அவைக்குச் சொல்லவில்லை. Grant-லே என்று சொன்னது 12.5 சதவிகித வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறபோது ஆந்திர மாநிலத்திற்கு grant-லே அதிகமாகத் தருகிறார்கள். தமிழகத்திற்குக் குறைத்துவிட்டார்கள். அதுவும் உண்மைதான். வரிப் பகிர்விலும் குறைவுதான். மாநில அதிகாரம் பறிக்கப்பட்டிருக்கிறது. ஆண்டிற்கு 590 கோடி ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு கொடுத்த பணத்திலும் குறைவுதான். 512 கோடி ரூபாய் அதிலே குறைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புள்ளிவிவரத்தில் துளியும் தவறு இல்லை என்பதை நான் அவைக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதியமைச்சர் அவர்கள் நிறைவுக் கட்டத்திற்கு வந்துவிடுவது நல்லது என்று கருதுகிறேன். கல்வி மானியம் இருக்கிறது.

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** சரி, முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 29-7-1998-லே நான் ஏற்கெனவே சொன்னேன். Empowered Technical Committee ஒன்று இருக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சொன்னார்கள். ஆனால்

Empowered Technical Committee-யைப் போடுவதற்கு அன்று மைய அரசு மறுத்துவிட்டது. மைய அமைச்சரவையிலே இடம் பெற்றிருந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அமைச்சர்களையும் கூட மைய அரசு கலக்கவில்லை. அதற்கு மாறாக, மைய அமைச்சரவையிலே இருந்த அமைச்சர் திரு. ஜார்ஜ் பெர்னான்டெஸ் அவர்கள் தமிழகத்திற்கு வந்து, தி.மு.க.வினுடைய தலைவர் திரு. கருணாநிதியைச் சந்தித்து (குறுக்கீடு) இல்லை, நான் சொல்லி முடித்துவிடுகிறேன். தயவுசெய்து allow me to speak. அன்றையதினம் மாண்புமிகு திரு. ஜார்ஜ் பெர்னாண்டெஸ் அவர்கள் தமிழகத்திற்கு வருகிறார். தமிழகத்தினுடைய முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்களைச் சந்திக்கிறார். அதிகாரமற்ற ஓர் ஆணையம்; அதிகாரமற்ற ஓர் ஆணையத்தை அமைப்பதற்குச் சம்மதம் தருகிறார். புரட்சித் தலைவி சொல்கிறார். Empowered Technical Committee-தான் இருக்க வேண்டுமென்று சொல்கிறார். அப்போதுதான், தண்ணீர் முறையாக வரும். வாராவாரம் வரக்கூடிய தண்ணீர் வரும். அந்த 205 டி.எம்.சி. தண்ணீரும் வாராவாரம் வர வேண்டும். அது இல்லாமல் மழை பெய்கிற நேரத்தில் ஒட்டுமொத்தமாக 300 டி.எம்.சி. தண்ணீர் வருகிறது. அப்படி ஒட்டுமொத்தமாக வருகிற தண்ணீரைத் தந்துவிட்டோம் என்று சொல்கிற நிலை போக வேண்டுமென்றால் Empowered Technical Committee வேண்டுமென்று புரட்சித் தலைவி சொன்னார். ஆனால் தி.மு.க.வைப் பொறுத்தவரைக்கும் அதற்கு ஒத்துக்கொள்ளாமல் அதிகாரமற்ற, ஒரு பல்லில்லாத புலியாக, பல்லில்லாத toothless wonder என்று சொல்லக்கூடிய, பல்லில்லாத அதிசயமாக, எந்தவித அதிகாரமும் இல்லாத ஓர் ஆணையத்தை மைய அரசு நியமித்தது. திரு. கருணாநிதி அவர்கள் சம்மதத்தைப் பெற்றுத் தந்துவிட்டார்கள். அப்படி பல் இல்லாத ஓர் அதிசயத்தை உருவாக்கி, அப்படிப்பட்ட ஓர் ஆணையத்தை அமைத்து தண்ணீரைப் பெற்றீர்களா? 205 டி.எம்.சி. வந்ததா? ஒரு வார மேனும் கடந்த 3 ஆண்டு காலத்தில் கர்நாடக அரசு நமக்கு தண்ணீரை, வாராவாரம் வர வேண்டிய தண்ணீரைத் தந்துள்ளார்களா? குறுவைக்கு தண்ணீர் தந்தார்களா? சம்பாவிற்கு தந்தார்களா? மழை பெய்த காலத்தில் அதிகப்படியான மழைத் தண்ணீரைத் தேக்கி வைக்க கர்நாடக மாநிலத்திலே இடம் இல்லாத காரணத்தால் உபரி தண்ணீரை காவிரியில் விட்டார்கள். அந்த உபரி தண்ணீர் 205 டி.எம்.சி.க்கு மேல் வந்தது. தண்ணீரைத் தந்துவிட்டோம் என்று கைவிரித்து விட்டார்கள். இந்த நிலையில்தான் 1971-லே உச்ச நீதிமன்றத்திலே மனு தாக்கல் செய்து 1972-லே அந்த மனுவைத் திரும்பப்பெற்று பேச்சுவார்த்தை மூலம் முடிக்கலாம் என்று திரு. கருணாநிதி சம்மதித்தார். அன்றிலிருந்து இன்று வரை இந்த 30 ஆண்டு காலமாக



திரு. கருணாநிதி எண்ணிய அந்தப் பேச்சுவார்த்தையிலே தமிழகத்திற்கு எதைச் சாதித்தார்? 205 டி.எம்.சி. தண்ணீரும் மழைக் காலத்திலே வருகிறது. கடலுக்குப் போய்விடுகிறது. விவசாயிகளுக்குப் பலன் இல்லை. இது ஒரு மாபெரும் துரோகம் அல்லவா? அந்த வழக்கைத் திரும்பப் பெறாமல் இருந்திருந்தால் தமிழகத்தின் நலன் காலத்தே பாதுகாக்கப்பட்டிருக்கும் அல்லவா? புரட்சித் தலைவர் 1986-லே உச்சநீதிமன்றத்திலே போட்ட வழக்கின் விளைவாகத்தானே தற்போது Tribunal அமைக்கப்பட்டது. என்ன பங்கை திரு. கருணாநிதி இதில் ஆற்றியிருக்கிறார்? இதைக் கேட்கிறபோதுதான் திரு. கருணாநிதிக்கு கோபம் வருகிறது. கருணாநிதிக்கு கோபம் வந்து எதை எதையோ பேசுகிறார். எதை எதையோ எழுதுகிறார். உண்மையிலேயே திரு. கருணாநிதி அவர்களுக்கு தமிழக மக்களின்மீது காவிரி தண்ணீர் பிரச்சினையில் அக்கறை இருக்குமேயானால் மைய அரசிலே அவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்? மைய அரசை விட்டு நாங்கள் வெளியேறிவிடுவோம் என்று அச்சுறுத்தியிருக்க வேண்டும். 512 கோடி ரூபாய் நிதியைக் குறைத்தபோது மைய அரசிலிருந்து வெளியேறிவிடுவோம். நிதியைக் குறைக்காதீர்கள் என்று சொல்லியிருக்க வேண்டும். வரிப் பங்கீட்டிலே 2946 கோடி குறைத்து அதிலே 590 கோடி சராசரியாக ஆண்டுக்குக் குறைத்தார்களே, அப்படி குறைத்தபோது. இப்படிக் குறைத்தால் நாங்கள் மத்திய அரசிலேயிருந்து விலகி விடுவோம் என்று மத்திய அரசை அவர்கள் எச்சரித்திருக்க வேண்டும். மிரட்டியிருக்க வேண்டும். அப்படிப்பட்ட எந்த ஒரு நடவடிக்கையிலும் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபடாமல் தொடர்ந்து பதவியிலே இருப்பதற்குக் காரணம் என்ன? அரசுக்கு வர வேண்டிய நிதியைப் பெற்றுத் தரவில்லை Grant மூலமாக வரக்கூடிய அதிக நிதியைப் பெற்றுத் தரவில்லை. தமிழகத்திலே 12.5% மக்கள் வேலையில்லை என்ற நிலையிலே நமக்கு வரிப் பகிர்விலே அந்த விதி முறையிலே விதிமுறையை மாற்றி அதிகப் பணம் தர வேண்டுமென்ற கோரிக்கையையும் நீங்கள் வைக்கவில்லை. தொடர்ந்து மத்திய அரசிலே இருப்பதற்குக் காரணம் ஒருவேளை இந்த சிமெண்ட் மூலமாக ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் லாபம் வருகின்ற காரணத்தினால் அது வருகிற வரைக்கும் தமிழகத்தைப் புறக்கணித்தாலும் பரவாயில்லை. பதவி சுகம் மட்டுமே வேண்டுமென்ற நோக்கோடு திரு. கருணாநிதி பதவியிலே ஒட்டிக்கொண்டு இருக்கிறாரா டெல்லியை அச்சுறுத்த மறுக்கிறாரா? பதவி விலக முன்வராமல் இருக்கிறாரா என்பதனை வினாவாக நான் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இப்பொழுது அவையில் இல்லை. இதே கருத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நேற்றும் தெரிவித்தார். இதே கருத்தை இன்றும் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். அதனால் சில கருத்துகளை நான் சொல்ல வேண்டிய ஓர் அவசியம் ஏற்பட்டிருக்கிறது. நேற்றுகூட மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினரைப் பார்த்துக் கேட்டார். ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அவர்கள் அமைச்சரவையில் இடம் பெறாமலேயே, வெளியிலிருந்து ஆதரவு கொடுத்துக்கொண்டு அச்சுறுத்துகிறார். ஆந்திர மாநிலத்திற்கு வேண்டியதைக் கேட்டுப் பெறுகிறார். அப்படி நீங்கள் ஏன் செய்ய முடியாதா என்று கேட்டார். திரு. சந்திரபாபு நாயுடு அவர்களை எப்படி திராவிட முன்னேற்றக் கழகத்தினரோடு ஒப்பிடமுடியும்? அவர்கள் இருக்கின்ற நிலைமையே வேறு. இவர்கள் இருக்கின்ற நிலைமையே வேறு. (மேசையைத் தட்டும் ஒலி) இன்று தி.மு.கழகத்தின் நிலைமை ஊசல் ஆட்டத்தில் இருக்கிறது. அதனால்தான் இங்கே நட்பு, மத்தியிலே உறவு என்று ஏதோ ஓர் இழையில் அவர்கள் தொங்கிக்கொண்டு இருக்கிறார்கள். மீண்டும் மீண்டும் மாண்புமிகு நிதி அமைச்சர் ஒரு கருத்தைச் சொன்னார். மத்திய அமைச்சரவையிலே நாங்கள் இடம் பெறமாட்டோம்; வெளியேறுவோம் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஏன் மத்திய அரசை அச்சுறுத்தக் கூடாது?' அச்சுறுத்தல் என்றால், இவர்கள் வெளியேறுகிறோம் என்று சொன்னால் மத்திய அரசு பயப்படாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பெரிய கும்பிடு போட்டு, போய் வாருங்கள் சாமி, நல்லதாகி விட்டது (மேசையைத் தட்டும் ஒலி) என்று மத்திய அரசு சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளும். மத்திய அரசுக்கு ஒரு தர்மசங்கடம் இல்லாமல் போய்விடும். இப்போது நீங்கள் வேண்டாம், வெளியேறுங்கள் என்று எப்படிச் சொல்வது என்று தெரியாமல் மத்திய அரசு திணறிக் கொண்டிருக்கிறது. ஆகவே அவர்களாக வெளியேறுகிறோம் என்று சொன்னால், நிச்சயமாக அவர்கள் பயப்படமாட்டார்கள். நினைக்கின்ற ஒரு விளைவு ஏற்படாது, தாராளமாகப் போய் வாருங்கள் என்று ஒரு பெரிய கும்பிடு போட்டு அனுப்பிவைப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 1-10

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்த வரி விதிப்பைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே சிலவற்றை மட்டும் நான் தற்போது அவைக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

Sales Tax arrears-ஐப் பொறுத்தவரைக்கும், 6000 கோடி ரூபாய்க்கு மேல் Sales Tax arrears இருக்கிறது. அதை ஏன் வசூல் செய்யவில்லை என்று கேட்டார்கள். அதுகுறித்த ஒரு விளக்கத்தை நான் சொல்ல விரும்புகிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரைக்கும்- தி.மு.க. ஆட்சிக் காலத்திலே அதிகமான வரி வசூலிக்கப்பட்டதாகவும், விற்பனை வரி நமது ஆட்சிக் காலத்திலே, எங்களது ஆட்சிக் காலத்திலே வரி வசூல் குறையும் என்ற ஒரு தவறான தகவலை தி.மு.க. தலைவர் அவர்கள் வழக்கம்போல அவருடைய ஏட்டிலே எழுதியிருக்கிறார்கள்.

2001-2002 ஆம் ஆண்டு (up to February) வாக்கிலே ஒட்டுமொத்தமாக வரி வசூலைப் பொறுத்தவரைக்கும், 8038 கோடி ரூபாய் வசூலாகி உள்ளது. 2000-2001-லே, தி.மு.க. ஆட்சிக் காலத்திலே வெறுமனே 7865 கோடி ரூபாய்தான் வசூலாகி உள்ளது. அதைவிட ஒரு 173 கோடி ரூபாய் அதிகப்படியான வரி வசூலை இந்த ஆட்சிக் காலத்திலே நாம் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை அவைக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, upto January 2001, during the DMK period, 7,133.49 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் upto January 2002 நடப்பாண்டிலே, 7293.91 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டிருக்கிறது. அதிகப்படியாக 160.42 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டிருக்கிறது. ஒட்டுமொத்தமான வசூல், Excise Duties, Stamp Duty எல்லாம் கணக்கெடுத்துப் பார்த்தால், தி.மு.க. ஆட்சிக் காலத்திலே 10215 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டது. ஆனால் ஜனவரி 2002 வரைக்கும், தற்போதைய ஆட்சியிலே 10860 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, 645 கோடி ரூபாய் அதிகமாக வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதனை நான் அவைக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது, அரிசியைப் பற்றிச் சொன்னார்கள். அரிசிக்கு வரியா என்று சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே அதை விளக்கியிருக்கிறார்கள். P.D.S., பொது விநியோக முறையிலே இருக்கின்ற அரிசிக்கு கட்டாயம் வரி விதிக்கப்படாது என்ற உத்தரவாதத்தை புரட்சித் தலைவி அவர்கள் தந்திருக்கிறார்கள். மற்ற எல்லாவிதத்திலும்கூட Turnover Tax or Surcharge என்று சொல்லக்கூடிய வரி முறைகள் அரிசி, பருப்பு, கோதுமை போன்ற பொருட்களுக்கு விதிக்கப்படமாட்டாது என்பதனையும் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதே நேரத்திலே அரிசிக்கு,—பிற பயன்பாட்டிற்குத் தரப்படுகிற அரிசியில்கூட, பொதுமக்களுக்கு அந்தச் சுமை சென்றடையாத அளவிற்கு மில்கள்மீது அந்த அரவை ஆலைகள்மீது மட்டும் வரி விதிக்கப்பட்டு, அந்த வரி விதிப்பும்கூட சாதாரண மக்களை, பாமர மக்களை பாதிக்காத வகையில் அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற உத்தரவாதத்தை நான் அவைக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-15

அதைப்போலவே, இன்னும்கூட ஒன்றைச் சொல்கிறேன். எண்ணெய்க்கு வரி, பருப்புக்கு வரி என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். கடந்த காலத்திலே நடந்த ஒரு நிகழ்வைக்கூட இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1-3-1991-லே, எண்ணெய்க்கு ஒரு exemption போட்டு ஒரு உத்தரவைப் போட்டார்கள். அதிலே 100 கோடிக்கு மேலே இருப்பவர்களுக்கு sales tax 4 சதவிகிதம் என்றும், அந்த 100 கோடிக்குக் கீழே இருப்பவர்களுக்கு வரி இல்லையென்றும் ஓர் ஆணையிட்டார்கள். ஆனால், 2-6-2000-லே மீண்டும் அதற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்து retrospective effect-ஆக 1-3-1999-லே இருந்து அவர்களுக்கு வரிவிலக்கு என்றும், அந்த exemption limit 100 கோடியிலிருந்து 300 கோடி வரை exemption என்றும் ஓர் ஆணையிட்டார்கள். இப்படி அவர்கள் அந்தச் சலுகையை அளித்ததன் காரணமாக, இரண்டு மூன்று எண்ணெய் வியாபாரிகளுக்கு அதிலே பலன் கிடைத்தது. ஏதோ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே வரி போடப்படவில்லை என்பதல்ல; போடப்பட்டது. 300 கோடி ரூபாய்க்கு மேல் என்று ஒருமுறை கொண்டுவந்து, 100 கோடி ரூபாய்க்கு மேல் எனக் கொண்டுவந்து, அந்த எண்ணெயிலேயிருந்த, சிலருக்கு சில சலுகைகளை அளிப்பதற்காக அது கொண்டுவரப்பட்டதை நாங்கள் தற்போது கண்டுபிடித்திருக்கிறோம். தற்போது இப்படிப்பட்ட வரி விதிப்பை நாம் மேற்கொள்வதற்குக் காரணம், தவிர்க்க முடியாத அளவிற்கு தற்போது ஏற்பட்டிருக்கின்ற நிதிநிலை பற்றாக்குறைதான் இந்த வரி விதிப்பைப் பொறுத்தவரைக்கும் ஒரு பெரும் சுமையாக மக்களுக்கு இல்லாத அளவில்,



ஏழைகளைப் பாதிக்காத அளவில் தற்போது போடப்பட்டிருக்கிறது. உணவு தானியங்களுக்கு பல மாநிங்களில் வரி விதிப்பு ஏற்கெனவே இருக்கிறது; நடைமுறையில் இருந்துவருகிறது. நாம் போட்டிருப்பது இரண்டு சதவிகித வரிதான். மக்களைப் பாதிக்காத அளவிற்கு இதை நடைமுறைப்படுத்த அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே நிலுவையில் இருக்கின்ற அந்த 6000 கோடி ரூபாய் என்று சொல்லப்பட்ட வரியைப் பொறுத்தவரைக்கும் தக்க நடவடிக்கைகள் எடுத்து, அதிலே பல கட்டங்களிலே நிலுவையிலே இருக்கின்ற அந்த வராத பணத்தை, நீதிமன்றங்களில்தான் பெரும்பான்மையான பணம் தற்போது நிலுவையிலே இருக்கிறது. கிட்டத்தட்ட 5066 கோடி ரூபாய் அளவிற்கு அப்படி நிலுவையிலே இருக்கிறது. அந்த நிலுவையிலே, நீதிமன்றங்களில் இருக்கின்ற பல்வேறு கட்டங்கள், அரசு தொடர்புடைய அலுவலகங்கள், அதாவது, தீர்ப்பாயங்கள், நீதிமன்றங்கள் ஆகிய மட்டத்திலே நிலுவையிலே இருக்கின்ற அந்த வழக்குகளைத் துரிதப்படுத்தியும், சமாதானத் திட்டம் ஒன்றை நடைமுறைக்குக் கொண்டுவந்தும், அந்த வரிகளை விரைவிலே பெறுவதற்கும், கூடிய அளவிற்கு பெறுவதற்கும் அரசு தக்க நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏற்கெனவே அதற்கான குழுக்களை அமைத்திருக்கிறது. அதன் மூலம் தக்க நடவடிக்கைகளை எடுத்து அரசினுடைய வருவாயைப் பெருக்கும் என்பதை எடுத்துச் சொல்லி, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஆக்கபூர்வமான திட்டங்களை, ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சிக்காக நடைமுறைக்குக் கொண்டுவர பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. எங்களது ஒரே நோக்கம் வேலைவாய்ப்பைப் பெருக்க வேண்டும். விவசாயத் துறையிலே வருமானம் கிடைக்கக்கூடிய அளவிற்கு வருமானமுள்ள பல பணப் பயிர்கள்; அதேநேரம் வேலைவாய்ப்பு, அதற்கு ஆதாரமான நீராதாரத்தைப் பெருக்குவது, அதற்கான உதவித்தொகையை உலக நாடுகள் மூலமாகப் பணத்தைப் பெறுவது போன்ற முறைகளை மேற்கொண்டு, கிராமப்புற பொருளாதாரத்தைப் பெருக்குவதற்காக, டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் கமிட்டி மூலமாக சில முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். அதையும் அவை ஏற்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் பேசுகிறபோது, ஒரு குறைபாட்டையும் சுட்டிக்காட்டினார்கள், அச்சுப்பிழை, இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கின்றபோது, ஓர் இடத்திலே இருக்கின்ற ஒரு தொகை, மற்றொரு இடத்திலே அப்படியே இருந்தபோதிலும்கூட, மாற்றப்பட்டிருக்கிறது என்பதனை எடுத்துச்

சொன்னார்கள். அவருக்கு நான் நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் குறையைக் கண்டறிந்தோம். அது திருத்திக்கொள்ளப்படும் என்பதனையும் அவைக்கு நான் தெரிவித்து (குறுக்கீடு) அது இரண்டு மூன்று இடத்திலே, மூன்று இடத்திலே, அதுதான், எந்தெந்த இடங்களில் அந்த அச்சுப்பிழை இருக்கிறதோ அந்த அச்சுப் பிழைகள் திருத்தப்படும் என்பதனையும் எடுத்துச் சொல்லி, அவை இந்த நிதிநிலை அறிக்கையை ஏற்க வேண்டும் என வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு, (குறுக்கீடுகள்) கல்வி மானியத்தை 1-30 மணிக்குள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இதிலே ஒரு சின்ன clarification. இதிலே மட்டும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேளுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அவர் குறிப்பிட்டதைப்பற்றி நான் விளக்கம் கேட்க விரும்பவில்லை; கேட்கப் போவதும் இல்லை. அவர் பதிலே சொல்லாமல் இருந்தால்கூட நான் கேட்டிருக்க மாட்டேன். அதை விட்டுவிடுகிறேன் நான். ஆனால் நேற்றையதினம் அவர் பேசும்போதும், இன்று தொடர்ந்து பேசும்போதும் அதுபற்றி மீண்டும் மீண்டும் சொன்னது, மத்திய வரிப் பகிர்வில் நமக்கு மிகவும் குறைவாகக் கொடுக்கப்பட்டிருப்பதாக நேற்றையதினம் சொன்னார்கள். நானும் அதை ஏற்றுக்கொள்கிறேன்; தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால் அவர் கொடுத்த விவரம், நேற்றையதினம், 2092 கோடி ரூபாய் என்று சொன்னார். அது, மத்திய வரிகளில் பங்கு என்று பார்த்தால், 3199 கோடி ரூபாய் வருகிறது. Share of Central Tax 3199 கோடி ரூபாய் வருகிறது. Grants-in-Aid from Government of India மத்திய அரசிடமிருந்து உதவி மானியங்கள் 1715 கோடி ரூபாய் வருகிறது. ஆக, இரண்டிலுமே 2000 கோடி சம்பந்தப்பட்ட பிரச்சினையே வரவில்லை. இருந்தாலும், நம்முடைய மாநிலத்திற்கு துரோகம் இழைக்கப்படுவதை, மோசம் செய்யப்படுவதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். அதனால் நான் தங்களிடத்திலேயிருந்து தெரிந்து கொள்ள விரும்புவது, நம்முடைய மாநிலத்திலிருந்து மத்திய அரசுக்கு வருமான வரியாக, கலால் வரியாக, சுங்கக் கட்டணமாக, மத்திய விற்பனை வரியாக எவ்வளவு செல்கிறது? அதிலே நமக்கு எவ்வளவு பங்கு வருகிறது?



பிற்பகல் 1-20

அதேபோல நம்மைவிட அதிகமாக பங்களிப்பைப் பெறுகிறார்கள் என்று சொல்கிறீர்களே, பீகார், மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம், ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களிலேயிருந்து, இதே வரியிலே அவர்களின் பங்கு எவ்வளவு செல்கிறது? அதிலே எவ்வளவு பங்கு வருகிறது என்பதை அவர் தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், தவறான பொருள் வந்துவிடக்கூடாது. ஒருவேளை, பகிர்வில் 512 கோடி ரூபாய் போய்விட்டது (மணியடிக்கப்பெற்றது) மொத்தம் 3000 கோடி ரூபாய் போய்விட்டது. என்பதை நானே ஏற்றுக் கொள்கிறேன். அதனால் அவர் அதை தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், இந்த நிதியொதுக்கச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படக்கூடிய நேரத்திலே, இங்கே எஞ்சிய கருத்துகள், திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கேட்ட விளக்கங்களைச் சொல்லலாம். 1-30 மணிக்குள்ளே கல்வி மானியம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். ஆகவே அதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள்.

## 1. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) மானியக் கோரிக்கைகள், 2002-2003, அவையில் முன் மொழிதல் குறித்து (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002-2003 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of clause (3) of Article 203 of the Constitution of India. I, P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly, of the demands for grants for the financial year 2002-2003."

[2002 ஏப்ரல் 9

# 4. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்.

| | | |
|---|---|---|
| (அ) கோரிக்கை எண் 19 | - | உயர் கல்வித் துறை |
| (ஆ) கோரிக்கை எண் 41 | - | பள்ளிக் கல்வித் துறை |
| (இ) கோரிக்கை எண் 47 | - | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை |
| (ஈ) கோரிக்கை எண் 44 | - | தமிழ் வளர்ச்சி : பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி - பண்பாடு. |
| (உ) கோரிக்கை எண் 37 | - | பொதுத் துறை |

## (அ) கோரிக்கை எண்.19 — உயர் கல்வித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002-2003 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 19-உயர் கல்வித் துறை. மாண்புமிகு கல்வி அமைச்சர் (குறுக்கீடுகள்) Move பண்ண வேண்டும். 1-30 மணிக்குள்ளே move பண்ண வேண்டும். அதற்காகத்தான். இதை முடித்துவிட்டு பிறகு கேளுங்கள். (குறுக்கீடுகள்) நிதியொதுக்கச் சட்டமுன்வடிவு வருகின்றபோது கேளுங்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ரூ.7,92,76,54,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.58,84,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1203, திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 671, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு துவக்குவதாக அறிவித்துள்ள திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தை வேலூரில், சென்னை பல்கலைக் கழக விரிவாக்க மையம் நடைபெறும் இடத்தில் இந்த ஆண்டே தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."



2002 ஏப்ரல் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண்.449, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1551, திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதிதிராவிட பழங்குடியின மாணவியரைப் போன்று பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட மற்றும் நலிவுற்ற ஏழை மாணவியருக்கும் உயர் கல்வி இலவசமாக அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2221, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டத்தில் அரசு கலைக் கல்லூரி ஒன்று துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 971, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.7,92,76,54,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

வெட்டுத் தீர்மானம் எண் 3688, திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மயிலாடுதுறை, தருமபுரம், ஞானாம்பிகை அரசினர் மகளிர் கல்லூரியில் பி.பி.ஏ., எம்.சி.ஏ., புதிய வகுப்புகள் தொடங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 151, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 188, திரு. எச்.எம். ராஜீ.

**திரு. எச்.எம். ராஜீ:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 861, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1341, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1580, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1768, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1953, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2249, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2514, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2941, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3442, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3600, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 830, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1165, திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1881, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2745, திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1013, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1051, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1795, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3066, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 379, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 434, செல்வி. க. பாலபாரதி.

**செல்வி. க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1111, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1292, திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1415, திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1515, திரு. அன்பில் பெரியசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1526, திரு. கே.என். சேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2364, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாபநாசம் தொகுதியில் புதிதாக அரசு கலைக் கல்லூரி ஒன்று துவங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2391, திருமதி காசாம்புபூமாலை.

**திருமதி காசாம்புபூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் தொகுதியில் புதிய அரசினர் கலைக் கல்லூரி ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2414, திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2451, திரு. ஜெ. அன்பழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3700, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பேராவூரணி தொகுதி, பேராவூரணியில் அரசினர் கலைக் கல்லூரி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3217, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், சங்கராபுரம் தொகுதியில் புதிய அரசினர் கலைக் கல்லூரி ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3513, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு பொறியியல் கல்லூரி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3751, திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உயர் கல்வி நிறுவனங்களுக்கு நிதி உதவித் தொகையை நிறுத்தாமல் தொடர்ந்து வழங்க வேண்டியதன் அவசியம் பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2423, திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'செய்யாறு அரசு ஆடவர் கல்லூரிக்கு மேலும் ஆசிரியர்களை நியமனம் செய்து கட்டட வசதிகள் செய்து தர வேண்டியதன்

அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1186, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உயர் கல்வித் துறையில் கல்லூரிகளில் காலியாகவுள்ள விரிவுரையாளர்கள் பணியிடங்களை நிரப்பும்பொழுது இனச் சுழற்சி முறை பின்பற்ற வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2179, திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தனியார் கல்வி நிலையங்களில் உயர் கல்வி படிப்புகளில் இட ஒதுக்கீடு முறை கடைப்பிடிக்க வேண்டியது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,92,76,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 41 - பள்ளிக் கல்வித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 41 - பள்ளிக் கல்வித் துறை, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.5,27,62,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1209, திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 637, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்திலுள்ள சின்னப்பள்ளிக்குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 159, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1545, திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அனைத்து மாநகராட்சி மற்றும் அரசு உயர்நிலைப பள்ளிகளிலும் State Board- ஆங்கில மீடியம் முறை அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2221, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவட்டாறு சட்டமன்றத் தொகுதியில் பாலமோர், ஏளவு மலைப்பகுதியில் ஓர் ஆரம்பப் பள்ளி அமைத்து அப்பள்ளியில் குழந்தைகளுக்கு படிப்பு வசதி ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 974, திரு என். நன்மாறன்.

**திரு என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2647, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 144, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிங்காநல்லூர் தொகுதி, வரதராஜபுரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 195, திரு. எச்.எம். ராஜீ.

**திரு. எச்.எம். ராஜீ:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 891, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1377, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1810, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1753, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1974, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3123, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2564, திரு. மே.ப. காமராஜ்.



**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **'தாரமங்கலம் தொகுதி தொளசம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து'** விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2955, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3472, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3647, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 853, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1166, திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1862, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2199, திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மானாமதுரை தொகுதி, திருபுவனம் ஒன்றியத்தில் ஈச்சனேரி கிராமத்தில் நடப்பாண்டிலேயே ஓர் ஆரம்பப் பள்ளி ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1035, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1055, திரு. வை. சிவபுண்ணியம்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1787, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3040, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பள்ளி மாணவர்கட்கு ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்கள் கணித ஆசிரியராகவோ விஞ்ஞான ஆசிரியராகவோ இருத்தலாகாது என்பது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1457, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நெல்லை மாவட்டம், ராதாபுரம் வட்டம், அடங்கார்குளம் ஊராட்சி, கிளாக்குளம் கிராமத்தில் புதிதாக ஆரம்பப் பள்ளி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2146, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1141, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி நகரத்தில் அமைந்துள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துவது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1294, திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1107, திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1517, திரு. அன்பில் பெரியசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1527, திரு. கே.என். சேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2370, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாபநாசம் தொகுதிக்குட்பட்ட அய்யம்பேட்டை, பாபநாசம், சுவாமிமலை ஆகிய ஊர்களிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு, கூடுதல் கட்டடங்கள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2398, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2408, திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 418, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வால்பாறை சட்டமன்றத் தொகுதி, கோட்டூர் பேரூராட்சியில் உள்ள ஆழியார் நகர் இடைநிலைப் பள்ளியையும், சோமந்துறை ஊராட்சி இடைநிலைப் பள்ளியையும், உயர்நிலைப் பள்ளி ஆக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3697, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3210, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நாட்ராம்பள்ளி தொகுதிக்கு உட்பட்ட கந்திலி ஒன்றியத்தில் உள்ள கும்முடிக்கான்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்பப் பள்ளி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3522, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டம் ஏழுதேசம் வருவாய் கிராமத்தில், ஏழுதேசம் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்திற்குள் நடைபெற்றுவரும் தொடக்கப் பள்ளிக்கு மாணவர்கள் அமர இருக்கைகளை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3747, திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'புதிய உயர்நிலைப் பள்ளிகளை அமைத்தல் மற்றும் ஏற்கெனவே உள்ள பள்ளிகளை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2085, திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1187, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் பல்வேறு பள்ளிகளில் போதிய விளையாட்டு மைதானங்கள் இல்லாததால் பள்ளிகளில் விளையாட்டு மைதானங்கள் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2185, திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமி—கத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்துவது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 445, செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திண்டுக்கல் ஏ. வெள்ளோடு பஞ்சாயத்தில் உள்ள நரசிங்கபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 919, திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1104, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் உள்ள பாரதியார் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1123, திரு. எஸ். தாமோதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4493, திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1933, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அறந்தாங்கி சட்டமன்ற தொகுதியில் அமைந்துள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறைகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,60,65,13,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,27,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2059, திரு. இரா. திருமாவளவன், இருக்கையில் இல்லை.

பிற்பகல் 1-25

## (இ) கோரிக்கை எண் 47 — இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 47 - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.26,13,92,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 621, திரு சி. ஞானசேகரன்.

**திரு சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் சத்துவாச்சாரியில் மலையடிவாரத்தில் உள்ள அரசு புறம்போக்கு நிலம் 6 ஏக்கரில் நவீன ஸ்டேடியம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 469, திரு ஜி.கே. மணி.

**திரு ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1541, திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் விளையாட்டு வீரர்களுக்கு அரசுத் துறையில் பணிவாய்ப்புகள் அளிக்க வேண்டியதன் அவசியம் பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2225, திரு ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவட்டாறு சட்டப் பேரவைத் தொகுதி குலசேகரத்தில் ஒரு விளையாட்டு மைதானத்தை அமைக்க வேண்டியதன் அவசியம் பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 992, திரு என். நன்மாறன்.

**திரு என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2632, திரு டி. சுதர்சனம்.

**திரு டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் தொகுதியில் பரிசிலனையில் உள்ள காக்களூரில் மாவட்ட அளவிலான விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 141, திரு கே.சி. கருணாகரன்.

**திரு கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோவை, சிங்காநல்லூர் தொகுதி, பீளமேட்டுப் பகுதியில் விளையாட்டு அரங்கம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 199, திரு எச்.எம். ராஜு.

**திரு எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 924, திரு ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1371, திரு தி. வேல் முருகன்.

**திரு தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1609*, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1751*, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1980*, திரு மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2299*, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2602*, திரு மே.ப. காமராஜ்.

**திரு மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2915*, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3332*, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3660*, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 859, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1167, திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 185, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1042, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1060, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1780, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3031, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோவையில் உள்ள தனியார் உள்விளையாட்டு அரங்குகளில் தேசிய அளவிலான இறகுப் பந்துப் போட்டி போன்றவற்றை நடத்த அரசே பரிந்துரை செய்ய வேண்டியது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1436, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1135, திரு ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாலுகா தலைநகரங்களில் மற்றும் சிற்றூராட்சிகளில் விளையாட்டு மைதானம் அமைத்து அதற்குரிய உடற்பயிற்சிக் கருவிகள்

வழங்குவதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1296, திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1401, திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1522, திரு. அன்பில் பெரியசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1529, திரு. கே.என். சேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2385, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3711, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3291, திரு. எஸ். நடராஜன்.



**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் உள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் இளைஞர் நலன் கருதி ஊராட்சி அலுவலகக் கட்டடத்தை ஒட்டி உடற்பயிற்சி மையம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3517, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டம் மற்றும் அட்டைக்குளம் பகுதிகளில் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2189, திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழக மாவட்ட தலைநகரங்களில் தரமான விளையாட்டுத் திடல் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1122, திரு. எஸ். தாமோதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1934, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் உள்ள இளைஞர்களின் விளையாட்டுத் திறமையை வளர்க்கும் வகையில் புதுக்கோட்டையில் விளையாட்டுப் பயிற்சிக் கல்லூரி தொடங்குவது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4494, திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3686, திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மயிலாடுதுறை ராஜன்தோட்டத்தை மேம்படுத்தி அங்கு ஒரு கிரிக்கெட் ஸ்டேடியம் அமைக்க வேண்டியது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1045, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதியில் உள்ள இளைஞர் விளையாட்டு மன்றங்களுக்கு விளையாட்டுக் கருவிகளை இலவசமாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**(ஈ) கோரிக்கை எண் 44 -தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 44, தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.



**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.41,64,26,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வ—ங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள்.

வெட்டுத் தீர்மானம் எண் 1220, திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 629, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு போதிய நிதி வழங்கி தமிழ் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,64,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 479, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,64,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1543, திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அகவை முதிர்ந்த தமி—றிஞர்கள் சிலருக்கு நிறுத்தப்பட்ட மாதாந்திர உதவித் தொகையினை நிறுத்தப்பட்ட மாதம் முதல் நிலுவைத் தொகையோடு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,64,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 958, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,64,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2664, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,64,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 153, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,64,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 197, திரு. எச்.எம். ராஜு.



**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,64,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 52, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,64,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1371, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,64,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1576, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,64,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1742*, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,64,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1977*, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,64,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3154*, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,64,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2593*, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,64,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2765*, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,64,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3312*, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,64,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *856*, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,64,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1168*, திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,64,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1859*, திரு. க. செல்வன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1038*, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1062*, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகளை ஊக்கப்படுத்த, போதிய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,61,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3035*, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வெங்களத்தூர் சாமிநாத சர்மா அவர்களின் படைப்புகளைப் பாடத் திட்டத்தில் சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,61,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1418*, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,61,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1137*, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் தலைமைச் செயலகம் முதல் கிராமங்களில் உள்ள சிற்றூராட்சி வரை அனைத்துத் துறைகளிலும் தமிழ் மொழியைப் பயன்படுத்த வேண்டும் என்பதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,61,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1313*, திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1400*, திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *3715*, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,61,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3271*, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் கல்வித் துறையில் தமிழ்வழிக் கல்வி கட்டாயமாக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,61,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2427, திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவண்ணாமலை மாவட்டத்தில் செய்யாறு தொகுதியில், தமிழ்நாட்டிலேயே தெருக்கூத்து கலையில் முன்னணி கலைஞர்கள் வாழ்கிறார்கள். தெருக்கூத்து கலை செய்யாறு தொகுதியில் நசுங்கிவிடாமல் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,64,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1188, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்று தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிலையில், தமிழ் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டியதன் அவசியம் பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,64,26,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1121, திரு. எஸ். தாமோதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4491, திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2059, திரு. இரா. திருமாவளவன், இருக்கையில் இல்லை.

## (உ) கோரிக்கை எண் 37 - பொதுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 37 — பொதுத் துறை. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.79,57,41,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2143, திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 652, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அரசு விழாக்களுக்கு தொகுதி எம்.எல்.ஏ.க்களை அழைக்க வேண்டும், அவர்கள் பெயர்களை அழைப்பிதழ்களில் அச்சிட வேண்டும் என்று அரசாணை இருந்தும் பல்வேறு துறைகள் அரசாணையை உதாசீனப்படுத்துவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1557, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 574, திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 960, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 174, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 192, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 881, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1365, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1837, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1763, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1970, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2269, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2563*, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாரமங்கலம் ஒன்றியத்தில் வசிக்கின்ற இலங்கை அகதிகளுக்கு புதிய குடியிருப்புகள் வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2786*, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க். முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3342*, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3675*, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *849*, திரு. க. சிவராஜ்.

**திரு. க. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1169*, திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1866*, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1031*, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1063*, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3081*, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தேச விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்ட தியாகிகள் அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1471, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1159, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2386, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3701, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2422, திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1198, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2183, திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1341, திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 348, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,57,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை, பள்ளிக் கல்வித் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் பொதுத் துறை ஆகியவை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் இரண்டு மணித்துளிகள் பேசி தொடங்கி வையுங்கள். நாளைக்குத் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சில கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். அதற்கு எங்களுடைய நிலையை விளக்குவதற்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். அதற்கு வாய்ப்பு தர வேண்டுமென்று நான் ஏற்கெனவே கேட்டேன். வாய்ப்பு தருவதாகச் சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு வருகிறபோது உங்களுக்கு வாய்ப்பு தருகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அல்ல, அல்ல. இன்றைக்குச் சொல்ல வேண்டியதை ஒரு மாதம் கழித்துச் சொல்ல வேண்டுமென்றால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஒரு மாதம் கழித்து அல்ல. திரு. லட்சுமணன் ஆரம்பியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** எனக்கு வாய்ப்பளிக்கப்படாததால் நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரியான நேரத்திற்கு வெளியேறுகிறீர்கள்.

---

@ 281 முதல் 494 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II, III, IV, V மற்றும் VI ஆக அச்சிடப்பட்டுள்ளன.



பிற்பகல் 1-30

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின்மீது, என்னுடைய கருத்துகளைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பளித்ததற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (10-4-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

105. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் முதலாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

106. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

107. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற நிதி அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் பதினொன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

108. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

67. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 2000-2001 ஆம் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

திட்டத்தை மேம்படுத்த இப்பல்கலைக்கழகம் முனையும். தொழிற் கல்வி நிறுவனங்களில் ஆசிரியர் பற்றாக்குறையினைப் போக்க, தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்கும். தொழில் நிறுவனங்களும், கல்வி நிறுவனங்களும் ஒன்றுக்கொன்று பயனளிக்கும் வகையில் கலந்து செயலாற்ற ஊக்கம் அளிக்கப்படும். மின்னியல் உத்திகளைக் கையாண்டு, இணைக்கப்பட்டு 219 பொறியியற் கல்லூரிகளையும் அண்ணா பல்கலைக்கழகம் திறம்பட நிர்வகிக்கும்.

1.4 தொழில்நுட்பக் கல்வியைப் பொறுத்தவரை, ஒற்றைச் சாளர முறையை இன்னும் மேம்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளது. பொறியியற் கல்லூரி சேர்க்கைக்கான கலந்தாய்வு, கூடுதல் மையங்களில் நடத்துவதோடு, விண்ணப்பங்களை ஆய்வு செய்து நுழைவுச் சீட்டு அளிப்பதற்கு வலைசார் முறையும் (Web enabled system) பின்பற்றப்படுகிறது. தற்போது தொழில் நுட்பப் பயிலகங்களில் சேர்வதற்கான மதிப்பெண்கள் குறைக்கப்பட்டுள்ளதால் கூடுதல் மாணவர்கள் பயில்வதற்கு வாய்ப்பு கிடைக்கிறது. பொறியியற் கல்வி கற்க விரும்பும் தகுதி வாய்ந்த ஏழை மாணவர்க்கு நிதியுதவியினை தனித் தனியாக தகுதியின் அடிப்படையில் ஆய்வு செய்து அரசு அளிக்கிறது.

1.5 சிறப்பு விடுதிகளில் உள்ளவர்கள், உடல் ஊனமுற்றோர், காது கேளாதோர் மற்றும் மொரிஷியஸ் நாட்டைச் சேர்ந்த இந்தியர்கள் ஆகியோருக்கு பொறியியற் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் வேலை வாய்ப்புள்ள படிப்புகளுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது.

1.6 இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் மிகக் கூடுதலான தர மதிப்பீடு பெற்றுள்ள கல்லூரிகள் உள்ளன. தேசிய மதிப்பீடு மற்றும் ஏற்பளிப்புக் குழு (NAAC) மற்றும் தேசிய ஏற்பளிப்புக் குழு (NBA) ஆகியவற்றின் ஒப்புதல் பெற உயர் கல்வி நிறுவனங்களுக்கு அரசு ஊக்கம் அளிக்கிறது. பாடத் திட்டங்களை மேம்படுத்தவும், கல்வி பயிற்றுவித்தல், பயிலுதல் மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றை மேம்படுத்தவும் கல்வி நிறுவனங்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது.

1.7 இளநிலை தட்டச்சுக்கான கல்வித் தகுதி குறைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் மற்றும் பிற பணியாளர்கள் பணிமாற்றத்தில் பின்பற்றப்படும் வெளிப்படையான முறையினை பொதுவாக அனைவரும், குறிப்பாக ஆசிரியர் சமுதாயமும் வரவேற்றுள்ளனர். அரசு அனுமதி பெறாத கட்டடங்களிலும், முறையின்றி வகைப்படுத்திய நிலங்களிலும் சுயநிதிக்





கல்வி நிறுவனங்கள் அமைப்பதைத் தடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

1.8 அண்மைக் காலத்தில், இளநிலை, முதுநிலை பட்டப் படிப்புகளிலும், பொறியியல் மற்றும் நிர்வாகப் படிப்புகளிலும் மகளிர் கூடுதலாக சேர்ந்து வருகின்றனர். ஆதி திராவிட பழங்குடியின மகளிரை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் முதுநிலைப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது.

1.9 உலகம் முழுவதும் கொண்டாடப்படும் மகளிர் தினத்தை முன்னிட்டு, அன்னை தெரசா பல்கலைக்கழகத்துடன் அப்பகுதியிலுள்ள மகளிர் கல்லூரிகளை இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இப்பல்கலைக்கழகத்தின் உள்கட்டுமான வசதிகளை இரண்டாண்டுகளில் ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1.10 வேலூர் மாவட்டத்திலுள்ள மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள பிரிவினரை மேம்படுத்தும் நோக்கத்துடன் தலைசிறந்த புலவரான ''திருவள்ளுவர்'' பெயரால், புதியதாக பல்கலைக்கழகம் உருவாக்கப்படவுள்ளது.

## நிதி ஒதுக்கீடு

"மானியக் கோரிக்கை-19, உயர் கல்வித் துறை" என்ற தலைப்பின்கீழ் மொத்த செலவினத் தொகை ரூ.793.35 கோடி ஆகும். இதில் ரூ.**10.31** கோடி திட்டப் பணிகளுக்கானதாகும். ரூ.783.04 கோடி திட்டத்தில் சேராத செலவினமாகும்.

### நிதி ஒதுக்கீடு, 2002-2003

| கணக்குத் தலைப்பு (1) | திட்டப் பணி (2) | திட்டத்தில் சேராதது (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 2059 பொதுப் பணி பராமரித்தலும் செப்பனிடுதலும் | — | 563.40 | 563.40 |

[ 2002 ஏப்ரல் 9

68. மானியக் கோரிக்கை எண் 19 - உயர் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003 (தமிழ், ஆங்கிலம்)

69. மானியக் கோரிக்கை எண் 19 - 2002-2003 ஆம் ஆண்டிற்கான உயர் கல்வித் துறையின் விரிவான மானியக் கோரிக்கை.

70. உயர் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புக்கு திருத்தங்கள் (தமிழ், ஆங்கிலம்)

71. மானியக் கோரிக்கை எண் 41 - பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 2002-2003 (தமிழ், ஆங்கிலம்).

72. பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புக்கு திருத்தங்கள் (தமிழ்)

73. மானியக் கோரிக்கை எண் 41 - 2002-2003 ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறையின் விரிவான மானியக் கோரிக்கை.

74. மானியக் கோரிக்கை எண் 47 - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கான கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

75. மானியக் கோரிக்கை எண் 47 2002-2003 ஆம் ஆண்டிற்கான இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கான விரிவான மானியக் கோரிக்கை.

76. மானியக் கோரிக்கை எண் 44 - தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி - பண்பாடு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003, (தமிழ் ஆங்கிலம்.)

77. மானியக் கோரிக்கை எண் 44 - 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை தமிழ் வளர்ச்சி-பண்பாடு துறைக்கான விரிவான மானியக் கோரிக்கை.

78. மானியக் கோரிக்கை எண் 37 - பொதுத் துறைக்கான் கொள்கை விளக்கக் குறிப்பு 2002-2003 (தமிழ், ஆங்கிலம்)

79. மானியக் கோரிக்கை எண் 37 - தேர்தல்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிபபு 2002-2003 (தமிழ், ஆங்கிலம்)

80. மானியக் கோரிக்கை எண் 37, 2002-2003 ஆம் ஆண்டிற்கான பொதுத் துறைக்கான விரிவான மானியக் கோரிக்கை.



2002 ஏப்ரல் 9 ]

## இணைப்பு-I

*(278 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### கோரிக்கை எண் 19 — உயர் கல்வித் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003

### 1. கொள்கை விளக்கம்

மக்களின் சமூக, பொருளாதார நிலை நன்கு அமைவது, கல்வியில் சிறந்த, முனைப்புடன் செயலாற்றுகின்ற பணியாளர்களையே பெரிதும் சார்ந்துள்ளது. அவ்வாறான சிறந்த பணியாளர்களை உருவாக்குவதில் உயர் கல்விக் கொள்கை இன்றியமையாப் பங்கு வகிக்கின்றது. தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, பயிலுதல் மற்றும் பயிற்றுவிப்பதற்கான வழிமுறைகளில், சீரிய மாற்றங்களை ஏற்படுத்த இருபத்தியோராம் நூற்றாண்டு மாபெரும் வாய்ப்புகளை அளிக்கின்றது. தற்போது இருக்கின்ற கட்டமைப்பு வசதிகளை ஒன்றுதிரட்டும் அதே வேளையில், கல்வித் தரத்தை உயர்த்துவதிலும் கவனம் செலுத்துதல் உயர் கல்விக் கொள்கையின் முக்கிய அம்சமாகும். கல்வி வாய்ப்பு விகிதத்தைக் கூடுதலாக்கி, மகளிர் மற்றும் நலிந்தோர்க்கு வாய்ப்புகள் கிடைக்கச் செய்வதில் அரசு தனிக் கவனம் செலுத்துகிறது. இந்நாட்டிலேயே தமிழகம்தான் உயர் கல்விக் களத்தில் முதன்மையானதாகத் [illegible] வேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கொண்டுள்ள அவாவிற்கு ஏற்ப, உயர் கல்விக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது.

1.2. கோரிக்கை எண் 19: உயர் கல்வியின்கீழ் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.793.35 கோடிகளாகும். பொறியியற் கல்லூரிகளிலும், தொழில்நுட்பப் பயிலகங்களிலும் கூடுதல் எண்ணிக்கையில் மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் வசதி கொண்ட மாநிலங்களில் தமிழகமும் ஒன்று. பொறியியற் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை சுமார் 60,470 ஆகும். தொழில்நுட்பப் பயிலகங்களில் மாணவர் சேர்க்கை சுமார் 45,337 ஆகும்.

1.3. புதிய கல்வி நிறுவனங்களை உருவாக்குவதைவிட இருக்கின்ற நிறுவனங்களில் உள்ள வசதிகளை ஒன்றுதிரட்டி அவற்றின் தரத்தை உயர்த்துவதே இவ்வரசின் கொள்கையாக உள்ளது. இக் கொள்கையையொட்டி ஒரு தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தை ஓர் இணைப்புவகை பல்கலைக்கழகமாக அரசு மாற்றியமைத்துள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் பொறியியல் கல்வியில் பாடத்

| | (1) | (2) | (3) | (4). |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 2202 | பொதுக் கல்வி | | | |
| 03 | பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும் | 143.03 | 62,839.22 | 62,982.25 |
| 2203 | தொழில்நுட்பக் கல்வி | 199.24 | 14,178.37 | 14,377.61 |
| 2204 | போட்டி விளையாட்டுகளும் இளைஞர் நலப் பணிகளும் | 385.95 | .. | 385.95 |
| 2205 | கலையும் பண்பாடும் | .. | .. | .. |
| 104 | ஆவணக் காப்பகங்கள் | 7.34 | 319.65 | 326.99 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | .. | 24.34 | 24.34 |
| 2251 | தலைமைச் செயலகம் சமூக நலப் பணிகள் | .. | 190.23 | 190.23 |
| 2551 | மலைப் பகுதிகள் | 33.00 | .. | 33.00 |
| 3425 | இதர அறிவியல் ஆராய்ச்சி | 203.70 | .. | 203.70 |
| 3454 | மக்கள்தொகை கணக்கெடுப்பு ஆய்வு மற்றும் புள்ளிவிவரம் | - | 36.28 | 36.28 |
| 110 | விவரச் சுவடியும், புள்ளிவிவரக் குறிப்பேடுகளும் | - | .. | .. |
| 2402 | கல்வி, போட்டி விளையாட்டு, கலை பண்பாடு குறித்த மூலதனச் செலவு | 56.31 | 0.03 | 56.34 |



| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|
| 6202 | கல்வி, போட்டி விளையாட்டு, கலை பண்பாட்டிற்கான கடன்கள் | 2.00 | .. | 2.00 |
| 7615 | பல்வகைக் கடன்கள் | .. | 0.50 | 0.50 |
| | **நிகர மொத்தம்** | **1030.57** | **78,152.02** | **79,182.59** |
| | **திருப்பி வசூலிக்கப்பட்டவை** | **0.22** | **152.58** | **152.80** |
| | **தொகு மொத்தம்** | **1030.79** | **78,304.60** | **79,335.39** |

### 2. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்

மாநில அளவிலான உயர் கல்வித் திட்டங்களை மேம்படுத்துவதற்கும், உயர் கல்விக்கான மாநில மற்றும் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் திட்டங்களை ஒருங்கிணைப்பதற்கு உதவும் வகையில் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம், ஒரு தன்னாட்சி நிறுவனமாக 1992 ஆம் ஆண்டு தமிழக சட்டப் பேரவையில் இயற்றப்பட்ட சட்ட வாயிலாக உருவாக்கப்பட்டது.

2.2. உயர்கல்வியின் அனைத்துத் துறைகளும் முன்னேற ஏதுவாக கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களை தனிச் சிறப்பு மையங்களாக மாற்ற அரசு முன்வந்துள்ளது. இதற்கு கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு மேலும் சில அடிப்படை வசதிகள் இருத்தல் வேண்டும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் உயர் தனிச் சிறப்பு மையங்கள் நிறுவுவதற்கு, தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தால் அமைக்கப்பட்ட உயர் தனிச் சிறப்பு மையங்கள் பற்றிய வல்லுநர் குழுவின் அறிக்கையை அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் வல்லுநர் குழு பரிந்துரைத்த துறைகளை உயர் தனிச் சிறப்பு மையங்களாக படிப்படியாக உருவாக்க அரசு முனைந்துள்ளது.

2.3 தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழக நூலகங்களும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர் சமூகத்தின் வசதிக்காக கணினி மூலம் இணைக்கப்படும். தன்னாட்சி கோரும் கல்லூரிகளை அரசு ஊக்குவிக்கும் மாநிலத்தில் அமைந்துள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களில் நடத்தப்படும் பாடத் திட்டங்களில் ஓர் ஒருமை உருவாக பல்கலைக்கழகங்களுக்கும் தன்னாட்சி கல்லூரிகளுக்கும் ஒரே மாதிரியான பாடத்திட்ட அமைப்பை உருவாக்க அரசு ஊக்குவிக்கும்.

## 3. கல்லூரிக் கல்வி

1965 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இக்கல்லூரிக் கல்வி இயக்ககம் தற்கால வளர்ச்சிக்கேற்ப உயர் கல்வித் துறையில் பல்வேறு முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அரசின் முனைப்பான திட்டங்கள் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ப தமிழகத்தில் உயர் கல்வியின் பங்கு குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. தற்போது 477 கல்லூரிகள் கல்லூரிக் கல்வித் துறையின் கீழ் இயங்கி வருகின்றன.

### தகவல் தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மைக் கல்வி

3.2 வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப 2002-2003 ஆம் கல்வியாண்டில் அரசுக் கல்லூரிகளில் வேலைவாய்ப்புள்ள பல்வேறு பாடப் பிரிவுகளைத் தொடங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசுக் கல்லூரிகளில் படிப்படியாக எம்.சி.ஏ./எம்.பி.ஏ. பட்டமேற்படிப்பு பாடப்பிரிவுகள் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் கல்வியாண்டில் ஆறு அரசு கல்லூரிகளில் எம்.சி.ஏ/எம்.பி.ஏ. பட்ட மேற்படிப்பு பாடப்பிரிவுகள் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### மகளிர் கல்வி

3.3 நவீன இந்தியாவிற்கு மகளிர் உரிய முறையில் பங்களிக்க வேண்டுமெனில் அதற்குத் தேவையான உரிமைகள் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். ஆகவே மகளிர்க்கு உயர் கல்வி அளிப்பது குறித்து, தமிழக அரசு தனி கவனம் செலுத்தி வருகிறது. பட்டமேற்படிப்பு பயிலும் தாழ்த்தப்பட்ட/பழங்குடியின மாணவிகளுக்கு இலவசக் கல்வி அளிக்கும் திட்டம் 2001-2002 ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்டுள்ளது. மேலும் இந்திய ஆட்சிப் பணிக்கு தேர்வு எழுதும் மாணவிகளுக்கு இலவச பயிற்சி அளிக்கும் பொருட்டு சிறப்பு வகுப்புகள் நடத்த, சென்னை மற்றும் மதுரை ஆகிய இரு மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.





3.4 தமிழ்நாட்டிலுள்ள 477 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 120 கல்லூரிகள் பெண்களுக்குரியதாகும். பெண்கள் கல்லூரியே இல்லாத இடங்களில் ஆண்கள் பயிலும் கல்லூரிகளில் முப்பது விழுக்காடு மாணவிகளை சேர்ப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் உயர்கல்வி பயிலும் மாணவிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 64,000 ஆக இருந்தது. தற்பொழுது உயர்கல்வி பயிலும் மாணவிகளின் எண்ணிக்கை 2,20,080 ஆக உயர்ந்துள்ளது. இது தற்பொழுது உயர்கல்வி பயிலும் மாணவிகளின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்துள்ளது என்பதையே காட்டுகிறது.

### கல்லூரிகளுக்குத் தன்னாட்சி வழங்குதல்

3.5 1978-79 ஆம் ஆண்டில் கல்லூரிகளுக்கு நிர்வாக சுதந்திரம் அளிக்கும் கோட்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டது. தமிழகத்தில் அதிகமாக தன்னாட்சி அந்தஸ்து பெற்ற கல்லூரிகள் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. தற்போதைய நிலவரப்படி மொத்தம் 44 கல்லூரிகள் தன்னாட்சி பெற்று இயங்கி வருகின்றன. இந்தியாவிலேயே மிகக் கூடுதலாக தன்னாட்சிக் கல்லூரிகள் தமிழகத்தில்தான் இயங்கி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### ஏழை மாணவிகளுக்கு இலவச படிப்பு

3.6 "பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை இலவச படிப்புத் திட்டம்" மூலம் மாணவிகளுக்கு சாதி, மதம், இனம் வேறுபாடின்றி இலவசமாக கல்வி அளிக்கப்படுகின்றது. இளநிலை பட்ட வகுப்பில் பயிலும் மாணவிகளின் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கு மிகாமலிருந்தால், அம்மாணவிகள் பயிற்றுவிப்புக் கட்டணம் கட்டுவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. தற்போது பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.12,000-த்திலிருந்து ரூ.24,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் அதிக அளவில் மாணவிகள் பயனடையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

### தமிழ் வழி பயிலும் மாணவ/மாணவியர்க்கு ஊக்கத் தொகை

3.7 இத்திட்டத்தின்கீழ் இளங்கலை/இளமறிவியல் பாடங்களை தமிழ் வழியில் பயிலும் அரசு மற்றும் நிதியுதவி பெறும் கல்லூரிகளின் மாணவ/ மாணவியர்க்கு ஆண்டுதோறும் ரூ.400 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகளில் தமிழ் வழி வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த உதவித்

தொகை தமிழ் வழி பாடவகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவ/ மாணவியர்க்கும் அவர்களுடைய இனம், சாதி, மதம் மற்றும் பெற்றோர் ஊதியத்தை கணக்கில் கொள்ளாமல், எவ்வித நிபந்தனையும் இன்றி வழங்கப்படுகிறது.

**மாநில ஆங்கில நிறுவனம்**

3.8 மாநில ஆங்கில நிறுவனத்தை வலிவுள்ளதாக்க இந்நிறுவனத்தை கல்லூரிக் கல்வித் துறையின் நிர்வாகக்கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வர செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம் கற்பிப்பதில் ஆசிரியர்களின் திறமைகளை வளர்க்கவும், அனைத்துப் பாடப் பிரிவுகளிலும் மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தவும், பட்டவகுப்பு மற்றும் முதுகலைப்பட்ட வகுப்புகளைக் கையாளும் ஆசிரியர்களுக்கும், உயர்கல்வி மற்றும் மேல்நிலைக் கல்வி வகுப்பில் ஆங்கிலம் கையாளும் ஆசிரியர்களுக்கும் பயிற்சி வகுப்புகள் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன.

**அரசுக் கல்லூரி ஆசிரியர்கள் நியமனம்**

3.9 ஆசிரியர் தேர்வு வாரியம், அரசுக்கல்லூரிகளில் விரிவுரையாளர்களை தேர்வு செய்யும் பணியை மேற்கொண்டு வருகிறது. 2001-2002 கல்வியாண்டில் அரசுக் கல்லூரிகளில் காலியாகவுள்ள பணியிடங்களை தகுதியான நபர்களைக் கொண்டு நிரப்பிட ஆசிரியர் தேர்வு வாரியம் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**படிப்புதவித் தொகைத் திட்டங்கள்**

3.10 கல்லூரி மாணவர்களுக்கு தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம் (மத்திய அரசு திட்டம்), மாநில அரசு உயர் கல்விக் கடன் படிப்புதவித் தொகை, பள்ளி ஆசிரியர் பிள்ளைகளுக்கான மாநில படிப்புதவித் தொகை, மாநில தகுதி படிப்புதவித் தொகை, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் இவற்றிலிருந்து மதம் மாறியவர்களுக்கான தனி தகுதி மானியம், மாநில கல்லூரிக் கல்விப் படிப்புதவித் தொகை, புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிக் கல்வி பயிலும் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை, டேராடூன் இராஷ்டிரிய இந்திய மிலிடரி அகாடமியில் படிக்கும் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை, பூனா, கடக்வாசலாவில் உள்ள தேசிய பாதுகாப்பு அகாடமியில் பயிலும் தமிழ்நாட்டு மாணவ மாணவிகளுக்கு படிப்புதவித் தொகை, இராணுவத்தில் பணிபுரிவோர் குழந்தைகளுக்கு கல்விச் சலுகைகள், முன்னாள் படைவீரர் குழந்தைகளுக்கு கல்விச் சலுகைகள், சுதந்திரப்



போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கான படிப்புதவித் தொகை, இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியை ஒரு பாடமாக பயிலும் மாணவ, மாணவிகளுக்கான படிப்புதவித் தொகை ஆகிய படிப்புதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

**வேலைவாய்ப்புள்ள பாடப் பிரிவுகளை தொடங்குதல்:**

3.11 1996-97 ஆம் ஆண்டுவரை பல்கலைக்கழக மானியக்குழு நிதி உதவியுடன் இரண்டு அரசு கல்லூரிகளில் மட்டுமே தொழிற் சார்ந்த பாடப்பிரிவுகள் பயிற்றுவிக்கப்பட்டு வந்தன. தற்போது 42 அரசுக் கல்லூரிகளில், 18 வகையான தொழிற் சார்ந்த பாடப்பிரிவுகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

**ஆசிரியர்களின் பல்கலைக்கழக வினைத்திறன் மேம்பாட்டுத் திட்டம்:**

3.12 அரசுக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் ஆராய்ச்சி படிப்பை மேம்படுத்திட, வளர்ந்து வரும் தற்காலப் போக்கிற்கேற்ப ஆசிரியர்கள் தங்களைத் தயார் செய்துகொள்ள ஏதுவாக, பல்கலைக்கழக நிதியுதவியுடன் கல்லூரி ஆசிரியர்கள் ஆராய்ச்சிப் படிப்பிற்கு ஆண்டுதோறும் அனுமதிக்கப்படுகின்றனர். 2001-2002-ல் மேற்படி திட்டத்தின்கீழ், 46 அரசுக் கல்லூரி ஆசிரியர்கள் பயிற்சியினை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். 2002-2003 ஆம் கல்வியாண்டில், அதிகளவில் ஆசிரியர்கள் மேற்படி திட்டத்தின்கீழ் ஆராய்ச்சி படிப்பிற்கு தேர்வு செய்யப்படவுள்ளனர்.

**கணினி மற்றும் இணையப் பயிற்சித் திட்டம்:**

3.13 2000-2001 ஆம் கல்வியாண்டில், 60 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கணிப்பொறி அறிவியல் பயிலாத மாணவ, மாணவியர்களுக்கு கணினி மற்றும் இணைய அறிவினை அறிமுகப்படுத்தும் திட்டம் தொடங்கப்பட்டு, தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது.

**தேசிய தகுதி மற்றும் தர நிர்ணயக் குழுவின் தகுதிச் சான்று பெறுதல்:**

3.14 இதுவரை 22 அரசுக் கல்லூரிகள் தேசிய தகுதி மற்றும் தர நிர்ணயக் குழுவால் தர நிர்ணயம் செய்யப்பட்டு நட்சத்திர தகுதி பெற்றுள்ளன. இதேபோன்று 40 உதவி பெறும் கல்லூரிகள் தர நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிகபட்சமாக

62 கல்லூரிகள் தர நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். வரும் கல்வியாண்டில் மேலும் 12 அரசுக் கல்லூரிகள் தர நிர்ணயம் செய்ய ஆய்வு செய்யப்பட்டு தர நிர்ணயம் வழங்கப்படவுள்ளன. அக்டோபர் 2001-ல் தேசிய தகுதி மற்றும் தர நிர்ணயக் குழுவுடன் இணைந்து கல்லூரிக் கல்வி இயக்ககம் மாநில அளவிலான பயிற்சி முகாம் ஒன்றை நடத்தியது.

**அரசுக் கல்லூரி கட்டடங்களில் பழுதுபார்ப்புப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு :**

3.15 2001-2002 ஆம் நிதியாண்டில் அரசுக் கல்லூரிகளில் முக்கியமான பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.7.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையானது இந்நிதியாண்டில் முதன் முறையாக அனைத்துக் கல்லூரி முதல்வர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் கலந்து கொண்ட கலந்தாலோசனை கூட்டம் மூலம் அனைத்து கல்லூரிகளுக்கும் தேவையின் அடிப்படையில் பிரித்து வழங்கப்பட்டுள்ளது.

**இந்திய அரசுப் பணிகளுக்கான தேர்வுகளில் பங்குபெற, பெண்களுக்கான சிறப்புப் பயிற்சி மையங்கள் :**

3.16 அகில இந்திய அளவில் நடைபெறும் ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். தேர்வுகளில் பெண்கள் சிறப்பான வகையில் பங்குபெறும் பொருட்டு சென்னையிலும், மதுரையிலும் இரண்டு மையங்களில் இலவச பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம் :**

3.17 அரசுக் கல்லூரிகளில் காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களில் மாணவர் நலன் கருதி, கௌரவ விரிவுரையாளர்கள் ஆண்டுதோறும் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர். 2001-2002 ஆம் கல்வியாண்டில், 650 கௌரவ விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர்.

**ஆராய்ச்சி மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை :**

3.18 2001-2002 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கென அரசு ரூ.19.92 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதன்மூலம், 45 ஆராய்ச்சி படிப்பு மாணவர்கள் பயன்பெறுவர்.



**வேலைவாய்ப்பு மையம் (Placement Cell) :**

3.19 அனைத்து நிறுவனங்களிலும் உள்ள வேலைவாய்ப்பு குறித்த விவரத்தை அளிக்க, அனைத்து அரசுக் கல்லூரிகளிலும் வேலைவாய்ப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

**இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு வழிகாட்டல் (Career Guidance Cell) :**

3.20 வேலைவாய்ப்புகள் பற்றி இளநிலை, முதுநிலை பட்டப்படிப்பு மாணவர்கள் புரிந்துணர்வு பெறவேண்டி வழிகாட்டல் மையங்கள் அனைத்து அரசுக் கல்லூரிகளிலும் அமைக்கப்பட்டு வருகின்றன.

**அரசுக் கல்லூரி ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கான வெளிப்படையான பணியிட மாற்றம் :**

3.21 வெளிப்படையான நிர்வாகம் என்ற அரசின் கொள்கை முடிவுக்கேற்ப ஆசிரியர் பணியிட மாறுதலில் கலந்தாலோசித்தல் என்ற புதிய முறை கொண்டு வரப்பட்டது. இதன்மூலம் 2001-2002 ஆம் ஆண்டில் அரசுக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் பயனடைந்தனர்.

3.22 அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், கல்வியியல் கல்லூரிகளையும் அந்தந்த பல்கலைக்கழகங்களுடன் இணைத்து, கூடுதல் துறைகளை உருவாக்கி, பல்கலைக்கழக மானியக் குழு சட்டப்பிரிவு 123-ன்படி உதவி பெற்று கல்வி செயல்பாடுகளை விரிவாக்கும் கருத்துரு உள்ளது. பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்படும் வேளையில் கல்லூரிகள் பெற்று வந்த நிதியுதவி எவ்வளவோ அந்த அளவிலேயே அது கட்டுப்படுத்தப்படும். இதற்கிடையில் கல்லூரிகளின் உள்கட்டுமானம், பல்கலைக்கழகங்கள் அளித்துவரும் தொலைதூரக் கல்வி முறை மற்றும் பல்கலைக்கழக நூலகங்கள் தகவல் தொழில் நுட்ப உதவியுடன் மேம்படுத்தப்படும்.

**ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளித்தல் :**

3.23 அரசுக் கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்களில் குறிப்பாக கிராமப் பகுதிகளிலிருந்து வரும் மாணவர்கள் பல்கலைக்கழகத் தேர்வில் ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் தேர்ச்சி பெறுவதில் மிகவும் சிரமப்படுகின்றனர். இத்தகைய மாணவர்கள்

[ 2002 ஏப்ரல் 9

மேற்கண்ட பாடங்களில் முழுமையான அளவில் தகுதி அடையச் செய்வதற்காக பாடநேரம் முடிந்த பிறகு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**4. பல்கலைக்கழகக் கல்வி**

உயர் கல்வித் துறையின் ஆதரவில் உள்ள பல்கலைக்கழகங்கள் பின்வரும் மூன்று வகைகளைச் சார்ந்தவையாகும்:

இணைப்பு உரிமை வகை-**(Affiliating type)**

(1) சென்னைப் பல்கலைக்கழகம்

(2) மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

(3) பாரதியார் பல்கலைக்கழகம்

(4) பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(5) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

(6) பெரியார் பல்கலைக்கழகம்

(7) அண்ணா பல்கலைக்கழகம்

ஒருமைவகை—**(Unitary type)**

(8) அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

(9) அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

(10) அழகப்பா பல்கலைக்கழகம்

நிகர் நிலைப் பல்கலைக்கழகம் **(Deemed University)**

(11) அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்

**சென்னைப் பல்கலைக்கழகம்:**

4.2 பழமை வாய்ந்த பல்கலைக்கழகங்களுள் ஒன்றான சென்னைப் பல்கலைக்கழகம் 1857 ஆம் ஆண்டு சட்டத்தினால் உருவாக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் இலண்டன் பல்கலைக்கழகத்தினை முன்மாதிரியாகக் கொண்டு அமையப் பெற்றது. சமுதாயத் தொடர்புடையதும், பயனுடையதுமான மேல்நிலைக் கல்வித் திட்டம் என்ற இருமுனை



2002 ஏப்ரல் 9]

நோக்கக் கல்வியைத் தரும் முயற்சியில் சென்னைப் பல்கலைக்கழகம் கீழ்க்கண்ட பாடங்களைப் புகுத்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

**அடிப்படைப் பாடப் பிரிவுகள்:**

4.3 பல்கலைக்கழக நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படி சென்னைப் பல்கலைக்கழகத்தால் அளிக்கப்படும் எல்லா இளநிலைப் பட்டப் படிப்புகளிலும் (1) அடிப்படைக் கணினிக் கல்வி (2) மனித உரிமைகள் மற்றும் மனித நேயக் கல்வி (3) சுற்றுச்சூழல் (4) சட்ட அறிவுக் கல்வி ஆகிய அடிப்படைப் பாடப்பிரிவுகள் சீராகப் புகுத்தப்பட்டிருக்கின்றன.

**புதிய பாடப் பிரிவுகளின் அறிமுகம்:**

4.4 கல்வியாண்டு 2002-2003-லிருந்து இணைக்கப்பெற்ற கல்லூரிகளிலும் பல்கலைக்கழகத் துறைகளிலும் பெறத்தக்க வகையில் சான்றிதழ், பட்டயம், இளங்கலை மற்றும் முதுநிலை பட்டம் ஆகிய நிலைகளில் 21 புதிய பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

**அஞ்சல் வழிக் கல்விப் பிரிவின்கீழ் கல்வித் திட்டங்கள்:**

4.5 வேலைவாய்ப்புகளைத் தேடித் தரும் நோக்கில் சென்னைப் பல்கலைக்கழகம் அஞ்சல் வழிக் கல்வி நிறுவனம் மூலமாக 2002-2003 ஆம் கல்வியாண்டிலிருந்து 4 முதுநிலைப் பட்டப் படிப்புகளும், தமிழ் பயிற்று மொழி வழியாக 3 முதுநிலைப் பட்ட படிப்புகளும் புகுத்தப்படுகின்றன.

**பல்கலைக்கழக மானியக் குழுவின் உயர்திறன்சேர் திட்டப்படி ஏற்பு பெற்ற பல்கலைக்கழகம்:**

4.6 தேசிய மதிப்பீடு மற்றும் தர நிர்ணயக் குழுவால் ஆகஸ்டு 2000-ல் ஐந்து நட்சத்திரத் தகுதி பெற்றபின் "உயர்திறன்சேர் பல்கலைக்கழகம்" என்ற சிறப்புத் தகுதியைத் தகுதியுள்ள இந்தியப் பல்கலைக்கழகங்களுக்கு வழங்குவது எனப் பல்கலைக்கழக மானியக் குழு கொணர்ந்த திட்டத்திற்கு இணங்க அத்தகுதியை வழங்கவேண்டி இப்பல்கலைக்கழகம் விண்ணப்பித்தது. உரிய மதிப்பீடுகளைச் செய்து முடித்து "உயர்திறன்சேர் பல்கலைக்கழகம்" என்ற சிறப்புத் தகுதியை பல்கலைக்கழக மானியக் குழு சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளித்தது.

[2002 ஏப்ரல் 9

**அண்ணாமலைப் பல்கலைக்கழகம் :**

4.7 அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தோற்றத்திற்கும் சீர்மிகு வளர்ச்சிக்கும் செட்டிநாட்டு அரசர் பெருந்தகை டாக்டர் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் தொலைநோக்கும், நுண்மதியும், கருணை உள்ளமுமே மூல காரணங்களாகும். 1929 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு, நிறைவான உள்ளுறை வசதிகளுடன், உடனுறைப் பல்கலைக்கழகமாக ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நாட்டிலேயே மூன்றாவது பெரிய பல்கலைக்கழகமாக வளர்ந்தோங்கி வருகிறது. பல்வேறு பாடத் திட்டங்களில் மாணவர்களே அவர்களுக்குத் தேவையான விருப்பமான பாடங்களைத் தேர்வு செய்து பயில்வதற்கு வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. அஞ்சல் வழிக் கல்வித் துறையில் மாணவர்கள் 4 ஆண்டுகளில் இரண்டு இளநிலைப் பட்டங்கள் (அவற்றுள் கணினித் துறை குறித்த ஒரு பட்டத்துடன்) பெற வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. பல்வேறு கணினி சம்பந்தப்பட்ட பாடங்களுக்கு குறுகிய கால பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

4.8 இந்திய பல்கலைக்கழகங்கள், அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் தொடர்பினை வலுப்படுத்துவதால், கல்வியின் பயன் மேலும் சிறப்புப் பெறுகின்றது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, ஜப்பான், சிங்கப்பூர் போன்ற அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சித் திட்டங்களுக்கு கொள்கை வழி கையொப்பமிடப்பட்டுள்ளது. உயர் கல்வித் துறையில் ஆராய்ச்சிப் பணிகள் முக்கியமானவையாகும். குறிப்பாக, இப்பல்கலைக்கழகத்தில் கடல் உயிரியல் துறை மற்றும் மொழியியல் துறைகள் ஆகியவை அவற்றின் செயல்பாடு மற்றும் திறமை வெளிப்பாடுகளின் அடிப்படையில் 1960 முதலே உயர் ஆய்வு மையமாக மேம்படுத்தப்பட்டுள்ளன.

**மதுரை காமராசர் பல்கலைக்கழகம் :**

4.9 மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 1966-ல் உருவானது. முதுநிலை ஆய்வு மற்றும் கற்பித்தல் துறைகள் இப்பல்கலைக்கழகத்தில் உள்ளன. அஞ்சல் வழிக் கல்வி மையமும் இங்கு உள்ளது. இப்பல்கலைக்கழகத்துடன் 85 கல்லூரிகள் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 10 கல்லூரிகள் தன்னாட்சி பெற்றவை. தேசிய தர மதிப்பீடு மற்றும் தகுதி ஏற்றச் சான்றளிப்புக் குழுவின் (NAAC) ஏற்புக்கு முதன்முதலாக இப்பல்கலைக்கழகம்தான் முயன்றது. அமெரிக்கன் கவுன்சில்



2002 ஏப்ரல் 9]

ஒருங்கிணைந்து நடத்தும் “ஆயிரம் ஆண்டில் இந்தியா” திட்டத்தில் பங்கு பெற்ற ஒரே இந்திய பல்கலைக்கழகம் இப்பல்கலைக்கழகம்தான். உயிரியலில் “சாந்தி ஸ்வரூப் பட்நாகர் பரிசு” பெற்ற நால்வரை இப்பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது. இப்பல்கலைக்கழக ஆசிரியர் ஆறுபேர் பல்வேறு பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களாக பணியாற்றியுள்ளனர்.

4.10 வயது வந்தோர் கல்வி மற்றும் விரிவாக்கத் திட்டத்தின்கீழ் 306 மாணவர்களுக்கு சுய வேலைவாய்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. தாவர மூலக்கூறு, உயிரியல் மையம், உயிரியல் தகவல் தொடர்பியல் மையம், மரபியல் தொழில் நுட்ப மையம் மற்றும் நீலப்பச்சை பாசி நுண்ணுயிர் உர மையம் ஆகியவற்றை இப்பல்கலைக்கழகத்தில் இந்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறை தொடங்கியுள்ளது. தகவல் தொழில் நுட்பத் துறை சார்ந்த தொழில் நிறுவனங்களை ஈர்ப்பதற்கென 11 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தை தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு (ELCOT) இப்பல்கலைக்கழகம் 30 ஆண்டு குத்தகை அடிப்படையில் அளித்துள்ளது. தொழில்நுட்பவியல் பூங்கா ஒன்றை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் பல்கலைக்கழகத்தில் அமைக்கும். இதனால் ஆசிரியர்களும், மாணவர்களும் பயன்பெறுவர்.

**கற்பித்தலை நவீனமயமாக்குதல் :**

4.11 தகவல் தொடர்பு தொழில்நுட்பம் அனைத்துத் துறை சார்ந்த கற்பித்தலிலும், முக்கியப் பங்கு வகிக்க உள்ளது. இத்தொழில்நுட்பத்தை கற்பித்தலில் அறிமுகப்படுத்த வேண்டி 64 கே.பி.பி.எஸ். திறன் கொண்ட இணையம் ஒன்றை பல்கலைக்கழகம் அமைத்துள்ளது. முதற்கட்டமாக மாணவர், ஆசிரியர் பயன்படுத்தும் வகையில் நூலகத்தில் இணையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வளாகம் முழுவதுமான இணையமும் அமைக்கப்பட்டு வருகிறது. கணினி மையத்தையும், அஞ்சல்வழிக் கல்வி மையத்தையும் இணைக்கும் பணி நடந்து வருகிறது. வளாகம் முழுவதும் பைஃபர் ஆப்டிக் நெட்வொர்க் அமைக்கப்பட்டு வருகிறது. இணைய வழியான கற்பித்தல் இப்பல்கலைக்கழகத்தின் முக்கியமானதொரு குறிக்கோளாக உள்ளது.

**பாடத் திட்ட மேம்பாடு :**

4.12 மாணவர்கள் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு மாறுவதற்கும், பாடத்திட்டத்தில் தேவைக்கேற்ப மாறுதல்கள் செய்வதற்கும், ஒவ்வொரு துறைக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டு உள்ளது. இப்பல்கலைக்கழகத்தில்

வினா வங்கி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து இளங்கலை வகுப்பிற்கும் உடற்கல்வியானது துணைப் பாடத் திட்டமாக்கப்பட்டுள்ளது. ஆடை அலங்கார தொழில்நுட்பவியல் மற்றும் ஆடை வடிவமைத்தல் போன்ற பல்வேறு வேலைவாய்ப்பு பாடப் பரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

**பாரதியார் பல்கலைக்கழகம் :**

*4.13* தேசியக் கவியான சுப்பிரமணிய பாரதியார் பெயரில் *1982* ஆம் ஆண்டு இப்பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. சமூகத்தின் உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதற்கு மனித வள வளர்ச்சியில் சில செயல் திட்டங்களை உருவாக்குவது இப்பல்கலைக்கழகத்தின் நோக்கங்களாகும். அதற்கான செயல் திட்டங்கள் பின்வருமாறு:—

* பல்கலைக்கழகக் கல்வித்திட்டங்களை ஒருங்கிணைந்த பல்வேறு தேசியத் திட்டங்களோடு தொடர்புபடுத்தி நடப்பு பாடத்திட்டங்களையும் விளக்கமான திறனாய்வு கல்வி முறைகளையும் அமைத்தல்.

* சமூகம் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்குரிய விழிப்புணர்ச்சி, தேசியப் பெருமை மற்றும் நாட்டுப்பற்று, மதச்சார்பின்மை, அறிவியல் வளமை, அனைத்துலக சகோதரத்துவம் மற்றும் உலக அமைதி, அன்பு போன்றவற்றை மேம்படுத்துகின்ற வகையில் கல்வி அமைதல்.

* கல்விப்பணிகளைச் செயல்முறைத் திறன்களின் மூலமாக அதாவது செயல்முறை பயிற்சியோடு தொழிற்சாலைகள், வாணிபம், வியாபாரம் ஆகியவற்றோடு தொடர்புபடுத்துதல் மற்றும் இணைத்தல்.

* பொது மற்றும் பயனாக்க ஆய்வுகளில் புதிய அணுகுமுறைகளும், கருத்துகளும் கொண்டுள்ள இளைஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு வாய்ப்பளித்தல்.

* நிகழ்கால சிக்கல்களை ஆய்வுத் தலைப்புகளாக எடுத்துக்கொண்டு ஆய்வு மேற்கொள்கிறபோது குறிப்பாக உயர் தொழில்நுட்பம், சமூக அறிவியல், பயனாக்க அறிவியல் மற்றும் கலையியல் போன்றவற்றை தொழில், கிராமிய மற்றும் வேளாண்மை வளர்ச்சிக்கு உதவுகின்ற வகையில் அமைத்தல்.



கல்வி அறிவை சமூகத்தின் எல்லா நிலைகளிலும் உள்ள மக்கள் பிரிவினரையும் சென்று சேருகின்ற வகையில் உருவாக்குதல்.

அறிவாற்றலை மேம்படுத்த புதிய பாடத்திட்டங்களோடு புதிய துறை பாடங்களையும் உருவாக்கிடுதல், குறிப்பாக உயிர்திரள் சக்தி, மரபியல் ஆய்வு, மென்படலங்கள், அதிவேக கடத்தி, நீர் ஈர்த்தல், மருந்துவகை வேதியியல், வனப் பொருள் வேதியியல், அனங்கக உயிர்வேதியியல், செல்மரபியல், திசு வளர்ப்பு, சுற்றுப்புற நச்சு, திசு வேதியியல், தொழில் முனைவோர் நடைமுறை, தொழிற் துறைப் பொருளாதாரம், வளர்ச்சிப் பொருளாதாரம், பொது நிதியியல், மக்கள் தொகையியல், பாய்ம இயற்பியல், வானியல் அலைகள், அறிவியல் தமிழ், புள்ளியியல் தரக் கட்டுப்பாடு, கல்வி தொழில்நுட்பவியல், செயற்கை கணினி அறிவுத்திறன், மென்பொருள் நுட்பவியல், கணினி துணைகொண்டு வடிவமைத்தல் மற்றும் தயாரித்தல் ஆகிய பாடப் பிரிவுகளை சில ஆண்டுகளில் தோற்றுவித்தல்.

*4.14* இப்பல்கலைக்கழகம் பல்வேறு வகையான கல்வித் திட்டங்களை உருவாக்கியுள்ளது. குறிப்பாக சமகாலச் சிக்கல்களை மையமாகக் கொண்டு சமுதாயத்திற்குத் தேவையான கற்பித்தல் பயிற்சி மற்றும் ஆய்வுகள் போன்றவற்றை கருத்தரங்குகள், மாநாடுகள், பணிமனைகள் வாயிலாக வழங்குகிறது. கல்லூரி ஆசிரியர்கள் பணி நியமனத்திற்கான மாநில அளவு தகுதித் தேர்வினை *2001-2002* முதல் *2002-2003* ஆம் ஆண்டு வரையில் நடத்துவதற்கு பாரதியார் பல்கலைக்கழகத்தினை மைய அமைப்பாக (Nodal Agency) அரசு நியமித்துள்ளது.

**பாரதிதாசன் பல்கலைக்கழகம்**

*4.15* புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பெயரால் *1982* ஆம் ஆண்டு இப்பல்கலைக்கழகம் தொடங்கப் பெற்றது. இப்பல்கலைக்கழக ஆட்சி எல்லையுள் திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய ஏழு மாவட்டங்கள் அடங்கியுள்ளன. இப்பல்கலைக்கழகத்தோடு தன்னாட்சி பெற்ற கல்லூரிகள் உட்பட *75* கல்லூரிகள் அடங்கும்.

*4.16* பல்கலைப்பேரூர் வளாகத்தில் பல்கலைக்கழக நூலகம், கணிதம், இயற்பியல், வேதியியல், பயிர் அறிவியல், விலங்கறிவியல், உயிர் நுட்பவியல், நுண்ணுயிரியல் ஆகிய துறைகள் அடங்கிய உயிர் அறிவியல் பள்ளி, புவியியல், நிலவியல் துறை, ஆங்கிலம், தமிழ், பொருளியல், தேசிய

கடல்சார் நீலநிற நுண்ணுயிர் ஆய்வு வசதி மையம், நிரலற்ற விசை இயக்கவியல் மையம், வரலாற்று மையம், வயது வந்தோர் தொடர் கல்வி மற்றும் விரிவாக்கம், கணினி மையம், தகவல் மையம் (Internet) கனடா கல்வி மையம், மையப் பணிமனை, யோக மையம் மற்றும் உடற்கல்வித் துறை ஆகியவையும் இயங்கி வருகின்றன.

4.17 இவ்வளாகத்தில் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வியினை மத்திய தமிழகம் மற்றும் திருச்சிராப்பள்ளியைச் சுற்றியுள்ள ஏழை மற்றும் தாழ்த்தப்பட்ட கிராமப்புற மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளில் பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பள்ளி உருவாக்கப்பட்டுள்ளது. இப்பள்ளி இப்பகுதியில் வாழும் மக்களின் நெடுநாளைய கனவான உயர் தொழில்நுட்பக் கல்வியினை நிறைவேற்றியுள்ளது. தொடக்கத்தில் இப்பள்ளி தொழில்நுட்பக் கல்வியில் தகவல் தொழில்நுட்பம் உயர் தொழில்நுட்பம், பெட்ரோல் மற்றும் இரசாயன பொறியியல் மற்றும் மருத்துவப் பொறியியல் ஆகியவற்றில் இளநிலை தொழில்நுட்பவியல் கல்வியை வழங்கி வருகிறது. மேலும், இப்பல்கலைக்கழகம் தொழில்நுட்பத் துறையில் தேவைக்கேற்ப கல்வி, பட்டமேற்படிப்புக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக் கல்வி ஆகியவற்றினை மேற்கூறப்பட்ட துறைகளில் தொடங்க வரைவுத் திட்டங்கள் தீட்டப் பெற்று வருகின்றன.

4.18 மேலும், பாரதிதாசன் மேலாண்மை நிறுவனம் திருவெறும்பூரில் உள்ள பாரத மிகு மின் நிறுவன வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்நிறுவனம் முதல் தர மேலாண்மை கல்வி வழங்கி வருகிறது. மேலும், இந்நிறுவனம் இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின்கீழ் இயங்கி வருகின்ற பாதுகாப்பு ஆய்வு வளர்ச்சி நிறுவனத்தோடு இணைந்து இத்துறையில் பணியாற்றும் அலுவலர்க்கான சிறப்பு மேலாண்மை கல்வியும் அளித்து வருகிறது.

4.19 தாவரவியல், விலங்கியல், நுண்ணுயிரியல், வேதியியல், இயற்பியல், கணிதவியல், பயன்பாட்டு புவியியல், மண்ணியல், தொலையுணர்வியல் மற்றும் எரிசக்தி சேமிப்பு மற்றும் மேலாண்மையியல் ஆகிய அறிவியல் பாடங்களில் பட்டமேற்படிப்பு கல்வியையும் மற்றும் தமிழ், சமூகவியல், சமூகப் பணி, பொருளியல், வரலாறு, ஆங்கிலம், கல்வியியல் போன்ற கலைப் பிரிவுகளிலும் மற்றும் ஊரக தொழில்நுட்பவியல் ஆகியவற்றில் பட்டமேற்படிப்பு கல்வியையும் இப்பல்கலைக்கழகம் வழங்கி வருகிறது.



**அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்**

4.20 1984 ஆம் ஆண்டின் தமிழக அரசுச் சட்டம் 15-ன்கீழ் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் கொடைக்கானலில் தோற்றுவிக்கப்பட்டது. மகளிரியல் கல்வியை மேம்படுத்துதல், மகளிரியல் ஆய்வுகளை மேற்கொள்ளுதல், மகளிர் மேம்பாடு குறித்த திட்டங்களுக்கு ஆலோசனை நல்குதல், ஒருங்கிணைத்தல் ஆகிய பொறுப்புகள் சட்டத்தில் குறிப்பிட்டிருந்தபடி பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பட்டன. முனைவர் பட்டப்படிப்பு/இளநிலை ஆய்வுப் படிப்பு/முதுகலைப் பட்டவகுப்பு/ இளங்கலைப் பட்ட வகுப்பு என்று அனைத்து நிலைப் பாடத் திட்டங்களும் ஆய்வு மற்றும் விரிவாக்கப் பணிகளும் மகளிரியலை முதன்மைப்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் மகளிரியலை மையப்படுத்திய ஒரே பல்கலைக்கழகம் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம். மரபுசார் கல்விப் பிரிவுகளை வடிவமைத்தல், மறுவடிவமைத்தல் மற்றும் மாற்றியமைத்தல் ஆகியவற்றில் மகளிர் நோக்கு (Women's perspective) கருத்தில் கொள்ளப்படுகிறது.

4.21 பெண்களின் வாழ்வு நிலையை உயர்த்தும்படி பிறரைச் சார்ந்த நிலையினின்று விடுபட்டு தன்னிறைவு நிலையை அடைவதற்கு உதவும் வகையாக பல்கலைக்கழகம் கீழ்க்கண்ட விரிவாக்கப் பணிகளைச் செயற்படுத்தி வருகிறது:--

1. குடிசைவாழ் பகுதியை தத்தெடுத்தல். (கல்வி, நலவாழ்வு, பொருளியல் தற்சார்பு குறை நீக்குக் கல்வி முதலியன)

2. சுயதொழில் பயிற்சித் திட்டங்கள் சமூகப் பொருளாதார தளத்தில் அடிமட்டத்திலுள்ள மகளிருக்கான மரபோடு ஒட்டிய தொழிற் பயிற்சிகளும், நவீனத் தொழில்நுட்பங்களும் அளித்தல்.

3. கருத்தரங்குகள்/பணிமனைகள்/பயிலரங்குகள் மூலம் (குறிப்பிடத்தக்க கருத்துகள் தலைமைப்பணி நிர்வாகவியல், மகளிர் மேம்பாடு, மகளிரியல் ஆய்வு முறைகள், முறைசாராக் கல்வி முதலியன) அளித்தல்.

4. விழிப்புணர்வு, திட்டங்கள் மூலம் (மகளிர் உரிமை, மகப்பேறு உடல்நலம், தொடர்பு சாதனத் துறை, மகளிர்க்கெதிரான வன்முறை) போன்றவற்றில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

5. பெண்களின் அதிகாரப் பகிர்விற்கான கூட்டு முயற்சியாக ஆய்வு மற்றும் செயல்பாட்டுத் திட்டங்களை பல்கலைக்கழக மானியக்

குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மையத்தின் வாயிலாகவும் மற்றும் பல்கலைக்கழகம் கல்லூரி தன்னார்வத்தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்தி வருதல்.

6. பெண்களுக்கான அரசாங்க சலுகைகள் மற்றும் வருமானத்தினை ஊக்குவிக்கும் திட்டங்கள், உடல்நலம் ஆகியவற்றைக் கணித்து மதிப்பிடுதல்.

7. நூலகம், ஆவணச்சான்று, புத்தக வெளியீடு போன்றவற்றை ஏற்படுத்துதல்/ஒன்று திரட்டுதல்.

8. உடல்நலம், சட்டம், குடும்பம், கல்வி போன்றவைகளுக்கு ஆலோசனை மையங்களை ஏற்படுத்தி ஆதரித்து வருதல்.

9. பெண்களுக்கான அரசாங்கத் திட்டங்கள் மற்றும் பெண்ணியக்கங்கள் பற்றிய செயல்பாடுகளை ஆங்கில மொழியிலிருந்து மண்டல மொழிக்கு (தமிழ்) மொழி பெயர்த்தல்.

4.22 இதுவரை பல்கலைக்கழகம் வாயிலாக ஐம்பது தலைப்புகளில் நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவை, ஆய்வுத்திட்டங்கள், சமூகப் பரிசீலனைகள், மகளிர் திறனாய்வுசார் படைப்பிலக்கியப் பங்களிப்பு போன்ற வகைகளைச் சாரும். ஏற்கெனவே தெரிவித்துள்ளவாறு உலகெங்கிலும் மகளிர் தினம் கொண்டாடப்படும் இவ்வேளையில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தினை இணைப்பு உரிமை வகை (Affiliating Type) பல்கலைக்கழகமாக மாற்றி கொடைக்கானல் பகுதியிலுள்ள அனைத்து மகளிர் கல்லூரிகளும் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட உள்ளது. .அடுத்த இரண்டாண்டுகளில் இப்பல்கலைக்கழகத்தில் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்படும்.

**அழகப்பா பல்கலைக்கழகம்**

4.23 காரைக்குடியில் தலைசிறந்த நிறுவனமாக புகழ்பெற்று விளங்கும் அழகப்பா பல்கலைக்கழகம் மிகச்சிறந்த கொடையாளரான டாக்டர் ஆர்.எம். அழகப்பா செட்டியார் அவர்களின் கனவு நனவாகும் வகையில் உருவாக்கப் பெற்றது. தமிழகத்தின் மிகச்சிறந்த கல்விக் கூடங்களில் ஒன்றாக மதிக்கும் அளவிற்கு இப்பல்கலைக்கழகம் வளர்ந்து வருகிறது. 1985 ஆம் ஆண்டில் தமிழக அரசின் சிறப்புச் சட்டத்தால் இப்பல்கலைக்கழகம் தோற்றம் பெற்றது. மைய அரசின் உயிரி தொழில்நுட்பத் துறை மற்றும் தமிழ்நாடு அரசின் நிதி உதவியுடன் அழகப்பா பல்கலைக்கழகத்தில்



V211,31'P02 P02.19.2



அமைய உள்ள உயிரி தொழில்நுட்பத் துறை 2002-2003 ஆம் கல்வியாண்டு முதல் செயல்பட உள்ளது. பட்டமேற்படிப்பு மற்றும் ஆய்வு நிலை கல்வி ஆகியவற்றை உயிரி தொழில்நுட்பத்தில் இத்துறை வழங்குகிறது. மகளிரியல் துறை சார்பில், இசை, நாட்டியம், நாடகம் ஆகிய துறைகளில் பட்டய வகுப்புகள் தொடங்கிட நுண்கலை மையம் ஒன்றும் 2002-2003 கல்வியாண்டு முதல் அமைக்கப்படவுள்ளது.

4.24 இப்பல்கலைக்கழகத்தில் தொழிலகம் கூட்டுத் திட்டத்தின்கீழ் சென்னையில் உள்ள கடலாண்மைக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து கப்பல் மற்றும் துறைமுக மேலாண்மையியலில் முதுகலைப் படிப்பும் (M.S. Shipping and Port Management) உதகை மெரிட் தகவல் தொழில் நுட்ப நிறுவனத்துடன் இணைந்து விருந்தோம்பல் மேலாண்மையியல் (Hospitality Management) பட்டமேற்படிப்பு மற்றும் இளங்கலை (M.S. and B.S. in Hospitality Management) வகுப்புகளும், மதுரை R.L. கப்பல் துறை சார்ந்த அறிவியல் நிறுவனத்துடன் (R.L. Institute of Nautical Science) இணைந்து கப்பல் துறை சார்ந்த அறிவியலில் (Nautical Science) இளங்கலை பட்ட வகுப்புகளும் வெளிவளாகத் திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு உள்ளன. இப்பல்கலைக்கழகத்தில் இரட்டைப் பட்ட முறையில் பல்வேறு துறைகளிலும் பயிலும் மாணவர்கள் கூடுதலாக கணினி சம்பந்தப்பட்ட பாடங்களைப் படித்து தகவல் தொழில்நுட்பத் துறையில் பட்டயச் சான்றிதழ் (Diploma in Information Technology) பெறவும், மேலும் ஓராண்டு கூடுதலாகப் படித்து பட்டமேற்படிப்புப் பட்டம் (M.S. Information Technology) பெறவும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. தொலைதூர கல்வி இயக்ககத்தின் செயல்பாட்டினை விரிவுபடுத்தி கணிப்பானியலில் பல்வேறு நிலைகளில் சான்றிதழ் பட்டயம், பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு, பாடத்திட்டங்களை அளித்து சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் பயன் பெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டு முதல் இரட்டைப் பட்ட முறையில் தொலைதூரக் கல்வியில் இளங்கலை பயிலும் மாணவர்கள் கூடுதலாக ஓராண்டு படித்து கணினித் துறையில் இளங்கலை பட்டம் பெறவும் வாய்ப்பளிக்கிறது. மேலும், நூலகம் மற்றும் தகவல் அறிவியல் பாடத்தில் ஆய்வு நிறைஞர் பட்டத்திற்கான வகுப்புகளும், ஜப்பானிய மற்றும் சீன மொழிகளில் சான்றிதழ் வகுப்புகளும், 2002-2003 கல்வியாண்டு முதல் தொடங்கப்பட உள்ளன.

4.25 அழகப்பா பல்கலைக்கழக மாணவர்களுக்கும், சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் தமிழ்நாடு [illegible] வேலை

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224370
சென்னை-600 008

வாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்ககத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு, வேலை வாய்ப்பு பற்றிய வழிகாட்டும் பிரிவு ஒன்று அழகப்பா பல்கலைக்கழகத்தில் 2001-2002 கல்வியாண்டில் செயல்படத் தொடங்கியுள்ளது. இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கல்லூரிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கும் வகையில் இப்பல்கலைக்கழகம் இணைப்பு உரிமை வகைப் பல்கலைக்கழகமாக மாற்றி அமைக்கப்படவுள்ளது.

## மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

*4.26* மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் 1990ஆம் ஆண்டு திருநெல்வேலியில் உருவாக்கப்பட்டது. உருவாகி பத்தாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்ட நிலையில் பயிற்றுவிப்பதிலும் கல்லூரிகளை இணைப்பு செய்து கொள்வதிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை இது பெற்றுள்ளது.

*4.27* இளநிலை கல்வியில் கிராமப்புறத்திற்குத் தேவையான படிப்புகள் தவிர கூடுதலான படிப்புகளையும் மாணவர்கள் பயில வேண்டும். உள்ளூருக்கேற்றவாறான ஆய்வுத் திட்டம் ஒன்றினை இரண்டாம் ஆண்டில் மாணவர்கள் கூட்டாக மேற்கொள்கின்றனர். மூன்றாம் ஆண்டில் அவர்கள் பயிலும் படிப்புப்பிரிவு தொடர்பான ஆய்வுத் திட்டத்தை தனித்தனியாக அவர்கள் மேற்கொள்கின்றனர். இதனால் சமுதாயப் பிரச்சினைகளை மாணவர்கள் புரிந்துகொள்ள இயல்வதோடு ஆய்வுகளை மேற்கொள்வதில் விருப்பமும் அவர்களுக்கு ஏற்படுகிறது. மூன்றாவது ஆண்டில் மேலும் செயல்முறைக்கேற்ற விருப்பப் பாடங்களை எடுத்துப் படிக்க மாணவர்கள் வாய்ப்பு பெறுகின்றனர்.

### ஆய்வுத்தரம் மற்றும் நூல் வெளியீடு

*4.28* மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் 13 துறைகளில் பெரும்பான்மையானவை ஆய்வுத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. தற்போது ரூ.2.5 கோடி பெறுமான 29 பெரிய ஆய்வுத் திட்டங்களும் 19 சிறிய ஆய்வுத் திட்டங்களையும் சுற்றுச்சூழல் இயல், கடற்கரைப் பகுதியியல் மற்றும் இயற்பியல் துறைகள் நிதியுதவி நிறுவனங்களிலிருந்து பெரிய ஆய்வுத் திட்டங்களைப் பெற்று வருகின்றன.

### சமுதாயக் கல்லூரிகள்

*4.29* சமுதாயக் கல்லூரிகள் என்ற புதுவகையான கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. கல்லூரிகளில் சேர்ந்து பயில முடியாத ஏழை



மாணவர்களுக்கு கல்வி அளிக்கும் நோக்குடன் இவை நிறுவப்பட்டுள்ளன. இக்கல்லூரிகளில் ஓராண்டு பட்டயப்படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது. தொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்ப பாடத்திட்டம் வகுக்கப்படுகின்றது. எனவே பாடத்திட்ட குழுவில் தொழிற் துறையைச் சார்ந்தவர்களும் உறுப்பினர்களாக நியமிக்கப்படுகின்றனர். கணினியியல், அலுவலக நிர்வாகம், உதவி செவிலியர், தரிசுநில வேளாண்மை, வீட்டுக்கருவிகள் பராமரிப்பு, இரு சக்கரவண்டிகள் இயந்திரவியல், நான்கு சக்கரவண்டிகள் இயந்திரவியல், சரக்குப்பொருட்கள் கையாளுதல் போன்றவை குறிப்பிடத்தக்க பட்டயப்படிப்புகளாகும். தொழிற் கூடங்களில் செய்முறைப் பயிற்சி அளிக்கும் நோக்குடன் பாடத்திட்டங்கள் அமைந்துள்ளன. இதற்கென தொழிற்சாலைகளுடன் கல்லூரிகள் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளன. தொழில் திறமையுடன் திறன்களும் கற்றுத் தரப்படுகின்றன. மாணவர்கள் வேலைவாய்ப்பு பெற இக்கல்லூரிகள் முனைப்புடன் செயல்படுகின்றன. பெரும்பாலான சமுதாயக் கல்லூரி மாணவர்கள் தொழிற்கூடங்கள், மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகளில் வேலைவாய்ப்பு பெறுகின்றனர் என்பதை ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

### மனோ கல்லூரிகள்

*4.30* "மனோ கல்லூரிகள்'' என்கிற மூன்று கல்லூரிகளை அமைத்திருப்பது இப்பல்கலைக்கழகத்தின் இன்னொரு புதிய முயற்சி. நகரங்களுக்கு சென்று கல்லூரிகளில் சேர இயலாத மாணவர்கள் உள்ள பகுதிகளில் மனோ கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. தகுந்த உட்கட்டமைப்பு கொண்டதும், 12 கி.மீ. வட்டத்தில் எந்த கலையியல் கல்லூரியும் இல்லாத பகுதியில் அமைந்துள்ளதுமான பள்ளிக்கூடங்களில் மனோ கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. மனோ கல்லூரிகளில் பகுதி நேர ஆசிரியர்களை பல்கலைக்கழகங்கள் நியமிக்கிறது. மாணவர் சேர்க்கையினையும் பல்கலைக்கழகம் மேற்கொள்கிறது. இதர கல்லூரிகளில் உள்ள பாடத்திட்டத்தினையே மனோ கல்லூரிகளும் பின்பற்றுகின்றன. மனோ கல்லூரி மாணவர்கள் இதர கல்லூரி மாணவர்களுக்கு சளைத்தவர்கள் அல்லர் என்பதை தேர்வு முடிவுகள் தெளிவுபடுத்துகின்றன. வசூலிக்கப்படும் கட்டணத்தில் 80 சதவிகிதம் வாடகை மற்றும் ஆசிரியர் மதிப்பூதியம் ஆகியவற்றுக்காக வழங்கப்படுகிறது.

## பெரியார் பல்கலைக்கழகம்

*4.31* மாபெரும் சமூகப் புரட்சியாளர் தந்தை பெரியார் திரு. ஈ.வே. ராமசாமி அவர்களின் நினைவாக பெரியார் பல்கலைக்கழகம் 1997-ல்

தோற்றுவிக்கப்பட்டது. கல்வியின் வழியாக அனைவரையும் மேம்பாடு அடையச் செய்ய வேண்டுமென்பதே இதன் பொருள். நாட்டின் தொழில் நுட்ப அறிவியல், சமூகம், பொருளாதார மேம்பாட்டிற்குத் தேவையான அறிவாற்றல், புதிய சிந்தனைகள், புதிய திறன்களை இளைஞர்களிடம் உருவாக்க இப்பல்கலைக்கழகம் பாடுபடுகிறது.

4.32. இப்பல்கலைக்கழகத்தில் 2001-2002-லிருந்து பெரியார் தொலைதூர கல்வி மையம் செயல்பட்டு வருகிறது. இதன்கீழ் பெரியார் பல்கலைக்கழகம் உட்பட 23 கல்வி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் சென்னை மற்றும் பெங்களூரில் உள்ள மையங்கள் மண்டல கல்வி மையங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன.

4.33. பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு அரசு உதவியுடன் மருத்துவப் பயிர்கள் பற்றிய ஆய்வு மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த ஆய்விற்கான மருத்துவப் பயிர்களை பயிரிட ஒரு மருத்துவத் தோட்டம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. சமூகத்தின் பல பிரிவினரும் பயன்பெறும் வகையில் கல்வியின் தரத்தினை உயர்த்தவும் இப்பல்கலைக்கழகம் பாடுபடுகிறது.

**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் பெண்கள் உயர் கல்வி நிறுவனம்**

4.34. கோயம்புத்தூரிலுள்ள அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் பெண்கள் உயர் கல்வி நிறுவனம் 1988-ல் நிகர் நிலைப் பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெற்றது.

4.35. இளநிலைப் பட்டப்படிப்பில் 3 மற்றும் 4-வது பருவத்தில் மாணவியர் அனைவரும் கணிப்பொறிப் பாடத்தைத் துணைப் பாடமாக பயிலுகின்றனர். முதல் மற்றும் இரண்டாமாண்டு இளநிலைப் பட்டப்படிப்பு மாணவியர் ஒரு மாதத்திற்கு மேல் தொழில் பயிற்சி பெற பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரைப்படி, புகழ்பெற்ற தொழிற்சாலைகள், ஆய்வகங்கள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்படுகிறது.

4.36. சிறப்புக் கல்வி 5 ஆண்டுகள் ஒருங்கிணைந்த பாடத் திட்டம் 1992-93-ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில் உள்ளார்ந்த ஒழுங்குமுறை இயற்கையாக அமைந்து, உடல், உள்ளம் மற்றும் அறிந்து செயல்படும் திறன் வளர்க்கப்படுகிறது. ஒருங்கிணைந்த பல்வகைக் கல்வி மாணவியர்க்கு வழங்கும் பயிற்சிக்கூடமாக இப்பல்கலைக்கழகம் விளங்குகிறது.

4.37. இந்தியாவில் ஒலி, ஒளி முறையில் இளநிலைப் பட்டப் படிப்பிற்குரிய பாடங்களைத் தயாரித்து வழங்கும் 15 மையங்களில் ஒரு



மையமாக இப்பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மானிய குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

4.38. பல்கலைக்கழக மானியக் குழுவின் உதவியுடன் இம்மையம் செயல்பட்டு வருகிறது. பெண் முன்னேற்றம் சம்பந்தப்பட்ட செயல் திட்டங்களை இம்மையம் ஒருங்கிணைக்கிறது. கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் ஆலோசனைகள் வழங்குதல் மூலம் பெண்கள் முன்னேற்றத்திற்கு அனைத்து நிலையங்களிலும் குறிப்பாக, குடும்ப மற்றும் சமூக அங்கீகாரம் கிடைக்க உறுதுணை புரிகிறது.

**5. தொழில்நுட்பக் கல்வி**

தொழில்நுட்பக் கல்வித் துறை 1957 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தொழில்நுட்பக் கல்வி நிர்வாகம் தொடர்பான அனைத்துப் பணிகளையும் இத் துறை மேற்கொண்டுள்ளது. இதுகாறும் இத்துறையின்கீழ் இயங்கி வந்த 6 அரசு பொறியியற் கல்லூரிகளும், 31-12-2001 முதல் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவரப்பட்டு அப் பல்கலைக்கழகம் அனைத்துப் பொறியியற் கல்லூரிகளையும் இணைக்கும் பல்கலைக்கழகமாக 31-12-2001 முதல் மாற்றப்பட்டுள்ளது.

5.2. பொறியியற் கல்லூரிகளிலும், தொழில்நுட்பப் பயிலகங்களிலும் 2000-2001 ஆம் ஆண்டில் மாணவர் சேர்க்கை முறையே 45,445 மற்றும் 47,324 ஆக இருந்தது. 2001-2002-ல் மாணவர் சேர்க்கை முறையே 60,470 மற்றும் 45,334 ஆக இருக்கிறது.

**ஓய்வுபெற்ற இராணுவத்தினரின் வாரிசுகளுக்கு இடஒதுக்கீடு :**

5.3. இராணுவத்தில் பணிபுரிபவர்களின் மற்றும் ஓய்வுபெற்ற இராணுவத்தினரின் வாரிசுகளுக்குமான இடஒதுக்கீடு 25-லிருந்து 100 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**கார்கில் போரில் உயிர்நீத்த இராணுவத்தினரின் வாரிசுகளுக்கு இட ஒதுக்கீடு :**

5.4. கார்கில் போரில் உயிர்நீத்த இராணுவத்தினரின் வாரிசுகளுக்கு அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பொறியியற் கல்லூரிகளில் ஒவ்வொரு கல்லூரியிலும் 2 இடங்களும், அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பல் தொழில்நுட்பப் பயிலகங்களில் ஒவ்வொரு பயிலகத்திலும் 5 இடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

[ 2002 ஏப்ரல் 9

## மொரீசியஸ் மாணவர்களுக்கான இடஒதுக்கீடு

5.5. மொரீசியஸைச் சார்ந்த மாணவர்களுக்கு பொறியியற் கல்லூரிகளில் 15 இடங்களும், பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் 30 இடங்களும் 2002-2003 ஆம் கல்வியாண்டு முதல் 5 ஆண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்து தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

## பொறியியற் கல்லூரி மாணவர்களுக்கு கட்டாய செய்முறைப் பயிற்சி

5.6. பொறியியற் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு கட்டாய செய்முறைப் பயிற்சி வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மாணவர்களின் பெற்றோர் வசிக்கும் இடத்திலேயே கல்விக் கட்டணத்தை செலுத்துவதற்கு ஏதுவான ஒரு முறையை வகுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 6. அண்ணா பல்கலைக்கழகம்

1978 ஆம் ஆண்டு ஒருமை வகைப் பல்கலைக்கழகமாக உருவாக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தில் பயிலும்போதே அறிவுத்திறனை மேம்படுத்தி, தலைமை தாங்கும் திறன்களை உருவாக்கி மாணவர்கள் தொழில் துறையில் உயர் நிலைகளை எய்தச் செய்வதை இப் பல்கலைக்கழகம் மரபாகக் கொண்டுள்ளது. அண்ணா பல்கலைக்கழக திருத்தச் சட்டத்தின் வழியாக ஆறு அரசு பொறியியற் கல்லூரிகளும் உறுப்புக் கல்லூரிகளாக இப்பல்கலைக்கழகத்துடன் ஜனவரி 2002 முதல் இணைக்கப்பட்டுள்ளன. கல்வி அளிக்கவும், ஆய்விற்கு உறுதுணையாக இருக்கவும் ஏதுவாக இந்த ஆறு பொறியியற் கல்லூரிகளும் வட்டார மையங்களாகச் செயல்படும். எனவே இவற்றின் உள்கட்டுமானத்தை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தவிர அனைத்து உதவிபெறும் கல்லூரிகள், சுயநிதிக் கல்லூரிகள் என மாநிலத்திலுள்ள 219 பொறியியற் கல்லூரிகளும் அண்ணா பல்கலைக்கழகத்துடன் 31-12-2001 முதல் இணைக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மற்றும் விவரதளம் சார்ந்த மின்னியல் உத்திகளைக் கையாண்டு இக்கல்லூரிகள் அனைத்தையும் அண்ணா பல்கலைக்கழகம் திறம்பட நிர்வகிக்கும்.

6.2. தற்போதைய சமூகத்தின் முன் வைக்கப்பட்ட தேவைகளுக்குப் பொருத்தமான பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் அவை சார்ந்த அறிவியல் உயர் கல்வியை அண்ணா பல்கலைக்கழகம் அளிக்கிறது. ஆராய்ச்சிப் பணிகளையும் அதன்மூலம் பெறுகிற அறிவையும் ஊக்குவித்தலும் தவிர, கல்வி நிறுவனங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் இடையே உள்ள ஒத்துழைப்பையும் பேணுகிறது.



2002 ஏப்ரல் 9 ]

6.3. தேர்ந்தெடுத்த முதுநிலைப் பாடத் திட்டங்கள் சிலவற்றில் அண்ணா பல்கலைக்கழகம் ஏற்கெனவே "இணையவலைக் கல்வியை" அறிமுகப்படுத்தியுள்ளது. தொழிற்சாலைகளில் பணிபுரியும் பொறியாளர், தொழில்நுட்ப வல்லுநர் மற்றும் ஆசிரியர்களும் பயன்பெறும் வகையில் இதர பாடத் திட்டங்களுக்கும் இது விரிவுபடுத்தப்படும். பணியிலிருப்போர் உயர் பட்டய மற்றும் பட்டத் தகுதியினைப் பெறக்கூடிய வகையில் அமைந்த திட்டம் தகுதி சேமிப்புத் திட்டமாகும். தரச்சான்று பெற்ற கல்வி நிறுவனங்களில் பழைய பாடத் திட்டங்களில் பெற்ற தகுதிகளை மாற்றிக் கொள்வதன் மூலம் தகுதியினை அதிகரித்துக் கொள்ளலாம் அல்லது முன்னர் பெற்ற இதர முறைசாராக் கல்வி, திறமை இவற்றை ஆய்வுசெய்து கணித்தும் வேண்டிய தகுதியினை ஈட்டிக் கொள்ளலாம்.

6.4. இரட்டைப் பட்டப்படிப்பு பாடத் திட்டம் மூலம் தகவல் தொழில் நுட்பத் துறை அல்லாத பொறியியற் தொழில்நுட்ப பட்டதாரிகள் தகவல் தொழில்நுட்ப பாடமுறைகளில் கூடுதல் பட்டங்களைப் பெறத் தேவையான தகுதி நிலைகளைப் பெற முடியும். அண்ணா பல்கலைக்கழகத்தில் ஏற்கெனவே அளிக்கப்படுகின்ற பல பாடத் திட்டங்கள் தகவல் தொழில்நுட்பத்துடன் ஒன்றிணைக்கப்பட்டவை. திறமையுள்ள இளம் முதுநிலைத் தொழில் முறைமையாளர்கள் முனைவர் பட்டம் பெறவும், கல்வி சார்ந்த செயல்பாடுகளில் பயிற்சி பெறுவதற்கும் ஆசிரியர்/ஆராய்ச்சி துணைமையாளர் திட்டத்தை, அண்ணா பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

6.5. முழு நேர விரைவு முதுநிலைப் பாடத் திட்டங்கள், தொழிற்கல்வி நிறுவனங்களில் பணிபுரிவோருக்கு அவர்கள் முதுநிலைப் பட்டம் மூன்று பருவங்களில் (Semester) நிறைவு செய்ய அறிமுகப்படுத்தப்படும். கல்விசார் பங்களிப்பு மையத்தை அண்ணா பல்கலைக்கழகம் ஏற்கெனவே நிறுவியுள்ளது. இம்மையம் சிறப்பாக மனித வளங்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கும், நிறுவனங்களுக்கு வல்லுநர்கள் கிடைக்குமாறு செய்வதற்கும், ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப அறிக்கைகளைத் தயாரிக்க உதவுவதிலும், ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதலிலும், தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களுக்கு ஆதரவாக இருக்கவும் நிறுவப்பட்டது. ஆராய்ச்சி மற்றும் தொழிற்சாலைகளுக்கு அறிவுரை அளித்தல் இவற்றில் மேம்படவும், விரிவடையவும், பல்வேறு பொறியியல் கல்லூரிகளை வழிநடத்த இம் மையம் செயலாண்மை முகமையாக விளங்கும்.

6.6 மாநிலத்தில் செயல்படும் பொறியியல் நிறுவனங்கள், தொழிற்சாலைகள். ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு பரிசோதனைச் சாலைகள் போன்றவற்றை ஒரே பொதுத் தளத்தில் கொண்டுவருவதில் தொழில் நுட்ப நுழைவாயில் சிறப்பான பங்கு வகிக்கிறது. ஒருவருக்கொருவர் பயன் பரிமாற்றம் பெற பல்கலைக்கழக, தொழிற்சாலை இணைப்பின் பொருத்தமான மாதிரியைத் தீர்மானிப்பதில் இது சேவை புரியும் வளங்களை ஒன்றுசேர்த்து, தொழிற்சாலை-கல்வி நிறுவனங்கள் இணைந்து செயல்படுவதை வளமைப்படுத்த உதவி செய்யும்.

## 7. மண்டலப் பொறியியற் கல்லூரி

மைய, மாநில அரசுகளின் கூட்டு முயற்சியாக 1964-65-ல் தொடங்கப்பட்ட திருச்சி மண்டலப் பொறியியற் கல்லூரி இந்தியாவிலேயே மிகச் சிறந்த உயர் கல்வி நிறுவனங்களுள் ஒன்றாக வளர்ந்துள்ளது. பி.இ., பி.டெக்., பி.ஆர்க். பட்டப்படிப்புகளில் 50 விழுக்காடு இடங்கள் தமிழக மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஒற்றைச் சாளர முறையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். எஞ்சியுள்ள 50 விழுக்காடு இடங்கள் பிற மாநிலங்களில் உள்ள மண்டலப் பொறியியற் கல்லூரிகள் பரிந்துரை செய்யும் பிற மாநில மாணவர்களுக்கு அளிக்கப்படுகின்றது. முதுநிலைக் கல்வியில் அனைத்திந்திய அளவில் தேர்வு நடத்தி மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. முழுமையான தரத்துடனும், தகவல் தொழில்நுட்பத்திற்கு முக்கியத்துவம் அளித்தும், பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் படிப்புகள் இக்கல்லூரியில் அளிக்கப்பட்டு வருகின்றன.

7.2. இக்கல்லூரியில். நாட்டின் தற்போதைய தொழில் துறையின் தேவைக்கேற்ப கட்டடப் பொறியியல் துறை, மின்னாற்றல் மற்றும் மின்னணுவியல், உலோகவியல் துறை, கணிப்பொறி விஞ்ஞானத் துறை, கருவிகள் மற்றும் பழுதுபார்ப்புப் பொறியியல் துறை, வேதியியல் துறை, கட்டடக்கலைத் துறை முதலிய துறைகளில் இளநிலைப் பட்டப்படிப்பு வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மேலும் இக்கல்லூரியில் தொழிற்சாலை வடிவமைத்தல், எரிசக்தி பொறியியல், போக்குவரத்துப் பொறியியல் மற்றும் நிர்வாகம், கட்டடக்கலை, பொறியியல், நீர்ப்படுகை ஆதாரங்களும் அதனை நிர்வகித்தலுக்குமான பொறியியல், கணிப்பொறி அறிவியல், மின்சக்தி அமைப்புகள், தகவல் தொடர்பு அமைப்புகள், அனல் மின்சாதன வடிவமைப்பு மற்றும் உற்பத்திப் பொறியியல், தொழில் பாதுகாப்புப் பொறியியல், உலோகம் பற்றவைப்பு முறை, தொழில் உலோகவியல், உற்பத்தித் தொழில்நுட்பவியல், செயல்முறை மின்னணுவியல், செயல்முறை



வேதியியல் ஆகிய பிரிவுகளிலும், ஆராய்ச்சி மற்றும் கணிப்பொறிச் செயல்பாட்டுத் துறை, வணிக நிர்வாகத் துறை முதலிய துறைகளிலும் முதுகலைப் பட்டப்படிப்புகளும் நடத்தப்படுகின்றன. இப்பாடத் திட்டங்கள் உலக நாடுகளின் தரத்திற்கிணையாக தேவைக்கேற்ப அவ்வப்போது மாற்றியமைக்கப்படுகின்றன.

7.3. இந்திய பிரிட்டிஷ் அரசுகள் உதவியளிக்கும் எரிசக்தி மையத் திட்டத்தின் கீழ் காற்றிலிருந்து மின்சக்தி தயாரித்தல், சூரிய ஒளியிலிருந்து மின்சக்தி தயாரித்தல், மற்றும் இதர பொருட்களிலிருந்து மின்சக்தி தயாரிக்கும் பொருட்டு ஆய்வுக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக் கூடங்கள் இக்கல்லூரியில் பல்வேறு பிரிவுகளில் படிக்கும் மாணவர்களுக்குப் பயனுள்ளதாக அமைந்துள்ளன.

7.4. மிகுந்த அளவு வேலைவாய்ப்பினை இந்நிறுவனம் தொடர்ந்து பெற்றுத் தருவதால் அனைத்து மாணவர்களின் முதல் விருப்பமாக இந்நிறுவனம் திகழ்கிறது.

7.5. உலகத் தரத்தை எய்துவதற்காக கல்வித் திட்டமும், பயிற்றுவிப்பு முறைகளும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. உலகளாவிய கடின சூழ்நிலைகளைத் தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் வகையில் மாணவர்களைத் திறமைமிகு பொறியாளர்களாக இந்நிறுவனம் உருவாக்குகிறது. கூடுதலான செய்முறை வகுப்புகள், தொழில் துறையில் பயிற்சி மற்றும் தொழில் நிறுவனங்களைச் சென்று பார்வையிடுதல் ஆகியவற்றின் வழியாக தொழில் துறையில் எழும் சிக்கல்களைத் தீர்க்கும் ஆற்றலை மாணவர்கள் பெறுகின்றனர். மைய, மாநில அரசுகளின் தாராளமான நிதியுதவியைக்கொண்டும், ஆசிரியர் மாணவரிடையே நிகழும் மிகச் சிறந்த கருத்துப் பரிமாற்றங்களினாலும், இந்நிறுவனம், உலகத்தரம் வாய்ந்ததாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது.

## 8. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்

தமிழ்நாடு அரசின் அறிவியல் கொள்கைகளை உருவாக்கவும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை இளைஞர்களிடையே பரப்புவதன் மூலம் அறிவியல் உள்ளுணர்வை ஏற்படுத்தவும் பல நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கவும், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிகழ்ச்சிகளை மத்திய அரசுடன் இணைந்து நடத்தவும், மாநில அரசின்கீழ் தன்னாட்சி நிறுவனமாக் 1984-ல் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் நிறுவப்பட்டது.

8.2. இதுவரை 95 அறிவியல் தொழில்நுட்பவியல் திட்டங்களை இம்மன்றம் நிறைவேற்றியுள்ளது. மேலும் 25 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆய்வுகளில் கண்ட தெரிவுகள், பரிந்துரைகள் நமது மாநில முன்னேற்றத்துக்குப் பயன்படுத்துவதற்கு அரசு துறைகளுக்கு அனுப்பப்படுகின்றன. கிராமப் பஞ்சாயத்து அளவில் மக்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வித் தரத்தை மேம்படுத்த, கிராமப்புறங்களில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை ஈடுபடுத்துதல் என்ற திட்டத்தின் மூலம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான கண்டுபிடிப்புகள் மற்றும் வளர்ச்சிகள் கிராமப்புறங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

8.3. அறிவியல் தொழில்நுட்பவியல் பரப்புதல் என்னும் திட்டத்தின் மூலம் அறிவியல் கண்காட்சிகள், அறிவியல் தலைப்புகளில் விரிவுரைகள், அறிவியல் போட்டிகள், கணிப்பொறிப் பயிற்சிகள், நடுத்தர, மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சிகள் நடத்துவதற்குக் கல்வி நிறுவனங்களுக்கும் தன்னாட்சி நிறுவனங்களுக்கும் நிதி வழங்கப்படுகிறது. அன்றாட வாழ்வில் அறிவியல் தொழில்நுட்பத்தின் தேவையை உணர்த்தவும், பள்ளி மாணவர்களிடையே அறிவியல் உள்ளுணர்வை வளர்ப்பதும் இந்த நடவடிக்கைகளின் நோக்கமாகும். இளம் விஞ்ஞானிகளுக்கு ஊக்கமளித்தல் என்ற திட்டத்தின்கீழ் (*i*) இளம் விஞ்ஞானிகள் தங்களது ஆராய்ச்சிக் கட்டுரைகளை தேசிய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் கருத்தரங்குகளில் சமர்ப்பிப்பதற்கு பயணத் தொகை வழங்கப்படுகிறது. (*ii*) இளம் விஞ்ஞானிகள் தேசிய அளவில் சிறந்து விளங்கும் ஆராய்ச்சி மையங்களிலும், பல்கலைக்கழகங்களிலும் இரண்டு முதல் ஆறு மாதங்கள் வரை சிறப்புப் பயிற்சி பெற உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்தொகையானது மத்திய அரசுடன் பகிர்ந்து செலவிடப்படுகிறது. கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வு நிறுவனங்களிலும், மையங்களிலும் நடக்கும் அறிவியல் மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் ஆய்வரங்குகளுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. தொழில் நிறுவனங்கள், உயர் கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள், அரசுத் துறைகள் மற்றும் நிதி நிறுவனங்களிடையே கருத்துப் பரிமாறல் ஏற்பட வழிவகை செய்கிறது. தமிழில் அறிவியல் வெளியீடுகள் வருவதற்கு இந்த மன்றம் தமிழ் அறிவியல் புத்தகங்களின் ஆசிரியர்களுக்கு நிதியுதவி செய்கிறது. மாணவர் ஆய்வுத் திட்டத்தின்கீழ் இதுவரை மொத்தம் 830 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 2001-2002 ஆம் ஆண்டு 235 திட்டங்கள் மன்றத்தின் உதவியைப் பெறுகின்றன.





**9. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்**

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் 1983-ம் ஆண்டு தமிழக அரசால் நிறுவப்பட்டது. இம்மையம் தமிழ்நாடு சங்கச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு, இயங்கி வருகின்றது. பொதுவாக, நகர மற்றும் கிராமப்புற மக்களிடையேயும், குறிப்பாக மாணவச் சமுதாயத்தினரிடையேயும் அறிவியல் தொழில்நுட்ப விழிப்புணர்வை உருவாக்குவது இம்மையத்தின் முக்கிய நோக்கமாகும்.

9.2. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், பிர்லா நிறுவனங்களின் தாராள நன்கொடைத் தொகையான ரூபாய் இரண்டு கோடி செலவில் பி.எம். பிர்லா கோளரங்கம் என்றழைக்கப்படும் கோளரங்கத்தை நிறுவியுள்ளது. மேலும் ரூபாய் நான்கு கோடி செலவில் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தினை நிறுவியுள்ளது. பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் எட்டு விதமான அறிவியல் தலைப்புகளில் காட்சிக் கூடங்கள் உள்ளன. அவற்றில் 600 நேர்முகமாகப் பழகிடும் காட்சிப் பொருட்கள் அமைக்கப்பட்டுள்ளன.

9.3. சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மற்றும் சென்னை மாநகராட்சி ஆகியவைகளின் நிதி உதவியுடன் "நகர்ப்புற வளர்ச்சிக் கூடம்" அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென ஒரு வழிகாட்டுக் குழு மற்றும் தொழில்நுட்பக் குழு அமைக்கப்பட்டுள்ளன. ரூ.30.00 இலட்சம் பொருட்செலவில் நேரிடையாகப் பழகிடும் காட்சிப் பொருட்கள் அடங்கிய தகவல் தொடர்பு தொழில்நுட்பக் காட்சிக் கூடம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இக்காட்சிக்கூடம் விரைவில் நிறுவப்படவுள்ளது. திருச்சிராப்பள்ளியில் மண்டல அறிவியல் மையம் மற்றும் கோளரங்கம் அமைப்பதற்காக 22-01-1994 அன்று மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இதனைத் தொடர்ந்து மண்டல அறிவியல் மையம் அண்ணா அறிவியல் மையம் என பெயரிடப்பட்டது. ரூ. 128.00 இலட்சம் செலவில் கட்டப்பட்ட கோளரங்கமும், அறிவியல் பூங்காவும் தொடங்கப்பட்டன. இக்கோளரங்கத்தில் உள்ள படக் கருவி மற்றும் இதர சாதனங்கள் ரூ. 150.00 இலட்சம் மதிப்பிற்கு இந்திய ஜப்பானியப் பண்பாட்டு உறவின் அடிப்படையில் ஜப்பான் அரசிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளன. இந்த அறிவியல் மையத்தில் இந்தியன் ஆயில் நிறுவனத்தினர், இந்திய அரசு சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை

[ 2002 ஏப்ரல் 9

அமைச்சகத்தின் மூலம் அளிக்கப்பட இருக்கும் ரூ. 30.00 இலட்சத்தில் சுற்றுச் சூழல் காட்சிக் கூடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. கோயம்புத்தூரில் மண்டல அறிவியல் மையம் கோளரங்கத்துடன் அமைத்திட அந்நகரின் அருகே உள்ள விளாங்குறிச்சி கிராமத்தில் 5.91 ஏக்கர் நிலத்தினை மையம் தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டுள்ளது. வேலூரில் மாவட்ட அறிவியல் மையம் அமைத்திட 0.30.5 ஹெக்டேர் நிலம் சத்துவாச்சாரி என்ற இடத்தில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 25 மாவட்டத் தலைநகரங்களில், ஒரு மையத்திற்கு ரூ.10.00 கோடி என்ற அளவில் ரூ.250.00 கோடி பொருட்செலவில் மாவட்ட அறிவியல் மையங்கள் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான நிதியுதவி பெற, வளர்ச்சி அடைந்த நாடுகள் மற்றும் பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்கள், கொடை வளங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களான UNICEF, WHO, UNESCO ஆகியவைகள் அணுகப்படும்.

## 10. அறிவியல் நகரம்

"அறிவியல் நகரம்" சென்னை நகரில் கிண்டி மற்றும் தரமணி பகுதியில் அமைந்துள்ள மத்திய மற்றும் மாநில அரசினைச் சேர்ந்த இந்திய தொழில் நுட்ப நிறுவனம் மற்றும் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம் போன்று சுமார் 60 ஆராய்ச்சி நிறுவனங்களை உள்ளடக்கியது.

### 10.2. அறிவியல் நகரின் குறிக்கோள்கள்

1. இந்த நகரத்தில் தற்சமயம் அமைந்துள்ள நிறுவனங்கள் மற்றும் அமையவிருக்கும் புதிய நிறுவனங்களின் மூலமாக அறிவியல் தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்வது.
2. இந்தத் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் மூலதன நிறுவனங்களிடையே தொழில்நுட்பங்களைப் பரிமாற்றம் செய்தல்.
3. உறுப்பினர் நிறுவனங்களின் பயன்பாட்டிற்குத் தேவையான இந்திய அளவிலான மற்றும் உலக அளவிலான மாநாடுகளை நடத்த ஏதுவாக அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்ட ஒரு வளாகத்தை உருவாக்கி அதை நன்கு பராமரித்தல்.
4. சமுதாயப் பொருளாதார மற்றும் சுற்றுச் சூழல் முன்னேற்றத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை அதிகரித்தல்.



2002 ஏப்ரல் 9 ]

5. அறிவியல் நகர நிறுவனங்களிடையே அறிவியல் தொழில்நுட்ப பரிமாற்றங்களை ஊக்கப்படுத்துவது.
6. புதிய நிறுவனங்களைத் தோற்றுவிப்பதற்காக தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகம் (SIPCOT) உதவியுடன் அறிவியல் பூங்கா அமைத்தல்.
7. தொழிற்சாலை, மாநில அரசு, மத்திய அரசு (மனித வள மேம்பாட்டுத் துறை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, அணு சக்தித் துறை, விவசாயத் துறை முதலியன) தேசிய மற்றும் உலக நிதி முகமைகள், உலக வங்கி முதலியவற்றிலிருந்து நிதி திரட்டுதல்.

### 10.3. அறிவியல் நகரின் செயற்பாடுகள்

அறிவியல் நகரம் கீழ்க்காணும் திட்டங்களைச் செயற்படுத்துகிறது:—

1. தகவல் மையம் ஏற்படுத்துதல்.
2. அறிவியல் நகரத்தில் உள்ள நூலகங்களை இணைத்தல்.
3. அறிவியலைப் பிரபலப்படுத்துதல்.
4. விழிப்புணர்வு முகாம்கள் நடத்தி, அறிவியல் நகர அறிவியலாளர்களிடமும் மாணவர்களிடமும் அறிவியலில் தற்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைப் பற்றி விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
5. அறிவியல் நகர அறிவியலாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள், ஆராய்ச்சி வசதிகள் அடங்கிய விவரக் குறிப்பினைத் தோற்றுவித்தல்.
6. மகளிர் மேம்பாடு பற்றிய புள்ளிவிவரங்களைச் சேகரித்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு பற்றிய பயிற்சிகளையும் கலந்தாய்வுகளையும் நடத்துதல்.
7. அறிவியல் நகரம் தமிழ்நாடு முழுவதும் உள்ள பெண் அறிவியலாளர்கள் சம்பந்தப்பட்ட குறிப்பேடுகள் தயாரித்து வருகிறது.
8. தேசிய அளவில் கருத்தரங்கு நடத்துதல்.

[ 2002 ஏப்ரல் 9

9. அறிவியல் நகர ஆயுட்கால சாதனை விருது, இளம்பெண் விஞ்ஞானி விருது மற்றும் அறிவியல் தொழில்நுட்பத் துறையில் சிறந்த பணியாற்றும் பெண் விஞ்ஞானிகளுக்காக தொழில்நுட்ப விருது ஆகிய விருதுகளை ஏற்படுத்தியுள்ளது.

## 11. ஆவணக்காப்பகம்

அரசு ஆவணங்களை ஒருங்கிணைத்து காத்து வைப்பதற்குச் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் 1805 ஆம் ஆண்டு வில்லியம் பென்டிங் பிரபு அவர்களால் தமிழ்நாடு ஆவணக் காப்பகம் முதல் முதலில் தோற்றுவிக்கப்பட்டது. பின்னர், இது ஒரு முழுமையான ஆவணக் காப்பகமாக வடிவமைக்கப்பட்டு தற்போது எழும்பூரில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க வளாகத்திற்கு 1909 ஆம் ஆண்டு மாற்றப்பட்டு இயங்கி வருகிறது.

11.2 முந்நூறு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட டேனிஷ், டச்சு, ஆங்கிலம், பிரெஞ்சு, பெர்சிய மற்றும் மோடி மொழிகளில் எழுதப்பட்ட பழைய ஆவணங்கள் இந்த ஆவணக் காப்பகத்தில் உள்ளன. ஆவணங்கள் அறிவியல் முறையில் பாதுகாக்கப்படுகின்றன.

11.3 ஆவணக் காப்பகத்தில் சிப்பாய் கலகத்திற்கு முந்தைய காலத்தைச் சார்ந்த ஆவணங்கள் மிகவும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை. அவற்றிற்கு பொருள் விவர அட்டவணை முழுமையாக இல்லை. பழைய முறையிலான அட்டவணைகளைக் கொண்டு, ஆவணங்களை ஆய்வு செய்வதில் சிரமமும், காலதாமதமும் ஏற்படுகின்றன. எனவே ஆராய்ச்சிக்குப் பெரிதும் உதவும் பொருட்டு, முதற்கட்டமாக பொருள் விவர அட்டவணைகள் கணினிப்படுத்துதல் மேற்கொள்ளப்படுகிறது. கணினிப்படுத்தும் பணி சென்னைப் பல்கலைக்கழகம் மூலமாக நடைபெறுகிறது.

11.4 ஆவணங்களை மைக்ரோஃபிலிம் செய்ய அதி நவீன முறையில் கணினிமயமாக்கப்பட்ட மைக்ரோஃபிலிம் கேமரா நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆவணங்களை மைக்ரோஃபிலிம் செய்யும் பணி துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

11.5 ஆவணக் காப்பக நூலகத்திற்கு புத்தகங்களைப் பழுதுபார்த்துப் செப்பனிட லேமினேசன் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதன் மூலம் நூல்களைப் பழுதுபார்க்கும் பணி விரைவாக நடைபெற்று வருகிறது.



2002 ஏப்ரல் 9 ]

## இணைப்பு 1

### மாவட்ட வாரியாக மாநிலத்திலுள்ள மகளிர் பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் (2001-2002)

| வ. எண் (1) | மாவட்டம் (2) | அரசு (3) | அரசு மகளிர் (4) | சுயநிதி (5) | மொத்தம் (6) |
|---|---|---|---|---|---|
| 01 | சென்னை | 1 | - | - | 1 |
| 02 | திருவண்ணாமலை | - | - | 1 | 1 |
| 03 | நாமக்கல் | - | 1 | - | 1 |
| 04 | கோயம்புத்தூர் | 1 | 1 | - | 2 |
| 05 | திருச்சிராப்பள்ளி | - | 1 | - | 1 |
| 06 | தஞ்சாவூர் | - | 1 | - | 1 |
| 07 | நாகப்பட்டினம் | - | 1 | - | 1 |
| 08 | திண்டுக்கல் | - | 1 | - | 1 |
| 09 | மதுரை | 1 | - | - | 1 |
| 10 | விருதுநகர் | - | 1 | 1 | 2 |
| 11 | தூத்துக்குடி | 1 | - | - | 1 |
| | **மொத்தம்** | **4** | **7** | **2** | **13** |

## இணைப்பு 2

**மாவட்ட வாரியாக மாநிலத்திலுள்ள மகளிர் பொறியியற் கல்லூரிகள் (2001-2002)**

| வ. எண் (1) | மாவட்டம் (2) | அரசு (3) | அரசு மானியம் (4) | சுயநிதி (5) | மொத்தம் (6) |
|---|---|---|---|---|---|
| 01 | திருவள்ளூர் | - | - | 1 | 1 |
| 02 | தஞ்சாவூர் | - | - | 1 | 1 |
| 03 | வேலூர் | - | - | 1 | 1 |
| 04 | நாமக்கல் | - | - | 1 | 1 |
| 05 | விழுப்புரம் | - | - | 1 | 1 |
| | மொத்தம் | - | - | **5** | **5** |

## இணைப்பு 3

**மாநிலத்திலுள்ள பல்தொழில்நுட்பப் பயிலகங்களின் எண்ணிக்கை (2001-2002)**

| வருடம் (1) | அரசு (2) | அரசு மானியம் (3) | சுயநிதி (4) | மொத்தம் (5) |
|---|---|---|---|---|
| 1997-1998 | 21 | 35 | 112 | 168 |
| 1998-1999 | 21 | 35 | 143 | 199 |
| 1999-2000 | 22 | 35 | 145 | 202 |
| 2000-2001 | 22 | 35 | 148 | 205 |
| 2001-2002 | 22 | 35 | 146 | 203 |



## இணைப்பு 4

**மாநிலத்திலுள்ள பொறியியற் கல்லூரிகளின் எண்ணிக்கை (2001-2002)**

| வருடம் | அரசு | அரசு மானியம் | சுயநிதி | நிகர் நிலைப் பல்கலைக்கழகம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1997-98 | 7* | 3 | 76 | - | 86 |
| 1998-99 | 7* | 3 | 106 | - | 116 |
| 1999-00 | 7* | 3 | 113 | - | 123 |
| 2000-01 | 7* | 3 | 143 | - | 153 |
| 2001-02 | 7* | 3 | 207 | 5 | 222 |

* திருச்சி மண்டல பொறியியற் கல்லூரி உள்ளடக்கியது.

## இணைப்பு 5

**கல்லூரிகளின் எண்ணிக்கை 2001-2002 (இன வாரியாக)**

| இனம் | அரசு | அரசு மானியம் பெறுபவை | சுயநிதிக் கல்லூரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 60 | 133 | 247 | 440 |
| கல்வியியல் கல்லூரிகள் | 7 | 14 | 1 | 22 |
| கீழ்த்திசை கல்லூரிகள் | - | 9 | - | 9 |
| உடற்பயிற்சிக் கல்லூரிகள் | - | 3 | 1 | 4 |
| சமுதாயப் பணிப் பள்ளிகள் | .. | 2 | .. | 2 |
| **மொத்தம்** | **67** | **161** | **249** | **477** |

## இணைப்பு 6

### பல்கலைக்கழகத்தில் இணைக்கப்பெற்ற கல்லூரிகள் 2001-2002

| வ.எண் | பல்கலைக்கழகத்தின் பெயர் | கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | சென்னைப் பல்கலைக்கழகம் | 146 |
| 2 | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | 85 |
| 3 | பா[illegible]யார் பல்கலைக்கழகம் | 76 |
| 4 | [illegible]ராசன் பல்கலைக்கழகம் | 75 |
| 5 | ம[illegible]ன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் | 55 |
| 6 | பெரியார் பல்கலைக்கழகம் | 40 |
| | மொத்தம் | **477** |

## இணைப்பு 7

### மாணவர்களின் எண்ணிக்கை

| படிப்பு | 1997-1998 | 1998-1999 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 |
|---|---|---|---|---|---|
| பி.ஏ | 86364 | 88967 | 94540 | 97431 | 98760 |
| பி.எஸ்சி. | 133586 | 141136 | 161691 | 169038 | 173163 |
| பி.காம் | 56797 | 60606 | 71096 | 73333 | 74443 |
| முதுநிலை | 32645 | 34684 | 42995 | 46092 | 48146 |
| பிற | 22508 | 24570 | 31309 | 34280 | 36309 |
| மொத்தம் | 331900 | 349963 | 401631 | 420174 | 430841 |





## இணைப்பு II

(278 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### கோரிக்கை எண் 41 பள்ளிக் கல்வித் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003

தெய்வப் புலவர் திருவள்ளுவர், அவருடைய ஒப்பற்ற படைப்பான திருக்குறளில்

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்றை யவை"

என்று கல்வியின் சிறப்பையும், மாண்பையும் என்றும் பொருந்தும் வண்ணம் எடுத்தோதியுள்ளார்.

"கல்வி கற்ற மாந்தர், கல்லாதவனைக் காட்டிலும் உயர்ந்தாராவர் கல்லாதவர் இறந்தோருக்கு சமமாவர்"

என்று அரிஸ்டாட்டில் கல்வியின் சிறப்பைப் பெரிதும் புகழ்ந்துள்ளார்.

"நம்மிடையே புதைந்துள்ள சிறந்தவற்றை உடல், மனம், ஆன்மா ஆகியவற்றில் படிந்துள்ள சிறந்த கூறுகளைச் சீர்பட வெளிக்கொணர்வதே கல்வியின் நோக்கமாகும்"

என காந்தியடிகள் கூறியுள்ளார்.

கல்வி என்னும் வற்றாத செல்வம் தனி மனிதனின் வாழ்க்கையை வளம் பெறச் செய்யவும், அவன் சார்ந்த சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைகின்றது.

கல்வி என்பது ஒரு தனிப்பொருளோ, ஏதோ ஒன்றை நமக்குப் புதிதாக அளிப்பதோ அல்ல. மனித ஆற்றலை, திறமையை வளப்படுத்தும் முறைமைக்குத்தான் கல்வி அளித்தல் என்று பெயர். பிறக்கும் ஒவ்வொருவரும் ஆற்றலோடுதான் பிறக்கிறார்கள். ஆற்றலோடு பிறந்த மக்கள் அனைவருக்கும் அறிவொளி மலர கல்வி பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பது அரசின் இலட்சியமாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய தமிழ் அல்லது தாய்மொழி - ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கையை இவ்வரசு தொடர்ந்து கடைப்பிடிக்கும்.

[ 2002 ஏப்ரல் 9

பள்ளிக்குச் செல்லத் தொடங்கும் சிறுவர்களின் மனம், விரிந்த சிந்தனை வயப்படுவதற்கு அடிப்படை ஊற்றுக் கண்ணாக அமைவது தாய்மொழிக் கல்வியாகும். தாய்மொழி என்பது உடலோடும் உயிரோடும் ஒன்றி கலந்ததாகும். எனவே அனைத்துப் பள்ளிகளிலும் பாடத் திட்டங்களில் தமிழ் மொழி ஒரு பாடமாக கற்பிக்கப்படுவது உறுதி செய்யப்படும்.

கல்வி வளர்ச்சியில் தமிழகம் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக திகழ வேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய சிந்தனைகளுக்கேற்ப பள்ளிக் கல்வித் துறை சில கொள்கைகளை வகுத்துச் செயலாற்றவுள்ளது.

* பள்ளி இல்லாத சிற்றூர்களில் பள்ளி வசதியை ஏற்படுத்துதல்
* பள்ளி வயது குழந்தைகள் அனைவரையும் 2003-ம் ஆண்டுக்குள் பள்ளியில் சேர்த்தல்
* 2007-க்குள் அனைத்து குழந்தைகளுக்கும் ஐந்து ஆண்டு கல்வியை அளிக்கச் செய்தல்
* 2010-க்குள் அனைத்து குழந்தைகளுக்கும் 8 ஆண்டு கல்வியை அளிக்கச் செய்தல்
* 2010-க்குள் பள்ளி இடைநிற்றலை அறவே ஒழித்தல்
* பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்
* பாடத் திட்டத்தின் தரத்தை உயர்த்துதல்
* பள்ளிகளில் பாலர் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரை தரம் உயர்த்துதல்
* குறைந்தபட்ச கல்வி கற்றலை உறுதி செய்தல்
* ஆசிரியர்களுக்குப் புத்தறிவுப் பயிற்சி அளித்தல்
* கல்லாமையை இல்லாமை ஆக்குதல்
* பள்ளித் தேர்வுகளில் மறைபொருள் தன்மையைக் காத்து குறைபாடுகளற்ற முறையில் தேர்வு முடிவுகளை வெளியிடுதல்.
* எழுத்துத் தேர்வு மூலம் தரமான ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தல்
* தரமான பாட நூல்களை குறைந்த விலையில் உரிய காலத்தில் விநியோகம் செய்தல்
* கிராமங்களில் நூல் நிலையங்களை ஏற்படுத்துதல்
* பள்ளிகளில் வாழ்க்கைத் தொழில் பயிற்சிக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தல்
* பள்ளிகளில் உடல் நலக் கல்வியை ஊக்கப்படுத்துதல்
* பள்ளிகளின் நிருவாகத்தில் பெற்றோர்களையும் பெருமளவு ஈடுபடச் செய்தல்



2002 ஏப்ரல் 9 ]

இக்கொள்கைகளின் அடிப்படையில் பள்ளிக் கல்வித் துறையின்கீழ் இயங்கும் இயக்குநரகங்களின் செயற்பாடும், அவற்றின் கொள்கைகளும், திட்டங்களும் அமைந்துள்ளன. இத்தொலைநோக்குக் கொள்கையைச் செயல்படுத்த முக்கியப் பொறுப்பு வகிக்கும் தொடக்கக் கல்வி இயக்குநரகம், பள்ளிக் கல்வி இயக்குநரகம், பள்ளிசாரா்க் கல்வி இயக்குநரகம் ஆகியவையும், அவற்றுக்கு உறுதுணையாகச் செயல்படும் ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரகம், அரசுத் தேர்வுகள் இயக்குநரகம், ஆசிரியர் தேர்வு வாரியம், தமிழ்நாட்டு பாட நூல் கழகம் மற்றும் பொது நூலக இயக்குநரகம் ஆகியவையும் தத்தம் பணியில் சிறப்பாக ஈடுபட்டு, கல்வியறிவில் தமிழகத்தை உன்னத நிலைக்கு உயர்த்திட இத்துறை முனைந்து செயல்படும்.

**நிதி ஒதுக்கீடு**

மானியக் கோரிக்கை எண் 41 - பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் 2002-2003 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.4165.93 கோடி ஆகும். இதில் ரூ.246.89 கோடி திட்டப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்விக்கான இந்த ஒதுக்கீடு நிதிநிலை அறிக்கையில் திட்டமிடப்பட்டுள்ள வருவாய்க் கணக்கில் மொத்தச் செலவான ரூ.26861.54 கோடியில் 15.50 விழுக்காடு ஆகும்.

**2002-2003 ஆம் ஆண்டு செலவுத் திட்ட மதிப்பீடு**

| கணக்குத் தலைப்பு | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| **2202 பொதுக் கல்வி** | | | |
| 01 தொடக்கக் கல்வி | 14636.94 | 205913.27 | 220550.21 |
| 02 இடைநிலைக் கல்வி | 5104.10 | 179771.81 | 184875.91 |
| 04 முதியோர் கல்வி | 0.01 | 148.93 | 148.94 |
| 05 மொழி வளர்ச்சி | 2.49 | 349.92 | 352.41 |
| 80 பொது | 498.80 | .. | 498.80 |
| **மொத்தம்** | **20242.34** | **386183.93** | **406426.27** |

| கணக்குத் தலைப்பு | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது (ரூபாய் இலட்சத்தில்) | மொத்தம் |
|---|---|---|---|
| 2204 போட்டி விளையாட்டுகளும் இளைஞர் நலப் பணிகளும் | 131.01 | 113.17 | 244.18 |
| 2205 கலையும் பண்பாடும் - பொது நூலகங்கள் | 680.00 | 2142.52 | 2822.52 |
| 2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் | 1795.91 | 27.70 | 1823.61 |
| 2235 சமூகப் பாதுகாப்பும், நலனும் | .. | 202.55 | 202.55 |
| 2251 தலைமைச் செயலக சமூகப் பணிகள் | .. | 297.30 | 297.30 |
| 2505 ஊரக வேலைவாய்ப்பு | 1761.00 | .. | 1761.00 |
| 4202 கல்வி, விளையாட்டு போட்டி, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு | 72.81 | .. | 72.81 |
| 7610 அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | .. | 450.00 | 450.00 |
| 7615 பல்வகைக் கடன்கள் | .. | 4.81 | 4.81 |
| சேர்க்க - திருப்பி வசூலிக்கப்படுபவை | 6.12 | 2481.61 | 2487.73 |
| பெருமொத்தம் | **24689.19** | **391903.59** | **416592.78** |

## கொள்கை விளக்கம் மற்றும் திட்டங்கள்

### 1. தொடக்கக் கல்வி

**தொலைநோக்கு**

'அனைவருக்கும் கல்வி' என்ற இலக்கினை அடைவதும், அமைதி, கண்ணியம், சகிப்புத் தன்மை, உரிமை மற்றும் சமநிலையுடன் கூடிய





மகிழ்ச்சிகரமான, அன்பான சூழ்நிலையில், குழந்தைகளின் ஒருங்கிணைந்த ஆளுமை வளர்ச்சிக்கான கல்வியை உறுதி செய்தலும் தொடக்கக் கல்வியின் தொலைநோக்கு ஆகும்.

**1.1. குறிக்கோள்**

* பள்ளி வயது குழந்தைகள் அனைவரையும் பள்ளிகளில் சேர்த்தல்.
* பள்ளிகளில் சேர்ந்த குழந்தைகள் அனைவரையும் இடையில் நின்று விடாமல், 8வது வகுப்பு வரை தொடர்ந்து தக்க வைத்து நிறைவுறச் செய்தல்.
* பள்ளிகளில் பயிலும் அனைத்து குழந்தைகளும் குறைந்தபட்சக் கற்றல் திறன்கள் அடையும் வகையில் தரமான கல்வியை வழங்குதல்.
* குழந்தைகளின் ஒருங்கிணைந்த ஆளுமை வளர்ச்சியை உறுதி செய்தல்.
* சமுதாயப் பங்கேற்புடன், பன்முகப்படுத்தப்பட்ட திட்டமிடுதலையும் மேலாண்மையையும் செயல்படுத்துதல்.
* கட்டாய ஆரம்ப கல்விச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

**1.2. குறிக்கோள்களை அடைய பின்பற்றப்படும் வழிமுறைகள்**

* தகுதியுள்ள அனைத்து கிராமங்களிலும் தொடக்கப் பள்ளி தொடங்குதல்.
* தேவைக்கு ஏற்ப தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்துதல்.
* தேவையான பள்ளிகளுக்கு கூடுதல் ஆசிரியர்களை நியமித்தல்.
* வகுப்பறை கட்டடங்கள், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி போன்றவற்றை பள்ளிகளுக்குச் செய்து தருதல்.
* அங்கன்வாடி, பால்வாடி மையங்கள், மழலையர் பள்ளிகள் மற்றும் தொடக்கப் பள்ளிகள் ஆகியவற்றிற்கு இடையில் இணைப்பு ஏற்படுத்துதல்.
* பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி புதிய மாணவர் சேர்க்கையினை அதிகப்படுத்துதல் மற்றும் பள்ளியினின்று இடைநிற்றலைத் தவிர்த்தல்.
* மேற்பார்வை, நிர்வாக அமைப்பினை வலுப்படுத்துதல்.

* பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துதலிலும் திட்டமிடுதலிலும் சமுதாயத்தைப் பங்கேற்கச் செய்தல்.
* ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளித்து கல்வியின் தரத்தை மேம்படுத்துதல்.

### 1.3. கட்டாய ஆரம்பக் கல்விச் சட்டம், 1994

பள்ளி வயது குழந்தைகள் அனைவரையும் பள்ளிக்கு பெற்றோர்கள் கட்டாயம் அனுப்ப வேண்டும் என்பது இச்சட்டத்தின் நோக்கமாகும். இதனையடுத்து குழந்தைகளை பெற்றோர்கள் பள்ளிக்கு அனுப்புவதில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. மாணவர் சேர்க்கையில் தமிழகம் முன்னோடி நிலையில் உள்ளது. புள்ளிவிவரப்படி 98.66% பள்ளி வயதுக் குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள 1.34% குழந்தைகள் பள்ளியில் சேர்க்கப்படாமல் உள்ளனர். பள்ளி செல்லாத 1.34% பள்ளி வயது குழந்தைகளை பள்ளியில் சேர்க்க சமுதாயத்தின் துணையோடு மாவட்ட ஆட்சியர்கள் தங்கள் மாவட்டங்களில் மாணவர் சேர்க்கை குறித்து பேரியக்கம் ஒன்றினைச் செயல்படுத்துகின்றனர்.

### 1.4. புதிய பள்ளிகள்

ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் பள்ளிகள் இல்லாமலும், மக்கள் தொகை 300-ம் அதற்கு மேற்பட்ட சிற்றூர்களிலும் ஆரம்பப் பள்ளி அமைக்கப்பட வேண்டுமென்று அரசு முதன்மைக் கொள்கையாகக் கொண்டுள்ளது. அதன்படி 2001-2002-ல், 452 ஆரம்பப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2002-2003-ல், புதிய ஆரம்பப் பள்ளிகள் தொடங்கப்படும்.

அதேபோன்று இரண்டு ஆரம்பப் பள்ளிகளுக்கு ஒரு நடுநிலைப் பள்ளி அமைய வேண்டுமென்பதும் நோக்கமாகும். 2001-2002-ல், 197 ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. 2002-2003-ல் 1243 ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்.

### 1.5. தனியார் பள்ளிகள்

கல்வி அளிப்பதில் தனியார் பங்கு மிகவும் போற்றுதற்குரியது. அரசின் நிதி நிலைமையைக் கருதி, 1991-92-ம் கல்வி ஆண்டு முதல் சுயநிதிப் பள்ளிகளுக்கு "அரசின் நிதி உதவி எப்போதும் கோரமாட்டோம்" என்ற உறுதி மொழிக்கு உட்பட்டு ஆரம்பப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகள் தொடங்க அனுமதி வழங்கப்படுகிறது. 2001-2002 ஆம் கல்வி ஆண்டில், 11 தொடக்கப் பள்ளிகளுக்கும், 15 நடுநிலைப் பள்ளிகளுக்கும்



நிதி உதவியின்றி சுய நிதிப் பள்ளிகளாகச் செயல்பட, தொடக்கக் கல்வி இயக்குநரால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

### 1.6. பெண் குழந்தைகள் கல்வி

தொடக்கப் பள்ளிகளில் ஆண் குழந்தைகளின் சேர்க்கை வீதம் 98.77 என்ற நிலையிலும், பெண் குழந்தைகளின் சேர்க்கை வீதம் 98.54 என்ற நிலையிலும், நடுநிலைப் பள்ளிகளில் ஆண் குழந்தைகளின் சேர்க்கை வீதம் 94.48 என்றும், பெண் குழந்தைகளின் சேர்க்கை வீதம் 92.73 என்றும் உள்ளதால் சேர்க்கை வீதத்தில் ஆண் குழந்தைகளுக்கும், பெண் குழந்தைகளுக்குமிடையே அதிகமான வேறுபாடு தமிழகத்தில் காணப்படவில்லை.

### 1.7. ஆசிரியர்கள் நியமனம்

பள்ளிகளில் கல்வியின் தரம் உயர ஆசிரியர் காலிப் பணியிடங்களை அவ்வப்போது நிரப்புவது அவசியமாகிறது. அதற்கேற்ப ஆசிரியர் காலிப் பணியிடங்கள் அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பகப் பட்டியலிலிருந்து வரிசைக் கிரமமாக இன சுழற்சி முறையில், முன்னுரிமை ஆகியவைக்குட்பட்டு நிரப்பப்பட்டு வருகிறது. இம்முறை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும், ஒரு மாவட்டத்தில், ஒரு குறிப்பிட்ட இனத்தில் நியமனம் செய்ய ஆசிரியர்கள் இல்லாதபோது, அந்த வகை இனத்தவரிடையே அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பட்டியல் பெற்று தொகுத்து வேலை வாய்ப்பக பதிவு மூப்பின் அடிப்படையில் நியமனம் செய்யப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டில், ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிகளில் 3651 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் உபரியாக காணப்பட்ட 7987 பணியிடங்களில், 1739 பணியிடங்கள் 2001-2002-ல், தேவையான பள்ளிகளுக்கு பணி நிரவல் செய்யப்பட்டுள்ளன. அதே போன்று அரசு உதவிபெறும் ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளில் சுமார் 8811 பணியிடங்கள் உபரியென கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 849 பணியிடங்கள் பணி நிரவல் செய்யப்பட்டுள்ளன. பணி நிரவல் செய்யப்படாத உபரி பணியிடங்கள், 2002-2003-ல் தேவையான பள்ளிகளுக்கு பணி நிரவல் செய்யப்படும். இந்நிரவல் பணியானது மே 2002-ல் முடிக்கப்பட்டு, அவரவர் ஜூன் மாத ஆரம்பத்திலேயே அந்தந்தப் பள்ளியில் சேர ஏதுவாக பணி நிரவல் செய்யப்படும். இந்தப் பணி நிரவல் முடிந்தபின், மேலும் ஆசிரியர் பணியிடங்கள் காலியிருப்பின் அதனையும் வரும் கல்வியாண்டின் ஆரம்ப நிலையிலேயே நிரப்பப்படும். அவ்வாறு நிரப்பப்படும்போது ஒரு பள்ளிக்கு குறைந்தது இரு ஆசிரியர்கள் நியமிப்பது உறுதி செய்யப்படும்.

[ 2002 ஏப்ரல் 9

## 1.8. ஆசிரியர் மாறுதல்

ஆசிரியர்கள் இடமாற்றம் குறித்து தற்போது பின்பற்றப்படும் வெளிப்படையான கலந்தாய்வு முறையினால் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்திய முதல் மாநிலம் தமிழ் நாடாகும். ஆசிரியர்களிடையே இந்த முறை நல்ல வரவேற்பைப் பெற்றிருப்பதுடன் நாடு முழுவதும் பாராட்டையும் பெற்றுள்ளது. இக்கலந்தாய்வு முறையை கடந்தாண்டு செயல்படுத்தியதில் காணப்பட்ட குறைகள் களையப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்படும். **2001-2002ல், சுமார் 20452 ஆசிரியர்கள் மாறுதல்** பெற்றுள்ளனர்.

## 1.9. திருத்தப்பட்ட பாடத்திட்டம்

தொடக்கக் கல்வி நிலைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட குறைந்தபட்ச கற்றல் திறன்களை அடிப்படையாகக் கொண்டு, 1995-96 ஆம் ஆண்டு முதல் 1999-2000 வரையில், 1 முதல் 5 வகுப்புகளுக்கு பாடநூல்கள் தயாரித்து வெளியிடப்பட்டன. 1997-98 மற்றும் 1998-1999 வருடங்களில் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் மூலம் தயாரித்து வெளியிடப்பட்ட 4 மற்றும் 5 ஆம் வகுப்புப் பாடநூல்களில் கையாளப்பட்ட புதிய அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டு, 2000-2001 ஆம் ஆண்டு 1 ஆம் வகுப்புப் பாடநூல்களும் திருத்தி அமைக்கப்பட்டன.

சிறுபான்மை மொழிகளான மலையாளம், கன்னடம், தெலுங்கு, உருது போன்ற மொழிகளுக்குரிய பாடநூல்கள் இதுவரை அந்தந்த மாநிலத்திலிருந்து வாங்கி தமிழகத்திலுள்ள பள்ளிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. சிறுபான்மை மொழிக்குரிய பாடநூல்களையும், தமிழகத்தின் கல்வி, கலை, கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றின் அடிப்படையில் தயாரிக்க வேண்டும் என்ற அடிப்படையில் 3, 4 மற்றும் 5 ஆம் வகுப்புக்கான சிறுபான்மை மொழிப் பாடநூல்கள், 2001-2002 ஆம் ஆண்டில் தயாரித்து வெளியிடப்பட்டன.

## 1.10. மழலையர் பள்ளிகள்

மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் 'Code of regulations for approved Nursery and Primary Schools' என்ற விதிமுறைகளின் அடிப்படையில் இயங்கி வருகின்றன. சுமார் 2756 பள்ளிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2448 பள்ளிகள் அனுமதியில்லாமல் நடைபெற்றுக் கொண்டுள்ளன. பயிற்று மொழி சம்பந்தப்பட்ட வழக்கு உச்ச நீதி



2002 ஏப்ரல் 9 ]

மன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில் ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்ட பள்ளிகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டு வருகிறது. உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், புதிய நர்சரி பள்ளிகளுக்கு அனுமதி வழங்குவது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

## 1.11. நடுநிலை வகுப்புகளில் கல்வியின் தரத்தினை மேம்படுத்துதல்

பள்ளிகளில் 6, 7, 8 வகுப்புகளை தற்போது இடைநிலை ஆசிரியர்கள் கையாண்டு வருகின்றனர். அவ்வப்போது திருத்தியமைக்கப்படும் தரமான பாடத்திட்டத்திற்கேற்ப அறிவியல், கணிதம் போன்ற பாடங்களை இந்த வகை ஆசிரியர்களால் கையாள இயலுவதில்லை. இதனால் கல்வியின் தரம் பாதிக்கப்படுகிறது. பள்ளி படிப்பிற்கு பின்னும் மாணவர்கள் சராசரி மாணவர்களாகவே திகழ்கின்றனர். எனவே அடிப்படைக் கல்வி தரமுள்ளதாக அமைய வேண்டுமென்பது அவசியமாகிறது. தமிழ்நாட்டை ஒவ்வொரு துறையிலும் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகத் திகழச் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதிபூண்டு, அதனை எய்திட 15 அம்சங்களை உள்ளடக்கிய திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. அத்திட்டத்தின்படி பாலர் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை கல்வியை தரம் உயர்த்த கவனம் செலுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அனைத்துப் பள்ளிகளிலும், **6, 7, 8** வகுப்புகளில் பி.எட். கல்வித் தகுதி பெற்ற ஆசிரியர்களை படிப்படியாக நியமிக்க ஏதுவாக நடுநிலைப் பட்டதாரி ஆசிரியர் **Middle Grade Graduate Teacher** என்ற புதிய பதவி ஏற்படுத்தப்படும்.

அரசு உதவிபெறும் ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் 10-7-1995 வரை நியமனம் செய்யப்பட்ட பி.எட். தகுதி பெற்ற ஆசிரியர் நியமனங்கள் முறைப்படுத்தப்பட்டு உள்ளன. அதன் பின்னரும், இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில், பி.எட். தகுதி பெற்ற ஆசிரியர்களை தனியார் பள்ளிகளில் நியமித்த வண்ணம் இருந்ததோடல்லாமல், அது போன்ற நியமனங்களை முறைப்படுத்தும்படி உயர் நீதிமன்றத்திலும் வழக்கு தொடர்ந்தனர். அது போன்ற நியமனங்களை முறைப்படுத்துவது குறித்து பரிசீலிக்கும்படி சென்னை உயர் நீதிமன்றம் 29-6-2001 அன்று அளித்த தீர்ப்பின்படி அது போன்ற சுமார் 1300 நியமனங்களை முறைப்படுத்த ஆராயப்பட்டு வருகிறது.

[ 2002 ஏப்ரல் 9

## 1.12. நடுநிலைப் பள்ளிகளில் உடற்கல்விக்கு முக்கியத்துவம்

"ஆரோக்கியமான மனதுக்கு ஆரோக்கியமான உடலே அடிப்படை" குழந்தைகள் அனைத்து நற்பண்புகளையும் பெற்று வாழச் செய்வதே கல்வியின் நோக்கங்களில் ஒன்று ஆகும். உடற்கல்வி, விளையாட்டுத் திறன்களை மட்டும் வளர்க்க பயன்படுவதோடு மட்டும் நின்று விடாமல், குழு உணர்வு (team spirit) பொறுமை, ஒற்றுமை, சகிப்புத் தன்மை போன்ற நற்பண்புகளையும் வளரச் செய்கிறது. எனவே அனைத்து நடுநிலைப் பள்ளிகளிலும் உடற்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

## 1.13. நடமாடும் நூலகங்கள்

பாடப்புத்தகங்கள் மட்டுமே மாணவனை முழு மனிதனாக்குவதில்லை. கூடுதலாகப்படிக்கும் பழக்கமே ஒரு மனிதனை முழுமையாக்கும். எனவே அனைத்து தொடக்க, நடுநிலைப் பள்ளிகளுக்கும் நடமாடும் நூலகங்களை ஏற்படுத்தும் முகத்தான் தற்போது செயல்படும் நடமாடும் அறிவியல் ஊர்தி ஒரு பகுதியாக பயன்படுத்தப்படும். இதன் மூலம், சுழற்சி முறையில் பள்ளிகளுக்கு புத்தகங்கள் வழங்கப்படும்.

## 1.14. அடிப்படை வசதிகள்

தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. மைய அரசின் பல்வேறு திட்டங்களின் வாயிலாக கீழ்க்கண்டவாறு அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

| திட்டம் | பள்ளிக் கட்டடங்கள் | கழிப்பிட வசதிகள் | குடிநீர் வசதிகள் | மின் வசதி |
|---|---|---|---|---|
| பதினோராவது நிதிக் குழு (முதலாம் கட்டப் பணி) | 15 | 435 | 1500 | 350 |
| கல்வியில் பின்தங்கிய சிறுபான்மையினர் பகுதிக்கான முனைப்புத் திட்டம் | 18 | 18 | 18 | 18 |
| பிரதம மந்திரியின் கிராம வளர்ச்சித் திட்டம் | 1742 | 1431 | 1431 | .. |



2002 ஏப்ரல் 9 ]

## 1.15. கரும்பலகைத் திட்டம்

தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் போதிய ஆசிரியர்கள் நியமனம், கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்டுதல், கற்பிப்பு சாதனங்கள் வழங்குதல் ஆகியவற்றினை மைய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன்கீழ் 29195 ஆரம்பப் பள்ளிகளும், 1560 நடுநிலைப் பள்ளிகளும் பயன் பெற்றுள்ளன. 2157 வகுப்பறை கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 1610 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் ஐந்தாம் கட்டப் பணியின்கீழ், 1828 நடுநிலைப் பள்ளிகள் தெரிவு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கென மைய அரசு ரூ.9.14 கோடி அனுமதித்துள்ளது.

## 1.16. இயலாதோர் ஒருங்கிணைந்த கல்வித் திட்டம்

பள்ளிகளில் இயலாத குழந்தைகளையும், பிற நல்ல நிலையில் உள்ள குழந்தைகளுடன் கலந்து பயில வாய்ப்பளிக்க வேண்டும் என்று 1986-தேசிய கல்விக் கொள்கை கூறுகிறது. இதன்படி, பார்க்க இயலாத, கேட்க இயலாத, மன வளர்ச்சி குறைந்த, உடற் குறையுடைய குழந்தைகளையும் கல்வி பயிலச் செய்ய வேண்டும். இதற்கான திட்டம் மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் மூலமும் செயல்படுத்தப்படும். தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பணியும் ஊக்கப்படுத்தப்படும்.

## 1.17. வானொலி ஒலிப்பதிவுப் பெட்டி வழங்குதல்

கல்வித் தரத்தை மேம்படுத்தும் மைய அரசின் கல்வி தொழில்நுட்பத் திட்டத்தின்கீழ், இதுவரை 20,000 தொடக்க, நடுநிலைப் பள்ளிகளுக்கு வானொலி-ஒலிப்பதிவுப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 6100 தொடக்க, நடுநிலைப் பள்ளிகளுக்கு வானொலி-ஒலிப்பதிவுப் பெட்டிகள் வழங்க மைய அரசு ரூ.85.40 இலட்சம் வழங்கியுள்ளது. வானொலி-ஒலிப்பதிவுப் பெட்டிகளை அந்தந்த பெற்றோர் ஆசிரியர் சங்கமே வாங்கிட ஏதுவாக கருத்துரு ஆராயப்பட்டு வருகிறது.

## 1.18. வண்ண தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல்

கல்வித் தரத்தை மேம்படுத்தும் கல்வி தொழில்நுட்பத் திட்டத்தின் கீழ் 2000 தொடக்க, நடுநிலைப் பள்ளிகளுக்கு வண்ண தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க மைய அரசு ரூ.2.25 கோடியும், மாநில அரசு ரூ.75

இலட்சமும் அனுமதித்துள்ளன. தொலைக்காட்சிப் பெட்டிகளை அந்தந்த பெற்றோர் ஆசிரியர் சங்கமே வாங்கிட ஏதுவாக கருத்துரு ஆராயப்பட்டு வருகிறது.

### 1.19. கல்வியில் பின்தங்கிய சிறுபான்மையினர் பகுதிக்கான மைய அரசின் முனைப்புத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டம்-இராமநாதபுரம் ஒன்றியம், நீலகிரி மாவட்டம்-கூடலூர் ஒன்றியம் ஆகிய பகுதிகள் மைய அரசால் அடையாளம் காணப்பட்டு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இதற்கென மைய அரசு விடுவித்த ரூ.150.12 இலட்சத்தில், ரூ.72.81 இலட்சம் செலவு செய்யப்பட்டு விட்டது. மீதமுள்ள ரூ.77.31 இலட்சம், 2002-2003-ல் செலவு செய்யப்படும். மேலும், இப்பகுதிகளில் ஆதிதிராவிடர், மிகவும் பிற்பட்டோர் நலத் துறையின்கீழ் விடுதிகள் வசதிக்காக நிதியுதவியும் கோரப்பட்டுள்ளது. இது தவிர, சிறுபான்மையினர் அதிகம் வாழும் மேலும் சில பகுதிகள் அடையாளம் காணப்பட்டு இத்திட்டத்தின்கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

### 1.20. நலத் திட்டங்கள்

பள்ளி வயது எய்திய அனைத்துக் குழந்தைகளை பள்ளியில் சேர்க்கவும், சேர்ந்த குழந்தைகளின் இடைநிற்றல் சதவீதத்தைக் குறைக்கும் நோக்கத்தோடு மாணவர்களுக்கான பல்வேறு நலத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

இக்குறிக்கோளை அடைவதற்கு, 1982 ஆம் ஆண்டு முதல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக மாணவர் சேர்க்கை கூடியபோதிலும் மாணவர் இடைநிற்றல் எதிர்பார்த்த அளவு குறையவில்லை. எனவே இலவசப் பாடநூல் திட்டத்தின்கீழ் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களும், 6 முதல் 8 வகுப்பு வரை சத்துணவு சாப்பிடும் மாணவர்களும் பயன்பெறுகின்றனர். 2001-2002 ஆம் கல்வியாண்டில், சுமார் 60.81 இலட்சம் மாணவ, மாணவியர் பயன்பெறுகின்றனர். இலவச சீருடை வழங்கும் திட்டம், 1985-86ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் வாயிலாக 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை சுமார் 47.39 இலட்சம் மாணவ, மாணவியர் பயன்பெறுகின்றனர். இலவசக் கரும்பலகை வழங்கும் திட்டம் 1984-1985 முதல் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் முதல் வகுப்பில். பயிலும் அனைத்து மாணவ, மாணவியரும்





பயன்பெறுகின்றனர். 2001-2002 ஆம் கல்வியாண்டில் சுமார் 8.80 இலட்சம் மாணவ, மாணவியர் பயன்பெறுகின்றனர்.

### 1.21. கற்றலில் இனிமை

குழந்தைகள் இயற்கையாகவே விரும்பி ஏற்கின்ற ஆடல், பாடல், கதைகள், நாடகங்கள் போன்ற முறைகளின் மூலம் கற்பதே கற்றலின் இனிமையாகும். இதுவே, குழந்தை மைய செயல்பாட்டுக் கல்வி எனவும் கூறலாம். இனிமையான வகுப்பறை கற்றலை உருவாக்குதலை ஆசிரியர்கள் கடமையாகக் கொள்ள வேண்டும். இதற்கென 'யுனிசெப்' நிதியுதவியுடன் அனைத்து ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### 1.22. மாதிரிப் பள்ளிகள்

மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்க தமிழகத்திலுள்ள தொடக்க பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் சில பள்ளிகள் தெரிவு செய்யப்பட்டு மாதிரிப் பள்ளிகளாக செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகள் இயக்குநர் முதல் உதவிக் கல்வி அலுவலர் வரை உள்ள அனைத்து அலுவலர்களின் வழிகாட்டுதலில் இயங்கி வருகின்றன. இத்திட்டத்தில் 838 பள்ளிகள் மாதிரிப் பள்ளிகளாக தெரிவு செய்யப்பட்டு, ஒரு பள்ளிக்கு ஒரு அலுவலர் வீதம் 838 அலுவலர்கள் கண்காணிப்பில் இப்பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. இப்பள்ளிகள், பிற பள்ளிகளுக்கு, கற்பித்தலிலும், பிற செயல்பாடுகளிலும் முன்மாதிரியாகத் திகழும்.

### 1.23. சிறந்த பள்ளிகளுக்கு விருது வழங்குதல்

பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களையும், தலைமை ஆசிரியர்களையும் ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும், சிறந்த மூன்று பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு, ஆசிரியர் தினத்தன்று அப்பள்ளிகளுக்கு கேடயங்களாக விருதுகள் வழங்கப்படுகின்றன.

பள்ளிகளின் அடிப்படை வசதிகள், மாணவர் கல்வித் தரம், பள்ளியின் ஆண்டுத் தேர்வு தேர்ச்சி விகிதம், கூடுதல் சேர்க்கை விகிதம், இடைநிற்றல் விகிதம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்களை 100 சதவிகிதம் பள்ளியில் சேர்த்தல், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் செயல்பாடுகள், பள்ளி வளர்ச்சிக்கான பொதுமக்கள் பங்கு, பள்ளியின் சுற்றுப்புறச் சூழல் பராமரித்தல் போன்ற கூறுபாடுகளின் அடிப்படையில் விருதுகள் வழங்கப்படுகின்றன.

[ 2002 ஏப்ரல் 9

**1.24. ஆதரவற்ற குழந்தைகள் காப்பகத்திற்கு (Orphanage) நிதி உதவி**

தாய் தந்தையரை இழந்து வாடும் ஆதரவற்ற குழந்தைகள்பால் அரசு கருணை காட்டி வருகிறது. இதற்கென செயல்பட்டுவரும் 339 பள்ளிகளுடன் இணைந்த காப்பகங்களின் மூலம் 52184 குழந்தைகள் பயன்பெறுகின்றனர்.

**1.25. நிர்வாக அமைப்பு**

தொடக்கக் கல்வித் துறையில், தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் சீரான மேற்பார்வையை நடைமுறைப்படுத்த, தற்பொழுது அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவில் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலரும், ஒன்றிய அளவில் உதவித் தொடக்கக் கல்வி அலுவலரும் பணியாற்றுகின்றனர். ஓர் ஒன்றியத்தில் 60 பள்ளிகளுக்கு மேற்படின் அங்கு கூடுதல் உதவி தொடக்கக் கல்வி அலுவலரும் பணியாற்றுவர்.

**1.26. ஆசிரியர்கள் சேம நலநிதித் திட்டம்**

கடுமையான நோயால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மருத்துவச் செலவினை ஈடுகட்டும் தொகையாக அதிகபட்சமாக ரூ.50,000/- அல்லது செலவு செய்த தொகையில் 75% இவற்றில் எது குறைவோ அத்தொகை இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படும். மேற்கண்டவற்றில் அடங்காத செலவினங்களுக்காக மேலும் ரூ.5,000/- வழங்கப்படும்.

பணியில் இருக்கும்போது இயற்கை எய்திடும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு, அவர்கள் படிப்பினை முடிக்க உதவியாக ஆண்டுக்கு ரூ.6,000/- அல்லது செலுத்திய கட்டணம் இவற்றுள் எது குறைவோ அது வழங்கப்படும்.

ஆசிரியர்களின் உடல் ஊனமுற்ற மற்றும் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு, சிறு தொழில் தொடங்க பயன்படும் தொழிற்கல்வி பெற, திரும்பச் செலுத்தப்படாத உதவித்தொகையாக ஒரு நபருக்கு மட்டும் ரூ.10,000/- வழங்கப்படும்.

ஆண்டு வருமானம் ரூ.60,000/-க்கும் குறைவான ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்பு படிக்க ரூ.50,000/- கடனாக வழங்கப்படும். இத்தொகை 75 மாதத் தவணைகளில் பிடித்தம் செய்யப்படும். மேலும், கலை மற்றும் அறிவியல் பட்டப் படிப்புகளுக்கு கடனாக ரூ.10,000/- வழங்கப்பட்டு, 50 மாதத் தவணைகளில் பிடித்தம் செய்யப்படும்.



2002 ஏப்ரல் 9 ]

தமிழ்நாடு அரசின் அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் பணியிலுள்ள, ஓய்வுபெற்ற மற்றும் இயற்கை எய்திய ஆசிரியர்களின் குழந்தைகளின் தொழிற்பட்டப் படிப்பிற்கு ஆண்டுக்கு ரூ.5,000/-ம் மற்றும் பட்டயப் படிப்பிற்கு ரூ.2,500/-ம் உதவித் தொகையாக வழங்கப்படும். இதற்கான ஆசிரியர்களின் ஆண்டு வருமானம் ரூ.1,50,000/-க்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

**1.27. பெற்றோர் ஆசிரியர் சங்கம்**

1994-1995 ஆம் ஆண்டு முதல் பள்ளிகளில் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. கல்வித் தரத்தை மேம்படுத்துதல், ஆசிரியர்-பெற்றோர் நல்லுறவு, பள்ளி வயது எய்திய அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல், மாணவர் இடைநிற்றலைத் தவிர்த்தல் போன்ற பணிகளில் பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஆசிரியர்களுடன் இணைந்து செயல்படுகிறது. பள்ளிகளில் சுற்றுச்சுவர் கட்டுதல், வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுதல், மின் இணைப்பு செய்தல், குடிநீர் வழங்கல், கழிப்பிட வசதி செய்தல், நூலகப் புத்தகங்கள் வாங்குதல், ஆய்வகக் கருவிகள் வாங்குதல் போன்ற திட்டங்களுக்கு நன்கொடை பெற்று திட்டங்களை நிறைவேற்ற பெற்றோர் ஆசிரியர் சங்கத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் மூலம் பள்ளிக்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகள் மற்றும் கற்றல், கற்பித்தல் உபகரணங்கள் பெற்றுத் தருதல் போன்ற பல்வேறு வசதிகள் பெறப்படுகின்றன. இதன்படி பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் மூலம் பெறப்பட்டுள்ள வசதிகள் விவரம் வருமாறு :

| | ரூபாய் கோடியில் |
|---|---|
| அசையும் சொத்துக்கள் | 77.82 |
| அசையாச் சொத்துக்கள் | 34.53 |
| மொத்தம் | **112.35** |

**1.28. மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டம்**

பள்ளிகளில் இடைநிற்றலை அறவே ஒழித்து 100 சதவீதம் கல்வி அறிவை அடைவதற்கு அனைவருக்கும் தரமான தொடக்கக் கல்வியை அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பல்வகைச் செயல்பாடுகளில் மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டமும் ஒன்று. இத்திட்டத்தின்படி, பெண்கள் எழுத்தறிவு இயக்கம்

[ 2002 ஏப்ரல் 9

தேசிய சராசரிக்கும் குறைவாக உள்ள தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் 1994-95 முதல் ஏழு ஆண்டுகளுக்கு முதற் கட்டமாக செயல்படுத்தப்பட்டது. இரண்டாம் கட்டமாக பொருளாதாரத்தில் பின்தங்கிய, எழுத்தறிவு இயக்கம் வெற்றிகரமாக செயல்பட்ட புதுக்கோட்டை, பெரம்பலூர், இராமநாதபுரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**சாதனைகள்**

பள்ளி வசதியை அளிக்கும் பொருட்டு மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின்கீழ், 406 புதிய துவக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்புதிய பள்ளிகளுக்கு தேவையான ஆசிரியர்களும், மற்ற பள்ளிகளுக்கு கூடுதல் ஆசிரியர்களும் என சுமார் 1771 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். துவக்கப் பள்ளிகள் மட்டுமன்றி பள்ளியில் சேராத, படிப்பை இடையில் நிறுத்திய மாணவர்களுக்காக, 932 பகுதி நேர மாற்றுப் பள்ளி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின்கீழ் அடிப்படை வசதியை மேம்படுத்தும் பொருட்டு 105 வட்டார வள மையக் கட்டடங்கள், 1571 புதிய பள்ளிக் கட்டடங்கள், 1495 பள்ளிகளுக்கு கழிப்பறை வசதிகள் மற்றும் 1472 பள்ளிகளுக்கு குடிநீர் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. மேற்கூறிய கட்டடங்களில் 107 கட்டடங்கள் சமுதாயத்தால் கட்டி முடிக்கப்பட்டவை. 299 வகுப்பறை கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. சமுதாயத்தால் கட்டப்பட்ட கட்டடங்கள் புதிய வடிவமைப்புகளோடு சிக்கனமான பயனுள்ள தொழில் நுட்பத்தைக் கையாண்டு கட்டப்பட்டுள்ளது. பள்ளி வயதுப் பிள்ளைகள் அனைவரையும் பள்ளியில் சேர்க்கும் பொருட்டு சமுதாயத்தின் ஒத்துழைப்புடன் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. பள்ளியின் அனைத்துச் செயல்பாடுகளிலும் சமுதாயமானது முழுமையாக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. கிராமக் கல்விக் குழுக்கள் செயல்படத் தொடங்கியுள்ளன.

தர மேம்பாட்டை அடையும் பொருட்டு, ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சியும் பிற அலுவலர்களுக்கு திறன் மேம்பாடு சார்ந்த பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. மாவட்டங்களில் இதற்கென 106 பயிற்சி மையங்களும், 993 தொகுப்பு கருத்தாய்வு மையங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. பள்ளிகளின் செயல்பாட்டிற்கேற்ப தரம் பிரிக்கப்படுகின்றன. அடைவு நிலையில் குறைவாக உள்ள பள்ளிகளுக்கு சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது. மதிப்பீட்டு நுணுக்கங்கள் சார்ந்த பயிற்சியானது ஆசிரியர்கள் அனைவருக்கும் வழங்கப்படுகிறது.



2002 ஏப்ரல் 9 ]

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குழந்தைகளுக்கு மாலை நேர சிறப்பு வகுப்புகள் 3814 மையங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. உடல் ஊனமுற்றோருக்கான ஒருங்கிணைந்தக் கல்வியானது, 106 ஒன்றியங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியோடும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களாலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

திட்ட மாவட்டங்களில், 14.78 இலட்சம் குழந்தைகள் தொடக்கப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். மொத்த சேர்க்கை விகிதம் 97 சதவீதம் ஆகும். உயர்ந்தபட்சமாகத் திருவண்ணாமலையில் 102 சதவீதமும், பெரம்பலூரில் 90 சதவீதமும் மொத்த சேர்க்கை விகிதம் அமைகிறது.

2001-2002 ஆம் ஆண்டின், குறிப்பிட்ட குழுவினர் பற்றிய ஆய்வின்படி, தொடக்கக் கல்வியை முடித்தோர் விழுக்காடு 60 சதவீதம் ஆகும். குறைந்த அளவு தருமபுரியில் 55 சதவீதமாகவும், உயர்ந்தபட்சமாக விழுப்புரத்தில் 65 சதவீதமாகவும் இருந்தது.

திட்ட மாவட்டங்கள் ஏழிலும் இடைவிலகல் விழுக்காடு 13 சதவீதம். உயர்ந்தபட்சம் தருமபுரியில் 16 சதவீதம், குறைந்தபட்சம் கடலூரில் 8 சதவீதமாகவும் உள்ளது.

மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்ட மாவட்டங்களில், மீளக் கற்போர் விழுக்காடு 27 சதவீதம். உயர்ந்தபட்சம் இராமநாதபுரத்தில் 34 சதவீதம், குறைந்தபட்சம் விழுப்புரத்தில் 23 சதவீதம்.

முதற்கட்ட மாவட்டங்களில் திட்ட காலம் முழுமைக்கும் ஒதுக்கப்பட்ட நிதியான ரூ.16897 இலட்சங்களில், 28-02-2002 முடிய ரூ.15399 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. செலவின விழுக்காடு 91 சதவீதம். இதே போன்று இரண்டாம் கட்ட மாவட்டங்களில் மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.9244 இலட்சங்களில், ரூ.5567 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன. செலவின விழுக்காடு 60 சதவிகிதம்.

மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டமானது, முதற்கட்ட மாவட்டங்களில் 31-03-2002 அன்று முடிவுற்றது. அங்கு நடுநிலை வகுப்புகளுக்காக அனைவருக்கும் கல்வி (சர்வ சிக்ஷா அபியான்) திட்டம் செயல்படுத்தப்படும். ஆனால் இரண்டாம் கட்ட மாவட்டங்களில் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டமும், அனைவருக்கும் கல்வித் திட்டமும் இணைந்து செயல்படும். மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் துவக்க நிலை வகுப்புகளிலும், அனைவருக்கும் கல்வித் திட்டம் நடுநிலை வகுப்புகளிலும் செயல்படுத்தப்படும். மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் முடிவுபெற்ற பின்பும், ஏழு மாவட்டங்களிலும் அனைவருக்கும்

கல்வித் திட்டம் தொடர்ந்து செயல்படும். இதற்கென ரூ.1172.50 கோடி அளவுக்கு திட்டம் தயாரிக்கப்பட்டு மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 1.29. அனைவருக்கும் கல்வித் திட்டம்

1986 ஆம் ஆண்டைய தேசிய கல்விக் கொள்கை மற்றும் 1992 ஆம் ஆண்டைய செயல்திட்டம் ஆகியவை 'அனைவருக்கும் கல்வி' என அறைகூவல் விடுத்தது. இதனையடுத்து மாவட்டந்தோறும் மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டு ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட்டு கல்வியின் தரம் உயர்த்தப்பட்டது. அதனையடுத்து கரும்பலகைத் திட்டம் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் சிறப்பு புததறிவுப் பயிற்சி அளிக்கப்பட்டது. அதன்பின் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் தமிழ்நாட்டில் 7 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. இருப்பினும் 'அனைவருக்கும் கல்வி' என்ற குறிக்கோள் இன்னும் கனவாகவே இருந்து வருகிறது. உலக வங்கியின் அறிக்கையான "இந்தியாவில் ஆரம்பக் கல்வி, 1997" கூட "India's Primary Education class is two-third full, one-third empty" என கருத்து தெரிவித்துள்ளது. எனவே 'அனைவருக்கும் கல்வி' என்ற குறிக்கோளை எய்தும் பொருட்டு மைய அரசின் நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் "அனைவருக்கும் கல்வி" என்ற திட்டத்தினை 22 மாவட்டங்களில் 2001 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்படவுள்ளது.

அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு:-

* பள்ளி வயது குழந்தைகள் அனைவரையும் 2003 ஆம் ஆண்டுக்குள் பள்ளியில் சேர்த்தல்.
* 2007-க்குள் அனைத்து குழந்தைகளுக்கும் 5 ஆண்டுக் கல்வியை அளித்தல்.
* 2010-க்குள் அனைத்துக் குழந்தைகளுக்கும் 8 ஆண்டுக் கல்வியை அளித்தல்
* வாழ்நாள் முழுவதும் பயன்படும் வகையில் தரமுள்ள ஆரம்பக் கல்வியை அளித்தல்
* ஆண் பெண் சமூக ஏற்றத் தாழ்வு பாகுபாடின்றி சமச்சீரான ஆரம்ப நிலை 2007-க்குள் அடைதல்; 2010க்குள் ஆரம்பக் கல்வியை அடைதல்.
* 2010-க்குள் பள்ளி இடைநிற்றலை அறவே ஒழித்தல்.



இத்திட்டத்தினை தமிழ்நாட்டில் 22 மாவட்டங்களில் செயல்படுத்துவதற்கான திட்டங்கள் ரூ.2945.96 கோடி அளவுக்கு தயாரிக்கப்பட்டு மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி ஆகும் செலவினை மைய அரசும் மாநில அரசும் 9-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 85:15 என்ற விகிதத்திலும், 10-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 75:25 என்ற விகிதத்திலும், அதன் பின்னர் 50:50 என்ற விகிதத்திலும் ஏற்கும். இத்திட்டமானது, ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6, 7, 8 வகுப்புகளில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் வகுப்பறை கட்டடங்கள் கட்டுதல், கழிப்பிட வசதிகள், குடிநீர் வசதிகள், மின் வசதிகள் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், பள்ளிக் கட்டடங்களைப் பராமரித்தல், ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகள் ஆரம்பித்தல், ஆசிரியர்கள் நியமனம் செய்தல், கற்பிப்பு சாதனங்கள் வாங்க ஆசிரியர்களுக்கு மானியம் வழங்குதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் அடங்கும். **மேலும், ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிப்பதற்கென 306 வட்டார வள மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, 3060 பி.எட். தகுதி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவர்.**

அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ், 2001-2002 மற்றும் 2002-2003-ல் முறையே ஏற்பளிக்கப்பட்ட மற்றும் செயலாக்கப்பட உள்ள பணிகளின் விவரம் வருமாறு:-

| திட்டங்களின் விவரம். (1) | 2001-2002-க்கு ஏற்பளிக்கப் பட்டது. (2) | 2002-2003-க்கு செயலாற்றப் பட உள்ளது. (3) |
|---|---|---|
| புதிதாக துவக்கப்பட்ட/துவக்கப்படவுள்ள ஆரம்பப் பள்ளிகள் | 452 | 187 |
| ஆரம்பப் பள்ளியிலிருந்து நிலை உயர்த்தப்பட்ட/ நிலை உயர்த்தப்படவுள்ள நடுநிலைப் பள்ளிகள் | 197 | 1243 |
| புதிய பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் நியமனம் | 649 | 1430 |
| கூடுதல் ஆசிரியர்கள் நியமனம் | .. | 17629 |
| ஆசிரியர்களுக்கு பயிற்சி | .. | 242346 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| சமுதாய/கிராமநிலை குழுக்கள் உறுப்பினர்களுக்கு பயிற்சி | .. | 38260 |
| புதிய ஆரம்பப் பள்ளிகளுக்கு கற்பிப்பு சாதனங்கள் | .. | 187 |
| புதிய நடுநிலைப் பள்ளிகளுக்கு கற்பிப்பு சாதனங்கள் | .. | 1243 |
| பள்ளி மானியம். | .. | 38260 |
| ஆசிரியர் கற்பிப்பு மானியம் | .. | 242346 |
| பள்ளிக்கட்டடங்கள் பராமரிப்பும், பழுதுபார்த்தலும் | 9770 | 17302 |
| வட்டார வள மையங்களுக்கு கட்டடம் கட்டுவது | 35 | 271 |
| கட்டடமே இல்லாத பள்ளிகளுக்கு கட்டடம் | 16 | .. |
| புதிய பள்ளிகளுக்கு கட்டடங்கள் கட்டுதல் | 94 | 1430 |
| கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்டுவது | .. | 103 |
| பள்ளிகளுக்கு கழிப்பிட வசதிகள் | 2510 | 12399 |
| பள்ளிகளுக்கு குடிநீர் வசதிகள் | 2367 | 15177 |
| புதுமைக் கல்வி நடவடிக்கைகள் (ஒரு மாவட்டத்துக்கு ரூ.50 லட்சம் வீதம்) | | 29 மாவட்டம் |
| பள்ளிகளில் ஆராய்ச்சி, மதிப்பீடு, கண்காணிப்பு போன்ற இனங்கள் | | 38260 |
| வட்டார வள மையங்களில் ஆசிரியர்கள் நியமனம் | 3060<br>306 மையங்கள் | 636<br>106 மையங்கள் |

இதற்கென 22 மாவட்டங்களில் செயல்படுத்த 2001-2002-ல் ரூ.65.42 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. 2002-2003-ல், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்த ரூ.372.99 கோடி செலவிடப்படவுள்ளது. இது தவிர 2002-2003-ல் சென்னையில் மாநில கல்வி மேலாண்மை மற்றும் பயிற்சி நிறுவனம் (SIEMAT) அமைக்க ரூ.3.00 கோடி செலவிடப்படும்.



## 2. இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி

**தொலை நோக்கு**

* ஆரம்பக் கல்வி பெற்ற அனைவரும் இடைநிலைக் கல்வி பெறச் செய்தல்
* பல்வேறு நற்பண்புகளின் அடிப்படையில் தரமான கல்வியை வழங்குதல்
* பணி நுட்பம் மற்றும் அர்ப்பணிப்புடன் கூடிய ஆசிரியர்கள் மூலம் கல்விப் பணியை நிறைவு செய்ய வைத்தல்
* கற்றலை உயிரோட்டமுடைய அனுபவமாக்கி, கற்பித்தலைப் படிப்போர் மையமாக்குதல்
* பெற்றோர் மற்றும் சமுதாயம் பங்கேற்கச் செய்தல்

இதன் மூலம்

* மாணவர்களின் முழுத் திறனையும் வெளிக் கொணர்ந்து உள்ளார்ந்த ஆற்றலை வளரச் செய்தல்
* மாணவர்களின் ஆர்வத்திற்கு ஏற்ப சுய வேலைவாய்ப்பு அல்லது உயர் கல்வி பெறத் தயார் செய்தல்
* பரந்த முழுமையான கண்ணோட்டம் பெற்று, அறிவியல், தகவல் தொழில் நுட்பம் மற்றும் கலைத் துறையில் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவுதல்.
* மாணவர்களின் வாழ்வு முறையை மாற்றி மற்றவர்களின் உணர்வுகளை அறிந்து உதவிசெய்யும் மனப்பாங்கினை வளர்த்து அதன் மூலம் இசைவுடைய சமூகச் சூழலுக்கும் உலக நன்மைக்கும் வித்திடல்.

### 2.1. புதிய உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்

ஆறாவது அகில இந்திய கணக்கெடுப்பின்படி, 5 கிலோ மீட்டருக்கு உட்பட்ட தொலைவில் இன்னும் 1995 குடியிருப்புப் பகுதிகளில் உயர்நிலைப் பள்ளி வசதிகள் அளிக்க வேண்டியுள்ளது. ஒன்பதாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 382 உயர்நிலைப் பள்ளிகளும், 347 மேல்நிலைப் பள்ளிகளும் தொடங்கப்பட்டுள்ளன.

## 2.2. தனியார் உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகள் துவக்க அனுமதி

1991-1992 முதல் அரசு உதவி பெறாத தனியார் உயர்நிலைப் பள்ளிகள் தங்களுடைய சுயநிதி ஆதாரத்தின் அடிப்படையில் அரசிடமிருந்து உதவி கோரமாட்டோம என்ற உறுதிமொழியோடு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் திறப்பதற்கு பள்ளிக் கல்வி இயக்குநரால் அனுமதி வழங்கப்படுகிறது.

2001-2002-ல் திறப்பதற்கு அனுமதிக்கப்பட்ட சுயநிதி தனியார்

| | |
|---|---|
| உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை | 39 |
| மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை | 44 |
| மொத்தம் | **83** |

## 2.3. மாணவர்கள் அதிக சேர்க்கைக்கு சிறப்புத் திட்டங்கள்

பள்ளிகளில் மாணவ மாணவியர்களை அதிகப்படியாகச் சேர்ப்பதற்கும், பள்ளிப் படிபபைத் தொடர்ந்து படிப்பதற்கும், இயக்கங்களால் முடிந்த வழிகளில் விழிப்புணர்வு உண்டாக்கப்படுகிறது. இலவசச் சீருடை, இலவசப் பாடப்புத்தகங்கள், சத்துணவு, இலவச பேருந்து பயணச் சலுகை, அரசுப் பள்ளிகளில் பதினொன்றாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பில் பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியைச் சார்ந்த மாணவிகளுக்கு இலவச இரு சக்கர மிதிவண்டி போன்ற அரசின் நன்மை பயக்கும் திட்டங்கள் மாணவர்களை தொடர்ந்து பள்ளிகளில் படிக்க செயல்படுத்தப்படுகின்றன.

## 2.4. ஆசிரியர்கள் நியமனம்

பள்ளிகளில் கல்வியின் தரம் உயர வேண்டுமெனில் கல்வியாண்டின் ஆரம்ப கால கட்டத்திலேயே ஆசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்புவது அவசியம். 2001-2002 ஆம் ஆண்டில் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் என்ற வகையில் சுமார் 3030 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 2002-2003 ஆம் ஆண்டில், 589 மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள், 799 பட்டதாரி ஆசிரியர்கள்/தமிழாசிரியர்கள், கல்வியாண்டின் தொடக்கத்திலேயே நியமனம் செய்யப்படுவர். அவ்வாறு நியமனம் செய்யப்படுமுன், தற்போதைய ஆசிரியர்-மாணவர் விகிதப்படி உபரியாக காணப்படும் ஆசிரியர் பணியிடங்கள் தேவையான



பள்ளிகளுக்கு பணி நிரவல் செய்யப்படும். அரசினர் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 1569 ஆசிரியர் பணியிடங்களும், உதவி பெறும் பள்ளிகளில் 1043 பணியிடங்களும் உபரியென கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பணி நிரவல் முடித்த பின் இடைநிலை மற்றும் சிறப்பாசிரியர் நியமனம் கணக்கிடப்படும்.

## 2.5. கூடுதல் பணியிடங்களை உருவாக்குதல்

கல்வியின்பால் பொதுமக்களின் கூடுதல் விழிப்புணர்வு காரணமாகவும், கிராமப்புறங்களில் எளிதில் செல்லுமாறு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் ஆண்டுக்கு ஆண்டு பெருகி வருவதாலும், 11 வயது முதல் 18 வயது முடிய உள்ள மாணவ, மாணவியரின் எண்ணிக்கை பெருகிவருகிறது. இதன் காரணமாக சிறப்பான வகுப்பறை, போதனைக்கு கூடுதல் ஆசிரியர் பணியிடங்களை உருவாக்குவது உடனடித் தேவையாகிறது. பல உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் குறிப்பாக பின்தங்கிய பகுதிகளில் ஒவ்வொரு வகுப்புப் பிரிவிலும் 70-க்கும் மேற்பட்ட மாணவ-மாணவியர்கள் உள்ளனர். ஒரே வகுப்பறையில் அதிக மாணவர்கள் இருக்கும்பொழுது கல்வியை அளிப்பது மிகுந்த சிரமமாகும். எனவே ஆசிரியர்-மாணவர் விகிதப்படி உபரி ஆசிரியர் பணியிடங்களிலிருந்து நிரப்புவது குறித்து பரிசீலிக்கப்படும்.

## 2.6. கலைத் திட்டம் மற்றும் பாடத்திட்டத்தை சீராய்வு செய்தல்

1986 ஆம் ஆண்டு புதிய கல்விக் கொள்கை அறிமுகம் ஆனதிலிருந்து 1988-89 ஆம் ஆண்டில் முதல் தடவையாகவும், 1995-96 ஆம் ஆண்டில் இரண்டாவது தடவையாகவும் இருதடவைகள் கலைத் திட்டம் மற்றும் பாடத்திட்டம் சீராய்வு செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் உள்ள பாடத்திட்டம் பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்துவரும் நிலையில் பாடத்திட்டத்தை சீராய்வு செய்ய பல்வேறு வல்லுநர் குழுக்கள் அமைக்கப்படும். அக்குழுக்களின் பரிந்துரைக்குட்பட்டு திருத்திய பாடத்திட்டம் கீழ்க்கண்டவாறு அமல்படுத்தப்படும்.

| ஆண்டு | | | புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும் வகுப்புகள் |
|---|---|---|---|
| 2003-2004 | .. | .. | 6, 9 ,11 |
| 2004-2005 | .. | .. | 7, 10, 12 |
| 2005-2006 | .. | .. | 8 |

அச்சு மூலமாகவோ, மின்னணுவியல், ஒலி, ஒளி மூலமாகவோ பாடத்திட்ட வரைவை சுற்றுக்கு விட்டபின்னர் அல்லது வெளியீடு செய்த பின்னர் பலதரப்பிலிருந்தும் ஆலோசனைகளும், கருத்துக் கணிப்புகளும் பெறப்படும். மாவட்ட மற்றும் வட்டார அளவில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு அதில் கலந்துகொள்பவர்களின் கருத்துகள் பெறப்படும். பல்வகை தரப்பிலிருந்தும் பெறப்பட்ட கொள்கைகள், கருத்துரைகள், கருத்துக் கணிப்புகள் ஆலோசனைகள் அடிப்படையில் பாடத்திட்டத்தின் இறுதியான கூற்று வடிவமைக்கப்படும். பாடத்திட்ட வளர்ச்சி முடிவடைந்த பிறகு தரமான பாடப் புத்தகங்கள் எழுதும் பணி தொடங்கப்படும்.

பள்ளிகளில் தற்போது சுகாதாரக் கல்வியானது அறிவியல் பாடத்தில் ஒரு பிரிவாகவே கற்பிக்கப்படுகிறது. சுகாதாரக் கல்வியின் மகத்துவத்தை உணர்ந்து, வரும் **2002-2003** ஆம் கல்வி ஆண்டு முதல் பள்ளிகளில் உடல் நலம் மற்றும் சுகாதாரம் குறித்த கல்வி பாடத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 2.7. அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி

மாணவர்கள் குறிப்பாக அறிவியல் துறையில் தங்கள் அறிவை நவீன காலத்திற்கேற்ப மேம்படுத்திக்கொள்ளுதலின் பொருட்டும், கணினித் துறையில் அதிக அளவில் வேலைவாய்ப்பைப் பெருக்கிக் கொள்ளும் பொருட்டும், அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் கணிப்பொறி மற்றும் அதைச் சார்ந்த கருவிகள் வழங்குதல் அவசியமாகிறது. இத்திட்டத்தின்கீழ் 1197 மேல்நிலைப் பள்ளிகளில் கணினிப் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது. இக்கணினிப் பாடமானது தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவன மேற்பார்வையின்கீழ் தனியார் கணினி நிறுவனங்கள் மூலம் கற்பிக்கப்பட்டு வருகிறது.

இக்கணினிப் பாடத்திட்டமானது தற்போதைய கணினி அறிவியல் தேவைக்கு ஏற்ப 11 மற்றும் 12 வகுப்புகளுக்கு திருத்தியமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அரசு மேல்நிலைப் பள்ளியிலும் தலைமையாசிரியர் உட்பட ஐந்து ஆசிரியர்களுக்கு கணினி அறிவியல் பயிற்சி அளிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.



## 2.8. கணிப்பொறி மூலம் பாடம் கற்பித்தல்

நவீன கால மின்னணுவியல் முன்னேற்றத்திற்கேற்ப பள்ளிகளுடன் இணைந்த பாட வகுப்புகளை கணிப்பொறி மூலம் ஆசிரியர்கள் நடத்த ஏதுவாக புதிய கற்பிப்பு முறை புகுத்தப்படும். இதற்கென குழு ஒன்று அமைக்கப்படும்.

## 2.9. மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்வி

1978-ல் 10+2+3 கல்வி முறை அமல்படுத்தப்பட்டபோது, மாணவர்கள் வேலையில் சேரும்பொருட்டு அல்லது சுயவேலை வாய்ப்புக்கு வாய்ப்பு ஏற்படுத்தும்பொருட்டு, செயல்முறை சாராக் கல்வியிலிருந்து, தொழிற் கல்விக்குச் செல்லும் நோக்கத்துடன் மேல்நிலைப் பள்ளியில் தொழிற் கல்விக்கு முழு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. விவசாயம், பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல், மனையியல், சுகாதாரம் போன்ற இனங்களில் 66 பாடப் பிரிவுகள் மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற் கல்விப் பாடங்களாகக் கற்றுத் தரப்படுகின்றன. +2 பயிலும் மாணவர்களில் 25 விழுக்காடு மாணவர்களாவது தொழிற்கல்வி பாடங்களைப் பயில வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 13.6 விழுக்காடு மாணவர்கள் மட்டுமே, அதுவும் குறிப்பிட்ட சில பாடப் பிரிவுகளில் மட்டும் பயில்கின்றனர். இதற்குக் காரணம், நேரடியான வேலைவாய்ப்புக்கோ அல்லது மேற்படிப்பில் அவர்களுக்கு உரிய ஒதுக்கீடு இல்லாததோடு மட்டுமல்லாமல் தேவையான பாடப் புத்தகங்கள், தேவையான ஆசிரியர்கள் இல்லாததும் காரணமாகும். எனவே இதற்கென அமைக்கப்பட்ட முன்னாள் பள்ளிக் கல்வி இயக்குநர், முனைவர் எச்.எஸ்.எஸ். லாரன்ஸ் தலைமையிலான குழுவின் பரிந்துரைகள் ஆராயப்படும்.

ஆதாயம் தரத்தக்க வேலைவாய்ப்பு பெறுவதற்கு அவசியமான பயிற்சி தேவைப்படும். வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள குடும்பங்களைச் சார்ந்த சிறு வயதினருக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் முழுநேர வாழ்க்கைத் தொழில் பயிற்சிப் பள்ளிகள் தொடங்கப்படும். இப்பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்குவதற்காக 2002-2003 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 1 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிகளில் அடிப்படைக் கல்வி மற்றும் வேளாண்மை, தோட்டக்கலை, கட்டுமானம், தச்சுவேலை, குழாய் வேலை, மின்பணிகள் முதலிய வாழ்க்கைத் தொழில் முனைப்புப் பயிற்சிகள் அளிக்கப்படும். இம்மாணவ, மாணவியருக்கு உணவு, உடை மற்றும் உறைவிட வசதிகள் அளிக்கப்படும்.

இப்பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் குறித்து மதிப்பீடு செய்து விரிவான திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்து அடுத்த நான்கு ஆண்டுகளில் அப்பள்ளிகளுக்குத் தேவையான நிதியுதவியைத் பெறுவதற்கான வழிமுறைகள் வகுக்கப்படும்.

**2.10. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்**

பள்ளிகளில் அடிப்படை வசதிகளான வகுப்பறைக் கட்டடங்கள், கழிப்பிட வசதிகள், குடிநீர் வசதிகள் போன்ற வசதிகள் அத்தியாவசியமாகும். இவ்வாறான உள் அமைப்பு வசதிகள் பள்ளியின் தோற்றத்தை உயர்த்திக் கூறுவதோடு அல்லாமல், பள்ளியின் முகப்பினையும் உயர்த்திக் காட்டுகிறது. கிராமப்புறங்களில் காணப்படும் பல பள்ளிகளில் அவை தொடங்கிய காலம் முதல் போதுமான வகுப்பறைகள் இல்லை. பெற்றோர் - ஆசிரியர் சங்கம், சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின்கீழ் பெறப்படும் உதவிகளைக் கொண்டு இவ்வாறான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் மூலமும் அடிப்படை வசதிகள் செய்து தரப்படும். இதுதவிர ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதியத்தின்கீழ் வேளாண்மை கிராம வளர்ச்சி தேசிய வங்கியிடமிருந்தும் கடன் பெறப்படவுள்ளது. முதற்கட்டமாக ரூ.14.92 கோடி பெறப்பட்டுள்ளது. இதன்மூலம் திருநெல்வேலி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, திருச்சி, வேலூர், கோயம்புத்தூர், சிவகங்கை, தூத்துக்குடி, மதுரை மாவட்டங்களில் 96 பள்ளிகளுக்கும் அனைத்து அடிப்படை வசதிகள் செய்து தரப்படும். இரண்டாவது கட்டமாக ரூ.41.80 கோடி செலவில், 19 மாவட்டங்களில், 297 பள்ளிகளில் செயல்படுத்தப்படும். தமிழகத்தின் வட மாவட்டங்களான தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம் போன்ற மாவட்டங்களில் உள்ள பள்ளிகளில் அடிப்படை வசதிகளுக்கென ரூ.50.00 கோடி அளவுக்கு தனித் திட்டம் செயல்படுத்தப்படும்.

**2.11. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கல்வியை மேம்படுத்துதல்**

தேசிய கல்விக் கொள்கையில் அறிவியல் கல்வி என்பது அடிப்படை கலைத் திட்டத்தில் ஓர் அம்சம் ஆகும். ஆய்வக வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பது, ஆசிரியர்களின் திறமையை மட்டும் வளர்க்காமல்



மாணவர்களை ஆக்கபூர்வமாகச் சிந்திக்கத் தூண்டுகிறது. மைய அரசின் அறிவியல் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பள்ளிகளில் அறிவியல் மேம்பாட்டு வசதி செய்து தரப்பட்டுள்ளது. இதனை மேலும் பலப்படுத்த தேவைப்படும் அனைத்துப் பள்ளிகளுக்கும் ஆய்வகமும், உபகரணங்களும் அமைத்துக் கொடுக்கக் கருதப்பட்டுள்ளது.

**2.12. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நூலக வசதிகளை மேம்படுத்துதல்**

அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குப் போதுமான மேற்கோள் நூல்கள் மற்றும் துணைப் பாடப் புத்தகங்களைக் கொண்டுள்ள ஒரு நூல் நிலையம் அத்தியாவசியமாகும். தற்காலச் சூழ்நிலையில் பெரும்பாலான பள்ளிகளில் போதுமான நூலக வசதிகள் இல்லை. மாணவர்களிடையே புத்தகம் படிக்கும் பழக்கத்தை உண்டாக்குவது உயர்நிலைப் பள்ளிகளின் நோக்கங்களில் ஒன்றாகும். இதன் முக்கியத்தை உணர்ந்து அரசு இணை மானியத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இம்முறையில் நூலகத்திற்கு வாங்கும் புத்தகச் செலவில் 50 சதவிகிதத்தை பெற்றோர் - ஆசிரியர் சங்கம் அல்லது பொது அன்பளிப்பிலிருந்து செலவழிக்கப்படுகிறது. இதுவரை 400 பள்ளிகள் இவ்வசதியைப் பெற்றுள்ளன. இதுதவிர, பொது நூலகங்களைப் பள்ளி மாணவர்கள் பயன்படுத்தும் வகையில் அந்தந்தப் பகுதியில் உள்ள பொது நூலகம் அருகிலுள்ள பள்ளிகளைத் தத்தெடுப்பதற்கு உரிய செயல்முறைகள் வகுக்கப்படும்.

**2.13. பள்ளிகளில் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல்**

பாடத் திட்டம் மாற்றியமைப்பதற்கேற்ப உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு இதுவரை புத்துணர்வுப் பயிற்சி அளிக்கப்படவில்லை. எனவே பள்ளிகளில் ஒட்டுமொத்த திறமைகளை மேம்படுத்த உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் புத்துணர்வுப் பயிற்சித் திட்டத்தினை அரசு தொடங்கியுள்ளது.

தமிழகத்தின் வட மாவட்டங்களான தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 10 ஆம் வகுப்பு மற்றும் +2 தேர்வு முடிவுகளை நோக்கும்போது அங்கு தேர்ச்சி விகிதம் 41 விழுக்காடு முதல் 55 விழுக்காடு வரை மட்டுமே காணப்படுகிறது. அவ்வாறு தேர்ச்சி பெறும் மாணவர்களும் சராசரி மாணவர்களாகவே திகழ்கிறார்கள். எனவே இப்பகுதிகளில் கல்வியின் தரம் உயர சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

[ 2002 ஏப்ரல் 9

**2.14. அறிவியல் கண்காட்சிகள்**

அறிவியல் கல்வியை மேம்படுத்தவும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் இவற்றைச் சார்ந்த மாணவர்களிடம் மறைந்திருக்கும் திறமையை வெளிக்கொணரவும் மாவட்ட மற்றும் மாநில அளவில் அறிவியல் கருத்தரங்கங்களும், கண்காட்சிகளும் நடத்தப்படுகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் சென்னை, எழும்பூர் மாநில மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 'உயிர் தொழில் நுட்பப்புரட்சி' என்ற தலைப்பில் மாநில அளவில் ஓர் அறிவியல் கருத்தரங்கு நடத்தப்பட்டது. 2002 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், முதல் வாரத்தில் கடலூரில் மாநில அளவிலான அறிவியல் கண்காட்சி நடத்தப்பட்டது. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாணவர்கள் அதில் பங்கேற்று தாங்கள் செய்ததை பொது மக்கள் பார்வைக்காக வைத்திருந்தனர்.

**2.15. தென்னிந்திய அறிவியல் கண்காட்சிகள்**

தென்னிந்திய மாநிலங்களாகிய தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, கேரளா மற்றும் பாண்டிச்சேரியைச் சார்ந்த கல்வித் துறையின் முழு ஒத்துழைப்புடன் பெங்களூரிலுள்ள விஸ்வேஸ்வரய்யா தொழில் மற்றும் தொழில்நுட்ப அருங்காட்சியகம் ஒவ்வோராண்டும் தென்னிந்திய அறிவியல் கண்காட்சியை அமைத்து வருகிறது.

2001-2002 ஆம் ஆண்டில், (Shimagyo) சிமாகோ என்ற இடத்தில் நடைபெற்ற தென்னிந்திய அறிவியல் கண்காட்சியில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தை வென்றிருக்கிறது. 2002-2003 ஆம் ஆண்டில் தென்னிந்திய அறிவியல் கண்காட்சியை தமிழ்நாடு நடத்தவுள்ளது.

**2.16. விளையாட்டுகளும் விளையாட்டுப் போட்டிகளும்**

உடற்கல்விப் பாடம், பள்ளிக்கலைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. பள்ளிக் குழந்தைகளுக்கிடையே விளையாட்டிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் ஆர்வத்தை உண்டாக்கவும் அவர்களிடம் மறைந்திருக்கும் திறமையை உரிய நேரத்தில் தெரிந்துகொள்ளவும் பல்வேறு நிலைகளில் போட்டிகளை அரசு நடத்தி வருகிறது. 2001-2002-ல் மாநில அளவில் திருநெல்வேலியில் குடியரசு தின விளையாட்டுகளும், விளையாட்டுப் போட்டிகளும், வேலூரில் பாரதியார் தின விளையாட்டு மற்றும் விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டன.



2002 ஏப்ரல் 9 ]

"ஆரோக்கியமான உடல் நலத்தில் ஆரோக்கியமான மனவளம்" இதுவே அனைத்துக் கல்வித் திட்டங்களுக்கும் அடிப்படையாக அமையும். இந்நோக்கத்தை எய்துவதற்காக, அடுத்த கல்வியாண்டிலிருந்து அனைத்து உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் இளைஞர் விளையாட்டுத் திறன் திட்டம் என்னும் புதிய திட்டம் கொண்டு வரப்படும். இத்திட்டத்தின்கீழ், பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்டு, உடல் வலிமை அல்லது கல்வி தொடர்பான ஏதேனும் ஒன்றிலாவது கூடுதல் திறமை பெறுவது கட்டாயமாக்கப்படும். இதனுடன், ஒவ்வொரு பள்ளியிலும் குறைந்தது ஒரு விளையாட்டிலாவது திறமையை வளர்க்க வேண்டியது அவசியமாக்கப்படும். இளம் திறமையாளர்களைக் கண்டறிய ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும்.

**2.17. தேசிய மாணவர் படை**

பள்ளி அளவில் தேசிய மாணவர் படையின் இளநிலைப் பிரிவு செயல்படுகிறது. இதில் விமான, கப்பல் மற்றும் தரைப் பிரிவுகள் உள்ளன. பெண்களுக்கென ஒரு தனிப் பிரிவு உள்ளது. தற்சமயம் மாநில அளவில் 718 பிரிவுகள் செயல்படுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள தேசிய மாணவர் படை இயக்ககத்தின் உகந்த ஆணைகளின்படி உரிய நிதி ஒதுக்கப்பட்டு எஞ்சியுள்ள 1655 பள்ளிகளும் படிப்படியாக இத்திட்டத்தில் சேர்க்கப்படும்.

**2.18. நாட்டுநலப்பணித் திட்டம், சாரணர் இயக்கம், இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்**

தலைமை ஏற்று நடத்தும் ஆற்றலை வளர்த்துக்கொள்ளுதல், தன்னம்பிக்கை, தேசப்பற்று, தானாக முன்வருதல், சமூகசேவைச் செயல்பாடுகள் மூலம் மாணவர்களின் ஒட்டுமொத்த மேம்பாடு அடைதல் ஆகியவை நாட்டுநலப் பணித் திட்டத்தின் நோக்கமாகும். நாட்டுநலப் பணித் திட்டத்திற்கு மாநில அரசும், மத்திய அரசும் 7:5 என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கீடு செய்கின்றன. மாநிலத்தில் தற்சமயம் 1250 பிரிவுகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன.

தமிழ்நாட்டில் 4098 பள்ளிகளில் சாரணர் இயக்கம் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கிறது. இதில் 84,300 மாணவர்களும், 49,108 மாணவிகளும் உள்ளனர். கோவில்களைச் சுத்தப்படுத்துதல், மரம் நடுதல், போக்குவரத்தைச் சீர்படுத்துதல், முதலுதவி போன்ற சமூக நலச் செயல்பாடுகளை இவ்வமைப்பு செய்து வருகிறது. ஒவ்வோராண்டும் சிறந்த நூற்றுக்கணக்கான சாரணர்களுக்கு ஒப்பற்ற 'ராஜ்ய புரஸ்கார்' என்ற விருது வழங்கப்பட்டு வருகிறது.

[2002 ஏப்ரல் 9

தமிழ்நாட்டில் பெரும்பான்மையான பள்ளிகளில் இந்திய செஞ்சிலுவைச் சங்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தின் புரவலர் ஆவார். இதில் பல ஆசிரியர்கள் அறிவுரையாளர்களாகவும், மாணவர்கள் உறுப்பினர்களாகவும் தீவிரமாகப் பங்கேற்கின்றனர்.

**2.19. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி**

எட்டு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களை முன்னேற்றமடையச் செய்ய சிறப்புப் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. எட்டாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் போன்ற குறிப்பிட்ட பாடங்களிலும், பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், விலங்கியல், தாவரவியல், வணிகவியல் மற்றும் கணக்கியல் போன்ற குறிப்பிட்ட பாடங்களிலும் இவ்வகையான சிறப்புப் பயிற்சி நடத்தப்படுகிறது. தற்சமயம் இப்பணி சுமார் 1000 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**2.20. சமஸ்கிருத கல்வித் திட்டம்**

உயர்நிலை மற்றும் மேல்நிலை வகுப்புகளில் சமஸ்கிருதம் படிக்கும் மாணவர்களுக்கு மைய அரசின் திட்டம் மூலம் கல்விச் சலுகை அளிக்கப்படுகிறது. ஒன்பது மற்றும் பத்தாவது வகுப்பு படிக்கும் மாணவர்கள் மாதத்திற்கு ரூ.100 எனவும், பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் மாதத்திற்கு ரூ.125 எனவும் நிதியுதவி பெறுகின்றனர். நலிவுற்ற சமஸ்கிருத பண்டிதர்களுக்கு மைய அரசு நிதியுதவி அளித்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஆண்டு வருமானம் போக அதிகபட்சமாக ரூ.10,000/- அளிக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்குச் சுமார் 300 பண்டிதர்கள் பயன் பெறுகின்றனர்.

**2.21. பள்ளி சிறார் நல வாழ்வுத் திட்டம்**

பள்ளி மாணவ, மாணவியரின் உடல்நலனைக் கண்காணிப்பது பெற்றோர், ஆசிரியர் மற்றும் அரசின் தலையாய கடமையாகும். சிறுவயதில் ஏற்படும் சில நோய்கள் பள்ளிப்படிப்பில் பாதிப்பு ஏற்படுத்துவதோடல்லாமல், வருங்காலத்தில் பெரும் நோய்களாகவும், ஊனங்களாகவும் உருவாகும் ஆபத்துடையன. இருதய நோய்க்கான



2002 ஏப்ரல் 9]

அறிகுறி, கண்பார்வை குறைபாடு, தொழுநோய், பல் தொடர்பான நோய்கள் ஆகியவற்றைக் கண்டறிந்து சிகிச்சையளிப்பதன் மூலம் பிற்காலத்தில் அவர்களுக்கு ஏற்படும் பெரும் நோய்களிலிருந்து மாணவர்களைக் காப்பாற்றும் வாய்ப்பு ஏற்படுகிறது. இதனை அடிப்படையாக வைத்து வியாழக்கிழமை தோறும் பள்ளி சிறார் நலவாழ்வுத்திட்ட நாளாகக் கடைபிடிக்கப்படுகிறது. அன்றையதினம் இந்தப் பணியினை அருகிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மேற்கொண்டு வருகிறது.

**2.22. மாணவர்களுக்கு வருமான மற்றும் நாட்டினச் சான்றிதழ்**

பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் பள்ளிப்படிப்பினை முடித்த நாளன்றே குடும்ப வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், பிறப்பிடச் சான்றிதழ் இவற்றை சம்பந்தப்பட்ட மாவட்டத்தைச் சார்ந்த வட்ட ஆட்சியரிடமிருந்து பெற தொடர்ந்து வழிவகை செய்யப்படுகிறது.

**2.23. மாணவர்களுக்கு கல்விச் சலுகைகள்**
**மிகச் சிறந்த மாணவர்களுக்கான திட்டம்**

திறமையுள்ள மாணவர்கள் தங்களது உயர் கல்வியைத் தொடர ஊக்குவிக்க அரசு இத்திட்டத்தை அறிவித்துள்ளது. ஒவ்வோராண்டும் மாநில மற்றும் மாவட்ட அளவில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் முறையே முதல் மூன்று படி நிலையை, மூன்று வகைப் பள்ளிகளில் முதல் நிலையைப் பெறுவோர்களுடைய கல்விச் செலவுக்காக +2 முடிக்கும் வரை வருடமொன்றுக்கு ஒட்டுமொத்த தொகையாக ரூ. 1,500/- வழங்கப்படுகிறது. இதேபோன்று பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று படி நிலையைப் பெறுவோரின் உயர் கல்விச் செலவையும், மாவட்ட அளவில் முதல் நிலையில் ஒவ்வொரு வகைப் பள்ளியிலும் வரும் (அதாவது அரசினர் மேல்நிலைப் பள்ளிகளில் ஒன்று, உதவி பெறும் பள்ளிகளில் ஒன்று, சுயநிதிப் பள்ளிகளில் ஒன்று) மூன்று மாணவர்களது உயர் கல்விச் செலவையும் அரசு ஏற்கிறது.

**ஊரகத் திறமை தேடுதல் தேர்வுத் திட்டம்**

பள்ளிகளில் அதிக சாதனைத் திறமையுடைய மாணவர்களைத் தேர்வு செய்யும்பொருட்டு இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஊரகப்

பகுதிகளில் எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற குழந்தைகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்டு மாதம் இத்தேர்வு அரசு தேர்வுத் துறை இயக்குநரகத்தால் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 50 சிறுவர்கள் மற்றும் 50 சிறுமியர்கள் ஆக மொத்தம் 100 பேர் இத்தேர்வின்மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படிக்க நான்கு ஆண்டுகளுக்கு ஒவ்வொரு மாணவனுக்கும் ஒவ்வோராண்டுக்கும் ரூ.1,000 உபகாரத் தொகை வழங்கப்படுகிறது.

**2.24. ஆசிரியர் இல்லம்**

ஆசிரியர்களின் நலனுக்காக சென்னை, சைதாப்பேட்டையில் ஓர் ஆசிரியர் இல்லம் செயல்படுகிறது. இங்கு தங்கும் ஆசிரியர்களுக்குக் குறைந்த செலவில் சிறப்பான இடவசதி அளிக்கப்படுகிறது. வரும் ஆண்டுகளில் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் ஆசிரியர் இல்லங்களை உருவாக்க அரசு தேவையான முயற்சிகளைச் செய்யும்.

**2.25. ஆசிரியர் நல தேசிய நிறுவனம்**

ஆசிரியர் நல தேசிய நிறுவனம் 1962 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது இந்நிறுவன நிதி மூலம் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.4,87,187 மருத்துவ உதவியாக பதிமூன்று ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் ஆசிரியர்களின் வாரிசுகளுக்கு தொழிற்கல்வி மற்றும் பட்டயப் படிப்ப செலவிற்காக உபகாரத் தொகை அளிக்கிறது. 2001 ஆம் ஆண்டு, 480 மாணவர்கள் இதன் மூலம் பயன் அடைந்துள்ளனர். இதற்காக ரூ.23,20,000 செலவிடப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தில் 28-2-2002 நிலவரப்படி ரூ.11,58,92,957/-நிலையான வைப்புத் தொகையாக உள்ளது.

**2.26. ஆசிரியர்களுக்கான மாநில மற்றும் தேசிய விருதுகள்**

தமிழ்நாடு அரசு வழங்கும் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது என்ற 'மாநில நல்லாசிரியர்' விருது வழங்கும் திட்டம் 1960-ல் தொடங்கப்பட்டது. ஒவ்வோராண்டும் செப்டம்பர் 5-ம் தேதியன்று நடத்தப்படும் ஆசிரியர் தின விழாவில் இவ்விருதுகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலிருந்தும் தொடக்க/நடுநிலைப் பள்ளிகளிலிருந்து 3 ஆசிரியர்கள், உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து 2 ஆசிரியர்கள், மெட்ரிகுலேசன் பள்ளிகளிலிருந்து 6 ஆசிரியர்கள், ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளிலிருந்து 2 ஆசிரியர்கள் எனவும் மொத்தம் 323 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விருதுகள் வழங்கப்படுகின்றன.



விருது பெறும் ஆசிரியர்களுக்கு, பரிசுத் தொகை ரூ.2,000/-, வெள்ளிப் பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழ் ஆகியவை வழங்கப்படுகின்றன.

**2.27. ஆசிரியர்களுக்கான தேசிய விருது**

இந்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை, நாடு முழுவதுமுள்ள ஆசிரியர்களில் சிறந்த ஆசிரியர்களை ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் தேசிய விருது வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிலிருந்து தொடக்கப் பள்ளி ஆசிரியர்களில் 15 நபர்களும், தொடக்கப் பள்ளி சிறப்பு வகை (ஊனமுற்ற பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் ஊனமுற்ற ஆசிரியர்கள்) ஆசிரியர்களில் 2 நபர்களும், இடைநிலைப் பள்ளி ஆசிரியர்களில் 7 நபர்களும், அவர்களில் சிறப்பு வகையைச் சார்ந்த 1 நபர் ஆக, 25 நபர்களுக்கு விருது வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. தேசிய விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்குப் பரிசுத் தொகை ரூ.25,000/- வெள்ளிப் பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் ஆகியவற்றுடன், இரயிலில் முதல் வகுப்புப் பயணப் போக்குவரத்துப் படியும் வழங்கப்படுகிறது.

**2.28. பெற்றோர்-ஆசிரியர் சங்கம்**

கூட்டுறவு சங்கங்கள் சட்டம், 1975-ன்படி பெற்றோர் - ஆசிரியர் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகின்றன. பள்ளிக்குச் செல்லும் வயதில் உள்ள அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்ப்பது, பள்ளியில் சேர்ந்தோர் படிப்பை இடையில் நிறுத்திவிடாமல் தொடர்ந்து பள்ளியிலேயே படிக்கச் செய்தல் மற்றும் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல் போன்றவை இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாகும். பள்ளிகளுக்கு அடிப்படை வசதி அளிக்கும்பொருட்டு பொது மக்களிடமிருந்து அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை அன்பளிப்பாகப் பெற இச்சங்கங்களுக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

மாநிலத்தில் ஒவ்வொரு பள்ளியிலும், கல்வி மாவட்ட அளவிலும், வருவாய் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் பெற்றோர் - ஆசிரியர் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களானவை மாதம் ஒரு முறையாவது கூடி கூட்டு நடவடிக்கைகளைப் பதிவு செய்து, அதன்படி பள்ளிகளின் வளர்ச்சிக்கு நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தப்படும்.

**2.29. பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்**

தமிழகத்திலுள்ள அனைத்து உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளிலும் கல்வி மேம்படுவதற்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகளான

விளையாடும் இடம், கட்டடம், கழிப்பிட வசதி, குடிநீர் வசதி, மின் வசதி, கற்பிக்கும் கருவிகள், விளையாட்டுக் கருவிகள் முதலான தேவைகளைப் பூர்த்தி செய்ய பள்ளிச் சீரமைப்பு மாநாடு நடத்தும் திட்டம் வழிசெய்கிறது. இந்த வசதிகளைப் பூர்த்தி செய்ய பொது மக்களிடமிருந்து நன்கொடைகள் பெறப்படுகின்றன. இதன்படி பள்ளிச் சீரமைப்பு மாநாடு நடத்தியதன் மூலம் கீழ்க்கண்டவாறு தொகை கிடைத்துள்ளது:—

| | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| அசையும் சொத்து | 47.20 |
| அசையாச் சொத்து | 246.39 |
| *மொத்தம்* | ***293.59*** |

## 2.30. மெட்ரிக்குலேசன் பள்ளிகள்

தமிழ்நாட்டில் தற்போது சுமார் 1952 மெட்ரிக்குலேசன் உயர்நிலைப் பள்ளிகளும், சுமார் 1012 மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன. இப்பள்ளிகள் இதுநாள்வரை பள்ளிக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வந்தன. இப்பள்ளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. இப்பள்ளிகளைச் சரிவரக் கண்காணிக்க மெட்ரிக்குலேசன் பள்ளிகளுக்கென தனி இயக்குநரகம் ஏற்படுத்தப்பட்டு, 4-12-2001 முதல் செயல்பட்டு வருகிறது.

புதிய இயக்குநரகம் ஏற்படுத்தும்முன், மெட்ரிக்குலேசன் பள்ளிகளைக் கண்காணிப்பதற்கென கள அளவில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய 3 இடங்களில் மட்டுமே மெட்ரிக்குலேசன் பள்ளிகள் ஆய்வாளர்கள் இருந்து வந்தனர். பெருகிவரும் மெட்ரிக்குலேசன் பள்ளிகளின் எண்ணிக்கையினைக் கருத்தில் கொண்டு, அப்பள்ளிகளை நெறிப்படுத்தவும், கண்காணிக்கவும், கள அளவில் மேலும் மெட்ரிகுலேசன் பள்ளி ஆய்வாளர் அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டு (திருவண்ணாமலை, சேலம், திண்டுக்கல், காஞ்சிபுரம், திருச்சி, புதுக்கோட்டை மற்றும் திருநெல்வேலி ஆகிய ஏழு இடங்களில்) புதிய இயக்குநரகம் பலப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்குநரகம் தோற்றுவிக்கப்பட்ட பின்னர், புதிய மெட்ரிக்குலேசன் பள்ளி தொடங்குவதற்கு தொடக்க அனுமதி, மெட்ரிக்குலேசன் பள்ளிகளில் கூடுதல் வகுப்புகள் தொடங்க அனுமதி மற்றும் புதுப்பித்தல், அங்கீகார அனுமதி போன்றவை கால தாமதம் இல்லாமல் வழங்கப்பட்டு வருகின்றன.



மெட்ரிகுலேசன் பள்ளிகளில் குறைந்தபட்ச உள்ளமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல், பள்ளிக் கட்டண அமைப்பு முறை, ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாதோர் ஊதிய விகிதம் ஆகியவை பற்றி ஆராய்ந்து அறிக்கையொன்றினை வழங்குவதற்காக முன்னாள் பள்ளிக் கல்வி இயக்குநரும், முன்னாள் துணை வேந்தருமான முனைவர் எஸ்.வி. சிட்டிபாபு அவர்கள் தலைமையின்கீழ் துணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் மெட்ரிகுலேசன் பள்ளிகளில் நடைமுறையில் உள்ள பாடத்திட்டத்தை, செயல்திறன்மிக்க, அண்மைக்கால அறிவியல் தொழில் நுட்ப மேம்பாட்டுடன் ஒருங்கிணைக்கும் வகையில் திருத்தியமைக்க கல்வியாளர்கள் கொண்ட ஓர் உயர்மட்ட குழு அமைக்கப்படும்.

## 3. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

### தொலைநோக்கு

நல்ல, தரமான ஆசிரியர்களை உருவாக்குவதும், அவர்கள் பணியில் சேர்ந்தபின் நவீன கற்பித்தல் முறைக்கேற்ப பணியினைப் பயிற்சி அளிப்பதும், பள்ளிக் குழந்தைகளுக்கும் பாடம் தொடர்பாக விளக்கம் தரக்கூடிய ஒலி-ஒளி நாடாக்கள் தயாரிப்பதுமே இந்த இயக்கத்தின் நோக்கமாகும்.

### 3.1. ஆசிரியர் கல்வி

ஆசிரியர் கல்விக்கென தனி இயக்ககம் தோற்றுவிக்கப்பட்டு 1990 முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வியக்கத்தின்கீழ் செயல்பட்டுவரும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் விவரம் வருமாறு:—

| | |
|---|---|
| மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள் (மைய அரசு முழு நிதியுதவியுடன் செயல்படும் நிறுவனம்) | 29 |
| அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | 8 |
| அரசு நிதியுதவி பெறும் சிறுபான்மையல்லாதோர் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | 7 |
| அரசு நிதியுதவி பெறும் சிறுபான்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | 35 |
| அரசு அங்கீகாரம் பெற்ற நிதியுதவி பெறாத சிறுபான்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | 2 |

[ 2002 ஏப்ரல் 9

| | |
|---|---|
| ஆங்கிலோ இந்திய ஆசிரியர் பயிற்சி நிறுவனம் | 1 |
| அரசு நிறுவனங்களில் சிறுபான்மை மொழிப் பிரிவுகள் | |
| உருது | 2 |
| ராயப்பேட்டை (பெண்கள்) | |
| தாயார் சாகிப் தெரு (ஆண்கள்) | |
| மலையாளம் (தேரூர்) | 1 |
| தெலுங்கு (கிருஷ்ணகிரி, கெங்கவல்லி, இராணிப்பேட்டை) | 3 |

இவற்றினில் 17 மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென தனிப் பிரிவு தொடங்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. தேனி மாவட்டம் உத்தமபாளையம், மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனத்தில் கள்ளர் சீரமைப்பு-பிரமலைக் கள்ளர், மாணவ மாணவியர்களுக்கென இரு தனிப் பிரிவுகள் தொடங்கப்பட உள்ளன. மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனம் மற்றும் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் உள்ள மொத்த சேர்க்கை இடங்கள் 50 விழுக்காடு இடங்கள் முறையாக +2 முடித்துவரும் மாணவர்களுக்கும், 40 விழுக்காடு இடங்கள் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்ட தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்று பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் ஒதுக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் அனைவருக்கும் பயிற்சி அளிப்பதெனில் மேலும் பல ஆண்டுகள் பிடிக்கும். இதனை மனதிற்கொண்டு பாதிக்கப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் ஒரே முறையில் பயிற்சி கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தேசிய ஆசிரியர் குழுமத்தின் ஒப்புதலுடன் 15,670 மாணவர்களுக்குக் கூடுதல் சேர்க்கை இடமளிக்கப்பட்டு 2002-ல் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வகை மாணவர்களுக்கு வயது வரம்பு நிர்ணயம் செய்யப்படவில்லை. கல்வித் தகுதியானது, தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் விதிகளின்படி +2 படிப்பில் ஒட்டுமொத்த மதிப்பெண்ணில் 45 விழுக்காடு மதிப்பெண் ஆகும்.

இந்த பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கென 403 இளநிலை விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் அடிப்படை வசதிகளுக்கென ரூ.3.38 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 9 ]

இந்தவகையில் பாதிக்கப்பட்ட தகுதியுள்ள மாணவர்கள் அனைவருக்கும் பயிற்சி அளித்தவுடன் +2 படிப்பில் (Pre School Teacher) என்ற ஒரு பாடத்தைப் பயின்றவர்களும் ஆசிரியர்களாக நியமனம் பெற அவர்களுக்கும் முறையான இரண்டு ஆண்டு பயிற்சி அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஆசிரியர் பயிற்சி சேர்க்கையில் கடந்த காலத்தில் ஏற்பட்ட இடர்பாடுகளைக் களையும்பொருட்டு 2001-2002 ஆம் கல்வியாண்டு முதல், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையானது ஒற்றைச்சாளர முறையில் நிரப்பப்பட்டு வருகிறது. இம்முறையானது அனைவராலும் வரவேற்கப்பட்டு பாராட்டப்பட்டுள்ளது.

**3.2 ஆராய்ச்சியும், பயிற்சியும்**

மாணவர்கட்குத் தரமான கல்வி வழங்குவதற்கு ஏதுவாக, ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககமும், 29 மாவட்டங்களிலுள்ள மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களும் இணைந்து ஆசிரியர் பயிற்சியாளர்கட்கும், ஆசிரியர்களுக்கும், கல்வி மற்றும் கற்பித்தல் சார்ந்த அடிப்படையான பயிற்சியை அளிக்கின்றன.

**3.3 குறிக்கோள்கள்**

* இவ்வியக்ககத்தின் நோக்கங்களை, ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி என்ற மூன்று கூறுகளாகப் பிரிக்கலாம்.
* மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களில் பயிலும் பயிற்சி ஆசிரியர்களின் திறன்களையும், தொழில் திறமையையும் மேம்படுத்தி ஆசிரியர் கல்விப் பணித் திட்டத்தை, ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசிய நிலைக்கு உயர்த்துதல்.
* கல்வித்தர மேம்பாட்டிற்கான பாடப் புத்தகங்கள், கையேடுகள், பயிற்சியேடுகள், ஒலி-ஒளி நாடாக்கள் உள்ளடக்கிய கற்றல்-கற்பித்தல் கருவிகளைத் தயாரித்தல்.
* அனைத்து ஆசிரியர்களுக்கும் பணியிடை மற்றும் புத்தறிவுப் பயிற்சி அளித்தல்.
* தொடக்க மற்றும் இடைநிலைக் கல்வி வழங்கும் பல்வேறு பகுதிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளுதல், அனைத்து நிலை ஆசிரியர்களிடமும் ஆய்வு நோக்கை ஊக்குவித்தல்.

* நூலறிவை நடைமுறையில் தெளியும் பொருட்டு செயலாராய்ச்சியில் கண்டறிந்தவற்றைப் பரப்புதல்.

**3.4 நிருவாகத் திறன்கள்**

மேற்காணும் குறிக்கோள்களை அடைய கீழ்க்கண்ட நிருவாகத் திறன்கள் உருவாக்கப்பட்டுள்ளன:—

* தேசிய ஆசிரியர் கல்வி அமைப்புடனும், பல்கலைக்கழகத் துறைகளுடனும் கலந்தாலோசித்து எல்லா நிலைகளிலும் ஆசிரியர் பயிற்சிக் கல்வியின் பாடத்திட்டத்தைச் சீர்செய்து திருத்தி அமைத்தல்.

* படிப்படியான நிலைகளில் ஆரம்பப் பள்ளி வகுப்புகளுக்குப் பாடப்புத்தகங்களும், கையேடுகளும், பயிற்சியேடுகளும் தயாரித்தல்.

* கல்வித் தொலைக்காட்சி நிலையத்தின் மூலம் பாடங்களைத் தெரிவிக்கும் ஒலி-ஒளி நாடாக்கள் தயாரித்தல்.

* உடல்நலக் கல்வி, மக்கள்தொகைக் கல்வி, உயிர்கொல்லி நோய்க் (எய்ட்ஸ்) கல்வி, மழலையர் கல்வி, நிறுவனத் திட்டமிடுதல் ஆகியவற்றிற்கான கற்றல் ஆதாரப் பொருட்களைத் தயாரித்தல்.

* தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பாடப்பொருள், கற்பித்தல் முறை மற்றும் பொதுத் தலைப்புகளில் பணியிடைப் பயிற்சி அளித்தல்.

* பாடப்புத்தகங்கள் மற்றும் கற்றல்-கற்பித்தல் கருவிகள் ஆகியவற்றின் பயன்பாடு குறித்து ஆய்தல்.

* பள்ளி மற்றும் வகுப்பறை சூழல் குறித்த செயல் முறை ஆய்வுகள் மேற்கொள்ள ஆசிரியர்களையும், மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களையும் ஊக்குவித்தல்.

* ஆய்வின் முடிவுகளைப் பரப்ப ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி, பயிற்சி இயக்ககம் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களில் செய்தி மலர்கள் வெளியிடுதல்.

* பயிற்சி குறித்த பல்வகைத் திட்டமிடுதலுக்கு வசதியாக மாவட்டங்களில் புள்ளிவிவர மையங்கள் பராமரித்தல்.





**3.5 தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சி**

பள்ளிகளில் கல்வியின் தரம் உயர நவீன பாடத் திட்டத்திற்கேற்ப ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளிப்பது அவசியமாகிறது. மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்கள் மூலம் மைய அரசு அளிக்கும் நிதியிலிருந்து ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

வகுப்பறையானது பள்ளிக் குழந்தைகளுக்கு உகந்ததாகவும், ஆர்வமுடன் அவர்கள் பள்ளிக்கு வரும் பழக்கத்தை ஏற்படுத்துவதாகவும் அமைய வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்த சுயமாகக் கற்றலை (Self-learning) ஊக்குவிக்கும் பொருத்தமான கற்பிக்கும் முறை உருவாக்கப்பட்டு தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு மீண்டும் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

**3.6 தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்கான சிறப்புப் புத்தறிவுப் பயிற்சி**

சிறப்புப் புத்தறிவுப் பயிற்சியின் முக்கிய நோக்கம், தேசியக் கல்விக் கொள்கையில் கூறப்பட்டவாறு குறைந்தபட்சக் கல்வித் திறன் பெறச்செய்ய, அடைய வேண்டிய திறன்களை அறிமுகப்படுத்துவதாகும். இத்திட்டத்தின் மூலம் முதலாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான தமிழகத்திலுள்ள அனைத்து இடைநிலை ஆசிரியர்களுக்கும், தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு விட்டன. இத்திட்டத்தின்கீழ் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் இவ்வாண்டு பயிற்சி அளிக்க கருதப்பட்டு 2001-2002-ல் உயர்நிலைப் பள்ளியில் சுமார் 30,000 இடைநிலை ஆசிரியர்களுக்கு, புத்தறிவுப் பயிற்சி ரூ.2.30 கோடி செலவில் அளிக்கப்பட்டுள்ளது. வருமாண்டுகளில் மீதம் உள்ள ஆசிரியர்களுக்கும் படிப்படியாக வழங்கப்படும்.

**3.7 வட்டார வள மையங்கள்**

மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் செயல்பட்டு வரும் 7 மாவட்டங்களில் வட்டார வள மையங்கள் (Block Resource Centres) ஏற்படுத்தப்பட்டு, அம்மையங்களுடன் மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்கள் ஒருங்கிணைந்து, அனைவருக்கும் கட்டாயத் தொடக்கக் கல்வி என்ற இலக்கினை அடைய ஓர் இணைப்புப் பாலமாகச் செயல்பட்டு வருகின்றது. இதேபோன்று மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் செயல் படுத்தப்படாத தேனி, திருவாரூர், சிவகங்கை மாவட்டங்களில் 30 வட்டார வள மையங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. "அனைவருக்கும் கல்வி" (SSA) என்ற திட்டம்

[2002 ஏப்ரல் 9

இம்மாவட்டங்களில் செயல்படுத்தப்படுவதால் இவ்வட்டார வள மையங்கள் அதனுடன் இணைக்கப்படும்.

### 3.8 ஆசிரியர் பட்டயப் பயிற்சிக்கான கலைத் திட்டம் மற்றும் பாடத்திட்டம்

ஆசிரியர் பட்டயப் பயிற்சிக்கென தனியானதொரு கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டம் இதுநாள் வரை வகுக்கப்படவில்லை. 2001-2002ல் இதற்கென கலைத் திட்டம் மற்றும் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டு வளப்புத்தகங்கள் (Resource Books) தமிழ்நாட்டு பாடநூல் கழகம் மூலம் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர் கல்விப் பட்டயப் பயிற்சிக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்தில், கைத்தொழில், உடற்பயிற்சிக் கல்வி, யோகாசனம், ஊனமுற்றோருக்கு ஒருங்கிணைந்த கல்வி ஆகியன சேர்க்கப்பட்டுள்ளன. இப்புதிய பாடத்திட்டம், தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் மிகுந்த பாராட்டைப்பெற்றுள்ளது.

### 3.9 மாநில திறந்தவெளிப் பள்ளி

பள்ளிப் படிப்பைத் தொடர்ந்து படிக்க இயலாமல் இடையில் நிறுத்தி விட்டவர்கள் தொடர்ந்து படித்து, பத்தாம் வகுப்பு கல்வித் தகுதியைப் பெறுவதற்கு வழி செய்வதற்கென தமிழ்நாடு திறந்தவெளிப் பள்ளித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பள்ளிப்படிப்பை நிறுத்திவிட்ட அனைவரும் சேர்ந்து பயன்பெறுவர் எனக் கருதப்பட்டது. ஆனால் காலப்போக்கில், பணியில் இருப்பவர்கள் அதுவும் பதவி உயர்வுக்காகக் காத்திருப்போர் மட்டுமே இப்பள்ளியில் சேர்ந்து வருகின்றனர்.

பள்ளிப்படிப்பைப் பாதியிலேயே நிறுத்திவிட்ட குழந்தைகள் மேலும் கல்வியைத் தொடர "தேசிய திறந்தவெளிப் பள்ளி" என்ற ஓர் அமைப்பு தேசிய அளவில் செயல்பட்டு வருகிறது. அதேபோன்று மாநில அளவிலும் "மாநில திறந்தவெளிப் பள்ளி" என்ற அமைப்பை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன்படி, முறையான பள்ளிகளில் பயின்றதற்கு சான்றிதழ்கள் வழங்குவதுபோல் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

### 3.10 கல்வித் தொலைக்காட்சி படப்பதிவு நிலையம்

பள்ளிக் குழந்தைகளுக்கு பாடம் தொடர்பான விளக்கம் தரக்கூடிய ஒலி-ஒளி நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதே கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையம் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கமாகும்.



2002 ஏப்ரல் 9]

தொடக்கக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் வகையில், ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் ஒளி நாடாக்கள் தயாரிக்கப்பட்டு சென்னை தொலைக்காட்சியின் "காண்போம் கற்போம்" கல்வி நிகழ்ச்சியில் ஒளிபரப்பப்படுகின்றன. மேலும் இதன் ஒளி நாடாக்கள் 29 மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களிலும் மற்றும் வட்டார வள ஆதார மையங்கள் மூலமாகவும் ஆசிரியர்களின் பணியிடைப் பயிற்சியின்போது பயன்படுத்தப்படுகிறது.

தேசியக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாநிலக் கல்வித் தொழில்நுட்ப மையங்கள் மற்றும் வெளிநாட்டுக் கல்வி அமைப்புகள் தயாரித்துள்ள ஒலி/ஒளி நிகழ்ச்சிகளையும் பெற்று நமது தேவைக்கேற்ப மாற்றியமைத்து, பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

### 4. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

**தொலைநோக்கு**

கல்லாமையை இல்லாமை ஆக்கும் சீரிய குறிக்கோளை எய்த, தமிழக எழுத்தறிவு முனைப்பு ஆணையம் செயல்பட்டு வருகிறது. இந்த ஆணையம் கீழ்க் குறிப்பிட்டுள்ள குறிக்கோள்களுடன் செயல்படும்:

### 4.1 குறிக்கோள்கள்

2010-க்குள் அனைவரையும் முழு எழுத்தறிவு பெற்றவர்களாக திகழச் செய்தல்

வயது வந்தோர், பள்ளி செல்லாதோர், பள்ளிப் படிப்பை இடையில் விட்டோர் ஆகியோருக்கான வாழ்க்கை முழுவதும் பொருத்தமான, பயனுடைய பல்வகை முயற்சிகள் மூலம் எழுத்தறிவு அளிப்பது.

**மகளிர் எழுத்தறிவுக்குத் தனிக் கவனம் செலுத்துவது**

தமிழகத்திலுள்ள எல்லாக் கிராமங்களிலும் வளர்கல்வி மையங்களை ஆரம்பித்து, கற்கும் சூழ்நிலை மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மற்றும் தானாக வேலை வாய்ப்பு பெறும் நிலைகளை உருவாக்குதல்.

புதிய மாற்று கல்வித் திட்டம் மற்றும் கல்விக் காப்புறுதித் திட்டம் வழியாக பள்ளிக்கே செல்லாத, பள்ளிப் படிப்பை இடையில் விட்ட 6-14 வயதுக் குழந்தைகள் அனைவருக்கும் ஐந்தாம் வகுப்பு தேர்ச்சிக்கு இணையான கல்வி வழங்குதல்.

### 4.2 நடைமுறையில் உள்ள திட்டங்கள்

#### வளர்கல்வித் திட்டம்

அறிவொளி இயக்கத்தின் முழு எழுத்தறிவுத் திட்டம் மற்றும் தொடர்கல்வித் திட்டம் முடிவுற்ற பின், மூன்றாவது கட்டமாக வளர்கல்வித் திட்டம் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில், முழு எழுத்தறிவுத் திட்டம் மற்றும் தொடர் கல்வித் திட்டத்தின் மூலம் கல்வி அறிவு பெற்றவர்கள் மேலும் கற்றதனை நிலைநிறுத்திக்கொள்ளவும், விரிவு படுத்தவும் வளர்கல்வி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதற்காகும் செலவினத்தை முதல் மூன்று ஆண்டுகளுக்கு மைய அரசின் முழு நிதியுதவியுடன் செயல்படுத்தவும், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு மைய மற்றும் மாநில அரசு 50:50 என்ற விகிதத்தில் செலவினத்தை மேற்கொண்டும் இத்திட்டம் செயல்பட உள்ளது. மேலும் இத்திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த ஊராட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களுக்கும் ரூ.63.44 கோடிக்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. முதலாம் கட்டமாக இத்திட்டத்தின் மூலம், 1998 ஆம் ஆண்டு முதல், கீழ்க் குறிப்பிட்டுள்ள ஒன்பது மாவட்டங்களில் 2538 வளர்கல்வி மையங்களும் 382 முதன்மை வளர் கல்வி மையங்களும் தோற்றுவிக்கப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இத்திட்டத்திற்கு ரூ.3.63 கோடி முதல் தவணையாக மைய அரசினால் வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் தவணையாக ரூ.2.30 கோடி 7 மாவட்டங்களுக்கு (மதுரை, தேனி தவிர) அனுமதித்து தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள வளர்கல்வித் திட்டம்**

| வ.எண் | மாவட்டம் | அனுமதிக்கப்பட்ட மையங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | வளர்கல்வி மையங்கள் | முதன்மை வளர்கல்வி மையங்கள் | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | கன்னியாகுமரி | 165 | 23 | 188 |
| 2. | திருநெல்வேலி | 387 | 55 | 442 |
| 3. | விருதுநகர் | 288 | 62 | 350 |



| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 4. | புதுக்கோட்டை | 441 | 63 | 504 |
| 5. | சிவகங்கை | 154 | 22 | 176 |
| 6. | மதுரை | 247 | 35 | 282 |
| 7. | தேனி | 82 | 12 | 94 |
| 8. | இராமநாதபுரம் | 350 | 50 | 400 |
| 9. | வேலூர் | 424 | 60 | 484 |
| | மொத்தம் | 2538 | 382 | 2920 |

தொடர்கல்வித் திட்டம் முடிவுற்ற மேலும் 20 மாவட்டங்களில் வளர்கல்வித் திட்டத்தினைச் செயல்படுத்த கருத்துருக்கள் மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

**தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படவுள்ள வளர்கல்வித் திட்டம்**

| வ.எண் | மாவட்டம் | மாநில எழுத்தறிவு முனையத்தால் பரிந்துரைக்கப்பட்ட மையங்கள் | | |
|---|---|---|---|---|
| | | வளர்கல்வி மையங்கள் | முதன்மை வளர்கல்வி மையங்கள் | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | கோயம்புத்தூர் | 565 | 62 | 627 |
| 2. | ஈரோடு | 464 | 51 | 515 |
| 3. | சேலம் | 469 | 52 | 521 |
| 4. | நாமக்கல் | 354 | 39 | 393 |
| 5. | திருவண்ணாமலை | 824 | 91 | 915 |
| 6. | திண்டுக்கல் | 366 | 40 | 406 |
| 7. | திருச்சிராப்பள்ளி | 468 | 51 | 519 |
| 8. | பெரம்பலூர் | 309 | 34 | 343 |
| 9. | கரூர் | 181 | 20 | 201 |
| 10. | கடலூர் | 678 | 75 | 753 |
| 11. | தஞ்சாவூர் | 567 | 63 | 630 |
| 12. | தருமபுரி | 620 | 68 | 688 |
| 13. | நாகப்பட்டினம் | 424 | 47 | 471 |
| 14. | திருவாரூர் | 415 | 46 | 461 |
| 15. | நீலகிரி | 306 | 34 | 340 |

[ 2002 ஏப்ரல் 9

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 16. | தூத்துக்குடி | 660 | 73 | 733 |
| 17. | சென்னை | 300 | 30 | 330 |
| 18. | காஞ்சிபுரம் | 615 | 68 | 683 |
| 19. | விழுப்புரம் | 893 | 100 | 993 |
| 20. | திருவள்ளூர் | 606 | 67 | 673 |
| | மொத்தம் | **10084** | **1111** | **11195** |

இதன்கீழ், 9 மாவட்டங்களுக்கு (ஈரோடு, சேலம், நாமக்கல், திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர், தருமபுரி மற்றும் சென்னை) ரூ.16.09 கோடி மைய அரசால் அனுமதிக்கப்பட்டு, தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

**4.3. கல்வி உத்தரவாதத் திட்டம் மற்றும் மாற்று புதுமைக் கல்வித் திட்டம்**

அனைவருக்கும் கல்வி (Sarva Shiksha Abhiyan) என்ற நோக்கத்தை நிறைவேற்றும்பொருட்டு மத்திய மாநில அரசின் நிதி உதவியோடு (75:25) **6 முதல் 14 வயதினரில் பள்ளிக்குச் செல்லாதோர் மற்றும் பள்ளிப் படிப்பை இடையில் விட்டோருக்குப் புதிய யுக்திகளோடு எழுத்தறிவும், எண்ணறிவும் வழங்கி அவர்களை முறையான பள்ளிக் கல்விக்கு அழைத்துச் செல்லும் கல்வி உத்தரவாதத் திட்டம் மற்றும் மாற்று புதுமைக் கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட் உள்ளது. இத்திட்டம் கீழ்க்கண்ட மூன்று பெரிய யுக்திகளுக்கு ஆதரவு அளிக்கும்:**

* பள்ளியில்லாக் குடியிருப்புகளில் பள்ளிகளைத் தொடங்குதல்.
* பள்ளியில்லாக் குழந்தைகளுக்கு இணைப்பு படிப்பு (Bridge Course) மற்றும் பள்ளிக்குத் திருப்புதல் (Back to School) மூலம் பள்ளி செல்ல வாய்ப்பு கொடுத்தல்.
* பள்ளிப் படிப்புக்குத் திரும்ப முடியாத குழந்தைகளுக்கும் தனித்துவமான புதிய முறையில் கல்வி கற்பித்தல்.

இவ்விரு திட்டங்களும் ஐந்து ஆண்டுகளுக்கு (2002-2007) கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படவுள்ளன:



2002 ஏப்ரல் 9 ]

| வ.எண் | விவரம் | மாற்று புதுமைக் கல்வித் திட்டம் | கல்வி உத்தரவாதத் திட்டம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | திட்டம் தொடங்கப்படவுள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை | 21 | 17 |
| 2 | 6-14 வயது பிரிவில் பரிந்துரைக்கப்பட்ட மையங்களின் எண்ணிக்கை | 1622 | 252 |
| 3 | பயன்பெற உள்ள சிறார்களின் எண்ணிக்கை | 61305 | 6907 |
| 4 | மொத்த மதிப்பீட்டுத் தொகை(2002-2007) | (ரூபாய் இலட்சங்களில்) 2158.360 (21 மாவட்டங்களில்) | 269.645 (17 மாவட்டங்களில்) |
| 5 | இதில் மத்திய அரசின் பங்குத் தொகை | 1631.079 | 202.234 |
| 6 | இதில் மாநில அரசின் பங்குத் தொகை | 527.282 | 67.411 |

**இது தவிர, கல்வி உத்தரவாதத் திட்டம் மற்றும் மாற்று புதுமைக் கல்வித் திட்டத்தின்கீழ் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினரும் ஊக்கப்படுத்தப்படுவார்கள்.**

**4.4. மக்கள் கல்வி நிறுவனம் (JAN SHIKSHAN SANSTHAN)**

தொழிலாளர் குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்களிடம் தொழில் நுட்பத் திறன்களை மேம்படுத்தவும், சுய வேலைவாய்ப்பினை உருவாக்கும் நோக்கத்திலும், மக்கள் கல்வி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னை, மதுரை, திருச்சி ஆகிய நகரங்களில் செயல்பட்டுவரும் மக்கள் கல்வி நிறுவனங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றன. இவை மைய அரசின் முழு

நிதியுதவியுடன் செயல்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்கள் மூலம் குறுகிய காலப் பயிற்சிகளாக சோப்பு, சோப்புத்தூள், ஷாம்பு, வாசனைப் பத்தி, பினாயில் போன்றவை தயாரிப்பதற்கான பயிற்சிகளும், நீண்ட காலப் பயிற்சிகளான வீட்டு மின் இணைப்புப் பணி, நீர் இறைப்பு இயந்திரம் பழுதுபார்த்தல், தட்டச்சு, தையல் பயிற்சி, வண்ணத்திரை அச்சிடுதல், சுவரொட்டி தயாரிப்பு, தொலைக்காட்சி/வானொலிப்பெட்டி பழுது பார்த்தல், புகைப்படம் எடுத்தல் போன்ற பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

**தொழிற்கல்வி பயிற்சி மூலம் பயன்பெற்றோர் விவரம்**

| | எண்ணிக்கை | ஆதிதிராவிடர் | பழங்குடியினர் |
|---|---|---|---|
| ஆண்கள் | 11,517 | 2,826 | - |
| பெண்கள் | 17,800 | - | - |
| மொத்தம் | 29,317 | 2,826 | - |

## 5. அரசுத் தேர்வுகள்

**தொலைநோக்கு**

பள்ளிக் கல்வித் துறை சார்ந்த பல தேர்வுகளை நடத்துவது, தேர்வு முடிவுகளை வெளியிட்டுச் சான்றிதழ்களை வழங்குவது ஆகிய பணிகள் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் முக்கியப் பணிகளாகும். மறைபொருள் தன்மையை ஒவ்வொரு நிலையிலும் காப்பதே இத்துறையின் தலையாய கடமையாகும். இப்பணியை ஆற்றுவதில் ஒவ்வோராண்டும் பெருகிவரும் தேர்வு எழுதும் மாணவர் எண்ணிக்கை ஒரு சவாலாக அமைகிறது. எனவே பொறுப்பு பகிர்தல் முறையைப் பின்பற்றுவதன் மூலம் இச்சவாலுக்கு ஈடுகொடுத்து, தேர்வு நடத்தும் முறையில் கவனம் செலுத்த வேண்டிய திறன்பாடுகள், மறைபொருள் தன்மை காத்தல், குறைபாடுகளற்ற முறையில் தேர்வு முடிவினை வெளியிடுதல் ஆகிய குறிக்கோள்களை அடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசுத் தேர்வு இயக்ககத்தால், நாற்பதுக்கும் மேற்பட்ட தேர்வுகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றுள் இடைநிலை (எஸ்.எஸ்.எல்.சி.), மேல்நிலை (+2) பள்ளித் தேர்வுகள், மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ-இந்தியன் பள்ளித் தேர்வுகள், ஆசிரியர் கல்வி பட்டயச்



சான்றிதழ் தேர்வு, இசை, ஓவியம், தையல் போன்ற தொழிற் பாடங்கள் தொடர்பான தேர்வுகள் முக்கியமான தேர்வுகளாகும்.

**நோக்கங்கள்:**

* மாணவர்களின் அறிவுத் திறன், புரிந்துகொள்ளும் திறன் மற்றும் உள்ளார்ந்த அனைத்துத் திறன்களையும் வெளிக்கொணரும் வகையில் உள்மதிப்பீட்டுத் தேர்வுகளை நடத்துதல்.
* குறைபாடுகளற்ற வகையிலும், ஒழுங்கீனச் செயல் நடைபெறுவதைத் தடுக்கும் வகையிலும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடையே முழுமையான நம்பிக்கையினை ஏற்படுத்தும் வகையில் தேர்வுகளை நடத்துதல்.
* மதிப்பீட்டுப் பணியில் ஆசிரியர்களை முழு ஈடுபாட்டுடன் பணியாற்றச் செய்வதுடன், மாணவர்களின் உண்மையான தகுதிக்கேற்ப மதிப்பெண்கள் வழங்கி தேர்வு முடிவுகளையும், மதிப்பெண் சான்றிதழ்களையும் உரிய காலத்திற்குள் வழங்குதல்.
* போலிச் சான்றிதழ்களை முற்றிலும் களையத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது.

### 5.1. மைய மதிப்பீட்டு மையங்களில் OMR முறை பயன்படுத்துதல்

மேல்நிலைப் 'பள்ளித் தேர்வு மைய மதிப்பீட்டு மையங்களில் பயன்படுத்தப்பட்டு வந்த மதிப்பெண் தாள்களுக்குப் பதிலாக, OMR முறையிலான மதிப்பெண் தாள் முறையானது, தேர்வு முடிவுகள் விரைவாக வெளியிடப் பெரிதும் பயனளிப்பதாக உள்ளது. இந்த OMR மதிப்பெண் தாள் மூலம் பதியப்படும் மதிப்பெண்கள் நேரடியாக, OMR கருவிமூலம் Scanning முறையில் கணினி மூலம் மதிப்பெண் பதிவு செய்யப்படுகிறது. இம்முறையின் மூலம் மனித உழைப்பும் நேரமும் மிகவும் மிச்சப்படுகிறது. இந்த OMR முறை, சோதனை முறையில் மிகவும் வெற்றி கண்டுள்ளதால் மேல்நிலைக் கல்வித் தேர்வில் நிரந்தரமாகச் செயல்படுத்தப்படும்.

### 5.2. மறு மதிப்பீட்டுத் திட்டத்தை விரிவுபடுத்துதல்

மேல்நிலைத் தேர்வில் இயற்பியல், வேதியியல், கணிதம் மற்றும் உயிரியல் பாடங்களில் மாணவர்கள் எழுதிய விடைத்தாட்களுக்கான நகல்களை அளித்து, அவர்கள் விரும்பினால் மறுமதிப்பீடு செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் மாணவர்கள்,

அவர்கள் பெற்ற மதிப்பெண்களுக்கும், அவர்களின் எதிர்பார்ப்புக்கும் இடையில் உள்ள வேறுபாட்டைக் குறைத்து, தேர்வுத் துறையின் நம்பகத் தன்மையை உயர்த்துவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் பொதுமக்களிடம் நல்ல வரவேற்பையும், மதிப்பையும் பெற்றுள்ளது. எனவே இத்திட்டத்தை தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடங்களுக்கும் விரிவுபடுத்துவது குறித்து ஆராயப்படும்.

அதேபோன்று, ஆசிரியர் பயிற்சி பட்டயத் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு இதுவரை மறுகூட்டல் செய்தல்/மறுமதிப்பீடு செய்தல்/ விடைத்தாள்களின் நகல்கள் வழங்குதல் போன்ற சலுகைகள் அளிக்கப்படவில்லை. தற்போது இத்தேர்வினை எழுதும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வந்துள்ளது. எனவே ஆசிரியர் பயிற்சி மாணவர் நலன் கருதி, தேர்வுகளின் நம்பகத் தன்மையை மேம்படுத்தவும் வெளிப்படையான மதிப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்தவும் ஏற்ற வகையில் மறுகூட்டல், விடைத்தாள் நகல் வழங்குதல் மற்றும் மறுமதிப்பீடு ஆகியவற்றை ஆசிரியர் பயிற்சி பட்டயத் தேர்வுக்கும் விரிவுபடுத்துவது குறித்து ஆராயப்படும்.

**5.3. அரசுத் தேர்வுகள் இயக்ககத்துக்கென ஒரு இணையதளம் அமைத்தல்**

கடந்த 2 ஆண்டுகளாக மேல்நிலை மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் தனியார் இணையதளங்கள், தேசிய தகவல் மையம் (NICNET) மற்றும் இன்டர்நெட் (INTERNET) ஆகியவற்றின் மூலமாக வெளியிடப்பட்டு வருகின்றன. ஆனால் தனியார் மைய இணைய தளங்கள் தேர்வு முடிவுகளை ஒரு சில நாட்களுக்கு மட்டுமே வைத்திருக்கின்றன. இந்த குறுகிய காலத்திற்குள் தேர்வு முடிவுகளைப் பார்க்கத் தவறிய மாணவர்கள், தேர்வு முடிவுகளை அறிந்துகொள்வதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. இதை நிவர்த்திக்க, இத்துறையில் ஒரு இணையதளம் ஏற்படுத்தி அதில் மாணவர்களின் தேர்வு முடிவுகள் மற்றும் மதிப்பெண்களை நிரந்தரமாகப் பதிவு செய்து சமுதாயத்திற்கு உதவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் மாணவர்கள் உயர் கல்விக்காகச் செல்லும்போது கல்வி நிறுவனங்கள் அவர்களது சான்றிதழ்களின் உண்மைத் தன்மையை அறிய விரும்பினால் அந்தந்த நிறுவனங்களே இணையதளங்கள் மூலம் சரிபார்த்துக்கொள்ளலாம்.

மேலும் தேர்வுக் கால அட்டவணைகள், பள்ளி மற்றும் தனித் தேர்வர்களின் பெயர்ப்பட்டியல்கள், விண்ணப்பங்களுக்கான



அறிவிக்கைகள், பல்வேறு விண்ணப்பப் படிவங்களின் மாதிரிப் படிவங்கள், கட்டண விகிதங்கள், இரண்டாம்படிச் சான்றிதழ் மற்றும் சான்றிட்ட மதிப்பெண் பட்டியல்கள் பெறுவதற்கான விதிமுறைகள், முந்தைய தேர்வுகளின் வினாத்தாட்கள் போன்ற பல்வேறு விவரங்களைப் பொதுமக்களுக்கு இணையதளங்கள் மூலமாக அளிக்க இயலும். எனவே அரசுத் தேர்வுத் துறைக்கென தனியே ஒரு இணையதளம் ஏற்படுத்துவது குறித்து ஆராயப்படும்.

**5.4. மாற்று எண்ணிடும் முறையை பிற பாடங்களுக்கும் விரிவு படுத்துதல்**

தற்போது மேல்நிலைத் தேர்வில், இயற்பியல், வேதியியல், உயிரியல், கணிதம், தாவரவியல், விலங்கியல், வணிகக் கணிதம், கணக்குப் பதிவியியல், வணிகவியல் மற்றும் பொறியியல் ஆகிய பத்து பாடங்கள் சார்ந்த கருத்தியல் தேர்வுகளின் விடைத்தாட்களுக்கு மாற்று எண்ணிடப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் விடைத்தாட்கள் திருத்தும் மையங்களில் விடைத்தாட்கள் திருத்தும்போது மந்தனத் தன்மை காக்கப்பட்டு விடைத்தாட்கள் பாரபட்சமின்றி திருத்தப்படுகின்றன. இத்திட்டம் ஆங்கிலப் பாடத்திற்கும் இவ்வாண்டு முதல் செயல்படுத்தப்படும்.

**5.5. மேல்நிலை மற்றும் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் ஓரிரு பாடங்களில் தோல்வியுறும் மாணவர்களுக்கு உடனடி மறு தேர்வு நடத்துதல்**

பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வினை ஏப்ரல் மாதத்தில் எழுதும் 5.90 லட்சம் பள்ளி மாணவர்களில், சுமார் 1.75 இலட்சம் மாணவர்கள் தோல்வி அடைகிறார்கள். அவர்களில் 66,713 மாணவர்கள் ஒரு பாடத்திலும், 41,021 மாணவர்கள் இரண்டு பாடங்களிலும் தோல்வியடைகின்றனர். மார்ச் மாதத்தில் மேல்நிலைப் பொதுத் தேர்வினை எழுதும் 3.9 இலட்சம் பள்ளி மாணவர்களில், சுமார் 65,000 மாணவர்கள் தோல்வி அடைகிறார்கள். அவர்களில் 13,473 மாணவர்கள் ஒரு பாடத்திலும் 23,308 மாணவர்கள் இரண்டு பாடங்களிலும் தோல்வி அடைகிறார்கள். தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு அடுத்த கல்வியாண்டில் அக்டோபர்/ செப்டம்பர் மாதத்தில் தேர்வு நடத்தப்படுகிறது. இதனால் மாணவர்களுக்கு ஓராண்டு காலம் வீணாகிறது. மேலும் பள்ளிப் படிப்பை விட்டுவிடும் சூழ்நிலையும் உருவாகிறது. இந்நிலையைத் தவிர்க்க ஒன்று அல்லது இரண்டு பாடங்களில் தோல்வியுற்ற மாணவர்கள் அதே கல்வியாண்டில் மேற்படிப்பைத் தொடர, ஜூன் மாதத்தில் உடனடி

மறு தேர்வினை நடத்தி, முடிவுகளை ஜூலை **15** தேதிக்குள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**5.6. தேர்வு முடிவுகளை ஆராய்தல்**

கடந்த மார்ச்/ ஏப்ரல் 2001-ல் நடைபெற்ற பொதுத் தேர்வில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியர் விவரம் வருமாறு:

| தேர்வின் விவரம் | தேர்வு எழுதிய வர்கள். | தேர்ச்சி பெற்றோர் | தேர்ச்சி சதவீதம் |
|---|---|---|---|
| எஸ்.எஸ்.எல்.சி. | 591817 | 418415 | 70.70 |
| +2 வகுப்பு | 389443 | 324367 | 83.29 |
| மெட்ரிகுலேசன் | 73137 | 67286 | 92.00 |
| ஆங்கிலோ இந்தியன் | 4870 | 4529 | 93.00 |
| ஓ.எஸ்.எல்.சி. | 1188 | 818 | 68.80 |
| இ.எஸ்.எல்.சி. | 4894 | 849 | 17.35 |
| ஆசிரியர் பட்டயம் — முதல் ஆண்டு | 4576 | 4056 | 88.64 |
| இரண்டாம் ஆண்டு | 4669 | 4319 | 92.50 |

இஃதன்னியில் பத்தாம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்புப் பொதுத் தேர்வு முடிவுகளை ஆராய்ந்த போது, தேர்ச்சி விழுக்காட்டின் அடிப்படையில் தமிழகத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள மாவட்டங்கள் சிறப்பான தேர்ச்சி விழுக்காட்டினைப் பெற்று கல்வியில் முன்னேறிய மாவட்டங்களாகவும், வடக்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் அமைந்துள்ள மாவட்டங்கள் குறைவான தேர்ச்சி விழுக்காட்டினைப் பெற்று கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களாகவும் இருப்பது அறிய வந்தது. அனைத்து மாவட்டங்களிலும் தேவைக்கேற்ப பள்ளிகளை நிறுவி, ஒரே சீரான முறையில் சலுகைகளை அளித்து பல திட்டங்களை நிறைவேற்றி வருகிற போதிலும், மாணவர்கள் தேர்ச்சி விழுக்காடு மற்றும் அடைவுகளில் மாவட்டத்துக்கு மாவட்டம் அதிக வேறுபாடு இருப்பதைக் காண முடிகிறது. இந்த வேறுபாட்டிற்கான காரணங்களை ஆராய்ந்து அதன் அடிப்படையில் ஒரு செயல்திட்டத்தை வகுத்து முரண்பாடுகளைக் களைய உத்தேசிக்கப்பட்டுள்ளது.



**5.7. மதிப்பெண் சான்றிதழ்களில் இரகசியக் குறியீடுகளை அச்சமுத்தம் செய்தல்**

தேர்வர்களுக்கு வழங்கப்படும் மதிப்பெண்கள் சான்றிதழ்களில் போலிச் சான்றிதழ்கள் தயாரிப்பதைத் தடுக்க, முப்பரிமாண வில்லையினை ஒட்டும் முறை கடந்த மார்ச்/ஏப்ரல் 2000 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது முப்பரிமாண வில்லைகளை ஒட்டும் நடைமுறையில் புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. எனவே மதிப்பெண் சான்றிதழ்களில் நவீன உத்திகளைப் பயன்படுத்தி இரகசியக் குறியீடுகள் அடங்கிய சான்றிதழ்கள் தயார் செய்யவும், லேசர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மதிப்பெண் சான்றிதழ்களை அச்சமுத்தம் செய்யும்போதே இரகசியக் குறியீடுகளை அச்சமுத்தம் செய்யலாம் என்றும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 6. ஆசிரியர் தேர்வு வாரியம்

**தொலைநோக்கு**

தகுதியும், திறமையும், பணியில் அர்ப்பணிப்பும் மிக்க ஆசிரியர்களை வெளிப்படையான பொது போட்டித் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கும் பணியே ஆசிரியர் தேர்வு வாரியத்தின் பொறுப்பாகும். இதனை நிறைவேற்றும் பொருட்டு 1987 ஆம் ஆண்டு ஆசிரியர் தேர்வு வாரியம் தோற்றுவிக்கப்பட்டது.

**6.1. எழுத்து வடிவ போட்டித் தேர்வுகள் மூலம் ஆசிரியர்களைத் தேர்வு செய்தல்**

வேலைவாய்ப்பு அலுவலகத்தினின்று பட்டியல் பெற்று ஆசிரியர்களைத் தேர்வு செய்யும்போது, தகுதியும், திறமையும் வாய்ந்த ஆசிரியர்கள் கிடைப்பது அரிதாக இருந்தது. மேலும் அங்ஙனம் தேர்வு செய்யப்படுகின்ற ஆசிரியர்களால் தற்போதைய புதிய பாடத் திட்டத்திற்கேற்ப கற்பித்தல் பணியைச் சரிவர மேற்கொள்ள இயலாமல் இருந்த நிலையில் கல்வித்தரம் பாதிக்கப்பட்டதுடன், நியமனம் செய்யப்படுகின்ற இடங்களில் சென்று பணியேற்பதில் தயக்கம் காட்டும் சூழ்நிலையும் இருந்து வந்தது. எனவே ஆசிரியர் நியமனத்தில் வயது வரம்பு நிர்ணயம் செய்யாமல் பொதுவான போட்டி எழுத்து வடிவத் தேர்வு மூலமாக ஆசிரியர்களைத் தேர்வு செய்யும் முறை செப்டம்பர்-2001 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

### பள்ளி உதவி ஆசிரியர்கள் தேர்வு

2001-2002 ஆம் ஆண்டில் 778 பள்ளி உதவி ஆசிரியர்கள் மற்றும் மொழி ஆசிரியர்களுக்கான போட்டி எழுத்துத் தேர்வுகள் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட்டது. இப்போட்டித் தேர்வுகள் கொள்குறியீட்டு முறையில் அதிகபட்சமாக 100 மதிப்பெண்கள் கொண்டதாகவும், அவற்றில் 75 விழுக்காடு சம்பந்தப்பட்ட பாடத்திலும், 20 விழுக்காடு கல்வியியல் மற்றும் கற்பித்தல் முறைகளுக்கும், 5 மதிப்பெண்கள் பொது அறிவுப் பகுதியிலும் விடையளிக்கும் வண்ணம் அமைக்கப்பட்டிருந்தது.

இத்தேர்விற்கு நடத்தப்பட்ட வாய்மொழித் தேர்வு தேர்வர்கள் வேலை வாய்ப்பகங்களில் பதிவுசெய்து காத்திருக்கும் காலத்திற்கு அதிகபட்சமாக 3 மதிப்பெண்களும், கல்வித் தகுதியைச் சார்ந்த புறச்செயல்பாடுகளான தேசிய மாணவர் படை / நாட்டுநலப்பணித் திட்டம் மற்றும் நுண்கலைத்திறன் ஆகியவற்றிற்கு 2 மதிப்பெண்களும் வாய்மொழித் தேர்விற்கு 7 மதிப்பெண்களும் ஆக மொத்தம் 12 மதிப்பெண்கள் கொண்டதாக இருந்தது. வாய்மொழித் தேர்விற்கு 1:5 என்ற விகிதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு கலந்து கொண்டதில், 773 மனுதாரர்கள் நியமனத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட சிறிது நாட்களிலேயே அவர்களுக்குக் கலந்தாய்வு முறையில் (Counselling) நியமனமும் வழங்கப்பட்டது.

### முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் தேர்வு

2001-2002 ஆம் ஆண்டில் 631 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் கா்லிப் பணியிடங்களுக்கான போட்டி எழுத்துத் தேர்வு நடத்தப்பட்டது. போட்டி எழுத்துத் தேர்வுகள் கொள்குறியீடு முறையின்படி விடையளிக்கத்தக்க வகையில் 100 மதிப்பெண்கள் கொண்டதாகவும், அவற்றில் 75 மதிப்பெண்கள் சம்பந்தப்பட்ட பாடத்திலும், 20 மதிப்பெண்கள் கல்வியியல் மற்றும் கற்பித்தல் முறையிலும், 5 மதிப்பெண்கள் பொது அறிவுப் பகுதியிலும் அமைக்கப்பட்டிருந்தது. வாய்மொழித் தேர்விற்கு 1:5 என்ற விகிதத்தில் 611 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறிது நாட்களிலேயே கலந்தாய்வு முறையில் நியமனமும் வழங்கப்பட்டது.



### மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம் மற்றும் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் இளநிலை விரிவுரையாளர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் தேர்வு

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட 15,670 கூடுதல் சேர்க்கை இடங்களுக்காக, மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றில் நிரப்பப்படவுள்ள 403 இளநிலை விரிவுரையாளர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் (தற்காலிகமானது) பணியிடங்களுக்குத் தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் தேர்வு செய்யும் பணிக்கும் தேர்வு நடத்தப்பட்டது. இப் பணியிடங்கள் இரண்டாண்டு காலத்துக்கு மட்டுமே தோற்றுவிக்கப்பட்டதாகும்.

அத்தேர்வானது, 150 மதிப்பெண்களைக் கொண்ட கொள்குறியீட்டு முறையில் விடையளிக்கும் வண்ணமாகவும், அவற்றில் 80 மதிப்பெண்கள் சம்பந்தப்பட்ட பாடத்திலும், 70 மதிப்பெண்கள் கல்வியியல் மற்றும் கற்பித்தல் முறைபற்றியும் அமைக்கப்பட்டது.

இந்த எழுத்துத் தேர்வுகளில் பங்கேற்றோருக்கு உயர் மதிப்பெண் வரிசை, இனவாரி சுழற்சி மற்றும் இதர முன்னுரிமை அடிப்படையில் 1:1 என்ற விகிதத்தில் வாய்மொழித் தேர்வுக்கு அழைக்கப்பட்டு அவர்களது சான்றிதழினைச் சரிபார்த்த பின்னர், அன்றைய தினமே கலந்தாய்வு முறையில் பணி நியமனம் வழங்கப்பட்டது.

### பள்ளி உதவியாசிரியர்கள் மற்றும் "அனைவருக்கும் கல்வி" திட்டத்தின்கீழ் வட்டார வள மைய ஆசிரியர்கள் நியமனத் தேர்வு

"அனைவருக்கும் கல்வி" திட்டத்தின்கீழ் நிரப்பப்படவுள்ள 3,060 வட்டார வள மைய ஆசிரியர்கள் (பள்ளி உதவியாசிரியர்கள் நிலையில்) மற்றும் 2002 ஆம் கல்வியாண்டில் நிரப்பப்படவுள்ள 799 பள்ளி உதவியாசிரியர்கள் காலிப் பணியிடங்களுக்குத் தகுதியான ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும் பணிக்கு எழுத்துத் தேர்வு விரைவில் நடத்தப்படவுள்ளது. போட்டி எழுத்துத் தேர்வுகள், 150 மதிப்பெண்கள் கொண்டதாகவும், அவற்றில் சம்பந்தப்பட்ட முக்கிய பாடத்திற்கு 110 மதிப்பெண்களும், கல்வியியல் மற்றும் கற்பித்தல் முறையில் 30 மதிப்பெண்களும் பொது அறிவிற்கு 10 மதிப்பெண்களும் கொண்டதாக கொள்குறியீட்டு முறையில் விடையளிக்கத்தக்க வகையில் அமைந்திருக்கும் எழுத்துத் தேர்வின் அடிப்படையில் உயர் மதிப்பெண் வரிசை இனவாரி சுழற்சி மற்றும் இதர முன்னுரிமை அடிப்படையில் 1:1 என்ற விகிதத்தில் தகுதிவாய்ந்த ஆசிரியர்களின் சான்றிதழ் சரிபார்க்கும் முறையைப் பின்பற்றி தேர்வு செய்யப்பட உள்ளனர்.

ஆசிரியர்கள் நியமனமானது இனி எழுத்துத் தேர்வின் அடிப்படையில் உயர் மதிப்பெண் வரிசை, இன சுழற்சி முறை மற்றும் இதர முன்னுரிமைக்குட்பட்டு 1:1 என்ற முறையில் தேர்வர்கள் அழைக்கப்பட்டு சான்றிதழ்களைச் சரிபார்த்த பின்னர் நியமனம் வழங்கப்படும். அவ்வாறு சான்றிதழ் சரிபார்க்கும்பொழுது நாட்டு நலப்பணித் திட்டம், தேசிய மாணவர் படை, சாரண-சாரணியர் போன்றவற்றிற்கு ஒரு மதிப்பெண்ணும், விளையாட்டுத் திறனுக்கு ஒரு மதிப்பெண்ணும், ஊரகப் பள்ளிகளில் பயின்றவர்களுக்கு ஒரு மதிப்பெண்ணும், வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து காத்திருக்கும் முன்னுரிமைக்கு அதிகபட்சமாக நான்கு மதிப்பெண்களும் வழங்கப்படும்.

## 7. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

**தொலைநோக்கு**

பள்ளிப் பாடநூல்கள் தனியார் துறை மூலமாக வெளியிடப்பட்ட காலகட்டங்களில் பாடநூல்களின் விலை அதிகமாக நிர்ணயம் செய்யப்பட்டு வந்த காரணத்தினாலும், பல்வேறு வெளியீட்டாளர்களால் பாடநூல்கள் வெளியிடப்பட்டதால் ஒருமைத்தான ஒழுங்கின்றி பாடநூல்கள் அமையப்பெற்றதாலும், பாடநூல்கள் உரிய காலத்தில் விநியோகம் செய்யப்படாத நிலையில், ஏழை மாணவர் மற்றும் அவர்தம் பெற்றோர்களுக்குப் பெரிதும் இன்னல் ஏற்பட ஏதுவாயிற்று. இந்த அவல நிலையைப் போக்கும் நோக்கத்தில் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் 1970-ல் நிறுவப்பட்டது. இக்கழகம் 1 முதல் 12-ஆம் வகுப்பு வரையிலான பாடநூல்களை அச்சிட்டு மாணவர்களுக்கு வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் சிறுபான்மை மொழிகளில் பயிலும் மாணவர்கள், தமிழ்நாட்டுக் கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை அறிந்துகொள்ளும் வகையில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான சிறுபான்மை மொழிப் பாடநூல்களைத் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகமே தயாரித்து வெளியிட்டுள்ளது. 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழிப்பாடநூல்கள் அச்சிட்டு வழங்கப்பட்டு வருகிறது. சிறுபான்மை மொழிப் பாடநூல்களைப் பொறுத்தமட்டிலும் அதே ஆண்டு மொழி பெயர்க்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கி வருகிறது.

### 7.1. பாடநூல் அச்சிடும் முறை

மாணவர்களுக்குத் தரமான பாடநூல்களை நியாயமான விலையில் வழங்க வேண்டுமென்ற குறிக்கோளுடன், ஒப்பந்தப்புள்ளி மூலம் தாள் மற்றும் மேலட்டை ஆகியவற்றின் தரம் உறுதி செய்யப்பட்டு விலை



நிர்ணயம் செய்யப்படுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒப்பந்தப் புள்ளி மூலம் அச்சகத்தார் தேர்வு செய்யப்படுவதால் புதிய அச்சகத்தினர் சேர்க்கப்படுகிறார்கள். இவ்வகையில் அச்சுக் கூலியும் வெகுவாகக் கட்டுப்படுத்தப்படுவதுடன், மாணவர்களுக்கு நியாயமான விலையில் பாடநூல்கள் கிடைக்க வழிவகை செய்யப்படுகின்றது. இவ்வாறு தரமாகப் பெறப்படும் தாள், மேலட்டை அச்சகத்தார்களுக்கு வழங்கப்பட்டு அச்சுப் பணி முன்னேற்றம், மிகுந்த கவனத்துடன் மேற்பார்வை செய்யப்படுவதால். மாணவர்களுக்கு உரிய காலத்தில் தரமான பாடநூல்கள் கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது. மேலும் அச்சடிப்பதற்கான தாள், மேலட்டை, நெகடிவ், அச்சகப் படிகள் ஆகியவை மொத்தமாகச் சேர்த்து வழங்கப்படுவதால் அச்சகத்தார்கள் பணியை தாமதமின்றிச் செய்து முடிக்கின்றனர்.

### 7.2. பள்ளிகளில் பாடநூல்கள்

1 முதல் 12 வகுப்புகளுக்கான பாடநூல்களையும் மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு பாடநூல்களையும் பாடநூல் கழகம் அச்சிடுகிறது. இதுதவிர, குறிப்பேடுகளையும் அச்சிடுகிறது. இப்பணியை சுமார் 98 தனியார் அச்சகங்கள் 353 தலைப்புகளில் 520 இலட்சம் பிரதிகளை அச்சடிக்கின்றன. அவ்வாறு அச்சிடும் நூல்களும், குறிப்பேடுகளும் 21 வட்டார அலுவலகங்கள் மூலம் 47 கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாகவும் 1685 சில்லறை விற்பனையாளர்கள் மூலமாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. மாநில வாரியான பள்ளிகளின் வகுப்புகளுக்கு 324 பாடத் தலைப்புகளில் 1.05 கோடி பாடநூல்கள் ரூ. 11.60 கோடிக்கும், மெட்ரிகுலேசன் பள்ளிகளில் 10 ஆம் வகுப்புக்கு 10 பாடத் தலைப்புகளில் 5.16 இலட்சம் பாடநூல்கள் ரூ. 1.38 கோடிக்கும் 2001-2002-ல் விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பில் 8 தலைப்புகளில் பாடநூல்கள் அச்சிடப்பட்டுள்ளன. 2001-2002-லிருந்து ஆசிரியர் பட்டயப் பயிற்சிக்கான வள நூல்களும் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. 1 ஆம் வகுப்பிலிருந்து 5 ஆம் வகுப்பு வரை பாடநூல்களின் மேலட்டைகள் லேமினேட் செய்து வெளியிடப்படுகின்றன. தீண்டாமை, சமய நல்லிணக்கம், சாதி ஒற்றுமை பற்றிய கருத்துகளைக் கொண்ட வாசகங்கள் பாடநூல்களில் சேர்க்கப்பட்டுள்ளன. பள்ளி மாணவர்களின் வசதிக்காக ஆங்கிலம்-தமிழ் அகராதியினையும் கழகம் அச்சிட்டு வெளியிட்டுள்ளது. அதேபோல் புவியியல் மற்றும் சமூக-பொருளாதாரச் சிறப்புகளை, குறிப்பாக தமிழ்நாட்டின் நிலப்படத் தொகுதி ஒன்று தமிழில் விரைவில் வெளியிடப்பட உள்ளது.

### 7.3. இலவசப் பாடநூல்கள்

[ 2002 ஏப்ரல் 9

இலவசப் பாடநூல்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் 6 முதல் 8 ம் வகுப்பு வரை பயிலும் மதிய உணவு உண்ணும் மாணவர்களுக்கும் இலவச பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. 2002-2003 ஆம் கல்வியாண்டில் கீழ்க்கண்டவாறு பாடநூல்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன:—

| | | எண்ணம் | மதிப்பு |
|---|---|---|---|
| 1 | உதவி தொடக்கக் கல்வி அலுவலர் மூலம் (1-8 வகுப்புகளுக்கு) | 3.28 கோடி பாடநூல்கள் | ரூ. 23.88 கோடி |
| 2 | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மூலம் (1-10 வகுப்புகளுக்கு) | 39.62 இலட்சம் பாடநூல்கள் | ரூ. 5.30 கோடி |
| 3 | பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் (6-10 வகுப்புகளுக்கு) | 40.74 இலட்சம் பாடநூல்கள் | ரூ. 6.52 கோடி |
| 4 | மறுவாழ்வுத் துறை | 1.06 இலட்சம் பாடநூல்கள் | ரூ. 7.31 இலட்சம் |

### 7.4. மற்ற துறைகளுக்கு குறிப்பேடுகள்

2002-2003 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் நலத் துறைகளுக்கு சுமார் ரூ. 10 கோடி அளவிற்குக் குறிப்பேடுகள் வழங்கப்படவுள்ளன. ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறைகளைச் சார்ந்த 10 மற்றும் +2 மாணவர்களுக்கும் சிறப்பு வழிகாட்டி நூல்கள் அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன.

### 7.5. வட்டார அலுவலகங்கள்

தற்போதுள்ள 21 வட்டார அலுவலகங்களில், நான்கிற்கு (சென்னை, பர்கூர், சிவகாசி, காஞ்சிபுரம்) சொந்தக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. தஞ்சாவூர், வேலூர் ஆகிய இடங்களில் கிடங்குகள் கட்ட நிலம் வாங்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை, கோவில்பட்டியில் கிடங்குகள் கட்ட நிலம் கண்டறியப்பட்டுள்ளது. பாடநூல் கழகத்தை கணினி மயமாக்க



2002 ஏப்ரல் 9 ]

வேண்டும் என்ற முடிவின்படி தலைமை அலுவலகம் கணினி மையமாக்கப்பட்டுள்ளது.

## 8. பொது நூலகங்கள்

### தொலைநோக்கு

"பொது மக்கள் அனைவருக்கும் அதிகச் செலவில்லாமல் புத்தகங்களைப் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொடுப்பதுதான் பொது நூலகத் துறையின் குறிக்கோளாகும்". வாசகர்களைக் கவரும் வகையில் நூலகங்களில் சிறந்த பயனுள்ள நூல்கள் இடம் பெறச் செய்தல், நூல்களை ஒளிப்படம் எடுக்க வாசகர்களுக்கு வசதி செய்தல், ஒலி, ஒளி பதிவுப்பெட்டி, வி.சி.ஆர். மூலம் கல்விச் செய்திகளை அளித்தல், சிறந்த நூலகக் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் கிராமப்புறங்களில் நூலகச் சேவையை வளர்த்தல் ஆகியவற்றின் மூலம் பொது நூலக இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றி சிறந்த சேவை செய்தல் என்ற குறிக்கோளை நோக்கி பொது நூலகத் துறையின் பணி தொடர்கிறது.

### 8.1. புதிய நூலகங்கள் திறத்தல்

மாநிலத்தில் தற்போது 1,598 நூலகங்கள் உள்ளன. இதில் உறுப்பினர்கள் 28.75 இலட்சம் ஆவர். 5,000 மக்கள்தொகைக்கு அதிகம் உள்ள இடங்களில் கிராமப்புற மக்களின் தேவையின் அடிப்படையில் நூலகங்கள் திறக்கப்படுகின்றன.

### 8.2. கிராமப்புற நூலகங்கள்

நூலகப் பயனை கிராமப்புறங்களுக்கும் நீட்டித்து அம்மக்களும் பயனடையும் வகையில் 625 கிராமப்புற நூலகங்கள் திறக்க அனுமதியளிக்கப்பட்டு அவை நன்முறையில் இயங்கி வருகின்றன. இது தவிர, 649 பகுதி நேர நூலகங்களும் செயல்பட்டு வருகின்றன. **2002-2003-ல் 867** கிராமப்புற நூல் நிலையங்கள் அரசின் சார்பில் **செலவினம்** இல்லாமல் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### 8.3. நடமாடும் நூலகங்கள்

நூலக வசதி இல்லாத பகுதிகளில் நூலகப் பணியை விரிவுபடுத்த நடமாடும் நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. காஞ்சிபுரம், திருவள்ளூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தஞ்சாவூர் மற்றும் சேலம்

ஆகிய 7 மாவட்டங்களில் இப்பணி நடைபெற்று வருகிறது. இம்மாவட்டங்களில் 7 நடமாடும் நூலகங்கள் உள்ளன.

**8.4. செய்தி மடல்**

பொது நூலகத் துறை சார்பாக "பொது நூலகச் செய்தி மடல்" என்ற காலாண்டு இதழ் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்விதழில் பொது நூலகத் துறையின் வளர்ச்சிப் பணிகளும், பொது நூலக இயக்ககம் சம்பந்தப்பட்ட பல்வேறு சிறந்த செய்திகளும் இடம்பெற்று வாசகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப்பெற்றுள்ளது.

**8.5. வாசகர் வட்டம்**

பொது நூலக இயக்ககத்தை மக்கள் இயக்கமாக மாற்றி, பொது மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு நூலகத்திற்கும் கல்வியாளர்கள், நூலக உறுப்பினர்கள், உள்ளூர் பிரமுகர்கள் ஆகியோரைக் கொண்டு 'வாசகர் வட்டம்' என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகிறது. இவ்வாசகர் வட்டம் மூலம் இலக்கியக் கூட்டம், நூல்கள் அறிமுகம் முதலிய பயனுள்ள நிகழ்ச்சிகள் நடத்த ஆவன செய்யப்பட்டு வருகின்றன.

**8.6. இராசாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளை நிதியுதவி பெறுதல்**

கொல்கத்தாவிலுள்ள இராசாராம் மோகன்ராய் அறக்கட்டளை, நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்களுக்கும் பொது நூலக வளர்ச்சிக்கு இணை மானியம் அளித்து வருகிறது. தமிழ்நாடு, இந்த அறக்கட்டளையிலிருந்து கணிசமான அளவில் இணை மானியம் பெற்று நூலகச் சேவையை செவ்வனே ஆற்றி வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் இந்த அறக்கட்டளையிலிருந்து பெறப்பட்ட இணை மானியம் ரூ. 1 கோடி ஆகும்.

**8.7. நூல்கள் வாங்குதல்**

தரமான மற்றும் பயனுள்ள புத்தகங்களை வாசகர்களுக்கு வழங்கவும் வாசகர் சமூகத்தின் தேவையை நிறைவு செய்யவும், நூல் தேர்வுக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட தரமான தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள் வாங்கப்பட்டு நூலகங்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. நூலக வரியில் ஏறத்தாழ 25 விழுக்காடு தொகையானது (சுமாராக ரூ. 447 இலட்சத்திற்கு), நூல்கள் வாங்க செலவு செய்யப்படுகிறது. தமிழ் நூல்களில் அதிகபட்சம் 850 படிகள் வரை வாங்கப்படுகின்றன. கன்னிமரா பொது



நூலகத்திற்கு ஆண்டுதோறும் சுமார் ரூ. 10 இலட்சத்திற்கு நூல்கள் வாங்கப்படுகின்றன. மேலும் ஏற்பு விலையில் நூலகக் கழிவின்றி நூல்கள் வாங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதனால் பதிப்பாளர்கள் சிறந்த நூல்களை வெளியிட ஏதுவாகிறது. மைய அரசின் 11-வது நிதிக் குழுவின் மேம்பாட்டு நிதியுதவித் திட்டத்தின்கீழ் ரூ. 680 இலட்சம் அளவிற்கு வைப்பு நிதி வசதி ஏற்படுத்தி (Corpus fund) அதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித் தொகையிலிருந்து கன்னிமரா பொது நூலகம் மற்றும் மாவட்ட நூலகங்களுக்கு புத்தகங்கள் வாங்கப்படும்.

**8.8. குடிமைப்பணி கல்வி மையங்கள்**

இந்திய ஆட்சிப்பணி, இந்திய காவல் பணி, வங்கிகள், இரயில்வே தேர்வாணையம், மத்திய தேர்வாணையம், தமிழ்நாடு தேர்வாணையம் ஆகியவை நடத்தும் போட்டித் தேர்வுகளில், சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் இளைய தலைமுறையினர் பங்குகொள்ளும் வகையில் 'குடிமைப்பணி கல்வி மையங்கள்' என்ற பிரிவு மாவட்ட மைய நூலகங்களிலும், கன்னிமரா பொது நூலகத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இப்பிரிவை நகராட்சிகளில் அமைந்துள்ள நூலகங்களுக்கும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**8.9. நூலகக் கட்டடங்கள் கட்டுதல்**

நூலகங்களுக்குப் படிக்கவரும் வாசகர்கள் காற்றோட்டமான பரந்த இடவசதியுடன்கூடிய கட்டடங்களில் அமர்ந்து படிக்க ஏதுவாக வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வரும் நூலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 910 நூலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 159 நூலகங்களுக்கு கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. கன்னிமரா பொது நூலகத்திற்கு ரூ. 179 இலட்சத்தில் இணைப்புக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. தவிர ரூ. 121 இலட்சம் மதிப்பீட்டில் பழைய கட்டடம் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

**8.10. நூலகங்களைப் பள்ளிகளுடன் இணைத்தல்**

நூலகப் பணியினை மாணவர்கள் சரிவரப் பயன்படுத்துவதில்லை. பொது நூலகங்களின் பணியினை ஒவ்வொரு பள்ளி மாணவனும் பயன்படுத்தும் வகையில் உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும். எனவே அந்தந்தப் பகுதியில் உள்ள பொது நூலகங்கள் ஒரு பள்ளியினைத் தத்தெடுத்து பொது நூலகங்களைப் பள்ளி மாணவர்கள் பயன்படுத்தும்

வகையில் செயல்முறைகள் வகுக்கப்படும். மாணவர்களிடையே படிக்கும் பழக்கத்தை அதிகரிக்க நூலகங்களைப் பள்ளிகளுடன் இணைக்கும் திட்டம் (Linkage with Schools) செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. முதற்கட்டமாக ஒவ்வொரு பொது நூலகமும் தலா ஒரு பள்ளியினைத் தத்தெடுத்து மாணவர்களுக்குத் தேவையான புத்தகங்களை மாதமிருமுறை பள்ளியிலேயே விநியோகம் செய்கின்றது. இந்தப் பணியில் ஈடுபடுபவர்களுக்கு ஊக்க ஊதியமாக ரூ. 100 வழங்கப்படும்.

**8.11. வாசகர்களுக்குக் கூடுதல் வசதி**

**ஒளி நகல் எடுத்தல்**

வாசகர்கள் தாங்கள் வாசிக்கும் நூல்களில் முக்கியமான பகுதிகளை ஒளி நகல் எடுத்துக்கொள்ள, சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி, காஞ்சிபுரம், வேலூர், தஞ்சாவூர், ஈரோடு, தூத்துக்குடி, கடலூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களில் ஒளி நகல் எடுக்கும் கருவி (xerox machine) அமைக்கப்பட்டுள்ளது.

**தொலைக்காட்சி**

வாசகர்கள் படிக்கும் பழக்கத்துடன் அன்றாடச் செய்திகளை விரைவில் அறிந்துகொள்ள 21 மாவட்டங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள், ஒலி, ஒளி நாடா பதிவுப்பெட்டி (V.C.R.) வசதி ஆகியவை அமைக்கப்பட்டு வாசகர்களின் தேவைக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**கணிப்பொறி வசதிகள்**

பொது நூலகங்களில் கணிப் பொறியின் அவசியத்தை உணர்ந்து முதல் கட்டமாக கன்னிமரா பொது நூலகத்திற்கு கணிப்பொறி வசதி மற்றும் இன்டர்நெட் ஏற்படுத்தப்பட்டது. மேலும், சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம் திருநெல்வேலி ஆகிய 6 மாவட்ட மைய நூலகங்களிலும் கணிப்பொறி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.



**IV. பள்ளிக் கல்வி புள்ளிவிவரம்**

1. பள்ளி வயது சிறார்களின் எண்ணிக்கையும், சேர்க்கையும்
2. பள்ளிகளின் எண்ணிக்கை
3. ஆசிரியர்களின் எண்ணிக்கை
4. ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரம்
5. பள்ளிகளின் எண்ணிக்கை, மாணவர்களின் சேர்க்கை, ஆசிரியர்கள் எண்ணிக்கை (நிருவாக வகைப்படி)
6. பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை-நிருவாக வகைப்படி
7. பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை-வகுப்பு வகைப்படி
8. மாணவர்கள் சேர்க்கைப் பட்டியல்
9. தொழிற்கல்விப் பாடங்கள்
10. பள்ளிப்படிப்பை இடைவிட்டோர் எண்ணிக்கை (விழுக்காடு)
11. உயர்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி (நிருவாக வகைப்படி)
12. மேல்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி
13. உயர்நிலைப் பள்ளிகளின் சேர்க்கை விவரம் (நிருவாக வகைப்படி)
14. மேல்நிலைப் பள்ளிகளில் சேர்க்கை விவரம் (நிருவாக வகைப்படி)
15. உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் தேர்ச்சி விழுக்காடு, மார்ச் 2001.
16. பெண்களின் கல்வி நிலை-புள்ளிவிவரம்

    அ. பெண்களின் எழுத்தறிவு நிலை

    ஆ. மாணவிகளின் சேர்க்கை விவரம்

    இ. அனைத்துப் பள்ளிகளிலும் பணிபுரியும் ஆசிரியைகளின் எண்ணிக்கை

    ஈ. பள்ளியை விட்டு இடைநின்ற மாணவிகளின் எண்ணிக்கை (விழுக்காடு)

[ 2002 ஏப்ரல் 9

## புள்ளிவிவரங்கள்

### பள்ளிக் கல்வித் துறை 2001-2002

### 1. பள்ளி வயது சிறார்களின் எண்ணிக்கையும், சேர்க்கையும்

| வயது தொகுதி | இனம் | மொத்த எண்ணிக்கை | மாணவர் சேர்க்கை | மாணவர் சேர்க்கை |
|---|---|---|---|---|
| | | (இலட்சத்தில்) | | (விழுக்காட்டில்) |
| 6-11 | ஆண் | 29.35 | 28.99 | 98.77 |
| | பெண் | 28.16 | 27.75 | 98.54 |
| | மொத்தம் | 57.51 | 56.74 | 98.66 |
| 11-14 | ஆண் | 19.21 | 18.15 | 94.48 |
| | பெண் | 18.43 | 17.09 | 92.73 |
| | மொத்தம் | 37.64 | 35.24 | 93.62 |
| 14-16 | ஆண் | 12.07 | 8.87 | 73.49 |
| | பெண் | 11.27 | 6.99 | 62.02 |
| | மொத்தம் | 23.34 | 15.86 | 67.95 |
| 16-18 | ஆண் | 12.91 | 4.62 | 35.79 |
| | பெண் | 12.92 | 4.36 | 33.75 |
| | மொத்தம் | 25.83 | 8.98 | 34.77 |
| 6-18 | ஆண் | 73.54 | 60.63 | 82.44 |
| | பெண் | 70.78 | 56.19 | 79.39 |
| | மொத்தம் | 144.32 | 116.82 | 80.95 |



2002 ஏப்ரல் 9 ]

### 2. பள்ளிகளின் எண்ணிக்கை

| பள்ளிகளின் வகை | 1997-98 | 1998-99 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 |
|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 30796 | 30844 | 31052 | 31142 | 31488 |
| நடுநிலைப் பள்ளிகள் | 5473 | 5538 | 5640 | 5703 | 5809 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 3765 | 4208 | 4551 | 4500 | 4836 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 2975 | 3149 | 3292 | 3439 | 3473 |
| மொத்தம் | 43009 | 43739 | 44535 | 44784 | 45606 |

### 3. ஆசிரியர்களின் எண்ணிக்கை

| பள்ளிகளின் வகை | 1997-98 | 1998-99 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 |
|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 115651 | 115697 | 120449 | 121311 | 121483 |
| நடுநிலைப் பள்ளிகள் | 64395 | 61719 | 58395 | 59892 | 59922 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 46372 | 47212 | 49012 | 51100 | 49962 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 83451 | 92301 | 94808 | 97969 | 102368 |
| மொத்தம் | 309869 | 316929 | 322664 | 330272 | 333735 |

### 4. ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரம்

| பள்ளிகளின் வகை | 1997-98 | 1998-99 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 |
|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 40 | 38 | 35 | 33 | 36 |
| நடுநிலைப் பள்ளிகள் | 40 | 36 | 40 | 38 | 37 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 45 | 43 | 38 | 37 | # |
| மேல்நிலைப் பள்ளிகள் | 40 | 36 | 35 | 34 | # |

| | 2001-2002 | |
|---|---|---|
| | 6 முதல் 8 இடைநிலை | 9 முதல் 10 பட்டதாரி |
| உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள் # | 63 | 58 |

5. பள்ளிகளின் எண்ணிக்கை, மாணவர்களின் சேர்க்கை, ஆசிரியர்களின் எண்ணிக்கை 2001-2002 (நிருவாக வகைப்படி)

| பள்ளிகளின் வகைகள் (1) | நிருவாக வகை (2) | மாணவர்கள் பள்ளிகளின் எண்ணிக்கை (3) | எண்ணிக்கை மாணவர் எண்ணிக்கை (4) | இலட்சத்தில் ஆசிரியர்களின் எண்ணிக்கை (5) |
|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | அரசு | 1594 | 1.93 | 6814 |
| | நகராட்சி/மாநகராட்சி | 1020 | 2.02 | 6825 |
| | ஊராட்சி ஒன்றியம் | 23624 | 25.33 | 76124 |
| | தனியார் | 5250 | 10.95 | 31720 |
| | மெட்ரிகுலேஷன் | 0 | 3.38 | 0 |
| | உயர்/மேல்நிலைப் பள்ளிகள் | 0 | 0.47 | 0 |
| | மொத்தம் | 31488 | 44.08 | 121483 |
| நடுநிலைப் பள்ளிகள் | அரசு | 317 | 0.81 | 2683 |
| | நகராட்சி/மாநகராட்சி | 385 | 1.48 | 5190 |
| | ஊராட்சி ஒன்றியம் | 3308 | 10.55 | 28616 |
| | தனியார் | 1799 | 9.54 | 23433 |
| | மொத்தம் | 5809 | 22.38 | 59922 |
| | மொத்த தொடக்க/நடுநிலைப் பள்ளிகள் | 37297 | 66.46 | 181405 |



| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| உயர்நிலைப் பள்ளிகள் | அரசு | 1981 | 9.78 | 24083 |
| | நகராட்சி/மாநகராட்சி | 108 | 0.47 | 1556 |
| | தனியார் (உதவி பெறுபவை) | 646 | 3.39 | 7822 |
| | தனியார் (உதவி பெறாதவை) | 179 | 0.32 | 855 |
| | ஆங்கிலோ இந்தியன் | 12 | 0.10 | 269 |
| | மெட்ரிகுலேஷன் | 1910 | 1.81 | 15377 |
| | மொத்த உயர்நிலைப் பள்ளிகள் | 4836 | 15.87 | 49962 |
| மேல்நிலைப் பள்ளிகள் | அரசு | 1374 | 15.10 | 40801 |
| | நகராட்சி/மாநகராட்சி | 90 | 1.19 | 4089 |
| | உதவி பெறுபவை (தனியார்) | 909 | 12.99 | 33630 |
| | உதவி பெறாதவை (தனியார்) | 74 | 0.45 | 916 |
| | ஆங்கிலோ இந்தியன் | 29 | 0.44 | 1195 |
| | மெட்ரிகுலேஷன் | 997 | 4.32 | 21737 |
| | மொத்த மேல்நிலைப் பள்ளிகள் | 3473 | 34.49 | 102368 |
| | பெரு மொத்தம் | 45606 | 116.82 | 333735 |

| | |
|---|---|
| மாணவர்கள் | 6063368 |
| மாணவிகள் | 5619111 |
| மொத்தம் | 11682479 |

## 6. ஆசிரியர்களின் எண்ணிக்கை-பள்ளி நிருவாக வகைப்படி 2001-2002

| வ.எண் | பள்ளி வகைகள் | மாநில அரசு & மத்திய அரசு | நகராட்சி/ மாநகராட்சி | ஊராட்சி ஒன்றியம் | தனியார் உதவி பெறுபவை | தனியார் உதவி பெறாதவை | மொத்தம் | ஆசிரியர்கள் ஆண் | ஆசிரியர்கள் பெண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தொடக்கப் பள்ளிகள் | 6814 | 6825 | 76124 | 31720 | 0 | 121483 | 44641 | 76842 |
| 2 | நடுநிலைப் பள்ளிகள் | 2683 | 5190 | 28616 | 23433 | 0 | 59922 | 19836 | 40086 |
| 3 | உயர்நிலைப் பள்ளிகள் | 25035 | 1556 | 0 | 7822 | 16501 | 50914 | 24650 | 26264 |
| 4 | மேல்நிலைப் பள்ளிகள் | 43926 | 4089 | 0 | 33630 | 23848 | 105493 | 75353 | 30140 |
| | மொத்தம் | 78458 | 17660 | 104740 | 96605 | 40349 | 337812 | 164480 | 173332 |



## 7. பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை (வகுப்பு வகைப்படி)

| வகுப்புகள் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 முதல் 5 | 83349 | 98457 | 181806 |
| 6 முதல் 8 | 43916 | 33649 | 77565 |
| 9 மற்றும் 10 | 20528 | 25432 | 45960 |
| 11 மற்றும் 12 | 16687 | 15794 | 32481 |
| 1 முதல் 12 | 164480 | 173332 | 337812 |

## 8. மாணவர்கள் சேர்க்கை பட்டியல் 2001-2002 (இலட்சத்தில்)

| வகுப்பு | இனம் | தொடக்கப் பள்ளிகள் | நடுநிலைப் பள்ளிகள் | உயர்நிலைப் பள்ளிகள் | மேல்நிலைப் பள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1-5 | ஆண் | 22.53 | 6.46 | 0.00 | 0.00 | 28.99 |
| | பெண் | 21.55 | 6.20 | 0.00 | 0.00 | 27.75 |
| | மொத்தம் | 44.08 | 12.66 | 0.00 | 0.00 | 56.74 |
| 6-8 | ஆண் | 0.00 | 4.91 | 4.90 | 8.34 | 18.15 |
| | பெண் | 0.00 | 4.81 | 5.27 | 7.01 | 17.09 |
| | மொத்தம் | 0.00 | 9.72 | 10.17 | 15.35 | 35.24 |
| 9-10 | ஆண் | 0.00 | 0.00 | 2.65 | 6.22 | 8.87 |
| | பெண் | 0.00 | 0.00 | 3.05 | 3.94 | 6.99 |
| | மொத்தம் | 0.00 | 0.00 | 5.70 | 10.16 | 15.86 |
| 11-12 | ஆண் | 0.00 | 0.00 | 0.00 | 4.62 | 4.62 |
| | பெண் | 0.00 | 0.00 | 0.00 | 4.36 | 4.36 |
| | மொத்தம் | 0.00 | 0.00 | 0.00 | 8.98 | 8.98 |
| 1 முதல் 12 | ஆண் | 22.53 | 11.37 | 7.55 | 19.18 | 60.63 |
| | பெண் | 21.55 | 11.01 | 8.32 | 15.31 | 56.19 |
| | மொத்தம் | 44.08 | 22.38 | 15.87 | 34.49 | 116.82 |

[ 2002 ஏப்ரல் 9

## 9. தொழிற்கல்விப் பாடங்கள் 2001-2002

| வ.எண் | பாடப்பிரிவு | சேர்க்கை | | |
|---|---|---|---|---|
| | | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1 | வேளாண்மை | 7256 | 1700 | 8956 |
| 2 | மனையியல் | 736 | 3965 | 4701 |
| 3 | வணிகவியல் மற்றும் வாணிபம் | 21596 | 22220 | 43816 |
| 4 | பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் | 14708 | 1320 | 16028 |
| 5 | சுகாதாரம் | 1477 | 4847 | 6324 |
| 6 | கணினி கல்வி | 25736 | 19716 | 45452 |
| | இதர பிரிவுகள் | 19526 | 16167 | 35693 |
| | மொத்தம் | **91035** | **69935** | **160970** |



2002 ஏப்ரல் 9 ]

## 10. பள்ளிப் படிப்பை இடைவிட்டோர் எண்ணிக்கை (விழுக்காடு)

| ஆண்டு | தொடக்கப் பள்ளிகள் | | | நடுநிலைப் பள்ளிகள் | | | உயர்நிலைப் பள்ளிகள் | | | மேல்நிலைப் பள்ளிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாண வர் | மாண வியர் | மொத்தம் | மாண வர் | மாண வியர் | மொத்தம் | மாண வர் | மாண வியர் | மொத்தம் | மாண வர் | மாண வியர் | மொத்தம் |
| 1991-92 | 17.71 | 21.16 | 19.31 | 37.48 | 46.50 | 41.67 | 64.45 | 71.93 | 67.94 | 83.92 | 86.07 | 84.90 |
| 1992-93 | 17.11 | 19.62 | 18.27 | 34.75 | 43.54 | 38.85 | 63.65 | 71.02 | 67.08 | 82.94 | 85.39 | 84.08 |
| 1993-94 | 16.39 | 18.35 | 17.30 | 32.16 | 41.20 | 36.85 | 62.98 | 69.85 | 66.17 | 81.89 | 84.28 | 83.00 |
| 1994-95 | 15.58 | 17.65 | 16.54 | 30.75 | 39.36 | 34.74 | 61.46 | 69.15 | 65.05 | 80.59 | 84.19 | 82.26 |
| 1995-96 | 14.88 | 16.97 | 15.85 | 28.60 | 37.11 | 32.54 | 60.14 | 68.20 | 63.87 | 79.45 | 83.65 | 81.40 |
| 1996-97 | 14.05 | 16.20 | 15.06 | 26.38 | 34.78 | 30.27 | 58.63 | 67.05 | 62.53 | 78.21 | 83.09 | 80.48 |
| 1997-98 | 13.99 | 16.18 | 15.05 | 25.94 | 34.64 | 29.99 | 57.04 | 65.74 | 61.06 | 77.54 | 82.54 | 79.86 |
| 1998-99 | 12.98 | 16.15 | 14.52 | 36.85 | 33.37 | 35.23 | 57.72 | 58.35 | 58.01 | 82.10 | 80.61 | 81.49 |
| 1999-2000 | 12.93 | 16.07 | 14.41 | 36.03 | 34.74 | 35.43 | 57.97 | 57.85 | 57.92 | 83.43 | 80.92 | 82.27 |
| 2000-2001 | 12.86 | 16.03 | 14.40 | 36.00 | 35.15 | 35.59 | 57.86 | 57.91 | 57.89 | 82.15 | 82.40 | 82.30 |
| 2001-2002 | 12.73 | 15.95 | 14.31 | 36.46 | 34.53 | 35.07 | 57.34 | 57.79 | 57.55 | 79.69 | 79.32 | 79.51 |

### 11. உயர்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி (நிர்வாக வகைப்படி)

| ஆண்டு | அரசு | மாநிலப் பள்ளிகள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | தனியார் | | | | | | | |
| | | நகராட்சி/ மாநகராட்சி | உதவி பெறுபவை | உதவி பெறாதவை | மொத்தம் | மெட்ரி குலேசன் | ஆங்கிலோ-இந்தியன் | மத்திய பள்ளிகள் | மொத்தம் | பெரு மொத்தம் |
| 1986-87 | 1765 | 80 | 445 | 2 | 2292 | 289 | 11 | 96 | 396 | 2688 |
| 1987-88 | 1762 | 80 | 450 | 2 | 2294 | 406 | 13 | 106 | 525 | 2819 |
| 1988-89 | 1795 | 80 | 416 | 2 | 2293 | 515 | 13 | 101 | 629 | 2922 |
| 1989-90 | 1839 | 78 | 387 | 23 | 2327 | 606 | 12 | 89 | 707 | 3034 |
| 1990-91 | 1864 | 83 | 370 | 44 | 2361 | 684 | 13 | 93 | 790 | 3151 |
| 1991-92 | 1872 | 83 | 352 | 66 | 2373 | 684 | 13 | 93 | 790 | 3163 |
| 1992-93 | 1883 | 83 | 346 | 84 | 2396 | 709 | 13 | 85 | 807 | 3203 |
| 1993-94 | 1889 | 83 | 346 | 94 | 2412 | 759 | 13 | 86 | 858 | 3270 |
| 1994-95 | 1902 | 83 | 332 | 121 | 2438 | 806 | 13 | 83 | 902 | 3340 |
| 1995-96 | 1915 | 87 | 304 | 139 | 2445 | 885 | 12 | 75 | 972 | 3417 |
| 1996-97 | 1932 | 88 | 304 | 140 | 2464 | 1032 | 12 | 66 | 1110 | 3574 |
| 1997-98 | 1917 | 94 | 294 | 144 | 2449 | 1245 | 12 | 59 | 1316 | 3765 |
| 1998-99 | 1986 | 94 | 626 | 96 | 2802 | 1335 | 12 | 59 | 1406 | 4208 |
| 1999-2000 | 2006 | 103 | 626 | 104 | 2839 | 1641 | 12 | 59 | 1712 | 4551 |
| 2000-2001 | 2002 | 112 | 610 | 135 | 2859 | 1564 | 12 | 65 | 1641 | 4500 |
| 2001-2002 | 1981 | 108 | 646 | 179 | 2914 | 1910 | 12 | 67 | 1989 | 4903 |



### 12. மேல்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி (நிர்வாக வகைப்படி)

| ஆண்டு | அரசு | மாநிலப் பள்ளிகள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | தனியார் | | | | | | | |
| | | நகராட்சி/ மாநகராட்சி | உதவி பெறுபவை | உதவி பெறாதவை | மொத்தம் | மெட்ரி குலேசன் | ஆங்கிலோ-இந்தியன் | மத்திய பள்ளிகள் | மொத்தம் | பெரு மொத்தம் |
| 1986-87 | 755 | 62 | 651 | 1 | 1469 | 100 | 30 | 79 | 209 | 1678 |
| 1987-88 | 765 | 62 | 653 | 1 | 1481 | 121 | 29 | 79 | 229 | 1710 |
| 1988-89 | 769 | 62 | 676 | 19 | 1526 | 155 | 29 | 77 | 261 | 1787 |
| 1989-90 | 809 | 68 | 677 | 53 | 1607 | 192 | 28 | 87 | 307 | 1914 |
| 1990-91 | 848 | 68 | 674 | 70 | 1660 | 276 | 28 | 81 | 385 | 2045 |
| 1991-92 | 869 | 68 | 674 | 88 | 1699 | 276 | 28 | 81 | 385 | 2084 |
| 1992-93 | 879 | 68 | 674 | 94 | 1715 | 338 | 28 | 84 | 450 | 2165 |
| 1993-94 | 891 | 68 | 674 | 98 | 1731 | 373 | 28 | 89 | 490 | 2221 |
| 1994-95 | 903 | 68 | 674 | 112 | 1757 | 440 | 28 | 93 | 561 | 2318 |
| 1995-96 | 932 | 69 | 674 | 140 | 1815 | 540 | 29 | 106 | 675 | 2490 |
| 1996-97 | 1012 | 70 | 674 | 155 | 1911 | 668 | 29 | 126 | 823 | 2734 |
| 1997-98 | 1087 | 75 | 674 | 183 | 2019 | 792 | 29 | 135 | 956 | 2975 |
| 1998-99 | 1157 | 78 | 869 | 29 | 2133 | 852 | 29 | 135 | 1016 | 3149 |
| 1999-2000 | 1206 | 80 | 884 | 46 | 2216 | 912 | 29 | 135 | 1076 | 3292 |
| 2000-2001 | 1258 | 81 | 909 | 68 | 2316 | 959 | 29 | 135 | 1123 | 3439 |
| 2001-2002 | 1374 | 90 | 909 | 74 | 2447 | 997 | 29 | 135 | 1161 | 3608 |

## 13. உயர்நிலைப் பள்ளிகளில் சேர்க்கை விவரம்

(நிருவாக வகைப்படி)

| ஆண்டு | அரசு | | | நகராட்சி/மாநகராட்சி | | | தனியார் பள்ளிகள் உதவி பெறுபவை | | | தனியார் பள்ளிகள் உதவி பெறுபவை | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1986-87 | 438308 | 307396 | 746704 | 22989 | 23365 | 46354 | 150876 | 127990 | 278866 | 1260 | 391 | 1651 | 614433 | 459142 | 1073575 |
| 1987-88 | 450268 | 317398 | 767666 | 23978 | 28794 | 52772 | 165332 | 153661 | 3189993 | 1378 | 416 | 1794 | 640956 | 500269 | 1141225 |
| 1988-89 | 481562 | 329688 | 811250 | 26269 | 28203 | 54472 | 191676 | 170163 | 361839 | 1410 | 431 | 1841 | 700917 | 528485 | 1229402 |
| 1989-90 | 505175 | 349658 | 854833 | 24949 | 29160 | 54109 | 199741 | 188212 | 387953 | 7431 | 3712 | 11143 | 737296 | 570742 | 1308038 |
| 1990-91 | 541843 | 369505 | 911348 | 31132 | 31569 | 62701 | 170949 | 180766 | 351715 | 11117 | 5131 | 16248 | 755041 | 586971 | 1342012 |
| 1991-92 | 570948 | 402332 | 973280 | 32421 | 32423 | 64844 | 157824 | 168298 | 326122 | 22248 | 20945 | 43193 | 783441 | 623998 | 1407439 |
| 1992-93 | 601613 | 438733 | 1040346 | 34552 | 33940 | 68492 | 155939 | 165003 | 320942 | 27449 | 25248 | 52697 | 819553 | 662924 | 1482477 |
| 1993-94 | 588002 | 403111 | 991113 | 36770 | 35884 | 72654 | 171359 | 178938 | 350297 | 29572 | 27596 | 57168 | 825703 | 645529 | 1471232 |
| 1994-95 | 609052 | 465799 | 1074851 | 39121 | 37985 | 77106 | 169295 | 176489 | 345784 | 42023 | 36941 | 78964 | 859491 | 717214 | 1576705 |
| 1995-96 | 628566 | 485186 | 1113752 | 39060 | 39833 | 78893 | 162853 | 168975 | 331828 | 46558 | 42809 | 89367 | 877937 | 736003 | 1613940 |
| 1996-97 | 642667 | 498359 | 1141026 | 40856 | 40116 | 80972 | 166506 | 174428 | 340934 | 47602 | 43953 | 91555 | 897631 | 756856 | 1654487 |
| 1997-98 | 634069 | 494382 | 1128451 | 40309 | 39788 | 80097 | 164278 | 173001 | 337279 | 46966 | 43593 | 90559 | 885622 | 750764 | 1636386 |
| 1998-99 | 427908 | 451571 | 879479 | 32544 | 31660 | 64204 | 151900 | 162313 | 314213 | 116561 | 117880 | 234441 | 728913 | 763424 | 1492337 |
| 1999-2000 | 439345 | 484523 | 923868 | 21175 | 21638 | 42813 | 154976 | 164821 | 319797 | 35008 | 36055 | 71063 | 650504 | 707037 | 1357541 |
| 2000-2001 | 444381 | 519248 | 963629 | 24755 | 24828 | 49583 | 164557 | 171991 | 336548 | 15972 | 14660 | 30632 | 649665 | 730727 | 1380392 |
| 2001-2002 | 449010 | 529451 | 978461 | 23519 | 23086 | 46605 | 167682 | 171552 | 339244 | 16932 | 15127 | 32059 | 657153 | 739216 | 1396369 |



## உயர்நிலைப் பள்ளிகளில் சேர்க்கை விவரம்—தொடர்ச்சி

| ஆண்டு | மெட்ரிக்குலேஷன் | | | ஆங்கிலோ-இந்தியன் | | | மைய அரசு | | | பெரு மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1986-87 | 43928 | 32213 | 76141 | 3136 | 6830 | 9966 | 23728 | 14763 | 38491 | 685225 | 512948 | 1198173 |
| 1987-88 | 52308 | 38491 | 90799 | 2931 | 6617 | 9548 | 29098 | 20810 | 49908 | 725293 | 566187 | 1291480 |
| 1988-89 | 56271 | 48673 | 104944 | 3440 | 7171 | 10611 | 28443 | 20137 | 48580 | 789071 | 604466 | 1393537 |
| 1989-90 | 67058 | 60855 | 127913 | 3559 | 7333 | 10892 | 28239 | 20092 | 48331 | 836152 | 659022 | 1495174 |
| 1990-91 | 93763 | 75157 | 168920 | 3681 | 7367 | 11048 | 30153 | 23089 | 53242 | 882638 | 692584 | 1575222 |
| 1991-92 | 101501 | 77739 | 179240 | 4070 | 7837 | 11907 | 28214 | 21767 | 49981 | 917226 | 731341 | 1648567 |
| 1992-93 | 112007 | 83994 | 196001 | 4174 | 8774 | 12948 | 26150 | 19911 | 46061 | 961884 | 775603 | 1737487 |
| 1993-94 | 143512 | 114284 | 257796 | 4261 | 9203 | 13464 | 25874 | 19790 | 45664 | 999350 | 788806 | 1788156 |
| 1994-95 | 153269 | 117936 | 271205 | 4615 | 9418 | 14033 | 26225 | 19938 | 46163 | 1043600 | 864506 | 1908106 |
| 1995-96 | 184790 | 152260 | 337050 | 4297 | 9012 | 13309 | 27248 | 20890 | 48138 | 1094272 | 918165 | 2012437 |
| 1996-97 | 192446 | 159395 | 351841 | 4317 | 9057 | 13374 | 27064 | 21072 | 48136 | 1121458 | 946380 | 2067838 |
| 1997-98 | 208384 | 17724 | 226108 | 4791 | 9119 | 13910 | 27591 | 21424 | 49015 | 1126388 | 799031 | 1925419 |
| 1998-99 | 251923 | 226604 | 478527 | 3326 | 7863 | 11189 | 27550 | 22254 | 49804 | 1011712 | 1020145 | 2031857 |
| 1999-2000 | 251426 | 185443 | 436869 | 2954 | 7281 | 10235 | 28433 | 22587 | 51020 | 933317 | 922348 | 1855665 |
| 2000-2001 | 301482 | 154367 | 455849 | 2712 | 7559 | 10271 | 20670 | 19305 | 39975 | 974529 | 911958 | 1886487 |
| 2001-2002 | 78868 | 71026 | 149894 | 2765 | 7649 | 10414 | 16333 | 14426 | 30759 | 755119 | 832317 | 1587436 |

## 14. மேல்நிலைப் பள்ளிகளில் சேர்க்கை விவரம்

(நிருவாக வகைப்படி 1 முதல் 12 வரை)

| ஆண்டு | அரசு | | | நகராட்சி/மாநகராட்சி | | | தனியார் பள்ளிகள் — உதவி பெறுபவை | | | தனியார் பள்ளிகள் — உதவி பெறாதவை | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1986-87 | 541189 | 274414 | 815603 | 70191 | 51583 | 121774 | 479736 | 354197 | 833933 | 763 | 352 | 1115 | 1091879 | 680546 | 1772425 |
| 1987-88 | 559551 | 297530 | 857081 | 72287 | 52150 | 124437 | 511400 | 359332 | 870732 | 518 | 221 | 739 | 1143756 | 709233 | 1852989 |
| 1988-89 | 614432 | 338611 | 953043 | 78118 | 56089 | 134207 | 516815 | 359852 | 876667 | 7194 | 3811 | 11005 | 1216559 | 758363 | 1974922 |
| 1989-90 | 634181 | 352449 | 986630 | 88181 | 64675 | 152856 | 519816 | 394560 | 914376 | 18573 | 8548 | 27121 | 1260751 | 820232 | 2080983 |
| 1990-91 | 644590 | 368621 | 1013211 | 95907 | 71735 | 167642 | 522202 | 410187 | 932389 | 23339 | 13531 | 36870 | 1286038 | 864074 | 2150112 |
| 1991-92 | 682068 | 387125 | 1069193 | 97211 | 72802 | 170013 | 533999 | 422609 | 956608 | 31892 | 16308 | 48200 | 1345170 | 898844 | 2244014 |
| 1992-93 | 704381 | 439836 | 1144217 | 98024 | 73398 | 171422 | 545340 | 421815 | 967155 | 35412 | 25119 | 60531 | 1383157 | 960168 | 2343325 |
| 1993-94 | 697304 | 409168 | 1106472 | 105853 | 79430 | 185283 | 562496 | 438240 | 1000736 | 37855 | 28300 | 66155 | 1403508 | 955138 | 2358646 |
| 1994-95 | 739013 | 452328 | 1191341 | 110511 | 83025 | 193536 | 576925 | 451425 | 1028350 | 47422 | 35358 | 82780 | 1473871 | 1022136 | 2496007 |
| 1995-96 | 760813 | 473059 | 1233872 | 110721 | 83211 | 193932 | 582049 | 455814 | 1037863 | 57843 | 43732 | 101575 | 1511426 | 1055816 | 2567242 |
| 1996-97 | 785765 | 491111 | 1276876 | 114348 | 86338 | 200686 | 601115 | 472895 | 1074010 | 59738 | 45375 | 105113 | 1560966 | 1095719 | 2656685 |
| 1997-98 | 810254 | 513892 | 1324146 | 117916 | 90343 | 208259 | 619873 | 494831 | 1114704 | 61603 | 47480 | 109083 | 1609646 | 1146546 | 2756192 |
| 1998-99 | 730408 | 541697 | 1272105 | 34009 | 49029 | 83038 | 637793 | 559746 | 1197539 | 45974 | 45991 | 91965 | 1448184 | 1196463 | 2644647 |
| 1999-2000 | 786300 | 629747 | 1416047 | 59275 | 71247 | 130522 | 584188 | 526054 | 1110242 | 15898 | 8760 | 24658 | 1445661 | 1235808 | 2681469 |
| 2000-2001 | 781766 | 640766 | 1422532 | 45896 | 42368 | 88264 | 641892 | 570279 | 1212171 | 20523 | 19788 | 40311 | 1490077 | 1273201 | 2763278 |
| 2001-2002 | 844464 | 665279 | 1509743 | 49349 | 70058 | 119407 | 675520 | 623168 | 1298688 | 27408 | 17778 | 45186 | 1596741 | 1376283 | 2973024 |



### மேல்நிலைப் பள்ளிகளில் சேர்க்கை விவரம்—தொடர்ச்சி

| ஆண்டு | மெட்ரிக்குலேஷன் | | | ஆங்கிலோ-இந்தியன் | | | மைய அரசு | | | பெரு மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1986-87 | 42433 | 48374 | 90807 | 20195 | 16255 | 36450 | 51291 | 34809 | 86100 | 1205798 | 779984 | 1985782 |
| 1987-88 | 56411 | 48460 | 104871 | 20359 | 16407 | 36766 | 53644 | 38614 | 92258 | 1274170 | 812714 | 2086884 |
| 1988-89 | 58085 | 49068 | 107153 | 20498 | 16462 | 36960 | 52291 | 35606 | 87897 | 1347433 | 859499 | 2206932 |
| 1989-90 | 63706 | 53548 | 117254 | 20505 | 16592 | 37097 | 56492 | 36423 | 92915 | 1401454 | 926795 | 2328249 |
| 1990-91 | 71575 | 60311 | 131886 | 20809 | 16710 | 37519 | 57981 | 36815 | 94796 | 1436403 | 977910 | 2414313 |
| 1991-92 | 79667 | 65744 | 145411 | 21523 | 17111 | 38634 | 53569 | 34662 | 88231 | 1499929 | 1016361 | 2516290 |
| 1992-93 | 94759 | 74860 | 169619 | 23507 | 19922 | 43429 | 54946 | 36182 | 91128 | 1556369 | 1091132 | 2647501 |
| 1993-94 | 127317 | 10369 | 137686 | 23556 | 19983 | 43539 | 58138 | 38540 | 96678 | 1612519 | 1024030 | 2636549 |
| 1994-95 | 138252 | 109025 | 247277 | 23982 | 19867 | 43849 | 58922 | 38846 | 97768 | 1695027 | 1189874 | 2884901 |
| 1995-96 | 180094 | 150591 | 330685 | 24171 | 20041 | 44212 | 62267 | 44897 | 107164 | 1777958 | 1271345 | 3049303 |
| 1996-97 | 188143 | 157693 | 345836 | 25068 | 20972 | 46040 | 68159 | 47033 | 115192 | 1842336 | 1321417 | 3163753 |
| 1997-98 | 214692 | 183244 | 397936 | 25806 | 21164 | 46970 | 70135 | 48577 | 118712 | 1920279 | 1399531 | 3319810 |
| 1998-99 | 280487 | 248291 | 528778 | 23035 | 23684 | 46719 | 82373 | 60983 | 143356 | 1834079 | 1529421 | 3363500 |
| 1999-2000 | 227885 | 195423 | 423308 | 22788 | 22217 | 45005 | 96429 | 75418 | 171847 | 1792763 | 1528866 | 3321629 |
| 2000-2001 | 234081 | 232396 | 466477 | 21082 | 21350 | 42432 | 61760 | 44720 | 106480 | 1807000 | 1571667 | 3378667 |
| 2001-2002 | 243722 | 86840 | 330562 | 21058 | 22504 | 43562 | 56525 | 45321 | 101846 | 1918046 | 1530948 | 3448994 |

## 15. உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் தேர்ச்சி விழுக்காடு (மார்ச் 2001)

| வ.எண் | மாவட்டம் | உயர்நிலைப் பள்ளி | | | மேல்நிலைப் பள்ளி | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1 | கன்னியாகுமரி | 71.23 | 77.50 | 74.40 | 77.61 | 79.88 | 78.77 |
| 2 | திருநெல்வேலி | 83.19 | 85.70 | 84.50 | 86.43 | 93.42 | 89.92 |
| 3 | தூத்துக்குடி | 70.80 | 87.80 | 77.07 | 80.41 | 88.86 | 85.52 |
| 4 | இராமநாதபுரம் | 51.75 | 56.60 | 53.14 | 66.58 | 73.97 | 69.76 |
| 5 | சிவகங்கை | 69.80 | 72.30 | 71.20 | 75.26 | 84.44 | 80.68 |
| 6 | விருதுநகர் | 84.90 | 86.80 | 85.60 | 86.36 | 89.18 | 87.50 |
| 7 | தேனி | 75.89 | 79.73 | 77.33 | 79.49 | 83.68 | 81.16 |
| 8 | மதுரை | 49.93 | 73.41 | 70.17 | 77.56 | 86.25 | 81.72 |
| 9 | திண்டுக்கல் | 65.07 | 72.67 | 68.78 | 78.95 | 86.22 | 82.58 |
| 10 | நீலகிரி | 55.29 | 51.25 | 53.39 | 66.92 | 62.12 | 66.62 |
| 11 | கோயம்புத்தூர் | 77.24 | 84.00 | 80.33 | 81.58 | 86.16 | 83.87 |
| 12 | ஈரோடு | 78.66 | 86.67 | 82.62 | 83.74 | 89.42 | 86.62 |
| 13 | சேலம் | 67.41 | 73.77 | 70.35 | 75.57 | 78.67 | 77.09 |
| 14 | நாமக்கல் | 75.02 | 78.04 | 76.07 | 78.30 | 86.20 | 81.90 |
| 15 | தருமபுரி | 53.55 | 57.85 | 55.57 | 60.23 | 66.12 | 62.75 |
| 16 | புதுக்கோட்டை | 54.21 | 53.02 | 53.58 | 69.79 | 74.39 | 72.02 |
| 17 | கரூர் | 65.07 | 69.00 | 67.04 | 75.90 | 78.10 | 82.50 |
| 18 | பெரம்பலூர் | 60.57 | 53.27 | 57.25 | 69.10 | 75.31 | 71.30 |
| 19 | திருச்சிராப்பள்ளி | 64.08 | 67.94 | 66.95 | 73.42 | 78.00 | 75.55 |
| 20 | நாகப்பட்டினம் | 71.22 | 64.76 | 67.74 | 67.46 | 14.29 | 70.67 |
| 21 | திருவாரூர் | 63.05 | 62.00 | 62.07 | 67.50 | 68.60 | 68.00 |
| 22 | தஞ்சாவூர் | 63.37 | 62.33 | 62.82 | 73.66 | 77.20 | 75.53 |
| 23 | விழுப்புரம் | 45.39 | 42.82 | 44.14 | 59.56 | 65.42 | 62.19 |
| 24 | கடலூர் | 45.85 | 47.93 | 47.00 | 57.54 | 68.93 | 63.44 |
| 25 | திருவண்ணாமலை | 41.33 | 43.37 | 42.22 | 62.94 | 70.49 | 66.14 |
| 26 | வேலூர் | 50.68 | 54.70 | 52.67 | 55.91 | 64.88 | 60.13 |
| 27 | காஞ்சிபுரம் | 49.53 | 55.57 | 52.58 | 65.25 | 72.83 | 69.55 |
| 28 | திருவள்ளூர் | 35.87 | 47.00 | 41.11 | 52.46 | 67.18 | 59.74 |
| 29 | சென்னை | 55.45 | 68.00 | 62.36 | 74.47 | 79.00 | 77.50 |

**16. பெண்களின் கல்வி நிலை — புள்ளிவிவரம்**

**( அ ) பெண்களின் எழுத்தறிவு 1911 முதல் 2001**

**சதவீதம்**

| ஆண்டு | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|
| 1911 | 1.53 | 9.18 |
| 1921 | 2.43 | 10.38 |
| 1931 | 2.94 | 11.34 |
| 1941 | 6.88 | 16.19 |
| 1951 | 10.06 | 20.82 |
| 1961 | 18.17 | 31.41 |
| 1971 | 28.86 | 39.46 |
| 1981 | 34.19 | 46.76 |
| 1991 | 52.29 | 63.72 |
| 2001 | 64.55 | 73.47 |



**16 ( ஆ ) மாணவிகளின் சேர்க்கை விவரம்**

**(1 முதல் 12 வகுப்பு வரை - அனைத்துப் பள்ளிகளும்)**

| ஆண்டு | பெண்கள் | மொத்தம் | விழுக்காடு |
|---|---|---|---|
| 1986-87 | 4947126 | 11275998 | 43.87 |
| 1987-88 | 5140347 | 11666494 | 44.06 |
| 1988-89 | 5279573 | 11963482 | 44.13 |
| 1989-90 | 5424771 | 12268168 | 44.21 |
| 1990-91 | 5573833 | 12558707 | 44.38 |
| 1991-92 | 5722426 | 12850511 | 44.53 |
| 1992-93 | 5873234 | 13144999 | 44.68 |
| 1993-94 | 6106581 | 13443297 | 45.42 |
| 1994-95 | 6179499 | 13738759 | 44.98 |
| 1995-96 | 6329284 | 14040374 | 45.08 |
| 1996-97 | 5735009 | 12389725 | 46.29 |
| 1997-98 | 5866249 | 12623981 | 46.46 |
| 1998-99 | 5911278 | 12287215 | 48.11 |
| 1999-2000 | 5592691 | 11677765 | 47.89 |
| 2000-2001 | 5589558 | 11609316 | 48.15 |
| 2001-2002 | 5619111 | 11682479 | 48.10 |

**16 (இ) அனைத்துப் பள்ளிகளிலும் பணிபுரியும் ஆசிரியைகள் எண்ணிக்கை**

| ஆண்டு | ஆசிரியைகள் | மொத்தம் | விழுக்காடு |
|---|---|---|---|
| 1987-88 | 121347 | 293155 | 41.39 |
| 1988-89 | 121823 | 294339 | 41.39 |
| 1989-90 | 124493 | 297918 | 41.80 |
| 1990-91 | 127841 | 300857 | 42.50 |
| 1991-92 | 129376 | 302943 | 42.71 |
| 1992-93 | 129926 | 304204 | 42.71 |
| 1993-94 | 126106 | 295413 | 42.69 |
| 1994-95 | 127352 | 295710 | 43.06 |
| 1995-96 | 132361 | 303798 | 43.57 |
| 1996-97 | 134239 | 307971 | 43.59 |
| 1997-98 | 135277 | 309869 | 43.66 |
| 1998-99 | 138454 | 316929 | 43.69 |
| 1999-2000 | 140337 | 322664 | 43.49 |
| 2000-2001 | 149079 | 330272 | 45.14 |
| 2001-2002 | 171672 | 333735 | 51.44 |



**16 (ஈ) பள்ளியைவிட்டு இடை நின்ற மாணவிகளின் எண்ணிக்கை (விழுக்காடு)**

| ஆண்டு | 1-5 | 1-8 | 1-10 | 1-12 |
|---|---|---|---|---|
| 1987-88 | 24.46 | 53.14 | 77.32 | 85.84 |
| 1988-89 | 24.01 | 51.35 | 76.45 | 88.58 |
| 1989-90 | 23.64 | 50.65 | 73.85 | 87.98 |
| 1990-91 | 22.68 | 49.43 | 72.63 | 86.60 |
| 1991-92 | 21.16 | 46.50 | 71.93 | 86.07 |
| 1992-93 | 19.62 | 43.54 | 71.02 | 85.39 |
| 1993-94 | 18.35 | 41.20 | 69.85 | 84.28 |
| 1994-95 | 17.65 | 39.36 | 69.15 | 84.19 |
| 1995-96 | 16.97 | 37.11 | 68.20 | 83.65 |
| 1996-97 | 16.20 | 34.78 | 67.05 | 83.09 |
| 1997-98 | 16.18 | 34.64 | 65.74 | 82.54 |
| 1998-99 | 16.15 | 33.37 | 58.35 | 80.61 |
| 1999-2000 | 16.07 | 34.74 | 57.85 | 80.92 |
| 2000-2001 | 16.03 | 35.15 | 57.91 | 82.40 |
| 2001-2002 | 15.95 | 34.53 | 57.79 | 79.32 |

[ 2002 ஏப்ரல் 9

# இணைப்பு-III

*(278 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பினைக் காண்க)*

**கோரிக்கை எண் 47 - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003**

## அத்தியாயம் 1

1.1. நமது நாட்டின் எதிர்காலம் இளைஞர்கள் கையில் உள்ளது. நாடு வளம் பெற இளைஞர்கள் அறிவுடையவர்களாகவும், உடல் ஆரோக்கியமானவர்களாகவும் ஒழுக்க நெறி உடையவர்களாகவும் சமுதாயத்திற்கு சேவை செய்யும் மனப்பான்மை உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். "வகுப்பறை இளைஞரின் அறிவை வளர்க்கும்", "இளைஞர்களுக்கு நல்ல உடல் நலத்தை விளையாட்டுக்கள் தர இயலும்" சுடரைச் சுற்றி ஒளித்திரை இல்லாத விளக்கு நிலைத்து நின்று பயன்பட இயலாததைப் போல நல்ல உடல்நலம் இல்லாத ஒருவருக்கு அறிவு பயன் தராது. ஒழுக்கமற்ற உடல் ஆரோக்கியம் பாதுகாப்பற்ற மின்சாரத்தைப் போன்றது. சமுதாய சேவை செய்பவரையும், பெறுபவரையும் மகிழ்ச்சியடையச் செய்கிறது. விளையாட்டுக்கள், தேசிய மாணவர் படை இயக்கம், நாட்டு நலப்பணித் திட்டம், பாரத சாரண சாரணியர் இயக்கம் ஆகியவை மாணவ இளைஞர்களிடையே மேற்கூறிய நற்பண்புகளை வளர்த்து, நாட்டை வலுவடையச் செய்ய வழிவகை செய்கின்றன.

1.2 மாணவரல்லாத இளைஞர் சமுதாயமும் நாட்டின் மேம்பாட்டிற்கு பயன்படும் வகையில் தமிழக அரசு பல திட்டங்களை உருவாக்கி உள்ளது. நடுவண் அரசைச் சார்ந்த நேரு யுவகேந்திரா சங்கேதன் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்காக இருக்கின்ற மாணவரல்லாத கிராம மற்றும் நகர்ப்புற இளைஞர்களை மேம்படுத்தும் குறிக்கோளுடன் செயல்படுகிறது.

1.3 இத்துறையின் கொள்கைகளுக்கு செயலாக்கம் கொடுக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்ச திட்டம் வழிகாட்டும் நட்சத்திரமாக அமையும். தொடர் பசுமைப் புரட்சியை அடையும் முகத்தான், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உள்ள மாணவ நாட்டுநலப் பணி தொண்டர்கள் மற்றும் தேசிய மாணவர் படை மாணவர்கள், தரிசு நில மேம்பாடு, மரம் நடுதல் ஆகிய பணிகளில் முழு முனைப்புடன்



2002 ஏப்ரல் 9 ]

ஈடுபடுத்தப்படுவர். சுகாதாரப் பாதுகாப்புக் கொள்கையை வெற்றிபெறச் செய்ய இவர்கள் இரத்த தானம் செய்வதுடன் எச்.ஐ.வி./எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்ச்சிப் பிரச்சாரத்தையும் மேற்கொள்வர். குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பும் இவர்களின் செயல்திட்டத்தில் இடம்பெறும். மழைநீர் சேகரிப்பின் மகிமையையும் சூரிய சக்தியைப் பயன்படுத்துவதன் அவசியத்தையும் மக்கள் அறிந்து பயன்பெற இத்தொண்டர்கள் பாடுபடுவர். ஆரோக்கியமான, சமுதாய விரோத செயல்களில் ஈடுபடாத ஒற்றுமையான இளைஞர்களைத் தன்னகத்தே கொண்ட நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடன் இளைஞர் மன்றங்கள் அமைக்கப்படும். இம்மன்றங்களுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்களை அரசு வழங்கும். மேலும், அவர்கள் தமிழ்நாட்டில் நலிந்து வரும் பாரம்பரிய பண்பாட்டு கலைநிகழ்ச்சிகளில் ஈடுபட்டு அவற்றிற்கு புத்துயிர் ஊட்ட ஊக்கப்படுத்தப்படுவர். இதற்காக 2002-2003 ஆம் ஆண்டில் 300 இளைஞர் மன்றங்கள் ஏற்படுத்தப்படும்.

### 1.4 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

விளையாட்டில் ஆர்வமுள்ள இளைஞர்களின் ஆக்க சக்தியினை ஒன்றுபடுத்தும் நோக்கத்துடன் தமிழக அரசு அரசாணை எண் 641, கல்வி (ஒய்1) துறை, நாள் 18-7-1992-ல் அதற்கு முன்பு இயங்கி வந்த இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து "தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்" என்ற அமைப்பினை உருவாக்கியது. இவ்வமைப்பு இந்திய விளையாட்டு ஆணைய அமைப்பிற்கு ஒப்பானதாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் இவ்வாணையத்தின் தலைவர் ஆவார்.

தலைமை அமைப்பான தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தமிழக அரசின் விளையாட்டு மற்றும் இளைஞர் நலப் பணிகள் குறித்த கொள்கை முடிவுகள் அனைத்தையும் செயல்படுத்தி வருகிறது.

### 1.5 குறிக்கோள்களும், இலக்குகளும்

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் குறிக்கோள்கள்:**

1. மாவட்டத் தலைநகரங்களிலும், பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் விளையாட்டிற்கான விளையாட்டு அரங்க மற்றும் ஆடுகள வசதிகளை உருவாக்குதல்.

[ 2002 ஏப்ரல் 9

2. திறமை மிக்க விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தக்க பயிற்சி மற்றும் நிதியுதவி அளித்து அவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிவாகை பெறச் செய்தல்.

3. தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு விருதுகளும், பல்வேறு ஊக்க உதவிச் சலுகைகளும் வழங்குதல்.

4. மாணவர் மற்றும் மாணவரல்லாத இளைஞர்களிடையே சாகசச் செயல்கள் செய்ய ஆர்வத்தையும், உடற்பயிற்சி செய்ய ஆவலையும் ஊக்குவித்தல்.

5. மாணவரல்லாத சமுதாயத்தினரிடையே அறிவியல் முனைப்பு, சமுதாய நல்லிணக்கம் மற்றும் சேவை மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்திடல்.

6. விளையாட்டு மற்றும் இளைஞர்கள் நலன் வளர்ச்சியின் நோக்கத்தில் மைய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

7. பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், இளைஞர் விழாக்கள் மற்றும் கண்காட்சிகள் நடத்தி இளைஞர்களிடம் எழுச்சியையும் உத்வேகத்தையும் மலரச்செய்தல்.

1.6 தமிழ்நாடு, தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் குழுப் போட்டிகளிலும், தனித்திறன் போட்டிகளிலும், விளையாட்டு வரைபடத்தில் முக்கிய அங்கம் வகித்து வருகிறது. இது தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்ட விளையாட்டுக் கட்டமைப்பு, பயிற்சி வசதிகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கப்படுகின்ற ஊக்க உதவித்தொகை ஆகியவற்றால் ஏற்பட்டது.

### நிதி ஒதுக்கீடு

2002-2003 ஆம் ஆண்டின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கான மானியக் கோரிக்கை—47-ன் கீழ் நிதி ஒதுக்கீடு ரூ.26.14 கோடி ஆகும். இதில் ரூ.2.32 கோடி திட்டப் பணிகளுக்கானதாகும்.



2002 ஏப்ரல் 9 ]

## அத்தியாயம் - 2

### விளையாட்டு வசதிகள் கட்டமைப்பு

**2.1 சென்னை விளையாட்டரங்கங்கள்**

விளையாட்டின் முன்னேற்றத்திற்கு கட்டமைப்பு வசதிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து சென்னையில் தடகளம் மற்றும் கால்பந்து விளையாட்டிற்கென வசதிகளைக் கொண்ட ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் 1992-93 ஆம் நிதியாண்டில் கட்டப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1995 ஆம் ஆண்டு ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்காக சர்வதேசத் தரத்திலான செயற்கை புல்தரை கொண்ட ஹாக்கி விளையாட்டரங்கம், செயற்கை விளையாட்டு தளத்தைக் கொண்ட டென்னிஸ் விளையாட்டரங்கம், பல்நோக்கு உள் விளையாட்டரங்கம், நீச்சல்குள வளாகம் ஆகிய விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. இவை நவீனமானதாகவும் சர்வதேச தரம் வாய்ந்ததாகவும் உள்ளன. இதன் விவரம் பின்வருமாறு:—

1. ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், பெரியமேடு, சென்னை: இவ்விளையாட்டரங்கம் சுமார் 40,000 பார்வையாளர்கள் அமரும் வசதியைக் கொண்டு கட்டப்பட்டது. மேலும் கால்பந்து ஆடுகளம் (புல்வெளியுடன்), தடகள ஓடுகளம் (400 மீ. 8 ஓடுகளப் பாதையுடன் செயற்கை இழை ஓடுகளம்), மூன்று கையுந்துபந்து ஆடுகளங்கள் - மின்னொளி அமைப்பு மற்றும் மின்னணு கணக்கியல் கருவி ஆகிய வசதிகளைக் கொண்டது.

2. பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம், பெரியமேடு, சென்னை: 8000 பார்வையாளர்கள் அமரும் வசதியைக் கொண்ட இவ்விளையாட்டரங்கம் கையுந்துபந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, சிறகுப்பந்து, குத்துச்சண்டை, மல்யுத்தம், பளுதூக்குதல் போன்ற விளையாட்டுக்கான வசதிகளுடன் குளிர்சாதன வசதியுடன் கூடியது.

3. வளைகோல்பந்து விளையாட்டரங்கம், எழும்பூர், சென்னை: இவ்விளையாட்டரங்கம் 4000 பார்வையாளர்கள் அமரும் வசதியுடன் செயற்கை புல்வெளி (ஆஸ்ட்ரோ டர்ப்) வளைகோல்பந்து ஆடுகளம் அமைக்கப்பட்டுள்ளது.

4. *நீச்சல் குள வளாகம், வேளச்சேரி, சென்னை:* இவ்விளையாட்டரங்கம் 4000 பார்வையாளர்கள் அமரும் வசதியுடன் ஒரு போட்டி குளம் —(50x25மீ.), ஒரு பாய்ச்சல்—குளம் · (18x25மீ.) மற்றும் ஒரு பயிற்சி குளம் — (20x25மீ.) ஆகிய வசதிகளுடையது.

5. டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம், சென்னை: இவ்விளையாட்டரங்கத்தில் மத்திய ஆடுகளத்தில் 5000 பார்வையாளர்களும் மற்றும் 6 பயிற்சி ஆடுகளங்களில் 2000 பார்வையாளர்களும் அமரும் வசதியுடன் உள்ளது. இந்த செயற்கை இழை ஆடுகளங்கள் சர்வ தேச அளவிலுள்ள ஆடுகளங்களுக்கு இணையாகவும், மின்னொளி அமைப்புடன் கூடியதாகவும் உள்ளது.

இந்த நவீன விளையாட்டரங்கங்கள் அதிக அளவில் பயன் அடையும் வகையில் பராமரிப்பு தேவைப்படுகிறது. தேசிய மற்றும் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளைச் சென்னையில் நடத்துவதற்கு ஏற்றவாறு இந்த விளையாட்டு அரங்கங்கள் மேம்படுத்தப்பட வேண்டும். சென்னை எழும்பூர் டாக்டர் இராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கத்தில் தற்பொழுது உள்ள செயற்கை இழை புல்தளம் அதற்குண்டான பயன்பாட்டு கால அளவிற்கு மேல் பயன்பட்டுள்ளது. இதற்குப் பதிலாக, ரூ.2.00 கோடி மதிப்பீடு செலவில் புதிய செயற்கை இழை புல்தளத்தினை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதி ஆதாரத்திற்காக ஹட்கோ நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. அதோடு சென்னை எழும்பூரில் உள்ள வளைகோல் பந்து விளையாட்டு அரங்கத்தில் சர்வதேச வளைகோல் பந்து விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு ஏதுவாக அவ்விளையாட்டரங்கம் ரூ.2.75 கோடி செலவில் மின் ஒளி மயமாக்கப்படும்.

**இதர கட்டமைப்புகள்:**

1. **ஷெனாய்நகர் நீச்சல் குளம், சென்னை:** இது 33x21மீ. அளவு கொண்ட நீச்சல் குளமும், கையுந்துபந்து மற்றும் சிறகுப்பந்து ஆடுகளங்களைக் கொண்டது.

2. **நேரு பூங்கா விளையாட்டு வளாகம், சென்னை:** இதில் கால்பந்து ஆடுகளம்-1, 400 மீ. ஓடுபாதை-1, கூடைப்பந்து ஆடுகளங்கள்-2, கபாடி ஆடுகளங்கள்-2, டென்னிஸ் ஆடுகளங்கள்-2, கையுந்து பந்து ஆடுகளங்கள்-2 மற்றும் ஸ்குவாஷ் ஆடுகளங்களைக் கொண்ட உள்ளரங்க ஸ்குவாஷ் அகாடமி அமைந்துள்ளது.





3. **அண்ணா நீச்சல் குளம், மெரினா, சென்னை:** 1992 ஆம் ஆண்டிலிருந்தே இந்நீச்சல் குளம் பயன்படுத்தப்படாமல் இருந்தது. தற்போது ரூ.1.08 கோடி செலவில் இந்நீச்சல் குளம் சீரமைக்கப்பட்டு நீச்சல் பயிற்சிக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**2.2 மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட விளையாட்டு வளாகங்கள் ஏற்படுத்துதல்**

மைய அரசு மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட விளையாட்டு வளாகம் ஏற்படுத்த மானியம் தந்து உதவி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ், மைய அரசு 50:50 விகிதாச்சாரத்தின்படி உச்சவரம்பு மானியமாக ஒரு கோடி ரூபாய் தருகின்றது. மலைப்பாங்கு மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளுக்கு 75:25 விகிதாச்சாரத்தின்படி உச்சவரம்பு மானியமாக 1.50 கோடி ரூபாய் தருகின்றது.

மாநில அரசு தனது அரசாணை நிலை எண் 9, கல்வித் துறை, நாள் 5-1-1994-ன் மூலம் தன்னுடைய பங்காகக் கீழ்க்கண்டவாறு ஆணையிட்டுள்ளது:—

| | |
|---|---|
| 1. மைய அரசின் பங்கீடு | 50 விழுக்காடு |
| 2. மாநில அரசின் பங்கீடு | 25 விழுக்காடு |
| 3. விளையாட்டரங்கக் குழு பங்கீடு (பொதுமக்களின் நன்கொடைகள்) | 25 விழுக்காடு |

[2002 ஏப்ரல் 9

மாவட்ட விளையாட்டரங்கங்களில் பின்வரும் வசதிகளை ஏற்படுத்த வாய்ப்புகள் இருக்கின்றன.

| வ. எண் | விளையாட்டு வசதிகள் | மைய அரசால் பரிந்துரைக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திறந்தவெளி விளையாட்டரங்கம் 8 ஓடுகளப் பாதைகளைக் கொண்ட 400 மீ. ஓடுதளம், கால்பந்து, வளைகோல்பந்து மைதானங்கள் மற்றும் மாணவ, மாணவியர்க்கென தனித்தனியே உடை மாற்றும் அறைகள் மற்றும் கழிப்பறை வசதிகள் | 36 |
| 2. | திறந்தவெளி விளையாட்டு மைதானங்கள், கையுந்துபந்து, கூடைப்பந்து மற்றும் ஒன்று அல்லது இரண்டு மரபுவழி விளையாட்டுக்கள், கோ-கோ, கபாடி அல்லது உள்ளூரில் விளையாடும் பிரபலமான விளையாட்டு | 10 |
| 3. | பல்நோக்கு உடல் திறனைப் பெருக்கும் கருவி, பளுதூக்கும் கருவி வைக்கும் அறை | 10 |
| 4. | 6 நீச்சல் பாதைகளுடன் நீர் சுத்தகரிப்புக் கருவியுடன் கூடிய 25மீ. x 13 மீ. அளவிலான நீச்சல் குளம் | 50 |
| 5. | மரத்தாலான ஆடுகளத்தைக் கொண்ட - 35 மீ. x 19 மீ. x 12.5 மீ. அளவு குறையாமல் மாணவ, மாணவியர்க்கென உடைமாற்று அறைகள் மற்றும் கழிப்பறை வசதிகள் கொண்ட உள் விளையாட்டரங்கம். | 90 |
| 6. | மொத்தத்தில் 80 படுக்கைகளைக் கொண்ட விடுதியில் குறைந்தபட்சம் மாணவியர்க்கென 30 படுக்கைகள் | 60 |
| | **மொத்தம்** | **256** |

மைய அரசு, உச்சவரம்பு மானியத்தொகை ரூபாய் 1 கோடி (பழங்குடியினர், மலைவாழ்பகுதியினர் நீங்கலாக) என நிர்ணயித்துள்ளதால், அனைத்து அடிப்படைத் தேவையான வசதிகளைக் கொண்ட மாவட்ட



2002 ஏப்ரல் 9]

விளையாட்டு வளாகங்களை ஏற்படுத்துவதெனத் தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கான பங்கீட்டுத் தொகை பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | விளையாட்டு வசதிகள் | உத்தேச மதிப்பீடு | மைய அரசின் உச்ச மானியம் | மாநில அரசின் பங்கீடு | பொது மக்களிடமிருந்து பெறும் நன்கொடை |
|---|---|---|---|---|---|
| 1. | திறந்தவெளி விளையாட்டு அரங்கம் 400 மீ. ஓடுதளம், கால்பந்து, வளைகோல்பந்து, மைதானங்கள் வசதிகளுடன் | 36 | 18 | 9 | 9 |
| 2. | கையுந்துபந்து/கூடைப் பந்து, ஆடுகளங்கள் மற்றும் கோ-கோ, கபாடி ஆடுகளங்கள் | 10 | 5 | 2.50 | 2.50 |
| 3. | பல்நோக்கு உடல்திறனைப் பெருக்கும் கருவி, பளுதூக்கும் கருவி வைக்கக் கூடிய அறை | 10 | 5 | 2.50 | 2.50 |
| 4. | 6 நீச்சல் பாதையுடன் 25 x 13மீ. நீச்சல்குளம் | 50 | 25 | 12.50 | 12.50 |
| 5. | 35 x 19 x 12.5மீ. மரத்தாலான தளத்துடன் உள் விளையாட்டு அரங்கம் | 90 | 45 | 22.50 | 22.50 |
| | **மொத்தம்** | **196** | **98** | **49.00** | **49.00** |

மேற்கண்ட 5 வசதிகளையுடைய மாவட்ட விளையாட்டு வளாகம் ஏற்படுத்திட மாநில அரசின் பங்கீட்டுத் தொகை ரூ.49 இலட்சம் ஆகும்.

**2.3 மாவட்டத் தலைநகரங்களில் உள்ள விளையாட்டு வசதிகள் கட்டமைப்பு**

| | | வெளி விளையாட்டு அரங்கம் | | | | |
|---|---|---|---|---|---|---|
| வ. எண் | மாவட்டம் | 400 மீ. தடகள ஓடுபாதையுடன் கால்பந்து வளைகோல் பந்து ஆடுகளம் | வெளி விளையாட்டு மைதானம் | ஜிம் | நீச்சல் குளம் | உள் விளையாட்டு அரங்கம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | தஞ்சாவூர் | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை |
| 2. | தருமபுரி | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை |
| 3. | நீலகிரி | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | உண்டு |
| 4. | ஈரோடு | உண்டு | உண்டு | உண்டு | மைய அரசு ஒப்புதல் பெறப் பட்டுள்ளது. பணி டிசம்பர் 2002-ல் முடிவடையும். | இல்லை |
| 5. | சேலம் | உண்டு | உண்டு | உண்டு | மைய அரசு ஒப்புதல் பெறப் பட்டுள்ளது. பணி டிசம்பர் 2002-ல் முடிவடையும். | உண்டு |
| 6. | மதுரை | உண்டு | உண்டு | உண்டு | மைய அரசு ஒப்புதல் பெறப் பட்டுள்ளது. பணி பிப்ரவரி 2003-ல் முடிவடையும். | உண்டு |





| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 7. | திருச்சிராப்பள்ளி | உண்டு | உண்டு | உண்டு | மைய அரசு ஒப்புதல் பெறப் பட்டுள் ளது. பணி டிசம்பர் 2002-ல் முடிவ டையும் | மைய அரசு ஒப்புதல் பெறப் பட்டுள்ளது. பொது மக்களின் நன் கொடைகள் பெறப்பட உள்ளது. |
| 8. | கன்னியாகுமரி | உண்டு | உண்டு | உண்டு | மைய அரசு ஒப்புதல் பெறப் பட்டுள்ளது. பணி மார்ச் 2003-ல் முடிவடையும். | இல்லை |
| 9. | விருதுநகர் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 10. | இராமநாதபுரம் | உண்டு | உண்டு | உண்டு | மைய அரசு ஒப்புதல் பெறப் பட்டுள்ளது. பணி மார்ச் 2003-ல் முடிவடையும். | இல்லை |
| 11. | திருநெல்வேலி | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 12. | தூத்துக்குடி | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 13. | காஞ்சிபுரம் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 14. | கடலூர் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 15. | வேலூர் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 16. | கோயம்புத்தூர் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 17. | புதுக்கோட்டை | உண்டு | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |

[ 2002 ஏப்ரல் 9

கட்டமைப்புப் பணி நடைபெறும் இடங்கள்

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 18. | நாகப்பட்டினம் | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை |
| 19. | திண்டுக்கல் | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை |
| 20. | விழுப்புரம் | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | இல்லை |
| 21. | பெரம்பலூர் (ம) அரியலூர் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |

**2.4 ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகளில் விளையாட்டு மைதானம் மேம்படுத்துதல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வாங்க மானியம்**

ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள தனியார் மற்றும் அரசுப் பள்ளிகளில் விளையாட்டு மைதானங்களை மேம்படுத்தவும் அல்லது விளையாட்டு உபகரணங்கள் வாங்கவும் (நிரந்தரம் மற்றும் நிரந்தரமல்லாத) அல்லது இரண்டிற்கும் மைய அரசு ரூபாய் 1.50 இலட்சம் மானியம் அளித்து வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் மானியம் பெறும் ஊரகப் பள்ளிகள்.

1. நிலையான அளவுடன் கூடிய ஆடுகளம் அமைக்க உதவி கோருதல்.
2. குறைந்தபட்சம் 200 மாணவர்களைக் கொண்ட பள்ளி.
3. ஒரு முழுநேர உடற்கல்வி ஆசிரியர் இருக்க வேண்டும்.
4. அப்பள்ளியானது, ஆண்டுக்கு ரூ.10,000/- அளவில் பராமரிப்பு மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கும் வசதி படைத்ததாக இருத்தல் வேண்டும். பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்தோ அல்லது வேறு வகைகளிலோ நிதியினைப் பெறும் நிலையில் இருத்தல் வேண்டும்.

மைய அரசு ஓராண்டுக்கு ஒரு ஒன்றியத்திற்கு ஒரு பள்ளிக்கும், ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு ஒன்றியத்தில் இரண்டு பள்ளிகளுக்கு மிகாமலும் நிதியுதவி வழங்கும்.

இத்திட்டத்தின்கீழ் தமிழகத்திலுள்ள 385 ஊரகப் பள்ளிகளுக்கு ஒரு பள்ளிக்கு ரூ.1.50 இலட்சம் வீதம் பள்ளிகளில் விளையாட்டு



2002 ஏப்ரல் 9 ]

மைதானங்களை மேம்படுத்தவும், விளையாட்டு உபகரணங்கள் வாங்கவும் மைய அரசின் ஒப்புதலுக்காக கருத்துருக்கள் அனுப்பப்பட்டு, 102 ஊரகப் பள்ளிகளுக்கு இத்திட்டத்தினைச் செயல்படுத்த கொள்கை ஒப்புதல் மைய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

**2.5 அரசுப் பள்ளிகளில் விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த மானியத் திட்டம்**

விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் திட்டத்தின்கீழ், மைய அரசு அரசுப் பள்ளிகளுக்கு ரூ.5 இலட்சத்திற்கு மிகாமல் கீழ்க்கண்ட விளையாட்டு கட்டமைப்புகளை ஏற்படுத்த 50 விழுக்காடு நிதியுதவி வழங்கி வருகிறது. அதற்கான வசதிகளாவன:

1. விளையாட்டுத் திடல்களை மேம்படுத்துதல்.
2. திறந்தவெளி கான்கிரீட் ஸ்கேட்டிங் ரிங்க் அமைத்தல்.
3. ஓடுகளப் பாதையுடன் வளைகோல்பந்து /கால்பந்து/கிரிக்கெட் மைதானம்.
4. உள்விளையாட்டரங்கக் கூடம் (17x17x17மீ. அளவு)
5. நீச்சல் குளம் 25 x 13 மீ. அளவு.

இத்திட்டத்தின்படி, மாநில அரசின் மானியமான 50 விழுக்காடு பங்கினை முதலில் முழுமையாக செலவிட வேண்டும். பின் மத்திய அரசு, அதன் பங்கான 50 விழுக்காடு மானியத்தினை வழங்கும். இத்திட்டத்தின் கீழ் மைய அரசின் மானியம் பெறவும், அரசுப் பள்ளிகளில் விளையாட்டுக் கட்டமைப்புகளை ஏற்படுத்த, 25 அரசுப் பள்ளிகளின் கருத்துருக்களை 50:50 என்ற விகிதத்தின்படி மைய அரசின் மானியம் மற்றும் ஒப்புதல் பெற அனுப்பப்பட்டது. மைய அரசு 25 பள்ளிகளின் கருத்துருக்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. வேலை நடைபெற்று வருகின்றது. மாநில அரசு தனது பங்கான ரூ.22.75 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு செய்து, அதில் ரூ.9.10 இலட்சம் (40 விழுக்காடு) வழங்கியுள்ளது.

[ 2002 ஏப்ரல் 9

## அத்தியாயம் - 3
## பயிற்சித் திட்டங்கள்

முறையான பயிற்சி என்பது முறைப்படி திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்களின் திறனை அதிகப்படுத்துவதற்கும், சாதனைகளை ஏற்படுத்துவதற்கும் ஒரு திறவுகோலாகும். இதனைக் கருத்திற்கொண்டு, தமிழக அரசு பல்வேறு வயது பிரிவுகளைக் கொண்ட விளையாட்டு வீரர்கள் பயனடையும் வகையில் பல்வேறு பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

### 3.1. விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் விளையாட்டு விடுதிகள்

நம் மாநிலத்தில் மூன்று விளையாட்டுப் பள்ளிகளையும், நான்கு விளையாட்டு விடுதிகளையும் அரசு ஏற்படுத்தியுள்ளது.

| வ. எண் | விளையாட்டுப் பள்ளியின் பெயர் | பயிற்சியளிக்கும் வசதிகள் |
|---|---|---|
| 1. | ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டுப் பள்ளி, நந்தனம், சென்னை. | தடகளம், கால்பந்து, வளைகோல்பந்து, நீச்சல் |
| 2. | சுவாமி சிவானந்தா மேல்நிலைப் பள்ளி, பெரியநாயக்கன் பாளையம், கோயம்புத்தூர். | தடகளம், கூடைப்பந்து, கையுந்துபந்து |
| 3. | நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழக விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி | தடகளம், கிரிக்கெட், கால்பந்து |

| வ. எண் | விளையாட்டு விடுதி அமைந்துள்ள இடம் | பயிற்சியளிக்கும் வசதிகள் |
|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி | தடகளம், கால்பந்து, கையுந்துபந்து |
| 2. | மதுரை | தடகளம், கால்பந்து, கூடைப்பந்து |
| 3. | திருநெல்வேலி | தடகளம், வளைகோல்பந்து, கையுந்துபந்து |
| 4. | ஈரோடு (மாணவியருக்கு மட்டும்) | தடகளம், கூடைப்பந்து கையுந்துபந்து |



தேர்வு முறை : தேர்வுகள் இரண்டு அடுக்கு முறையில், அதாவது மாவட்ட மற்றும் மாநில அளவில் நடத்தப்பட்டு வருகிறது.

மாவட்ட அளவு : உடற்கூறு திறன் தேர்வுகள் நடத்தப்படும்.

மாநில அளவு : குழு விளையாட்டுக்களில் விளையாட்டுத்திறன் மற்றும் நுட்பம் குறித்தும் தனியாள் விளையாட்டுக்களில் திறமை குறித்தும் தேர்வுகள் நடத்தப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் 8 ஆம் வகுப்பு, 9 ஆம் வகுப்பு மற்றும் 11-வது வகுப்பில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு விளையாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் விளையாட்டு விடுதிகளில் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு, அரசு உணவிற்காகவும், மற்ற தலைப்பிலும் கீழ்க்கண்டவாறு மானியம் அளிக்கிறது:—

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | - | 710 |
| மாதம் ஒன்றிற்கு ஒரு மாணவனுக்கு வழங்கப்படுகின்ற உணவிற்கான தொகை (10 மாதங்களுக்கு மட்டும்) | - | ரூ.720 |
| சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கான படி ஒரு மாணவனுக்கு | - | ரூ.700 |
| ஆண்டுக்கு ஒருமுறை ஒரு மாணவனுக்கு உண்டான விளையாட்டுப் பொருட்கள் வாங்க படி | - | ரூ.250 |

**ஒரு மாணவனுக்கு ஓர் ஆண்டிற்கு வழங்கப்படுகின்ற பணித் தொகை**

| | | |
|---|---|---|
| (அ) விளையாட்டுப் பள்ளி | - | ரூ.400 |
| (ஆ) விளையாட்டு விடுதி | - | ரூ.300 |

விளையாட்டு விடுதிகள் நேரடியாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்கீழ் பராமரிக்கப்பட்டு, அதற்கென்று தனியாக விளையாட்டு விடுதிக் காப்பாளர், பயிற்றுநர்கள் மற்றும் சமையல்காரர்களுடன் செயல்பட்டு வருகின்றன.

[ 2002 ஏப்ரல் 9

**3.2 சிறப்பு விளையாட்டு விடுதி**

கல்லூரி செல்லும் மாணவர்களுக்கென ஒரு சிறப்பு விளையாட்டு விடுதி சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் 1994-95 ஆம் ஆண்டில் செயல்படுத்திட அரசு அனுமதித்துள்ளது. இச்சிறப்பு விளையாட்டு விடுதியில் கீழ்க்கண்ட விளையாட்டுக்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

(1) தடகளம் (2) கூடைப்பந்து (3) குத்துச்சண்டை (4) நீச்சல் மற்றும் (5) கையுந்துபந்து. இந்த விடுதி, தேசிய அளவில் பல விளையாட்டு வீரர்களைத் தந்துள்ளது.

| | |
|---|---|
| அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | - 50 |
| மாணவர் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கான உணவிற்கான தொகை (10 மாதத்திற்கு) | -ரூ.1,500 |
| சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கான படி ஒரு மாணவருக்கு ஆண்டு ஒன்றுக்கு | -ரூ.3,000 |
| ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு படிப்புக் கட்டணம் | -ரூ.1,500 |

**3.3 வேலூர் சத்துவாச்சாரியில் பளுதூக்கும் விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம்**

வேலூருக்கு அருகிலுள்ள சத்துவாச்சாரியை இருப்பிடமாகக் கொண்ட பளுதூக்கும் விளையாட்டு வீரர்கள் நாட்டிற்காகவும், மாநிலத்திற்காகவும், பதக்கங்களையும், புகழினையும், பெற்றுத் தந்துள்ள காரணத்தினால் அங்கு பளுதூக்கும் மையம் ஏற்படுத்தப்பட்டது. தகுதி வாய்ந்த பயிற்சியாளர்கள் மூலம் 30 விளையாட்டு வீரர்களுக்கு (மாணவர் மற்றும் மாணவரல்லாதோர்) பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 360 நாட்களுக்கு அங்கு பயிற்சி பெறுகின்றவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.10/- வீதம் சிற்றுண்டித் தொகையாகவும், விளையாட்டு உபகரணப்படியாக ரூ.2,400/-(ஆண்டொன்றுக்கு) வழங்கப்பட்டு வருகிறது.

**3.4 கோவையில் கூடைப்பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம்**

கோயம்புத்தூரில் கூடைப்பந்து விளையாட்டு பிரபலமான விளையாட்டாகும். கோவை நகரைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து 20



2002 ஏப்ரல் 9 ]

வயதுக்குட்பட்ட மாணவர்களின் திறமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 25 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க விளையாட்டு சிறப்பு மேம்பாட்டு மையம் ஆரம்பிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் கோவை நேரு விளையாட்டரங்கத்திற்குத் தினந்தோறும் பயிற்சி பெற வருகின்றார்கள். அவர்களுக்கு விளையாட்டு உபகரணப் படியாக ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு ரூ.3,200/-ம் வீட்டிலிருந்து பயிற்சி மையத்திற்கு வந்து செல்வதற்கு போக்குவரத்துச் செலவினமாக தினம் ஒன்றுக்கு ரூ.10/-ம், மற்றும் ஒரு மாணவனுக்குச் சிற்றுண்டிச் செலவினமாக நாள் ஒன்றுக்கு ரூ.10 ஆம், ஆண்டுதோறும் 300 நாட்களுக்கு வழங்கப்படுகிறது.

**3.5 திருநெல்வேலியில் வளைகோல்பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம்**

திருநெல்வேலி அதிக அளவில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் வளைகோல்பந்து விளையாட்டு வீரர்களை வழங்கியுள்ளதால், அங்கு வளைகோல்பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம் செயல்பட்டு வருகிறது. தகுதி வாய்ந்த பயிற்றுநர்களால் 30 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவனுக்கும் ரூ.3,600/- விளையாட்டு உபகரணப்படியாக வழங்கப்படுகிறது. ஆண்டொன்றில் 300 நாட்களுக்கு வீட்டிலிருந்து பயிற்சி மையத்திற்கு வந்து போக போக்குவரத்துச் செலவினமாக நாளொன்றுக்கு ரூ.10/-ம் மற்றும் சிற்றுண்டிச் செலவினமாக நாளொன்றுக்கு ஒரு விளையாட்டு மாணவனுக்கு ரூ.10/-ம் வழங்கப்பட்டு வருகிறது.

**3.6 தனியார் கல்லூரிகளில் இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்கள்**

கல்லூரிகளில் பயிலும் விளையாட்டு வீரர்களின் திறன்களை மேம்படுத்தி அவர்கள் பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டுப் போட்டிகளில் வெற்றிவாகை சூடி பெருமை சேர்த்திடும் வகையில் அரசு, அந்தந்த கல்லூரிகளில் உள்ள விளையாட்டுக் கட்டமைப்புகளைப் பயன்படுத்த, கல்லூரிகளில் இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்களை அமைக்க அனுமதி வழங்கியது. மேலும், அரசு குறைந்தபட்சத் தகுதியை நிர்ணயித்தும் கல்லூரி நிர்வாகமே மாணவர்களை தேர்வு செய்யவும் அனுமதி வழங்கியது.

[ 2002 ஏப்ரல் 9

கல்லூரிகளின் விவரம் பின்வருமாறு:—

| வ.எண் | கல்லூரி பெயர் | விளையாட்டுக்கள் | பயிற்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | ஆண்கள் கல்லூரி | | |
| 1. | லயோலா கல்லூரி சென்னை-34 | கால்பந்து | 16 |
| | | தடகளம் | 10 |
| | | கூடைப்பந்து | 12 |
| 2. | சென்னை கிறித்துவக் கல்லூரி, சென்னை-45 | தடகளம் | 10 |
| 3. | பி.எஸ்.ஜி. கலைக் கல்லூரி, கோவை | கூடைப்பந்து | 12 |
| 4. | பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30 | வளைகோல்பந்து | 16 |
| 5. | ஜமால் முகமது கல்லூரி, திருச்சி | கையுந்துபந்து | 12 |
| 6. | தூய வளனார் கல்லூரி, திருச்சி | தடகளம் | 10 |
| | | கூடைப்பந்து | 12 |
| | | கால்பந்து | 16 |
| 7. | எம்.எஸ்.எஸ்.வக்ப் போர்டு கல்லூரி, மதுரை | தடகளம் | 10 |
| | பெண்கள் கல்லூரி | | |
| 1. | எத்திராஜ் கல்லூரி, சென்னை | தடகளம் | 10 |
| | | கூடைப்பந்து | 12 |
| | | கையுந்துபந்து | 12 |
| 2. | எஸ்.டி.என்.டி வைஷ்ணவா கல்லூரி, சென்னை | தடகளம் | 10 |
| | | வளைகோல்பந்து | 16 |
| 3. | வி.வி.வி. கல்லூரி, விருதுநகர் | தடகளம் | 10 |



2002 ஏப்ரல் 9 ]

| | | | |
|---|---|---|---|
| 4. | ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி, பெரியகுளம் | கையுந்துபந்து | 12 |
| 5. | நிர்மலா கல்லூரி, கோவை | கூடைப்பந்து | 12 |

மேற்படி கல்லூரிகளைச் சார்ந்த மாணவர்கள் குறிப்பிட்ட தகுதிகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்களில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

கீழ்க்காணும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது.

மாதம் ஒன்றுக்கு ஒரு மாணவனுக்கு உணவுப் படி (10 மாதங்களுக்கு) - ரூ.600/-

ஆண்டொன்றுக்கு ஒரு மாணவனுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கு - ரூ.500/-

பயிற்சி : அந்தந்த கல்லூரி கல்லூரி நிர்வாகமே, தனது சொந்த பயிற்சியாளர்களைக் கொண்டு மாணவர்களுக்கு பயிற்சியளிப்பது அவர்களின் பொறுப்பாகும்.

## 3.7 மாவட்ட அளவிலான கோடை காலப் பயிற்சி முகாம்கள்

ஒவ்வோராண்டும் மாவட்டத் தலைநகரங்களில் 16 வயதிற்குட்பட்ட மாணவர் மற்றும் மாணவரல்லாத ஆண், பெண் இருபாலாருக்கும் மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்கள் கீழ்க்கண்ட விளையாட்டுக்களில்-தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து மற்றும் கையுந்துபந்து விளையாட்டுக்களில் நடத்தப்படுகின்றன.

## 3.8 மாநில அளவிலான கோடை காலப் பயிற்சி முகாம்

கோடை காலத்தில் ஒவ்வோராண்டும், தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து மற்றும் கையுந்துபந்து விளையாட்டுப் பிரிவுகளில் குடியரசுதின விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பிடங்களைப் பெற்ற 16 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியருக்கு தங்கும் வசதியுடன் கூடிய 21 நாட்களைக் கொண்ட மாநில அளவிலான கோடை காலப் பயிற்சி

[ 2002 ஏப்ரல் 9

முகாம் நடத்தப்பட்டு வருகின்றது. சுழற்சி முறையில், இந்தப் பயிற்சி முகாம் ஒவ்வோராண்டும் ஒரு மாவட்டத் தலைநகரத்தில் நடத்தப்படுகின்றது.

**3.9 14 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கென சிறப்புப் பயிற்சி முகாம் திட்டம்**

ஒவ்வோராண்டும் தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கையுந்துபந்து மற்றும் நீச்சல் விளையாட்டுக்களில் 14 வயதிற்குட்பட்ட சிறுவர் மற்றும் சிறுமியருக்கென நடத்தப்படுகின்ற இளமையில் தெரிந்தெடுக்கும் விளையாட்டுப் போட்டிகளில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற திறமைமிக்க விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு, சிறப்புப் பயிற்சி முகாமை நடத்த அரசு அனுமதி அளித்துள்ளது. ஒலிம்பியன்/சர்வதேச விளையாட்டு வீரர், மாநில விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள், பயிற்றுநர்கள் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்களைக் கொண்ட தேர்வுக் குழு திறமைமிக்க விளையாட்டு வீரர்களை இப்பயிற்சி முகாமிற்குத் தேர்வு செய்கிறது. 165 மாணவ, மாணவியர் (கால்பந்து விளையாட்டில் 15 மாணவர்கள், ஏனைய விளையாட்டுப் பிரிவுகளில் ஒவ்வொரு விளையாட்டிலும் 15 மாணவர் மற்றும் 15 மாணவியர்) இந்த சிறப்புப் பயிற்சி முகாமில் பயிற்றுவிக்கப்படுவார்கள். இந்தப் பயிற்சி முகாமின் கால அளவு 21 நாட்களாகும்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் விளையாட்டு வீரர்களின் திறமையை உயரிய அளவில் மேம்படுத்தும் நோக்கத்துடன் அவர்களின் திறமையினை வளர்த்து, பயிற்றுவித்து பராமரித்திட அவர்களை தத்தெடுக்கும். அவர்களுக்கு கல்வி, பயிற்சி, சத்தான உணவு, மற்றும் விளையாட்டில் திறமையான பயிற்றுவிப்பு, விளையாட்டிற்கு தேவைப்படும் உபகரணங்கள் முதலியனவற்றிற்கான நிதியுதவி அளித்து உதவி செய்து அவர்களுடைய முழு திறமையையும் மேம்படுத்தி மிளிரச் செய்ய கவனம் செலுத்தப்படும்.

**3.10 இந்திய விளையாட்டு ஆணையத்தின் பயிற்சி மையங்கள்**

இந்திய விளையாட்டு ஆணையம் தமிழ்நாட்டில் இவ்வாணையத்தின் துணை மையத்தை நிறுவ முன்வந்துள்ளது. இத்துணை மையத்தை நிறுவுவதற்குத் தேவையான நிலத்தினை மாநில அரசு அளிக்கும்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், இந்திய விளையாட்டு ஆணையத்தின் பயிற்சி மையங்களை தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் தொடங்க விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை அளித்துள்ளது.



2002 ஏப்ரல் 9 ]

| இடம் | திட்டம் | விளையாட்டு |
|---|---|---|
| சென்னை | இந்திய விளையாட்டு ஆணையப் பயிற்சி மையம் (மாணவர்கள்) | வளைகோல்பந்து கால்பந்து, கபாடி |
| | டே போர்டர் பயிற்சித் திட்டம் (மாணவர்கள்) | வளைகோல்பந்து கபாடி, குத்துச்சண்டை |
| | இந்திய விளையாட்டு ஆணையப் பயிற்சி மையம் (மாணவியர்கள்) | வளைகோல்பந்து கையுந்துபந்து, கபாடி |
| சேலம் | இந்திய விளையாட்டு ஆணையப் பயிற்சி மையம் (மாணவர்கள்) | தடகளம், கையுந்துபந்து கூடைப்பந்து |
| | டே போர்டர் பயிற்சித் திட்டம் (மாணவர்கள்) | தடகளம், கையுந்துபந்து, கூடைப்பந்து |
| நாகர்கோவில் | இந்திய விளையாட்டு ஆணைய சிறப்பு விளையாட்டு டே போர்டர் திட்டம் | தடகளம், கராத்தே |

**3.11 சிறப்புப் பயிற்சித் திட்டம்**

**அ) நீச்சல் பயிற்சித் திட்டம்**

ஒவ்வொரு வருடமும் கோடைகால விடுமுறையில் "நீச்சல் பயிற்சி திட்டம்" தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நீச்சல் வளாகங்களான வேளச்சேரி மற்றும் ஷெனாய் நகரில் பிரிவு வாரியாக நடத்தப்பட்டு வருகிறது.

**ஆ) டென்னிஸ் பயிற்சித் திட்டம்**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கில் புதிய திட்டமாக "டென்னிஸ் பயிற்சி திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[ 2002 ஏப்ரல் 9

## அத்தியாயம்-4

### விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்

அரசுத் துறைகளிலும் மற்றும் பல்வேறு நிறுவனங்களிலும் விளையாட்டு மற்றும் விளையாட்டுப் போட்டிக் குழுக்களைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் இந்திய விளையாட்டுக் குழுமமும் விளையாட்டு வீரர்கள் அவரவர்களுக்குரிய பல்வேறு வயது பிரிவுகளில் உள்ள விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் வகையில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகின்றன.

### தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள்

**4.1 மாநில விளையாட்டுப் போட்டிகள் :**

மாநில விளையாட்டுப் போட்டிகள் கீழ்க்கண்ட 14 விளையாட்டுகளில் நடத்தப்பட்டு வருகின்றன.

(1) தடகளம் (2) டிரையத்லான் (3) சிறகுப்பந்து (4) நீச்சல் (5) டென்னிஸ் (6) மேசைப்பந்து (7) பளுதூக்குதல் (8) சிலம்பம் (9) கூடைப்பந்து (10) கால்பந்து (11) வளைகோல்பந்து (12) கபாடி (13) கோ-கோ மற்றும் (14) கையுந்துபந்து. மேற்கண்ட விளையாட்டுகளில் மாணவ, மாணவியர், மாணவரல்லாதோர் பெருமளவில் கலந்துகொள்கின்றனர். இப்போட்டிகளில் கலந்துகொள்ள வயது வரம்பு ஏதுமில்லை. இப்போட்டிகள் மண்டல அளவில் மண்டலங்களுக்கிடையேயான அளவில் மற்றும் மாநில அளவில் நடத்தப்படுகின்றன.

**4.2 திறந்தவெளி விளையாட்டுப் போட்டி :**

கிராமப்புற மற்றும் நகர்ப்புற மாணவர்கள் மற்றும் மாணவரல்லாதோர் பங்குபெறும் வகையில் திறந்தவெளி விளையாட்டுப் போட்டிகள் ஒன்றிய அளவில் மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்காக கீழ்க்கண்ட விளையாட்டுகளில் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன:



2002 ஏப்ரல் 9 ]

(1) தடகளம்

(2) கபாடி

(3) கையுந்துபந்து

(4) பூப்பந்து

மேலும் அந்தந்த இடங்களில் பிரபலமாக உள்ள பிற விளையாட்டுகளிலும் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

**4.3 விளையாட்டுப் பள்ளி/விளையாட்டு விடுதிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் இதர போட்டிகளில் பங்கேற்றல் :**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டின்கீழ் மூனறு விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் நான்கு விளையாட்டு விடுதிகள் இயங்கி வருகின்றன. விளையாட்டுப் பள்ளி/விடுதிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து மற்றும் கையுந்துபந்து ஆகிய விளையாட்டுகளில் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டிகளிலிருந்து ஒவ்வொரு விளையாட்டிலும் சிறந்த விளையாட்டு வீரர்களைக் கொண்ட ஓர் அணி தேர்வு செய்யப்பட்டு மாநில விளையாட்டுச் சங்கங்களால் நடத்தப்படும் போட்டிகளில் கலந்து கொள்கிறது.

**4.4 இளமையில் தேர்ந்தெடுத்தல் போட்டிகள் :**

பள்ளியில் பயிலும் 14 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியரிடையே உள்ள விளையாட்டுத் திறனைக் கண்டறிய தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இளமையில் தேர்ந்தெடுத்தல் போட்டிகளை ஒவ்வோராண்டும் ரூ.7.00 இலட்சம் செலவில் பின்வரும் 6 விளையாட்டுகளில் நடத்துகிறது. 1) தடகளம் 2) கூடைப்பந்து 3) கால்பந்து 4) வளைகோல்பந்து 5) நீச்சல் மற்றும் 6) கையுந்துபந்து

**4.5 அண்ணா சைக்கிள் போட்டி :**

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை நினைவுகூறும வகையில் ஒவ்வோராண்டும் செப்டம்பர் 15 ஆம் தேதி அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் 16 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியருக்கு தனித்தனியாக மாவட்ட அளவிலான அண்ணா சைக்கிள் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாநில அளவிலான சைக்கிள் போட்டி ஒவ்வோராண்டும் சுற்றுமுறையில் ஒரு மாவட்டத்தில் நடத்தப்பட்டு வருகிறது.

**4.6 அகில இந்திய அரசுப் பணியாளர்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் :**

தமிழ்நாட்டைச் சார்ந்த அரசுப் பணியாளர்கள் அணி வெவ்வேறு மாநிலங்களில் சுற்று முறையில் நடத்தப்பட்டு வரும் தேசிய அளவிலான அரசுப் பணியாளர்கள் போட்டியில் பங்கேற்று வருகிறது.

**4.7 சென்னை மராத்தான் :**

புகழ்மிக்க இலண்டன் மராத்தான் மற்றும் பாஸ்டன் மராத்தான் போன்று "சென்னை மராத்தான்" என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க மராத்தான் ஓட்டம் 4-11-2001 அன்று சர்வதேச ரோட்டரி கழகமும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் சேர்ந்து முதன்முதலாக சென்னையில் நடத்தியது. 42 கிலோ மீட்டர் தூரம் ஆடவர்களுக்கும், 21 கிலோ மீட்டர் தூரம் மகளிருக்கும், இம்மராத்தான் ஓட்டம், உலக அமைதிக்காக நடத்தப்பட்டது. இப்போட்டியில் இந்தியா முழுவதிலிருந்தும் 1000 விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்டனர். இம்மராத்தான் ஓட்டம் தொலைக்காட்சிகளிலும், பிற முகமைகளிலும் நல்ல வரவேற்பைப் பெற்று மிக நன்முறையில் நடைபெற்றது. இம்மராத்தான் ஓட்டம் மாபெரும் வெற்றி பெற்றது. இம்மராத்தான் போட்டி சென்னையில் முதன்முதலாக நடத்தப்பட்டது.

**4.8 இளைஞர் ஒலிம்பியாட் :**

சென்னையிலும் அதனை சுற்றியுள்ள பள்ளிகளில் பயிலும் பள்ளி மாணவர்களுக்கான தடகள விளையாட்டுப் போட்டிகளை 2-11-2001 மற்றும் 3-11-2001-ல் ரோட்டரி கிளப் துணையுடன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நடத்தியது.

## இந்திய விளையாட்டு ஆணையத்தால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள்

**4.9 அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகள் :**

இந்திய விளையாட்டு ஆணையம் ஒவ்வோராண்டும் அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளை ஒன்பது விளையாட்டுகளில் 10 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியருக்காக நடத்தி வருகிறது. தமிழக அணி தேசிய அளவிலான போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்று வருகிறது. தேசிய போட்டிகளில் பங்கேற்புக்கு முன் மாநில அளவிலான தேர்வுப்



போட்டிகளும், தெரிந்தெடுக்கப்பட்டவருக்கு பயிற்சி முகாமும் நடத்தப்படுகின்றன.

**4.10 தேசிய மகளிர் விளையாட்டு விழா :**

இந்திய விளையாட்டு ஆணையம் மகளிருக்காக வயது வரம்பின்றி 13 விளையாட்டுகளில் தேசிய மகளிர் விழாவை நடத்தி வருகிறது. தமிழக அணி இவ்விழாவில் தொடர்ந்து பங்கேற்று வருகிறது. இப்போட்டிகளில் பங்குபெறுவதற்கான மாநில அணியைத் தெரிந்தெடுப்பதற்காக ஒன்றிய அளவில், மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் தெரிவுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு தேசியப் போட்டிகளில் பங்குபெறுவதற்கு முன் பயிற்சி முகாம் அளிக்கப்பட்டு வருகிறது.

**4.11 விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல் :**

சென்னையில் சர்வதேச தரத்திலான விளையாட்டு அரங்கங்கள் இருப்பதால், மாநில விளையாட்டுக் கழகங்களை தேசிய விளையாட்டுப் போட்டிகளையும், சர்வதேச விளையாட்டுப் போட்டிகளையும் மற்றும் இதர முக்கியமான விளையாட்டுப் போட்டிகளையும் நடத்த தமிழக அரசு ஊக்குவித்து வருகிறது. இவ்வாறான சர்வதேச விளையாட்டு அரங்கங்களில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதன் மூலம் தமிழ்நாட்டின் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த இயலும்.

[ 2002 ஏப்ரல் 9

## அத்தியாயம் - 5

### 5.1 உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள்

தமிழக அரசு தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு எண்ணற்ற உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகளை வழங்கி வருகின்றது.

### 5.2 விளையாட்டு உதவித் தொகைத் திட்டம்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இத்திட்டத்தின்கீழ், 14 விளையாட்டுப் போட்டிகளில் தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு (குறைந்தபட்சம் மாநில அளவில் பதக்கம் பெற்றவர்) உதவித் தொகையாக ஒருமுறை மட்டும் உயர்நிலை /மேல்நிலைப் பள்ளி மாணவராக இருந்தால் ரூ.5,000/-மும், கல்லூரி/பல்கலைக்கழக மாணவராக இருந்தால் ரூ.6,500/-மும் வழங்கி வருகிறது.

### 5.3 முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது

முதலமைச்சரின் மாநில விருதிற்காக தேர்ந்தெடுக்கப்படும் விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகளுக்குத் தலா ரூ. 1.00 இலட்சம் பணமுடிப்பும், விருதிற்கான பாராட்டுப் பத்திரமும் பரிசாக அரசு வழங்கி வருகின்றது. சர்வதேசபோட்டிகளில் வெற்றிபெற்று தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த 12 விளையாட்டு வீரர்களுக்கு முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

### 5.4 மாவட்ட விளையாட்டுக் குழு

விளையாட்டை மேம்படுத்தும் முகத்தான் விளையாட்டு மற்றும் இளைஞர் நடவடிக்கைகளை வழிநடத்த, மேம்படுத்த மற்றும் அறிவுறுத்தல்களை மேற்கொள்ள மாவட்டம் தோறும், மாவட்ட விளையாட்டுக் குழுக்களை அமைக்க அரசு, அரசாணை (1டி) எண் 45, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 21-12-2001-ல் ஆணைகளை வெளியிட்டுள்ளது:-

இக்குழுக்கள் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ளும்:-

- மாவட்டங்களில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த திட்டம் வகுத்தல்
- மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளை நடத்துதல்



2002 ஏப்ரல் 9 ]

- பயிற்சி முகாம்களை நடத்துவதில் உதவிபுரிதல்
- கிராம மக்களிடையே விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிக் கல்வியின் பயன் குறித்த செய்தியைப் பரப்ப ஏற்பாடு செய்தல்
- கிராமப்புறங்களில் திறமையான விளையாட்டு வீரர்களைக் கண்டறிதல்

### 5.5 உயரிய ஊக்கத் தொகை:

தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுப் போட்டிகள், மற்றும் காமன்வெல்த் போட்டிகளில் பதக்கங்கள் பெறும்பட்சத்தில் உயரிய ஊக்கத்தொகை வழங்க, 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் தெற்காசிய மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் (இந்திய ஒலிம்பிக் சங்கத்தால் நடத்தப்படுவது) பதக்கங்கள் பெறும்பட்சத்தில் அவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கவும் அரசு, அரசாணை நிலை எண் 5, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 24-1-2002-ல் கீழ்க்கண்டவாறு ஆணை வழங்கி உள்ளது:

(ரூபாய் இலட்சத்தில்)

| இனம் | விளையாட்டுகளின் வரிசைக் கிரமம் | உயரிய ஊக்கத் தொகையின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | ஒலிம்பிக் ஒற்றையர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 100.00 | 50.00 | 25.00 |
| 2. | ஆசிய விளையாட்டுப் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) ஒற்றையர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 20.00 | 15.00 | 10.00 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 3. | காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) ஒற்றையர் போட்டி/ குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும். | 20.00 | 15.00 | 10.00 |

| இனம் | போட்டிகள் | ஒற்றையர் போட்டி | | | குழுப் போட்டி | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4. | தெற்காசிய/ தேசிய விளையாட்டுப் போட்டிகள் | ரூ. 1.00 இலட்சம் | ரூ. 50,000 | ரூ. 25,000 | ரூ. 20,000 | ரூ. 15,000 ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | ரூ. 10,000 |

### 5.6 நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ஓய்வூதியம் வழங்குதல்

தற்போது நலிந்த நிலையிலுள்ள கடந்த காலங்களில் சிறந்து விளங்கிய விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் அவர்களுடைய மாத வருமானம் ரூ.500/-க்கு மிகாமலும், 58 வயதைக் கடந்தவராகவும் உள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ.500/- வீதம் அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுகிறது. தற்போது 24 நபர்கள் இத்தகைய ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். மேலும் இத்திட்டத்தின்படி இறந்தவர்களின் குடும்பத்திற்கும் ஓய்வூதியம் வழங்கப் பெறுகிறது. இதுவரை 4 நபர்கள் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

### 5.7. விளையாட்டு வீரர்கள் நலநிதி

தேசிய மற்றும் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்கும் விளையாட்டு வீரர்கள் காயமடைந்தாலோ/இறக்க நேரிட்டாலோ அவர்களுக்கு நிதியுதவி அளிக்கும்பொருட்டு விளையாட்டு வீரர்கள் நலநிதி ஒன்று தோற்றுவிக்கப்படும்.





### 5.8 அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு மானியம் வழங்குதல்

தமிழ்நாடு ஒலிம்பிக் கழகம் மற்றும் 40 மாநில விளையாட்டுக் கழகங்களை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அங்கீகரித்துள்ளது. அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு தேசிய மற்றும் தென்மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கும் மற்றும் அப்போட்டிகளில் தமிழக அணி கலந்துகொள்வதற்கும் மானியம் வழங்கப்படுகின்றது.

### 5.9 சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு மானியம்

தமிழ்நாட்டைச் சார்ந்த தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகள் சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்க மைய அரசின் பயணச் செலவின உதவியினைப் பெறாதபட்சத்தில், விமானப் பயணக் கட்டணத்திற்கான மானியம் அதிகபட்சமாக ரூ.25,000/- வரை வழங்குவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.

### 5.10. திறமையான விளையாட்டு வீரர்களுக்கென பணி ஒதுக்கீடு செய்து நியமனம் செய்தல்

தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு காவல் துறையில் உள்ள பணியிட ஒதுக்கீட்டைப் போன்று, வனத் துறை, சிறைத் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புத் துறைகளுக்கும், இப்பணியிட ஒதுக்கீடு நீட்டிப்பு செய்யப்படும்.

[ 2002 ஏப்ரல் 9

## அத்தியாயம் - 6

### இளைஞர் நலத் திட்டங்கள்

**6.1 இளைஞர் மன்றங்கள்**

இன்றைய இளைஞர்களிடையேயுள்ள சக்தியினையும், திறமையினையும் தனி மனித வளர்ச்சிக்கும், சமுதாய மேம்பாட்டிற்கும் பயனடையும் வகையில் வெளிக் கொணர வேண்டும். நமது இளைஞர்களிடையேயுள்ள சக்தியினை வெளிக்கொணரும் வகையில் இந்த அரசு இளைஞர் நலத் திட்டங்களை செயல்படுத்திட முடிவு எடுத்துள்ளது. இத்திட்டத்தின் நோக்கம் இளைஞர் குழுக்களை அமைப்பதாகும். ஆண், பெண் இளைஞர்களுக்கென தனித்தனியே இளைஞர் குழுக்கள் ஏற்படுத்தப்படும். இக்குழுக்கள் மாணவர்கள் மற்றும் மாணவரல்லாத இளைஞர்களை விளையாட்டு மற்றும் உடற்பயிற்சியில் ஈடுபடுத்தி அவர்களுடைய நேரம் மற்றும் சக்தியினை ஒருமுகப்படுத்தும் வகையில் செயலாற்றும். அவர்களுடைய ஓய்வு நேரத்தில் சமூக நலப் பணிகளிலும் மது அருந்துவதற்கு எதிராகவும், தீண்டாமை ஒழிப்பிற்கும், சமுதாய மேம்பாட்டிற்கும், வீர தீரச் செயல்களில் ஈடுபடுத்தப்படும், கரகம், கும்மி, கோலாட்டம், தெம்மாங்குப்பாடல்கள், கிராமியப் பாடல்கள், வில்லுப்பாட்டு, கிராமிய நடனங்கள் மற்றும் இதர பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும் இக்கலைகளை வளர்க்கவும் இளைஞர்கள் ஊக்கப்படுத்தப்படுவார்கள். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, கலை மற்றும் பண்பாட்டுத் துறையுடன் இணைந்து இளைஞர்களிடையே உள்ள பாரம்பரிய கலை நிகழ்ச்சித் திறமைகளை மேம்படுத்த செயல்படும்.

**6.2 இளைஞர் விடுதிகள்**

நமது நாட்டில் பாரம்பரியப் பண்பாட்டைப்பற்றித் தெரிந்துகொள்ள ஏதுவாக இளைஞர்களால் மேற்கொள்ளப்படும் பயணங்களை ஊக்குவிக்கும்பொருட்டு இளைஞர் விடுதிகள் கட்டப்படுகின்றன. இளைஞர்கள் மேற்கொள்ளும் கல்விச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, இன்பச் சுற்றுலா, சரித்திரப் புகழ்பெற்ற மற்றும் பாரம்பரிய கலாச்சார மையங்களுக்குச் செல்லும்போது அவர்களுக்கு குறைந்த செலவிலான தங்கும் வசதிகளை இளைஞர் விடுதிகள் அளிக்கும் நோக்கத்தோடு கட்டப்படுகின்றன.



2002 ஏப்ரல் 9 ]

இது மைய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்படுத்தும் திட்டமாகும். மாநில அரசு இளைஞர் விடுதி கட்டுவதற்கான நிலத்தை இலவசமாகத் தருகிறது. மைய அரசு கட்டுமானப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்கிறது.

தற்சமயம் தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, தஞ்சாவூர், மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் இளைஞர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. உதகமண்டலத்தில் இளைஞர் விடுதி கட்டுவதற்கு மைய அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இராமேஸ்வரம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் புதிதாக இளைஞர் விடுதிகளைக் கட்டுவதற்கு மைய அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

**6.3 இளைஞர் விழா**

இளைஞர் விழாக்கள் ஒவ்வோராண்டும் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் இளைஞர்களிடையே அர்த்தமுள்ள சுமுகமான நட்புறவையும், ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் நடத்தப்பட்டு வருகிறது. மைய அரசு இதே போன்று ஒவ்வோர் ஆண்டும் தேசிய அளவில் இளைஞர் விழாவினை ஜனவரித் திங்கள் 12-16 வரை நடத்தி வருகிறது. இவ்விழாக்களில் பல்வேறு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களைச் சார்ந்த அணிகள் 18 வெவ்வேறு போட்டிகளிலும், போட்டிகள் அல்லாத கலை நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கின்றன.

**6.4 வீரதீரச் செயல்களை ஊக்குவிக்கும் திட்டம்**

மைய அரசின் 50 விழுக்காடு மானிய உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இளைஞர்களைப் பேணுவது, சவால்களை எதிர்கொள்ளும் திறன், பரந்த மனப்பான்மை, ஒருங்கிணைந்த கூட்டு முயற்சி மற்றும் கடினமான சூழ்நிலைகளை எதிர்கொண்டு விரைந்து முடிவெடுக்கும் திறனை வளர்ப்பதை குறிக்கோளாகக் கொண்டு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. பின்வரும் வீரதீரச் செயல்களுக்காக மாநில அரசுகள், கல்வி நிறுவனங்கள், அரசு சார்பற்ற நிறுவனங்கள், தனிநபர் குழுக்களால் உதவி வழங்கப்படுகிறது.

நீண்ட தூரப் பயணம், நீண்ட நடைப்பயணம், முகாம் அமைத்தல், மலைக்குன்று ஏற்றம், மலையேற்றம், சைக்கிள் பயணம், பனி சறுக்குதல்,

படகு சவாரி, நீர் சறுக்குதல், தொலைதூர நீச்சல், காற்றில் மிதத்தல், குதித்தல், பாய்மரச் சவாரி, துடுப்புப் போட்டி, பாராசூட்டிங் மற்றும் பல.

### 6.5 இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டம்

15-35 வயதுள்ள கிராமப்புற இளைஞர்களுக்காக மைய அரசால் உருவாக்கப்பட்ட திட்டமாகும். அந்தந்த இடத்திலுள்ள தேவைகளைக் கருத்திற்கொண்டு தக்க பயிற்சி அளிப்பதன் மூலம் இளைஞர்களிடம் மறைந்து கிடைக்கும் திறமைகளை வெளிக்கொணரவும், சுய வேலைவாய்ப்பு மற்றும் போதிய வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்கிடுவதையும் இத்திட்டம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, பால்வளம், கோழி வளர்ப்பு, தையற்கலை, வானொலிப் பெட்டி மற்றும் தொலைக்காட்சி பழுதுபார்ப்பு, கணினிப் பயிற்சி போன்றவை இப்பயிற்சித் திட்டத்தில் அடங்கியுள்ளன. இத்திட்டம் மாநில அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சி முகாமின் கால அளவு ஒரு மாதம் முதல் ஆறு மாதங்கள் வரை கொண்டதாகும்.

இத்திட்டத்தின்கீழ் பயிற்சி பெறும் பங்கேற்பாளர்களுக்கு மைய அரசு, அவர்களின் இருப்பிடத்திலிருந்து பயிற்சி நடைபெறும் இடத்திற்கு சென்றுவர இரண்டாம் வகுப்பு இரயில் கட்டணம் அல்லது குறுகிய தூரப் பேருந்துக் கட்டணம் மற்றும் உணவு, தங்குமிடம் மற்றும் இதர செலவினங்களுக்காக அதிகபட்சமாக ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூ.50 வீதம் வழங்கி வருகிறது.

### 6.6 தேசிய ஒருமைப்பாட்டினை ஊக்குவித்தல்

இத்திட்டத்தின்கீழ், தேசிய ஒருமைப்பாட்டைப் பேணவும் மற்றும் மத நல்லிணக்கத்தை மேம்படுத்தவும் நடத்தப்படும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்காக மைய அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. இதில் அடங்கியுள்ள இரண்டு முக்கிய பயிற்சித் திட்டங்கள்:--

(அ) தேசிய ஒருமைப்பாட்டு முகாம்

(ஆ) மாநிலங்களுக்கிடையே இளைஞர்கள் பரிவர்த்தனை

தேசிய ஒருமைப்பாட்டு முகாம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் 7-10 நாட்கள் நடத்தப்படுகின்றன. இதில் 50 முதல் 200 இளைஞர்கள் வரை பங்கேற்கலாம். இந்த முகாம்களில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த இளைஞர்கள் ஒன்றாகத் தங்கியும், உணவருந்தியும்



ஒருவரையொருவர் புரிந்துகொண்டும், கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்றும் மற்றும் தொழில் முகாமில் பங்கேற்றும் வருகின்றனர்.

மாநிலங்களுக்கிடையே இளைஞர்கள் பரிவர்த்தனையின்கீழ், ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மாநிலங்களைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் மாணவரல்லாத இளைஞர்கள் மற்ற மாநிலங்களுக்குச் சென்று அங்குள்ள மாறுபட்ட கலாச்சாரத்தைத் தெரிந்துகொள்ள ஏதுவாகிறது.

15-35 வயதிற்குட்பட்டவர்கள் அனைவரும் இத்திட்டத்தில் பங்கேற்கலாம். குறிப்பாக, (1) ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் (2) இளைஞர் மன்றங்கள் அல்லது தன்னார்வ நிறுவனங்களில் உறுப்பினர்களாக உள்ள மாணவரல்லாத இளைஞர்கள் (3) விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் (4) தொழிலாளர் அமைப்பைச் சார்ந்தவர்கள் போன்றோர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இத்திட்டத்திற்கான நிதியுதவி பின்வருமாறு:—

அ) உணவு மற்றும் தங்குமிடம் - மாநகரங்கள் அல்லது மாநிலத் தலைநகரங்களாயின் ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூ.40, மற்ற இடங்களுக்கு ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூ.35/-

ஆ) பயணக் கட்டணம்-இரண்டாம் வகுப்பு இரயில கட்டணத்தில் 90 விழுக்காடு அல்லது பேருந்துக் கட்டணம்.

இ) அச்சிடுதல் மற்றும் வெளியிடுதல்-இளைஞர்கள் பரிவர்த்தனை நிகழ்ச்சி பற்றிய அறிக்கைகளை அச்சிட்டு வெளியிடுவதற்கான விலை நிகழ்வு ஒன்றுக்கு ரூ.1,000/-க்கு மிகாமல் வழங்கப்படுகிறது.

### 6.7 இளைஞர்களுக்கான கண்காட்சித் திட்டம்

இத்திட்டத்தின் குறிக்கோள், தேசிய வளர்ச்சியில் இளைஞர்களின் ஈடுபாட்டினை மதித்து வளர்த்தல், மதச் சார்பற்ற தன்மையை ஊக்குவித்தல், தேசிய ஒருமைப்பாடு, வேற்றுமையில் ஒற்றுமை, இந்தியக் குடிமகன் என்பதில் பெருமைப்படுதல், சமூகத் தீமைகளை ஒழித்தல் போன்றவையாகும். இத்திட்டம் மாநில அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாட்டுப்புற நடனம், நாட்டுப்புறப் பாடல்கள், வண்ணம் தீட்டுதல், கலை மற்றும் கைத்தொழில், புத்தகங்கள் மற்றும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மற்றும் இளைஞர்கள் சார்ந்த திட்டங்கள் ஆகியவை மைய அரசின் நிதியுதவியுடன் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்திற்கான நிதியுதவி பின்வருமாறு:—

அ) நாட்டுப்புற நடனம், நாட்டுப்புறக் கலைகள் மற்றும் பாடல்கள், வண்ணம் பூசுதல், கலை மற்றும் கைத்தொழில் மற்றும் தேசிய அளவிலான இளைஞர்கள் மாநாடு/கலந்துரையாடல்/கருத்தரங்கம்/இளைஞர் முகாம்கள் நடத்துதல் ஆகியவற்றிற்கு:—

1) உணவுக் கட்டணம் ரூ.20 நபர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு.

2) பயணக் கட்டணம்-பங்கேற்பாளர் தங்குமிடத்திலிருந்து முகாம் நடக்கும் இடத்திற்கு வர குறுகிய வழி பயணக் கட்டணம்.

3) அனுமதிக்கப்பட்ட செலவினத் தொகையிலிருந்து 25 விழுக்காடு எதிர்பாராச் செலவினங்களுக்காக அனுமதிக்கப்படுகிறது.

ஆ) ஏனைய தேசிய கருத்துத் திட்டங்களுக்கு 90 விழுக்காடு ஒதுக்கீடு.

**6.8. மலைவாழ் பகுதியில் இளைஞர் நலத்தினை ஊக்குவிக்கும் சிறப்புத் திட்டம்**

மலைவாழ் இளைஞர்களுக்கிடையே தலைமையேற்கும் தன்மையை வளர்க்கும் பயிற்சித் திட்டங்கள், சுய வேலைவாய்ப்புத் திறனை வளர்க்க உதவும் தொழில் பயிற்சிகள், கண்காட்சிகள் இத்திட்டத்தின்கீழ் நடத்தப்படுகின்றன. இத்திட்டம் மாநில அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. ஏனைய இளைஞர் நலத் திட்டங்களுக்கு வழங்கப்படுகின்ற நிதியுதவியைப் போன்று இத்திட்டத்திற்கும் வழங்கப்படுகிறது.



## அத்தியாயம்-7

### புதிய திட்டங்கள்

**7.1. விளையாட்டில் தனியார் பிரிவுகள் பங்கேற்பு/கூட்டாண்மை**

விளையாட்டு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்துவதற்கு மட்டுமே கடந்த காலத்தில் தனியார் ஆதரவு கிடைக்கப் பெற்று வந்தது. இது ஒரு தற்காலிகமான ஏற்பாடாகவே அமைகிறது. விளையாட்டில் நிகழ்ச்சிகளை ஏற்று நடத்தும் வழக்கமான பணியுடன், விளையாட்டில் திறமையைக் கண்டறிதல், விளையாட்டை மேம்படுத்துதல் மற்றும் விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு தனியார் கூட்டாண்மையை ஊக்குவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சாதனைப் பட்டியலில் தமிழ்நாட்டினை முதன்மையான இடத்திற்குக் கொண்டு செல்ல அனைத்து வழிவகைகளும் பயன்படுத்தப்படும். தனியார் கூட்டாண்மை மூலமாக உலகத் தரம் வாய்ந்த செயற்கை விளையாட்டுத் தளங்கள் ஏற்படுத்தப்படும்.

**7.2 .அயல்நாட்டிலுள்ள, விளையாட்டில் மேம்பாடடைந்த விளையாட்டு நிறுவனங்களின் வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ளுதல்**

தமிழ்நாட்டில் விளையாட்டை மேம்படுத்தும் முகத்தான் வெளிநாடுகளிலுள்ள மேம்பாடடைந்த விளையாட்டு நிறுவனங்களில் உள்ள பயிற்சி வசதிகளை தெரிந்துகொள்ளவும் ஒப்பந்தம் ஏற்கத் தகுந்த வழிவகைகள் செய்யப்படும். இதற்காக இரு சாராரும் பயனடையும் வகையில் வெளிநாடுகளில் மேம்பாடடைந்த விளையாட்டு நிறுவனங்கள் கடைப்பிடிக்கும் பயிற்சி யுக்திகள், கட்டமைப்பு வசதிகள், பயிற்றுவிக்கும் நிறுவனங்கள், விளையாட்டு நிருவாகம், தனிநபர் பரிமாற்ற ஏற்பாடுகள் ஆகியவை குறித்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

**7.3. மரபுசாரா விளையாட்டிற்கான விளையாட்டு வசதிகள்**

சென்னையின் நகர்ப்புற எல்லையில் பொது-தனியார் கூட்டாண்மை மூலமாக விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இது சென்னை மாநகரத்தில் இல்லாத உள்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டிருக்கும் (உம்) வெலோட்ராம் போன்றவை. இதற்குண்டான நிலத்தினைத் தவிர, ஆரம்ப தோராய மாநில அரசின் முதலீடு ரூ.25 இலட்சங்களாக இருக்கும்.

[ 2002 ஏப்ரல் 9

**7.4. சதுரங்கக் கூடம் மற்றும் கத்திச் சண்டைக் கூடம்**

கணினி வசதியுடன் அனைத்து வகை நவீன வசதிகளையும் உள்ளடக்கிய சதுரங்கக் கூடம் ஒன்றும், கத்திச் சண்டைக் கூடம் ஒன்றும் நிறுவப்படும்.

**7.5. கட்டாய உடல்நலத் தகுதி மற்றும் விளையாட்டுத் திறமை அறிக்கை அட்டை**

மாநிலத்தின் அனைத்துப் பள்ளிகளிலும் உள்ள 6வது, 7வது மற்றும் 8வது வகுப்புகளுக்கு கட்டாய அறிக்கை அட்டை ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இவ்வறிக்கை அட்டையில் ஒவ்வொரு பள்ளியிலும் அந்த ஆண்டில் நடைபெறக் கூடிய அனைத்துப் போட்டிகளின் விவரங்களும் இடம் பெற்றிருக்கும். இவ்வறிக்கை சம்பந்தப்பட்ட மாணவரின் பெற்றோருக்கு அனுப்பி வைக்கப்பட்டு குழந்தையின் உடல்நலம் மற்றும் அவர்களிடம் விளையாட்டில் உள்ள திறமையினை எடுத்துக்காட்டுவதாக அமையும். இந்த அறிக்கை அட்டைக்கான படிவத்தினை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் வழங்கி மாநிலத்திலுள்ள ஒவ்வொரு பள்ளியில் உள்ள மாணவர்களின் தனித்தன்மை வாய்ந்த விளையாட்டுத் திறனை ஆய்வு செய்யும். இத்திட்டத்திற்கான செலவு மதிப்பீடானது 3 ஆண்டுகளுக்கு ரூ.3 இலட்சங்கள் ஆகும்.

**7.6. வரிசைப்படுத்தும் முறை**

மாநிலங்களில் உள்ள பள்ளிகளை வரிசைப்படுத்துதல். இது பள்ளிகளில் உள்ள விளையாட்டு வசதிகளைக் கண்டறிய உதவும். எல்லா விளையாட்டு வசதிகளையும் கொண்ட பள்ளிக்கூடம் 'A' வரிசையில் இடம்பெறும். எந்தவிதமான விளையாட்டு வசதிகளையும் கொண்டிராத பள்ளிகள் 'F' வரிசையில் இடம்பெறும். ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள விளையாட்டு வசதிகளுக்கேற்ப அவை 'B' யிலிருந்து 'E' வரை உள்ள வரிசையில் இடம்பெறும். ஒவ்வொரு பள்ளியின் முகப்பில் உள்ள பெயர்ப் பலகையில் அப்பள்ளி எந்த வரிசையில் இடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடப்படும்.

**7.7. தனியார் பங்கேற்புடன் பூப்பந்து அகடமி மற்றும் நீச்சல் அகடமி ஏற்படுத்தப்படும்**

**7.8.** விளையாட்டு வீரர்களின் தரத்தை நிர்ணயிக்கும்பொருட்டு மாநில அளவிலான நீச்சல் மற்றும் தடகளப் போட்டிகள் நடத்தப்படும். இப்போட்டிகள் மாநிலத் தரம் அறியும் போட்டிகள் என அழைக்கப்படும். இது ஒவ்வொரு மாதமும் நடைபெறும்.



2002 ஏப்ரல் 9 ]

**7.9. விளையாட்டு வரைபடம்**

கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிட்டுக் காட்டும் வகையில் மாநில வரைபடம் தயாரிக்கப்படும்:—

அ) குறிப்பிட்ட மாவட்டங்களிலுள்ள பிரபலமான விளையாட்டுகள்

ஆ) அதிக எண்ணிக்கையில் விளையாட்டு வீரர்கள் உள்ள விளையாட்டு மற்றும் மேம்படுத்த வேண்டிய திறமைகள்.

(இதனால் ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் ஒரு குறிப்பிட்ட விளையாட்டின்மீது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தனிக் கவனம் செலுத்த இயலும்)

**7.10. உடல் நலத் தகுதி மையங்கள்**

உடல்நலத் தகுதிக்குண்டான வாழ்க்கை முறையை மேம்படுத்த, தமிழ்நாட்டிலுள்ள விளையாட்டரங்கங்களில் உடல்நலத் தகுதி மையங்கள் படிப்படியாக நிறுவப்படும். 2002-2003 ஆம் ஆண்டில் 10 விளையாட்டரங்கங்களில் இந்த உடல்நலத் தகுதி மையங்கள் ஏற்படுத்தப்படும்.

**7.11 சேம்பியன் மேம்பாட்டுத் திட்டம்**

1991-96 ஆம் ஆண்டில் செயல்பாட்டில் இருந்த, தனித்தன்மையுடைய, திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் சர்வதேச விளையாட்டில் பதக்கங்கள் பெறும் வகையில் திறமை பெற்றவர்களை அதிக அளவில் மேம்பாடடையச் செய்யும் திட்டம் மீண்டும் புதுப்பிக்கப்படும். இவ்விளையாட்டு வீரர்களுக்கு தகுந்த முறையில் நிதி ஆதாரத்துடனோ அல்லது நிதி ஆதாரமில்லாமலோ ஆலோசனை மற்றும் உதவிகள் வழங்கி ஒலிம்பிக் நிலைக்குக் கொண்டுசெல்ல வழிவகுக்கப்படும்.

# அத்தியாயம்-8

## தேசிய மாணவர் படை

**தொடக்கம்:**

தேசிய மாணவர் படை இயக்ககம் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட தேசிய மாணவர் படைச் சட்டத்தின் (எண் XXXI 1948) கீழ் 16-7-1948 அன்று தோற்றுவிக்கப்பட்டது.

**குறிக்கோள்:**

(அ) இளைஞர்களிடையே நற்பண்பு, துணிவு, நட்புடைமை, ஒழுங்குமுறை, தலைமை, சமய சார்பற்ற நோக்கம், துணிவுச் செயல், போட்டி, நேர்மைப் பண்பு மற்றும் சுய நலமில்லாத தொண்டுகளின் உயர் குறிக்கோள்களை வளர்த்து அவர்களை ஒரு நல்ல குடிமகனாக்குதல்.

(ஆ) ஒழுங்குமுறையில் பயிற்சி பெற்று சிறந்த செயல் நோக்குடைய இளைஞர்களின் மனித வளத்தைக் கொண்டு அவர்களின் வாழ்வின் எல்லா நடைமுறைகள் மற்றும் ஆயுதப்படைகளிலும் தலைமைப் பொறுப்பு வகிக்க வகை செய்து அவர்களை நாட்டுப் பணிக்காக எப்பொழுதும் கிடைக்கச் செய்தல்.

(இ) இளைஞர்கள் ஆயுதப்படையில் ஒரு நல்ல நிலையை அடைவதற்கு பொருத்தமான சுற்றுச்சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்.

**நிருவாகம்:**

தேசிய மாணவர் படை இயக்ககம் பாதுகாப்பு அமைச்சகத்தால் நிருவாகம் செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள தேசிய மாணவர் படை இயக்ககத்தின் நிருவாகத்தினை திறம்பட நிறைவேற்றுவதற்கு துணை தலைமை இயக்குநர் தேசிய மாணவர் படை அவர்களுக்குத் துறைத் தலைமை அலுவலகத்திற்கான அனைத்து அதிகாரங்களையும் மாநில அரசு அளித்துள்ளது.

**விருதுகள்:**

மொத்தமுள்ள 16 தேசிய மாணவர் படை இயக்ககங்களினுள் தமிழ்நாடு தேசிய மாணவர் படை இயக்ககம் 11 முறை முதலிடத்தை வகித்து பெருமைமிக்க அனைத்திந்திய இயக்கக விருதை பிரதம மந்திரியின்



பெயரில் வென்றுள்ளது. மேலும் 5 முறை இரண்டாம் இடத்தையும் வகித்துள்ளது. புதுடெல்லியில் 2002 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற குடியரசு தினப்போட்டிகளில் தமிழ்நாடு தேசிய மாணவர் படை இயக்ககம் மூன்றாம் இடத்தை பெற்றுள்ளது. 2001-2002-ஆம் ஆண்டில் சிறந்த முறையில் பணியாற்றியமைக்கு தமிழ்நாடு தேசிய மாணவர் படை அணி பாராட்டுகள் பலவற்றினைப் பெற்றுள்ளது. மொத்தமுள்ள 18 இனங்களில் நமது மாநிலத்தைச் சார்ந்த மாணவர் மற்றும் மாணவிகள் ஏழு முதல் இடங்களையும் மூன்று இரண்டாம் இடங்களையும் பெற்றுள்ளனர்.

**ஊக்கங்கள்:**

தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் ஊக்கங்களை தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு அளித்துள்ளது:

அ) 80 முதுநிலை கோட்ட/பிரிவு தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு படிப்புதவித் தொகையாக வருடம் ஒன்றுக்கு ரூ.1,200-ம் 90 இளநிலை கோட்ட/பிரிவு தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு படிப்புதவித் தொகையாக வருடம் ஒன்றுக்கு ரூ.600/-ம் வழங்கப்பட்டுள்ளது. (மொத்தத் தொகை ரூ.1,50,000/- வருடத்திற்கு)

ஆ) சிறந்து விளங்கும் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு இத்திட்டம் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் இளநிலை பட்ட வகுப்பில் ஓர் இடமும் முதுநிலை பட்ட வகுப்பில் ஓர் இடமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இ) குடியரசு தின முகாம் மற்றும் மாநில அளவிலான முகாம்களில் பங்குபெறும் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு வருடத்திற்கு ரூ.3.17 இலட்சங்கள் வரை ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

ஈ) தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் பத்து இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

உ) 2001-2002 கல்வியாண்டு முதல் தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு இரண்டு இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

ஊ) தமிழ்நாட்டில், இளநிலை பட்டதாரி பயிற்சி மற்றும் முதுநிலை பட்டதாரி பயிற்சி ஆசிரியர் தேர்வுகளிலும், நியமனத்திலும் நடைபெறும் வாய்மொழித் தேர்வினில் வழங்கப்படும் 12 மதிப்பெண்களில் தேசிய மாணவர் படை செயல்பாடுகளுக்காக 1/2 மதிப்பெண் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**முதலமைச்சர் அணி வகுப்பு**

சென்னையில் 4-2-2002 அன்று "முதலமைச்சர் அணி வகுப்பு" நடத்தப்பட்டது. முதலமைச்சர் பதாகை கோவை தேசிய மாணவர் படை தலைமையகத்திற்கு அளிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிகழ்ச்சியில் தலைமை வகித்து தேசிய மாணவர் படையினரை சிறப்பித்தார்கள்.

**தமிழக அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட முக்கியத்துவமான நேர்வுகள்**

தேசிய மாணவர் படையினர் பயிற்சிக்காக 6 கணினிகள் மற்றும் அதற்கான துணை சாதனங்கள், விமான தொலைக் கட்டுப்பாட்டு சாதனம் ஒன்றும் (Simulator), 5 தடை தாண்டும் பயிற்சித் தளம் நிறுவுவதற்கும், மற்றும் 2001-2002 ஆம் ஆண்டில் 2,500 கூடுதல் மாணவர்களை சேர்ப்பதற்கான செலவினத்திற்காகவும் அரசு ரூ.19 இலட்சம் ஒப்பளித்தது.

தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படையினரின் முக்கியத்துவம் கருதி, இக்கல்வியாண்டு முதல் தேசிய மாணவர் படை மாணவர் எண்ணிக்கையை 5,000 ஆக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. இவற்றில் அரசுக் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் 2,500 தேசிய மாணவர் படையினரையும் மற்றும் மீதமுள்ள 2,500 தேசிய மாணவர் படை பயிற்சி மாணவர்களை தனியார் மற்றும் சுயநிதிக் கல்வி நிறுவனங்களிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்திலுள்ள 93,344 தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சிற்றுண்டிப்படி வீதம் நெடுங்காலமாக மாற்றப்படாமலிருந்ததை மாற்றியமைத்து ஒரு மாணவருக்கு ஒரு மணி நேர அணிவகுப்பிற்கு ரூ.1-லிருந்து ரூ.2 ஆக உயர்த்தி அரசு 26-11-2001 நாளிட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசாணை (நிலை) எண் 39-ல் ஆணையிட்டுள்ளது. இதற்காக அரசிற்கு கூடுதல் செலவினம் ஆண்டு ஒன்றிற்கு ரூ.70,28,000/- ஆகும்.



தேசிய மாணவர் படை மாணவர்களின் பயிற்சி மற்றும் சாகச நிகழ்ச்சிகளின்போது எதிர்பாராமல் ஏற்படும் மரணம் அல்லது ஊனம் ஆகிய நிகழ்வுகளுக்காக ஏற்படும் செலவினத்தை ஏற்கவும் தகுதியுள்ள தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கவும் ரூ.5 இலட்சத்தை அரசின் பங்கு தல நிதியாக வழங்க அரசு முடிவெடுத்துள்ளது.

**முகாமிடம்**

ஒரு நிலையான முகாமிடம் தேசிய மாணவர் படைத் துறையின் நெடுங்காலத் தேவையாகும். இவற்றிற்காக சென்னைக்கருகில் சுமார் 5 ஏக்கர் அளவில் ஒரு நிலையான முகாமிடம் ஒதுக்கீடு செய்வதற்கான வேண்டுகோளை அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

## அத்தியாயம்-9

### நாட்டு நலப்பணித் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும், பல்தொழில்நுட்பப் பயிலகங்களிலும் நாட்டு நலப்பணித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான மானியம் 7:5 என்ற விகிதத்தில் மத்திய அரசாலும், மாநில அரசாலும் பகிர்ந்துகொள்ளப்பட்டு வருகிறது. பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தொழில்நுட்பப் பயிலகங்கள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 2000-2001 ஆம் ஆண்டில் 1,70,000 ஆக இருந்த மாணவத் தொண்டர்களின் எண்ணிக்கை 2001-2002 ஆம் கல்வியாண்டு முதல் 1,87,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அவர்களுள் சிறப்பு முகாம்களில் பங்குபெறும் மாணவத் தொண்டர்களின் எண்ணிக்கை 2001-2002 கல்வி ஆண்டு முதல் 85,000-லிருந்து 93,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

தற்பொழுது பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் 1245 அலகுகளும், மேல்நிலைப் பள்ளிகளில் 1250 அலகுகளும் செயல்பட்டு வருகின்றன. நாட்டு நலப்பணித் திட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் அதில் முனைப்புடன் செயல்படும் மாணவர்களுக்கு 'A' மற்றும் 'B' சான்றிதழ்கள் வழங்க அரசு முடிவெடுத்து அவர்கள் 2002-2003 கல்வியாண்டு முதல்

[ 2002 ஏப்ரல் 9

உயர்கல்வி வகுப்புகளில் சேருவதற்கு ஏதுவாக அரசாணை (நிலை) எண் 8, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை நாள் 21-2-2002-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

நாட்டு நலப்பணித் திட்டத்தின்கீழ் சிறப்பாகச் செயலாற்றியமைக்காக `A' சான்றிதழ் பெறும் மாணவர்களில் முதலாண்டு பொறியியல் பட்டப்படிப்பு சேருபவர்களுக்கு 2002-2003 கல்வியாண்டு முதல் 3 இடங்களை ஒதுக்கீடு செய்து அரசாணை எண் 328, உயர் கல்வித் துறை, நாள் 6-12-2001-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2001-2002 ஆம் ஆண்டிற்கு நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுக்கு தகுதிபெறும் மானியத் தொகை ரூ.579.70 இலட்சமாகும். அவற்றுள் மைய அரசின் பங்கு ரூ.338.16 இலட்சமாகும். மாநில அரசின் பங்கு ரூ.24154 லட்சமாகும்.

## அத்தியாயம்-10

### சாரண சாரணியர் இயக்கம்

சர்வதேச இயக்கமான சாரண சாரணியர் இயக்கத்தின் முக்கியக் குறிக்கோள் பள்ளி மாணவ மாணவியரிடையே நல்லொழுக்கத்தை வளர்த்தல், நாட்டுப்பற்று உணர்வு, இரக்க மனப்பான்மை, சமூகப் பணி ஆகியவற்றைப் புகட்டுவதாகும் "எப்போதும் தயாராக இரு" என்பது அதன் கோட்பாடாகும். இந்த இயக்கம் தமிழ்நாட்டில் 5,000 பள்ளிகளில் இயங்கி வருவதுடன், இந்த இயக்கத்தில் 90,314 மாணவர்களும், 45,507 மாணவியர்களும், உறுப்பினர்களாக உள்ளனர். 2001-2002 ஆம் ஆண்டு முதல் 5,022 சிறந்த சாரண சாரணியருக்கு "இராஜ்ய புரஸ்கார்" விருது வழங்கப்பட்டது. அரசு இதற்காக ரூ.5 இலட்சம் செலவு மேற்கொண்டுள்ளது. இது தவிர பராமரிப்பு மானியமாக ஆண்டொன்றிற்கு ரூ.10 இலட்சம் வழங்கப்படுகிறது.

### நிறைவுரை

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் நற்பணிகள் நாளுக்கு நாள் விரிவடைந்து வருகின்றன. இந்திய விளையாட்டு வரைபடத்தினில் தமிழ்நாடு பிறர் அடைய முடியாத ஓர் உயர் நிலையினை அடைய இத்துறை பல திட்டங்களைச் செயல்முறைப்படுத்தி தொடர்ந்து பணியாற்றி வரும்.



2002 ஏப்ரல் 9 ]

## இணைப்பு IV

**(@ 278 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)**

**கோரிக்கை எண் 44 — தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை**

**தமிழ் வளர்ச்சி—பண்பாடு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2002 - 2003**

"தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்"

—பாவேந்தர் பாரதிதாசன்

பாவேந்தர் கனவு கண்ட புதியதோர் உலகத்தைப் படைத்துக் கொண்டிருக்கும் இந்த அரசுக்கு நாடும் மொழியும் இரு கண்கள் போன்றவை. நாட்டு வளர்ச்சியில் மொழி வளர்ச்சியும், மொழி வளர்ச்சியில் நாட்டு வளர்ச்சியும் அடங்கியுள்ளன. மொழி, மனித சமுதாயத்தின் அடையாளம்; பண்பாட்டுப் புதையல்; கருத்துக் கருவூலம்; வரலாற்றுப் பெட்டகம்; வாழ்க்கைக்கு வழிகாட்டி. எனவே வாழ்க்கை வளம்பெற வேண்டுமாயின், மொழி வளம்பெற்றாக வேண்டும். வளம் என்பது பழமைச் சிறப்பை-இருப்பதைப் போற்றுவது மட்டுமன்று; புதுமைப்பொலிவை-இல்லாததை ஏற்படுத்துவதும் ஆகும்.

காலத்திற்கேற்ப மனித சமுதாயம் மாறிக்கொண்டேயிருக்கிறது. இது வேண்டுவதும்கூட மாற்றம் வளர்ச்சிக்கு அறிகுறி. மாற்றத்திற்கேற்பத் தேவைகள் அமைகின்றன. எனவே மனித சமுதாயத்தின் மாற்றத்திற்கும் தேவைக்கும் ஈடுகொடுக்கும் வகையிலும், மனித சமுதாயத்தின் அன்றாட நடவடிக்கைகள் அனைத்திலும் நீக்கமற நிறைந்திருக்கும் வகையிலும் மொழியை வளர்த்தாக வேண்டும். வளமை, பழமை, பொதுமை, செம்மை, நடுவு நிலைமை, நிலை பேறு, அனைவராலும் ஏற்கப்படும் தன்மை முதலிய செவ்வியல் மொழிக்குரிய தகுதிப்பாடுகளைக் கொண்டிருக்கிற நம் உயிரினும் மேலான தமிழ் மொழி இத்தகு சீரிய நிலையை அடைய வேண்டியது இன்றியமையாதது. அறிஞர்களின் வழிகாட்டலுக்கும், மக்களின் எதிர்பார்ப்பிற்கும் ஏற்ப தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை 1984 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டு நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில்

[ 2002 ஏப்ரல் 9

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கீழ்க்காணும் முழக்கத்தை வெளியிட்டார்கள்:—

"புதிய மாற்றங்களை ஒரு மொழியினால் ஏற்க முடியாமல் போனால் அதனால் ஏற்படுகின்ற தாக்கங்கள் அந்த மொழியின் வலிமையைக் குறைத்துவிடும். வளமார்ந்த மொழியாக, வழக்கில் என்றென்றும் இருக்கும் மொழியாக மாற வேண்டுமென்றால் நிலைத்த பழமையும், வளரும் புதுமையும் இரண்டறக் கலந்து இரண்டின் தன்மைகளையும் உள்ளடக்கியதாக அந்த மொழி வளர்ந்து வர வேண்டும்."

"1981 ஆம் ஆண்டு ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் இறுதியில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 'எங்கும் தமிழ் "எதிலும் தமிழ்' என்று முழங்கினார்கள். சீரிய முறையில் நடைபெற்ற இந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் விளைவாகத் தமிழ் வளர்ச்சிக்கு ஒரு புதிய பரிமாணத்தையும், உத்வேகத்தையும் ஏற்படுத்தியுள்ளதை நிரந்தரமாக்கிடவும், 'அறிவியலிலும் தமிழ் அனைத்திலும் தமிழ்' என்பதை உணர்த்திடவும் 'இன்றும் தமிழ் என்றும் தமிழ்' என்ற புதிய முழக்கத்தை இந்த மாநாட்டின் எழுச்சி முழக்கமாக அறிவிப்பதில் நான் பெருமிதமும் பேருவகையும் அடைகிறேன்."

மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய சிந்தனையைச் செயற்படுத்தும் வகையில் தமிழ்மொழி-பண்பாட்டு வளர்ச்சியில், தமிழ் மக்களின் வளர்ச்சி உள்ளது எனும் கோட்பாட்டுடன் அறிவியல் தமிழ் வளர்ச்சியிலும் தனி அக்கறை கொண்டு தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை தன் பயணத்தைத் தொடர்கிறது. இத்துறையின்கீழ் இயங்கும் அலுவலகங்கள், நிறுவனங்கள், அமைப்புகள் முதலியன தமிழ்மொழி-பண்பாட்டின் பன்னோக்கு வளர்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டு தமிழ் நலம் பேணல், தொன்மரபு காத்தல், வளர்கலையை ஊக்குவித்தல் என முத்திறப்பட்டுச் செயலாற்றுகின்றன.

**தமிழ் நலம் பேணுவன**

1. தமிழ் வளர்ச்சி இயக்ககம்
2. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
3. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
4. மொழி பெயர்ப்புப் பிரிவு
5. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்



2002 ஏப்ரல் 9 ]

**தொன் மரபு காப்பன**

6. தொல்லியல் மற்றும் அருங்காட்சியகத் துறை
7. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம்

**வளர்கலை ஊக்குவன**

8. கலை-பண்பாட்டு இயக்ககம்
9. மண்டலப் பண்பாட்டு மையங்கள்
10. அரசு இசைக் கல்லூரிகள், இசைப் பள்ளிகள்
11. அரசு கவின் கலைக் கல்லூரிகள்
12. அரசு கட்டட-சிற்பக் கலைக் கல்லூரி
13. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு
14. தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம்
15. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

**2002 - 2003 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட மதிப்பீடு**

| | கணக்குத் தலைப்பு (1) | திட்டப் பணிகள் (2) | திட்டத்தில் சேராதது (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 2202 | பொதுக் கல்வி | | | |
| 03 | பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும் | | | |
| 102 | பல்கலைக்கழகங்களுக்கு நிதியுதவி | - | 478.91 | 478.91 |
| 05 | மொழி வளர்ச்சி | | | |
| 001 | நெறிப்படுத்தலும், நிருவாகமும் | - | 249.01 | 249.01 |
| 102 | இக்கால இந்திய மொழிகள் மேம்பாடும் இலக்கிய மேம்பாடும் | 0.01 | 53.00 | 53.01 |
| 800 | ஏனைய செலவு | 52.76 | 965.56 | 1018.32 |

[ 2002 ஏப்ரல் 9

| (1) | | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| 2205 | 00 கலையும் பண்பாடும் | | | |
| 001 | நெறிப்படுத்தலும், நிருவாகமும் | - | 55.74 | 55.74 |
| 101 | நுண்கலைக் கல்வி | 167.26 | 374.81 | 542.07 |
| 102 | கலை-பண்பாட்டை வளர்த்தல் | 45.84 | 248.36 | 294.20 |
| 103 | தொல்பொருளியல் ஆய்வு | 181.32 | 264.24 | 445.56 |
| 105 | பொது நூலகங்கள் | - | 27.70 | 27.70 |
| 107 | அரும்பொருட் காட்சியகங்கள் | 400.00 | 298.47 | 698.47 |
| 800 | ஏனைய செலவு | - | 8.00 | 8.00 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | | | |
| 60 | ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் | | | |
| 200 | ஏனைய திட்டப் பணிகள் | - | - | - |
| 2251.00 | தலைமைச் செயலகம்-சமூகப் பணிகள் | | | |
| 90 | தலைமைச் செயலகம் | - | 279.38 | 279.38 |
| | மொத்தம் நிகரக் கோரிக்கை | 847.19 | 3303.18 | 4150.37 |
| | கூட்டுக-திருப்பி வசூலிப்பவை | 1.53 | 12.36 | 13.89 |
| **மானியக் கோரிக்கை எண் 44** | | **848.72** | **3315.54** | **4164.26** |

## தமிழ் வளர்ச்சி இயக்ககம்

தமிழ் மொழியின் பயன்பாட்டை விரிவாக்கவும், மேம்படுத்தவும் வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வது இன்றைய நிலையில் இன்றியமையாததாகும். தமிழ் வளர்ச்சி இயக்ககம் வாயிலாக இத்தகைய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆட்சிமொழிக் குழுவாக *1957*-ல் உருவாகி, பின்னர் தமிழ் வளர்ச்சி இயக்ககமாகியிருக்கும் இத்துறையின் தலையாய பணி, ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கமும் தமிழ் மொழி வளர்ச்சி தொடர்பான பல்வேறு பணிகளை ஆற்றுவதும் ஆகும்.



2002 ஏப்ரல் 9 ]

### ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம்

### ஆய்வு

அரசு, அன்றாட நிருவாகத்தில் தமிழ் மொழியின் பயன்பாட்டை அதிகரிக்கப் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழிச் செயலாக்கம் குறித்து ஆய்வுகள் செய்யப்படுகின்றன. தலைமைச் செயலகத் துறைகள் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை அரசுச் செயலாளர் அவர்களாலும், துறைத் தலைமை அலுவலகங்கள்-மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள்-தன்னாட்சி நிறுவனத் தலைமை அலுவலகங்கள் ஆகியவை தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களாலும், மாவட்டங்களிலுள்ள மண்டல நிலை-மாவட்ட நிலை-சார்நிலை அலுவலகங்கள் மண்டலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள் மற்றும் மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்கள் ஆகியோராலும் ஆய்வு செய்யப்பெறுகின்றன. அரசுப் பணியாளர்கள் அனைவரும் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம்பற்றி அறிந்துகொள்ள ஏதுவாக 'ஆட்சித் தமிழ்' என்னும் நூலும் வெளியிடப்பட்டுள்ளது. ஆட்சிமொழித் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்த உறுதிபூண்டுள்ள இவ்வரசு, மத்திய அரசின் ஆட்சிமொழிகளுள் தமிழ் மொழியையும் ஒன்றாக அறிவிக்க வேண்டுமென்று மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை வலியுறுத்தி வருகிறார்கள்.

### ஆட்சிமொழிக் கருத்தரங்குகள்

ஆட்சிமொழித் திட்டத்தின் நோக்கம், செயற்பாடு ஆகியன குறித்து அரசு அலுவலர்களும், பணியாளர்களும் நன்குணர்ந்து இத்திட்டம் நிறைவேற்றப்படுவதனை ஊக்குவிக்கும் நோக்கில் மாவட்டங்களில் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடத்தப்பெறுகின்றன. *2001-2002* ஆம் ஆண்டில் *8* மாவட்டங்களில் இத்தகைய கருத்தரங்குகள் நடத்தப்பெற்றன.

### ஆட்சிச் சொல்லகராதி, சிறப்புச் சொல்லகராதிகள்

ஆட்சிமொழிச் செயலாக்கத்திற்குப் பெரிதும் பயன்படுவன ஆட்சிச் சொல்லகராதிகளாகும். எனவே ஆட்சிச் சொல்லகராதி இதுவரை ஆறு பதிப்புகள் வெளியிடப்பட்டு அரசு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அன்றியும், ஒவ்வொரு துறையிலும் உள்ள சிறப்புச் சொற்களுக்கும் அகராதி தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. ஆட்சிச் சொல்லகராதியையும், சிறப்புச் சொல்லகராதியையும் புதுப்பிக்கும் பணியும் இப்போது மேற்கொள்ளப்பெற்று வருகிறது.

**மொழி பெயர்ப்புப் பணிகள்**

அரசு அலுவலகங்களில் தமிழ் மொழி முழுமையாகப் பயன்படுத்தப் படுவதற்குத் துணைபுரியும் வகையில் தேவையான மொழி பெயர்ப்புகள் செய்தளிக்கப்படுகின்றன. படிவங்கள், பதிவேடுகள், விதிகள், விதித்தொகுப்புகள், நடைமுறை நூல்கள் முதலியன தமிழில் மொழி பெயர்த்து அளிக்கப்படுகின்றன.

**தமிழ் வளர்ச்சிப் பணிகள்**

**நூல்கள் வெளியிட நிதியுதவி**

மொழி வளர்ச்சியில் நூல்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. எனவே தமிழ் மொழியில் நூல்கள் வெளிவருவதற்குத் துணைபுரியும் வகையில் நிதியுதவி வழங்கப்படுகிறது. தமிழ் மொழியில் சிறந்த நூல்களும், அரிய நூல்களும், மொழியாக்க நூல்களும் அச்சிட்டு வெளிவர இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. நிதியுதவி வழங்கத் தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு நூலிற்கும் அதிக அளவாக ரூ.20,000 முதல் ரூ.25,000 வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது.

**தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்**

தமிழில் வெளிவரும் சிறந்த நூல்களைப் பாராட்டி ஊக்குவிக்கும் வகையில் 30 தலைப்புகளில், ஒவ்வொரு தலைப்பின் கீழும் சிறந்த நூலொன்றுக்கு ரூ.10,000 வீதம் 30 நூல்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. பரிசு பெறும் ஒவ்வொரு நூலையும் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு ரூ.2,000 பரிசு வழங்கப்படுகிறது.

**அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்**

தமிழுக்குத் தொண்டாற்றிய அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. திங்கள் வருமானம் ரூ.400-க்கு மேற்படாத 58 அகவை முடிந்த தகுதியுடைய தமிழறிஞர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் திங்கள்தோறும் ரூ.500 வீதம் வாழ்நாள் முழுவதும் நிதியுதவி வழங்கப்பெற்று வருகிறது.

**தமிழ்மொழி/எல்லைக் காவலர் நிதியுதவித் திட்டம்**

தமிழ்மொழி-பண்பாட்டைப் பேணி வளர்க்கச் சிறந்த முறையில் தொண்டாற்றியவர்களுக்கு, திங்கள்தோறும் நிதியுதவியாக ரூ.3,000-ம், மருத்துவப் படியாக ரூ.15-ம் சேர்த்து மொத்தம் ரூ.3,015 ஆக வாழ்நாள்





முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மொழிக் காவலர்களின் மரபுரிமையருக்கு நிதியுதவியாக ரூ.1,500-ம், மருத்துவப் படியாக ரூ.15-ம் சேர்த்து மொத்தம் ரூ.1,515-ஆக வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் இவர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணச் சலுகையும் வழங்கப்படுகிறது.

**குறள் பரிசு**

திருக்குறள் முற்றோதல் செய்த 23 மாணவச் செல்வங்களுக்கு ஜனவரி 2000 முதல் அவர்களின் வாழ்நாள் முழுவதும் திங்கள்தோறும் குறள் பரிசு ரூ.1,000 வழங்கப்பட்டு வருகிறது.

**விருதுகள்**

**திருவள்ளுவர் விருது**

திருக்குறள் நெறி பரப்பும் பெருந்தகையாளர் ஒருவரைத் தெரிவு செய்து ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளில், திருவள்ளுவர் விருது வழங்கப்பெறுகிறது. இவ்விருது ஒரு இலட்சம் ரூபாயும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் கொண்டதாகும். 2001 ஆம் ஆண்டிற்கான விருது தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்களுக்கு 15-1-2002-ல் வழங்கப்பட்டது.

**பாவேந்தர் பாரதிதாசன் விருது**

தமிழுக்குச் சிறந்த தொண்டாற்றிய கவிஞர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்பெறுகிறது. இவ்விருது பெறுபவர் ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் பரிசாகப் பெறுவார். 2001 ஆம் ஆண்டிற்கான விருது, கவிஞர் மணிமொழி அவர்களுக்கு 26-12-2001-ல் வழங்கப்பட்டது.

**திரு.வி.க. விருது**

சிறந்த தமிழ் எழுத்தாளர் ஒருவரைத் தேர்ந்தெடுத்துத் தமிழ்த் தென்றல் திரு.வி.க.-வின் பெயரால் ஆண்டுதோறும் விருது வழங்கப்பெறுகிறது. விருது பெறுபவருக்கு ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் வழங்கப்படுகிறது. 2001 ஆம் ஆண்டிற்கான விருது முனைவர் ப. இராமன் அவர்களுக்கு 26-12-2001-ல் வழங்கப்பட்டது.

[ 2002 ஏப்ரல் 9

**பாரதியார் விருது**

பாரதி நெறி பரப்பும் தகைமையாளர் ஒருவரைத் தெரிவு செய்து ஆண்டுதோறும் பாரதியார் விருது வழங்கப்பெறுகிறது. விருதுத் தொகை ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் விருதாளருக்கு வழங்கப்பெறுகிறது. 2001 ஆம் ஆண்டிற்கான விருது திரு. பெ.சு. மணி அவர்களுக்கு 26-12-2001-ல் வழங்கப்பட்டது.

**கி. ஆ.பெ. விசுவநாதம் விருது**

தமிழ் மொழியின் மேம்பாட்டிற்குத் தொண்டாற்றும் பெருந்தகையாளர் ஒருவரைத் தெரிவு செய்து ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்பெறுகிறது. ஒரு சவரன் தங்கப் பதக்கத்துடன், ரூபாய் ஒரு இலட்சம் விருதுத் தொகையும் விருதாளருக்கு வழங்கப்பெறுகிறது. 2001 ஆம் ஆண்டிற்கான விருது மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் கா. காளிமுத்து அவர்களுக்கு 26-12-2001-ல் வழங்கப்பட்டது.

**பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவற்றிற்கு நல்கைகள்/நிதியுதவிகள்**

தமிழ் மொழியைப் பரப்புதல், தமிழ் வளர்ச்சி ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பின்வருமாறு நல்கைகள்/நிதியுதவிகள் வழங்கப்படுகின்றன:

**1) பிற மாநிலப் பல்கலைக்கழகங்களில் தமிழிருக்கை நிறுவுதல்/ பட்டய வகுப்பு நடத்துதல் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு மானியம்/நிதியுதவி வழங்குதல்**

தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு முதலியவற்றைப் பரப்பிடவும், பிற மாநிலங்களிலுள்ள மக்கள் தமிழ் மொழியைக் கற்பதற்கு வாய்ப்பளிக்கும் பொருட்டும், பிற மாநிலங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் தமிழிருக்கை நிறுவுவதற்கும், தமிழில் பட்டய வகுப்பு நடத்துவதற்கும் மானியம்/நிதியுதவி வழங்கப்பெறுகிறது.

**2) தமிழ்ச் சங்கங்களுக்கு நிதியுதவி**

தமிழ்நாட்டிலும், பிற மாநிலங்களிலும் உள்ள தமிழ்ச் சங்கங்களிலிருந்து பெறப்படும் வேண்டுகோளின் அடிப்படையில், அவற்றின் தேவைக்கேற்ப நிதியுதவி வழங்கப்பெறுகிறது. கட்டடம் கட்டுதல், கட்டடச் சீரமைப்பு, சங்கத்தின் சார்பில் நடத்தப்பெறும் பள்ளிகளைப் பராமரித்தல், சங்கத்தின் மேம்பாடு மற்றும் தமிழ்ப் பணித் திட்டங்கள் ஆகியவற்றிற்காக இந்நிதியுதவி வழங்கப்பெறுகிறது.



2002 ஏப்ரல் 9 ]

**3) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு நல்கை**

உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழறிஞர்களின் ஒத்துழைப்புடனும், தமிழியல் துறைகளுடனும் இணைந்து தமிழாராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வது இந்த அமைப்பினுடைய முதன்மையான நோக்கமாகும். இந்நிறுவனத்திற்கு, தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாக அரசு நல்கையாக ஆண்டுதோறும் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

**4) தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு நல்கை**

தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு நடப்புச் செலவினங்களுக்கும், குறிப்பிட்ட திட்டப் பணிகளுக்குமெனத் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் வாயிலாக நல்கை வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டில் (2000-2001) ரூ.6,09,82,000 (ரூபாய் ஆறு கோடியே ஒன்பது இலட்சத்து எண்பத்திரண்டாயிரம் மட்டும்) தமிழக அரசின் நல்கையாக வழங்கப்பட்டுள்ளது.

**விழாக்கள் மற்றும் நூற்றாண்டு விழாக்கள்**

தமிழுக்குத் தொண்டாற்றியுள்ள பெருமக்களைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் திருவள்ளுவர் விழா, உ.வே. சாமிநாதய்யர் பிறந்த நாள் விழா முதலியன கொண்டாடப்பெறுகின்றன. இ.மு.சுப்பிரமணியப் பிள்ளை, மே.வீ.வேணுகோபாலப்பிள்ளை, மங்கலங்கிழார், மனோன்மணியம் சுந்தரனார், தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம், மயிலை சீனி. வேங்கடசாமி, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ., பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் ஆகியோருக்கு நூற்றாண்டு விழாக்கள் கொண்டாடப்பெற்றன.

**மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் நூற்றாண்டு விழா**

பாவாணர் என்றால் 'தண்டமிழ் ஏறு' 'தனித்தமிழ் ஆறு' என்று கூறப்படுவது மட்டுமின்றி, 'பாவாணர் வீட்டுப் படிக்கட்டும் பைந்தமிழ் பேசும்' எனும் புதுமொழி பழமொழியாய் மாறியிருப்பதையும் காண்கிறோம். மறைமலையடிகள் வித்திட்டுச் செடியாக்கிய தனித்தமிழை, வேர்வீழ்த்தி, விழுதூன்றி நின்று நிலைத்து நிழல் தரும் ஆலமரமாக வளரச் செய்தவர் பாவாணர். அவருடைய தனித் தன்மை வாய்ந்த பணிகளைப் போற்றவும், அவரது பணிகள் தொய்வின்றித் தொடரவும் பாவாணர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை அவர் பிறந்து வளர்ந்த திருநெல்வேலி சங்கரன்கோயிலிலும் (5-2-2002), கோமதிமுத்துபுரத்திலும் (6-2-2002), அவர் தமிழ் வளர்த்த சென்னையிலுமாக (8-2-2002) அரசு கொண்டாடியது.

ஆய்வரங்கம், கருத்தரங்கம்-நிறைவு விழா என்று சென்னையில் நடைபெற்ற நூற்றாண்டு நிறைவு விழாவில் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களும், அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அறிஞர் பெருமக்களும் கலந்து கொண்டனர்.

**நூல்கள் வெளியிடுதல்**

**தமிழ் நாட்டு வரலாறு**

தமிழ் நாட்டு வரலாற்றினை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் அதனை முறைப்படி தொகுத்து ஏழு தொகுதி நூல்களாக வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை ஐந்து தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. எஞ்சிய தொகுதிகள் தயாரிக்கப்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**இ.ஆ.ப. தேர்வுக் கருவி நூல்**

இ.ஆ.ப. தேர்வினைத் தமிழில் எழுதுவோருக்குத் துணைபுரியும் வகையில் தமிழில் கருவி நூல்கள் தயாரிக்கும் திட்டத்தின்கீழ், 'தமிழ் மொழி வரலாறு' எனும் நூல் வெளியிடப்பட்டுள்ளது. வரலாறு, புவியியல்-கருவி நூல்கள் தயாரிப்புப் பணி நடைபெற்று வருகிறது.

**ஆட்சித்தமிழ் நூல்**

ஆட்சிமொழித் திட்டம்பற்றி அரசுப் பணியாளர்கள் முழுமையாக அறிந்துகொள்ள உதவும் வகையில் 'ஆட்சித்தமிழ்' எனும் நூல் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. தேர்வாணையம் நடத்தும் தேர்வில் இந்நூல் சேர்க்கப்பட்டு அரசுப் பணியாளர்கள் இதில் தேர்ச்சி பெறும் வகையில் நடவடிக்கை எடுப்பதுபற்றி அரசு ஆய்ந்து வருகிறது.

**தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்**

தமிழ்ச் சுருக்கெழுத்து நூலின் தேவையைக் கருதி, இத்துறையின் வாயிலாக அவ்வப்போது தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகிறது. இதன் ஐந்தாம் பதிப்பினை வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.





**குறளமுதம்**

திருக்குறள்பற்றி அறிஞர்களால் எழுதப்பட்டுள்ள சிறந்த கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு நூலான "குறளமுதம்" நூல் வெளியிடப்பெற்றுள்ளது.

**வணிக நிறுவனப் பெயர்ப்பலகைகளில் தமிழ்**

வணிகர்கள் தங்கள் நிறுவனங்களின் பெயர்களைத் தமிழில் எழுதி வைக்க உதவியாக, "வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளில் தமிழ்" எனும் நூல் வெளியிடப்பெற்றுள்ளது.

**புதிய தமிழ் இலக்கண நூல்**

தொல்காப்பியம், நன்னூல் ஆகியவற்றின் அடிப்படையிலும், பள்ளி/கல்லூரி மாணவர்களின் பயன்பாட்டைக் கருதியும், இக்காலத் தேவைக்கேற்பவும், புதிய தமிழ் இலக்கண நூல் தயாரிப்புப் பணி நடைபெற்று வருகிறது.

**இருபதாம் நூற்றாண்டுக்குத் தமிழர்களின் பங்களிப்பு**

அரசியல், அறிவியல், இலக்கியம், சமூக சீர்திருத்தம், விளையாட்டு மற்றும் இதர துறைகளில் இருபதாம் நூற்றாண்டில் தமிழுக்குப் பெரும் பங்காற்றியுள்ள தமிழர்களின் பணிகளைத் தொகுத்து தமிழிலும் ஆங்கிலத்திலும் நூல்களாக வெளியிடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**புதிய தமிழ் இலக்கிய வரலாறு**

இதுவரை பலராலும் வெளியிடப்பட்டுள்ள தமிழ் இலக்கிய வரலாறு தமிழ்நாட்டுத் தமிழ் இலக்கியங்களைச் சார்ந்ததாக உள்ளது. இந்நிலையை மாற்றி இலங்கை, சிங்கப்பூர், மலேசியா முதலிய நாடுகளின் இலக்கிய வரலாறுகளையும் ஒருங்கிணைத்துப் புதிய தமிழ் இலக்கிய வரலாற்று நூல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வாயிலாக உருவாக்கப்பட்டு வருகிறது.

**தமிழ் நூல் விவர அட்டவணை**

தமிழ்நாட்டில் வெளிவந்து பதிவு செய்யப்பெற்று, ஆவணக் காப்பகத்தில் உள்ள நூல்களுக்கு விவர அட்டவணை நூல்கள் தயாரிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இதுவரை 1935 ஆம் ஆண்டு வரையிலான நூல்களுக்குரிய விவர அட்டவணை நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. 1936 முதல் 1945 ஆம் ஆண்டு வரையிலான நூல்களுக்குரிய விவரங்கள்

தயாரிக்கப்பட்டுக் கணினியச்சுப் பணி நடைபெற்று வருகிறது. 1946 ஆம் ஆண்டு முதல், உரிய நூல்களுக்கு விவரத் தொகுப்புப் பணி நடைபெற்று வருகிறது. தமிழ் நூல் விவரங்களை இணையத்தின் வழிப் பரவலாக உலகெங்கும் வாழும் தமிழர்கள் அறிந்துகொள்ள ஏதுவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**சொல்வங்கி**

ஆங்கிலம் மற்றும் பிற மொழிச் சொற்களுக்கு நிகராகத் தமிழ்ச் சொற்களை ஆக்கிக்கொள்ளவும், பழைய தமிழ்ச் சொற்களை இன்றைய தேவைக்கேற்பப் புதுப்பித்துக்கொள்ளவும், மக்களிடையே புழக்கத்தில் உள்ள சொற்களைத் தேவைக்கேற்பப் பயன்படுத்திக்கொள்ளவும் உரிய ஓர் அமைப்பாகச் 'சொல்வங்கி' எனும் இத்திட்டம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**கலைக்களஞ்சியம்/அகராதிகள்**

அகராதி-கலைச்சொல்லகராதி தயாரித்தல், கலைக் களஞ்சியங்கள் தயாரித்தல், மருத்துவக் களஞ்சியம் தயாரித்தல் ஆகியவற்றிற்குத் தனியே நிதியுதவி அளித்து, இவ்வகையிலான நூல்கள் வெளிவரவும் தமிழ் வளர்ச்சி இயக்ககம் துணை புரிகின்றது.

**பிற மாநிலங்களில் தமிழ் மையம்**

மற்ற மாநிலங்களில், தமிழக அரசு சார்ந்த அமைப்பு வாயிலாகத் தமிழ் மொழியைப் பரப்புவதற்கும், தமிழ் கற்பிப்பதற்கும் வகை செய்யும் பொருட்டு, பிற மாநிலங்களில் தமிழ் மையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மும்பையிலும், கொல்கத்தாவிலும் தமிழ் மையங்கள் தோற்றுவிக்கப்பெற்றுத் தமிழ்ப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**நூல்கள் நாட்டுடைமையாக்கம்**

பாரதியார், சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் (விடுதலைப் போரில் தமிழகம் நூல் மட்டும்), கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், பாவேந்தர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா, மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், மறைமலையடிகள், திரு.வி.க., கல்கி, வெ. சாமிநாத சர்மா ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் குடும்பத்தாருக்குப் பரிவுத் தொகைகள் வழங்கப்பட்டன.



மேலும், சுதந்திரப் பொன்விழா ஆண்டையொட்டி, தேசிய எழுத்தாளர்கள் பலரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுப் பரிவுத் தொகைகள் வழங்கப்பட்டன. தவிரவும், மயிலை சீனி. வேங்கடசாமி, திரு. சாமி. சிதம்பரனார், கவிஞர் முடியரசன் மற்றும் திரு. கா. அப்பாத்துரையார் ஆகியோரது நூல்களும் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

**அரசு அறிவிப்புப் பலகைகளில் திருக்குறள்**

தலைமைச் செயலகத் துறைகளிலும், துறைத் தலைமை அலுவலகங்களிலும், தன்னாட்சி நிறுவனங்கள், வாரியங்கள், கழகங்கள், இணையங்கள் ஆகியவற்றின் தலைமை அலுவலகங்களிலும், ஆட்சிச் சொல் அகராதியில் உள்ள சொற்களில் நாள்தோறும் ஓர் ஆங்கிலச் சொல்லையும், அதற்குரிய தமிழ்ச் சொல்லையும் அறிவிப்புப் பலகைகளில் எழுதி வைப்பதுடன், ஒரு திருக்குறளையும் பொருளுடன் எழுதி வைக்க வேண்டுமென ஆணையிடப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

**தமிழ் இலக்கியச் சங்கப் பலகை**

தனியாக இயங்கி வந்த தமிழ் இலக்கியச் சங்கப் பலகை அலுவலகம், தமிழ் வளர்ச்சி இயக்ககத்துடன் இணைக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**அறிவியல் தமிழ் - தமிழ்ப் பண்பாட்டுக் கருத்தரங்கம்**

1995 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் "அறிவியலிலும் தமிழ், அனைத்திலும் தமிழ்", "இன்றும் தமிழ், என்றும் தமிழ்" என்ற புதிய முழக்கங்களை அறிவித்தார்கள். இதன் வழி, முத்தமிழோடு நான்காம் தமிழாக அறிவியல் தமிழ் வளர வித்திட்டார்கள். அவருடைய சீரிய வழிகாட்டுதலின்கீழ் இயங்கும் இவ்வரசு, 5-1-2002-ல் சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழாக் கலையரங்கில் மாபெரும் அறிவியல் தமிழ்-தமிழ்ப் பண்பாட்டுக் கருத்தரங்கை நடத்தியது. அப்போதைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இக்கருத்தரங்கைத் தொடங்கி வைத்துச் சிறப்புரை ஆற்றினார்கள். 'சமயத் துறையில் தமிழ்' எனும் கருத்தரங்கு மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

'மருத்துவத் துறையில் தமிழ்' எனும் கருத்தரங்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 'வேளாண்மைத் துறையில் தமிழ்' எனும் கருத்தரங்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

[ 2002 ஏப்ரல் 9

‘சட்டக் கல்வி, கலை, அறிவியல், பொறியியல் துறைகளில் தமிழ்’ எனும் கருத்தரங்கு மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் தலைமையில் மாலையில் நடைபெற்ற ‘ஆட்சித் துறையில் தமிழ்-அறிவியல் தமிழ்-தமிழ்ப் பண்பாட்டுக் கருத்தரங்க நிறைவு விழா’வில் அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களும், அறிஞர் பெருமக்களும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். தமிழக அரசின் சார்பில் நடத்தப்பட்ட இக்கருத்தரங்கிற்கு ரூ.8.00 இலட்சம் செலவினமாக அரசு ஒப்பளிப்புச் செய்தது. தமிழக அரசின் வரலாற்றில் நான்காம் தமிழாகிய அறிவியல் தமிழுக்கு இவ்வளவு பெரிய அளவில் கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றது இதுவே முதன்முறையாகும்.

**மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம்**

மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்தை விதிகளின்படி பதிவு செய்தல், சங்கப் பணிகளை வரையறை செய்தல், முறைப்படி ஒதுக்கப்பட்ட நிலத்தைக் கையகப்படுத்துதல், சுற்றுச்சுவர் கட்டுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள திருநெல்வேலி மண்டலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர், பொறுப்பு அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேலும், மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு நில மாற்றம் செய்வது தொடர்பாகவும், அவ்விடத்தில் வடபுற எல்லையை ஒட்டி சிமெண்ட் தளமிட்ட வாய்க்காலை உலகத் தமிழ்ச் சங்கம், அதன் சொந்த செலவில் அமைக்க வேண்டும் என்ற மதுரை மாநகராட்சியின் தீர்மானத்திற்கும் ஏற்பளிப்பு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உலகளாவிய நிலையில் தமிழியல் தொடர்பான உயர் ஆய்விற்காக, 1970 ஆம் ஆண்டு தமிழக அரசால் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் செயற்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் இலக்கியம்-சுவடிப் புலம், தமிழ்மொழி மற்றும் மொழியியல் புலம், சமூகவியல் கலை மற்றும் பண்பாட்டுப் புலம், அயல்நாட்டுத் தமிழர் புலம் என்ற நான்கு புலங்கள் உள்ளன. இந்நிறுவனத்தில் தமிழியல் தொடர்பான திட்டப் பணிகள், நூல் வெளியிடுதல்; தமிழ் மொழி, சுவடியியல், மொழிபெயர்ப்பியல் வகுப்புகள் நடத்துதல்; கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்துதல்; செய்திக் கதிர். தமிழியல் ஆய்விதழ் வெளியிடுதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.



2002 ஏப்ரல் 9 ]

தமிழ் மொழியைப் பிற மொழியினர்/பிற நாட்டினர் கணினி மூலம் கற்கத் துணையாகும் வண்ணம் குறுவட்டுகளில் தமிழ் உலகம் (C.D.ROM) எனும் திட்டப்பணி நிறைவுற்றுள்ளது. ‘தமிழ் உலகம்’ என்னும் இரு குறுவட்டுகள் 19-12-2001 அன்று வெளியிடப்பட்டன. இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் தமிழ் இலக்கிய வரலாற்றினை உள்ளடக்கிய உலகத் தமிழ் இலக்கிய வரலாறு எனும் திட்டப்பணி முடிவுற்று நூல் அச்சுப் பணி நிறைவுறும் நிலையில் உள்ளது. இந்நிறுவனம் இதுவரையில் 413 நூல்களை வெளியிட்டுள்ளது. தமிழ் வளர்ச்சித் துறையின் அரிய நூல்களை/சிறந்த மற்றும் மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிடும் திட்டத்தின்கீழ் நிதி பெற்று, இந்நிறுவனம் பல நூல்களை வெளியிட்டுள்ளது. இந்நிறுவனத்தில் சான்றோர் பலரின் பெயரில் இப்போது 22 அறக்கட்டளைகள் நிறுவப்பெற்றுள்ளன. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அறக்கட்டளை, ம.பொ. சிவஞானம் அறக்கட்டளை மற்றும் தேவநேயப் பாவாணர் அறக்கட்டளை சார்பில் அறக்கட்டளைப் பொழிவுகள் 2002 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் நடத்தப்பட்டன.

இந்நிறுவனத்தில் உள்ள நூலகத்தில் தற்போது 68 ஆயிரம் நூல்கள் உள்ளன. இந்நிறுவனம் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து மருத்துவ அகராதி தயாரித்தல், தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வழியாகப் பட்டங்கள் வழங்குகிற வகையில் ஆய்வியல் நிறைஞர், தமிழியல் முதுகலை, தமிழியல் இளங்கலை ஆகிய பட்ட வகுப்புகள் தொடங்கி நடத்துதல், உலக நாடுகளில் வாழும் தமிழர்களைப் பற்றிய ஆய்வு மாநாடுகளை அந்தந்த நாடுகளிலேயே நடத்துதல், தமிழ் அறிஞர்களின் வரிசை என்ற அமைவில் திங்கள் கருத்தரங்குகள் நடத்துதல், தமிழ்க் கலை-பண்பாட்டு ஒலி ஒளிக் களஞ்சியம் தயாரித்தல் மற்றும் இணையதளம் அமைத்தல், தமிழியல் ஆய்வடங்கல் உருவாக்கல், தமிழில் அறிவியல் ஆய்விதழ் தொடங்குதல், மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையின் பண்பாட்டுப் பிரிவின் நிதியுதவியுடன் இணைந்து கருத்தரங்கு நடத்துதல் மற்றும் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரில் ஓர் அறக்கட்டளை அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**

உயரிய தமிழ் மொழியின் கலைகள், இலக்கியங்கள், அறிவியல் ஆகியவற்றில் உயர்நிலை ஆய்வு செய்யும் தனித்துவ நிறுவனமாக அமைந்துள்ள தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ்ப் பண்பாட்டின் பல்வேறு

[ 2002 ஏப்ரல் 9

பரிமாணங்களான கலை, பண்பாடு, கூத்து, சிற்பம், கட்டட இயல், இலக்கியம், இலக்கணம், மொழியியல், வரலாறு, சமயம், மெய்ப்பொருளியல், நில அறிவியல், வானிலைக் கோள்கள், சித்த மருத்துவம், தொல்லறிவியல் போன்ற துறைகளில் ஆய்வு மேற்கொண்டுவரும் பணியை 1981 ஆம் ஆண்டு முதல் தொடங்கி, பல அரிய ஆராய்ச்சி நூல்களையும் வெளியிட்டு வருகின்றது. இப்பல்கலைக்கழகம் 100% அரசு வழங்கும் மானியத்தில் செயல்பட்டு வருகின்றது.

இப்பல்கலைக்கழகம் 5 புலங்களையும், அவற்றின் கீழான 22 தனித் துறைகளையும் கொண்டுள்ளது. மேலும் தனியாகச் செயல்படும் அச்சகம், பதிப்புத் துறை, நூலகம், அருங்காட்சியகம் ஆகியவற்றுடன் களஞ்சியம், அகராதி ஆகிய திட்டங்களையும் உள்ளடக்கிச் செயல்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகத்தில் நவீன வசதிகளான டி.டி.பி., ஆப்செட் அச்சு வசதிகளோடு கூடிய அச்சகம் ஒன்று பராமரிக்கப்படுகிறது. இதன்மூலம் 2001-2002-ல் 26 புதிய நூல்கள் வெளியிடப்பட்டன. 2002-2003-ல் சுமார் 50 நூல்கள் வரை வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளன. சென்ற ஆண்டில் ரூ.5,92,958/- அளவிற்கு நூல்கள் விற்பனை செய்யப்பட்டன. வளர்ந்து வரும் அறிவியல் உலகத்தின் தேவைக் கேற்ப பல்கலைக்கழக ஆய்வேடுகளைக் குறுவட்டில் (CD-ROM) பதிவு செய்து, இணையம் மூலம் பயன்படுத்தத் திட்டமிட்டு 12 நூல்கள் குறுந்தகட்டில் பதியப்பட்டன. வரும் ஆண்டில் 7 நூல்கள் குறுவட்டில் பதியப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக வெளியிடப்படாமல் இருந்து வந்த தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் செய்தி மலர், Tamil Civilisation, தமிழ்க்கலை போன்றவை நவம்பர் 2001 முதல் மீண்டும் வெளியிடப்பட்டு வருகின்றன.

இப்பல்கலைக்கழகத்தின் நூலகத்திலுள்ள நூல் விவரங்களைக் கணினி மென் தட்டில் பதியும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி ரூ.1,17,000/- செலவில் நடைபெற்று வருகிறது. 9-வது ஐந்தாண்டுத் திட்ட நல்கையில், ரூ.15 இலட்சம் மதிப்பிற்கு நூல்கள் வாங்கப்பட்டுள்ளன. 10-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.50 இலட்சத்திற்கு நூல்கள் வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கட்டடம் கட்டத் தமிழக அரசின் பங்குத் தொகையாக ரூ.17.66 இலட்சம் அனுமதிக்கப்பட்டுக் கலைப்புலம் முதல்தளம், மகளிர் விடுதி முதல் தளம், அறிவியல் புலம் முதல் தளம் ஆகிய கட்டடப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. வரும் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.630 இலட்சம் செலவில் கட்டடங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 9 ]

தமிழ் இணையப் பல்கலைக்கழகம், தொலைதூரக் கல்வியின் அங்கமாகக் கொணரப்பட்டது. இணையப் பல்கலைக்கழகத்திற்குத் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு முதலியவற்றிற்குப் பாடத்திட்டங்கள் வகுக்கப்பட்டன. சான்றிதழ், பட்டயப் பட்டம் ஆகியவற்றை வழங்கும் சிறப்பு நிலையைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. பாடம் எழுதும் (Text Script) குழுவிற்கும், பாடத் திட்டக் குழுவிற்கும் (Board of Studies) தமிழ்ப்பல்கலைக்கழகத் துணை வேந்தர் தலைமைப் பொறுப்பேற்றுள்ளார். இணையப் பல்கலைக்கழகத்தின் இயக்குநருள் ஒருவராகத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் செயலாற்றுகிறார். பல்கலைக் கழக நல்கைக்குழு, இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம், இந்திய வரலாற்றியல் ஆய்வுக் கழகம், இந்திய தேசிய அறிவியல் கழகம் ஆகிய நிறுவனங்களின் நல்கை உதவியுடன் பல்வேறு ஆய்வுத் திட்டங்கள், நீண்டகால, குறுகிய கால அளவில் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாண்டு 5 திட்டங்கள் முடித்தளிக்கப்பட்டன. நடைமுறையில் உள்ள திட்டங்கள் 22 ஆகும். மெய்யியல் துறை சார்பில், பொது மக்களுக்காகத் திங்கள்தோறும் திருக்குறள் வகுப்புகளும், திங்கள்தோறும் தீந்தமிழ் என்ற வரிசையில் அறிவியல் பொழிவுகளும் நிகழ்த்தப்படுகின்றன. நடப்பாண்டில் கல்லூரிகள், பல்கலைக் கழகங்களின் ஆசிரியர்களுக்கான 9 புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. ரூ.93,41,597-க்கான 45 அறக்கட்டளைகள் உள்ளன. நடப்பாண்டிற்கு ரூ.1,37,000-க்கான 6 அறக்கட்டளைகள் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்டன. இவற்றின் வாயிலாகப் பல்வேறு சொற்பொழிவுகள், வல்லுநர்களைக் கொண்டு நடத்தப்படுகின்றன. பாரதியார், ஏட்டி, பன்னீர் செல்வம் ஆகியோர் பெயரிலமைந்த தமிழக அரசின் அறக்கட்டளைகளின் மூலம் ஆய்வு, மாணவர்கட்கு உதவித்தொகைகள், ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. நடப்பு ஆண்டில் 12 கருத்தரங்குகள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளால் நடத்தப்பட்டன.

ஆய்வியல் நிறைஞர் பட்டப் படிப்பில் ஆய்வு நோக்கில் பிற துறை ஆய்வுகளை அகப்படுத்துதல் அணுகுமுறை நடைமுறைப்படுத்தப்பட்டது. (Multi disciplinary). இவ்வாண்டு 107 மாணவர்கள் ஆய்வியல் நிறைஞர் வகுப்பிற்குச் சேர்க்கப்பட்டுள்ளனர். வருமாண்டில் மாணவர் சேர்க்கை மேலும் உயரும். முழுநேர முனைவர் பட்டப் படிப்பில் 22 மாணவர்களும், பகுதி நேரமாக 20 மாணவர்களும் பயின்று வருகின்றனர். சித்த மருத்துவத் துறை, ஓலைச் சுவடித் துறை ஆகியவற்றை உயர் ஆய்வு மையங்களாக அறிவிப்பதற்கும், சென்னைப் பல்கலைக்கழக நுண்ணுயிரியல் துறையுடன் சித்த மருத்துவத் துறை இணைந்து செயல்பட்டு, மூலிகை தொடர்பான

நூல்களை அச்சிட்டு வெளியிடவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மூலிகைப் பண்ணை சிறந்த முறையில் பயன்தர ஆவன செய்யப்பட்டு வருகிறது. மத்திய அரசின் மாக்கடல் அபிவிருத்தித் துறை இப்பல்கலைக்கழக நில அறிவியல் துறையை ஓர் உயர் ஆய்வு மையமாகத் தெரிவு செய்துள்ளது. இத்துறையில் கடற்கரைப் பகுதிகளில் மேலாண்மை, இயற்கைக் கனிம வளங்களை ஆராய்ந்து கணித்தல் முதலான பல்வேறு ஆராய்ச்சிப் பணிகளைச் செய்து வருகிறது. தமிழ்நாடு உயர் கல்வி மையம் இதனை ஓர் உயராய்வு மையமாகத் தெரிவு செய்து இயற்கைச் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு தொடர்பான முதுகலைப் பொறியியல் வகுப்பு தொடங்கிடப் பரிந்துரைத்துள்ளது.

இலக்கியம், மொழியியல், இசை, நாடகம், சிற்பம், சமூக அறிவியல், மானிடவியல் (பழங்குடியினர்), நாட்டுப்புறவியல், கல்வெட்டும் வரலாறும், வணிகவியல், மேலாண்மையியல் மற்றும் ஆட்சியியல், நில அறிவியல், ஓலைச் சுவடி, அரிய கையெழுத்துச் சுவடி, தத்துவம் ஆகிய துறைகளில் கலைச் சொல்லாக்க அகராதிகள் ஆயத்தப்பட்டு வருகின்றன. ரூ.5.5 இலட்சம் செலவில் இப்பல்கலைக்கழகத்திற்காக இணைய அமைப்பு (Internet-VSNL) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்திய மொழிகள், பள்ளித் துறைவாயிலாகத் தகுதிகாண் பருவ இ.ஆ.ப., இ.கா.ப., இ.வ.ப., அலுவலர்கட்குத் தமிழ் மொழிப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெறுகின்றன. நடப்பாண்டில் இவ்வகையில் 2 வகுப்புகள் நடத்தப்பட்டன. மொழிச் சிறுபான்மையினருக்கான தமிழ்ப் பயிற்சி வகுப்பு நடத்தும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வரும் கல்வியாண்டு முதல் இளங்கலைப் பட்ட வகுப்புகளும், முதுகலைப் பட்ட வகுப்புகளும் தொடங்கத் தேவையான செயன்மைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்வாயிலாகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கெனத் தனி நிதி ஆதாரம் உருவாக்கிட வாய்ப்புள்ளது.

**மொழி பெயர்ப்புப் பிரிவு**

தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறையின் கீழ் செயல்படும் மொழிபெயர்ப்புப் பிரிவு, அறிவிக்கைகள், கொள்கை விளக்கக் குறிப்புகள், பொதுக் கணக்குக் குழு அறிக்கைகள், பொது நிறுவனங்கள் குழு அறிக்கைகள், மாநில ஆட்சி அறிக்கை, காவலர் பதக்கம் பெறுவோர் குறிப்புகள், பொதுத் துறையிலிருந்து வரப்பெறும் கமுக்கக் கோப்புகள், விசாரணை ஆணைய அறிக்கை, அரசு அலுவலர்கள் தொடர்பான ஒழுக்கக் கண்காணிப்புக் குழு அறிக்கைகள், தேர்தல் ஆணைய அறிக்கைகள், தேர்தல் துறையின் சிறு கையேடுகள், நிதிக் குழு அறிக்கைகள், காபிபோசா சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள், அரசு



ஆணைகள், அமைச்சரவைக் குறிப்புகள், அமைச்சர்கள் உரை, செய்திகள், சுற்றோட்டக் குறிப்புகள், சில அத்தியாவசியமான கோப்புகள் ஆகியவற்றின் மொழியாக்கப் பணிகளை மேற்கொள்கிறது.

ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத் தொடரின்போதும் உதவிப் பிரிவு அலுவலர் ஒருவர், சட்டமன்றப் பேரவைச் செயலகத்திற்கு அனுப்பப்பட்டு அவர் சட்டமன்றம் தொடர்பான மொழியாக்கப் பணிகளை மேற்கொள்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை உயர் அதிகாரிகள் மாநாடு தொடர்பான மொழியாக்கப் பணிகளைக் கவனிப்பதற்கென்று பொதுத் (மரபு) துறைக்கு ஒரு குழு அனுப்பப்படுகிறது. மேலும், ஒவ்வோராண்டும் நிதித் துறைக்கு உதவி இயக்குநர் ஒருவர் தலைமையில், பிரிவு அலுவலர் ஒருவர், உதவிப் பிரிவு அலுவலர்கள் மூவர் அடங்கிய மொழிபெயர்ப்புக் குழு ஒன்று முகமையில் அனுப்பப்படுகிறது. இக்குழு, ஆளுநர் உரை, வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றத்தில் தாக்கல் செய்து மாண்புமிகு நிதியமைச்சர் ஆற்றும் உரை, வரவு-செலவுத் திட்டம் தொடர்பான ஆவணங்கள், துணை மானியக் கோரிக்கைகள் ஆகியவற்றை மொழிபெயர்க்கிறது. மாநில நிதி ஆணையத்தின் அறிக்கையைத் தமிழாக்கம் செய்வதற்காக ஒரு குழு அனுப்பப்படுகிறது. இந்த ஆண்டு வழக்கமான வரவு-செலவுத் திட்ட ஆவணங்களுடன் தமிழ்நாட்டின் நிதி நிலைமை குறித்த வெள்ளை அறிக்கை ஒன்றும் மொழிபெயர்க்கப்பட்டது.

**செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்**

தமிழ் மொழி வளர்ச்சிக்கான ஆக்கப் பணிகளில், அகரமுதலி உருவாக்குதல் குறிப்பிடத்தக்கதோர் அங்கம் பெறுகிறது. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியைப் பன்மடலங்களில் (volumes) வெளியிடும் நோக்கில் ‘செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்’ எனும் இத்துறை, 1974-ல் அரசால் உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் எடுத்துக்காட்டுகளுடன் உரிய விளக்கமும் செந்தமிழ்ச் சொல்லாட்சியும் வேரும் வரலாறும் அளிக்கப்படுவதால், இது பொது வகை அகரமுதலியாக மட்டுமல்லாது குறிப்பாகத் தமிழியல் மற்றும் திராவிடவியல் ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரிதும் பயன்பெறும் கருவி நூலாகவும் அமைந்திருப்பது இதன் தனிச் சிறப்பாகும். தொல்லியல், நாணயவியல், கல்வெட்டியல் மற்றும் இலக்கண இலக்கியங்கள் ஆகியவற்றிலிருந்து மேற்கோள்களும், சான்றுகளும் தேவையான இடங்களில் அரிய சொல்லாட்சிகளுக்குப் பட விளக்கங்களும் இடம் பெற்றிருப்பது இப்பேரகரமுதலிக்கு அணி சேர்க்கும் சிறப்புக் கூறுகளுள் சிலவாகும்.

பேரகரமுதலி வெளியீடுகள் வரிசையில் உயிரெழுத்துக்களில் 'அ' கரம் முதல் 'ஔ' காரம் வரை மூன்று பகுதிகளும், உயிர் மெய்யெழுத்துக்கள் வரிசையில் 'க' கரம் முதல் 'கூ' காரம் வரை இரண்டு பகுதிகளும், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தால் வெளியிடப்பட்டுள்ளன. இவை யாவும் பலதரப்பட்ட அறிஞர்கள் மற்றும் மொழியாராய்ச்சியாளர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. 'க' கர மடலத்தின் 'கெ' முதல் 'கௌ' வரையிலான மூன்றாவது பகுதியின் அச்சுப் பணி நிறைவுறும் தருவாயில் உள்ளது. இப்பகுதி விரைவில் வெளியிடப்பெற உள்ளது. தொடர்ந்து உயிர்மெய்யெழுத்துக்கள் வரிசையில் 'ச' 'ஞ' 'த' 'ந' 'ப' 'ம' 'ய' 'வ' ஆகிய மடலங்களுக்கான சொல்லடைவுப் பணியும் நடைபெற்று வருகிறது.

2002-2003 ஆம் நிதியாண்டில் 'ச' கர மடலத்தில் ஒரு பகுதியை வெளியிடவும், இதர இரண்டு பகுதிகளுடன் அயற்சொல் மடலத்தில் மூன்று பகுதிகளை அச்சுக்கு அணியமாக்கும் பணியை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. கணிப்பொறியமைப்புகளின் துணை கொண்டு பேரகரமுதலியின் எஞ்சிய பகுதிகளை அணியமாக்கும் பணியை விரைவுபடுத்தவும், குறித்த காலத்தில் வெளிக்கொணரவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**தொல்லியல் மற்றும் அருங்காட்சியகத் துறை**

தமிழகத்திலுள்ள பழம்பெரும் வரலாற்றுச் சின்னங்களைப் புனரமைத்துப் பாதுகாப்பதற்கும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அகழாய்வு செய்வதற்கும் தமிழ்நாடு அரசால் 1961-ல் தொல்லியல் துறை தொடங்கப்பெற்றது. இத்துறையானது அருங்காட்சியகத் துறையுடன் அக்டோபர் 2001-ல் ஒன்றாக இணைக்கப்பட்டு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகத் துறை என அழைக்கப்படுகிறது. இது அருங்காட்சியக ஆணையரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது.

**தொல்லியல்**

கல்வெட்டுகளைப் படியெடுத்து அச்சிட்டு, நூல் வடிவில் வெளிக்கொணரும் பணி, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஊர்களில் அப்பகுதியைச் சேர்ந்த அரும்பொருட்களைச் சேகரித்து காட்சிக்கு வைப்பதற்காக அகழ்வைப்பகங்கள் அமைத்தல், தொன்மை வாய்ந்த கலைப்பொருட்களை இரசாயன முறையில் பாதுகாக்க இரசாயனக் கூடம் அமைத்தல், தொன்மையான சிறப்பு வாய்ந்த கலைப் பொருட்களைப் பதிவு செய்தல் போன்ற பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



இது வரையிலும் தொல்லியல் துறையினால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 25 இடங்களில் அகழாய்வு செய்யப்பட்டிருக்கிறது. 2002-2003 ஆம் ஆண்டில் கங்கை கொண்ட சோழபுரம் மற்றும் மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை உள் மற்றும் சுற்றியுள்ள இடங்களில் அகழாய்வு மேற்கொண்டு புதையுண்டவற்றைக் கண்டுபிடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கல்வெட்டுப் பிரிவில் சுமார் 7,300 கல்வெட்டுகள் படி எடுக்கப்பட்டு, அவற்றில் சுமார் 2,000 கல்வெட்டுகளுக்கும் மேலாக 19 தொகுதிகள் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. தற்பொழுது நடைமுறையில் உள்ளபடி கல்வெட்டுகளைப் படியெடுப்பதற்குப் பதிலாக கேமரா மூலம் துல்லியமான படமெடுப்பதற்கு (Scanning) ஒரு டிஜிடல் கேமரா வாங்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. டிஜிடல் கேமரா மூலம் படமெடுத்த பிறகு (Scanning) அதைக் குறுவட்டில் (CD-யில்) சேகரித்து வைத்து நீண்ட காலத்திற்குப் பாதுகாக்கலாம்.

கடந்த இரு வருடங்களாக, முதுகலைப் பட்டம் பெற்ற மாணவர்களும், எம்.ஃபில்., முனைவர் பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களும், அறிஞர்களும் பயன்பெறும் வகையில் கல்வெட்டுப் பயிலரங்கம் நடத்தப்பட்டுள்ளது. இப்பயிலரங்கத்தைத் தொடர்ந்து நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தொல்லியல் துறையின்கீழ் 16 அகழ்வைப்பகங்கள் (Site Museums) இயங்கி வருகின்றன. இந்த 16 அகழ்வைப்பகங்களை எட்டு அகழ்வைப்பகங்களாகக் குறைத்து மாவட்ட அருங்காட்சியகங்களுடன் இணைக்க ஆய்வு செய்து, முதற்கட்டமாக இராமேசுவரம் அகழ்வைப்பகம், இராமநாதபுரம் அருங்காட்சியகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அகழாய்வு செய்கின்றபோது கிடைக்கும் தொல்பொருட்கள், தொல்லியல் அலுவலர்கள் மற்றும் காப்பாட்சியர்களால் சேகரிக்கப்படும் ஓலைச்சுவடிகள், காசுகள், செப்புத் திருமேனிகள், கற்சிற்பங்கள் ஆகியவை மேற்கூறிய அகழ்வைப்பகங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவ்வகழ்வைப்பகங்களை, அருங்காட்சியகத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் அருங்காட்சியகங்களுக்கு நிகராக மேம்படுத்துவதற்கும், விரிவுபடுத்துவதற்கும், காட்சிக்கு வைப்பதற்குத் தேவையான காட்சிப் பெட்டிகள், ஒளியமைப்பு, ஒளி ஊடுருவும் நிழற்படங்கள் (Translides) போன்றவைகளை அமைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[ 2002 ஏப்ரல் 9

"பழம்பொருட்கள் மற்றும் கலைப் பொருட்கள் பதிவுச் சட்டம், 1972"-ன் கீழ் சென்னையிலும் திருச்சியிலும் இரு பதிவு அலுவலர் அலுவலகங்கள் இத்துறையின்கீழ் இயங்கி வருகின்றன. இவ்வலுவலக அதிகாரிகள் நூறாண்டுகளுக்கு மேற்பட்ட கலைப்பொருட்கள் மற்றும் தொல்பொருட்களைப் பாதுகாப்பதற்கும், வரலாற்றுச் சிறப்புமிக்க பஞ்சலோகச் சிலைகள் வெளிநாடுகளுக்குக் கடத்தப்படாமல் பாதுகாப்பதற்கும் ஏற்ற வகையில் கலைப் பொருட்களைப் பதிவு செய்து சான்றிதழ்கள் வழங்கி வருகின்றனர். மேற்படி திட்டம் மைய அரசின் முழு நிதியுதவியுடன் நிறைவேற்றப்படுகிறது.

பதினோராவது நிதிக் குழுவின் நிதியுதவியுடன் புராதனக் கட்டடங்கள் பழமை மாறாமல் இருக்கப் பழுதுபார்க்கவும், பாதுகாக்கவும் ரூ.1.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம்**

தொல்லியல் பிரிவின்கீழ் இயங்கிவரும் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ளது. இந்நூலகத்தில் மருத்துவம், கணக்கு, சோதிடம், வான இயல் மற்றும் இலக்கியங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய 72,300-க்கும் மேற்பட்ட பனை ஓலைச்சுவடிகளும், காகிதச் சுவடிகளும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இச்சுவடிகளில் காணப்படும் தகுதி வாய்ந்த தரவுகளைக் கணினியில் கொணர்வதற்காக இணையத் தொடர்புடன் கூடிய கணினியும், அதற்கெனத் தேவைப்படும் தனித் தொலைபேசி ஒன்றும் வாங்குவதற்கும், சுவடி நூலகத்தில் சேகரிப்பில் உள்ள ஓலைச்சுவடிகளையும், தாள் ஆவணங்களையும் பெங்களூர் சிடி நிறுவனம் மூலம், டிஜிடல் கேமரா மூலம் படமெடுத்து (Scanning) அதைக் குறுவட்டில் சேகரித்து வைத்து விற்பனை செய்யவும், பின்னர் மரபு வழியிலும் அரசு நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப நூல் வடிவில் வெளியிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**அருங்காட்சியகங்கள்**

இந்தியாவிலுள்ள மாநில அருங்காட்சியகங்களுள், சென்னை அரசு அருங்காட்சியகம் பழமை வாய்ந்ததும் இரண்டாவது பெரிய அருங்காட்சியகமுமாகும். சென்னை அருங்காட்சியகம் கலை, தொல்லியல், மானிடவியல், இயற்கை அறிவியல், புவியியல், சிறுவர் அருங்காட்சியகம், வேதியியல் பாதுகாப்பு எனப் பலதரப்பட்ட துறைகளின் அரிய சேகரிப்புகளைக் கொண்டு புகழ்பெற்றதாக விளங்குகிறது. இது தேசிய



2002 ஏப்ரல் 9 ]

மரபுச் செல்வங்களைப் பாதுகாக்கும் ஒரு மையமாகும். சென்னை அருங்காட்சியகம் தவிர்த்து 20 மாவட்ட அருங்காட்சியகங்கள் புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், கடலூர், ஈரோடு, உதகமண்டலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, கிருட்டிணகிரி, சிவகங்கை, திருவாரூர், பழனி, நாகப்பட்டினம், காஞ்சிபுரம், கரூர், இராமநாதபுரம், விருதுநகர் ஆகிய நகரங்களில் இயங்கி வருகின்றன.

சென்னை அருங்காட்சியகத்தைப் பன்னாட்டுத் தரத்திற்கு உயர்த்துவதற்காகப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திங்கள்தோறும் பல்வேறு ஆய்வுப் பொருள் குறித்த திங்கள் சொற்பொழிவுகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், தேவையான நிறுவனங்களுக்கு கலை, பண்பாடு மற்றும் அறிவியல் சம்பந்தமான விளக்கப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதைத் தவிர ஓவியக் கண்காட்சி, அருங்காட்சியக வார விழா, தொல்பொருளியல், புவியியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல் போன்ற பிரிவுகளுக்கான பயிற்சியும் ஆண்டுதோறும் கொடுக்கப்படுகின்றன. அருங்காட்சியகம் சம்பந்தப்பட்ட பொருள்கள் குறித்து எல்லாப் பிரிவு மக்களும், மாணவர்களும், ஆசிரியர்களும், ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களும் பயன்பெறுவதற்குரிய பயிற்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. 'தாவரவியல் பொருள்களை உலர் முறையில் பாதுகாத்தல்', 'புவியியல் கனிமங்களின் முக்கியத்துவம்', 'புதைபொருள் சம்பந்தப்பட்ட பணிப்பட்டறை', 'இந்திய கிராமிய மற்றும் தொல்குடிகள் ஓவியங்களுக்கான பணிப்பட்டறை', தொல்பொருள்கள் பாதுகாத்தல் ஆகியவை அடிக்கடி நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டுப் பாறை ஓவியங்கள் மற்றும் சிற்பங்களைச் சித்தரிக்கும் பாறைக் கலைக்கூடம் அமைக்கும் பணி அருங்காட்சியகத்தின் திட்டப்பணிகளில் குறிப்பிடத்தக்கதாகும். பன்னாட்டுத் தரமுள்ள நவீன காட்சிப் பெட்டிகள், புதிய தொழில்நுட்பத்தை அருங்காட்சியகம் பயன்படுத்துவதற்குச் சான்றாகும்.

சென்னை அருங்காட்சியகத்தின் நூற்றாண்டு விழா 1951-ல் கொண்டாடப்பட்டது. இவ்வருங்காட்சியகம் ஏப்ரல் 2001-ல் 150 ஆம் ஆண்டை நிறைவு செய்தது. 150 ஆவது ஆண்டுத் துவக்க விழாவின்போது மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களால் சென்னை அரசு அருங்காட்சியகத்தின் வலை தளம் 1400 ஏ4 பக்கங்களைக் கொண்டதாக உருவாக்கப்பட்டது. டிசம்பர் 18, 19 மற்றும் 20 தேதிகளில் பன்னாட்டுக் கருத்தரங்கம் ஒன்று கல்லாலான கலைப் பொருட்களை, குறிப்பாகச்

சுண்ணாம்புக் கல்லாலான கலைப் பொருட்களைப் பாதுகாப்பது தொடர்பாக நடத்தப்பட்டது. 150 ஆண்டுகளில் நடத்தப்பட்ட முதல் பன்னாட்டுக் கருத்தரங்கு இதுவேயாகும். தேசிய அளவிலான கருத்தரங்கம் ஒன்றும் நடத்தப்பட உள்ளது.

சென்னை அருங்காட்சியகத்தை நவீனப்படுத்தும்பொருட்டு, அதிநவீன டிஜிடல் கேமரா, தொடுஉணர் திரை, ஸ்கேனர், மின்னணு வண்ணப் படியெடுக்கும் கருவி, கணிப்பொறிகள், மின்னஞ்சல் வசதி போன்ற அனைத்து வளரும் தொழில்நுட்பங்களும் அருங்காட்சியகத்தில் அமைக்கப்பட உள்ளன. உள் சுற்றுத் தொலைக்காட்சி (Closed Circuit TV) மற்றும் நவீன பாதுகாப்புச் சாதனங்களும் அமைக்கப்பட உள்ளன.

பதினோராவது நிதிக் குழுவின் நிதியுதவியுடன் புராதன மற்றும் பாரம்பரியக் கட்டடங்களைப் புதுப்பித்துப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2002-2003 ஆம் நிதியாண்டில் இதற்காக அரசு ரூ.4.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**கலை - பண்பாட்டு இயக்ககம்**

'கலை - பண்பாட்டு இயக்ககம்' என்னும் தனி இயக்ககம் அரசால் டிசம்பர் 1991-ல் கலைக் கல்வி நிறுவனங்களையும், கலை அமைப்புகளையும் ஒரு குடையின்கீழ்க் கொணர்ந்து உருவாக்கப்பட்டது. இவ்வியக்கக அமைப்பைப் பணியாட்சி அலுவலகங்கள், கலைக் கல்வி நிறுவனங்கள், கலை வளர்ச்சி நிறுவனங்கள் என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். பணியாட்சி அலுவலகங்களான கலை - பண்பாட்டு இயக்ககம் சென்னையிலும், மண்டலக் கலை - பண்பாட்டு மையங்கள் மாநிலத்தில் 6 இடங்களிலும் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகங்கள் கலைப் பணிகளை ஒருங்கிணைத்து, வழிகாட்டி, ஆய்வு செய்து அரசின் கொள்கைகள் நிறைவேறத் துணை நிற்கின்றன. கலைக் கல்வி நிறுவனங்கள் இசை, நாட்டியம், கருவியிசை, நாட்டுப்புறக் கலை, சிற்பக்கலை, பிற கவின் கலைகளைக் கற்பிக்கும் வகையில் அரசு இசைக் கல்லூரிகள் 4 இடங்களிலும், மாலைநேர இசைக் கல்லூரி சென்னையில் 4 மையங்களிலும், மதுரையில் ஒரு மையத்திலும், மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் 17 நகரங்களிலும், அரசு கவின் கலைக் கல்லூரிகள் சென்னை, கும்பகோணம் ஆகிய நகரங்களிலும், அரசு கட்டடச் சிற்பக் கலைக் கல்லூரி மாமல்லபுரம் நகரத்திலும் இயங்கி வருகின்றன. கலை வளர்ச்சி நிறுவனங்களான தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு ஆகியவை சென்னையிலும், சவகர் சிறுவர் மன்றங்கள் மாநிலத்தில் 35 இடங்களிலும், மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்டக் கலை மன்றங்களும் இயங்கி வருகின்றன.



**மண்டலக் கலை - பண்பாட்டு மையங்கள்**

கலைப் பணிகளை ஒருங்கிணைத்து, வழிகாட்டி, ஆய்வு செய்து அரசின் கொள்கைகளை நிறைவேற்றிவரும் மண்டலக் கலை - பண்பாட்டு மையங்கள் காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய 6 இடங்களில் இயங்கி வருகின்றன. கலை - பண்பாட்டு இயக்கக உதவி இயக்குநர்களை தலைமை அலுவலர்களாகக் கொண்டு இயங்கும் இம்மையங்கள், கலை - பண்பாட்டுத் துறையின் சார்பில் தனித்தும், மாவட்டக் கலை மன்றங்கள், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு, தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம், பிற தனியார் கலை அமைப்புகள், மேதகு தமிழக ஆளுநர் தலைமையில் இயங்கும் தென்னகப் பண்பாட்டு மையம் ஆகியவற்றுடன் இணைந்தும் கலை விழாக்களையும், கலைப் பயிற்சிகளையும் அளிக்கின்றன.

**கலைக் கல்வி நிறுவனங்கள்**

**இசைக் கல்லூரிகள்**

அரசு இசைக் கல்லூரிகள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருவையாறு ஆகிய நான்கு இடங்களில் இயங்கி வருகின்றன. சென்னையில் திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், தியாகராயநகர், புரசைவாக்கம் என நான்கு இடங்களிலும், மதுரையில் ஓர் இடத்திலும் மாலைநேர இசைக் கல்லூரி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அரசு இசைக் கல்லூரிகளில் மூன்றாண்டுப் பட்டயப் படிப்புகள் நடைபெறுகின்றன. திருவையாறு கல்லூரியில் மட்டும் பட்டயப் படிப்புகளுடன் மூன்று ஆண்டுகள் இளங்கலை இசைப் பட்டப் படிப்பும் நடைபெறுகின்றது. சென்னை, மதுரை கல்லூரிகளில் மட்டும் ஓராண்டு இசை ஆசிரியர் பயிற்சி பட்டயப் படிப்பு உள்ளது. மாலைநேர இசைக் கல்லூரி மையங்களில் ஈராண்டுப் படிப்பு முடித்தவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

**இசைப் பள்ளிகள்**

குரலிசை, பரதம், நாதசுரம், தவில், தேவாரம் ஆகிய பாடப் பிரிவுகளில் மூன்றாண்டுகள் சான்றிதழ் படிப்புகள் வழங்கும் மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் திருவாரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சேலம்,

திருநெல்வேலி, கரூர், பெரம்பலூர், தூத்துக்குடி, விழுப்புரம், கடலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கிருட்டிணகிரி, சீர்காழி, சிவகங்கை, இராமநாதபுரம், ஈரோடு ஆகிய பதினேழு நகர்களில் செயல்பட்டு வருகின்றன.

**கவின் கலைக் கல்லூரிகள்**

சென்னை, கும்பகோணம் ஆகிய இடங்களில் 'அரசு கலை கைத்திறன் கல்லூரிகள்' என்னும் பெயரில் செயல்பட்டு வந்த கல்லூரிகள், தற்போது அரசு கவின் கலைக் கல்லூரிகள் (Government College of Fine Arts) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகின்றன.

சென்னை கவின் கலைக் கல்லூரியில் சுடுமண் (ஆலையக) வடிவமைப்பு, துகிலியல் (ஆலையக) வடிவமைப்பு, காட்சித்தொடர்பு வடிவமைப்பு, வண்ணக் கலை, சிற்பக் கலை, பதிப்போவியம் ஆகிய பிரிவுகளில் நான்கு ஆண்டுகள் இளங்கலைப் பட்டமும், வண்ணக் கலை, காட்சித்தொடர்பு வடிவமைப்பு, சுடுமண் (ஆலையக) வடிவமைப்பு, துகிலியல் (ஆலையக) வடிவமைப்பு ஆகிய பிரிவுகளில் இரண்டு ஆண்டுகள் முதுகலைப் பட்டமும் வழங்கப்படுகின்றன. இக்கல்லூரியில் சேர்வதற்கான கல்வித் தகுதி பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி ஆகும். இக்கல்லூரி 150 ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப்பட்ட பெருமைக்குரியது. இக்கல்லூரியின் பாடத்திட்டங்கள் அனைத்தும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் இசைவு பெற்றவையாகும். கும்பகோணம் கவின் கலைக் கல்லூரியில் வண்ணக் கலை, காட்சித் தொடர்பு வடிவமைப்பு, சிற்பக் கலை ஆகிய மூன்று பிரிவுகளில் ஐந்து ஆண்டுகள் பட்டமும், வண்ணக் கலை, சிற்பக் கலை ஆகிய பிரிவுகளில் இரண்டு ஆண்டுகள் முதுகலைப் பட்டமும் வழங்கப்படுகின்றன. இக்கல்லூரியில் சேர்வதற்கான கல்வித் தகுதி பத்தாம் வகுப்பு தேர்ச்சி ஆகும். இப்பாடத்திட்டங்கள் அனைத்தும் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் இசைவு பெற்றவையாகும்.

**கட்டட சிற்பக் கலைக் கல்லூரி**

மாமல்லபுரத்தில் அரசு கட்டட சிற்பக் கலைக் கல்லூரி செயல்பட்டு வருகின்றது. இக்கல்லூரியில் கடந்த ஆண்டு முதல் நான்காண்டு பட்டப் படிப்பு நடைபெற்று வருகின்றது. மரபுக் கட்டடக் கலைப் பிரிவில் தொழில் நுட்பவியல் இளவல் பட்டமும், மரபுச் சிற்பக் கலை, மரபு ஓவியம் - வண்ணம் ஆகிய பிரிவுகளில் கவின் கலை இளவல் பட்டமும் வழங்கப்படுகின்றன.



**தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு**

கவின் கலைகளான ஓவியம், சிற்பம், பதிப்போவியம் ஆகிய கலைகளை வளர்க்கவும், பாதுகாக்கவும், பரப்பவும், இக்கலைகளில் ஈடுபட்டுள்ள படைப்பாளர்களை ஊக்குவிக்கவும் தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு, அரசால் 1975-ல் தோற்றுவிக்கப்பட்டது.

ஓவிய சிற்பக் கலைத் துறைகளில் சிறந்த சாதனை புரிந்த கலை வல்லுநர்களைப் பாராட்டும் வகையில் மரபுவழி, புதுப்பாணிக் கலைப் பிரிவுகளைச் சார்ந்த புகழ்மிக்க ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு 'கலைச்செம்மல்' விருதுகள் வழங்கப்படுகின்றன. இக்கலைச்செம்மல் விருதாளர் ஒவ்வொருவருக்கும் பாராட்டிதழுடன் ரூ.20,000/- விருதுத்தொகை வழங்கப்படுகிறது. இதுவரை மரபுவழிப் பிரிவில் 5 ஓவிய சிற்பக் கலை வல்லுநர்களும், புதுப்பாணிப் பிரிவில் 36 ஓவிய சிற்பக் கலை வல்லுநர்களும் 'கலைச்செம்மல்' விருது வழங்கப்பட்டு பாராட்டப்பட்டுள்ளனர்.

மரபுவழி, புதுப்பாணிக் கலைக் காட்சிகள் ஓவிய, சிற்பக் கலைகளை மேம்படுத்தவும், படைப்பாளர்களை ஊக்குவிக்கவும் நடத்தப்படுகின்றன. இக்கலைக் காட்சிகளில் சிறந்த கலைப் படைப்புகளை உருவாக்கிய ஓவிய சிற்பக் கலைஞர்களுக்கு கலைக் காட்சி விருதுகள் வழங்கப்படுகின்றன. இதுவரை மரபுவழிக் கலைக் காட்சிகளில் சிறந்து விளங்கும் படைப்புகளை உருவாக்கிய 43 ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு கலைக் காட்சி விருதுகள் ரூ.5,000/- வீதம் வழங்கப்பட்டுள்ளன. புதுப்பாணி ஓவிய சிற்பக் கலைக் காட்சியில் 30 அகவைக்கு மேற்பட்ட மூத்த கலைஞர்கள் பங்கு கொள்ளும் பிரிவில் ரூ.15,000/- வீதமும், 30 அகவைக்குட்பட்ட இளம் கலைஞர்கள் பங்கு கொள்ளும் பிரிவில் ரூ.5,000/- வீதமும் கலைக் காட்சி விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. புதுப்பாணி கலைக் காட்சிகளில் இதுவரை 234 ஓவிய சிற்பக் கலைஞர்களுக்கு கலைக் காட்சி விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

திறமைமிக்க தகுதிவாய்ந்த வளரும் ஓவிய, சிற்பக் கலைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில், அவர்களது கலைப் படைப்புகளடங்கிய கலைக் காட்சியினை நடத்துவதற்கு ரூ.5,000/- வீதம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டம் வளரும் ஓவிய சிற்பக் கலைஞர்களை ஊக்கப்படுத்தவும், நுண்கலைகள் பற்றிய ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும் வாய்ப்பாக அமைகிறது. இதுவரை தனியார் கலைக் காட்சி நடத்துவதற்காக 111 கலைஞர்களுக்கும், கூட்டுக் கலைக் காட்சி நடத்துவதற்காக 10 குழுக்களுக்கும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

[ 2002 ஏப்ரல் 9

நுண்கலைகளில் இளங்கலை இறுதியாண்டு பயிலும் சிறந்த மாணாக்கர்களுக்கு ஆண்டுக்கு ரூ.3,000 வீதமும், முதுகலை இறுதியாண்டு பயிலும் சிறந்த மாணாக்கர்களுக்கு ஆண்டுக்கு ரூ.5,000 வீதமும் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை இளங்கலைப் பிரிவில் 358 மாணாக்கர்களுக்கும், முதுகலைப் பிரிவில் 22 மாணாக்கர்களுக்கும் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழகக் கலை வல்லுநர்களின் கலைப்படைப்புகள் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள ஓவியக் கலைக்கூடங்கள் உதகமண்டலத்திலும், மதுரையிலும் இயங்கி வருகின்றன. பல்வேறு மாநிலங்களிலுள்ள ஓவிய, சிற்பக் கலைஞர்களிடையே கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ள உதவும் வகையில் ஓவியர்கள் முகாம்களும், சிற்பக் கலைஞர்கள் முகாம்களும் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை நடத்தப்பட்ட 24 முகாம்களில் 250 கலைஞர்கள் பங்குகொண்டு பயனடைந்துள்ளார்கள்.

தமிழ்நாட்டின் ஓவியம், சிற்பம் முதலிய கலைகளின் மரபுப்பாங்கையும், புதுப்பாங்கையும் அறிவதற்கு உதவும் வகையில் 'நுண்கலை' என்னும் தமிழ், ஆங்கில இருமொழி கலையிதழ் வெளியிடப்பட்டு வருகிறது. இதுவரை 21 நுண்கலை இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்நாட்டு ஓவியம், சிற்பம் ஆகிய நுண்கலைகளைப்பற்றி ஆவணத் தொகுப்பு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. நுண்கலை பயில ஆர்வமுள்ளவர்களுக்கான நுண்கலைப் பயிற்சி வகுப்புகள் ஞாயிற்றுக் கிழமைகள்தோறும் சென்னை, அரசு கவின் கலைக் கல்லூரியில் நடத்தப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம்**

தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் 1979 ஆம் ஆண்டு சென்னையில் தொடங்கப் பெற்று, தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. ஐந்து வயதிலிருந்து பதினாறு வயதுக்குட்பட்ட சிறுவரிடையே கலைப் பயிற்சி அளிப்பதும் கலைத் திறமைகளை மேம்படுத்துவதும் இதன் நோக்கங்களாகும்.

தமிழ்நாட்டில் 35 இடங்களில் சவகர் சிறுவர் மன்றங்கள் இயங்கி வருகின்றன. 23 மாவட்டத் தலைநகர்களில் மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்கள் எனவும், 10 இடங்களில் சவகர் சிறுவர் மன்ற விரிவாக்க மையங்கள் எனவும், இரு இடங்களில் சவகர் சிறுவர் மன்ற ஊரக மையங்கள் எனவும் இயங்கி வருகின்றன.



2002 ஏப்ரல் 9 ]

இம்மையங்களில் பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், கைவினை, குரலிசை, நாடகம், உடல்திறன் பயிற்சி, மிருதங்கம் - தபேலா, கராத்தே, கிட்டார், கணினி, ஆர்மோனியம் - கீ போர்டு, வீணை, அயல்முரசு (Drums), அயல்முழவு (Bands), தையல், ஓவியம், திரைஅச்சு, புல்லாங்குழல், யோகா மற்றும் சிலம்பாட்டம் ஆகிய இருபது கலைகளில் கீழ்க்கண்டவாறு பகுதி நேர பயிற்சி அளிக்கப்படுகிறது. சென்னையில் 17 கலைகளில் வாரம் ஆறு நாட்களில் மாலை நேரங்களிலும், மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்கள், விரிவாக்க மையங்களில் ஏதேனும் நான்கு கலைகளில் வாரத்தில் மூன்று நாட்களும், ஊரக மையங்களில் இரண்டு கலைகளில் வாரத்தில் மூன்று நாட்களும் பயிற்சியளிக்கப்படுகின்றன.

மாநிலத்திலுள்ள அனைத்துச் சவகர் சிறுவர் மன்றங்களிலும் மொத்தம் 7,000 சிறுவர், சிறுமியர் பயிற்சி பெற்று வருகின்றனர். இரு ஊரக மையங்கள் நீங்கலாக, 33 சவகர் சிறுவர் மன்றங்களில் சிறுவர் நூலகங்கள் செயல்படுகின்றன.

2001-2002 ஆம் ஆண்டில் அனைத்துச் சவகர் சிறுவர் மன்றங்களிலும் கோடைக்காலப் பயிற்சிகள் நடத்தப்பட்டன. இவற்றில் 12,000 சிறார்கள் பயன்பெற்றனர். மேலும் மாநில அளவில் கொடைக்கானல் நகரில் 100 சிறுவர்களுக்குக் கோடைக்காலச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

பெங்களூரில் நடத்தப்பெற்ற கலை பரிமாற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாட்டிலிருந்து ஒன்பது சிறுவர்களும், புது டெல்லியில் நடத்தப்பெற்ற தேசிய குழந்தைகள் முகாமில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 48 சிறுவர்களும், போபால் நகரில் நடத்தப்பெற்ற தேசிய சுற்றுச்சூழல் மாநாட்டில் தமிழ்நாடு சிறுவர் மன்றங்களிலிருந்து 14 சிறுவர்களும் கலந்துகொண்டு தங்கள் கலைத் திறமையை வெளிப்படுத்தினர். மேலும், தேசிய சிறுவர் மன்றத்தின் மூலம் கிர்கிசுத்தான் நாட்டில் நடைபெற்ற உலக இளைஞர் விழாவில் காஞ்சிபுரம் சவகர் சிறுவர் மன்றச் சிறுமி கரகக் கலையையும், மங்கோலியாவில் நடத்தப்பெற்ற உலகக் கோடை விழாவில் மதுரை சவகர் சிறுவர் மன்றச் சிறுவன் சிலம்பாட்டத்தையும் நிகழ்த்தி, தமிழகக் கலையை உலகறியச் செய்துள்ளனர். காஞ்சிபுரம் நகரில் மாநில அளவிலான மாரிக்கால முகாமில் தமிழ்நாட்டிலுள்ள சவகர் சிறுவர் மன்றங்களிலிருந்து 100 சிறார்களுக்கு சிறப்புப் பயிற்சியளிக்கப்பட்டது. அம்பாலா நகரில் நடைபெற்ற தேசிய அளவிலான உடல்திறன் போட்டியில் சவகர் சிறுவர் மன்றங்களிலிருந்து ஆறு சிறார்கள் கலந்துகொண்டு பல பரிசுகளை வென்றனர்.

சென்னை சவகர் சிறுவர் மன்றத்தினைச் சேர்ந்த செல்வன் பி.எம். ரசூல், எழுத்துக் கலைக்காக ரூ.10,000 மதிப்புடைய சேமிப்புப் பத்திரச் சான்றிதழ் அடங்கிய மேதகு குடியரசுத் தலைவரின் 'பால்ஸ்ரீ' விருதினைப் பெற்றுள்ளார்.

**தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்**

இந்திய அரசின், சங்கீத நாடக அகடமியின் நோக்கங்களை மாநில அளவில் செயற்படுத்துவதற்காகவும், தொன்மை வாய்ந்த தமிழகக் கலைகளைப் போற்றிப் பாதுகாக்கவும், தமிழக அரசால் 1955 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம், 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என அரசால் பெயர் மாற்றம் செய்யப்பெற்றது.

கலைத் துறையின் மேம்பட்ட வளர்ச்சிக்குச் சேவை செய்த புகழ்மிக்க கலைஞர்களைப் பாராட்டுகின்ற வகையில் கலைமாமணி விருது வழங்குதல், நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு திங்கள்தோறும் நிதியுதவி வழங்குதல், மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு குடும்ப நல நிதி வழங்குதல் முதலிய சிறந்த திட்டங்கள் இயல் இசை நாடக மன்றத்தால் செயல்படுத்தப்படுகின்றன. இதுவரை 1,168 கலைஞர்களுக்குக் கலைமாமணி விருது வழங்கப்பெற்றுள்ளது.

வாழ்நாள் முழுவதும் கலையையே தொழிலாகக் கொண்டு அகவை முதிர்ந்த நிலையில் நலிந்து வாழும் கலைஞர்களுக்கு திங்கள்தோறும் ரூ.500 நிதியுதவியாக வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 5,565 கலைஞர்கள் பயனடைந்துள்ளனர். மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு குடும்ப நல நிதி தற்போது ரூ.5,000 வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை மொத்தம் 225 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

இந்தியத் திருநாட்டின் தேசிய ஒருமைப்பாட்டு ஒற்றுமை உணர்வை வலுவாக்கவும், மாநிலங்களிடையே கலை - பண்பாட்டு மரபினைப் பற்றிய தகவல்களைப் பரிமாறிக்கொள்ளவும் இந்திய அரசின் சார்பில் புது டெல்லி, சங்கீத நாடக அகடமி, தமிழக அரசின் சார்பில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றமும் இணைந்து மாநிலங்களிடையே கலைக் குழுக்கள் பரிமாற்றத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை தமிழகத்திற்கு 78 வெளிமாநிலக் கலைக் குழுக்கள் வருகை புரிந்துள்ளன. 81 தமிழகக் கலைக் குழுக்கள் வெளிமாநிலங்களுக்குச் சென்றுள்ளன. கடந்த ஆண்டில் 32 கலைஞர்கள் கொண்ட இலட்சத்தீவு கலைக்குழு தமிழகத்தில் சென்னை, தருமபுரி,



விழுப்புரம், கரூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளது. தமிழகக் கலைக் குழு இலட்சத்தீவு மாநிலம் சென்று கலை நிகழ்ச்சிகள் நடத்த உள்ளது.

முறையாகக் கலைகளைக் கற்றுத் தேர்ந்த திறம்படைத்த இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ் குரலிசை, கருவியிசை, பரதநாட்டியம் ஆகிய கலைப் பிரிவுகளைச் சேர்ந்த இளம் கலைஞர்களுக்கு கலை நிகழ்ச்சிகள் நடத்திட மன்றம் வாய்ப்புகள் வழங்கி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், 1,597 இளம் கலைஞர்கள் பயன் துய்த்துள்ளனர். நடப்பாண்டு இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயற்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கலை நூல்களைப் பதிப்பித்து வெளியிட நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 103 நூல்கள் மன்ற நல்கையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், 8 நூல்கள் தேர்வு செய்யப்பட்டு ஒவ்வொரு நூல் வெளியீட்டிற்கும் உயர்ந்த அளவாக ரூ.15,000 வழங்கப்படவுள்ளது.

தமிழ்ப் பண்பாட்டைச் சித்தரித்து, தமிழில் சிறந்த நாடகங்கள் தயாரித்திட நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரை 42 நாடகங்கள் மன்ற நல்கையுடன் உருவாக்கி மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளன. மேலும், 14 நாடகங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாடகத்திற்கும் ரூ.15,000/- முதல் ரூ.22,000/- வரை நிதியுதவி வழங்கி மன்றத்தால் ஏற்பாடு செய்யப்படும் நாடக விழாவில் மேடையேற்றம் செய்யப்பட உள்ளது.

ஊரகக் கலைஞர்களுக்கும், கலைக் குழுக்களுக்கும் இசைக் கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க மன்றம் நிதியுதவி வழங்கி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 1,425 ஊரகக் கலைஞர்களும்/கலைக் குழுக்களும் பயன் துய்த்துள்ளனர். இத்திட்டம் மேலும் சிறப்புடன் செயற்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் ஒவ்வொரு தனிப்பட்ட கலைஞருக்கும் ரூ.750/- தொகையும், ஒவ்வொரு கலைக் குழுவிற்கும் ரூ.2,500/- தொகையும் நல்கையாக வழ்ங்கப்படுகிறது.

நட்டுவாங்கப் பயிற்சி அளிக்கும் திட்டத்தின்கீழ் 6 பரதநாட்டிய மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு, சிறந்த பரதநாட்டிய வல்லுநர் மூலம் மன்ற வளாகத்தில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. பயிற்சி பெறும் மாணவிகள் ஒவ்வொருவருக்கும் படிப்புதவித் தொகையாகத்

திங்கள்தோறும் ரூ. 250 வீதமும், ஆசிரியருக்கு திங்கள்தோறும் மதிப்பூதியமாக ரூ. 3,000 வீதமும் வழங்கப்பட்டு வருகின்றது.

இளம் நாதசுரம், தவில் கலைஞர்களுக்கு சிறப்புப் பயிற்சி வழங்கும் திட்டத்தின்கீழ் 10 நாதசுரக் கலைஞர்களும், 4 தவில் கலைஞர்களும் தேர்வு செய்யப்பட்டு கலை வல்லுநர்களால் மன்ற வளாகத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. பயிற்சி பெறும் நாதசுரம், தவில் கலைஞர்களுக்கு படிப்புதவித் தொகையாகத் திங்கள் தோறும் ரூ. 350 வீதமும், நாதசுர ஆசிரியருக்கு திங்கள்தோறும் மதிப்பூதியமாக ரூ. 3,000 வீதமும், தவில் ஆசிரியருக்குத் திங்கள்தோறும் மதிப்பூதியமாக ரூ. 2,000 வீதமும் வழங்கி இத்திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

ஐந்து வயது முதல் பதினைந்து வயது வரையிலான இசைத் துறையைச் சார்ந்த 30 இளங்கலைஞர்களும், பரதநாட்டியத் துறையைச் சார்ந்த 20 இளங்கலைஞர்களும் தேர்வு செய்யப்பட்டு, அந்தந்தத் துறையில் தங்களது திறனை வளர்த்துக்கொள்ள ஊக்குவிக்கும்பொருட்டு இசைத் துறை இளங்கலைஞர்களுக்கு ஆண்டிற்கு ஒவ்வொருவருக்கும் ரூ.1,600/- வீதமும், பரதநாட்டியத் துறை இளங்கலைஞர்களுக்கு ஆண்டிற்கு ஒவ்வொருவருக்கும் ரூ.2,400 வீதமும் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

பல்வேறு கலைப் பணிகளுக்காகத் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கு மன்றம் நல்கை வழங்கி வருகின்றது. சென்ற ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்தின் மகளிர் மட்டுமே பங்குபெறும் "மௌனக்குரல்" என்ற அமைப்பிற்கு, "மணிமேகலை" என்ற நாடகம் தயாரித்து மேடையேற்றம் செய்ய ரூ.10,000 நல்கை வழங்கப்பட்டுள்ளது. நாடகப் பயிலரங்கம் நடத்திய வகைக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு ரூ.20,000 நல்கை வழங்கப்பட்டுள்ளது.

கலைமேதைகளின் நினைவு விழா, நாட்டுப்புறக் கலை விழா, நாடக விழா, நாட்டிய விழா ஆகிய விழாக்களையும், பூம்புகாரில் இந்திர விழா, குற்றாலத்தில் சாரல் விழா ஆகிய விழாக்களையும் மன்றம் பல்வேறு அரசுத் துறைகளுடன் இணைந்து நடத்தி வருகின்றது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள, தமிழ்நாட்டின் பாரம்பரியப் பண்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி ஆர்வத்தைப் பெருக்குதல், தெரு நாடகங்கள் உள்ளிட்ட பண்பாட்டு மரபுகளுக்கு புத்துயிரூட்டுதல் ஆகிய பணிகளை முனைப்புடன் செயற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



## இணைப்பு V

*(278 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### கோரிக்கை எண் 37 - பொதுத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2002 - 2003

**பொதுத் துறை**

பொதுத் துறை, தலைமைச் செயலரின் நேரடி நிருவாகக் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. பிற மாநிலங்களில் இத்துறை "பொது நிருவாகத் துறை" என்று அழைக்கப்படுகிறது. பொதுத் துறையில் நடவடிக்கை கவனிக்கப்பட்டு வரும் சில முக்கிய பணிகள் பின்வருமாறு:-

* மரபுப் பணி
* அகதிகள் மற்றும் தாயகம் திரும்பியோர் நலன்
* சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்களது வாரிசுதாரர்களுக்கு ஓய்வூதியம் அளித்தல்
* முதலமைச்சரின் சிறப்புப் பிரிவு
* முன்னாள் படைவீரர்களின் நலன் மற்றும் முன்னாள் படைவீரர் கழகத்தினை நிர்வகித்தல்
* புது டெல்லி, சென்னை மற்றும் உதகமண்டலத்தில் உள்ள அரசு விருந்தினர் இல்லங்களை நிர்வகித்தல்
* சட்டம் மற்றும் ஒழுங்கு குறித்த பணிகள்
* இந்திய ஆட்சிப் பணியாளர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் குறித்த பணிகள்
* தேர்தல்கள் நடத்துதல்
* தலைமைச் செயலக வளாகத்திலுள்ள கட்டடங்களின் பராமரிப்பு
* மாநிலங்களுக்கிடையேயான மற்றும் தென் மண்டலக் குழுக்கள் சம்பந்தப்பட்ட அலுவல்கள்

2. மேற்கண்ட பணிகள் தவிர, மேதகு ஆளுநர், அமைச்சர்கள் மற்றும் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் சம்பந்தப்பட்ட பணிகளையும் பொதுத் துறை

[ 2002 ஏப்ரல் 9

கவனிக்கிறது. இத்துறையில் உள்ள மரபுச் சீர்முறைப் பிரிவு, இந்தியக் குடியரசுத் தலைவர், இந்தியப் பிரதமர், மத்திய அரசு அமைச்சர்கள் போன்ற சீர்மக்கள் வருகையின்போதும், ஏனைய மாநிலங்களைச் சேர்ந்த சீர்மக்கள் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வருகையின் போதும், அது தொடர்பான பணிகளையும் கவனிக்கிறது. பொதுத் துறையின் மற்றொரு பிரிவு, முன்னாள் படைவீரர், போரில் மரணம் எய்திய வீரர்களின் மனைவியர், முன்னாள் படைவீரர்தம் குடும்பங்கள் மற்றும் விடுதலைப் போராட்ட வீரர்கள் ஆகியோர் நலன் குறித்த பணிகளைக் கவனிக்கிறது. தலைமைச் செயலக வளாகத்துக்குள் கட்டுமானப் பணிகள், மேற்பார்வை மற்றும் சுற்றுப்புறப் பராமரிப்பு ஆகியவையும் இத்துறையைச் சார்ந்ததே ஆகும். மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் இடையே பாதுகாப்பு தொடர்பாக பொதுவாக உள்ள பிரச்சினைகள் குறித்து பாதுகாப்புத் துறையுடன் இத்துறை தொடர்பு கொள்கிறது. மேலும், அமைச்சர்களின் அலுவலகப் பணியாளர்கள் தொடர்பான அனைத்து நிருவாகப் பணிகளையும், அவர்களுக்கு மோட்டார் வண்டிகள், எழுதுபொருள், தொலைபேசி மற்றும் அலுவலக சாதனங்கள் ஆகியவை வழங்குவது குறித்த பணிகளையும் இத்துறை கவனிக்கிறது.

3. 1952 ஆம் ஆண்டின் விசாரணை ஆணையச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்படும் விசாரணை ஆணையங்கள் மற்றும் மனித உரிமைகள் ஆணையம் ஆகியவற்றின் நிருவாகம் சம்பந்தப்பட்ட பணிகளையும் இத்துறை கவனித்து வருகிறது. மேற்காணும் தகைசால் பெருமக்களுக்குத் தேவையான அலுவலக அறைகள் ஒதுக்குதல் மற்றும் அவற்றைப் பராமரித்தல், அறைகலன்கள், தொலைபேசி வசதி, சிருந்து வழங்குதல் போன்ற பணிகளை வரைமுறைப்படி இத்துறை செய்து வருகிறது.

## அகதிகள் மறுவாழ்வு

### அகதிகள்

4. 1983 ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரத்தின் காரணமாக, இந்திய வம்சாவழி இலங்கைத் தமிழர்கள் புகலிடம் தேடி இந்தியாவிற்கு அகதிகளாக வரத் துவங்கி, அவர்களின் வருகை இன்றும் தொடர்ந்துகொண்டிருக்கிறது. இடையில், 1987-91 மற்றும் 1992-95 ஆகிய இரு கால கட்டங்களில் சுமார் 1.93 இலட்சம் இலங்கை அகதிகள் அவர்களாக விருப்பம் தெரிவித்ததன் அடிப்படையில் இலங்கைக்குத் திரும்ப அனுப்பி வைக்கப்பட்டனர். தற்போது தமிழ்நாடு முழுவதிலும்



2002 ஏப்ரல் 9 ]

உள்ள 3 சிறப்பு அகதிகள் முகாம்கள் உள்பட, 111 அகதிகள் முகாம்களில் 31-03-2002 அன்றைய நிலவரப்படி 16,960 குடும்பங்களைச் சேர்ந்த 63,951 இலங்கை அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் போராளிகள் மற்றும் சந்தேகத்திற்குரியவர்கள் என்று கருதப்படும் நபர்கள் செங்கல்பட்டு, வேலூர் மற்றும் மேலூர் ஆகிய இடங்களிலுள்ள சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்படுகின்றனர். இந்த அகதிகளுக்கு மைய அரசினால் நிர்ணயிக்கப்பட்ட அளவில் பல்வேறு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அகதி முகாம்களில் இருக்கும் அகதிகளின் பராமரிப்பிற்கான பல்வேறு செலவினங்களும் முதலில் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் மைய அரசினால் இச்செலவு ஈடு செய்யப்பட்டு வருகிறது.

### இலங்கை அகதிகளுக்கு வழங்கப்படும் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு உதவிகள்

#### பணக்கொடை

5. தமிழகத்திலுள்ள பல்வேறு அகதி முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு மைய அரசு நிர்ணயித்துள்ளவாறு கீழ்க்கண்ட விகிதங்களில் பணக்கொடை அளிக்கப்பட்டு வருகிறது:

| | | |
|---|---|---|
| 1. | குடும்பத் தலைவர் | மாதமொன்றுக்கு ரூபாய் 200 |
| 2. | 12 வயதும் மற்றும் அதற்கு மேலுமுள்ள ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் | மாதமொன்றுக்கு ரூபாய் 144 |
| 3. | முதல் குழந்தை (12 வயதுக்குக் குறைவான) | மாதமொன்றுக்கு ரூபாய் 90 |
| 4. | அதற்குப் பின்னர் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் | மாதமொன்றுக்கு ரூபாய் 45 |

மேற்படி முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் அனைவருக்கும் பணக்கொடை வழங்கும்பொருட்டு ஆண்டொன்றுக்கு ரூ.11 கோடி வரை செலவு செய்யப்பட்டு வருகிறது.

#### மலிவு விலை அரிசி

6. அகதி முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு அரிசி மலிவு விலையில், கிலோ ஒன்றுக்கு ரூ.0.57 பைசா வீதம் மைய அரசினால் நிர்ணயிக்கப்பட்ட கீழ்க்கண்ட அளவுகளில் வழங்கப்பட்டு வருகிறது:

(நாளொன்றுக்கு)

| | | |
|---|---|---|
| 1. | பெரியவர்கள் (8 வயதும் அதற்கு மேலும்) | 400 கிராம் |
| 2. | குழந்தைகள் (8 வயதிற்குள்) | 200 கிராம் |

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தங்களது நியாயவிலைக் கடைகள் மூலமாக இம்மலிவு விலை அரிசியை முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு வழங்குகிறது. இவ்வாறு வழங்கப்படும் அரிசியின் மலிவு விலைக்கும், கொள்முதல் விலைக்கும் உள்ள வித்தியாசத் தொகையை பின்னர் அரசிடமிருந்து பெற்றுக்கொள்கிறது. இவ்வாறு அகதிகளுக்கு மலிவு விலையில் அரிசி வழங்குவதால் அரசுக்கு ஆண்டிற்கு ரூ. 5.3 கோடி செலவாகிறது.

**துணிமணிகள்**

7. மைய அரசால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலின்படி ஒவ்வொரு ஆண்டும் முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதி குடும்பங்களுக்கு துணிமணிகள், பாய் போன்றவை இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை முகாம்களில் உள்ள அகதி குடும்பங்களுக்கு போர்வைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதற்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ ரூ. 2 கோடி செலவிடப்பட்டு வருகிறது.

**பாத்திரங்கள்**

8. முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளின் குடும்பங்களுக்கு இரண்டாண்டிற்கு ஒருமுறை 5 வகையான, 8 பாத்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக இரண்டாண்டிற்கு ஒருமுறை ரூ. 15 இலட்சம் செலவிடப்பட்டு வருகிறது.

**மருத்துவ உதவிகள்**

9. முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு அருகில் உள்ள அரசினர் மருத்துவமனைகளிலும் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன.



**கல்வி வசதிகள்**

10. இலங்கை அகதிகளின் குழந்தைகளுக்கு கல்வி வசதி வழங்குதலில் தமிழ்நாடு அரசு மிகவும் தாராளமான போக்கைக் கடைப்பிடித்து வருகின்றது. அகதிகளின் குழந்தைகள் இலங்கையில் படித்தமைக்கான பள்ளி மாற்றுச் சான்றிதழ்கள் இல்லாமலேயே தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப்படுவதுடன், கல்லூரிவரை அவர்களது கல்வி தொடரவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு சீருடைகள், மதிய உணவு, பயணச்சீட்டு, பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. முகாமிற்கு வெளியே தங்கிப் படிக்கும் குழந்தைகளுக்கான பணக்கொடை மற்றும் இதர நிவாரண உதவிகள், முகாம்களில் தங்கியிருக்கும் அவர்களது பெற்றோர்களிடம் வழங்கப்பட்டு வருகின்றன.

11. இலங்கை அகதிகளின் குழந்தைகளுக்கு தொழிற் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்களில் கீழ்க்கண்டவாறு இட ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன:

| | | | |
|---|---|---|---|
| 1. | மருத்துவக் கல்லூரிகள் | - | 20 இடங்கள் |
| 2. | பொறியியல் கல்லூரிகள் | - | 25 இடங்கள் |
| 3. | வேளாண்மைப் பொறியியல் கல்லூரிகள் | - | 3 இடங்கள் |
| 4. | அரசு சட்டக் கல்லூரிகள் | - | 5 இடங்கள் |
| 5. | கால்நடை மருத்துவக் கல்லூரி/ மீன்வளக் கல்லூரி | - | 1 இடம் |
| 6. | வேளாண்மைக் கல்லூரிகள் | - | 7 இடங்கள் |
| 7. | பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் | - | 30 இடங்கள் |

[ 2002 ஏப்ரல் 9

## 12. அகதிகளை அவர்களின் தாயகத்திற்கு மீள அனுப்புதல்

12. இலங்கையில் போர் அமைதி ஏற்பட்ட பிறகு பெரும்பாலான இலங்கை அகதிகளை அவர்களது தாயகத்திற்குத் திருப்பி அனுப்ப கடந்த காலத்தில் அரசு ஏற்பாடு செய்தது.

| காலம் | வெளியேறும் அகதிகள் | |
|---|---|---|
| | அரசு ஏற்பாட்டின்படி | சொந்த ஏற்பாட்டின்படி |
| பகுதி-1 24-7-83-லிருந்து 1987 வரை | 45,281 | 13,516 அவசர சான்று வைத்துள்ள இலங்கை குடியுரிமை உடையவர். |
| பகுதி-2 25-8-89 முதல் 30-4-1991 வரை | 54,188 | 75,587 ஏற்கத் தகுந்த பயண ஆவணங்கள். |
| பகுதி-3 31-7-1996-லிருந்து 25-2-2002 வரை | இல்லை | 5,032 தகுதி நிலை தீர்மானிக்கப்படாத, ஆனால் ஏற்கத் தகுந்த பயண ஆவணங்கள். |
| மொத்தம் | 99,469 | 94,135 |

எனினும், இலங்கையில் தொடர்ந்து வரும் அமைதியின்மை காரணமாக, இலங்கை அகதிகள் மீண்டும் இலங்கை செல்வதில் பெரிதளவில் ஆர்வம் ஏதும் காட்டவில்லை. சொந்த விருப்பத்தின்பேரில் தங்களது தாய்நாட்டிற்கு அல்லது வேறு வெளிநாடுகளுக்குச் செல்ல விரும்பும் அகதிகளுக்கு, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் மூலம் இந்தியாவை விட்டு வெளியேற அனுமதி வழங்கப்படுகிறது.

### முன்னாள் படைவீரர் நலத் துறை

13. முன்னாள் படை வீரர் நல இயக்குநரகம், அரசு பொதுத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. இத்துறை முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோர், போர் வீரரின் விதவையர் மற்றும் போரில் ஊனமுற்றவர்கள், தற்பொழுது படைப் பணியில் உள்ளோர் குடும்பங்களின் நலனைப் பேணி வருகிறது. 28-2-2002 அன்றைய நிலவரப்படி 1,48,483 முன்னாள் படைவீரர்கள்/விதவைகள் மாவட்ட அலுவலகங்களில் பதிவு செய்துள்ளனர்.



2002 ஏப்ரல் 9 ]

இத்துறையின் செயல்பாடுகளை விரிவாக கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்:-

1. வேலைவாய்ப்பு
2. சுய வேலை வாய்ப்பு
3. பயிற்சி
4. நலத்திட்ட உதவிகள்

14. அனைத்து நல உதவிகளும் இத்துறையினால் நிருவகிக்கப்பட்டு வரும் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி மற்றும் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. போரில் இறந்துவிட்ட வீரர்களின் மனைவியர்களுக்கும், போரில் ஊனமுற்றோருக்கும் கருணைத் தொகை, மகன்கள்/மகள்களை படைப்பணிக்கு அனுப்பிய பெற்றோருக்கு ஊக்க மானியம் ஆகியவை தமிழக அரசால் வழங்கப்படுகிறது. இத்துறைக்கான நிருவாகச் செலவினத்தில் 50 விழுக்காடு தொகையை மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.

15. இவை தவிர, 2001-2002 ஆம் நிதியாண்டில், 16,020 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோருக்கு ரூ. 5.32 கோடி நிதி உதவி தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டது. தொகுப்பு நிதியிலிருந்து 1,694 முன்னாள் படை வீரர்கள்/சார்ந்தோர்களுக்கு ரூ. 31.36 இலட்சங்கள் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

16. முன்னாள் படைவீரர்கள் மற்றும் தற்போது பணியில் உள்ளவர்களின் குழந்தைகளுக்கு இம்மாநிலத்தில் உள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களில் சில குறிப்பிட்ட எண்ணிக்கையில் இடங்களை அரசு ஒதுக்கியுள்ளது. பொறியியல் பட்டப்படிப்புக்கு அண்ணா பல்கலைக் கழகத்தில் 6 இடங்களும் மற்ற பொறியியல் கல்லூரிகளில் 100 இடங்களும், மருத்துவப்பட்ட படிப்புக்கு 6 இடங்களும், செவிலியர் பயிற்சிப் படிப்புக்கு 60 இடங்களும், ஆசிரியர் பயிற்சிப் படிப்புக்கு 67 இடங்களும், பல்தொழில் பயிலகங்களில் பட்டயப் படிப்புக்கு 100 இடங்களும், ஒவ்வொரு கலை

[ 2002 ஏப்ரல் 9

மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பட்டப்படிப்புக்கு 6 இடங்களும் மற்றும் சட்டப் படிப்புப் பிரிவில் 5 விழுக்காடு இடங்களும் இவற்றில் அடங்கும்.

17. இவை தவிர 2001-2002 கல்வியாண்டில் முன்னாள் படைவீரரைச் சார்ந்தோருக்கு தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஒரத்தநாடு அரசு கல்வியியல் கல்லூரியில் தமிழாசிரியர் பயிற்சிப் படிப்புக்கு ஒரு இடமும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலைப் பட்டப்படிப்பில் இரண்டு பாடப் பிரிவுகள் வரை உள்ள கல்லூரிகளில் இரண்டு இடங்களும், இரண்டுக்கு மேல் பாடப் பிரிவுகள் உள்ள கல்லூரிகளில் மூன்று இடங்களும், முன்னாள் படைவீரரைச் சார்ந்தோருக்கு இட ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது. வீர விருது பெற்ற இராணுவ வீரர்களுக்கு நிலத்திற்குப் பதிலாக ரொக்கத் தொகை வழங்க 6-8-2001 அன்று அரசு ஆணையிட்டுள்ளது.

18. நாட்டிற்காக எல்லைப்புறத்தில் தங்கள் இன்னுயிரை ஈந்த இராணுவ வீரர்களுக்கு அரசு உரிய மரியாதையைச் செலுத்தி அவர்களின் குடும்பத்திற்குத் தேவையான உதவிகளைச் செய்கின்றது. அவ்வாறு இன்னுயிரை ஈந்த இராணுவ வீரர்களின் இறுதிச் சடங்கு நிகழ்ச்சிகளில் சம்பந்தப்பட்ட மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர், மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறை அதிகாரிகள் அனைவரும் நேரில் சென்று உரிய முறையில் அஞ்சலி செலுத்த வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது. இதற்கு இறந்த இராணுவ வீரரின் குடும்பத்திற்கு ரூபாய் 5 லட்சம் உதவித்தொகை வழங்குவதோடு, அவரின் வாரிசுதாரருக்கு தகுதிக்கேற்ப அரசாங்க வேலையும் அளிக்கப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் ஐந்து இராணுவ வீரர்களின் குடும்பத்திற்கு இத்தகைய சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன.

**ஆலயப் பாதுகாப்பு படை**

19. கோயில்களில் சிலைகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் களவாடப்படுவதைத் தடுத்து அவற்றைப் பாதுகாப்பதற்காக முன்னாள் படைவீரர்களை தொகுப்பூதியத்தில் பணியமர்த்தி கோயில் பாதுகாப்புப் படை ஒன்று 1992 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. பல்வேறு கோயில்களில் இதுவரை 2,807 படை வீரர்கள் பணியமர்த்தப்பட்டு ஒவ்வொருவருக்கும் தொகுப்பூதியமாக ரூ. 1,500/- வழங்கப்பட்டு வருகிறது.

**கொடிநாள் வசூல்**

20. 1985ஆம் ஆண்டு முதல் கொடிநாள் வசூலில் தமிழ்நாடு முதலிடத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொண்டு வருகிறது. 2000 ஆம் ஆண்டுக்கு கொடிநாள் வசூல் இலக்காக நிர்ணயிக்கப்பட்ட ரூ. 4.20 கோடி நிர்ணயிக்கப்பட்ட போதிலும் வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 6.66 கோடியாகும். 2001ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட கொடிநாள் வசூல் இலக்கு ரூ. 4.41 கோடி ஆகும். இதில் இதுவரை ரூ. 0.74 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 9 ]

**தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் (டெக்ஸ்கோ)**

21. தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ) கம்பெனிகள் சட்டத்தின்படி 28-1-1986 அன்று பதிவு செய்யப்பட்டு நிறுவப்பட்டது. இது நிதியளவில் சுய ஆதரவுள்ள, இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனமாகும். இதன் உரிமைபெற்ற மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் முறையே ரூபாய் 50 இலட்சம் மற்றும் ரூ. 22.91 இலட்சம் ஆகும்.

22. தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களின் பொருளாதார மேம்பாடு மற்றும் நலத்திற்கு ஏற்றவகையில் புலத்திட்டங்களை உருவாக்கி அவற்றைச் செயல்படுத்துவதும், அவர்களுக்கு தக்க உதவிகளை அளிப்பதும், நிறுவனம் என்ற அளவில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் இக்கழகத்தின் முக்கிய குறிக்கோள்களாகும். முன்னாள் படைவீரர்கள் பெரும்பாலும் மைய அரசு நிறுவனங்கள் மற்றும் மாநில அரசு நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பாதுகாப்புப் பணிக்கென அனுப்பப்படுகின்றனர்.

23. இவ்வாறு பாதுகாப்புப் பணிக்கு அனுப்பப்படும் முன்னாள் படைவீரர்களுக்கான ஊதியம், பாதுகாப்பு அமைச்சகத்தின் மறுபுனரமைப்பு தலைமை இயக்குநரால் நிர்ணயம் செய்யப்படுகிறது. இப்பணிகளுக்கென 12 முதல் 18 விழுக்காடு வரை பணிக் கட்டணமாக மேற்கண்ட அரசு நிறுவனங்களிடமிருந்து டெக்ஸ்கோ வசூலிக்கிறது. நான்கு சக்கரம் மற்றும் இருசக்கர வாகனங்களை நிறுத்தும் இடங்களில் கட்டணம் வசூலித்து செலுத்தும் உரிமத்தை சென்னை மாநகராட்சியிடமிருந்து இக்கழகம் ஒப்பந்த அடிப்படையில் மார்ச் 2002 முடிய மூன்றாண்டுகளுக்கு பெற்றுள்ளது.

24. தமிழ்நாடு அரசின் 412 "பெல்" ஹெலிகாப்டர் மற்றும் "செஸ்னா" விமானத்தைப் பராமரித்து நிருவகிக்கும் பணி இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவற்றைப் பராமரித்து நிருவகித்துவரும் செலவை இக்கழகம் முதலில் ஏற்றுக்கொண்டு, பின்னர், இத்தொகை தமிழ்நாடு அரசினால் திருப்பி அளிக்கப்பட்டது. இதற்கென 2 விழுக்காடு பணிக் கட்டணம் இக்கழகத்திற்கு வழங்கப்படுகிறது.

**முதலமைச்சரின் தனிப் பிரிவு**

25. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் பல்வேறு கோரிக்கை மனுக்கள்மீது முதலமைச்சர் தனிப் பிரிவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முதலமைச்சரின் தனிப் பிரிவு ஓர் இந்திய ஆட்சிப் பணி அலுவலரை தனி அலுவலராகக் கொண்டு அவரின்கீழ் இயங்குகிறது. முதலமைச்சரின் தனிப் பிரிவு எல்லா வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் 6.00 மணி வரை இயங்குகிறது. எல்லா பணி நாட்களிலும், மேற்கண்ட அலுவலக நேரத்தில் தனி அலுவலரால் மனுக்கள் பெறப்படுகின்றன. கோரிக்கையின் பொருள் அடிப்படையில் இம்மனுக்கள் பிரிக்கப்பட்டு, கணினியில் பதிவு செய்யப்பட்டு தனிப் பிரிவின் அலுவலரின் கடித இணைப்புடன், தொடர்புடைய செயலகத் துறைகள், துறைத் தலைமை அலுவலகங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோருக்கு தேவையான நடவடிக்கைக்காக அனுப்பப்படுகின்றன.

26. இம்மனுக்கள்மீது துறைத் தலைவர்கள் எடுத்த நடவடிக்கை குறித்து ஆய்வு நடத்திட துறைத் தலைவர்களுடன் மாதந்தோறும் ஆய்வுக் கூட்டம் நடத்தப்படுகிறது. மேலும் அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் பணிபுரியும் மக்கள் குறை தீர்க்கும் பிரிவு தனித் துணை ஆட்சியர்கள் அழைக்கப்பட்டு, அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு நடத்தப்படுகிறது. கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்கள் கூட்டத்தில், முதலமைச்சர் தனிப் பிரிவிலிருந்து அனுப்பப்படும் மனுக்களின்மீது மிகச் சிறந்த முறையில் முடிவுகள் செய்து நடவடிக்கை எடுத்த மாவட்டத்திற்கு "முதலமைச்சர் சிறப்பு விருது" வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

27. மாண்புமிகு முதலமைச்சரிடம் நாள்தோறும் தங்கள் கோரிக்கை மனுக்களைக் கொடுப்பதற்காக அதிக எண்ணிக்கையில் தலைமைச் செயலகத்திற்கு பொதுமக்கள் வருகின்றனர். இவர்களின் குறைகளைக் கேட்டு அறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்காகவும், இவர்களில் திக்கற்று துன்புற்ற நிலையில் இருப்பவர்களுக்கு தக்க ஆறுதலை அளித்து, வழி நடத்துவதற்காகவும் முதலமைச்சர் சிறப்புப் பிரிவில் கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்பட முடிவு செய்யப்பட்டுள்ளது.



28. மாண்புமிகு முதலமைச்சரை நேரில் சந்தித்து மனுக்களைத் தர வரும் பொதுமக்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்படாதவண்ணம் அவர்களை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சந்திப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்திற்கு வருகின்ற நாட்களில் பிற்பகல் 1 மணி முதல் 2 மணிவரையில் பொதுமக்களைச் சந்திப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

29. முதலமைச்சரின் தனிப் பிரிவில் இயங்கிவரும் கணினிகளை மேம்படுத்தும்பொருட்டு ரூபாய் 23 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

30. மேலும், முதலமைச்சரின் தனிப் பிரிவில் இயங்கிவரும் அவசர பிரிவின் மூலம், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய மனுக்கள் நேர்முகக் கடிதம்/நிகரி/தொலைபேசி மூலம் தக்க நடவடிக்கைக்காக தொடர்புடைய அதிகாரிகளுக்கு விரைந்து அனுப்பப்படுகின்றன. முதலமைச்சரின் தனிப் பிரிவில் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் மீதான மேல் விவரங்களை அளிப்பதற்கு, முதலமைச்சரின் தனிப் பிரிவில் உள்ள வரவேற்பறையில் ஒரு விசாரணை மையம் (Enquiry Counter) இயங்கி வருகிறது.

31. முதலமைச்சரின் தனிப் பிரிவில் பெறப்படும் அனைத்து மனுக்களுக்கும் ஒப்புகை தரப்படுகின்றன. அவற்றின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த இறுதி பதில்கள் சம்பந்தப்பட்ட துறைகள்/மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அனுப்பப்படுகின்றன. அரசு திட்டங்களுக்கு உட்படாத/நீதிமன்ற வழக்குகள்/கண்காணிப்புத் துறை தொடர்புடைய நேர்வுகள் தவிர்த்து மற்ற அனைத்து நேர்வுகளிலும் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது.

32. 14-5-2001 முதல் 31-3-2002 வரையான காலத்தில் 4,94,627 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இவற்றில் 4,59,628 மனுக்கள்மீது (92.92 விழுக்காடு) தீர்வு காணப்பட்டன. தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியவை 1,29,493 மனுக்களாகும். இவற்றில் 94,394 மனுக்கள்மீது (73 விழுக்காடு) தீர்வு காணப்பட்டன.

**33. முதலமைச்சரின் தனிப் பிரிவின் சாதனைகள்**

* 6428 நேர்வுகளில் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது (முதியோர், விதவைகள், ஆதரவற்ற விதவைகள், ஊனமுற்றோர் ஓய்வூதியம்).

* 134 நேர்வுகளில் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

* தொழிற்கல்வி கல்லூரிகளில் இடம் கிடைக்கப்பெற்றும் வறுமையின் காரணமாக கட்டணம் செலுத்த முடியாத 125 சிறப்பான மாணவர்களுக்கு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

* 8,892 மனுதாரர்களுக்கு தொழிற் கருவிகள் மற்றும் கடன் நிதி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

* 926 மனுதாரர்களுக்கு உயிர் காக்கும் அறுவை சிகிச்சைக்காக நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

* நிலம் சம்பந்தப்பட்ட 3,000 நேர்வுகளில் தீர்வு காணப்பட்டுள்ளது.

**புது டெல்லி, தமிழ்நாடு இல்லத்தில் கூடுதல் விருந்தினர் மாளிகை கட்டுதல்**

34. வீட்டு வசதி மற்றும் புறநகர் வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து நிதி பெற்று ரூ. 22.07 கோடி தோராய மதிப்பீட்டில், புதுடெல்லியில் கூடுதல் விருந்தினர் மாளிகை கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்நோக்கத்திற்காக, புது டெல்லியில் உள்ள சாணக்கியபுரியில் 7956.62 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலம் 1992 ஆம் வருடம் 12.85 கோடி மதிப்பீட்டில் வாங்கப்பட்டது. 2001 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் தொடங்கப்பட்ட இக்கட்டுமான வேலை, 2002 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 31 ஆம் தேதிக்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்து தளங்களின் கட்டடப் பணி முடிக்கப்பட்டு, இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு வருகிறது. மின்தூக்கி, குளிர் சாதன வசதி, டீசல் ஜெனரேட்டர், உயர் அழுத்த மின்பணிகள் மற்றும் உள்வடிவமைப்புப் பணிகள் ஆகியவற்றிற்கு ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட உள்ளது.

**தலைமைச் செயலகத்தில் தொலைபேசி வசதி**

35. தலைமைச் செயலகத்தில் இருந்த பழைய தொலைபேசி இணைப்பு முறையை மாற்றி, ஒரு புதிய 100 இணைப்புகள் கொண்ட ஐ.எஸ்.டி.என். அதி நவீன தொலைபேசி இணைப்பகத்தை அமைக்கவும், பழைய உள்ளகத் தொலைபேசி இணைப்பகத்தை மாற்றி ஒரு புதிய 1,000 இணைப்புகள்



கொண்ட மின்னணு உள்ளகத் தொலைபேசி இணைப்பகத்தை அமைக்கவும், 2001-2002 ஆம் ஆண்டில் ரூ. 68,65,723/- (ரூபாய் அறுபத்தெட்டு இலட்சத்து அறுபத்தைந்தாயிரத்து எழுநூற்று இருபத்தி மூன்று மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்படி, 100 இணைப்புகள் கொண்ட ஐ.எஸ்.டி.என். அதி நவீன தொலைபேசி இணைப்பகம் புதியதாக அமைக்கப்பட்டு 10-10-2001 முதல் தலைமைச் செயலகத்தில் செயல்படத் தொடங்கியது. 1,000 இணைப்புகள் கொண்ட மின்னணு உள்ளகத் தொலைபேசி இணைப்பகம் 1-1-2002 முதல் செயல்பட்டு வருகிறது.

**குஜராத் நில நடுக்க நிவாரண நிதி**

36. 26-1-2001 அன்று குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி அளிக்கும் பொருட்டு அரசால் "குஜராத் நில நடுக்க நிவாரண நிதி" ஏற்படுத்தப்பட்டது. 31-3-2002 வரை இந்நிதிக் கணக்கில் ரூ. 58,50,08,828.42 பெறப்பட்டுள்ளது. இதிலிருந்து ரூபாய் 30 கோடிக்கான காசோலையை குஜராத்தில் நிவாரணப் பணிகள் மேற்கொள்வதற்காக பிரதமரிடமும், ரூ. 6,14,11,473.00 பெறுமானமுள்ள கல்நார் தகடுகள், போர்வைகள், பதப்படுத்தப்பட்ட பால்பவுடர் போன்ற நிவாரணப் பொருட்கள் குஜராத் அரசிடமும் வழங்கப்பட்டது.

37. இதையடுத்து, இந்த நிவாரண நிதியிலிருந்து ஒரு பகுதியை குஜராத் நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த மக்களுக்கு உதவி அளிப்பதற்காக ஒதுக்கும்படி பல்வேறு கோரிக்கைகள் அரசுக்கு வந்தன. குஜராத் நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட 41 நபர்களுக்கு நிவாரண நிதியாக ரூ. 10,25,000.00 வழங்கப்பட்டுள்ளது. நில நடுக்கத்தில் காலை இழந்த தன் கணவரின் மருத்துவச் செலவிற்காக திருமதி பி.எல். சித்ரா என்பவருக்கு ரூ. 25,000/-க்கான காசோலை 18-7-2001 அன்று வழங்கப்பட்டுள்ளது. குஜராத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு மேலும் நிவாரண உதவி வழங்குவதுபற்றி பரிந்துரைக்க, தமிழக அரசால் அனுப்பப்பட்ட ஆய்வுக் குழு தனது அறிக்கையினை அரசுக்கு சமர்ப்பித்துள்ளது. இக்குழு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிதி உதவி மற்றும் பிற நிவாரண உதவிகளை வழங்க அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது இந்த அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

**கோரிக்கைகளின் விவரம் மற்றும் கோரப்பட்ட நிதி**

| வரிசை எண் | இனம் | கோரிக்கையின் தன்மை | தொகை ரூபாய் (ஆயிரத்தில்) | மொத்தம் ரூபாய் (ஆயிரத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 3701 தலைமைச் செயலகம் | சாட்டியது<br>அனுமதித்தது | 6,53<br>27,83,60 | 6,53<br>27,83,60 |
| 2 | 3702 தேர்தல்கள் | அனுமதித்தது | 17,23,06 | 17,23,06 |
| 3 | 3703 முன்னாள் படைவீரர் | அனுமதித்தது | 4,59,97 | 4,59,97 |
| 4 | 3704 மறுவாழ்வு | அனுமதித்தது | 24,86,48 | 24,86,48 |
| 5 | 3705 புது டெல்லியிலுள்ள தமிழ்நாடு இல்லம் | அனுமதித்தது | 3,29,80 | 3,29,80 |
| 6 | 3706 மாநில மனித உரிமைகள் ஆணையம் | அனுமதித்தது | 1,74,50 | 1,74,50 |
| | **மொத்தம்** | **சாட்டியது**<br>**அனுமதித்தது** | **6,53**<br>**79,57,41** | **6,53**<br>**79,57,41** |





# இணைப்பு VI

*(278 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

**பொது (தேர்தல்கள்) துறை**

**கோரிக்கை எண் 37 தேர்தல்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 2002 - 2003**

கோரிக்கை எண் 37 - "தேர்தல்கள்" என்ற தலைப்பின்கீழ் 2002-2003 ஆம் நிதியாண்டின் செலவுகளுக்காக ரூ. 17,23,06,000/- நிதி தேவைப்படுகிறது. இம்மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்படும் இந்த நிதியில் வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு திருத்தம் மேற்கொண்டமைக்கும், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்குவதற்கும், தேர்தல் நிருவாகத்திலுள்ள அலுவலர் மற்றும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் போன்ற பிற செலவினங்களுக்கும் தேவைப்படுகிறது.

தமிழக சட்டப் பேரவைக்கு 10-05-2001-ல் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. இதையடுத்து 12-வது தமிழக சட்டமன்றம் 14-05-2001 அன்று முறையாக அமைக்கப்பட்டது. தற்போது மாநில சட்டமன்றப் பேரவையில் 14. சைதாப்பேட்டை, 24. அச்சரப்பாக்கம் (தனி) மற்றும் 39. வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. வி. பெருமாள், திரு. எ. செல்வராஜ் மற்றும் திரு. எம்.அப்துல் லத்தீப் ஆகிய உறுப்பினர்கள் இயற்கை எய்தியதையடுத்து மூன்று காலி இடங்களுக்கு தேர்தல்கள் நடைபெறவுள்ளன. இது குறித்து, இந்திய தேர்தல் ஆணையத்திற்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மூன்று தொகுதிகளிலும் இடைத்தேர்தல்கள் நடத்துவதற்கான நாள் குறித்து இந்திய தேர்தல் ஆணையம் முடிவு செய்யும். மக்களவைக்கு 1999 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றது. தற்போதைய மக்களவையின் பதவிக்காலம் 2004-ல் முடிவடைகிறது. இம்மாநிலத்திலிருந்து மக்களவைக்கான உறுப்பினர் இடம் ஏதும் காலியில்லை.

தேர்தல்கள் என்பதன்கீழ் மானியக் கோரிக்கை எண் 37-ல் 2002-2003ஆம் ஆண்டிற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்குச் செலவிடத் தேவைப்படும் தொகை ரூ. 17,08,27,000/- (அனுமதிக்கப்பட வேண்டியது) ஆகும்.

**2015. தேர்தல்கள் (ஐ. திட்டத்தில் சேராதது)**

**102. தேர்தல் அதிகாரிகள்**

| | | |
|---|---|---|
| என. சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள் | - | ரூ. 4,66,64,000/- |

**103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்**

| | | |
|---|---|---|
| என. சட்டப் பேரவைத் தொகுதிகள் | - | ரூ. 7,29,59,000/- |

**104. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

| | | |
|---|---|---|
| என. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் நடைபெறும் தேர்தல்கள் | - | ரூ. 19,81,000/- |

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

| | | |
|---|---|---|
| என. இடைத்தேர்தல்கள் | - | ரூ. 23,000/- (அடையாள ஒதுக்கீடு) |
| எபி. மக்களவைக்குத் தேர்தல் | - | ரூ. 24,000/- (அடையாள ஒதுக்கீடு) |

**106. மாநில சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

| | | |
|---|---|---|
| என. மாநில சட்டப் பேரவை | - | ரூ. 6,77,000/- |

**108. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்குதல்**

| | | |
|---|---|---|
| என. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் | - | ரூ. 4,83,74,000/- |
| கூட்டுக: திருப்பி வசூலிப்பவை | - | ரூ. 1,25,000/- |
| மொத்தம் | - | **ரூ.17,08,27,000/-** |

மேற்சொன்ன இனங்களுக்கான மதிப்பீடுகள், கீழே விவரமாகக் கூறப்பட்டுள்ள பல்வேறு இனங்களுக்கான தொடர் செலவு செய்யப்படுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

**102. தேர்தல் அதிகாரிகள்**

என. சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள்

| | | |
|---|---|---|
| மதிப்பீடு | - | ரூ. 4,66,64,000/- |

தலைமைச் செயலகத்தில் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அலுவல் பணியில் உதவி புரிய இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் உள்ளனர்.



இதற்கு முன்னதாக மூன்று இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் இருந்தனர். தேர்தல் பணிகளை கணினிமயமாக்குதல் தொடர்பாக 1997 ஆம் ஆண்டு ஒரு இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி (கணினி) பதவி ஏற்படுத்தப்பட்டது. இந்தப் பதவி தற்போது சார்நிலை அலுவலர் பதவிகளுடன் தொடர்ந்து இருந்து வருகிறது. மற்றுமொரு இணைச் செயலர் மற்றும் இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி தேர்தல் தொடர்பான இதர பணிகளைக் கவனித்து வருகிறார். இவை தவிர இரண்டு சார்புச் செயலர்கள் உள்ளனர். பொது (தேர்தல்கள்) துறையில் ஆறு நிரந்தரப் பிரிவுகள் உள்ளன. செலவினத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் பொருட்டு மற்றுமொரு இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி பதவி சார்நிலை அலுவலர் பதவிகளுடன், தற்காலிகமாக ஜூன் 2001 முதல் முடக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் 1998ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஒரு பிரிவு 1-10-2001 அன்று கலைக்கப்பட்டது. பொதுத் தேர்தல்களின்போது, தேர்தல் பணிகளைக் கவனிக்க தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் ஏற்படும் கூடுதல் பணிகளை மேற்கொள்ள கூடுதலாக பணியாளர்கள் நியமிக்கப்படுவர்.

அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்ட தேர்தல் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டு தேர்தல் சம்பந்தமான பணிகளில் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு உதவி புரிகிறார்கள். ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய்க் கோட்ட அலுவலர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களிலும் ஒரு நிரந்தர உதவியாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. வருவாய்க் கோட்ட அலுவலர்கள் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் சேலம் மாநகராட்சி ஆணையாளர்கள் வாக்குப் பதிவு அலுவலர்களாகவும், வட்டாட்சியர்கள் மற்றும் நகராட்சி ஆணையாளர்கள் உதவி வாக்குப் பதிவு அலுவலர்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். தேர்தல் பணிகளை கவனிக்க மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகராட்சி ஆணையர்களின் அலுவலகங்களில் ஒரு உதவியாளர் பணியிடமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில், சென்னை மாநகர ஆணையர் அலுவலகத்தில் ஒரு மாவட்ட வருவாய் அதிகாரி (தேர்தல்கள்) என்ற பதவி தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஒரு வட்டாட்சியர், மூன்று உதவியாளர்கள், ஒரு இளநிலை உதவியாளர், தட்டச்சர், ஒரு பதிவேடு எழுத்தர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் ஆகிய நிரந்தரப் பணியிடங்கள் உள்ளன. சென்னை மாவட்ட ஆட்சியரை மாவட்ட தேர்தல் அதிகாரியாக அறிவித்ததையடுத்து, ஒரு உதவியாளர் பணியிடமும் மற்றும் ஒரு இளநிலை உதவியாளர்-தட்டச்சர் பணியிடமும்

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் உள்ள அனைத்து மண்டல அலுவலர்களும் வாக்குப் பதிவு அலுவலர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். உதவி வருவாய் அதிகாரிகள் உதவி வாக்குப் பதிவு அலுவலர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் பணிக்காக தோற்றுவிக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் அலுவலர்களின் ஊதியச் செலவுகள், பயணச் செலவுகள், அலுவலக செலவினம், இதர செலவினம், தபால், தொலைபேசிக் கட்டணங்கள், தேர்தல் சம்பந்தப்பட்ட சிறப்புப் பணிகளுக்காக வழங்கப்படும் மதிப்பூதியம் போன்றவை இக்கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மைய அரசு ஏற்றுக் கொள்கின்றது.

## 103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்

எஎ. சட்டப் பேரவைத் தொகுதிகள்

மதிப்பீடு - ரூ. 7,29,59,000/-

இம்மாநிலத்திலுள்ள அனைத்து சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளில் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுவதற்கான எல்லாவிதமான செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் கணக்கிடப்படும். இப்பணிக்காக தற்காலிகமாக நியமிக்கப்படும் பணியாளர்களின் சம்பளம் மற்றும் படித்தொகைகள், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் போன்றவையும் இத்தலைப்பின்கீழ் அடங்கும். சென்னை ஆவணக் காப்பகத்தில் வாக்காளர் பட்டியல்களைப் பராமரிப்பதற்கான நிரந்தரப் பணியிடங்களான ஒரு உதவியாளர், ஒரு பதிவேடு எழுத்தர் ஆகியோரின் செலவினங்களுக்கும் இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது.

1950ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 21ஆவது பிரிவின்படி, மக்களவை அல்லது மாநில சட்டமன்றத்திற்கு நடைபெறும் ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்கு முன்னரும் மற்றும் காலியான இடத்தை நிரப்புவதற்காக நடத்தப்படும் முன்னரும் வாக்காளர் பட்டியல்கள் திருத்தியமைக்கப்படும். இந்திய தேர்தல் ஆணையம் தகுதியேற்படுத்தும் நாளை அறிவித்து திருத்தம் மேற்கொள்ள வேண்டுமென ஆண்டின் எந்தக் காலத்தில் அறிவுறுத்தினாலும், திருத்தம் மேற்கொள்ளப்படும். வாக்காளர் பட்டியல்கள் வாக்காளர் பதிவு அதிகாரிகளால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகளின் உதவியுடன் தயாரித்து வெளியிடப்படுகின்றன. மாவட்டங்களில் மாவட்டத் தேர்தல் அதிகாரிகளான மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வாக்காளர் பட்டியல்



தயாரித்தல் மற்றும் திருத்துதல் பணிகளை ஒருங்கிணைத்து கண்காணித்து வருகின்றனர். சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில், மாநகராட்சி ஆணையாளர் வாக்காளர் பட்டியல் திருத்தும் பணிகளுக்கு ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். தலைமைத் தேர்தல் அதிகாரியின் மேற்பார்வை, அறிவுரைகள் மற்றும் கட்டுப்பாட்டின்கீழ் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன..

தற்போது 01-01-2002-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் தீவிர முறை சிறப்புத் திருத்தம் மேற்கொள்ளுமாறு 2001 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் இந்திய தேர்தல் ஆணையம் பணித்தது. இதற்கான விரிவான கால அட்டவணையைத் தேர்தல் ஆணையம் வகுத்துள்ளது. படிவங்களை அச்சிடுதல், கணக்கெடுப்பாளர் மற்றும் மேற்பார்வையாளர் பணிகளுக்கு அலுவலர்களைத் தெரிந்தெடுத்தல் முதலான முதற்கட்டப் பணிகள் 13-08-2001 முதல் தொடங்கி 04-11-2001 அன்று முடிவுற்றன. வீடு வீடாகச் சென்று தற்போதைய வாக்காளர் பட்டியலிலுள்ள பதிவுகளைச் சரிபார்த்தல்; தகுதியேற்படுத்தும் நாளில் வாக்காளர் பட்டியலில் முதல்முறையாக சேர்க்கப்படத் தகுதியான வாக்காளர்களையும், பட்டியலில் இடம் பெற்றிராத தகுதியுள்ள குடிமக்களையும் பட்டியலில் சேர்த்தல்; வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள இறந்தோர்/இடம் பெயர்ந்தோர் நீக்கல் பட்டியலையும் திருத்தங்களுக்கான பட்டியலையும் தயாரித்தல் ஆகிய பணிகள் இந்திய தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் தீவிர முறை சிறப்புத் திருத்தத்திற்காக வகுத்துள்ள கால அட்டவணையில் இடம் பெற்றுள்ளன. வீடு வீடாகச் சென்று கணக்கெடுக்கும் பணி 05-11-2001 முதல் 11-12-2001 வரை நடைபெற்றது. அந்தந்த சட்டமன்றத் தொகுதிகளில் இறுதிப் பட்டியல்கள் வெளியிடுதலுடன் இத்திருத்தப் பணிகள் முடிவுறும். கணினியிலிருந்து லேசர் அச்சுப் பிரதி எடுப்பதற்கான தாளின் கொள்முதல் செலவினம், வரைவு வாக்காளர் பட்டியல்கள் மற்றும் இறுதிப் பட்டியல் அச்சிடுதல், வெள்ளை/பழுப்பு காகிதம் கொள்முதல் செய்தல், வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியலிலுள்ள பதிவுகளைச் சரிபார்க்கும் பணியில் ஈடுபடும் கணக்கெடுப்பாளர்களுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும் ஊதியம் வழங்குதல், தீவிர சிறப்புத் திருத்தத்திற்கு நியமிக்கப்படும் சிறப்புப் பணியாளர்களுக்கான ஊதியம் வழங்குதல் முதலானவை தீவிர முறை சிறப்புத் திருத்தம், 2002-ன்போது மேற்கொள்ள வேண்டிய செலவினங்களில் சில இனங்களாகும்.

ஆண்டுதோறும் வழக்கமாக நவம்பர் திங்களில் அடுத்துவரும் சனவரி திங்கள் முதல் நாளன்று 18 வயது நிரம்பும் வாக்காளர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்காக வாக்காளர் பட்டியல்

[ 2002 ஏப்ரல் 9

திருத்தத்தினை மேற்கொள்ள இந்திய தேர்தல் ஆணையம் முடிவெடுத்துள்ளது.

**கணினி உள்கட்டமைப்பு**

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி, ஒவ்வொரு மாவட்ட தேர்தல் அதிகாரியின் அலுவலகத்திலும் 5 கணினி முடிச்சுகள் மற்றும் 1 சர்வர்-உடன் கணினி உட்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தலைமைத் தேர்தல் அதிகாரி அவர்களின் அலுவலகத்தில் கணினிமயமாக்கல் தொடர்பான பணிகளைக் கையாள்வதற்கு 1 சர்வர் மற்றும் 10 கணினி முடிச்சுகள் கொண்ட அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாநில அளவில் கணினி சம்பந்தமான தொழில்நுட்ப மேலாண்மைப் பணிகளை நிருவகிப்பதற்காக, சி.எம்.சி. லிமிடெட் நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் கணினி சம்பந்தப்பட்ட பணிகளைக் கையாள்வதற்கு போதுமான பணியாளர்களை இந்நிறுவனமே நியமித்துள்ளது. சி.எம்.சி. லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்படும் ஊதியச் செலவினம் மற்றும் கணினி உட்கட்டமைப்புகளைப் பராமரிக்க ஆகும் செலவினங்கள் யாவும் இந்தத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும்.

இந்தத் துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் வாக்காளர் வரைவுப் பட்டியல் மற்றும் இறுதிப் பட்டியல் அச்சிடுதல், கணினியில் விவரங்களைப் பதிவு செய்தல், பணியாளர் ஊதியம், பயணப்படிகள் முதலியவற்றிற்கான செலவினங்களை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு தேவைப்படுகின்றது. இதற்கென 2002-2003 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 7,29,59,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் செலவினத்தில் 50 விழுக்காட்டினை இந்திய அரசு பகிர்ந்து கொள்ளும்.

**104. நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

எஎ. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் நடைபெறும் தேர்தல்கள்.

மதிப்பீடு - ரூ. 19,81,000/-

மக்களவைக்கும் மாநில சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெறும்போது ஏற்படும் செலவினங்கள் அனைத்தும் இந்தத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. தொடர் செலவினமான தேர்தல் பொருட்களை வைப்பதற்கான கட்டடங்களின் வாடகை, வாக்குப் பெட்டிகளைப் பராமரிக்கும் செலவுகள், வாகன எரிபொருள் செலவினங்கள் மற்றும் பொதுத் (தேர்தல்கள்) துறையின் வாகனங்களின் பராமரிப்புச் செலவுகள் ஆகியவையும் இந்தத் தலைப்பின்கீழ்



2002 ஏப்ரல் 9 ]

மேற்கொள்ளப்படும். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்குப் பெட்டிகள் மற்றும் தேர்தல் பொருட்கள், நாமக்கல், கோயம்புத்தூர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் வேலூர் மாவட்டங்களில் உள்ள தனியார் கிடங்குகளிலும் மதுராந்தகம் மற்றும் விருத்தாசலத்தில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்குகளிலும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இதற்கான வாடகை செலவினம் மற்றும் இதர தேர்தல் சம்பந்தமான பொருட்களின் செலவினங்கள் இந்தத் துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

எஎ. இடைத் தேர்தல்கள்

மதிப்பீடு - ரூ. 23,000/

(அடையாள ஒதுக்கீடு)

மக்களவைத் தொகுதிகளில் இடைத் தேர்தல்கள் நடைபெற்றால் அதற்காகும் அனைத்து செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். மக்களவையில் தமிழகத்திலுள்ள தொகுதிகளில் காலியிடம் ஏதுமில்லாததால் இத்தலைப்பின்கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்கள் அனைத்தையும் மைய அரசே ஏற்றுக்கொள்கிறது.

எபி. நாடாளுமன்ற மக்களவைக்குத் தேர்தல்

மதிப்பீடு - ரூ. 24,000/-

(அடையாள ஒதுக்கீடு)

மக்களவைக்கு மட்டும் பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் அனைத்தும் முதலில் இத்தலைப்பின்கீழ் பதியப்பெற்று பின்னர் மைய அரசிடமிருந்து பெறப்படும். 1999ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் 13ஆவது மக்களவைக்கு பொதுத் தேர்தல் நடைபெற்றது. இதன் பதவிக்காலம் 2004ஆம் ஆண்டு முடிவுறும். எனவே இத்தலைப்பின்கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே தேவைப்படுகிறது. இச்செலவினங்கள் அனைத்தையும் மைய அரசு ஏற்றுக் கொள்கிறது.

**106. மாநில சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

எ. மாநில சட்டப் பேரவை

மதிப்பீடு - ரூ. 6,77,000/-

மாநில சட்டமன்றப் பேரவைக்கு மட்டும் பொதுத் தேர்தலோ அல்லது இடைத் தேர்தலோ நடைபெற்றால் அதன் தொடர்பான செலவினங்கள்

இத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். சைதாப்பேட்டை, வாணியம்பாடி, அச்சரப்பாக்கம் (தனி) ஆகிய சட்டமன்றத் தொகுதிகளின் உறுப்பினர்கள் திருவாளர்கள் வி. பெருமாள், எம். அப்துல் லத்தீப் மற்றும் எ. செல்வராஜ் இயற்கை எய்தியதால், தற்சமயம் தமிழ்நாடு சட்டப் பேரவையில் மூன்று இடங்கள் காலியாக உள்ளன. இடைத் தேர்தல்கள் நடத்துவதற்கும் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது. இத்தேர்தலில், இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தினால் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படும். மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்திற்குத் தேவையான மின்கலம், வெளிப்புற காகித முத்திரை மற்றும் அழியா மை புதியதாக வாங்கி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. இவற்றிற்குண்டான செலவினம் இத்தலைப்பின்கீழ் அடங்கும்.

பொதுத் (தேர்தல்கள்) துறையில் உள்ள மின் தட்டச்சுகள், போட்டோ நகல் எடுக்கும் கருவிகள் மற்றும் இரண்டு தொலை அச்சுக் கருவிகள் ஆகியவை உள்ளன. இவற்றின் பராமரிப்பு மற்றும் இதர செலவினங்களுக்காக இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான செலவினங்கள் அனைத்தையும் மாநில அரசு மேற்கொள்கிறது.

**107. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்குதல் திட்டம்**

எஎ. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம்

மதிப்பீடு - ரூ. 4,83,74,000/-

தமிழ்நாட்டில் இதுவரை 3.2 கோடி வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்புத் திருத்தம் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிட்ட பின்னர் வாக்காளர் எண்ணிக்கை 4.94 கோடி என்ற அளவை எட்டக்கூடும். அதற்குப் பிறகு விடுபட்ட வாக்காளர்களுக்கும் புதிதாக சேர்க்கப்படும் வாக்காளர்களுக்கும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம் தொடரப்படும். வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டத்தின்கீழ் ஏற்படும் செலவினங்கள் இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.

224370

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.